த. பா. நி. (க.வெ.) வரிசை எண் —554

வாணிபச் சுழல் கோட்பாடுகள்

ஆசிரியர்

எம். ஏ. அபூர்வசாமி எம்.ஏ.,

பேராசிரியர், பொருளாதாரத் துறை.

பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி,

திருச்சிராப்பள்ளி.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — January, 1974

T.N.T.B.S. (C.P.) No. 554

© Tamil Nadu Text Book Society

THE THEORIES OF THE TRADE CYCLES

M. A. ABOORVASAMY

Price Rs. 6 - 50

Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
New Hebron Press,
B-8, Kilpauk Garden Colony,
Madras - 10

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன் ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான **'வாணிபச்சூழல் கோட்பாடுகள்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **554**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **589** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

வாணிபச் சுழல்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு உதவிடக்கூடிய ஓர் எளிய நூல் இது. சுழல்களின் போக்கினைப் பற்றிய விபரங்கள், சுழல் கோட்பாடுகளைப்பற்றிய விளக்கங்கள், சுழல்களை மட்டுப்படுத்துவதற்கு நாடப்படும் வழிமுறைகள், நிலை பேருக்கத்தினை எய்துவதற்கு — நிலைப்பாட்டினைப் பொருளாதார அரங்கினில் கொலு வீற்றிருக்கச் செய்வதற்கு — எடுத்துக் கொள்ளப்படும் பெருமுயற்சிகள் ஆகியவைபற்றிய தகவல்களும், சுழல்பற்றிய ஆய்வுப் பயணத்தில் அன்றும் இன்றும் சாதிக்கப் பட்டுள்ள வளர்ச்சிகளைப்பற்றிய குறிப்புகளும், வாணிபத்தில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களின் போக்குகளைப்பற்றிச் சற்று முன்கூட்டியே தெரிந்துகொள்வதற்கான கணிப்பு முறைகளைப் பற்றிய பொருளாதார இயலாரின் எண்ணங்களும் இந் நூலில் இடம் பெறுகின்றன.

வாணிபச் சுழல்கள் நம்மிடையே இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. சுழல்களின் போக்கில், தீவிரத்தில், காலக்கூறில், பரப்பெல்லையில் மாறுதல்கள் உண்டாகியிருக்கலாம். சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நிலைபேருக்க நட வடிக்கைகள் சில நாடுகளில் வெற்றிகளையும் ஓரளவிற்கு வழங்கி யிருக்கலாம். என்றாலும், அங்காடிப் பொருளாதாரங்கள் இன்றைக்கும் குறுங்கால ஏற்ற இறக்கங்களுக்கு ஆளாகிக் கொண்டுதானிருக்கின்றன. எனவேதான் வாணிபச் சுழல்கள் நம்மிடையே முக்கியமானவையாய்க் கருதப்பட்டு வருகின்றன.

வாணிபச் சுழல்களைப்பற்றிய தகவல்களைத் தமிழில் வடித்துத் தரும் பணி, யாரும் இதுவரை நடந்தறியா பாதையில் என்னை நடை பயிலவிட்டிருக்கிறது. இத்தகைய அறியதொரு சுவையான வாய்ப்பினை எனக்கு அன்புடன் வழங்கிய தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கு என் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். நூலை எழுதுவதற்குத் திருவாளர்கள் ஈஸ்டி, ஹான்சன், ஹாபர்லர் ஆகியோரின் நூல்கள் நல்லுதவி புரிந் துள்ளன. அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

இந் நூல் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டங்களை யொட்டியும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத் தால் வெளியிடப்பட்ட கலைச்சொற்களகராதியில் உள்ள சொற்களைப் பயன்படுத்தியும் எழுதப்பெற்றது.

எம். ஏ. அபூர்வசாமி

பொருளடக்கம்

முதல் பாகம்

வாணிபச் சுழல்களின் இயல்பு

பக்கம்

1. அடிப்படைக் கருத்துகள் .. 1
2. வாணிபச் சுழல்களின் கால அளவு, கட்டங்கள் மற்றும் இயல்புகள் ... 15
3. ஒரு வாணிபச் சுழலின் பொதுப்போக்கு ... 35
4. வாணிபப் பெருமந்தங்கள் ... 52
5. நெடுஞ் சுழல்கள் ... 63

இரண்டாம் பாகம்

வாணிபச் சுழல் கோட்பாடுகள்

முன்னுரை ... 74

6. பணச்சார்பான கோட்பாடு ... 76
7. பண அமித முதலீட்டுக் கோட்பாடுகள் ... 87
8. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள் ... 101
   (1) டியூகன் பாரனேஸ்கியின் கோட்பாடு
9. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்... 110
   (2) ஸ்பியதாஃபின் கோட்பாடு
10. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்... 116
   (3) கஸ்டாவ் காசலின் கோட்பாடு
11. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்... 122
   (4) சும்பீட்டரின் கோட்பாடு
12. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள் ... 132
   (5) அஃப்டேலியன் கோட்பாடு
13. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள் ... 142
   (6) ராபர்ட்சன் கோட்பாடு
14. நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகள் ... 146
15. அறுவடைக் கோட்பாடுகள் ... 160
16. உளச்சார்பான கோட்பாடுகள் ... 171

			பக்கம்
17.	கீன்ஸ் கோட்பாடு	...	183
18.	ஹிக்ஸ் கோட்பாடு	...	194
19.	வாணிபச் சுழலின் சர்வதேசப் பண்புகள்	...	207
20.	வாணிபச் சுழல்களும் முன்கணிப்பும்	...	210

மூன்றும் பாகம்

நிலைபேருக்கம்

	முன்னுரை	...	223
21.	பணத்துறைக் கைக்கோள்	...	224
22.	அரசிறைக் கைக்கோள்	...	236
23.	கூலிக் கைக்கோள்	..	252
24.	விலைக் கைக்கோள்	...	266
25.	சர்வதேசச் சுழல் கைக்கோள்	...	275
26.	நிலைபேருக்கத்தின் நன்மை, தீமைகள்	...	287
நூல் அகராதி		...	294
கலைச்சொல் அகராதி (ஆங்கிலம்—தமிழ்)		...	300
கலைச்சொல் அகராதி (தமிழ்—ஆங்கிலம்)		...	313

முதல் பாகம்

வாணிபச் சுழல்களின் இயல்பு

1. அடிப்படைக் கருத்துகள்

'அன்புள்ள புருட்டஸ், குற்றமானது நமது நட்சத்திரங்களிடம் இல்லை; நம்மிடம்தான் உள்ளது.'

—வில்லியம் ஷேக்ஸ்பியர்

வாணிபச் சுழல் என்றால் என்ன?

வாணிபத்தில் சீரான ஓட்டம் எப்போதும் இருப்பதில்லை. சில ஆண்டுகளில் செழிப்பும், பின்னர்ச்சில ஆண்டுகளில் மந்தமும் அதில் காணப்படுவது இயல்பு. சிறிது காலம் வேலை வாய்ப்புகள் மலிந்து இருப்பனவாயும் பின்னர்ச்சிறிது காலம் வேலை வாய்ப்புகள் குறைந்திருப்பனவாயும் தென்படுவதுமுண்டு. அதாவது, வாணிப நடவடிக்கையில் ஏற்றமும் இறக்கமும் அவ்வப்போழ்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இத்தகைய வாணிபநிலை மாறுதல்களுக்கு முறையான, திட்டவட்டமான போக்கு ஏதேனும் உண்டா? நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின்படி, வாணிபத்தில் மாறுதல்கள் அடிக்கடி நிகழ்வனவாயிருக்கின்றனவேயன்றி, முறையான திட்டவட்டமான போக்கு என்பது இருப்பதாகத் தெரியவில்லை; இவை பல ஆண்டுகளுக்கு நீடிப்பனவாய் இருக்கின்றன. இவ் வாணிப ஏற்ற இறக்கங்களுக்குத்தான் 'வாணிபச் சுழல்' என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கடந்த நூற்றைம்பதாண்டுகளில் மிகவும் தாழ்ந்த மட்டங்களுக்கு வாணிபம் சரிந்துகிடந்த காலங்கள் உண்டு. இப்படிப்பட்ட மந்தங்களால் பல நேரங்களில் இடர்ப்பாடுகள் உருவாகிப் பல்லாண்டுகளுக்கு நீடித்திருக்கின்றன. சுணக்கமும் பல நேரங்களில் வாணிபத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கிறது. அவ்வாறே செழிப்பும் வாணிபத் துறையில் அரசோச்சியுள்ளது. இவைகளுக்கான சான்றுகள் அண்மைக்கால வரலாற்றில் இருக்கின்றன. ரயில் பாதைகள் போடப்பட்டதும், தொழில்கள் செழித்தோங்

கியதும், மக்கள் தொகை பெருகியதும், போர் ஆயத்தங்கள் மும்முரமடைந்ததும், யூக வாணிப நடவடிக்கைகள் துரிதமடைந்ததும் இந்தச் செழிப்பு நிலைகளின்போதுதான் என்று கருதப்படுகிறது. வாணிபத்தில் நல்ல காலங்களும் பொல்லாத காலங்களும்-பூரிப்பும் தேக்கமும்-மாறிமாறி வருகின்றன. இம் மாறுதல்கள் வாணிபச் சுழல்கள் என அழைக்கப்பட்டு வருகின்றன. வாணிபச் சுழல் என்றால் என்ன? மொத்தப் பொருளாதார நடவடிக்கையில் நிகழும் ஒரு மாறுதலே வாணிபச் சுழல் ஆகும். மொத்தப் பொருளாதார நடவடிக்கையை ஒரு நாட்டின் உண்மை வருமானம் அல்லது உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகியவை மூலமாக அறியலாம். உற்பத்தியும் வேலைவாய்ப்பும் மாறுகின்றபோது, மொத்தத் தேவையிலும், இறுதிநிலைச் செலவுகளிலும் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப விலைகள் மாறுகின்றன. உற்பத்தி, விலைமட்டம் மாறுவது உற்பத்திமதிப்பு மாறுதலாகப் பிரதிபலிக்கிறது. வாணிபச் சுழல் என்பது வேலைவாய்ப்பு, மொத்த உற்பத்தி, விலை, நாட்டு உற்பத்தியின் பணமதிப்பு முதலியவற்றில் தோன்றிடும் ஒரு மாறுதலேயாகும். நாட்டு உற்பத்தியின் பணமதிப்பானது மொத்த உற்பத்தி, விலைகள் ஆகியவற்றைப் பொறுத்ததாகையால், வாணிபச் சுழல் என்பது வேலை வாய்ப்பு, விலைகள் ஆகியவற்றில் நிகழும் ஒரு மாறுதலேயாகும்.

இவை மூன்றும், குறிப்பாக வேலைவாய்ப்பும் உற்பத்தியும், ஏறக்குறைய ஒரே திசையில் இணைந்து இயங்குவதாயிருக்கின்றன. விலைகள் அவ்வாறில்லை. ஆழமான மந்தத்திலிருந்து மீட்சி மலர்கின்ற நிலையில் உற்பத்தியும் வேலைவாய்ப்பும் விரைவாக உயரலாம்; ஆனால் விலைகள் உயராது போகலாம். அவ்வாறே பூரிப்பு முடியும் நிலையில் உற்பத்தியும் வேலைவாய்ப்பும் அற்பமாக உயரலாம்; ஆனால், விலைகள் துரிதமாக உயர்ந்து செல்வதாக இருக்கலாம்.

அடிக்கடி, திரும்பத்திரும்பத் தோன்றிடும் ஒரு நிகழ்ச்சிக் கோவையினைச் சுட்டிக்காட்டச் சுழல் என்ற சொல் உயிரியலில் (Biology) ஆளப்படுகிறது. இந் நிகழ்ச்சிகள் ஒரே அளவில் அல்லது ஒரே காலவரையறையுடன் நடந்து தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. இதுபோலவே தொழிலிலும் வாணிப நடவடிக்கைகளிலும் கூட மாறுதல்கள் கோவையாகத் திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. ஆனால், ஒரே காலவரையறையுடன் நடைபெறவேண்டும் என்றில்லை. வாணிபத்தின் ஒரு குறிப்பிட்ட திசையில் நிகழும் ஒரு மாறுதல் ஒரு குறிப்பிட்ட நிலைவரையில் மேன்மேலும் குவிந்து, வலுவடைந்து பின்னர்த் தீவிரமடைகிறது. பிறகு, ஊக்க

மூட்டிய சக்திகள் பலவீனமடைந்து, இறுதியில் முற்றிலும் எதிர் மாறான போக்குத் தோன்றுகிறது.

வாணிபச் சுழலைப்பற்றி நிலவுகின்ற ஒரு முக்கியக்கருத்து, பின் வருமாறு அமைந்திருக்கிறது: வாணிப மாறுதலின் போக்குத் தனது இயல்பில் அலைகளைப்போல் இருக்கிறது. புற அதிர்ச்சி யொன்று எவ்வாறு ஊசற்குண்டிலை (pendulum) ஆட்டுவைக் கிறதோ அவ்வாறே புற ஊக்கிகள் பொருளாதார நிலையை மேலும் கீழும் அசைய வைத்து அலைபோலச் சென்றிட வைக்கின்றன. ஆனால், ஊசலாட்டத்தின் அகக் கட்டமைப்பே (inner structure) இவ்வலை இயக்கத்தின் நீட்சியை நிர்ணயிக்கிறது. அசைவுகளை உண்டாக்கும் ஊக்கிகளிடத்தில் ஒரு முறையான சீரான போக்குக் காணப்படவில்லையென்றாலும் அசைவுகளிடத்தில் மட்டும் மிகுந்த சீர்மையும் முறைமையும் காணப்படுகின்றன. எந்த ஒரு தொழி லேற்ற இறக்கத்தையும் தூண்டிவிடுவது ஓர் ஊக்கியேயாகும். இந்த ஊக்கி, செயல்படும்போது பொருளாதார நிலவரத்தின் பல கூறுகள் ஆட்டுவிக்கப்படுகின்றன. தூண்டிவிடும் ஊக்கியினால் உருவாகும் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதை நிர்ணயிப்பவை இப் பொருளாதார நிலவரங்களாகும். ஊக்கிகள் கொடுக்கப்பட் டிருப்பதாக உள்ள நிலையில் தொழில் ஏற்ற இறக்கங்களுக்குக் காரணங்கள் இந்தப் பொருளாதார நிலவரங்களேயாம்.

மற்றொன்றையும் இங்கே நாம் நினைவுகூர்தல் வேண்டும். வாணிபச் சுழல்கள் என்றழைக்கப்படும் மாறுதல்களானவை, வாணிப நடவடிக்கை அரங்கு எங்கணும் வியாபித்திருக்கக் கூடியவையாகும். அதாவது வாணிபச் சுழல்கள் என்பவை, வாணிப முழுவதும் ஏற்படும் மாறுதல்களாகும். வாணிப நடவடிக்கைகளில் எண்ணற்ற மாறுதல்கள் நிகழ்கின்றன. அவற்றில் ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்தவை வாணிபச் சுழல்கள். எனவே, இம் மாறுதல்கள் அனைத்தையும் சற்று ஆராய்ந்து பார்த்தால்தான் வாணிபச் சுழல்களைப்பற்றி நம்மால் பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

வாணிப மாறுதல்களின் பல்வேறு வகைகள்

ஏற்கெனவே குறிப்பிட்டபடி வாணிபத்தின் போக்கு ஒரு சீரா யிருப்பதில்லை. வாணிபம் என்று பொதுவாக எடுத்துக்கொண்டா லும் சரி அல்லது வாணிபத்தின் ஒரு துறையை எடுத்துக்கொண்டா லும் சரி நிலைபேற்றை (stability) விட ஏற்ற இறக்கமே-சலனமே- அடிக்கடி காணப்படுவதாயிருக்கிறது. இம் மாறுதல்கள் பலவகை யானவையாகும்.

இவற்றில் வழக்கமாகக் குறிப்பிடப்படுபவை: (1) மிக நெடுங் கால (secular) போக்குகள், (2) பருவ கால நெளிவுகள் அல்லது ஏற்ற இறக்கங்கள், (3) சுழல் தன்மைய நெளிவுகள், (4) சில்லறைத் தாற்காலிக மாறுதல்கள். மிக நீண்ட காலங்களுக்கு நீடித்திருப்பனவாயுள்ள நிலையான ஏற்ற இறக்கங்கள் மிக நெடுங் கால நெளிவுகளாகும். பருவ கால மாறுதல்களோடு தொடர்புடைய காரணங்களால் வாணிப நடவடிக்கையில் ஓராண்டுப் போக்கில் ஏற்படும் நெளிவுகள் பருவ கால மாறுதல்களாகும். வாணிப நடவடிக்கையில் பெருக்கும் சுருக்கமும் அலைபோல் மாறி மாறி ஓராண்டிற்கதிகமாக நீடித்திருக்குமேயானால், அவை சுழல் தன்மைய நெளிவுகளாகும். சில்லறை மாறுதல்களானவை தாற்காலிகமானவை. இவை தொழிலைப் பாதிக்கின்ற பல்வேறு இடையூறுகளால் உண்டாவன.

வாணிப மாறுதல்களை எர்னஸ்ட் வேஜ்மான் பின்வருமாறு வகைப்படுத்துகிறார் :

(1) தனிப்பட்ட மாறுதல்கள் அல்லது பொருளாதாரக் கட்டமைப்பில் தோன்றும் மாறுதல்கள். இது இரு வகைப்படும் : (a) தொடர்ச்சியற்ற மாறுதல்கள். இவற்றால் வளர்ச்சிப் போக்கில் பிளவு ஏற்படுகின்றது. தற்செயலான சின்னஞ் சிறு மாறுதல்களிலிருந்து, முதல் உலகப் போரால் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட அடிப்படை மாறுதல்கள்வரை இவ் வகையினுள் அடங்கும். (b) தொடர்ச்சியான மாறுதல்கள். இவைகளில் வளர்ச்சி, பெருக்கம், சுருக்கம், உருமாற்றம் முதலியவை அடங்கும். இவை அடிப்படையில் பெரும்பாலும் நெடுங்காலப் போக்குகளாயிருக்கின்றன.

(2) திரும்பத் திரும்ப நிகழும் நெளிவுகள் அல்லது ஏற்ற இறக்கங்கள். இவைகளில் இருவகை உள்ளன : (a) ஒரு சீரான கால இலயத்துடன் (rythm) தோன்றும் மாறுதல்கள். பருவகால மாறுதலால் உருவாகின்ற இவை, ஒழுங்கான இடைவெளியுடன் மீண்டும் மீண்டும் வருவன. (b) தங்குதடையற்ற கால இலயத்துடன் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், தொடர்ந்து திரும்பத்திரும்பத் தோன்றும் பெருக்கமும் (expansion) சுருக்கமும் (contraction) இவற்றைச் சார்ந்தன. வாணிபச் சுழல்கள் என்று அழைக்கப்படுகின்றவையும், சுழல் இலக்கணமுடையவை என்று கருதப்படுபவையும் இவ் வகையினுள் அடங்கும்.

மேலே விவரிக்கப்பட்ட வகை வேறுபாடுகளிடமிருந்து நாம் அறிவதென்ன? வாணிப நடவடிக்கையில் இருவகையான முக்கிய

மாறுதல்கள் நிகழ்கின்றன. அவையாவன : (1) மீண்டும் மீண்டும் நிகழாத, கால இலயமில்லாத மாறுதல். இதில் அடங்குவன, நெடும்போக்குகள் (trends), தற்செயலான ஏற்ற இறக்கங்கள், முக்கியக் கட்டமைப்பு மாறுதல்கள். (2) திரும்பத் திரும்பக் கால இலயத்தில் நிகழ்ந்திடும் மாறுதல்கள் பல்வேறு சுழல் ஏற்ற இறக்கங்கள் இவைகளுக்கு உதாரணங்கள். இம் முக்கிய வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விளக்கம் தொடங்குகிறது.

மீண்டும் மீண்டும் நிகழாத, கால இலயம் (Rythm) அற்ற மாறுதல்கள்

(a) போக்குகள் (Trends): வாணிபத்தின் எந்த ஒரு பிரிவிலும் வாணிபச் சுழலைவிட அதிகமான காலத்திற்குத் தொடர்ந்திருந்து வருவதாயுள்ளதொரு இயக்கம் போக்கு என்று சொல்லப் படுகிறது. இந்தப் போக்குகள் சாதாரணமாக வளர்ச்சிமுக மானவை என்று நம்பப்படுகிறது. உதாரணமாக, வளர்ச்சியுற்ற நாடுகளில் தொழில்துறை உற்பத்தி மேல்நோக்கிய போக்கினைக் கொண்டிருக்கிறது. மிக நெடுங்காலப் போக்கு (1) மக்கள் தொகை வளர்ச்சி (2) கல்வி, கண்டுபிடிப்பு, தொழில் நுணுக்க முன்னேற்றம், மூலதனத் திரட்சி முதலியவற்றின் விளைவுகள் வழியே ஏற்படுகிற பொருளாதாரத் திறமை ஆகியவற்றின் விளைவு என்று இப்போது கருதப்படுகிறது. ஆனல் போக்குகள் என்பவை மேல்நோக்கியனவாயு மிருக்கலாம்; கீழ் நோக்கியனவாயு மிருக்க லாம். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பத்தொன் பதாம் நூற்றுண்டின்போது வட்டி வீதங்கள் கணிசமாகக் கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தன. சில நேரங்களில் போக் குகள் முதலில் மேல் நோக்கிப்பாய்ந்து, பிறகு கீழ்நோக்கிச்சரிவதா யுள்ளன.

(b) ஒழுங்கற்ற தற்செயலான ஏற்ற இறக்கங்கள் : திரும்பத் திரும்ப ஏற்படாத, தற்செயலான சில காரணிகளால் வாணி பத்தில் மாறுதல்கள் நிகழ்வதுண்டு. தீ, புயல், வெள்ளம், புரட்சி, போர், சட்ட மாறுதல்கள் முதலியவை காரணமாக நெடுங் காலத் திற்கோ அல்லது குறுங் காலத்திற்கோ வாணிபத்தில் செழிப்பு அல்லது சுணக்கம் தோன்றுவதுண்டு. இவை, போக்குகளி லிருந்தும், சுழல்களிலிருந்தும் வேறுபட்டவையாகும். ஏனெனில் இவைகளை நாம் முன்கூட்டியே தெரிந்துகொள்வதும், கணக்கிடு வதும் சாத்தியமில்லை; இவைகளுக்கெதிராகப் பாதுகாப்புத்தேடிக் கொள்வதும், இவைகளை விலக்குவதும் முடியாது. இந்தக் காரணிகள் தற்செயலாக ஏற்படுவனவாயிருப்பதால், இவை சில

நேரங்களில் தாமாகவே ஒன்றை ஒன்று ஈடு செய்வதும் உண்டு. இந்தத் தற்செயல் காரணிகளில் மிகவும் சக்தி வாய்ந்ததொரு காரணி போர் ஆகும். சின்னஞ் சிறு போர்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் வெள்ளம் போன்ற சாதாரணமான விளைவு களையே கொண்டுவரக் கூடியவை. ஆனல் பெரும் போர்கள் அவ்வாறில்லை. பெரும்போர்கள் மூண்டெழும்போது வாணிபத்தில் அளவுக்கு மீறிய பெருக்கம் ஏற்படுவதாயிருக்கும். அவ்வாறே பெரும் போர்கள் முடிவடைகின்றபோது தீவிர மந்தநிலைமை உருவாவதாயிருக்கும். கட்டமைப்பு மாறுதல்கள் (structural changes) ஏற்படுமளவிற்குக்கூடப் பொருளாதாரப் பின்னணியில் மாறுதல் ஏற்படலாம். இத்தகைய தற்செயல் மாறுபாடுகளேதான் வாணிபச் சுழல்களின் தன்மையில் வேறுபாட்டை உண்டாக்கு கின்றன. சுழல்கள் யாவும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை என்ருலும், இரு சுழல்கள் ஒத்திருப்பதில்லை; இரட்டைப் பிறவியாயிருப்பதில்லை என்ருர் பேராசிரியர் பிகு. வாணிபச் சுழல்களிடம் பொது வான ஒரு சில தனிப்பட்ட போக்கு அல்லது பாணி காணப் படுகிறது எனினும், ஒவ்வொரு சுழலும் சில விஷயங்களிலாவது மற்றவைகளிடமிருந்து வேறுபட்டதாயிருக்கிறது.

(c) கட்டமைப்பு மாறுதல்கள் : சில சமயங்களில் இந்தத் தாற்காலிக மாறுதல்கள் பொருளாதாரக் கட்டமைப்பையே மாற்றலாம். பொருளாதாரத் திட்ட அமைப்பின் அடிப்படை மாறுதல்கள் கட்டமைப்பு மாறுதல்கள் ஆகும். உதாரணமாக, பிறப்புக் கட்டுப்பாடு மூலமாக மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் மாறுமேயாஞல், அது ஒரு கட்டமைப்பு மாறுதல் ஆகும். முதல் உலகப் போரினுல் பல கட்டமைப்பு மாறுதல்கள் நிகழ்ந்தன. கடஞளி நாடாயிருந்த அமெரிக்கா, கடன் ஈயும் நாடாக மாறியது; கடன் ஈயும் நாடாயிருந்த ஜெர்மனி, கடஞளி நாடாக மாறிற்று. புதிய சுங்கவரிச் சுவர்களால் வாணிபத்திற்குத் தடை ஏற்படு வதும், புதிய மத்திய பாங்கு அமைப்புகள் ஏற்படுத்தப்பெறு வதும் கட்டமைப்பு மாறுதல் வகைப்படும். அவ்வாறே 1870–71-ல் ஜெர்மனி ஐக்கியமடைந்ததும், 1880-ல் தென் ஆஃபிரிக்காவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதும், 1840-ல் இங்கிலாந்து தடையிலா வாணிபக் கொள்கையைத் தழுவியதும், 1920-ல் தொழிற் புரட்சி மூண்டெழுந்ததும் கட்டமைப்பு மாறுதல்களாகும்.

திரும்பத் திரும்ப நிகழ்கிற ஏற்ற இறக்கங்கள் (Recurring Fluctuations)

(a) பருவகால ஏற்ற இறக்கங்கள் : பருவங்களின் மாறுதல் களால் வாணிபத்தில் ஏற்படுபவை பருவகால ஏற்ற இறக்கங்

களாகும். இவைகளிடம் குறிப்பிட்ட பருவ நிகழ்வு (periodicity) உண்டு. இவற்றில் சில, தேவை அளிப்பில் உண்டாகும் இயற்கை மாறுதல்களால் தோன்றிடுகின்றன. மற்றவை, பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், சமூக அமைப்புகள் முதலியவற்றில் தோன்றும் மாறுதல்களால் உண்டாகின்றன. இவை செயற்கை நெளிவுகள். பருவ கால மாறுதல்களுக்குப் பல உதாரணங்கள் உள்ளன. விவசாய உற்பத்தி, சாலேகளமைத்தல், வீடு கட்டுதல் முதலியவை பருவ கால மாறுதல்களால் பாதிக்கப்படுகின்றன. பண்டங்கள் மற்றும் பணிகளுக்குள்ள தேவையிலும் இத்தகைய இயற்கை நெளிவுகள் காணப்படுகின்றன. பருவ கால மாறுதல், மரபு காரணமாகவும் இருக்கலாம் என்பதனைக் கிறிஸ்துமஸ், பொங்கல் முதலிய திருவிழாக்களின்போது சில்லறை விற்பனையில் ஏற்படும் அதிகரிப்புகளால் அறியலாம். பருவங்களால் ஏற்படும் விளைவுகள் பல்வேறு தொழில்களைப் பல்வேறு அளவுகளில் பாதிப்பனவாயிருப்பதால், ஒரு நாட்டு வாணிபம் முழுவதும் மொத்தமாக இவற்றால் கடுமையாகப் பாதிக்கப்படுவதில்லை.

(b) **சுழல் ஏற்ற இறக்கங்கள்** (Cyclical fluctuations): வாணிப நடவடிக்கையில் மற்றொரு வகையான நெளிவுகள் இருக்கின்றன. இவை போக்குகளைப் (trends) போன்று ஒரே திசையில் தொடர்ந்து இருப்பதில்லை; மாறிமாறித் தாழ்வதும் உயர்வதுமாயிருக்கின்றன. மற்றும் பருவ கால ஏற்ற இறக்கங்களைப்போல் அல்லாது, இவை நெடுங் காலத்திற்கு நீடிப்பனவாயிருக்கின்றன. இந் நெளிவுகளில் காணப்படுபவை பெருக்கமும் சுருக்கமும் ஆகும். இவைகளிடம் குறிப்பிட்ட கால இலயம் இல்லை. ஆனால், இவைகளில் சுழல் காணப்படுகிறது. சுருக்கமும் பெருக்கமும் மாறிமாறிச் சற்றேறக்குறைய ஒரே மாதிரியான பாணியில் நிகழ்கின்றன. வேளாண்மையைவிட வணிகத்தைப் பிரதானமாகக் கொண்ட நாடுகளில் இவை தெளிவாகத் தோன்றுகின்றன; இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கடந்த நூற்றாண்டுகளில் இவை பளிச்சென்று புலனாகியிருக்கின்றன. இந்நெளிவுகள் 'சுழல்கள்' அல்லது 'சுழல் ஏற்ற இறக்கங்கள்' எனப் பெயரிடப்படுகின்றன.

சுழன்றுவரும் ஏற்ற இறக்கங்கள் கால இலயத்தில் பருவ கால மாறுதல்களிலிருந்து வேறுபட்டவை. சுழல்களிடம் சுதந்திரமாகக் கால இலயம் காணப்படுகிறது; ஆனால் பருவங்களிடம், அதிலும் குறிப்பாக இயற்கைப் பருவங்களிடம் ஒரு குறிப்பிட்ட கால இலயம் மட்டுமே உண்டு. மேலும் சுழல்களிடம் கால அளவு ஒரே மாதிரியானதாயிருப்பதில்லை; ஆனால், அவைகளிடம் நம்மால் எளிதில் கண்டுகொள்ளத் தக்கதாயுள்ள ஒரு பாணி உண்டு.

பருவங்களிடம் குறிப்பிட்ட கால அளவு உண்டு; அதோடு கண்டு கொள்ளத் தக்கதாயுள்ள ஒரு பாணியும் உண்டு.

சுழல் ஏற்ற இறக்கங்கள் வாணிபத்தின் பல்வேறு துறைகளில் காணப்படுகின்றன. கூலிகள், வட்டி வீதங்கள், இலாபங்கள், சேமிப்புத் தொகைகள், பாங்கு வைப்புகள், எஃகு உற்பத்தி, மோட்டார் கார் விற்பனை, வேலைவாய்ப்பு, திருமணம், பிறப்பு விகிதங்கள் முதலிய எல்லாவகை நடவடிக்கைகளிலும் சுழல் மாறுதல்கள் தென்படுகின்றன. தனிப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளில் அடிக்கடி நிகழும் மாறுதல்களைத் 'தனிவகைச் சுழல்கள்' (specific cycles) என்று குறிப்பிடலாம்.

சுழன்றுவரும் ஏற்ற இறக்கங்களின் ஒரு மிக முக்கியமான இயல்பு என்னவென்றால், இவை ஒரே நேரத்தில் வாணிபத்தின் எல்லா முக்கியப் பிரிவுகளிலும் தோன்றுவனவாகும். ஒரு சுழலின் அடுத்தடுத்த கட்டங்கள் உடனுக்குடன் நாட்டின் எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலும் பரவுவனவாயிருக்கின்றன. ஒரு நாட்டைப் பீடிப்பதன்றிப் பற்பல நாடுகளையும் இவை ஒரு நேரத்தில் பாதிக்கின்றன. இத்தகைய பன்னாட்டு ஒற்றுமையானது சமீப காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கதாயிருந்துள்ளது.

சுருங்கக்கூறின், பொருளாதாரச் செய்முறைகளில் காணும் பல சுழல்களில் பெரும்பாலானவை ஒன்றோடொன்று தொடர்புடையனவாயிருக்கின்றன. மிச்சலின் (Mitchell) கருத்துப்படி இத்தகைய தொடர்புடைய நிகழ்ச்சித் தொகையே வாணிபச் சுழல் ஆகும்.

1. சிறிய, பெரிய சுழல்கள் (Minor and Major Cycles)

அமெரிக்க நாட்டில் வாணிபச் சுழல் என்ற சொல், சாதாரணமாகப் பெரிய சுழல்களையும், சிறிய சுழல்களையும் குறிக்க ஆளப்பட்டு வருகின்றது; மந்தம் என்ற சொல், சிறு சுணக்கங்கள், பெரும் மந்தங்கள் ஆகிய இரண்டையும் சுட்டிக்காட்ட ஆளப்பட்டு வருகிறது. ஆனால், ஐரோப்பாவில் வாணிபச்சுழல் என்பது பெருஞ் சுழல்களை மட்டுமே சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெருக்கம் சுருக்கம் போன்ற எல்லாவகை மாறுதல்களும், பெரிய சிறிய சுழல்களில் இடம் பெறுகின்றன. எனினும், சிறிய பெரிய சுழல்களின் காலநீட்சி, பருமன் முதலியவை வெவ்வேறானவையாயிருக்கின்றன. ஆகையால் இவைகளைத் தனியே பிரித்துக்காட்டுவது அவசியமாகிறது.

(a) **பெருஞ்சுழல்கள் :** பெருஞ்சுழல் என்பதற்கு அடுத்தடுத்த நெருக்கடிகளுக்கு (crisis) இடையே நிகழ்ந்திடும் வாணிப மாறுதல் என்று ஜே. ஏ. ஈஸ்டி இலக்கணம் கூறுகிறார். 19ஆம் நூற்றாண்டில், பொருளாதார நடவடிக்கையில் பத்தாண்டுகளுக் கொருமுறை நெருக்கடிகள் தோன்றின. இவை, 'வர்த்தக நெருக்கடிகள்' (commercial crisis) என அழைக்கப்பட்டன. ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருளாதார நிகழ்ச்சிகள் என்பதைவிடத் தனித்தனியான நிகழ்ச்சிகள் என்றே அவை கருதப்பட்டன. ஆனால், இவை தனித்தனியான நிகழ்ச்சிகளன்று என்றும், வாணிபச் சுழல் ஏற்ற இறக்கத்தின் ஓர் அங்கம் என்றும், அதோடு செழிப்பு, நெருக்கடி, தொழில்முறிவு ஆகிய ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பின் தொடர்ந்து அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கின்றன என்றும் கிளமன்ட் ஜுக்ளர் (Clement Juglar) என்ற ஃபிரஞ்சுப் பொருளாதார அறிஞர் 1862-ல் கூறினார். அதற்குப் பிறகே பொருளாதார இயலார் வர்த்தகச் சுழல் என்ற பதத்தை ஆளத் தொடங்கினர். நெருக்கடிகளுக் கிடையில் காணப்படுவது வர்த்தகச் சுழல் என்று கண்டனர்.

வாணிபத்தில் 'நெருக்கடி' (crisis) என்ற சொல்லுக்குச் சரி நுட்பமான இலக்கணம் கிடையாது. பொதுவாக இதற்குப் பண அங்காடியில் ஏற்படும் பெருங் குழப்பங்கள் அல்லது அமைதிக் கேடுகள் என்று பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால், இத்தகைய அமைதிக் கேடுகளால் வாணிபத்தில் பெரும் சுணக்கம் ஏற்பட்டு விடுவதில்லை. 1929-ல் ஏற்பட்டதைப் போன்று பல இறங்குமுகங்கள் (down turns) உலகில் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் அவைகளைத் தொடர்ந்து நெருக்கடிகள் தோன்றியிருப்பதாகத் தெரியக் காணேம். மேலும் 1884, 1933 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்த பெரும் நெருக்கடிகள் சுருக்கம் முடிந்த பிறகுதான் தோன்றினவே ஒழிய, சுருக்கத்தின் தொடக்கத்தில் அன்று. ஆகவே, பெருஞ் சுணக்கங்களுக்கு இடையே தோன்றும் இடைவேளைகளே பெருஞ்சுழல்கள் என்று கருதப்படவேண்டும். ஆனால், எது பெரும் இறங்குமுகம்? என்பது அவரவர் தீர்ப்பைப் பொறுத்தது. ஆயினும், 1924 அல்லது 1927-ல் ஏற்பட்டது பெரும் இறங்குமுகம் அன்று என்றும், ஆனால் 1929-ல் ஏற்பட்டது பெரும் இறங்குமுகம் என்றும் உறுதியாகக் கூறலாம். இத்தகைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் ஹான்சன் (**Hansen**), 1837-1937 காலப் பகுதியில் 12 பெருஞ் சுழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறுகிறார். இவைகளின் சராசரி காலநீட்சி 8·33 ஆண்டுகள். 1857 முதல் 1937 வரை பத்துப் பெருஞ்சுழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று இவர் மேலும் தெரிவிக்கிறார். இவற்றின் கால

நீட்சி 8·0 ஆண்டுகள். வாணிப ஏற்ற இறக்கங்களின் சுழல் இயல்பினைத் தெளிவுபடுத்திய ஜுக்ளர் அவர்களின் நினைவாக, பெருஞ் சுழல்கள் சில நேரங்களில் ஜுக்ளர் சுழல்கள் (Juglar cycles) என அழைக்கப்பட்டு வருகின்றன.

(b) **சிறு சுழல்கள்:** பெருஞ்சுழல்களில் ஏறுமுகத்தில் பல சிறு இறங்குமுகங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, 1924, 1927ஆம் ஆண்டுகளில் வாணிபப்பெருக்க காலத்தில் சிறு இறங்கு முகங்கள் காணப்பட்டன. அவ்வாறே இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஏற்பட்ட பெருக்கத்தில் சிறு இறங்குமுகங்கள் தென் பட்டன. இவை சிறு வாணிபச் சுழல்கள் என்று கருதப்படுகின்றன. சிறிய சுழல்களின் நீடிப்புக் குறுகியதாயிருப்பினும் எண்ணிக்கையில் அதிகமானதாயிருக்கின்றன. 1857 முதல் 1937 வரை அமெரிக்க ஐக்கிய நாட்டில் 23 சிறு சுழல்கள் தோன்றின என்றும் அவைகளின் சராசரி கால நீட்சி 3·48 ஆண்டுகள் என்றும் ஹான்சன் கண்டார். இவைகளைச் சிறு சுழல்கள் என்று கிச்சின் பெயரிட்டார். ஒரு சிறு சுழலின் கால நீட்சி $3\frac{1}{3}$ ஆண்டுகள் அல்லது 40 மாதங்கள் என்பது ஜோசப் கிச்சின் (Joseph Kitchin) அவர்களது முடிவு. பெருஞ் சுழல்கள், இரண்டு அல்லது மூன்று சிறு சுழல்களின் இணைப்புகளே என்று அவர் கருதுகிறார்.

பெரிய சுழல்கள், சிறிய சுழல்கள் என்ற இருவகைச் சுழல் களில் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானது பெரிய சுழல்கள். சிறு சுழல்கள் பரபரப்பை உண்டாக்காமையால் இவை வருவதும் போவதும் சில நேரங்களில் தெரியாமலே போய்விடுவது உண்டு. புள்ளி விவரக் குறியீடுகளின் உதவி கொண்டுதான் இவை அறியப்படுகின்றன; சில நேரங்களில் புள்ளி விவரக்குறியீடுகளால் கூட இவற்றை அறிய முடிவதில்லை. 1927ஆம் ஆண்டின் இறங்கு முகம் இப்படித்தான் அறியப்படாமல் போயிற்று.

ஆனால், பெருஞ் சுழல்களிடத்தில் பரபரப்பை உண்டாக்கும் அம்சங்கள் நிறைய உண்டு. பெரிய சுழல்களால் கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே, அவை வருவதும் போவதும் நமக்குத் தெரிகின்றன. பெருஞ்சுழல்கள் முக்கியமானவையாயிருப்பதற்கு ஒரு காரணம், அவைகளால் வேலை வாய்ப்பு, விலைமட்டம், வருமானப்பகிர்வு முறை ஆகியவற்றில் நிகழும் மாறுதல்கள் பொது மக்களைப் பெரிதும் பாதிப்பதே. ஆனால், அடிப்படைப் போக்கு, இயல்பு முதலியவற்றைப் பொறுத்தவரையில் இவ் விரு வகைச் சுழல்களுக்கிடையில் வேறுபாடு கிடையா. இரு வகைச் சுழல்களிலும் செழிப்பு, சுணக்கம், மந்தம், மீட்சி என்ற கட்டங்கள் ஒன்றினை ஒன்று தொடர்ந்துவருகின்றன.

2. கட்டடத் தொழில் சுழல்கள் (Building Cycles)

வாணிபச்சுழலை விடப் பொருளாதாரத்தில் நீண்ட நீட்சியினை யுடைய நெளிவுகள் இருக்கின்றன எனத்தெரிகின்றது. இத்தகைய நெடிய மாறுதல்களில் குறிப்பிடத்தக்கது கட்டடத் தொழில் சுழல் ஆகும். கட்டடத் தொழில் சுழல்களின் சராசரி கால நீட்சி 18 ஆண்டுகள். 1830முதல் 1934வரை 6 கட்டடத்தொழில் சுழல்கள் அமெரிக்காவில் தோன்றியிருக்கின்றன என்றும், அவைகளின் சராசரி கால நீட்சி 17·3 ஆண்டுகள் என்றும் ரிகிள்மேன் (Riggle-man) கண்டார்.

கட்டடத்தொழிலுக்குரிய சாதனங்கள் கணிசமானதாக இருப் பதனுல், கட்டடத்தொழில் சுழல்களால் வாணிபச் சுழல்களின் போக்கு, பாதிக்கப்படலாம் என்று நம்ப இடமிருக்கிறது. பாதிக் கின்றன என்றே வாரன், மற்றும் பியர்சன் (Warren and Pearson) கருதுகின்றனர். வாணிபச் சுழலின் மீட்சிக்கட்டமும் கட்டடத் தொழில் பெருக்கமும் ஒருங்கு நிகழும்போது, அம் மீட்சிக் கட்டம் நெடியதாகவும் தீவிரமாயுமிருக்கும். மீட்சியானது கட்டடத் தொழிலின் மந்தநிலையுடன் ஒருங்கு நிகழ்ந்தால், குறுகியதாகவும் தீவிரமற்றதாயுமிருக்கும். வாணிபச்சுழலின் மந்தநிலை கட்டடத் தொழிலின் மந்தநிலையின்போது நிகழின் நெடியதாகவும் கடுமை யானதாயுமிருக்கும். மாறாக, அம் மந்தநிலை கட்டடத்தொழிலின் செழிப்பு நிலையின்போது நிகழின், அது குறுகியதாயும் பலவீன மானதாயுமிருக்கும்.

நெடுஞ்சுழல்கள் அல்லது நெடுங்கால அலைகள் (Long Waves)

ஐம்பது அல்லது அறுபதாண்டு கால வாழ்க்கையுள்ள நெடுஞ் சுழல்களும் இருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மொத்த விற்பனை விலை மட்டத்தில் அலைகளைப் போன்ற நெளிவு களைக் காண்கிறோம். 1790—1933 ஆண்டுகளுக்கிடையில் விலை மட்டத்தில் 6 மாறுதல்களை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் காண்கிறோம். அவை வருமாறு:

ஏற்றம்	......	1790—1815
இறக்கம்	......	1815—1849
ஏற்றம்:		
அமெரிக்காவில்	......	1849—1865
இங்கிலாந்தில்	......	1849—1873

இறக்கம்:		
அமெரிக்காவில்	......	*1865–1896*
இங்கிலாந்தில்	......	*1873–1896*
ஏற்றம்	......	*1896–1920*
இறக்கம்	......	*1920–1938*

ஐம்பதாண்டுகால வாழ்வுள்ள விலை மட்டச்சுழலை (price cycle) மேலே உள்ள பட்டியல் காட்டுகிறது. விலைகளின் இத்தகைய நெடுங்கால ஏற்ற இறக்கங்கள் பொருளாதார நடவடிக்கையின் நெடுஞ்சுழல்களோடு தொடர்புடையன. எனவேதான், விலைகள் ஏறும் காலப்பகுதிகளில் பொருளாதார நடவடிக்கை உற்சாகம் மிகுந்ததாயும், செழிப்பு நெடியதாயும், மந்தங்கள் குறுகியனவாயும் உள்ளன. விலைகள் விழும்போது செழிப்புக் குறுகியதாயும், மந்தம் நெடியதாயும் உள்ளன. விலைமட்டம் தாழ்வாயிருப்பதைவிட உயர்வாயுள்ளபோதுதான் பொருளாதார நடவடிக்கைகள் மும்முரமானவையாயிருக்கின்றன என்ற கருத்தினை வான் ஜெல்டரன் மற்றும் டி உல்ஃப் (Van Gelderen and de Wolff) ஆகியோரின் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

கோண்ட்ராடிஃப் சுழல்கள் (Kondratieff Cycles)

இங்கிலாந்தின் மொத்த விற்பனை விலைகளில் காணப்பட்ட நெடுங்கால ஏற்ற இறக்கங்களைப் போன்று, ஃபிரான்சு மற்றும் இங்கிலாந்து அரசுகளின் பாண்டுகளின் வட்டி வீதங்கள், இந்நாடுகளின் கூலிகள் ஆகியவற்றில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுவனவாயிருக்கின்றன என்று ருஷ்யப் பொருளாதார அறிஞர் கோண்ட்ராடிஃப் கண்டார். புள்ளி விவரங்களின் உதவிகொண்டு அவர் மேலும் ஆய்வு செய்தபோது, இங்கிலாந்தின் நிலக்கரி, இரும்பு, ஈயம் ஆகியவற்றின் உற்பத்தியிலும், ஃபிரான்சு நாட்டின் நிலக்கரியிலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியிலும் இங்கிலாந்து நாட்டின் ஏற்றுமதியிலும் அலைகளைப் போன்ற மிக நெடுங்கால ஏற்ற இறக்கங்களைக் கண்டார். 1780–1920 காலப்பகுதியில், 50 ஆண்டு கால நீட்சியுடைய $2\frac{1}{2}$ மாநெடுஞ்சுழல்கள் இருந்தது மேலும் அறியப்பட்டது. இத்தகைய மாநெடுஞ் சுழல்கள் கோண்ட்ராடிஃப் சுழல்கள் என அழைக்கப்படுகின்றன. இச் சுழல்களின்போது நிகழ்ந்த ஏற்ற இறக்கங்கள் வெறும் தற்செயலானவை என்று நினைப்பதற்கில்லை. நமது தொழில் மயமான பொருளாதாரத்தில் (industrial economy) உள்ள சில காரணிகள் மூலமாகத்தான் இவை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

இவ்வாறாகப் பொருளாதாரத் துறையில் மூவகைச் சுழல்கள் காணப்படுகின்றன.

(a) 40 மாத கால நீட்சியுடைய சிறு சுழல்கள் (minor cycles);

(b) மூன்று சிறிய சுழல்கள் அடங்கிய பெருஞ் சுழல்கள் அல்லது ஜுக்ளர் சுழல்கள் (major or Juglar cycles);

(c) ஆறு ஜுக்ளர் சுழல்களையுடைய மாநெடுஞ் சுழல்கள் அல்லது கோண்ட்ராடிஃப் சுழல்கள். பொருளாதாரத் துறையில் நாம் போக்குகள் (trends) என்று குறிப்பிடுவன மாநெடுஞ் சுழல்களின் பகுதிகளேயாகும்.

ஆக, ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பல் வேறு வகையான ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில தெளிவாயிருப்பதால் அடையாளங் கண்டுகொள்ள முடிகிறது. பருவ கால மாறுதல்களால் விளையும் நெளிவுகள், வாணிபச் சுழல்கள் (business cycles). வர்த்தகச் சுழல்கள் (commercial cycles), நெடுங்கால அலைகள், மிக நெடும் போக்குகள் (secular trends) ஆகியவை அடையாளங் கண்டுகொள்ளத்தக்க வாணிப ஏற்ற இறக்கங்களாகும். இவையேயன்றி, வகைப்படுத்த இயலா உறுதியான தோற்றமேதுமற்ற வேறுபல மாறுதல்களும், கட்டமைப்பு மாறுதல்களும் பொருளாதார அமைப்பில் நிகழ்கின்றன. வாணிபச்சுழல் என்பது வாணிபத்திற்கு நேரிடும் எண்ணற்ற நெளிவுகளில் ஒரு முக்கியமான வகையாகும். ஆகவே, பொருளாதார இயலாரின் ஆய்வு விழிகளையும், பொது மக்களின் கவனத்தையும் தன்னிடத்தே வாணிபச்சுழல் திருப்பிவிட்டிருப்பதில் வியப்பில்லை.

மேலும் படித்தற்கு உரியவை

1. ஜே.ஏ. ஈஸ்டி (J.A Estey), வாணிபச்சுழல்கள்(Business Cycles) ஆசிய வெளியீட்டகம் (Asia Publishing House), முதல் இந்தியப்பதிப்பு, **1960**. அத்தியாயம் 1.

2. ஏ. எச். ஹான்சன் (A.H. Hansen) 'வாணிபச் சுழல்களும் நாட்டு வருமானமும்' (Business Cycles and National Income), நியூயார்க்: டபுள்யூ. டபுள்யூ. நார்டான் கம்பெனி, **1951**, அத்தியாயம் 2.

3. E. வேஜ்மான் (E. Wagemann) 'பொருளாதார கால இலயம் (Economic Rythm) நியூயார்க்: மக்ராஹில் புத்தகக் கம்பெனி,' **1930**, அத்தியாயம் 3.

4. கார்ல் ஸ்னைடர் (Carl Snyder) 'வாணிபச்சுழல்களும், வாணிப அளவைகளும்' (Business Cycles and Business measurements), நியூயார்க்: மாக்மில்லன் கம்பெனி, 1927, பொருளாதார வளர்ச்சிபற்றிய அத்தியாயம்.

5. ஏ. எச். ஹான்சன், 'அரசிறைக் கொள்கையும் வாணிபச்சுழல் களும்' (Fiscal Policy and Business Cycles), நியூயார்க்: டபுள்யூ. டபுள்யூ. நார்டான் கம்பெனி (W.W. Norton Company) 1941, பக்கங்கள் 16—19.

6. வாரன், பியர்சன் ஆகியோரின் (Warren and Pearson) 'உலக விலைகளும் கட்டடத் தொழிலும்' (World Prices and the Building Industry), நியூயார்க்: ஜான் வைலி சன்ஸ் (John Wiley and Sons) 1957, அத்தியாயம் 6.

7. டபுள்யூ. சி. மிச்சல் (W. C. Mitchell) 'வாணிபச்சுழல்கள்-பிரச்சினையும் பின்னணியமைப்பும்' (Business Cycles, The Problem and its Setting) நியூயார்க்: தேசியப் பொருளாதார ஆய்வுக் கழகம் (National Bureau of Economic Research) 1927.

2. வாணிபச் சுழல்களின் கால அளவுக் கட்டங்கள் மற்றும் இயல்புகள்

'சீரான நேர்கோடே சிறந்தது எனக் கணிதவியல் கருதுகிறது. ஆனால், இடப்புறமும் வலப்புறமும் மாறிமாறி வளைந்து செல்வதுதான் வரலாற்றிற்கு இசைந்ததாயிருக்கிறது.'

— டபுள்யூ. எச். ஆடென்

வாணிபச் சுழல்களின் தோற்றம்

பொருளாதார அமைப்பில் பலதரப்பட்ட மாறுதல்கள் ஆதியிலிருந்து நிகழ்ந்துவந்துள்ளன. வாணிபம்பற்றிய விவரங்கள் நெப்போலியன் போருக்கு முற்பட்ட காலத்திற்குக் கிடைக்கவில்லை. வாணிபச் சுழல் என்பது அண்மைக்கால நிகழ்ச்சியாகத் தோன்றுகிறது. வாணிபத்தில் வளமான காலங்களும் வறுமையான காலங்களும் இருந்துவந்திருக்கின்றன என்று கடந்த காலப் பொருளாதாரக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. தொடக்கத்தில் வாணிப மாறுதல்கள் நெருக்கடிகள் (crisis) என்று குறிப்பிடப்பட்டு வந்தன. ஆனால், இத்தகைய மாறுதல்களில் வாணிபச் சுழல்களின் காலக் கட்டுத் தென்படவில்லை. மேலும், வர்த்தக உலகின் இயல்புகளின் இன்றியமையாத விளைவுகளாகவுமிருக்கவில்லை. 1558 முதல் 1720 வரையிலான இங்கிலாந்தின் வர்த்தக நிலைமையை ஆராய்ந்து பார்த்த வில்லியம் ஆர். ஸ்காட் (William R. Scott) என்பார், அக்காலப்பகுதியில் 30 நெருக்கடிகள் இருந்தன எனக் கண்டார். பஞ்சம், பிளேக்நோய், போர், உள்நாட்டுக்கலவரம், அரசின் அடாத நடவடிக்கைகள் ஆகியவை இந் நெருக்கடிகள் தோன்றியதற்கு முக்கியக் காரணங்கள். நிகழ்கால வாணிபச் சுழல்களில் இத்தகைய காரணங்கள் முக்கியமன்று.

முற்கால நெருக்கடிகள் சற்று நெடியவைகளாக இருந்தன. சராசரியில் ஐந்தில் ஒரு நெருக்கடி மூன்றாண்டுகளுக்கு மேல் நீடித்

தது. நவீன கால நெருக்கடிகள் குறுகிய வாழ்வுடையன. சுழல் முழுவதுமே மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்குள் முடிவடைந்து விடுகிறது. மேலும், முற்காலங்களில் செழிப்புநிலைக்கு நெருக்கடி இன்றியமையாததாக இல்லை. 30-ல் சுமார் 12 நெருக்கடிகள் மந்த காலங்களின்போது காணப்பட்டன. ஆனால், நவீன காலத்திய நெருக்கடிகள், 1932—33ஆம் ஆண்டின் நெருக்கடியைத் தவிர — செழிப்புநிலைக்குப் பிறகே தோன்றியிருக்கின்றன. ஏனெனில், செழிப்புநிலையால் உருவாகும் இடர்ப்பாடுகள் செழிப்புக்கு முடிவு தேடுகின்றன. தவிர, நிகழ்கால நெருக்கடிகள் நமது வாணிபத் துறையின் அகக்காரணங்களால் நிகழ்கின்றன. ஆனால், பழைய நெருக்கடிகள் புறக்காரணங்களால் தோன்றியமையால், அவை எப்போது வேண்டுமானாலும் நிகழலாம். பழைய நெருக்கடிகள் தாற்காலிகமானவை. எனவே, அவற்றிடம் நிகழ்கால வாணிப நடவடிக்கையின் அம்சங்கள் இரா. அவை எதிர்பாராத நிகழ்ச்சிகளாகும்.

ஆகவே, வாணிப நாகரிகம் நன்கு தழைத்தபோது ஏற்படக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக வாணிபச் சுழல்களை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வாணிபத் தொடர்பற்ற காரணமுடைய நெருக்கடிகள் மறைந்து, வாணிபத் தொடர்பான காரணமுடைய நெருக்கடிகள் தோன்றலாயின. நெருக்கடிகள் முதன்முதலில் எப்போது தோன்றின என்பது இன்னமும் யூகத்துக்குரியதாக இருக்கிறதேயொழிய உறுதியாகக் கூற முடியவில்லை. டுகன்—பாரனேஸ்கி (Tugan-Baranowsky) என்பார், வாணிபச்சுழல்கள் இங்கிலாந்தில் 1825-ல் தோன்றிய நெருக்கடிகளோடு தொடங்கின என்று கருதினார். ஆனால் பவுனியேஷியன் (Bouniation) என்பார், இங்கிலாந்தில் 1793ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடியை முதலாவதாகக் கருதினார். ஃபிரான்சு நாட்டில் ஜான் லாவின் மிசிசிப்பிக் கம்பெனியும் (John Law's Mississipi Company), இங்கிலாந்தில் சவுத் சீ பப்பிளும் (South Sea Bubble) முறிந்துபோனபோது (1720) ஏற்பட்ட பயங்கர நெருக்கடிகளே முன்னோடிகள் எனவும் கூடும். யூக வாணிப நடவடிக்கைகள் எல்லை மீறிப்போனமையால் ஏற்பட்ட இந்த நெருக்கடிகளுக்கும் பொது வாணிப அமைப்புக்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது என்பது உண்மை என்றாலும், இவற்றால் ஏற்பட்ட விளைவுகள் யூக வாணிபவட்டத்தையும் கடந்து, வாணிப நடவடிக்கையில் சுழலம்சங்களைத் தோற்றுவித்தன.

ஆகவே, பெரும்பாலான அறிஞர்களின் கருத்து என்னவென்றால், வாணிபச் சுழல்கள் நெப்போலியன் போர்களுக்குப் பின்னர் நவீன காலம் உருவானபோதுதான் இங்கிலாந்து நாட்டில் தோன்றின என்பதாகும். இப்போர்களின்போது இங்கிலாந்தில் தொழில்மயப் பொருளாதாரத்தின் அம்சங்கள் தென்படலாயின. ஒரு முதிர்ந்த பொருளாதாரம் தோன்றியது; மக்கள், நடவடிக்கைகளுக்குப் பெரும்பாலும் பணத்தை ஆளலாயினர்; வாணிபத் துறையில் செழிப்பும் மந்தமும் தோன்ற வசதி உண்டாயிற்று. குடும்ப வரம்பிற்குள் பொருளாதார வாழ்வு அடங்கிய ஒரு சமூகத்தில் அங்காடிக்காகப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை; உற்பத்தி செய்வதன் நோக்கம் தமது குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்பதே தவிர, இலாபம் ஈட்ட வேண்டும் என்பதன்று. ஆகவே, அங்கே வாணிபப் பொருளாதாரம் காணப்படுவதற்கில்லை. இது ஒரு பிழைப்பூதியப் பொருளாதார (subsistence economy) அமைப்பு. இவ் வகையமைப்பால் வாணிபச் சுழல்களை உருவாக்கிட முடியாது. இவ் வமைப்பின் உற்பத்தியிலும் மாறுதல்கள் நிகழலாம்; ஆனால், அவை பருவகாலங்களின் மாறுதல்களால் தோன்றுகின்றனவேயொழிய, மக்களின் வாணிப நடவடிக்கையால் அன்று.

மக்களில் பெரும்பகுதியினர் தங்கள் வாழ்விற்குப் பணத்தைத் தேடுவோராயும், பரந்த அங்காடிகளுக்காகப் பண்டங்களை உற்பத்தி செய்வோராயும், கடன் வசதிகளையும் பாங்கு அமைப்புகளையும் பயன்படுத்தி வருவோராயும், தொழிலாளர்களை மிகுதியாக வேலைக்கமர்த்திப் பேரளவில் பண்டங்களைத் தயாரிப்போராயுமுள்ளபோதுதான் வாணிபச் சுழல்கள் பொருளாதார அமைப்பின் ஓர் இன்றியமையாத அங்கமாக உருவெடுக்கின்றன. இவ்வகையில் பார்த்தால் வாணிபச் சுழல்கள் 'நவீன முதலாளித்துவத்தின்' (modern capitalism) ஒரு விளைவாக நமக்குப் படுகின்றன. மிகவும் முதிர்ச்சியுற்ற ஒரு முதலாளித்துவ அமைப்பில்தான் சுழல்கள் முதன்முதலில் தோன்றியிருக்கின்றன. முதலாளித்துவ அம்சத்தினைக் குறைவாகக் கொண்டுள்ள நாடுகளில் சிறிய அளவில்தான் வாணிபச் சுழல்கள் தோன்றுவனவாயிருக்கின்றன. முதலாளித்துவம் மிகுந்த அமெரிக்க ஐக்கியநாடு முதலிய நாடுகளில்கூட நவீன முதலாளித்துவச் செயல்முறை அதிகமாகக் காணப்படாதிருக்கின்ற விவசாயம், சில்லறை வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றினைச் சுழல் நெளிவுகள் குறைந்த அளவுகளில் தான் பாதிக்கின்றன. ஆகவே. வாணிபச்சுழல்கள் முதன்முதலில்

இங்கிலாந்தில்தான் தோன்றின. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடைபெற்று ஓய்ந்த பிறகு, தொழில் வளர்ச்சி காலூன்றிய போதுதான் வாணிபச் சுழல்களின் அடையாளங்கள் காணப் பட்டன. 'நீராவிச் சக்தி வளர்ச்சியுற்று, நிலக்கரியும் இரும்பும் பரவலாக ஆளப்பட்டு, இயந்திரக் கண்டுபிடிப்பு மலர்ந்த பிறகு தான் நவீன தொழிலும் வாணிபமும் தோன்ற முடிந்தன. இவற் றிடமிருந்துதான் வாணிபச் சுழல் ஜனனமாகியது' என்ருர் கார்ல் ஸ்னைடர் (Carl Snyder).

1840ஆம் ஆண்டு வரை அமெரிக்க நாட்டிற்கு வாணிபச் சுழல்களின் அனுபவம் குறிப்பிடத்தக்க அளவு இல்லை. 1837ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி உண்மையில் ஒரு நிதி விவகார நிகழ்ச்சியாகும். இதனுல் ரயில் பாதை அமைப்பு கால்வாய்ப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, இரும்பு மற்றும் நிலக்கரி உற்பத்தி பாதிக்கப்படவில்லை எனலாம். மேலும் 1840க்கு முன்னர் செழிப்பும் மந்தமும் முறையே பண்ணைகளின் செழிப்பையும் மந்தத்தையும் சார்ந்து ஏற்படுவனவாயிருந்தன. 1857ஆம் ஆண் டில் ஏற்பட்ட நெருக்கடிகூட, நிதி மற்றும் பாங்கு விவகார அதிர்ச் சியே தவிர, தீவிரமான தொழில் மந்த நிலையன்று. எனவே, 1860க்குப் பின்னர்த்தான் வாணிபச் சுழல்கள் அமெரிக்காவில் தோன்றின என்று ஸ்னைடர் குறிப்பிடுகிருர்.

ஃபிராங்கோ-பிரஷ்ஷியன் போர் (Franco-Prussian War) முடிவடைந்த நிலையில், நாடு தொழில்மயமானபோது ஜெர்மனி யில் சுழல்கள் தோன்றலாயின. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர் மனி முதலிய நாடுகளைவிட மிகவும் குறைவான அளவில் ஃபிரான்சு நாடு வாணிபச் சுழல்களால் பாதிக்கப்பட்டிருப்பதாக நாம் அறிகி ருேம். முதலாளித்துவ அடையாளங்கள் காணப்படாதனவாகவோ அல்லது குறைவாகக் காணப்படுவனவாகவோ உள்ள நாடுகளான ருஷ்யா, சீனு, இந்தியா, தென் ஆஃப்பிரிக்கா, பிரேசில் முதலிய நாடு களில் வாணிப நெளிவுகள் வாணிபத் தொடர்பான காரணிகளை விட, வாணிபத் தொடர்பற்ற காரணிகளாலேயே பெரும்பாலும் நிகழ்வனவாயிருக்கின்றன. அவை வரட்சி, வெள்ளம், கொள்ளை நோய் முதலியனவாகும். நவீனவகை வாணிப நெளிவுகள் இந் நாடுகளில் காணப்பட்டால், அவை பணப்பேரம் நடக்கும் பகுதி களில்தான் காணப்படுகின்றன.

சுழலின் கட்டங்கள்
(Pha es of the Cycle)

ஒரு வாணிபச் சுழலிடம் நான்கு கட்டங்கள் இருக்கின்றன. அவை, செழிப்பு (prosperity). சுணக்கம் (recession). மந்தம் (dep es-sion), மீட்சி (revival) என்பன. கடுமையான முயற்சிகளுக்கும் ஆய்வுகளுக்கும் பின்னர்த்தான் வாணிபச் சுழலின் கட்டங்களுக்கு இத்தகைய பெயர்கள் சூட்டப்பட்டன. நெருக்கடிகள் எனப்பட்டவற்றை உற்று ஆராய்ந்தபோதுதான் வாணிப நடவடிக்கைகளில் பெருக்கமும் சுணக்கமும் மாறிமாறி ஏற்படுகின்றன என்பது ஆராச்சியாளர்களுக்கு தெரிய வந்தது. நெருக்கடிகள் மக்களிடையே துயரத்தையும் பீதியையும் பரப்பிவிடுவனவாய் இருந்தமையால், பொருளாதார அறிஞர்கள் இவற்றின்மீது தனிக்கவனம் செலுத்தி வந்ததோடல்லாது தங்களுடைய நூல்களில் இவைகளுக்கென ஒரு தனி அத்தியாயத்தையும் ஒதுக்கி வந்தனர். சமுதாய அமைப்பை எதிர்த்துக் குரலெழுப்பியவர்கள் இத்தகைய நெருக்கடிகளுக்குச் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பில் உள்ள குறைபாடே காரணம் என்று கூறினர். ஆனால் நெருக்கடிகள் ஒருவகைத் தனிப்பட்ட நிகழ்ச்சிகள் அன்று என்பதும், ஒரு சுழல் இயக்கத்தின் முக்கியமான அங்கமே என்பதும் பின்னர்த்தான் தெரியலாயிற்று. மிச்சல், அவர்களைத் தொடர்ந்து நெருக்கடி என்பது சுணக்கம் என்று குறிப்பிட்டார். நெருக்கடி என்பதற்குச் செழிப்புக்குப்பின்னர் ஏற்படும் ஒரு திருப்புமுனை, அதற்குப்பின்னர் நிகழப்போவது மந்தம் என்பது உண்மை யென்றால், நெருக்கடி என்பதனைச் சுணக்கம் என்று குறிப்பிடுவது முறைதானே! சுழலில் செழிப்பு நிலைக்குப்பின்னர் ஒரு திருப்புமுனை இருக்கிறது என்றால், மந்த நிலைக்குப் பின்னரும் ஒரு திருப்புமுனை இருக்கத்தானே வேண்டும்! அதுவே மீட்சி. எனவே செழிப்பு, சுணக்கம், மந்தம், மீட்சி ஆகியவை ஒரு வாணிபச் சுழலின் முக்கியக் கட்டங்களாயிருக்கின்றன.

இன்னும் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் ஒரு மாதிரிச் சுழலிடம் (model cycle) ஐந்து வகையான கட்டங்கள் இருப்பது நமக்குத் தெரியவருகிறது. அவை, மந்தம், மீட்சி, செழிப்பு (prosperity), பூரிப்பு (boom) சுணக்கம் என்பன. இவற்றைச் சற்று விரிவாக இனிக்காண்போம். முதலில் மந்தத்திலிருந்து தொடங்குவோம்.

மந்தம் (depression): மந்தம் நிலவுகின்ற போது நாட்டின் வாணிப நடவடிக்கை மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது.

உற்பத்தி பெரிதும் குறைவாயிருக்கிறது; வேலைவாய்ப்பின்மை பெருக்கமடைகிறது; விலைகள் இலாபங்கள், கூலிகள் ஆகியவை தாழ்ந்த வண்ணமிருக்கின்றன; கடன் வசதிகள் குறுகுகின்றன; வாணிப நிறுவனங்களின் முறிவுகள் அதிகரிக்கின்றன. வர்த்தக உலகினை நம்பிக்கையின்மையும்,மனமுறிவும் சூழ்கின்றன, உற்பத்தி குறைவதனால்வேலைவாய்ப்பளவு குறைந்து போகிறது. கட்டுமானத் தொழில்களெல்லாம் தேக்கமடைகின்றன. ஆனால், அடிப்படை முதற்பொருள் (capital goods) தொழில்களைப்போல் நுகர்ச்சிப் பண்டத் தொழில்கள் வேலைவாய்ப்பின்மையால் பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை. பொறிசெய்தொழில் பண்டங்களின் விலைகள் மிகவும் தாழ்ந்து போகின்றன. விலைகள் தாழுமளவு, செலவுகள் தாழ்வதில்லை. எனவே, உற்பத்தியாளர்கள் கணிசமான இழப்புகளுக்கு உள்ளாகின்றனர். இழப்புகளின் விளைவாகப் பல நிறுவனங்கள் மூடப்படுகின்றன. விலைகள் தாழ்வதனால் விலைகட்டமைப்புத் தளர்கிறது. பொறிசெய்தொழில் பண்டங்களின் விலைகளை விடக் கச்சாப் பொருள்கள் மற்றும் விவசாயப் பண்டங்களின் விலைகள் மிகத் தாழ்வாயிருப்பதனால் பொறிசெய் தொழிலினரைவிட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மீட்சி (revival): மந்தம் அடிமட்டம் சேர்ந்த பின்னர், வாணிப நடவடிக்கையில் தோன்றிடும் ஒரு திருப்பத்தை 'மீட்சி' என்ற சொல் உணர்த்துகிறது. மீட்சித்தொடக்கத்தில் பொருளாதாரத்தில் ஓர் அபிவிருத்தி தென்படுகிறது. பொருளாதார நிலைமை தற்போது மோசமில்லை என்ற எண்ணம் தொழில் முயல்வோரிடையே அரும்புகிறது. இந்த நம்பிக்கை காரணமாக வாணிப நடவடிக்கையில் மேலும் அபிவிருத்திகள் ஏற்படுகின்றன. உற்பத்திச் சக்கரம் உறுதியுடன் உருளத் தொடங்குகிறது. வேலைவாய்ப்பும் மேலும் மேலும் அதிகரிக்கிறது. விலைகளில் சிறுசிறு ஏற்றங்கள் தோன்றுகின்றன. இலாபங்களும், கூலிகளும் ஓரளவிற்குக் கூடுதலாகின்றன. இலாபங்கள் கூடுவதாயிருப்பதனால், முதற்பொருள் தொழில்களில் முதலீடுகள் செய்யப்படலாகின்றன. பாங்குகள் கடன் வசதிகளைப் பெருக்குகின்றன. முன்பு நிலவிய நம்பிக்கையின்மையும் மனமுறிவும் மறைந்து, ஊக்கம் துளிர் விடுகின்றது. மந்தம் தொடங்குவதற்கு முன்னால் வாணிப நடவடிக்கை எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலை மறுபடியும் அடையும்வரை மீட்சி நீடிக்கிறது.

மீட்சியின் விரைவுவீதம் முந்தியமந்தகால வீழ்ச்சி வீதத்தோடு தொடர்புடையதாகும். மந்தம் தீவிரமாயிருந்திருந்தால் மீட்சி துரிதமானதாயிருக்கும். மீட்சியின் கால அளவு மீட்சியைத் தூண்டிவைக்கும் சக்திகளின் வலிவைப் பொறுத்தது. புத்தமைப்புகள்

(innovations) அரசுச் செலவீடு, உற்பத்திமுறை மாறுதல்கள் முதலியவை மூலமாக மீட்சி தூண்டிவிடப்படலாம்.

செழிப்பு (prosperity) : செழிப்பு நிலையின்போது உற்பத்தி பெருக்க மடைகிறது. அடிப்படைத் தொழில்களில் செய்யப்படும் மூலதனம் அதிகரிக்கிறது. பாங்குக் கடன் வசதிகள் பெருகு கின்றன. விலைகள் உயர்கின்றன. இலாபங்கள் கூடுதலாகின்றன. புதிய தொழில்கள் ஆங்காங்கே தோன்றுகின்றன. முழு வேலை வாய்ப்புநிலை (full employment) உண்டாகிறது. வாணிப உல கெங்கனும் ஊக்கமும் நம்பிக்கையும் ஒளிவிடுகின்றன.

பூரிப்பு (boom) : பூரிப்பின்போது வாணிப நடவடிக்கையில் மாபெரும் பெருக்கம் நிகழ்கிறது. புதிய சாதனைகள் படைக்கப்படு கின்றன. பண்டங்களின் விலைகளில் பேரளவு ஏற்றங்கள் தோன்றி, இலாபங்கள் குவிகின்றன. எல்லைமீறிய வேலைவாய்ப்பு உண்டா கிறது. இதற்கும் பின்னர் முதலீடு அதிகரிக்கும்போது விலை வீக்கம் தோன்றுகின்றது இதனால் வர்த்தகர்கள், தொழிலதிபர்களி டையே அளவு கடந்த நம்பிக்கை எழுகிறது; பல்வேறு தொழில் களில் ஏராளமாகக் கூடுதலான முதலீடுகளைச் செய்கினறனர். ஆகவே, ஏற்கெனவே முற்றும் ஆளப்பட்டுள்ள உற்பத்திச் சாத னங்கள் வற்புறுத்தி ஆளப்படுகின்றன. இதனால் உற்பத்தி விலை ஏற்றமாகிறது. அங்காடியில் உள்ள தொழிலாளர் எண்ணிக்கை அமித வேலைவாய்ப்புக்குக் குறைவாக இருக்கும் சூழ்நிலை உருவா கிறது. இதுதான் நிறைவெஞ்சிய வேலை வாய்ப்பின் (over full employment) இலக்கணம். கவர்ச்சியான இலாபங்கள் வணிகர் களையும், தொழிலதிபர்களையும் முதலீட்டை மேலும் பெருக்குமாறு தூண்டுகிறது. இது விலைவீக்க ஏற்றங்களுக்குத் தூபம் போடு கின்றது; விலைகள் மட்டின்றி உயர்கின்றன; பூரிப்புப் புதுப்புது உச்சிகளுக்குத் தாவுகிறது; வாணிபத்தில் அபரிமித நம்பிக்கை பெருங்காற்றாய்ப் பரவுகிறது.

ஆனால், இந்தப் பூரிப்பிலேயே அதனழிவின் விதைகள் தோன்று கின்றன. எல்லையற்ற பெருக்க நிலையில் பொருளாதார அமைப் பின் பல்வேறு பகுதிகளில் பற்றாக்குறைகள் தென்பட வாரம்பிக் கின்றன. உற்பத்திச் சாதனங்கள் அரிதாகின்றன. இதனால் விலைகள் மேன்மேலும் உயர்கின்றன. வணிகர்கள், தொழிலதிபர்களின் செலவுக் கணக்குகள் நிலையற்றுப் போகின்றன. அவசரமாகத் தொடங்கிய புதிய நிறுவனங்களில் சில முறிகின்றன. இதைக் கெட்டகாலத்திற் கறிகுறியாகத் தொழிலுலகம் பொருள் கொள் கிறது. நம்பிக்கை குறைய ஆரம்பிக்கிறது. எனவே. புதிய நிறு

வனங்கள் தொடங்குவது தவிர்க்கப்படுகிறது. பழைய நிறுவனங்களைப் பெருக்குவதும்கூட நிறுத்தப்படுகிறது. இப்படியாகச் சுணக்கம் தோன்றுவதற்கான அடிப்படை தயாராகிறது.

சுணக்கம் (recession): பூரிப்பின்போது பரவி நின்ற அபரிமித நம்பிக்கை தற்போது மறைந்து, அதற்குப்பதிலாக எல்லை மீறிய சோர்வு மனப்பான்மை தோன்றி வர்த்தகர்களிடையே அச்சமும், தயக்கமும் தலை தூக்குகின்றன. சில நிறுவனங்களின் முறிவு பீதியைத் தோற்றுவிக்கிறது பாங்குகளும் அச்சத்திற்குள்ளாகித் தொழிலகங்களுக்குக் கொடுத்து வந்த கடன்களைத் திரும்பப் பெறுவதில் முனைகின்றன. இதனாலும் நிறுவனங்கள் மென்மேலும் முறிகின்றன. முதலீடு குறைந்து விலைகள் சரிகின்றன. தொழில் நம்பிக்கை வேரோடு அசைக்கப்படுகிறது. வேலை வாய்ப்பின்மை முதலில் அடிப்படை முதற்பொருள் தொழில்களில் தொடங்கிப் பின்னர் மற்ற தொழில்களுக்கும் பரவுகிறது. வேலைவாய்ப்பின்மையால் விலைகள், வருமானம், செலவீடு, இலாபங்கள் ஆகியவை குறைகின்றன. போகப்போகச் சுணக்கத்திற்குச் சூடுபிடித்து, இறுதியில் மந்தமாகச் சூழ்கிறது.

இக்கட்டங்களைப்பற்றிய விரிவான விளக்கம் அடுத்துவரும் அத்தியாயத்தில் இடம் பெறுகிறது. இனிச் சில முக்கிய ஆசிரியர்கள் சுழலின் பல்வேறு கட்டங்களைப் பற்றி என்ன கருதுகின்றனர் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

உச்ச நிலையும் (peak), பள்ள நிலையும் (trough) ஒரு வாணிபச் சுழலின் முக்கியமான திருப்புமுனைகள் என்று பர்ன்சும், மிச்சலும் கருதுகின்றனர். இக் கொள்கையின்படி சுழலின் பெரும்பகுதி இரு பாகங்களாகப் பிரிக்கப்படலாம். அவை, (a) பெருக்கம் (expansion): இது பள்ள நிலை முதல் உச்ச நிலை வரை நீடிக்கிறது. (b) சுருக்கம் (contraction): இது உச்ச நிலை முதல் பள்ள நிலை வரை நீடிக்கிறது.

தவிர, சிறு காலத்தில் நிகழும் மேல்மட்ட, கீழ் மட்டத் திருப்பு முனைகள் இருக்கின்றன என இவர்கள் கூறுகின்றனர். மேல் நோக்கிய திருப்புமுனை மந்தத்தில் தோன்றுவதால், அது கீழ் மட்டத்திருப்புமுனை என்றும், கீழ் நோக்கிய திருப்புமுனை உச்சியில் நிகழ்வதால் அது மேல்மட்டத் திருப்புமுனை என்றும் குறிப்பிடப் படுகின்றன. கீழ்மட்டத் திருப்புமுனையில் (lower turning point), மீட்சியானது கருவாகி உருவாகிப் பெருக்கமாக மாறுகிறது. மேல்மட்டத் திருப்புமுனையில் (upper turning point), சுணக்க

மானது பொருளாதார நிலையைப் பீடித்துப் பாதித்து இறுதியில் சுருக்கமாக மாறுகிறது. இவ்வாறாக, வாணிபச்சுழலில் மீட்சி, பெருக்கம், சுணக்கம், சுருக்கம் என்ற நான்கு கட்டங்கள் இருக்கின்றன என்று இவ்வாசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆனால், சும்பீட்டர் (Schumpeter), சுழலின் திருப்புமுனைகள் காணப்படுவது உச்ச நிலையிலும் பள்ள நிலையிலும் அன்று என்றும், மாறாகத் திசைமாறும் புள்ளி நிலையிலோ (point of inflection) அல்லது அருகிலோதான் என்றும் கருதுகிறார். இத் திசைமாறும் இடங்களைச் சமநிலை அருகுகள் (neighbourhoods of equilibrium) என்றிவர் குறிப்பிடுகிறார். சும்பீட்டரின் மாதிரியைப் (model) பின் வரும் வரை படமாகக் காட்டலாம்.



படம் 1.
சும்பீட்டரின் சம நிலை அருகுகள் (Naighbourhoods of equilibrium)

படத்தில் A,B,C ஆகியவை திசைதிருப்ப நிலைகளாகும் இவைகளைச் சுற்றி சமநிலை அருகுகள் காணப்படுகின்றன. பொரு ளாதாரம் சமநிலை அருகுகளைவிட்டு மேலோ, அல்லது கீழோ செல்லும்போது, மேல்நோக்கி — கீழ்நோக்கிச் சக்திகள் வலு வடைந்து அதனை மீண்டும் சமநிலைக்கு (equilibrium) இழுத்துக் கொள்கின்றன. சுழலில் A முதல் B வரையிலான பகுதியில் பொரு ளாதார நடவடிக்கை இயல்பான நிலைக்கு எச்சமாக இருக்கிறது. இது செழிப்பான காலம். B முதல் C வரை பொருளாதார நட வடிக்கை இயல்பான நிலைக்குக் குறைவானது. இது மந்த காலம்,

சும்பீட்டரின் விளக்கத்தில் ஒரு வாணிபச் சுழலுக்கு நான்கு கட்டங்கள் உள்ளன. அவை, செழிப்பு (prosperity), சுணக்கம் (recession), மந்தம் (depression), மீட்சி (recovery) என்பன, ஒரு சுழலின் மேல் பாதியில் செழிப்பு, சுணக்கம் என்ற இரு நிலைகள் இருக்கின்றன. செழிப்புக் கட்டத்தில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். ஆனால் போகப்போக வேகம் குறையும். இது உச்சியைச் சேரும் வரை நிகழும். சுணக்கக் கட்டத்தின்போது வேலைவாய்ப்புக் குறைந்து கொண்டே போகும். குறையும் வேகம் போகப்போக அதிகரிக்கும். இது திசைத்திருப்பம் வரை நிகழும். அடுத்து வருவது

சுழலின் கீழ்ப்பாதி. இதில் மந்தம், மீட்சி என்ற இரு கட்டங்கள் உள்ளன. மந்த நிலையின்போது குறைந்து, செல்வீதத்தில் வேலை வாய்ப்பளவு குறுகிக் கொண்டே போய்ப் பள்ளநிலையை அடையும். மீட்சிக் கட்டத்தின்போது திசைத்திருப்பமுனை அடையும்வரை வளர்ந்து செல்வீதத்தில் வேலைவாய்ப்பளவு அதிகரித்துப்போகும்.

சும்பீட்டரின் நான்கு கட்டச் சுழல் பின்வரும் வரை படத்தில் காட்டப்படுகிறது.



படம் 2.

சும்பீட்டரின் நான்கு கட்டச் சுழல்

சும்பீட்டரின் சமநிலை அருகுகளில் நிகழ்வனவற்றைவிடச் சுழலின் திருப்புமுனைகளே பர்ன்ஸ் மற்றும் மிச்சல் ஆகியோருக்கு மிகவும் பொருள் நிரம்பியனவாகப்படுகின்றன. ஒரு முழுச் சுழலின் ஒரு பள்ள நிலையிலிருந்து (trough), மற்றொரு பள்ள நிலைவரை ஒன்பது கட்டங்கள் இருப்பதாக இவர்கள் பிரித்துக் காட்டுகின்றனர். எந்தப் பள்ள நிலையிலிருந்து சுழல் தொடங்குகிறதோ அதனை 1 என்றும், எந்தப் பள்ள நிலையில் சுழல் முடிவுறுகிறதோ அதனை 9 என்றும், உச்ச நிலையை 5 என்றும் இவர்கள் காட்டுகின்றனர். பெருக்கப் பகுதியில் 2, 3, 4, என்ற மூன்று கட்டங்களும், சுருக்கப் பகுதியில் 6,7,8 என்ற மூன்று கட்டங்களும் இருக்கின்றன எனக் காட்டுகின்றனர். இந்த மாதிரியைப் (model) பின்வரும் வரைப்படத்தில் காணலாம். அவர்கள் 1904-1908 ஆண்டுகளில் சுழலில் இவ்வொன்பது பகுதிகளையும் பகுத்துக் காட்டுகின்றனர்.



படம் 3.
ஒன்பது கட்டச் சுழல்

இவர்கள் முதலில் பொதுப் பொருளாதார நடவடிக்கையின் பள்ள நிலைகளையும் உச்ச நிலைகளையும் கண்டுபிடித்துப் பின்னர் இடைவெளிப் பகுதியினை வாணிபப் பெருக்கம், வாணிபச் சுருக்கம் எனப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு சுழலையும் இவர்கள் இவ்வாறு பிரித்து ஆய்வு செய்து விளக்குகின்றனர்.

வாணிபச் சுழல்களின் நீட்சி
(Length of Business Cycles)

வாணிபச் சுழல்களின் நீட்சியினை — கால அளவினைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் சில முக்கிய நாடுகளின் வரலாற்று அனுபவத்தை நாம் ஆய்விற்கு எடுத்துக்கொள்வது பெரிதும் அவசிய மாகிறது. இந் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெளிவு களைப்பற்றிய குறிப்பேடுகள் வழியேதான் சுழல்களின் கால அளவினைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியும். முதலில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றியுள்ள வாணிபச் சுழல்களின் காலநீட்சி யினைப்பற்றி அறிய முற்படுவோம்,

அமெரிக்காவில் 1878 முதல் 1923 வரை ஏற்பட்ட வாணிபச் சுழல்களை ஆராய்ந்த மிச்சல், சுழல்களின் சராசரி கால அளவு 42 மாதங்கள் என்றும், மந்தத்திலிருந்து செழிப்புக்கு வர 22.75 மாதங்களும், செழிப்பிலிருந்து மந்தத்திற்கு வர 19.82 மாதங் களும் ஆகின்றன என்ற முடிவிற்கு வருகின்றார். 1854 முதல் 1938ஆம் ஆண்டு வரையிலான சுழல்களின் சராசரி கால அளவு 47.6 மாதங்கள் என்றும், பெருக்கம், சுருக்கம் ஆகிய கட்டங்களின்

சராசரி கால அளவு முறையே 26.2 மாதங்கள் 21.5 மாதங்கள் என்றும் அமெரிக்க தேசீய பொருளாதார ஆய்வுக்கழகம் தெரிவிக்கின்றது. இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் ஈஸ்டி '1870க்குப் பின்னர் ஓர் அமெரிக்க ஐக்கிய நாட்டுச் சுழலின் கால அளவு $3\frac{1}{2}$ ஆண்டுகள்; அதன் பெருக்க கட்டத்திற்குச் சுமார் 2 ஆண்டுகளும், சுருக்க கட்டத்திற்கு $1\frac{1}{2}$ ஆண்டுகளும் ஆகின்றன' என்று குறிப்பிடுகின்ருர்.

1949முதல் 1961வரை நிகழ்ந்த நான்கு வாணிபச் சுழல்களைப் பற்றி விவரிக்கின்ற ஹான்சன், முதல் மூன்று சுழல்கள் ஒவ்வொன்றின் சுணக்கக் கால அளவு முறையே 11 மாதங்கள், 13 மாதங்கள் 9 மாதங்கள் என்றும், மீட்சிக்கால அளவு முறையே 45 மாதங்கள், 5 மாதங்கள், 25 மாதங்கள் என்றும் கூறுகிருர்.

இவ்வாருகப் பெரும்பாலான ஆசிரியர்களின் கருத்துப்படி அமெரிக்க வாணிபச் சுழல்களின் சராசரி கால அளவு 4 ஆண்டுகள் ஆகும்.

இங்கிலாந்தில் நிகழ்ந்திருக்கும் வாணிப ஏற்ற இறக்கங்களின் கால அளவை நாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்ருல், மூன்று காலப் பகுதிகளை நமது ஆய்விற்குப் பின்னணியாகக் கொள்வது அவசியமாகிறது.

(1) 1919 முதல் 1938 வரை பிரிட்டிஷ் பொருளாதாரத்தில் முறையான கால அளவையுடைய $2\frac{1}{2}$ சுழல்கள் ஏற்பட்டன. 1920, 1929, 1938 ஆகிய ஆண்டுகளில் செழிப்பும், 1922, 1932 ஆகிய ஆண்டுகளில் மந்தமும் காணப்பட்டன.

(2) 1870 முதல் 1914 வரையிலான காலப் பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் உண்மையான வாணிபச் சுழல்களுக்கான உதாரணங்களாகும். இக்காலப் பகுதியில் நிகழ்ந்த 4 சுழல்கள் முறையே 9, 7, 10, 7, ஆண்டுகளை எடுத்துக் கொண்டன. இதனை அடிப்படையாகக் கொண்டு சில முக்கிய எழுத்தாளர்கள், இங்கிலாந்தின் வாணிபச் சுழல்களின் சராசரி கால அளவு சுமார் 7 ஆண்டுகள் என்று குறிப்பிடுகின்றனர்.

(3) 1870ஆம் ஆண்டிற்கு முன்னர் இங்கிலாந்தில் நிகழ்ந்த பொருளாதார நெளிவுகளிடம் மெய்யான வாணிபச் சுழல்களின் இயல்புகள் காணப்படவில்லை. அச்சுழல்களின் கால அளவை நிர்ணயித்து வந்தவை ஃபிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்து வந்த போர்களே எனலாம். 1820 முதல் 1870 வரை பிரிட்டிஷ் பொரு

ளாதாரத்தில் தென்பட்ட வாணிபச் சுழல்கள் 10 ஆண்டு காலம் நீடித்திருந்தன. இக்காலப் பகுதியின் 1825, 1836, 1845, 1853, 1865 ஆகிய ஆண்டுகளில் செழிப்பு நிலைகள் தோன்றின.

1790 முதல் 1920 வரை இங்கிலாந்தில் 22 வாணிபச் சுழல்கள் தோன்றியிருந்தன என்று வாணிபக் குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன. இவைகளில் பெரும்பாலானவற்றின் கால அளவு 4 ஆண்டுகள்; சராசரிக் கால நீட்சி $5\frac{3}{4}$ ஆண்டுகள். இங்கிலாந்தின் வாணிப நெளிவுகளைப்பற்றி விளக்கும்போது மாத்யூஸ் (Mathews) என்பார் பின் வருமாறு கூறுகிறார். அஃதாவது '19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இரண்டாவது உலகப் போர் வரையில் ஏற்பட்ட வாணிபச் சுழல்களின் சராசரிக் கால அளவு 7 முதல் 10 ஆண்டுகள்' என்பது அது.

அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து ஆகிய இரண்டு நாடுகளின் பொருளாதார நடப்புகளுக்கேற்ப மற்ற நாடுகளின் வாணிப ஏற்ற இறக்கங்களின் கால அளவு அமைந்திருந்தது என்று யூகிக்கப்படுகிறது. 1870 முதல் 1933 வரையில் ஜெர்மனியில் நான்கு வாணிபச் சுழல்கள் தோன்றின என்று அறிகிறோம். 1873 1890, 1906, 1927 ஆகிய ஆண்டுகளில் அந்நாட்டுப் பொருளாதாரத்தில் செழிப்பு நிலைகள் காணப்பட்டன. 1914க்கு முன்னால் ஜெர்மனியில் கட்டடத்தொழில் சுழல்கள் (building cycles) கூடத் தோன்றியிருந்தன.

இனி, வாணிபச் சுழலின் ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கால அளவைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். பல நாடுகளில் நிகழ்ந்துள்ள வாணிபச் சுழல்களைப் பற்றிய தகவல்களை ஆய்வு செய்து பார்த்தால் சுணக்கம், மீட்சி ஆகியவற்றை விடச் செழிப்பு மற்றும் மந்தம்தான் அதிகமான கால அளவை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. உதாரணமாக, 1890 முதல் 1925 வரை 17 நாடுகளில் நிகழ்ந்த வாணிபச் சுழல்களின் கட்டங்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட கால அளவு பின்வருமாறு அமைந்திருந்தது.

செழிப்பு மாதங்கள்	... 39.3%
மந்த மாதங்கள்	... 36.8%
சுணக்கம் மற்றும் மீட்சி மாதங்கள்	... 23.9%

வாணிபச் சுழல்களின் சில முக்கிய இயல்புகள்

உள் தொடர்புடைய பல காரணிகள் ஒருங்கிணைந்து பொருளாதார ஏற்ற இறக்கங்களை உருவாக்குகின்றன. சுழல்கள் நீட்சியில், தன்மையில், காரணங்களில் வேறுபடுகின்றன. சுழலின் போக்கில் விலைகள், உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், சேமிப்பு, இலாபம் ஆகியவற்றிலும், நுகர்ச்சி மற்றும் முதற் பொருள் அளிப்பிலும் ஏற்ற இறக்கங்கள் தென்படுகின்றன. ஆனால், வாணிப நடவடிக்கையினை உணர்த்திடும் இத்தகைய பல்வேறு இனங்களின் காலப்போக்கு, நெளிவுகள் ஒரே மாதிரியாயிருப்பனவன்று. பெருக்கம் நிகழ்கிறபோது இவை எல்லாமே பெருகிடுவதில்லை; அவ்வாறே சுருக்கம் நிகழ்கிறபோது இவை எல்லாமே சுருங்கிவிடுவதுமில்லை. பெருக்கத்தின் தொடக்க நிலையில் ஒரு சில இனங்களே உயர்கின்றன. இவற்றின் எண்ணிக்கை வாணிபம் மும்முரமடைகின்றபோது கூடிக்கொண்டே போகிறது. மொத்த உற்பத்தி உச்சமாயிருப்பதற்கு 6 மாதம் அல்லது ஓர் ஆண்டு காலத்திற்குமுன்னர் இவற்றின் எண்ணிக்கை அதிகமாகிறது. உச்சநிலை அடைவதற்கு முன்னர்த் தடைகள் எழுந்து இவ் வினங்களின் ஏறுமுகப் போக்கினைக் கட்டுப்படுத்துகின்றன.

வாணிபக் கீழிறக்கப்பாதையில் பெருக்க நிகழ்ச்சிகள் குறைந்து செல்லுகின்றன. ஆனால் அறவே மறைந்து விடுவதில்லை. எனினும் சுருக்கத்தின் சக்திகள் முன்னேறுகின்றன. மந்தத்தின் அடிமட்டம் அடையப்பெறுவதற்கு முன்னால் சுருக்கச் சக்திகள் உயர்ந்தபட்சமாகின்றன. மந்தநிலையை அடுத்துப் பெருக்கத்தின் சக்திகள் மெல்ல வளர்ந்து, பின்னர்த் தழைத்தோங்குகின்றன.

வாணிபச் சுழல்களிடம் இரு முக்கிய இயல்புகள் இருக்கின்றன என்று ஹாபர்லர் (Haberler) குறிப்பிடுகின்றார். அவை (1) உற்பத்தி, வேலை வாய்ப்பு நெளிவுகளைப் பின்பற்றி உற்பத்தி பரிவர்த்தனைகளின் பண மதிப்பிலும் அதே வகையான நெளிவுகள் உண்டாகின்றன. (2) நுகர்ச்சிப்பொருள்களின் (consumer's goods) உற்பத்திச்சுழலைவிட, முதற்பொருள்களின் (producers' goods) உற்பத்திச் சுழலில் ஏற்ற இறக்கங்கள் வெளிப்படையானவையாயிருக்கின்றன.

முன்னையது ஒரு சாதாரண உண்மை. மேல்நோக்கிய வீச்சில் (upswing) உற்பத்தி பெருகுகிறது. கீழ்நோக்கிய வீச்சில் (down swing) உற்பத்தி குறைகிறது. விலைகள் (சாதன ஊதியங்களையும் சேர்த்து) மேல்வீச்சில் உயர்கின்றனவேயன்றி மாறுவதில்லை.

ஆனால், கீழ்வீச்சில் இறங்குகின்றன. ஆகவே, உற்பத்திப் பரிவர்த்தனைகளின் பணமதிப்பு உயர்வதாகவும் இறங்குவதாகவுமிருக்கிறது. அதாவது மாற்று மத்தியத்தினால் செய்யப்படவேண்டிய வேலையளவு வாணிபச் சுழலின் ஏற்ற இறக்கத்திற்கேற்ப பெருகுவதும் சுருங்குவதுமாயிருக்கிறது. பணப்புழக்கம் செழிப்பின் போது வளர்கிறது; மந்தத்தின்போது குறைகிறது. ஆனால், இது எப்போதும் உண்மையாக இருக்கும் என்பதற்கில்லை. உற்பத்தியளவில் ஏற்படும் மாறுதல்களைப் போன்ற மாறுதல்கள் அவ் வுற்பத்தியின் பண மதிப்பிலும் தோன்றும் என்ற கட்டாயம் இல்லை. இவை, மேல் வீச்சில் தாழ்வனவாகவும், கீழ் வீச்சில் உயர்வனவாகவும் கூட இருக்கலாம் என்கிறார் ஹாபர்லர்.

இனி, நாம் சுழலின் இரண்டாவது இயல்பிற்கு வருவோம். நுகர்ச்சிப் பொருள்களின் உற்பத்தியைவிட முதற்பொருள்களின் உற்பத்தியில்தான் பலத்த மாறுதல்கள் நிகழ்கின்றன. உற்பத்தியின் மொத்த அளவில் உண்டாகும் மாறுதல்களையோ அல்லது தொழிலாளர் எண்ணிக்கையில் உண்டாகும் மாறுதல்களையோ கவனித்தோமானால், நுகர்ச்சிப்பொருள் உற்பத்தியளவிலும் அதற்காளப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையிலும் ஏற்படும் மாறுதல்களைவிட, முதற்பொருள் உற்பத்தியளவிலும் அதற்காளப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையிலும் ஏற்படும் மாறுதல்களால்தான் மொத்த உற்பத்தியில் மாறுதல்கள் உண்டாகின்றன என்று தெரிய வருகின்றது. வரலாற்றுப் பூர்வமாகப் பார்த்தால், இந் நாள் வரை, நுகர்ச்சிப் பொருள் உறபத்தித் தொழில்களைவிட, முதற்பொருள் தயாரிப்புத் தொழில்களே பல நாடுகளில் மிகுதியாக வளர்ந்து வந்துள்ளன; கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்று வந்திருக்கின்றன. இத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் எண்ணிக்கையைப் பார்த்தாலே இது புரியும்.

முதற்பொருள் உற்பத்தித் தொழில்களில்தான் சுழல் ஏற்ற இறக்கங்கள் தீவிரமானவையா யிருக்கின்றன. மேலும் நுகர்ச்சிப் பொருள் உற்பத்தித்தொழில்களின் ஏற்ற இறக்கங்களைவிட முதற் பொருள் உற்பத்தித் தொழில்களின் ஏற்ற இறக்கங்கள்தான் வாணிபச் சுழல்களை ஒத்திருக்கின்றன.

சர்வதேச சுழல் உறவுகள்
(International Cyclical Relations)

உலகின் பல முக்கிய நாடுகளில் தத்தம் தொழில் வளர்ச்சி அளவிற்கேற்ப வாணிபச் சுழல்கள் தோன்றியிருக்கின்றன. நிதி நெருக்கடிகள் சர்வதேச இயல்புடையவை. 1815, 1825, 1837

ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட நெருக்கடிகள் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் பொதுவானவை. 1847-ல் ஏற்பட்ட நெருக்கடி இங்கிலாந்து, அமெரிக்கா, ஃபிரான்சு ஆகிய நாடுகளுக்குப் பொது வானது. 1857ஆம் ஆண்டின் நெருக்கடி இம் மூன்று நாடுகளுக்கே அல்லாது ஜெர்மனிக்கும் பொதுவானது. 1873-ல் ஏற்பட்ட நெருக்கடி இந் நான்கு நாடுகளோடு ஆஸ்திரியாவுக்கும் பொது வானது. இந்த ஐந்து நாடுகளும் 1882 முதல் 1884 வரை சுணக் கத்திற்கு உட்பட்டிருந்தன.

1890–1891 காலப்பகுதியில் 10 நாடுகளிலும், 1900–1901 காலப்பகுதியில் 15 நாடுகளிலும், 1907–1908 காலப்பகுதியில் 15 நாடுகளிலும், 1912–1913 காலப்பகுதியில் 12 நாடுகளிலும், 1918-ல் 11 நாடுகளிலும் 1920–ல் 14 நாடுகளிலும் சுணக்கங்கள் காணப்பட்டன. 1930ஆம் ஆண்டின் இறுதிக்குள் சற்றேறக்குறைய எல்லா நாடுகளும் பெரும் மந்தத்தினுள் (great depressio.) அடி எடுத்து வைத்து விட்டன எனலாம். ஆனால் மந்தத்தின் தீவிரம் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தது. 1873–ல் இங்கிலாந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளைவிட அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய நாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டன. 1890ஆம் ஆண்டின் சுணக்கமானது அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் இருந்ததை விட இங்கிலாந்தில் தீவிரமாயிருந்தது. 1900-ல் ஜெர்மனியும் 1927-ல் அமெரிக்காவும் இச்சுணக்கத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டன. எல்லா நாடுகளுமே 1920-ல் சுணக்கத்தினுல் அவதி யுற்றன,

1870, 1920, 1929–32 ஆகிய ஆண்டுகளின் மந்தங்களும், 1906–1907 காலப்பகுதியின் செழிப்பும், 1890ஆம் ஆண்டின் மீட்சியும் உலகத்தின் பல நாடுகளுக்குப் பொதுவானவை.

மற்றொரு முக்கியச்செய்தி என்னவென்றுல், வாணிபச்சுழலின் பல்வேறு கட்டங்கள் இங்கிலாந்து, ஃபிரான்சு, ஜெர்மனி, ஆஸ் திரியா, அமெரிக்கா ஆகியநாடுகளில் சற்றேறக்குறைய ஒரேநேரத் தில்தான் நிகழ்ந்திருக்கின்றன. தொடக்கத்தில் இங்கிலாந்தின் வாணிபச் சுழல்களுக்கும், ஃபிரான்சு மற்றும் ஜெர்மனி நாடுகளின் சுழல்களுக்கும் ஒப்புமை காணப்பட்டது. ஆனுல் பின்னர் இங்கி லாந்துச் சுழல்களுக்கும் அமெரிக்க நாட்டுச் சுழல்களுக்கு மிடையே நல்ல ஒப்புமை தென்படலாயிற்று. இரண்டு காலப்பகுதிகளைப் பின் னணியாகக் கொண்டு இரு வேறு நாடுகளின் வாணிபச் சுழல்களை எடுத்து ஆராய்ந்து பார்த்தால், முதற்காலப் பகுதியைவிட, இரண்டாவது காலப்பகுதியில்தான் இவ் விரு நாடு

களின் வாணிபச் சுழல்களுக்கிடையே சிறந்த ஒப்புமை தென்படுகிறது. அதாவது ஆண்டுகள் உருள உருளத்தான் இரு நாடுகளின் சுழல்களுக்கிடையே ஒப்புமை தோன்றுகிறது.

ஆனால், தொழில் பெருகாமலும், விவசாயமே பிரதானமாகவும் இருந்துவரும் நாடுகளின் சுழல்களுக்கும், தொழில்வளம் மிகுந்த நாடுகளின் சுழல்களுக்கும் இடையே சில முக்கிய வேறுபாடுகள் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. விவசாய முக்கியத்துவம் குறைந்து தொழில் வளம் பெருகப் பெருகத்தான் இவ்விருவகை நாடுகளின் சுழல்களிடையே ஒப்புமை தோன்ற வாரம்பிக்கும்.

இவ்வாறு வாணிபச் சுழல்களிடத்தில் ஒப்புமை காணப்படுவதற்குக் காரணங்கள் யாவை? அதாவது சுழல்களிடத்தில் சர்வதேச இயல்பு காணப்படுவதேன்? சுதந்திரமான பன்னாட்டு உறவுகள் செழித்தோங்கி, பொன்திட்டம் (gold standard) புழக்கத்தில் இருந்து, பன்னாட்டு வாணிபமும் முதலீடும் பெருகிவந்த காலத்தில் ஒரு நாட்டில் தோன்றிய வாணிபச்சுழலின் ஒரு கூறு மற்ற நாடுகளிலும் பரவுவாதாயிருக்கிறது. ஒரு முக்கியமான நாட்டில் செய்யப்படும் ஒரு கண்டுபிடிப்பு (invention) அல்லது உற்பத்தி அதிகரிப்பு, பிறநாடுகளின் கச்சாப்பொருட்கள், வினைமுற்றுப்பண்டங்கள் ஆகியவற்றிற்கான தேவையை அதிகப்படுத்தும். வாணிபப் பெருக்க நிலையின்போது ஏற்படும் விலை ஏற்றத்தினால் இறக்குமதிகளின் அளவு பெருகுகிறது. அந்நிய பத்திரங்களின் விற்பனையையும் முதற்பொருள் ஏற்றுமதியையும் செழிப்பு ஊக்குவிக்கிறது. பணம் மலிவாகக் கிடைப்பதனால் புறத்தே தங்கம் செல்கிறது. செழிப்பிலைகளும் பிற நாடுகளுக்குத் தாவுகின்றன, பண்டங்கள் மற்றும் பணம் புழங்கும் அங்காடிகளில் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன என்ற உண்மையை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், ஒரு நாட்டில் உருவாகும் பெருக்கமும் சுருக்கமும் பிற நாடுகளுக்கும் பரவவே செய்கின்றன என்பது நமக்குப் புலனாகும்.

முதல் உலகப்போரால் சேதமடைந்த பன்னாட்டுப்பொருளாதார நல் உறவுகள், 1920ஆம் ஆண்டுவாக்கில்தான் சகஜமான நிலைமைக்குத் திரும்பின. என்றாலும், 1929-ல் தொடங்கிய பெருமந்தம் எல்லா உலக நாடுகளையும் தாக்கியது. நியூயார்க் மூலதன அங்காடியில் ஏற்பட்ட மாபெரும் முறிவு (great crash), அகில உலகின் நிதியமைப்பையே உலுக்கியது. உடனே எல்லா முக்கிய நாடுகளின் மூலதன அங்காடிகளிலும் அதிர்ச்சிகள் ஏற்பட்டன. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலைகளின் வீழ்ச்சி நம் அகில உலக நிகழ்ச்சியாகும். 1931ஆம் ஆண்டு மே மாதம் ஆஸ்திரியாவில்

தோன்றிய நிதி விவகார நெருக்கடி, மத்திய ஐரோப்பாவின் பாங்குக் கட்டமைப்பை அடியோடு அசைத்தது. அந் நெருக்கடி காரணமாக ஜெர்மனியின் மூலதன அங்காடி பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்நாட்டுப் பாங்குகள் பல முறிந்து போயின. நிதி நிலைமை மிகவும் மோசமாயிற்று. நெருக்கடிப் பெருங்காற்று இங்கிலாந்து நாட்டையும் சூழ்ந்தது. இதனால் இங்கிலாந்து மீது மற்ற நாடுகள் வைத்திருந்த நம்பிக்கை தளர்ந்தது. இதன் விளைவு? இங்கிலாந்தின் பொன் இருப்புச் சரிந்தது. 1931 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் பிரிட்டனின் பொன் இருப்புக் கனிசமான அளவில் குறைந்து போயிற்று, அவ் வாண்டின் செப்டம்பர் மாதத்தில் பொன் திட்டத்தைக் கைவிடும் நிர்ப்பந்தம் இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.

இந் நிகழ்ச்சியின் சர்வதேச விளைவுகள் பலப்பலவாகும். ஐரோப்பாவின் பெரும்பாலான மூலதன அங்காடிகள் மூடப்பட்டன. ஐரோப்பாவின் பல நாடுகளும் ஆங்கிலப் பேரரசின் சில முக்கிய நாடுகளும் பொன் திட்டத்தை கைவிட்டன. ஐரோப்பாவின் சிக்கல்களிலிருந்து சற்றுத்தள்ளி நின்றுவந்த அமெரிக்காவையும் இது விட்டு வைக்கவில்லை. ஐரோப்பாவில் தமக்கு வாய்ப்பில்லாமல் போனதைக்கண்ட முதலீட்டாளர்கள் தமது கவனத்தை அமெரிக்க நாடு மீது செலுத்தத் தொடங்கினர். இதன் விளைவாக அந் நாட்டில் பத்திரங்கள் மற்றும் பாண்டுகளின் மதிப்புகள் தடுமாறிப்போயின. பங்கு மாற்று இழப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்தன. பொன் ஏற்றுமதி பெருகியது. உள்நாட்டுப் பதுக்கல்கள் மிகுதியாயின. மந்த நிலைமை படிப்படியாக நாட்டு வாணிபம் முழுவதையும் பீடித்துக்கொண்டது.

இவ்வாறு நிதி முறிவுகளும், விலை வீழ்ச்சிகளும் தோன்றிக் கொண்டிருந்த நிலையில் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய கடன் ஈயும் நாடுகள் வெளி நாடுகளுக்குக் கடன் உதவி வழங்குவதை நிறுத்திக்கொண்டன. இதனால் கடன் வாங்கும் நாடுகள் இன்னலுற்றன. இவை பெரும்பாலும் விவசாயம், கச்சாப் பொருள் உற்பத்தியை நம்பியிருந்தவை. இப்பண்டங்களின் விலைகள், ஏற்கெனவே தாழ்ந்து கிடந்தன. தாழ்ந்து கிடந்த விலைகள், தமது பண்டங்களை விற்க வேண்டியிருந்ததனால், தமது இறக்குமதிப் பொருட்களுக்குரிய தொகைகளைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்த இந்நாடுகள் வாணிபக் கொட்டுகையிலும் (dumping) இறக்குமதிகள், பரிவர்த்தனை மீது கட்டுப்பாடுகள் விதிப்பிலும் ஈடுபடலாயின. இதனால், உலக நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பில் குழப்பங்கள் தோன்றின. மற்ற நாடுகள் இந் நாடுகளுக்குப் பதிலடி கொடுக்க முயன்றன; அப்போது உலக வாணிபம் மிகவும் பாதிக்கப்பட்டது.

இரண்டாவது உலகப்போருக்குப் பிந்திய உலகம் மற்ருெரு காட்சியை நம் விழிகள் முன்னே விரித்து வைக்கிறது. சர்வதேசக் கட்டுப்பாடுகள் மலிந்துள்ள உலகை நம் முன்னே காண்கிருேம். 1930ஆம் ஆண்டு முறிந்துபோன பொன்திட்டம் மீண்டும் திரும்ப வில்லை. பலதரப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும் எண்ணற்ற தடை களுக்கும் வாணிபம் உட்படுத்தப்பட்டிருக்கிறது. மந்த நிலையாலும் போரினுலும் ஊக்குவிக்கப்பட்ட தனிமைக் கோட்பாடு (Isolationism) இன்னமும் உலவிக்கொண்டிருக்கிறது. பிராந்திய சுய நிறைவு வலிவுமிக்க நாடுகளின் இலட்சியமாயிருக்கின்றது. அமெரிக்க நாடு உள்பட எல்லா முக்கிய நாடுகளும் நிலையான பொருளாதார நில வரங்களைப் பேணிக்காப்பதன் மூலம் சுழல் ஏற்ற இறக்கங்களைப் பெரிதும் குறைத்திடுவதில் குறியாயிருந்து வருகின்றன. 'ஏன்? வாணிபச் சுழல்களேகூடப் போகப்போக மெல்ல மறைந்து விடுவன வாயிருக்கலாம். பிறகு அவை எதிர்காலத்தில் **கீன்ஸ்** கூறுவதைப் போன்று 19ஆம் நூற்ருண்டின் எழில் மிகுந்த நிகழ்ச்சியொன்றின் ஒரு பகுதியாக மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவதாயிருக்கலாம்.' ஈஸ்டி.

மேலும் படித்தற்கு உரியவை

1. ஜே. ஏ. ஈஸ்டி, 'வாணிபச் சுழல்கள்,' ஆசிய வெளியீட்டுக் கழகம், முதல் இந்தியப் பதிப்பு, 1960, அத்தியாயங்கள், 3,4.
2. ஜி. ஹாபர்லர் (G. Haberler) 'செழிப்பும் மந்தமும்' (Prosperity and Depression) மூன்ரும் பதிப்பு, 1958, ஜார்ஜ் ஆலன் அன்வின் கம்பெனி (George Allen and Unwin Ltd)லண்டன், அத்தியாயம் 9.
3. ஏ. சி. பிகு (A. C. Pigou) 'தொழில் ஏற்ற இறக்கங்கள்' (Industrial fluctuations) லண்டன், மாக்மில்லன் கம்பெனி, 1927 அத்தியாயம் 2. பிரிவு 5.
4. பர்ன்ஸ், மிச்சல் (Burns and Mitchell) ஆகியோரின் 'வாணிபச் சுழல்களை அளவிடுதல்' (Measuring Business Cycles) நியூயார்க், தேசீயப் பொருளாதார ஆய்வுக்கழகம்,1946, அத்தியாயம்1— பிரிவு 5, அத்தியாயம் 4 — பிரிவுகள் 3 முதல் 6.
5. மிச்சல் (Mitchell) 'வாணிபச் சுழல்கள் — பிரச்சினையும் பின் னணியமைப்பும்' (Business Cycles, the Problem and its Setting) நியூயார்க், தேசீயப் பொருளாதார ஆய்வுக்கழகம். 1927.

6. கிங் (King) 'பொருளாதார ஏற்ற இறக்கங்களுக்குக் காரணங்கள்' (The Causes of Economic Fluctuations) நியூ யார்க்: ரொனல்டு அச்சகக் கம்பெனி, 1938.

7. 'சமூக அறிவியல்களின் கலைக்களஞ்சியம்' (Encyclopaedia of the Social Sciences) வாணிபச் சுழல்களைப்பற்றிய கட்டுரை.

8. ஈ. சி. பிராட் (E. C. Bratt): 'வாணிபச் சுழல்களும் முன் கணிப்பும்' (Business Cycles and Forecasting) மூன்றும் பதிப்பு. சிக்காகோ, ரிச்சர்டு டி. இர்வின் கம்பெனி, 1948.

3. ஒரு வாணிபச் சுழலின் பொதுப்போக்கு

'வெள்ளத்திற்குப்பின் வடிதல் நிகழ்வது இயற்கை.'
—தாமஸ் ஃபுல்லர்.

ஒரு வாணிபச் சுழலின் பொதுப்போக்கு மாறுதல்களுக்குக் காரணங்கள்

ஒரு வாணிபச் சுழலில் பெருக்கம், சுணக்கம், குறுக்கம், மீட்சி என்ற நான்கு வகையான கட்டங்கள் இருப்பதாக ஏற்கெனவே கண்டோம். இக் கட்டங்களில் என்னென்ன நிகழ்கின்றன என்பதனை இனி நாம் ஆராய்தல் வேண்டும். அதற்கு நாம் ஒரு மாதிரி வாணிபச் சுழலை எடுத்துக்கொள்ளவேண்டும். சுழல்கள் வெவ்வேறானவையாய் இருக்கின்றன. ஒரு சுழல் மற்றொன்றைப்போல் அமைந்திடுவதில்லை. நிகழ்ச்சிகளின் கோவையும், நிகழ்ச்சிகளும் அவ்வப்போழ்து மாறிக் கொண்டேயிருக்கின்றன. என்றாலும், வாணிபச் சுழல்களிடம் பொதுவான சில இயல்புகள்—முறைமை இருக்கவே செய்கின்றன. பேராசிரியர் பிகு அவர்கள் கூறுவதைப் போன்று, இச் சுழல்களிடம் இரட்டைப் பிறவிகள் காணப்படவில்லை என்றாலும், இவையனைத்தும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இனி, ஒரு மாதிரிச் சுழல்மீது நமது விழிகளைத் திருப்பி விடுவோம்.

பொருளாதார அமைப்பு ஒரு தற்காலிக சமநிலையில் (Equilibrium) இருப்பதாக எடுத்துக்கொள்வோம். உற்பத்திக் காரணிகளின் உபயோகம் பற்றிய முடிவுகளை எடுக்கக்கூடிய தொழில் முயல்வோர்கள் (Entrepreneurs) தங்களது நடவடிக்கைகளைப் பெருக்கிக் கொள்ளும்படியான அல்லது குறுக்கிக்கொள்ளும்படியான எண்ணம் இன்றி இருந்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலை உண்மை வாழ்வில் காணப்படுவதற்கில்லை என்றாலும், இத்தகைய அனுமானத்தைக் கொண்டு நாம் ஆய்வைத் தொடங்கினால்

தான், ஒரு வாணிபச் சுழலின் அலையொத்த ஏற்ற இறக்கத்தினை விவரித்து சொல்வது எளிதாயிருக்கும். எந்த நேரத்திலும் இச் சம நிலைக்கு ஊறுபாடு ஏற்படும் நிலை உருவாகலாம். ஊறுபாடு விளை விக்கக்கூடிய காரணிகள் ஏராளமாயிருக்கின்றன. எனினும், இக் காரணிகள் சிலவற்ருல் ஏற்படும் விளைவுகள் மிகவும் சாதாரண மானவையாய் இருக்கின்றன. ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத் திற்கோ அல்லது ஒரு தொழிலிலிருந்து மற்ெருரு தொழிலுக்கோ சாதனங்கள் பெயர்ந்து போவது மட்டுமே விளைவுகளாக இருந்து விடலாம். இத்தகைய மாறுதலின் விளைவுகள் தனிப்பட்ட தொழில் களைப் பொறுத்தவரை கணிசமானவையா யிருப்பினும், தொழிலில் மொத்த உற்பத்தியைப் பாதிப்பதில்லை. X என்ற நிறுவனத்தின் உற்பத்தி குறைந்து Y என்ற நிறுவனத்தின் உற்பத்தி பெருக்க மடைவதாயிருக்கலாம்; ஆனல் மொத்த உற்பத்தியானது குறைந்து போவதில்லை.

ஆனல் பொருளாதாரச் செய்முறை முழுவதையும் பாதிப்பதா யுள்ள வேறுபல காரணிகள் இருக்கவே செய்கின்றன. அவை பொருளாதார அமைப்பு முழுவதையுமே உணர்ச்சி வசப்படுத்தும் இயல்பைப் பெற்றிருக்கின்றன. கூடுதலான சாதனங்களை வேலைக் கமர்த்தி, தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளைப் பெருக்கிக் கொள்ளுமாறு இக் காரணிகள் தொழில் முயல்வோர்களைத் தூண்டு கின்றன. பொது நடவடிக்கைக்குக் கிளர்ச்சி யூட்டுவதாயுள்ள இக் காரணிகள் 'மூலச்சக்திகள்' (Originating forces) என்றும், கொச்சை மொழியில் 'தொடக்கிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. இவை, சில நேரங்களில் பொருளாதார அமைப்புக்கு வெளியேயிருந்து உருவாகின்றவையாய் இருப்பதனல், 'புறச்சக்திகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. விவசாய தானிய உற்பத்தியின் மாறுதல் கள், போர், புத்தமைப்பு, கண்டுபிடிப்பு, பொன் இருப்பின் அதி கரிப்பு, நுகர்வோர் விருப்பங்களின் பெருமாறுதல்கள் ஆகியவை இத்தகைய மூலச்சக்திகள் ஆகும். இவையே மெய்யான 'தொடக்கிகள்' ஆகும். தொழில் முயல்வோர்களின் பொருளாதார நடவடிக்கையினைப் பெருக்கி வைத்திடும் ஆற்றல் இவற்றுக்கு இருக்கின்றன. இவை புறச் சக்திகளாக எடுத்துக் கொள்ளப்படு வதற்குக் காரணம், பொருளாதார அமைப்பினுள் இவை உரு வெடுப்பனவாயில்லை; மாருகப் புறமிருந்து வருகின்றன.

இம் மூலச்சக்திகள் காரணமாகப் பல வர்த்தக மாறுதல்கள் விளைகின்றன. உற்பத்தி நடவடிக்கையின் பருமன், பாங்குக் கடன் அளவு, மற்றும் அதன் புரள் வீதம் முதலியவற்றிலும் வட்டி, இலா பம், கூலிகள் முதலியவற்றிலும் மாறுதல்கள் நிகழ்கின்றன. விலைகள்

உயர்வனவாகவோ அல்லது தாழ்வனவாகவோ இருக்கலாம் மூலதனத் தளவாடத்தை (Capital equipment) அமைத்து வைப்பதிலும் மாறுதல்கள் ஏற்படுவதாயிருக்கலாம். படிப்படியாகத் திரண்டு வளர்ந்திடும் இயல்பு, இம் மாறுதல்களிடம் காணப்படுகின்றது. 'தொட்க்கி'யால் உருவாக்கப்படும் ஊக்கம், நிதி, மற்றும் தொழில் அமைப்பால் மேலும் வளர்க்கப்படுகின்றது. எனவே, மாறுதல்கள் முதலில் தோன்றி விட்டால், அவை பின்னர்ப் படிப்படியாகத் திரட்சியடைந்து, வலிவு மிகுந்து, நிதி மற்றும் தொழில் உலகின் எல்லை முழுவதும் பரவி விடுகின்றன. மூலச் சக்திகளைவிட, அம் மூலச் சக்திகளால் வளர்ந்து பெருகும் விளைவுகளாலேயே சுழல்களுக்கு அலையொத்த போக்கும் இயல்பும் உண்டாகின்றன என்று ஜே. எம். கிளார்க் கருதுகிறுர். மாறுதல்களைத் தோற்றுவிப்பதாயுள்ள மூலச் சக்திகளின் இயல்பு எவ்வாறிருந்தாலும், வாணிபச் சுழல்களின் போக்கு ஒரே விதமானதாகத்தானிருக்கிறது. நவீன பொருளாதார உலகில் காணும் நிதி மற்றும் தொழில் அமைப்புகளில், ஆண்டுக்கு ஆண்டோ அல்லது நாட்டுக்கு நாடோ பெரிய மாறுதல் ஏதும் நிகழாது இருப்பதனுல், மூலச் சக்திகளால் ஏற்படவிருக்கும் பொருளாதார விளைவுகள் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் சற்றேறக் குறைய ஒரே மாதிரியானவையாகத் தானிருக்கின்றன. ஒரே விதமான நிகழ்ச்சிகள்தான் திரும்பத் திரும்ப தோன்றுவதா யிருக்கின்றன. மூலச் சக்திகள் காரணமாக வாணிபத்தில் ஏற்படும் விளைவுகள் அல்லது மாறுதல்களே சுழல் ஏற்ற இறக்கங்களின் வடிவத்தை நிர்ணயிக்கின்றனவாதலால், சுழல்களுக்கான அடிப்படைக் காரணம் இவ்விளைவுகளே எனலாம். மூலச் சக்திகளால் உருவாகும் இவ் வாணிப நெகிழ்வுகள் (responses), மாறுதல்கள், அமைப்பின் உள்ளேயே உற்பத்தியாகின்றவையாய் இருப்பதனுல், இவை 'அகச்சக்திகள்' என்று அழைக்கப்படலாம்.

இவ்வாருகச் சமநிலையானது இரு வகையான சக்திகளால் கலைவிற்குள்ளாவதாயிருக்கிறது. முதலாவதாக, மூலச் சக்திகள் அல்லது புறக் காரணிகள், போர், கண்டுபிடிப்பு, விவசாய மாறுதல் முதலியவை இதில் இடம் பெறுகின்றன. இரண்டாவதாக, வாணிப நெகிழ்வுகள் அல்லது அகச்சக்திகள். மூலச் சக்திகளால் வாணிபக் கட்டமைப்பில் விளையும் எதிர் நடவடிக்கையினுல் இவை, வடிவம் பெற்றுப் பின்னர் இவையே அடுத்தடுத்த மாறுதல்களுக்குக் காரணங்களாகி விடுகின்றன. வாணிபச் சுழலின் பல்வேறு கட்டங்களில் இவ் வாணிப நெகிழ்வுகள் எவ்வாறிருக்கின்றன என்பதனை இனி ஆராய்வோம்.

செழிப்பின் தொடக்கம்

ஏதாவது ஒரு மூலச் சக்தியினுல் விளைந்த ஊக்கம் காரண மாகவோ அல்லது இலாபங்கள் உயரும் என்ற எதிர்பார்ப் பினுலோ, தொழில் முயல்வோர்கள் தங்களுடைய நடவடிக்கை களின் அளவை அதிகப்படுத்த முன்வந்து கூடுதலான ஆட்களை வேலைக்கு அமர்த்துவதோடு கச்சாப் பொருட்களையும் அதிகமாகத் திரட்டத் தொடங்குகின்றனர். கச்சாப் பொருட்களுக்கான தேவை பெருகுவதால், வேறு தொழிலகங்களில் தொழிலாளர்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். சாதனங்களுக்கான வேலைவாய்ப்பு நிறைவற்றதாயுள்ளபோது, செழிப்புத் தொடங்கி யிருந்தால், பண்டங்களுக்கு உண்டாகும் கூடுதலான தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு அளிப்பு அதிகப்படுத்தப்படுவதாயிருக்கும். ஆகவே, செழிப்பின்போது விலைகளைவிட உற்பத்தியே அதிகரித்து நிற்கும். சாதனங்கள் அல்லது தளவாட உற்பத்தியில் ஈடுபட் டுள்ளவர்களுக்குச் செலுத்தப்படும் கூலிகளில் கணிசமான அதி கரிப்பு ஏற்படுவதாயிருப்பதாலும், அக்கூலிகள் நுகர்ச்சிப் பண்டங் கள் (Consumption goods) மீது செலவழிக்கப் படுவதாயிருப்பதா லும், மொத்தக்கூலி செலுத்துகைகளைவிட, இப்பண்டங்களின் உற் பத்தி பின்தங்கியிருப்பதாயுள்ள நிலை உருவாகிவிடலாம். இந் நிலை ஏற்படும்போது விலைகள் உயர்கின்றன. செழிப்புக் கட்டத்தின் போது விலைகள் அதிகரிப்பதாயிருக்கின்றன என்று வாணிபச் சுழல் களைப்பற்றிய குறிப்புகள் தெரிவிக்கின்றன. இவ் விலை உயர்வு செழிப்பின் தொடக்க நிலைகளில் தாமதப்படுத்தப்படுவதா யிருப்பி னும், செழிப்பின் பிந்திய நிலைகளில் அழுத்தமாக மேலே போவ தாயிருக்கிறது. செழிப்பின் துவக்க நிலைகளில் தொழில் நிறுவனங் களின் முழுச்சக்திகள் பயன்படுத்தப் பெருமல் இருக்கின்றன. எனவே, உற்பத்தி பெருகிடும்போது மொத்தச் செலவுகள் அதி கரிப்பதில்லை. இதனுல்தான் தொடக்க நிலைகளில் விலை உயர்வு தாம தத்திற்குள்ளாகிறது. ஆனுல் காலம் செல்லச் செல்ல உற்பத்தி நெகிழ்ச்சியற்று விடுகிறது; செலவுகள் கூடுகின்றன; உற்பத்தியின் போக்கில் தடைகள் தோன்றிடுகின்றன; பண்டங்களை விநியோகிப் பதில் சிரமங்கள் எழுகின்றன; தொழிலகங்களை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் விலை கள் உயரவாரம்பிக்கின்றன.

விலை ஏற்றத்தைத் தொடர்ந்து பணச்செலுத்துகைகளின் பருமன் அதிகமாகிறது. உண்மையில், விலை ஏற்றமானது பணக் கணியத்தின் அதிகரிப்பைச் சார்ந்திருக்கிறது என்று கருதப்படு கிறது. பணம் அதிகரிக்காமல் இருக்கின்றபோதுகூடக் கூடுதலான

உற்பத்தியானது கூடுதலான விலைகளில் விற்பனையாவதாக இருக்கலாம். ஆனால், பணத்தின் புரள் வீதம் போதிய அளவிற்கு அதிகமாயிருந்தால்தான் இது சாத்தியமாகும். ஆகவே, பணத்தின் அளவு அதிகரிப்பதாலேயே விலைகள் உயர்வதாயிருக்கின்றன. தொழிற்சாலைகள், எஃகு ஆலைகள், விலை மிகுந்த தளவாட உற்பத்தி நிலையங்கள் முதலியவை நிர்மானிக்கப்படுவதாயிருந்தால், விலை உயர்வானது மிகவும் அதிகமாயிருக்கிறது. ஏனெனில் இத்தகைய நிர்மான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானங்கள் கூடி, அவர்களுடைய செலவீட்டுத் தொகைகள் பெருகுகின்ற போது, நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்தி அதற்குச் சமமான அளவில் அதிகரிப்பதில்லை.

பொருள்களின் விலைகளுக்கிடையேயான தொடர்பில் தளர்ச்சி

செழிப்பின் முக்கிய அம்சமாயுள்ள விலை ஏற்றமானது ஒரே மாதிரியானதாயிருப்பதில்லை. சில்லறை விற்பனை விலைகளைவிட மொத்த விற்பனை விலைகள் கூடுதலாக உயர்கின்றன. வினைமுற்றுப் பண்டங்களைவிடக் (Semi-finished goods) கச்சாப் பொருள்களின் விலைகள் அதிகமாக உயர்கின்றன. முடிந்த பண்டங்களைவிட வினைமுற்றுப் பண்டங்களின் விலைகள் சற்றுக் கூடுதலாக உயர்கின்றன எனவே, மொத்த விற்பனை விலைகளின் ஏற்றங்கூட ஒரே சீராய் அமைந்திடுவதில்லை. கச்சாப் பொருட்களின் விலைகளில் தென்படும் ஏற்றம் விவசாயப் பண்டங்களின் விலைகளில் தென்படுகிறது. ஆனால், இவற்றின் விலைகளின் போக்கு நிச்சயமற்றதா யிருக்கிறது. அடிக்கடி பலத்த மாறுதல்களுக்கு உள்ளாகிறது. இவ்வாறு பல்வேறு பொருள்களின் விலை உயர்வுகள் வெவ்வேறானவையா யிருப்பதனால், விலையமைப்பு கலைவிற்குள்ளாகிறது. பல்வேறு பண்டங்களின் விலைகளுக்கிடையேயான தொடர்பு, நாட்டு வருமானப்பகிர்வில் சற்றேறக்குறைய கணிசமான மாறுதல்கள் நிகழ்கின்றன.

செழிப்பின்போது பொருள்களின் தராதர விலைகளில் (Relative prices) மட்டும் மாறுதல்கள் ஏற்படுவதில்லை; செலவுக் கட்டமைப்பின் (Cost structure) பல்வேறு கூறுகளில் மட்டும் மாறுதல்கள் தோன்றுகின்றன. செலவின் சில இனங்கள் விரைவாகவும், வேறு சில இனங்கள் மெதுவாகவும் மாறுவனவாயுள்ளன. கச்சாப் பொருள்களின் விலைகள் துரிதமாக உயர்வனவாயுள்ளன என்று ஏற்கெனவே கண்டோம். ஆனால், கூலி வீதங்கள், சம்பளங்கள் முதலியவை மொத்த விற்பனை விலைகளைவிடச் சற்று மெதுவாகவே உயர்கின்றன. வட்டி, அதிலும் நெடுங்கால வட்டி மிகவும் மெதுவாக

உயர்கிறது. செழிப்பின்போது செலவுக்கட்டமைப்பில் இவ்வாறு சிதைவுதோன்றுவதாயிருப்பதனுல், இலாபங்கள்பெருகும் வாய்ப்பு அதிகரிக்கிறது. விலைமட்டத்தில் காணும் பொது ஏற்றத்தைவிடப் பல்வேறு செலவுகளின் ஏற்றம் குறைவாயிருப்பதனுல், வருவாய்களுக்கும் செலவுகளுக்கும் இடையேயான இறுதிநிலை (margin) விசாலமடைகிறது. குறிப்பாகத் துணை அல்லது பொதுச் செலவுகள் (Overhead costs) சற்றுத்தாமதமாகவே உயர்கின்றன. செலவுகளை விட வருவாய்கள் அதிகமாயிருக்கும்படியான நிலை தோன்றுகிறது. ஆகவே இலாபங்கள் கூடுகின்றன. இலாபங்களின் அளவுகூட எல்லா நிறுவனங்களுக்கும் ஒரேமாதிரியாய் இருப்பதில்லை.

செழிப்பின் உச்சி

இவ்வாறு இலாபங்கள் பெருகிடுவதனுல், இருப்பு அங்காடி மதிப்புகள் (Stock market values) உயர்கின்றன. இலாப எதிர்பார்க்கைகள் மூலமாக எல்லாப் பத்திரங்களின் (Securities) விலைகளும் அதிகமாகின்றன. இலாபங்கள் கூடிடுவதாய் இருக்கக்கண்ட தொழில் முயல்வோர்கள், தங்களுடைய முதலீட்டினைப் பெருக்கிடுவதில் ஈடுபடுகின்றனர். முதலீட்டைப் பெருக்குவது என்பது நாட்டின் பணப்புழக்கத்தை, குறிப்பாகப் பாங்குக் கடனைப் (Bank credit) பொறுத்திருக்கிறது. வாணிபம் லாபம் தருவதாகவும், பங்கு அங்காடிகளில் பத்திரங்களின் விலைகள் உயர்வதாகவும் இருக்கக் காணும் பாங்கு அதிகாரிகள், கடன் வசதிகளைப் பெருக்கிட வாரம்பிக்கின்றனர். எல்லா வகைக்கடன்களின் புழக்க வேகமும் மும்முரமடைகிறது; முதலீடு பெருகுகிறது. இவ்வாறு பாங்குக் கடன் வசதி பெருகி, முதலீடு அதிகரிக்கும்போது, நிலை முதல் (fixed capital) எந்திரம் மற்றும் தளவாடம் ஆகியவற்றின் அளவு கூடுகிறது. இதனுல் செழிப்பு மேலும் பெருகி, தொழிலாளர்களின் கூலிகள் மிகவும் அதிகமாகின்றன. அப்போது நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவை மேலும் உயர்ந்து விலைமட்டம் இன்னும் சற்று மேலே போகிறது. செழிப்புக் கட்டத்தின்போது வாணிப அரங்கம் முழுவதும் தொழில்களின் வெற்றிபற்றிய நம்பிக்கை மலைபோல் உயர்ந்து நிற்கிறது. உற்பத்தி, விலைகள், மற்றும் இலாபங்களின் அதிகரிப்பே இதற்குக் காரணம். செழிப்புக் காலங்களின்போது வாணிப, நிதி சமுதாயங்களில் இனிமை நம்பிக்கை (optimism) உணர்ச்சி தீவிர மிகுந்ததாய் இருக்கிறது. பழமைப் பற்றுளராய் இருந்துவரும் பாங்கர்கள்கூட இவ் வினிமை நம்பிக்கை உணர்ச்சிக்குட்பட்டுக் கடன் வசதிகளை மிகுதியாகப் பெருக்க வாரம்பிக்கின்றனர். இவைகளைப் பெற்றுக்கொள்ளும் வியாபாரிகள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோர் தங்க

ளுடைய பண்டங்களின் இருப்புகளை அதிகப்படுத்திக் கொள்கின்றனர். விலைகளில் தோன்றுகின்ற ஏற்றங்கள் இவர்களை இவ்வாறு செய்ய வைக்கின்றன. பண்டங்களின் இருப்புகள் பெருக்கமடைவதனல் உற்பத்தியாளர் நடவடிக்கைகளில் நல்ல அதிகரிப்பு ஏற்படுகிறது. நுகர்ச்சி அதிகரிப்பு வீதத்தை விட உற்பத்தி அதிகரிப்பு வீதம் கூடுதலாயிருக்கும் நிலைகூடப் பல நேரங்களில் தோன்றுகிறது.

செழிப்புக் கட்டத்தினைத் தற்போது சற்றுத் திரும்பிப்பாருங்கள். ஒரு சிறு தூண்டுதலின் விளைவாக ஏற்பட்ட செழிப்பு படிப்படியாக அழுத்தமடைந்து, உயர்ந்தபட்ச உற்பத்தியினைச் செய்யுமளவிற்குப் பொருளாதார அமைப்பினைச் செயல்பட வைக்கிறது ஒரு மூலச்சக்தி காரணமாகப் பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகள் தொடங்குகின்றன; இவற்றுள் ஒவ்வொன்றும் பின்னர்ப் பெருக்கமடைகின்றது. இதனல் விலைகள் உயர்கின்றன; இலாபங்கள் கூடுகின்றன; எனவே, நிரந்தர முதலீட்டளவு நீட்சியடைகிறது. தொழிற்சாலை கட்டடங்கள் மேன்மேலும் கட்டப்படுகின்றன. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் எந்திரங்கள் மேன்மேலும் வாங்கப்படுகின்றன. உற்பத்தி நடவடிக்கை மேலும் சூடுபிடித்து உயர்ந்தபட்சக் கட்டங்களுக்குத் தாவுகிறது.

செழிப்பு நிலைச்சாதனங்களுக்கு முழு வேலை வாய்ப்புக் (Full employment) கிடைக்கும் வரையில் நீடிக்கும் என்றும், ஒவ்வொரு தொழில் முயல்வோரும் உற்பத்தியைச் செய்கின்றபோது மற்ற உற்பத்தியாளரின் பண்டங்களுக்குத் தேவை உண்டாவதாயிருப்பதனல் மொத்த உற்பத்தி தொடர்ந்து கால வரையறையின்றி உயர் மட்டத்தில் இருந்துவரும் என்றும் நாம் நினைக்கக்கூடும். இது உண்மையில் நிகழ்வதில்லை. மாறுகச் சிறிது காலத்திற்குப் பின்னர் நடவடிக்கையின் வேகம் குறைந்து, செழிப்புத் தெம்பிழந்து சுணங்கிவிடுகிறது.

செழிப்பின் மறைவு

சுணக்கச் சூழ்நிலைகள் வாணிபத்தைச் சூழ்கின்றபோது செழிப்புக்கு அடிகோலிய சக்திகள் பலவீனமான நிலைகளில் உள்ளன. செழிப்பால் கொணரப்பட்ட பல்வேறு தடைகள் செழிப்புக்கு மூல காரணமான சக்திகளை முறியடித்துவிடுகின்றன. இத் தடைகளைப் பற்றி இனிச் சற்று விரிவாகக்காண்போம்.

(a) முதலாவது தடை, விலைகளைவிடச் செலவுகள் மிகுதியாக உயர்வதாயிருப்பது. செழிப்பின் தொடக்க நிலைகளில் விலைகளை

விடக் குறைவாக உயர்வதாயிருந்து இலாபங்களுக்கு வழி வகுப் பனவாயிருக்கும் உற்பத்திச் செலவுகள் தற்போது ஏற ஆரம்பித்து விடுகின்றன. எனவே, இலாபங்களின் அளவு குறைகிறது. கச்சாப் பொருட்கள், உழைப்பு, பணமுதல் ஆகியவற்றிற்கான தேவை, அங்காடியில் மிகவும் பெரிதாக வளர்கின்றபோது கிடைப்பருமை (scarcity) தோன்றி விலைகள், கூலிகள், வட்டி வீதங்கள் கூடுதலா கின்றன. சிறந்த எந்திரங்கள், தொழிலாளர்கள், நிர்வாகிகள் கிடைப்பது அரிதாகித் தரங் குறைந்த எந்திரங்கள், தொழிலாளர் கள், நிர்வாகிகள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றபோது உற்பத்திச்செலவு அதிகரிக்கின்றது. உழைப்பு மற்றும் தொழி லமைப்பின் சராசரி திறமை குறைகிறது. மிகை நேர வேலையின் உதவி நாடப்படுகிறது; இது செலவு மிகுந்ததாகும். தேவை நிறைய உள்ளபோது உழைப்பு அரிதாகிப் போகுமானுல், தொழிற் சங்கங்கள் கெடுபிடி செய்ய வாரம்பிக்கின்றன. எண்ணியடங்காத் தொழில் தகராறுகள் முளைக்கின்றன. ஒரு புதிய தொழிற்சாலை தொடங்கப்படுமானுல் மாறும் செலவுகளின் (Variable costs) ஏற் றம் தவிர்க்கப்படலாம். ஆனுல், இதனுல் பொதுச்செலவுகள் (Over head costs) திடீரென்று ஏறி விடுகின்றன. இத்தகைய எல்லாக் காரணிகளின் விளைவாகச் சராசரிச் செலவுகள் உயர்ந்து சென்று, தொழில் முயல்வோர்கள் எதிர்பார்த்த அளவிற்கு விலைகள் இலா பம் தருவனவாக இல்லாமற் போகின்றன.

(b) விற்பனை விலைகளை உயர்த்த முடியுமென்றுல், திறமைமிகு உற்பத்திக் காரணிகளின் கிடைப்பருமையினுல் விளையும் சராசரிச் செலவு ஏற்றப் பிரச்சினைக்கு நம்மால் வழி காணமுடியும். ஆனுல், விற்பனை விலைகளை உயர்த்துவதில் இரு முக்கிய சிரமங்கள் இருக் கின்றன: (1) விலைகள் உயர வேண்டுமெனில் பாங்குக்கடன் வசதி பெருக்க வேண்டும்; (2) விலைகள் உயர்த்தப்பட்டால் நுகர்வோர் களின் எதிர்ப்புக் கிளம்பி விற்பனைகள் பாதிக்கப்படலாம்.

அதிகப்படியான அளவில் செய்யப்பட்டுள்ள உற்பத்தியைக் கூடுதலான விலைகளில் விற்க வேண்டுமென்றுல் பாங்குக் கடன் அளவிலும், அதன் புரள் வீதத்திலும் அதே அளவு அதிகரிப்பு ஏற்பட்டாக வேண்டும். ஆனுல் ஒரு குறிப்பிட்ட அளவு கடன்களைக் கொடுத்ததற்குப் பின்னர் மேலும் கடன் வழங்குவதைக் கட்டுப்ப டுத்தும் கருத்தில் பாங்கு அதிகாரிகள் வட்டி வீதங்களை உயர்த்து கின்றனர். அதோடு தங்களிடம் கடன்கோரி வரும் தொழில்களைச் சற்றுக்கவனத்தோடு உற்றுப்பார்த்து, அவற்றில் சிலவற்றைப் பட்டியலிலிருந்து நீக்கி விடுகின்றனர். சில நேரங்களில் கடன் களைத் திருப்பித்தருமாறு கடன் வாங்கியவர்களைக் கேட்கவும் ஆரம்

பித்து விடுகின்றனர். இவ்வாறு வட்டி வீதங்கள் உயர்த்தப்படு வதனாலும், கடன் அளவு கட்டுப்படுத்தப்படுவதனாலும், விலைகளின் ஏற்றம் தடுக்கப்படுகின்றது. இதனால் பங்கு அங்காடிகளில் உள்ள விலை ஏற்றங்கள்கூடத் தடைகளுக்குள்ளாகின்றன.

பாங்கு அமைப்புகளால் விளையும் தடைகளே அல்லாது, நுகர்ச்சித் துறையில் தோன்றும் பல சிரமங்களாலும் விலைகளின் ஏற்றத்திற்குப் பல தடைகள் உண்டாகின்றன. துய்ப்பு நாட்டம் (Propensity to consume) என்பது நுகர்ச்சிக்குச் சில எல்லைகளை வகுத்து வைத்திருக்கின்றது. மக்களின் வாழ்க்கைத் தரமானது மரபாலும், பழக்க வழக்கத்தினாலும் நிர்ணயிக்கப்படுகிறது; எனவே, இது செழிப்பின்போது திடீரென்று உயர்த்தப்படுவதற்கில்லை. செழிப்புக்கட்டத்தில் அடையப்படும் கூடுதலான வருமானங்கள் நுகர்ச்சியைவிடச் சேமிப்புக்கே திருப்பி விடப்படுகின்றன. செழிப் பின்போது பெரும்பாலும் வீடுகள், கார்கள் முதலியவற்றின் உற்பத்தியில்தான் அதிகரிப்புகள் காணப்படுகின்றன; இவற்றுக் கான தேவை எளிதில் அதிகப்படுத்தப்படுவதற்கில்லை. செழிப்பின் போக்கில் புதிய எந்திரங்கள் பொருத்தப்பெற்று உற்பத்தி மேன் மேலும் அதிகரித்து, நுகர்ச்சிப் பொருட்கள் அருவியெனப் புரண் டோடி வரும் நிலையில் விலைகளை உயர்த்துவது என்பது இயலாது. நிகழ்கால நுகர்ச்சி அளவிற்கும் கூடுதலாகப் பண்டங்கள் உற்பத்தி யாகும் நிலைகூட உருவாகி விடுகிறது. இதனால் விற்பனைகள் பாதிக் கின்றன. இந்தச் சூழ்நிலையில் விலைகள் எவ்வாறு உயர முடியும்? விற்பனைகளைப் பெருக்குவதே சிரம மிகுந்ததாயிருக்கிறதே! விளம் பரம் மற்றும் தவணைமுறை விற்பனை மூலம் விற்பனைகளை விரிவு படுத்தலாம் என்றால், அதுவும் கடன் அமைப்பு முறை சற்று நெகிழ்ந்து கொடுப்பதாயிருந்தால்தானே சாத்தியமாகும்?

செழிப்புக்கட்டம் உச்ச நிலையில் உள்ளபோது இத்தகைய சங்கடங்கள் பொருளாதாரக் கட்டமைப்பில் எழுந்து நிற்கின்றன. தொடக்கத்தில் இவை மிகவும் சாதாரணமானவையா யிருக்க லாம்; ஆனால் போகப்போக இவை விசுவரூபமெடுக்கின்றன. சிறிது காலத்திற்கு இவைகளைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், பின்னர் இவை மீண்டும் மீண்டும் எழுந்து நிற்கவே செய்கின்றன. அவ்வாறு இவை எழுந்து நிற்கின்றபோது வாணிபத்தைப்பற்றிய தொழில் முயல்வோர்களுடைய இனிமை நம்பிக்கை உணர்வுகள் வலி விழந்து போகின்றன; முதலீட்டுக்கான வாய்ப்புகள் வற்றிப்போய் விடுகின்றன. அதோடு, தானிய அழிவுகள். உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுப் பேரிடர்கள், சட்ட மாறுதல்கள் முதலிய பாதக மான நிகழ்ச்சிகள் தோன்றுமானால் வாணிப எந்திரம் பின்னோக்கி

உருட்டித் தள்ளப்படுகிறது; சுணக்கம் மெல்ல காலெடுத்து வைக்கிறது. செழிப்புக் கட்டம் முடிவுற்றுச் சுணக்கம் தொடகுவதற்கான அடிப்படைக் காரணம், செழிப்புக் காலப் பகுதியில் பொருளாதாரக் கட்டமைப்பில் தோன்றும் நலிவுகளேயாகும். பொருளாதார அமைப்பின் பல்வேறு கூறுகளிடையே சமமான வளர்ச்சி இல்லாமற் போவதாலேயே இந் நலிவுகள் தோன்றுகின்றன.

சுணக்கத்தின் தொடக்கம்

பெருக்கத்திற்குக் காரணமான சக்திகளைச் சுருக்கத்திற்கு அடிகோலும் சக்திகள் முறியடிக்கும்போது சுணக்கம் தொடங்குகிறது. சுணக்கம் தோன்றுகின்றபோது பங்கு அங்காடிகள் நொடித்துப் போகின்றன; விலைகள் இறங்க ஆரம்பிக்கின்றன. உற்பத்தி சோதனைக்குள்ளாகிறது. தளவாடம் மற்றும் எந்திர உற்பத்திக்கு வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைந்து போகின்றது; இதனால் பல நிறுவனங்கள் கைவிடப்படுகின்றன. தளவாட உற்பத்தியில் தோன்றும் தளர்ச்சி மெல்ல மெல்ல மற்ற உற்பத்தித் துறைகளுக்கும் பரவுகிறது. மொத்த உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பங்கு அங்காடி வரட்சியடைவது சுணக்கம் தோன்றுவதற்கான் முதல் அறிகுறியாகும். அடுத்துப் பண்டங்களின் விலைகள் தாழ்கின்றன. தொழில் மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தருவதாகப் பொருளாதாரச் சூழ்நிலை இல்லை. இலாபங்கள் தொடர்ந்து கிடைக்குமா, எதிர்காலம் வெற்றிகளைக் கொணருமா என்பன போன்ற வினக்கள் வர்த்தகர்களிடையே எழுந்து, அச்ச மூடுபனி அவர்களைச் சூழ்கிறது. தொழிலை விட்டு அகன்றால் போதும் என்ற அவசரத்தில் சிலர் தங்களுடைய இருப்புகளை உடனே விற்கத் தொடங்கு கின்றனர். சில பாங்கு நிலையங்களோ கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்தலாகின்றன. இவ் விரு காரணங்களால் சுணக்கம் சற்று வலுவடைகிறது.

வாணிபத்திற்கு மூலதனம் மேலும் தேவைப்படும்படியான சூழ்நிலையில் பங்கு அங்காடிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் திரும்ப வாங்கப்படலாகின்றன. அழைப்புக் கடன்களின் (call loans) வட்டி வீதங்கள் உயர்த்தப்படுவதைக் கேள்வியுறும் யூக வாணிபர்கள், உடனே பத்திரங்களை விற்றுக் கடன்களை அடைக்க முற்படுகின்றனர். பத்திரங்களின் விலைகள் சரிகின்றன. பத்திரங்களின் விலை இறக்கமானது, விலைகள் மற்றும் இலாபங்கள் குறையப் போகின்றன என்பதற்குக் கட்டியங் கூறுவதாக இருப்பதோடு அல்லாது, உண்மையில் அவற்றைக் குறைந்து போகுமாறும் செய்து விடுகின்றது. உற்பத்தி இன்னலுறுகிறது; வாணிபச் சுருக்கம்

மெல்ல தன் தலையைக் காண்பிக்கிறது. சுணக்கம் சற்றுக் குறைவான கால அளவைத்தான் எடுத்துக் கொள்கிறது. சுணக்கம் தீவிரம் குறைந்து சாதாரணமானதாக இருக்குமா அல்லது மாபெரும் நிதி நெருக்கடியையும் பீதிகளையும் உண்டு பண்ணுமா என்பது முந்திய பூரிப்பின் (boom) இயல்பையும், சுணக்கத்தின் போக்கில் ஏற்படவிருக்கும் நிகழ்ச்சிகளையும், பாங்குகளின் மனப் பக்குவத்தையும் பொறுத்தது. நிதி நலிவுகளை உண்டாக்காமலே சென்றிருக்கின்ற சுணக்கங்களும் உண்டு.

நம்பிக்கையின் வீழ்ச்சி

தொழிலைப்பற்றிய நம்பிக்கை குலைந்து போகின்ற போதும் நீர்மைக்கான (liquidity) தேவை திடீரென்று உயர்ந்து போகின்ற போதும் வாணிபத்தில் நெருக்கடி அல்லது பீதி தோன்றுகிறது. எதிர்பாராது நிகழும் பேரிடர்களால், தோல்விகளால் தொழில் நம்பிக்கை வீழ்ந்துபோவதாயிருக்கலாம். தோல்வியின் வருகையை உணர்கின்ற ஒரு நிறுவனம், பாங்கு அல்லது வர்த்தகக் கார்ப்பரேஷன், தன்னுடைய கடன்களை அடைக்க முடியாத நிலையில் தான் இருப்பதாக அறிவிக்கிறது. பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்கெனவே இன்னல்களின் அறிகுறிகள் தென்பட்டு வருவதாயுள்ள சூழ்நிலையில் இத்தகைய அறிவிப்பு வருவதனுல் மற்ற நிறுவனங்களும் பாங்குகளும் வலிவிழந்து போகின்றன. அச்ச உணர்வலைகள் வாணிபக் கடல் முழுவதும் பாய்ந்தோடுகின்றன. ஒவ்வொரு தொழிலகத்தையும் பயம் சூழ்கின்றது. இந்தத் தருணத்தில் நன்கு இயங்கிவரும் நிறுவனங்களுக்கும், புகழீட்டிய தொழில்களுக்கும் பாங்குகள் போதிய கடன்களைத்தர முன்வந்து அவைகளுடைய பணத்தேவைகளைத் தொடக்கத்திலேயே தீர்த்து வைப்பனவாயிருந்தால், நெருக்கடி நிலைமை சமாளிக்கப்படலாம். அவ்வாறு பாங்குகள் உதவி புரிய முன்வரவில்லையென்ருல், நெருக்கடி உருவாவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

செழிப்பின் முடிவில் ஏற்படுவது கடுமையற்ற சுணக்கமாக இருந்தாலும் சரி, நெருக்கடியாக இருந்தாலும் சரி அல்லது கிலியாக இருந்தாலும் சரி, அதன் காலப்பகுதி முழுவதும் தொழில் உற்பத்தி குறுகி வளர்ச்சியின்மை அசைபோடுகிறது. அப்போது விலைகள் தொடர்ந்து தாழ்வடைந்து கொண்டேயிருக்கின்றன. பொருளாதார நடவடிக்கை மெலிவடைகிறது; வேலைவாய்ப்பளவு குறைந்து போகிறது. இம் மந்தத்தைப் பற்றிய விளக்கம் கீழே தொடர்கிறது.

மந்தத்தின் தொடக்கம்

சுணக்கக்கட்டம் மறைந்து மந்தக்கட்டம் தொடங்குகிறது என்பதற்கான முதல் அடையாளம் பொருளாதார நடவடிக்கையின் அளவு குறைவது. பண்டங்கள், பணிகள் உற்பத்தியும், வேலை வாய்ப்பளவும் மிகவும் தாழ்வடைந்து போகின்றன. இது வாணிபத்துறை முழுவதற்கும் பொதுவானதாகும். எனினும் இவ்விறக்கம் அல்லது தாழ்வு எல்லாப் பிரிவுகளிலும் ஒரே மாதிரியான அளவில் இருப்பதில்லை. சில்லறை வியாபாரங்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை. தட்ப வெப்ப நிலை மாறுதல்களால் விவசாயத்தில் பலத்த மாறுபாடுகள் நிகழ்கின்றன. பொறிசெய் தொழில், சுரங்கம், கட்டட நிர்மானம், போக்குவரத்து, எந்திரம் மற்றும் தளவாட உற்பத்தி முதலியவை கணிசமாகக் குறைகின்றன. நுகர்வோர்களுக்கு அருகில் உள்ள பண்டங்களின் உற்பத்தியில் பெரிய மாறுதல் ஏதும் கிடையா. ஆனால் அவர்களுக்குத் தொலைவில் உள்ள பண்டங்களின் உற்பத்தியில் பலத்த மாறுதல்கள் நிகழ்கின்றன. ஆகவே பிந்திய வகைப்பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோர் மிகுந்த வேலை வாய்ப்பின்மைக்கு உள்ளாகின்றனர்.

மந்தத்தின்போது பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி குறைந்து போகிறது என்றாலும், விலைகளும் தாழ்வடைவதாகத்தானிருக்கின்றன. மந்தத்தின் தொடக்கத்தில் விலைகள் குறைவதாயிருப்பதற்குரிய காரணம், செழிப்பின்போது குவிக்கப்பட்ட பண்டங்களைத்தும் தற்போது அங்காடிகளில் திணிக்கப்படுவதாகும். மந்தம் மேலும் வலுவடைகின்றபோது புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவு மிகவும் குறைந்து போகிறது. உற்பத்தி நடவடிக்கை குறைந்து போவதனாலும், வாணிப வெற்றி வாய்ப்புகள் குறைந்து போவதனாலும் பாங்கு டெபாசிட்டுகளின் பருமன் சுருங்கிப்போய் விடுகிறது. பாங்குக் கடன்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன. புதிய கடன்கள் வாங்குவது தவிர்க்கப்படுகின்றது. கடன்களை வாங்கி முதலீடு செய்ய வேண்டும் என்ற ஆவல் யாரிடமும் இருப்பதாகத் தெரியக்காணோம். இதனால் மொத்தக் கடன் பண அளவு மிகவும் சிறிதாகிவிடுகிறது, அதோடு, எதிர்காலத்தைப்பற்றிய பயத்தினால் எதிர்பாராத தேவைகளுக்கெனப் பலர் சேமிக்கவும் தலைப்படுகின்றனர். இலாப எதிர்பார்ப்புகள் போதிய அளவில் இல்லாது போவதால் வர்த்தக டெபாசிட்டுகள் குறைகின்றன. விலைகள் சரிகின்றன். இதனால் காலம் தாழ்த்திப் பொருள்களை வாங்குவது இலாபம் தரக்கூடியதாக மாறி விடுகிறது. சேமிப்புணர்வு மேலும் வலுவடைகிறது. மக்களுடைய வாங்குந்திறன் (Purchasing Power) குறைந்து போவதுதான் மந்த நிலையில் உற்பத்தி குறைவதாயுள்ள

போதுகூட விலைகள் இறங்கிப் போவதற்கான முக்கியக் காரண மாகும்.

விலைக்கட்டமைப்பின் தளர்ச்சி

பெருக்க நிலையில் காணப்படுவதைப் போன்று, சுருக்க நிலையி லும் விலைகளின் மாறுதல் வீதம் பண்டத்திற்குப் பண்டம் ஒரே அளவானதாய் அமைவதில்லை. சில பண்டங்களின் விலைகள் சிறித ளவே இறங்குகின்றன; சில பண்டங்களின் விலைகள் பேரளவில் சாய்கின்றன. சச்சாப் பொருட்கள், வினைமுற்றுப் பண்டங்கள் (Semi finished goods) முதலியவற்றின் விலைகளைவிடப் பொறிசெய் பொருள்களின் விலைகள் அதிகமாகத் தாழ்கின்றன. பொறி செய் பொருள்களைவிட விவசாயப் பண்டங்களின் விலைகள் மிகையாகக் குறைகின்றன. சில பொருள்களின் விலைகளின் இறக்கம், மரபு காரணமாகத் தடைப்படுகிறது. வேறு சில பண்டங்களின் விலைகள் தனியார் கட்டுப்பாட்டிற்கு உட்படுவதாயிருக்கிறது. இத்தகைய விலைகள் நெகிழ்ச்சியற்றிருக்கின்றன. மற்றவை மிகவும் நெகிழ்ந்து கொடுப்பனவாயிருக்கின்றன. விலைமட்டத்தில் தோன்றும் மாறு தல்கள் இவ்வாறு வெவ்வேறு அளவுகளில் இருப்பனவாக அமை வதனால் விலைக்கட்டமைப்புக் குலைந்துபோய், வருமானப்பகிர்வு மாற்றியமைக்கப்பட்டு, மந்த நிலை நீட்சியடைகிறது.

விலைக் கட்டமைப்பில் மாறுதல் நிகழ்கின்றபோது செலவுக்கும் விலைக்குமுள்ள உறவுகளில் மாறுதல்கள் நிகழ்கின்றன. விலை களில் காணப்படுவதைப் போன்று செலவுகளில் காணும் இறக்கங் களும் ஒரே அளவானதாய் அமைவதில்லை. சில செலவுகள் மிகவும் குறைகின்றன: சில செலவுகள் சிறிதளவே குறைகின்றன; வேறு சில செலவுகள் குறையாமலும் இருக்கின்றன. கூலிகளும் சம்பளங்களும் விலைமட்டத்தை விடக் குறைவாகவே இறங்குகின் றன. பொதுமக்கள் கருத்து, பழக்கம், தொழிலாளர் சங்கச் சட்டம் முதலியவைகளால் கூலிகளும் சம்பளங்களும் விலை மட் டத்தைவிடக் குறைவாக இறங்குவதா யிருக்கின்றன. பொதுச் செலவுகளில் இறக்கங்கள் இருப்பதாகத் தெரியக் காணோம். வட்டி வீதங்கள், வாரம், வரிகள் முதலியவை மெதுவாகவே கீழ் நோக்கி இறங்குகின்றன. நிகழ்காலக் கடன்களுக்கான வட்டிகள் ஏற் கெனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டிருப்பதனால், இவைகளை மாற்று வது மிகவும் எளிதன்று. விலைகளின் மாறுதல் வீதத்திற்கும் செலவுகளின் மாறுதல் வீதத்திற்கும் இடையே வேறுபாடுகள் இலாபம் காணப்படுவதாயிருப்பதனால், இறுதி நிலை இலாபம் மறைந்து போகிறது. இழப்பு மெல்ல தோன்றுகிறது. இதனால்

வாணிபத்தில் உள்ளோர் ஊக்கமிழந்து போகின்றனர்; அவர்களி டையே நம்பிக்கையின்மை வேரூன்றுகிறது. செயலின்மையும் தேக்க நிலையும் தொடர்ந்து நடைபோடத் தொடங்குகின்றன.

இவ்வாருகச் சுணக்கத்தின்போது உருளத் தொடங்கிய சோர் வுச்சக்கரம் தற்போது நிலைக்கு வருகிறது. சுணக்க நிலையில் எதிர் பார்ப்புகள் (Expectations) தளர்வுறுகின்றன. இதனுல் விலைகள் தாழ்கின்றன; உற்பத்தி சுருங்குகிறது. இலாபங்கள் குறைந்து போகின்றன. இலாபங்கள் தேய்ந்துபோவதனுல் உற்பத்தி மேலும் குறைந்து போய், வேலை வாய்ப்பின்மை ஏற்படுகிறது. அப்போது வாங்கற்பாடும், பாங்குக்கடன் அளவும், புழக்க வேகமும் (Velocity of circulation) குறைந்து போகின்றன. இதன் விளைவாக விலைகள் மேலும் தாழ்கின்றன; உற்பத்தி தடைக்குள்ளாகிறது; வேலை வாய்ப்பின்மை மேன்மேலும் அதிகரிக்கிறது.

சுருக்கத்தினுல் பொருளாதார அமைப்பில் கொணரப்படும் தேக்க நிலையானது சிறிது காலத்திற்கே நீடித்திருப்பதாயிருக் கலாம்; எனினும் சில மந்தங்கள் நெடுங்காலத்திற்கு நிலைத்திருப்ப தாய் இருந்திருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அவ் வாறு அவை நெடுங்காலத்தை அடைத்துக் கொண்டிருக்கின்ற போதுதான் பொதுமக்களனைவரும் அரசாங்கத்தை அணுகிப் பரி காரம் கோருகின்றனர்; வாணிபத்தில் தலையிடுமாறு அரசை வற் புறுத்தத் தலைப்படுகின்றனர். ஆனுல், கடந்த காலங்களில் இத் தகைய அரசுத் தலையிட்டிற்கு அவசியமில்லாத வகையில் மந்தத் திற்கு இயல்பாக உள்ள தடைச் சக்திகளே மீட்சிக்கு வழி வகுத்த ளித்துள்ளன. எவ்வாறு செழிப்புக் கட்டத்தின்போது செழிப்பை முடிவுக்குக் கொண்டுவரும் சக்திகள் பிறந்து பெருகிச் செயல்படு கின்றனவோ, அவ்வாறே மந்தக் கட்டத்தின்போது மந்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் சக்திகள் வளர்ந்து திரட்சியுற்று வலி வுடன் செயல்படுகின்றன.

மீட்சியின் தொடக்கம்

விலை உறவுகளும் (Price relations) விலைக்கும் செலவுக்குமுள்ள உறவுகளும் மறுபடியும் திரும்பத் தமது இயல்பான நிலைமைகளுக் குத் திரும்பிடும்போது மீட்சி தொடங்குகிறது. செழிப்புக் காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் இருப்புகளும் தற்போது அங்காடிகள் மீது திணிக்கப்பட்டு விலைகள் இறங்குகின் றன. மிகவும் அதிகமாய் முடங்கிக் கிடந்த இருப்புகள்கூடப் படிப் படியாக அங்காடிகளுக்கு வந்து சேருகின்றன. உற்பத்தி எந்திரம்

வாட்டமுற்றுக் கிடந்துவரும் நிலையில் அளிப்புக்கள் மேலும் கிடைப்பது அரிதாகிறது. உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மலிந்துள்ள சுரங்கத்தொழில் முதலியவற்றில் கிடைப்பருமை விரைவில் தோன்றுகிறது. உற்பத்தியைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் மிதமாயிருக்கும் வேளாண்மை முதலிய தொழில்களில் கிடைப்பருமை சற்றுக் காலம் தாழ்த்தி ஏற்படுகிறது. இதற்கிடையில் நுகர்வோர் துய்த்துவந்த உறுதிப் பொருட்களெல்லாம் (Durable goods) தேய்ந்து போய்விடுகின்றன. காலம் செல்லச் செல்ல இவற்றை மறுபடியும் வாங்க வேண்டியது அவசியமாகிறது. ஆடைகள், இல்லத்திற்குத் தேவையான தட்டுமுட்டுச் சாமான்கள், மோட்டார் கார்கள் முதலியவை வாங்கப்பட்டுத்தானே தீரவேண்டும்! இவற்றுக்கு எழும் தேவையினைப் பற்றுக்கோலாகக்கொண்டு வாணிப நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்குகின்றன. எந்திரங்களும், பொறிகளும் புதுப்பிக்கப்பட்டாக வேண்டும்; இதனை எத்தனை காலத்திற்குத் தள்ளிப்போட முடியும்? பண்டங்களுக்கான தேவை திடீரென்று உயர்வதாயிருப்பின், அதனை எவ்வாறு பூர்த்தி செய்வது? பின்னல் உண்டாகக் கூடிய தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தற்போது உற்பத்திச் சக்கரத்தை முன்னேக்கி உருட்டிவிடுவது பெரிதும் அவசியமாகிறது. இது நிகழும் போதுதான் மந்தம், மற்றும் தேக்கத்தினை உருவாக்கிவிட்ட சக்திகள் பலவீனமடைகின்றன. பிற்காலத் தேவைகளுக்கெனப் பண்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் வாணிபர்கள் மத்தியில் தோன்றிய பின்னர், அவர்தம் நடவடிக்கைகளில் எழுச்சியும் பரபரப்பும் உண்டாகின்றன.

வாணிபத்துறையின் ஒரு பக்கம் இவ்வெழுட்சி காலூனறும் போது, மற்றொரு பக்கம் செலவுக்கும் விலைகளுக்குமுள்ள உறவு வாணிபத்திற்கு மிகவும் சாதகமானதாய் மாறுகிறது. இலாபங்களை விழுங்கிவிடுமளவிற்கு உயர்ந்துகொண்டுபோன செலவுகள் தற்போது இறங்கவாரம்பிக்கின்றன. செலவிறக்கத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருந்துவந்த பழக்கம், சட்டம் முதலியவை வலிவிழக்கின்றன. சாதாரண வர்த்தக வடிகால்கள் இல்லாது போகையால், நிதிகளனைத்தும் பண அங்காடி ஒன்றிற்கே ஓடிவந்து சங்கமம் ஆகின்றன. இதனுல் வட்டி வீதங்கள் மிகவும் தாழ்ந்த மட்டங்களுக்குச் சரிகின்றன. குறுங்கால வட்டி வீதங்களேயன்றி நெடுங்கால வட்டி வீதங்களும் குறைகின்றன. ஒப்பந்தத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நெடுங்கால வட்டி வீதங்கள் புது உடன்படிக்கை மூலம் குறைக்கப்படுகின்றன. உற்பத்தி, மற்றும் விலை

களின் தாழ்வான மட்டங்களுக்கேற்ப வாரம், இன்சூரன்ஸ், வரிகள் முதலியவை இறங்குகின்றன. வேலைவாய்ப்பின்மை பரவிடுவதன் காரணமாகக் கூலிகளும் தாழ்கின்றன. கூலிகள், சில நேரங்களில் விலைகளின் மட்டங்களுக்குச் சமமாகக்கூட வந்தமைகின்றன. உழைப்புச் செலவில் (Labour cost) இத்தகைய நேரடி இறக்கங்கள் ஏற்படும்போது உழைப்புத்திறமையிலும் மாறுதல் நிகழ்கிறது. திறமை குறைந்தவர்கள் தொழிலை விட்டகல்வதாலும், திறமைமிக்கவர்கள் தங்கள் வேலைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் தங்களுடைய திறமைகளைக் காட்ட முயல்வதாலும், உழைப்பின் திறன் கூடுகிறது. கூலிகள் குறையும் நிலையில் இவ்வாறு உழைப்பின் திறமை அதிகரிப்பதனால் உழைப்புச் சராசரிச் செலவு மிகவும் குறைகிறது.

இத்தகைய மாறுதல்களின் காரணமாக இறுதி நிலை இழப்புக் குறைகிறது. சில துறைகளில் தேவை உயர்ந்து விலைகள் சற்றுக் கூடுவதனால் இழப்புக் குறைவாயிருப்பதோடு இலாபங்களும் கிடைக்கலாகின்றன. இதனைத் தொடர்ந்து மீட்சிக்கட்டம் வலுவடைகிறது. இப்படிப்பட்ட சாதகச் சூழ்நிலைகளில் கூட மீட்சி தடுக்கப்படலாம். சாதகமற்றதாயுள்ள ஒரு புற நிகழ்ச்சி இம் மீட்சியினைத் தடுத்து நிறுத்திவிடலாம். அதோடு, மற்றொரு மந்தத்தையே கூடத் துவக்கலாம். இப்படித்தான் 1931ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிதி முறிவொன்று உலகத்தை ஆட்டியது. ஆனால், எவ்வளவுக்கு மீட்சி தள்ளிப்போடப்படுகிறதோ அவ்வளவுக்கு மீட்சிக்குச் சாதகமான சக்திகள் தெம்பையும் ஊக்கத்தையும் பெறும். காலப்போக்கில் இவை புறத்தேயிருந்து வரக்கூடிய சில மூல காரணிகளைத் துணையாகக் கொண்டு மந்தத்திற்குக் காரணமான சக்திகளை முறியடித்து மீட்சிக்கு வழிவகுக்கின்றன.

மீட்சி வலிவடைதல்

பங்கு அங்காடியிலும், கட்டடம் மற்றும் தளவாட உற்பத்தித் தொழில்களிலும் விலை-செலவு உறவுகள் மறுபடியும் இயல்பான நிலைக்குத் திரும்பும்போது மீட்சிக்கான சக்திகள் பலமுறுகின்றன. விலைக்கும் செலவுக்கு மிடையேயான உறவுகள் நன்கு அமைகின்ற போதுதான், மந்தத்தின் தேக்க நிலை ஒரு முடிவுக்கு வருகிறது. உற்பத்தி துவங்குவதற்கு உறுதுணைபுரிவது பங்கு அங்காடி நடவடிக்கையே. பங்கு அங்காடி விலைகளின் ஏற்றங்கள் உற்பத்திக்குப் பச்சைக் கொடி காட்டுவனவாக இருக்கின்றன. பங்குகளின் விலையேற்றங்களால் கட்டடத் தொழில் பெருக்கமடைகிறது. மற்ற

முக்கியத் தொழில்களும் பெருகத் தொடங்குகின்றன. மந்த நிலையில் இலாபங்களைச் சம்பாதிப்பது சிரமமாயிருந்தபோது துவக்கி வைக்கப்பட்ட கண்டுபிடிப்பு முயற்சிகள் தற்போது நல்ல ஊக்கங்களைப் பெறுகின்றன. புதிய கண்டுபிடிப்புகள் ஆங்காங்கே முகிழ்க்கினறன. உற்பத்தியின் வளர்ச்சிக்கு இவை ஊக்கமளிக்கின்றன. மீட்சி மேலும் வலுவடைகிறது. மந்தத்திலிருந்து முதலில் விடுபட்டெழுவது முதற் பொருள் (Capital goods) உற்பத்தித் தொழில்களே. மற்றவை இதனைத் தொடர்ந்து மந்தத்திலிருந்து வெளியேறுகின்றன.

இப் பெருக்கக் கட்டம் நன்கு வளர்ச்சியுறும்போது, வருமானங்கள் பெருகுகின்றன. இதன் வாயிலாகத் தேவை விரிந்து, விலை உயர்ந்து, இலாபம் கனிந்து உற்பத்திமேலும் பெருக்கெடுத்தோடுகிறது. தொழில் நடவடிக்கைகளுக்குப் புதிய ஊக்கங்கள் கிடைக்கின்றன. தொழில் உலகம் சுறுசுறுப்படைந்து, மீட்சிக்கட்டம் செழிப்புக் கட்டத்தில் கலக்கிறது. இனி வாணிபச் சுழல் மற்றொரு கட்டப் பயணத்திற்கு ஆயத்தமாகிறது.

4. வாணிபப் பெருமந்தங்கள்

(Great Depressions)

> "கதை நீண்டதாயிருக்கவேண்டும் என்ற
> அவசியம் இல்லைதான். ஆனால், அதனைக்
> குறைப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படுகிறதே!"
> — ஹென்கி தொரே,

பெருமந்தத்தின் இயல்பு

வாணிபத்தில் ஏற்படக்கூடிய சில மந்தங்கள் தீவிர மிகுந்தன வாயிருக்கின்றன. இவற்றை வாணிபப் பெருமந்தங்கள் எனக் குறிப்பிடுகிறோம். ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி வரலாற்றில் இவை மிக முக்கியமான கட்டங்கள். 1837, 1870, 1890, 1930 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட மந்தங்கள் வாணிபப் பெருமந்தங்கள். எத்தகைய மந்தத்தைப் பெருமந்தம் என்றழைப்பது என்பது இன்னமும் சர்ச்சைக்குரிய ஒரு பொரு ளாகவே இருந்து வருகிறது என்றாலும், நெடுங்காலத்திற்கு நீடித்திருப்பதாகவும், தீவிரமிகுந்ததாகவுமிருப்பது ஒரு வாணிபப் பெருமந்தம் என்று பெரும்பாலான பொருளாதார அறிஞர்கள் கூறுகின்றனர். நெடுங்காலத்திற்கு நீடித்திருக்கின்ற மந்தங்களே அனேகமாகத் தீவிரம் மிகுந்தவையாயிருக்கின்றன என்று ஈ. சி. பிராட் (E. C. Bratt) கூறுகிறார். வாணிபப் பெருமந்தங் களுக்கான காரணங்களையும், இம்மந்தங்களின் போக்கில் முறை யான போக்கு ஏதுமிருக்கின்றதா என்பதையும் இனி ஆராய் வோம்.

மந்தங்கள் பொதுவாக ஒரு போக்காக (Trend) இருக்கின்றன என்று சில பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர். 1920ஆம் ஆண்டு வாக்கிலிருந்து வந்த நம்பிக்கைவாதிகள் இப்போக்கின் தீவிரம் குறைந்து வருகிறது என்ற கருத்தைத் தெரிவித்தனர். ஆனால், மார்க்சிஸ சோசலிச வாதிகளோ (Marxian Socialists)

இப்போக்கின் தீவிரம் அதிகரித்து வருகிறது என்று அச்சம் கொண்டனர். மத்திய பாங்கின் கட்டுப்பாடு அதிகரித்து வருவதையும் புத்திசாலிகளான வர்த்தகர்கள் பலர் நிலைபெருக்க (Stabilisation) வழி முறைகளை மேற்கொண்டு வருவதையும் அடிப் படையாகக் கொண்டு நம்பிக்கைவாதிகள் இனி வாணிபப் பெரு மந்தங்கள் ஏற்படுவதற்கில்லை என்று முற்கூறினர். உழைப் பாளர் சமூகம் மேன் மேலும் ஏமாற்றப்பட்டு வருவதை அடிப் படையாகக் கொண்டு மார்க்சிஸ சோசலிச வாதிகள் இனி அடுத் தடுத்து வரப்போகின்ற மந்தங்கள் அவதிக்குட்படுத்து மளவிற்குத் தீவிர மிகுந்தவையாயிருக்குமென்று கூறினர். 1920 முதல் 30 வரை நிலவிய நிலைபேற்றினைப் பார்த்தால் நம்பிக்கைவாதிகளின் கூற்றில் உண்மை இருப்பதாகத் தோன்றும். 1929-ல் ஏற்பட்ட வாணிப நொடிப்பைப் பார்த்தால் மார்க்சிஸ சோசலிச வாதி களின் கூற்றில் உண்மை இருப்பதாகத் தோன்றும்.

ஆனல், இவ்விரு கூற்றுகளுமே தவறானவை என்பதுதான் நாம் இங்கே அறிந்துகொள்ள வேண்டிய உண்மை. 1878 முதல் 1923 வரையுள்ள வாணிப நிலவரங்களை ஆராய்ந்த திரு. மிச்சல் மந்தங்களின் தீவிரம் மாறுவதாயிருக்கக் காணேம் என்று கூறினுர். ஸ்நைடர் மற்றும் ஃப்பிரிக்கி (Frickey) போன்றோரின் ஆய்வுகளோ, மந்தங்களின் தீவிரம் குறைந்து வருகின்றது என்று தெரிவித்தன. வாணிபத்தில் பெருமந்தங்களும் ஏற்பட்டு வருகின்றன; சிறு மந்தங்களும் ஏற்பட்டுவருகின்றன. தீவிரமற்ற மந்தங்களும் தோன்றி வருகின்றன; தீவிரமிகுந்த மந்தங்களும் தோன்றி வரு கின்றன. இதை நாம் மறந்துவிடக் கூடாது.

தொடக்க நிலை மந்தமும் இரண்டாம் நிலை மந்தமும்

பெரும் போர்களுக்குப்பின்னர் பொதுவாக இருவகை மந்தங்கள் ஏற்படுகின்றன; தொடக்க நிலை மந்தங்கள் (Primary depressions), இரண்டாம் நிலை மந்தங்கள் (Secondary depressions) போர் முடிந்த வுடனேயே தோன்றுவது தொடக்க நிலை மந்தம். இது குறுங் காலத்திற்கே நீடிக்கிறது. போருக்குப் பிறகு மீட்சியும் பெருக்க மும் ஏற்பட்டு முடிந்த பின்னர் தோன்றுவது இரண்டாம் நிலை மந்தம். இது நெடுங்காலத்திற்கு நீடிப்பது, கடுமையானது. உதாரணமாக, நெப்போலியப் போர்கள் முடிவுற்ற நிலையில் 1820ஆம் ஆண்டு ஏற்பட்டது தொடக்க நிலை மந்தம். 1825 இல் உருவெடுத்தது இரண்டாம் நிலை மந்தம். உள்நாட்டுப் போருக் குப் பிறகு 1865-ல் படர்ந்தது இரண்டாம் நிலை மந்தம். இவ் வாறே முதல் உலகப்போருக்குப் பிறகு 1920-ல் தோன்றியது தொடக்க நிலை மந்தம். 1930-ல் துவங்கியது இரண்டாம் நிலை மந்தம்.

போருக்குப் பின்னர்த் தோன்றும் இவ்விருவகை மந்தங்களுக்கு மூல காரணம் போரால் உண்டாகும் விலை உயர்வே என்று பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர். விவசாயிகள், வர்த்தகர்கள் என்ற இரு முக்கியப் பொருளாதாரப் பிரிவினர் விலை ஏற்றத்தால் வெவ்வேறு அளவுகளில் பாதிக்கப்படுகின்றனர் அல்லது பலனடைகின்றனர். போர் மூள்கின்றபோது விலைகள் உயர்கின்றன. அப்போது விவசாயிகள் மாபெரும் செழிப்பு நிலையை அனுபவிக்கின்றனர். ஏனென்றால், இவர்களின் பொருட்களுடைய விலைகள்தான் மற்றப் பொருட்களின் விலைகளைவிட மிகுதியாக உயர்கின்றன. நிலங்களின் விலைகள் துரிதமாக உயர்கின்றன. சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலப்பகுதியளவு மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது, ஆனால், வர்த்தகம் அல்லது பொறிசெய் பண்டத் தொழிலைச் சார்ந்தவர்கள் இத்தகைய செழிப்பு நிலையை அனுபவிப்பதில்லை.

போர் முடிவடையும் போது ஒரு குறுங்கால மந்தம் உண்டாகிறது. அப்போது வேளாண்மைத் தொழிலின் பூரிப்பு மறைந்து, உணவுப்பண்டங்கள் மற்றும் கச்சாப் பொருட்களின் விலைகள் சரியத் தொடங்குகின்றன. இது போருக்குப் பிந்தியத் தொடக்க நிலை மந்தம். இது விரைவில் முடிவுற்று விடுகிறது. பின்னர், தொழிலில் துரிதமான பெருக்கம் வேரூன்றுகிறது. நகர்வாழ் மக்கள் செழிப்பு நிலையை அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெறத் துவங்குகின்றனர். இச் செழிப்புக் காலத்தின்போது கூலிகள் உயர் மட்டத்தில் உள்ளன. மெய்க்கூலிகள் (Real wages) உயர்வாயிருக்கின்றன. நகர்ப்புறத் தொழில்கள் நன்கு வளர்ந்தோங்குகின்றன. கட்டுமானத் தொழில் பூரிப்பு நிலை அடைகிறது. யூக வாணிப நடவடிக்கைகள் உத்வேகமடைகின்றன. சொத்துக்களின் விலைகள் உச்சி நோக்கித் தாவுகின்றன. ஆனால், காலப் போக்கில் இச் செழிப்பு நிலை தாமாகவே அழிந்து போகிறது. முடிவில், இரண்டாம் நிலை மந்தம் வாணிபத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. தொடக்க நிலை மந்தத்தைவிட இது அழுத்தமானதாயும் நீடித்ததாயுமிருக்கிறது. தொடக்க நிலை மந்தம் எல்லா வகை மக்களையும் பாதிக்கிறது. கிராமப்புறச் சமூகம் மறுபடியும் தேக்க நிலைக்குள்ளாகிறது. நகர்ப்புறச்சமுகம் நலிவினைத் தழுவுகிறது. பணவாட்டமும், சுருக்கமும் வாணிபத்தைப் பாதிக்கின்றன. இலாபங்கள், கூலிகள், விலைகள் ஆகியவற்றில் மறுசீரமைவுகள் (Readjustments) ஏற்படும் வரை மக்களின் திறமை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

போருக்குப்பிறகு பின்வரும் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்துக் கோவையாக நிகழ்கின்றன. (1) பண்ட விலைப்பணவீக்கம்; (2) பண்ணைச் செழிப்பு நிலை, பண்ணை நில யூக வாணிபம்; (3) பணவாட்டம் — ஒரு குறுங்காலத் தொடக்க நிலை மந்தம்; (4) நகர்ப்புறச் செழிப்பு நிலை, யூகவாணிபம்; (5) இரண்டாம் நிலை பணவாட்டம் — ஒரு நெடுங்காலத் தொடக்க நிலை மந்தம் இந் நிகழ்ச்சிக் கோவை சுமார் 15 ஆண்டுக்காலம் நீடிக்கிறது.

மந்தங்களுக்கும், விலை மற்றும் உற்பத்தியின் நெடுங்கால ஏற்ற இறக்கத்திற்குமுள்ள உறவு

போரின்போது விலைகள் உயர்வது என்பது ஒரு தற்செயலான நிகழ்ச்சி என்ற தற்போது பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர். போர் துவங்குவதற்கு முன்னுலேயே விலை உயர்வு தொடங்கி விடுகிறது என்பதை நாம் மறந்து விடலாகாது என்றிவர்கள் சுட்டிக்காட்டுகின்றனா. 1815-ல் காணப்பட்ட விலை உயர்வு 1793ஆம் ஆண்டிலேயே துவங்கிவிட்டது என்றும், 1864-ல் நிலவிய விலையேற்றம் 1841ஆம் ஆண்டிலேயே துவங்கி விட்டது என்றும் இவர்கள் கூறுகின்றனர். இது முற்றிலும் உண்மையே. போர்ச் சமயத்தில் காணப்படுகின்ற விலையேற்றம் போரினுல் ஏற்படுவதில்லை. போர் மூள்வதற்குப் பல்லாண்டுகள் முன்பேயே விலையேற்றத்திற்கான விதைகள் போடப்பட்டு விடுகின்றன. போரின்போது விலையேற்றம் உச்சக்கட்டங்களுக்குத் தாவுகிறது. அவ்வளவுதான். விலைகளின் நெடுங்கால ஏற்ற இறக்கத்திற்கும் கோண்ட்ராடிஃப் சுழல்களுக்கும் (Kondratieff cycles) ஒரு நெருங்கிய தொடர்பிருக்கிறது என்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கோண்ட்ராடிஃப் சுழல்களின் உச்ச நிலையின்போது போர்கள் தோன்றியிருக்கின்றன. தாழ்ந்த நிலையின்போது இரண்டாம் நிலை மந்தம் வாணிபத்தில் பிரவேசிக்கிறது. போரும் போருக்குப்பிறகு ஏற்படக்கூடிய மந்தமும் கோண்ட்ராடிஃப் சுழலின் ஓர் அங்கமாக இருக்கின்றன என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

தற்செயலானவை என்று எடுத்துக்கொள்ளப்படும் அனேக நிகழ்ச்சிகள் மிக நெடுங்கால வாணிபச் சுழலின் இன்றியமையாத கட்டங்களாக இருக்கின்றன என்று கோண்ட்ராடிஃப் கருதுகிறுர். பார்வைக்கு இவை தற்செயலான நிகழ்ச்சிகளாக இருக்கலாம். ஆனுல், இவை உண்மையில் ஒரு மிக நெடுங்கால வாணிபச் சுழலின் முறையான பகுதிகளாகவே இருக்கின்றன. குறுங்கால வாணிபச் சுழலின் செழிப்புக்கும் மந்தத்திற்குமுள்ள வீதத்

தொடர்பை நெடுங்கால வாணிபச் சுழல் மாற்றியமைக்கிறது. நெடுங்காலச் சுணக்கத்தின்போது மற்றவைகளைவிட வேளாண்மை தான் மிகுதியாகப் பாதிக்கப்படுகிறது. வேளாண்மையில்தான் தீவிரமிக்க மந்தம் எழுந்து நிற்கிறது. இப்பெரும் சுணக்கங்களின் போது கண்டுபிடிப்புக்கள் மேன் மேலும் வளர்கின்ற போது, ஒரு நெடுங்காலச் செழிப்பு நிலைக்கான அடித்தளம் உருவாகிறது. அப்போது பொன் உற்பத்தி அதிகரிக்கிறது. தமது பண்டங்களுக் கான அங்காடிகளைப் பிடித்துக் கொள்வதில் நாடுகள் போட்டி யிட்டுக் கொள்கின்றன. குடியமைப்புகளின் எல்லைகள் விரிவடை கின்றன. செழிப்பு நிலையின் முடிவில் போர்கள் மூள்கின்றன. இவ்வாறாகக் கண்டுபிடிப்போ, அல்லது பொன் உற்பத்தியோ அல் லது காலனிகளைப் பிடித்துக்கொள்வதோ அல்லது போர்களோ வெறும் தற்செயல் நிகழ்ச்சிகளாக இருக்கவில்லை. மாறாக, இவையனைத்தும் நெடுங்காலப் பொருளாதார நடவடிக்கையோடு நெருங்கிய தொடர்புடையனவாயிருக்கின்றன.

இக்கருத்தினை யொட்டி திரு. ஹான்சன் அவர்களும் ஒரு முக்கிய கருத்தை நம் முன் வைக்கிறார்; நீண்ட சுழல்களின் மேல் நோக்கிய வீச்சின் (Up swing) போது போர்கள் உருவாகின்றன; கீழ்நோக்கிய வீச்சின் (Down swing) போது புரட்சிகள் வெடிக் கின்றன. இக்கருத்திற்கு ஆதாரமாக இவர் சில உதாரணங்களை யும் வழங்குகிறார். முதல் மேல் நோக்கிய வீச்சின்போது நெப்போ லியப் போர்கள் மூண்டன; இரண்டாவது மேல் நோக்கிய வீச்சின் போது கிரீமிஸப் போர் (Crimean war), ப்ரஷ்யாவிற்கும் ஆஸ்திரியா மற்றும் ஃபிரான்சுக்கும் இடையேயான போர், அமெரிக்க உள்நாட்டுப்போர் (Civil war) முதலியவை ஏற்பட்டன. மூன்றாவது மேல்நோக்கிய வீச்சின் போது முதல் உலகப்போர் மூண்டது. அவ்வாறே, முதல் கீழ் நோக்கிய வீச்சின் போது 1820, 1830, 1848 ஆகிய ஆண்டுகளில் ஐரோப்பாவில் புரட்சிகள் ஆர்ப் பரித்தன; இரண்டாவது கீழ்நோக்கிய வீச்சின்போது மார்க்ஸிய புரட்சி மும்முரமடைந்தது; மூன்றாவது கீழ்நோக்கிய வீச்சின்போது ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் முதலிய நாடுகளில் புரட்சிகள் உண்டாயின.

நெடுங்காலச் சுழலின் மேல் நோக்கிய வீச்சின் போது போர் கள் மூண்டெழுவதற்கும் கீழ்நோக்கிய வீச்சின்போது புரட்சிகள் வெடித்தெழுவதற்கும் என்ன காரணம்? மேல் வீச்சின்போது பண் டங்களின் உற்பத்தி பெருகுகிறது. அங்காடிகளைத் தேடிக் கண்டு பிடித்துக் கொள்வதற்கும் பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன. விற்பனைகள் அதிகரிக்கும்போது இலாபங்கள் கூடுகின்றன. வெளி

நாடுகளில் முதலீடு செய்யும் பழக்கம் மிகுதியாகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாணிபப்போட்டி சூடு பிடிக்கிறது. செல்வத்தை மேன்மேலும் அடைகின்ற நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பேராயுதங்களைப் பெருக்கிக் கொள்கின்றன. போட்டி மனப்பான்மை நாடுகளிடையே வேரூன்றுகிறது. இறுதியில் போர் மூள்கிறது. படைகள் மோதுகின்றன. போரினால் நெடுங்காலச் செழிப்பு நிலை திடீரென்று பாதிக்கப்படுகிறது. உச்சக்கட்டங்களை நோக்கியோடிய விலைகள், போர் முடிவின் போது கீழ்நோக்கிப் பாய்கின்றன. பொன் உற்பத்தி குறைகிறது. போரினால் கொணரப்படும் பல்வேறு சீர் குலைவுகளும், விலை-செலவு உறவு முறிவுகளும் மந்தத்திற்குக் கதவு திறந்து விடுகின்றன. பல்லாண்டுகளுக்குப் பொருளாதார நடவடிக்கை ஆமைவேகத்தில் நகர்கிறது. இதனால் துன்பம் பெருகுகிறது. நாட்டின் அமைதியான வாழ்விற்குப் பங்கம் ஏற்படுகிறது. அரசு இகழ்ச்சிக்குள்ளாகிறது. புத்திக்கூர்மையுடைய அரசால் மட்டுமே இத்தகைய நிலைமையைச் சமாளிக்க முடியும். நெடுங்கால வாணிபச் சுழலின் கீழ்நோக்கிய வீச்சின்போது எத்தனையோ அரசுகள் புரட்சிக் கனலில் வெந்து போயிருக்கின்றன. மந்தத்தால் உண்டான அவதி மறையும்வரை புரட்சிக்கனல் அணைவதில்லை. மந்தம் மறைந்து, மீட்சி அரும்பி, விலை உயர்ந்து, உற்பத்தி பெருகி, நிலைமை சீர்படும் வரை மக்களின் அதிருப்தி குறைவதில்லை, பெரும் போர்களையடுத்து ஏற்படக் கூடிய சமூகப் பொருளாதாரச் சீர்குலைவுகள் வாணிபச் செழிப்பு நிலைக்கு எதிரிகளாயிருக்கின்றன. எனவேதான் பெரும் போர்களை யடுத்து மாபெரும் வாணிப மந்தங்கள் தோன்றுகின்றன. 1825, 1837, 1873, 1893, 1929 முதலிய ஆண்டுகளில் நாடுகளைத் தீண்டி நின்ற வாணிபப் பெருமந்தங்கள் இப்படித்தான் ஏற்பட்டன என்று திரு. ஹான்சன் தெரிவிக்கிறார்.

வாணிபப் பெருமந்தம், 1930.

ஒரு வாணிபப் பெருமந்தம் எவ்வாறு பல்வேறு காரணங்களால், பல்வேறு வகையான சூழ்நிலைகளால் உருவாகிறது என்பதை 1930-ல் ஏற்பட்ட வாணிபப் பெருமந்தம் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. அவ்வாணிபப் பெருமந்தத்திற்கான காரணங்கள் வருமாறு:

முதல் உலகப்போர்: முதல் உலகப் போரினால் பல நாடுகளில் சீர்குலைவுகள் உண்டாயின. ஐரோப்பாவின் உற்பத்தியமைப்புப் பெரிதும் பாதிக்கப்பட்டது. செல்வமும் மனிதசக்தியும் மிகவும் அழிந்து போயின. பொருளாதார நிலைமை தடுமாற்றமடைந்

தது. போருக்குப்பின்னர் நிகழ்ந்த அரசியலமைப்பு மாறுதல்கள், பொருளாதாரச் சீர்குலேவினை மேலும் மிகுதியாக்கின. வெர் சேல்ஸ் உடன்படிக்கையால் (Treatry of Versailles) பேரரசுகள் சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, ஐரோப்பாவின் பொருளாதார ஒற்றுமை குலேந்துபோய், தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியற்ற அனேக சிறு நாடுகள் வர்த்தகக்கட்டுப்பாடுகளேயும், சுங்கங்களேயும், பாதுகாப்புக்கொள்கையையும் நாளடைவில் பின்பற்றத் தொடங்கி, வாணிப அரங்கில் பல சிக்கல்களேத் தோற்றுவித்தன. இதற்கிடையில் ஐரோப்பிய நாட்டிற்குப்புறத்தே எண்ணற்ற புதிய மாறுதல்கள் நிகழ்ந்தன. போதிய தொழில் அனுபவம் இல்லாதிருந்து வந்த பல நாடுகள், தொழிலே நன்கு பெருக்கிக் கொள்ளாமலிருந்து வந்த நாடுகள், போர் நிலவரங்கள் காரணமாகவும், ஐரோப்பாவினுல் இழக்கப் பட்ட அங்காடிகளேக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்ற வேட்கையினுலும், தமது தொழில்களேச் சிறந்த முறையில் வளர்த்துக் கொண்டு தொழில் துறையில் முன்னேறலாயின. இவற்றில் குறிப்பிடத்தக்கவை : ஜப்பான், இந்தியா, மலேஷியா, ஆஸ்திரேலியா, கனடா முதலியவை. போருக்குப் பின் மறு சீரமைவுகள் ஏற்படுவதற்கு இத்திருப்பங்கள் இடையூருக இருந்தன எனலாம்.

ஐரோப்பாவில் கூட செலாவணித் திட்டங்கள் (Monetary Systems) போர்ச் சூழ்நிலேகளால் முறிந்துபோயின. ஐரோப்பிய நாடுகளனைத்தும் பொன் திட்டத்தைக் (Gold Standard) கைவிட்டன; பண வீக்கத் தொல்லேகளுக்குள்ளாயின. போருக்குப் பின்னர் நாணய மதிப்புக்குறைப்பும் (Devaluation) பணவாட்டமும் (Deflation) இந்நாடுகளில் ஏற்பட்டபோது வர்த்தகச் சமூகங்கள் பலத்த இன்னல்களேத் தாங்க வேண்டியதாயிற்று; அதோடு, நாட்டு வருமானமும் நியாயமற்ற முறையில் மறுபகிர்வு செய்யப் பட்டுப் பல சிக்கல்கள் முளேத்தன. துன்பத்தினூடே ஐரோப்பிய நாடுகள் மிகவும் சிரமப்பட்டு மீண்டும் பொன்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தபோது, புதிய சோதனைகள் தோன்றின. பொன்னேப் பொறுத்தவரையில் நாணய அலகுகளின் மதிப்புகள் நாட்டுக்கு நாடு வெவ்வேருயிருந்ததால், வாணிபத்தில் குழப்பம் தலேயெடுத்து. வர்த்தகத்தொடர்புகளின் வளர்ச்சிக்குப் பெருத்த இடையூறு ஏற்பட்டது. இங்கிலாந்து தனது நாணயத்தின் மதிப்பை அதிகப்படுத்தியது; இதனுல் அதன் ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டன. ஃபிரான்சு தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது; இதனுல் அந்நாட்டு ஏற்றுமதிகள் அதிகரித்தன. இத்தகைய சூழ்நிலேகளால் நாடுகளுக்கிடையே அசாதாரண தங்கப் பெயர்ச்சிகள் (Gold movements) ஏற்பட்டன. ஒரு சில நாடுகளில் தங்கம்

குவிந்தது, சில நாடுகளிலிருந்து தங்கம் வெளியேறியது. உலகத் தங்கத்தின் பெரும்பகுதி ஃபிரான்சு, அமெரிக்கா என்ற இரு நாடுகளிடையே முடங்கியது. தங்கம் பற்றுக்குறையாகி விட்ட நாடுகளில் விலைகள் சரிந்தன. பரந்த கொடிய மந்தம் தொடங்கியது!

போரால் விளைந்த இழப்புகள், பொன் பெயர்ச்சியால் உண்டான விளைவுகள், உலக வாணிபப்போக்கில் தோன்றிய புதிய திருப்பங்கள் முதலியவற்றின் காரணமாகச் சில முக்கிய நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் தமக்கிருந்து வந்த அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் திணறின. போருக்கு முன்னர் அந்நிய நாடுகளில் முதலீடு செய்துவந்த ஜெர்மனி, போருச்குப் பின்னர் அவ்வாறு முதலீடு செய்யும் நிலையில் இல்லை. கடனீந்து வரும் நாடாக இருந்துவந்த ஜெர்மனி, போருக்குப்பின்னர் கடனுளி நாடாக மாறியது, உலக வரலாற்றில் ஒரு சோகக்கதையாகும். போரினுல் ஜெர்மனி நாட்டின் அந்நிய முதலீடுகள் அழிந்துபோயின. ஜெர்மனி, தன் பண்டங்களுக்கு இருந்த உலக அங்காடிகளை இழந்தது. மேலும், ஜெர்மனியின் பல பகுதிகளும் அந்நியர் வசம் அகப்பட்டுக் கொண்டன. ஆனல், அமெரிக்காவில் இத்தகைய மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. போருக்கு முன்னர் அமெரிக்கா ஒரு கடனுளி நாடு. ஆனுல், போருக்குப் பின்னர், அது கடன் ஈயும் நாடாக மாறியது. அந்நிய நாடுகளில் தம்மகத்தே செய்யப்பட்டிருந்த முதலீடுகளை வாங்கிக்கொண்டதோடன்றி, கனடா, தென் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் முதலீடு செய்யத் தொடங்கி, இங்கிலாந்தையொத்த ஒரு கடன் ஈயும் நாடாக அமெரிக்கா மாறியது.

இத்தகைய மூலதனப் பெயர்ச்சிகளைத் (Capital movements) தொடர்ந்து, நாடுகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் போக்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அமெரிக்க நாட்டிற்கு ஜெர்மனியும் வேறு பல ஐரோப்பிய நாடுகளும் போர் இழப்பீட்டுத்தொகைகளைக் (Reparations) கொடுக்க வேண்டியிருந்ததால், இந்நாடுகளின் பொருளாதார நிலைமைகளில் இடர்ப்பாடுகள் தோன்றின. எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் அச்சமும் இந்நாடுகளைப் பீடித்தன. இவை இந்நாடுகளை மட்டுமின்றி வேறு பலநாடுகளையும் தாக்கின. ஜனநாயகத்திற்கும், எதேச்சாதிகாரத்துக்குடையே ஐரோப்பா ஊசலாடியது. நிலையான அரசுகளுடைய நாடுகள் என்று கருதப்பட்டவை கூட அரசியல் அமைதியின்மையால் துன்புற்றன. ரஷ்யாவிலும், இத்தாலியிலும் புரட்சிகள் புயலெனச் சீறின. முறையான பொருளாதார மீட்சி உருவாவதற்கு இவை தடைகளாயிருந்தன. செழிப்பு நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்தி வைப்பது சிரமமிகுந்த செயலாயிற்று.

விலைகளின் சரிவு: முதல் உலகப் போரின் இறுதித் தருணத்தில் உயர்மட்டத்திலிருந்த விலைகள், பிறகு சரியத் தொடங்கின. போருக்கு முன்னர் அதிகரித்த வண்ணமிருந்த பொன் உற்பத்தி, போருக்குப்பின்னர் குறைந்தது. 1915-ல் செய்யப்பட்ட பொன் உற்பத்தியின் மதிப்பு 470,000,000 டாலர் ஆகும். ஆனால், 1928-ல் செய்யப்பட்ட பொன் உற்பத்தியின் மதிப்பு 408,000,000 டாலர்தான். போருக்குப் பின்னர் ஏற்பட்ட வாணிபப் பெருக்கத்தால் தங்கத்திற்குள்ள தேவை பெரிதும் அதிகரித்தது. இதனால் தங்கத்தின் விலை உயர்ந்து பண்டங்களின் விலை மட்டம் தாழ்ந்தது. விலைகள் தாழத்தொடங்கிவிட்டால், வாணிப மந்தம் தூரத்தில் இல்லை என்று தான் பொருள். விலைகள் கணிசமான அளவிற்குக் குறையத் தொடங்கி விட்டன என்பது 1925-ல் ஐயமறத் தெரிந்தது.

தொழில் நுட்ப மாறுதல்: போர்ச் சமயத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் மும்முரமடைந்தபோது தொழில் நுட்பத்தில் முன்னேற்றங்கள் காணப்பட்டன. உலகத்தின் முக்கிய நாடுகளிலெல்லாம் புத்தாக்கங்கள் (Innovations) பூக்கத் தொடங்கின. அறிவியல் நிர்வாகத்தில், (Scientific Management) புதிய சாதனைகள் படைக்கப்பட்டன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தொழில் சீரமைப்புகள் (Rationalisation) பரவலாகச் செய்யப்பட்டு மூலதனம் மற்றும் உழைப்பு முதலிய சாதனங்களின் பெயர்ச்சியில் பலத்த மாறுதல்கள் உண்டாயின. தேவைக்கதிகமான அளவில் சில தொழில்களுக்கு உற்பத்திச் சாதனங்கள் சென்றன. இதனால் சில சிக்கல்கள் தோன்றின. தொழில் நுட்ப முன்னேற்றப்பாதையில் அறிமுகமான பல எந்திரங்கள் காரணமாக எண்ணற்ற தொழிலாளர்கள் தமது வேலைகளை இழந்தனர். இவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது அமெரிக்கா முதலிய நாடுகளுக்குக் கூடச் சிரமமாயிருந்தது எனலாம்.

தொழில் நுட்ப மாறுதலின் முத்திரை வேளாண்மைத் தொழிலில் மிகவும் அழுத்தமாக விழுந்தது, தொழில் நுட்ப முன்னேற்றம் விளைவாக விவசாயத் தொழிலில் எந்திரங்கள் அறிமுகமாயின. புதிய நிலப்பகுதிகள் விவசாயத்தின் கீழ் வந்தன. உணவுப்பண்டங்களுக்கான தேவை போரினால் அதிகரித்ததனால், எந்திரங்களை ஆண்டும் புதிய நிலப்பகுதிகளை உழுதும் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆனால், போருக்குப் பின்னர் உணவுப்பண்டங்களுக்கான தேவை குறைந்தது. எனவே, இவற்றின் விலைகள் தாழ்ந்தன. விவசாயத்தைக் கொடிய மந்தம் சூழ்ந்தது. விவசாயத்தில் ஏற்பட்ட மந்தத்தால் விவ

சாய நாடுகளேயன்றி ஏனைய நாடுகளும் பாதிக்கப்பட்டன. அவற்றின் பொதுப் பொருளாதாரக் கட்டமைப்புப் பெரிதும் பலவீனமுற்றது. 1929ஆம் ஆண்டு வாணிபத் தேக்க நிலை தலைகாட்டிய போது, விலைகள் மேலும் தாழ்ந்து வேளாண்மைச் சமூகத்தின் இன்னல்கள் அதிகரித்தன. இவ்வின்னல்கள், பின்னர் வேறு தொழில்களுக்கும் பரவின. மந்தகாலங்களின் போது வேளாண்மை சற்றுப் பாதிக்கப்படாமலிருந்தால்தான் வாணிபத்தைத் தேக்க நிலையிலிருந்து மீட்டுக்கொண்டு வருவது சாத்தியமாயிருக்கும். அறுவடைகள் செழித்திருந்து விவசாயிகளின் வாங்குந்திறன் உயர்வாயிருப்பின் எப்படிப்பட்ட மந்தத்தையும் ஓரளவிற்குச் சமாளிக்க முடியும். ஆனால், வேளாண்மையே வேர் அறுந்து கிடந்தால் மந்தத்தை அகற்றுவது எளிதன்று. 1930ஆம் ஆண்டின் மந்தத்தின் போது இப்படித்தான் வேளாண்மை மிகவும் பாதிக்கப்பட்டுக் கிடந்தது. எனவே, வாணிப மந்தத்தின் தீவிரம் எல்லை மீறிப்போயிற்று.

பொருளாதாரத் திட்டத்தின் வளைந்து கொடா இயல்பு: மேலே விவரிக்கப் பெற்ற புதிய மாறுதல்கள் காரணமாக, நெகிழ்வுத் தன்மை நாட்டுப் பொருளாதாரத்திடம் இல்லாமல் போயிற்று. மாறுதல்கள் நிகழ்கின்றபோதும், சூழ்நிலைகள் மாறுகின்றபோதும் நாட்டுப் பொருளாதாரம் உரிய முறையில் மாறிக் கொள்ளுமளவுக்கு நெகிழ்ச்சியுடையதாயிருத்தல் வேண்டும். இதற்கு மாறாக இருப்பின் நிலைமை மேலும் மோசமடையும். ஊதியம் குறைவாயிருக்கின்ற இடங்களையும் உபயோகங்களையும் விட்டுக் கூடுதலாயுள்ள இடங்களுக்கும் உபயோகங்களுக்கும் முதல், உழைப்பு, தொழிலமைப்புத்திறன் ஆகிய சாதனங்கள் பெயரும் முறையில் பொருளாதார எந்திரம் இயங்கவேண்டும். தொழில் நிலை நாள்தோறும் மாறி வருவதாகவும், உற்பத்தி முறைகளும் பண்டத்தேவையும் விநாடிதோறும் மாறுதலடைந்து வருவதாகவுமுள்ளபோது, பொருளாதாரம் வளைந்து கொடுக்கும் இயல்புடன் இருக்கவேண்டியது இன்றியமையாததாகிறது. அவசியமான அளவிற்கு ஊதியங்கள் அல்லது விலைகள் அல்லது உற்பத்தி நெகிழ்ந்து கொடுக்கவில்லையென்றால், சாதனப் பெயர்ச்சிக்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டு நிறைவுடைய வேலைவாய்ப்பு (Full employment) நிலைமையை உருவாக்க முடியாது.

ஆனால், இத்தகைய வளைந்து கொடுக்கும் இயல்புடைய பொருளாதாரம் 1920ஆம் ஆண்டு வாக்கில் காணப்படாமல் போயிற்று. அப்போது, கூலிகள் நெகிழ்ந்து கொடுக்க மறுத்தன, பணத்தின் வாங்குந்திறனில் ஏற்படும் மாறுதல்களே பொருளாதார நிலை பேறின்மைக்கு அடிப்படைக் காரணங்கள் என்ற கொள்கையின்

அடிப்படையில் தொழிலாளர் சங்கங்கள் கூலிக்குறைப்பிற்கு ஒப்புக்கொள்ளவில்லை. உற்பத்தியில் கூட வளைந்து கொடுக்கும் இயல்பு இருக்கவில்லை. பூரண சர்வாதீனங்களும் (Monopolis), நிறைகுறை சர்வாதீனங்களும் (Imperfect monopolis), தமது நிர்ணய விலைகளையே (Administered prices) நிலை நாட்டும் முயற்சிகளை மேற்கொண்டன. உற்பத்தி கட்டுக்கடங்காமல் இருந்து வந்த சில துறைகளில் அரசு குறுக்கிட்டுப் பண்டங்களின் விலைகளை நிர்ணயிக்க முயன்றது. இதனால் தொழில் நிலைமை மேலும் குழப்பமுற்றது. கட்டுப்பாடு (Control) பரவலாயிற்று. காபி, ரப்பர். சர்க்கரை, கச்சாப்பொருட்கள் முதலியவை அரசியல் விலைக் கட்டுறுதிப்பாடு (Volorisation) ஏற்பாட்டின் கீழ்க் கொண்டுவரப் பட்டன. 1930ஆம் ஆண்டுக்குள் விவசாயப் பண்டங்கள் கூட அரசுக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. பொருளாதாரத்திய வளைந்து கொடா இயல்பு மேன்மேலும் அதிகரித்துச் சென்றபோது, வாணிபப் பெரும் புயல் வீசப் போகிறது என்பது உறுதியாயிற்று. வாணிபத்தில் சுணக்கத்தின் அறிகுறிகள் தென்பட்ட நேரத்தில் கூலிகள் குறையவில்லை, விலைகள் இறங்கவில்லை. மாறுகக் கூலிகளை மாறுமலிருக்கச் செய்வதற்கும் மாற்று வீதங்களைக் (Exchange rates) கட்டுப்படுத்துவதற்கும் பலநாடுகள் முயன்றன. இது மந்தத்தின் தீவிரத்திற்கு வலுவேற்றியது.

வாணிபச் சுணக்கம் : இது ஒரு முக்கியக் காரணி. 1920ஆம் ஆண்டிற்குப் பிறகு தொழில் துறையில் நெடுங்காலச் செழிப்பு நிலையொன்று நிலவியது. குறிப்பாகக் கட்டுமானம், முதற்கருவி உற்பத்தி முதலியவற்றில் நல்ல செழிப்பு நிலை நிலவிற்று. இச் செழிப்பு நிலை சுமார் 7 ஆண்டுக்காலம் நீடித்தது. அப்போது பாங்குச் செலாவணி அதிகரித்து, தொழில் பூரித்து இலாபங்கள் கூடுதலாயின. ஆகவே, உற்பத்தி நடவடிக்கைகள் பெருகிக் கொண்டே போயின. முதலில் மட்டு மீறிய பெருக்கம் நிகழ்ந்த போது வாணிபத்தில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டு மந்தம் தோன்றிற்று.

இவ்வாறுக, வாணிபச் சுழலின் சுணக்கக்கட்டம், முதல் உலகப் போரால் விளைந்த கட்டமைப்பு மாறுதல்கள், விலைச் சுழலின் கீழ்நோக்கிய போக்கு, வேளாண்மையில் உண்டான உற்பத்தி முறை மாறுதல்கள் பொருளாதார நெகிழ்வின்மை ஆகியவை 1930ஆம் ஆண்டின் வாணிபப் பெருமந்தம் தோன்றுவதற்கும், தீவிர மிகுந்ததாய் அமைவதற்கும் முக்கியக் காரணங்களாக இருந்தன. இதுவரை இப்படிப்பட்ட கொடிய வாணிபப் பெருமந்தம் ஏற்பட்டதில்லை என்று கூறுமளவிற்கு 1930—ல் தோன்றிய மந்தம் கடுமை மிகுந்ததாயிருந்தது.

5. நெடுஞ் சுழல்கள்

(Long Waves)

> "பொருளாதாரக் கட்டமைப்பில் சமநிலை இருந்தால்தான், அதனுல் செம்மையாக இயங்கமுடியும். இதனுல் பொருளாதார மாறுதலை ஒருநோய் என்று கருதிவிடக் கூடாது. தனியார் தொழிற்றுறைவுப் பொருளாதார அமைப்பின் ஓர் அடிப்படை இயல்பு அது."
>
> — ஏ. எச். ஹான்சன்.

'நீண்ட அலைகள்' என்றழைக்கப்படும் நெடுஞ்சுழல்களைப் பற்றிய ஆய்வின் மீது பொருளாதார அறிஞர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளனர். ஐம்பது அல்லது அறுபதாண்டுக்கால நீட்சியுடைய சுழல்கள் இருக்கின்றன என்று கூறி அவை பற்றிய ஆராய்ச்சி மீது பொருளாதார அறிஞர்களின் கவனத்தை முதன் முதலில் திருப்பிவிட்டவர் திரு. கோண்ட்ராடீஃப் ஆவார். இவரது நினைவாக இத்தகைய மாநெடுஞ்சுழல்கள் 'கோண்ட் ராடீஃப் சுழல்கள்' என அழைக்கப்பட்டு வருகின்றன. வாணிபச் சுழல் வரலாறு பற்றிய சும்பீட்டரின் விளக்கத்தில் கோண்ட் ராடீஃப் சுழல்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. என்றாலும், இத்தகைய மாநெடுஞ்சுழல்கள் உண்மை வாழ்வில் இருந்து வந்ததற்கான போதிய சான்றுகள் கிடைக்காது போனமை காரணமாக, கோண்ட்ராடீஃப் சுழல்கள் மீதான பொருளாதார இயலாரின் ஆர்வம் இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு குன்றி விட்டது எனலாம்.

இச்சுழல்களுக்குப் பதிலாக, 15 முதல் 20 ஆண்டுக்காலம் நீடித்திருப்பதாயுள்ள இடைநிலைச் சுழல்கள் மீது பொருளாதார இயலாரின் கவனம் திரும்பியிருக்கிறது. வாணிபத்தில் 15 முதல் 20 ஆண்டுக்காலம் நீடித்திருக்கக்கூடிய சுழல்களைப் பற்றி, 1930ஆம் ஆண்டில் சைமன் குஸ்நெட்ஸ் (Simon Kuznets), ஆர்தர் எஃப். பர்ன்ஸ் (Arthur F. Burns) ஆகியோர் தெளிவாக விளக்கினர்.

இடை நிலைச்சுழல் ஆய்வு வளர்ச்சிக்குத் திரு. குஸ்நெட்ஸ் அவர்கள் ஆற்றிய பணிக்கு அவரது நினைவாக, இவை குஸ்நெட்ஸ் சுழல்கள் (Kuznets cycles) என்று பெயரிடப்பட்டுள்ளன.

முதலாளித்துவ அமைப்புக்களின் கீழ் உள்ள பொருளாதாரங்களில் ஏற்படக்கூடிய மாறுதல் இருவகைப்படும் : ஒன்று, உறுதியான நெடுங்கால வளர்ச்சி; மற்றொன்று வாணிபச்சுழல். ஒரு சாதாரண வாணிபச்சுழலின் கால நீட்சி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள். இச்சாதாரண வாணிபச் சுழல்களைவிட மிகுதியான கால நீட்சியை எடுத்துக் கொள்ளும் சில சுழல்கள் பொருளாதார வாழ்வில் உள்ளன. 8 முதல் 11 ஆண்டுகள் வரை நீடித்திருப்பவை ஜுக்ளர் சுழல்கள் (Jugler cycles). 40 முதல் 60 ஆண்டுகள் வரை நீடித்திருப்பவை கோண்ட்ராடிஃப் சுழல்கள். ஜுக்ளர் சுழல்களை விடக் கூடுதலான கால நீட்சியையும், கோண்ட்ராடிஃப் சுழல்களைவிடக் குறைவான கால நீட்சியையும் உடையவை குஸ்நெட்ஸ் சுழல்கள். இவற்றின் கால நீட்சி 15 முதல் 25 ஆண்டுகள்.

குஸ்நெட்ஸ் சுழல்கள்

குஸ்நெட்ஸ் சுழலைப்பற்றிய ஆதாரங்களை, குஸ்நெட்ஸ் அவர்கள் 1930ஆம் ஆண்டு "உற்பத்தி மற்றும் விலைகளில் நெடுங்கால மாறுதல்கள்" (Secular Movements in Production and Prices) என்ற நூலில் வெளியிட்டார். உற்பத்தியைப் பொறுத்த வரையில் இச்சுழல்களின் கால நீட்சி 22 ஆண்டுகள் என்றும், விலைகளைப் பொறுத்தவரையில் இவற்றின் கால நீட்சி 23 ஆண்டுகள் என்றும் அவர் அறிவித்தார். சுழல்கள் என்பதற்குப் பதிலாக 'வீச்சுகள்' (Swings) அல்லது 'அலைகள்' (Wares) என்ற பதங்களையே அவர் ஆண்டார்.

உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தில் குஸ்நெட்ஸ் சுழல்கள் காணப்படுகின்றன என்ற உண்மையை அமெரிக்க நாட்டில் மட்டுமல்லாது வேறு பல நாடுகளிலும் உணர்ந்தனர். குஸ்நெட்ஸ் சுழல்கள் கட்டம் மற்றும் நிர்மாணப் பிரிவுகளில் கூடப் பரவலாகக் காணப்படுகின்றன. 1930ஆம் ஆண்டுக்கு முன்பாக அமெரிக்க நாட்டில் இருந்து வந்த குடியிறக்கத்தின் (Immigration) போக்கிலும் இச்சுழல்கள் காணப்பட்டன என்று சிலர் நம்புகின்றனர். குடியிறக்கத்தின் போக்கில் இவை காணப்பட்டு வந்ததன் விளைவாக நாட்டு மக்கள்தொகை, தொழிலாளர் தொகை முதலியவற்றின் வளர்ச்சி வீதத்தில் மாறுதல்கள் உண்டாயின என்றிவர்கள் கருதுகின்றனர். இதை முற்றிலும் உண்மை என்று நாம்

எடுத்துக்கொள்வதற்கில்லை. ஏனென்றால் மக்கள் தொகையிலும், தொழிலாளர் எண்ணிக்கையிலும் அத்தகைய நெடுங்கால ஏற்ற இறக்கங்கள் நிகழ்வதற்குக் குடியிறக்க மாறுதல்கள் மட்டும் காரணமாயிருக்கவில்லை. திருமணம் மற்றும் பிறப்பு விகிதங்களில் ஏற்பட்ட மாறுதல்களும் முக்கியமான காரணங்களாகும்.

உற்பத்தியின் போக்கில் உண்டாகும் குஸ்நெட்ஸ் சுழல் ஏற்ற இறக்கங்கள், உறபத்தியின் எல்லாக் கூறுகளிலும் மாறுதல்களை விளைவிக்கின்றன. உற்பத்தியின் மாறுதல் வீதத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைத் தொடர்ந்து, தொழிலாளர் எண்ணிக்கையின் அதிகரிப்புகள், முதல் இருப்பின் அதிகரிப்புகள், தலை வீத உற்பத்தியின் அதிகரிப்புகள் முதலியவற்றிலும் மாறுதல்கள் தோன்றுகின்றன. இம்மாறுதல்களைத் தொடர்ந்து பொருளாதாரத்தின் மற்றப் பிரிவுகளிலும் பின்னர் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அமெரிக்க நாட்டின் பொருளாதார வளர்ச்சி வரலாறும், 19 அல்லது 20ஆம் நூற்றாண்டில் முன்னேற்றமடைந்த இதர நாடுகளின் வளர்ச்சி வரலாறும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றன. குஸ்நெட்ஸ் சுழல்கள் முதலில் உற்பத்தி, முதல், உழைப்புச் சாதனங்கள் (Lobour resources) முதலியவற்றில் காணப்படுகின்றன. இவற்றைத் தொடர்ந்தும் பின்னர் பொன் பெயர்ச்சி, பண அளிப்பு, விலை மாறுவதன் விகிதங்கள், அயல்நாட்டுச் செலுத்து நிலைகள், பன்னாட்டு மூலதன ஒழுகியக்கம் (Capital flow) முதலிய எல்லாவற்றிலும் அடுத்தடுத்து மாறுதல்கள் தோன்றுகின்றன.

குஸ்நெட்ஸ் சுழல்களின் இயல்பு

குஸ்நெட்ஸ் சுழல்களின் இயல்பினை நாம் புரிந்துகொள்ள முற்படும்போது, சில வினாக்கள் நம் முன் எழுகின்றன; உற்பத்தி செய்வதற்கு ஒரு நாட்டுப் பொருளாதாரத்திடம் உள்ள சக்தியின் வளர்ச்சி வீதத்தில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களை இச்சுழல்கள் தெரிவிக்கின்றனவா? அல்லது, சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் அல்லது தீவிரத்தில் ஏற்படும் மாறுதல்களை அவை தெரிவிக்கின்றனவா? தொழில் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் முதலாளித்துவ நாடுகளின் மொத்த உற்பத்தியினுடைய அடிப்படைப் போக்கினைப்பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், அந்நாடுகளின் உற்பத்தி சக்தியினை நிர்ணயிக்கின்ற காரணிகளை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வாணிபச் சுழல்களைப பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்றால், சாதனங்கள் எவ்வெவ்வாறு பயன்படுத்தப் பெறவேண்

டும் என்பதை நிர்ணயிக்கின்ற காரணிகளையும், பயன்படும் தேவையினை (Effective Demand) உருவாக்கும் சக்திகளில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களையும் பற்றி ஆராய்ந்தறிய வேண்டும். குஸ்நெட்ஸ் சுழல்கள் என்பவை ஆக்க நிகழ்ச்சிகள் சம்பந்தமானவையா? அல்லது, தேவை நிகழ்ச்சி சம்பந்தமானவையா? அல்லது இரண்டும் சேர்ந்த கலப்பு நிகழ்ச்சி சம்பந்தமானவையா?

பொருளாதார வளர்ச்சி வீதத்தில் தோன்றும் ஏற்ற இறக்கங்களாக குஸ்நெட்ஸ் சுழல்கள் இருக்கின்றன. அதாவது, நாடுகளின் உற்பத்தித்திறன். உழைப்பு மற்றும் முதலின் அளிப்பு, உத்தம அளவுகளில் (Optimum proportions) இவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் முதலியவற்றில் ஏற்படும் நெடுங்கால மாறுதல்களாகக் குஸ்நெட்ஸ் சுழல்கள் இருக்கின்றன. மேலும், உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படும் தீவிரத்தில் உண்டாகும் மாறுதல்களாவும் இவை இருக்கின்றன. குஸ்நெட்ஸ் சுழல்களைச் சற்று உற்றுநோக்குவோமானால், சில காலங்களில் வேலைவாய்ப்பின்மையளவு மிகுதியாகவும் (அல்லது சாதனங்களை உபயோகப்படுத்துவதன் அவசியம் குறைவாகவும்), அடுத்துச் சில காலங்களில் வேலைவாய்ப்பளவு மிகுதியாகவும் (அல்லது சாதனங்களை உபயோகப் படுத்துவதன் தீவிரம் அதிகமாகவும்) இருப்பதைக் காணலாம். இதிலிருந்து என்ன புரிகிறது? பயன்படுதேவையினை நிர்ணயிப்பவைகளில் ஏற்படும் மாறுதல் சம்பந்தப்பட்டனவாயும் இச்சுழல்கள் இருக்கின்றன. இங்கே மற்றொன்றையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். சாதன வளர்ச்சி வீதத்தில் நிகழும் மாறுதல்களுக்கும், சாதனத்தை உபயோகப்படுத்தும் வீதத்தில் (Utilisation rates) நிகழும் மாறுதல்களுக்குமிடையே நெருங்கிய உள் தொடர்புகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் மற்றொன்றைப் பாதிக்கின்றன. முதல் இருப்பில் நெடுங்கால மாறுதல்கள் ஏற்பட்டால் - அதாவது முதலாக்கத்தில் (Capital formation) நெடுங்காலப் பெருக்க சுருக்கங்கள் உண்டானல்—உடனே பயன்படுதேவையிலும் மாறுதல்கள் விளைகின்றன; வேலை நிறைவு சில ஆண்டுகளிலும், வேலைவாய்ப்பின்மை சில ஆண்டுகளிலும் காணப்படும். அவ்வாறே பயன்படு தேவையில் உண்டாகும் மாறுதல்களால் முதலாக்கத்தில் பெருக்கமும் சுருக்கமும் விளைகின்றன.

சாதன வளர்ச்சி வீதத்திற்கும் சாதனத்தை உபயோகப்படுத்தும் வீதத்திற்குமுள்ள உள் தொடர்புகள் சாதாரண வாணிபச் சுழல்களிடத்தில் கூடக் காணப்படுவதாயிருக்கலாம். ஆனால், சாதாரண வாணிபச் சுழல்களின் கால நீட்சி, குறுகியதாயிருப்பதன் காரணமாக அவைகளைப் பொறுத்தவரையில் இவ்வுள்

தொடர்கள் அவ்வளவு முக்கியமானவையாக எடுத்துக் கொள்ளப் படுவனவன்று. மேலும் நெடுஞ்சுழல்களில் தான் இவ்வுள்தொடர்புகள் நன்கு தெரிந்து கொள்ளப்படக் கூடியவைகள், தெளிவான தோற்றமுடையனவாயிருக்கின்றன. ஆகவே, குஸ்நெட்ஸ் சுழல்களில்தான் இவை முக்கியத்துவம் வாய்ந்தவையாய்க் கருதப்பட்டு வருகின்றன.

சாதன வளர்ச்சி வீதத்திற்கும், சாதனம் பயன்படுத்தப்படும் வீதத்திற்குமுள்ள உள்தொடர்புகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன; இவற்றில் ஒன்றின் மாறுதல் காரணமாக மற்றொன்றின் மாறுதல் எவ்வாறு விளைகிறது — அதாவது, பின்னிய செயல் விளைவுகள் (Interaction) எவ்வெவ்வாறு உண்டாகின்றன என்பதைப் பற்றிய விளக்கம் கீழே தரப்படுகிறது.

மக்கள் தொகை மற்றும் தொழிலாளர் எண்ணிக்கை வளர்ச்சி மூலம் பின்னிய செயல் விளைவுகள்

பொருளாதார வளர்ச்சி வீதத்தின் நெடுங்கால வீச்சுகளுக்கும், மக்கள்தொகை வளர்ச்சியின் நெடுங்கால வீச்சுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று குஸ்நெட்ஸ் கூறுகிறார். குடியிறக்கம், திருமணம் மற்றும் பிறப்பு வீதங்களில் ஏற்படும் மாறுதல்கள் காரணமாக மக்கள்தொகை வளர்ச்சியில் நெடுங்கால மாறுதல்கள் காரணமாக மந்தம் அல்லது தேக்க நிலையின் காலப்பகுதிகள் நீள்கின்றன; அதோடு, தீவிர மிகுந்தவையாயும் மாறுகின்றன. அவ்வாறே அடுத்து வரும் மீட்சி அல்லது முன்னேற்றக் காலப்பகுதிகளும் நீண்டவையாய், பலமிக்கவையாய் அமைகின்றன. மக்கள்தொகை அதிகரிக்கும் போது குடியிருப்புக்களுக்கான தேவை உயர்கிறது, தொழிலாளர் எண்ணிக்கை பெருகுகிறது; முதலாக்கம் கூடுகிறது. இவற்றின் காரணமாகப் பொருளாதாரத்தில் மாறுதல்கள் உற்பத்தியாகின்றன. முதல் திரட்சியடைந்து முதற் பொருட்கள் கூடுதலாகத் தயாரிக்கப்படும் போது தொழிலாளர் எண்ணிக்கையும் வளருமாயின், முதலின் இறுதி நிலை ஆக்கம் (Margnial Productivity of Capital) உயர்மட்டத்திலிருக்கும். ஆகையால், முதலீடு பெருக்கமடையும்போது முதலீட்டின் இறுதிநிலைத்திறன் (Mangnial Efficiency of Investment) உயர்மட்டத்திலிருக்கும். முதலீட்டின் இறுதி நிலைத் திறன் உயர்வாயிருப்பின், முதலீட்டளவு மேன்மேலும் பெருகிச் செல்லும். அப்போது உற்பத்தி நடவடிக்கைகள் பரபரப்படைகின்றன; வேலை வாய்ப்பளவு விரிவடைகிறது. செழிப்பு நிலை வாணிபத்தில் வேரூன்றுகிறது. மக்கள்தொகை வளர்கின்ற போது ரயில்பாதைகள், குடியிருப்புகள் முதலியவற்றில் செய்யப்

படும் முதலீட்டளவு பெருகிக் கொண்டே போகும். ஏனென்றால், மக்கள்தொகை வளர்ச்சி மூலமாக இவற்றிற்கான தேவை மிகவும் விரிவடையும்போது. அவற்றின் உற்பத்தியை – அளிப்பை – அதிகரிப்பது அவசியமாகிறது. இவ்வாறாக, மக்கள்தொகை அதிகரிக்கும்போது சாதனத்தைப் பயன்படுத்தும் வீதத்திலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

அயல்நாட்டுச் செலுத்துநிலை, பன்னாட்டு முதற் பெயர்ச்சி, பண அளிப்பு முதலியவை மூலம் பின்னிய செயல் விளைவுகள்

அயல் நாட்டுச் செலுத்து நிலைக்கும் நெடுஞ் சுழல்களுக்கும் நெருங்கிய உறவுண்டு. பொன் ஏற்றுமதி அல்லது முதல் இறக்குமதி மூலம் செலுத்துநிலைப் பற்றாக்குறையைப் போக்குவதற்குரிய நிதியைத் திரட்டும் வல்லமையைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டின் வளர்ச்சியின் வேகமும், வளர்ச்சிக் காலப்பகுதியின் நீட்சியும் சார்ந்திருக்கின்றன. ஆனால், அயல் நாட்டுச் சொத்து நிலைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அடிக்கடி பொன்னை ஏற்றுமதி செய்வதால், பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு, வாணிபம் பாதிக்கப்பட்டு, வேலை வாய்ப்பின்மை உருவாகி வளர்ச்சி தடைப்படும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பொருளாதார வளர்ச்சிக்கும் பண அளிப்புக்குமிடையேயும் நெருங்கிய உறவிருக்கிறது. பண அளிப்புக் குறைவாயிருந்தால் வாணிபத்தில் கொடுக்கல் வாங்கல்கள் தடுமாற்றமடைகின்றன. பண்டங்களைத் தேவைக்கேற்ப உற்பத்தி செய்வதில் தடைகள் உண்டாகின்றன. பண அளிப்புப் பெருகினால், வாணிபம் செழித்தோங்குவதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன. வாணிபம் செழிக்கும்போது வேலை வாய்ப்புப் பெருகி நாட்டுப் பொருளாதார வளர்ச்சி துரிதமடைகிறது. விலைகளைப் பொறுத்துத்தான் இலாபங்கள் அமைகின்றன. விலைகளை நிர்ணயிப்பதில் பண அளிப்புக்கும் ஒரு முக்கியப் பங்குண்டு. இலாபங்களைப் பொறுத்துத்தான் தொழில் முயல்வோர்களின் முதலீடுகள் திட்டமிடப்படுகின்றன. முதலீட்டளவில் உண்டாகும் ஏற்ற இறக்கங்கள் வழியே வாணிப மாறுதல்கள் உண்டாகின்றன. நாடுகளின் நிதி நிலைமைகளைத்தான் பொருளாதார முன்னேற்றம் நம்பியிருக்கிறது. நிதி நிலைமைகள் சிறப்பாயிருந்தால் வளர்ச்சி வீதம் மிகுதியாயிருக்கும். வளர்ச்சி வீதம் மாறுதலடையும்போது வாணிபத்திலும் மாறுதல்கள் விளைகின்றன.

சாதன வளர்ச்சி வீதத்திற்கும் சாதனம் பயன்படுத்தப்பட வேண்டிய வீதத்திற்குமிடையே நிகழும் பின்னிய செயல் விளைவுகள் மூலமாக நெடுஞ்சுழல்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதற்கான ஒரு சில எடுத்துக்காட்டுகள் மேலே தரப்பட்டுள்ளன. இங்கே ஒரு புதிய வினு நம்முன் எழுந்து நிற்கிறது; நெடுஞ்சுழல்கள் தாமாகவே தோன்றிடும் போக்குகளாக இருக்கின்றனவா? அன்றிப் புறத்தே தோன்றும் நிகழ்ச்சிகளின் காரணமாக உண்டாகும் மாறுதல்களாக அமைந்திருக்கின்றனவா?

நெடுஞ்சுழல்கள் முற்றிலும் தாமாகவே தோன்றுகின்ற போக்குகளாகவோ அல்லது நிகழ்ச்சிகளாகவோ இல்லை. ஓரளவிற்கு மட்டுமே தாமாகவே தோன்றும் போக்குகளாக இருக்கின்றன. புறத்தே ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கும் இவற்றுக்கும் தொடர்பிருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. முன்னேற்றப்பாதையின் அடுத்தடுத்த கட்டங்களின் போக்கினை நிர்ணயிப்பவை இப்புற நிகழ்ச்சிகளே. நெடுஞ்சுழல்களில் நாம் என்ன காண்கிறோம்? நெடுங் காலத்திற்கு நீடித்திருக்கும் ஒரு தீவிர மந்தத்தைத் தொடர்ந்து மெல்ல மலர்ந்து, பொருளாதார முன்னேற்றம் ஆரம்பமாகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருப்பவைகளை மீட்சிக்குக் காரணமான சக்திகள் முறியடித்துச் செழிப்பு நிலை நோக்கிப் பொருளாதாரத்தை வழிநடத்திச் செல்கின்றன. செழிப்பின் போது அளவுக்கு மீறிய முதலீடுகள் செய்யப்படுகின்றன. அப்போது பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடைகளாக உள்ள சக்திகள் தலையெடுக்கின்றன. ஒரு நிலைக்குப் பிறகு வாணிபம் மேலும் பெருகுவதற்கில்லை. உற்பத்தி மேலும் அதிகரிப்பதற்கில்லை. முதலீடு மேலும் வளர்வதற்கில்லை. எனவே, சுணக்க நிலை உண்டாகிப் பொருளாதாரம் மந்த நிலை நோக்கி வீழ்கிறது. மந்தம் சிலஆண்டுகள் நீடித்த பின்னர் நெடுஞ்சுழல் தன்னை மற்றொரு ஓட்டத்திற்குத் தயார்ப்படுத்திக் கொள்கிறது.

இப்படிப்பட்ட நெடுஞ்சுழல் ஓட்டத்தின் அடுத்தடுத்த கட்டத்தின் போக்கினை நிர்ணயிப்பவை, பொதுவாகப் புறச்சார்பான நிகழ்ச்சிகளாகும். இவை நெடுஞ்சுழலின் மந்தக்கட்டத்தினைத் தீவிரமடையச் செய்யும் ஆற்றல் படைத்தவை. அவ்வாறே செலாவணிக் கொள்கை, மூலதன இறக்குமதி முதலியவை காரணமாகப் பண அளிப்பில் ஏற்படும் மாறுதல்களால் ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சிப்பாதையில் எத்தனையோ மாற்றங்கள், விளைவுகள் ஏற்படுகின்றன.

குஸ்நெட்ஸ் சுழல்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுவன என்று நம்பப்படுகிறது. தொழில்வள மிகுந்த நாடுகளேயன்றி விவசாய நாடுகளிலும் இவை தோன்றியிருக்கின்றன என்பதற்கான புள்ளி விரவங்கள் வரலாற்றில் இருக்கின்றன. உதாரணமாக, அமெரிக்க நெடுஞ்சுழல்களின் செழிப்புக் கட்டங்களின் உச்ச நிலைகள் (Peaks) *1873, 1892, 1913* முதலிய ஆண்டுகளிலும், தேக்க நிலைகளின் பள்ள நிலைகள் (Troughs) **1878, 1896** முதலிய ஆண்டுகளிலும் உணரப்பட்டன என்று அமெரிக்கப் பொருளாதார வரலாறு தெரிவிக்கிறது.

கோண்ட்ராடிஃப் சுழல்கள்
(Kondratieff's Cycles)

நெடுஞ்சுழல்களைப் பற்றிய ஒரு திருப்திகரமான விளக்கத்தை அளித்த எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. நிக்கோலாய் டிமிரிட்ரிவிஷ் கோண்ட்ராடிஃப் (Nickolai Dmitrievich Kondratieff) ஆவார். *40* முதல் *60* ஆண்டுகள் நீடித்திருக்கும் மாநெடுஞ் சுழல்களை கோண்டராடிஃப் சுழல்கள் என்கிறோம். குஸ்நெட்ஸ் சுழல்களை விடக் கூடுதலான கால நீட்சியினை எடுத்துக்கொள்ளும் இம்மாநெடுஞ்சுழல்களைப்பற்றிக் கோண்ட்ராடிஃப் வழங்கிய கோட்பாட்டின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

பொருளாதார வாழ்வில், ஆழ்ந்த மாறுதல்கள் தோன்றும் போது வாணிபத்தில் ஒரு மேல் நோக்கிய நெடும்போக்கு அல்லது வீச்சு உதயமாகிறது. கண்டுபிடிப்புகள் மூலமாகத் தொழில் நுட்பம் மாறுதலடைதல், உலகப் பொருளாதார அமைப்பில் புதிய நாடுகள் சேர்த்துக்கொள்ளப்படுதல், பொன் உற்பத்தி, பணப்புழக்கம் முதலியவற்றில் மாறுதல்கள் உண்டாதல் ஆகியவை பொருளாதார வாழ்வில் ஏற்படும் ஆழ்ந்த மாறுதல்களில் குறிப் பிடத் தகுந்தவை.

வாணிபத்துறையில் தோன்றிடும் மேல் நோக்கிய நெடும் வீச்சுகளின் போதுதான் பெரும்பாலான சமுதாய எழுச்சிகள்- போர், புரட்சிகள் – வெடித்துச் சீறுகின்றன. மாநெடுஞ்சுழல் களின் துவக்க நிலைகளில் வாணிபச் சுழல்களிடத்தில் சிறிய மந்தங் களும், தீவிரமான மேல்நோக்கிய வீச்சுகளும் தென்படுகின்றன; இறுதி நிலைகளில் இவற்றிற்கு நேர்மாறானவை நிகழ்கின்றன. மாபெருஞ் சுழல்களின் கீழ்நோக்கிய வீச்சின்போது மற்றெல்லாத் தொழில்களையும்விட வேளாண்மையைத்தான் ஒரு கடுமையான நெடுங்கால மந்தம் பீடித்துக் கொள்கிறது.

சமுதாய எழுச்சிகள், கண்டுபிடிப்புகள் முதலியவற்றிற்கும் நெடுஞ்சுழல்களுக்கும் உள்ள உறவினை நிரூபித்துக் காட்டுவதற்காகக் கோண்ட்ராடிஃப், போர், புரட்சி, கண்டுபிடிப்பு முதலியவற்றையும், அவையோடு தொடர்புடைய பெரிய வாணிபச் சுழல்களையும் ஒரு பட்டியலில் வரிசைப்படுத்திக் காட்டுகிறார். பொருளாதாரக் காரணிகளோடு மட்டும் இந்நெடுஞ்சுழல்கள் தொடர்பு கொண்டிருக்கவில்லை; மாறாகச் சமூகப் பொருளாதார வரலாற்று நிகழ்ச்சிகளோடும் தொடர்பு கொண்டிருக்கின்றன என்று கோண்ட்ராடிஃப் வலியுறுத்துகிறார்.

அங்காடிச் சமநிலை, குறுங்காலச் சமநிலை, நெடுங்காலச் சமநிலை என்ற மார்ஷலின் விளக்கத்தை இவர் ஏற்றுக் கொள்கிறார். இவற்றை முதல்நிலைச் சமநிலை, இரண்டாம்நிலைச் சமநிலை மூன்றாம் நிலைச் சமநிலை, என்றிவர் அழைக்கிறார். மிக நெடுஞ்சுழல்கள் என்பவை மூன்றாம்நிலைச் சமநிலையைச் சுற்றி எழும் ஏற்ற இறக்கங்கள் என்பது இவரது கருத்து.

இவர் மேலும் கூறுகிறார்: மார்ஷலின் சமநிலைக்கருத்து (Equlibrium Concept) பொருளாதார நடைமுறையின் எல்லாக் கூறுகளுக்கும் பொருந்துகிறது. இக்கூறுகள் சமநிலையை அடைய முயல்கின்றபோது விலைகளைப் போன்று அடிக்கடி உயர்கின்றன, தாழ்கின்றன. 'அலையொத்த இவ்வேற்ற இறக்கங்கள் முதலாளித்துவத்திட்டத்தின் சமநிலை நிலையில் உண்டாகும் அமைதிக் கேடுகள்'.

நிலை முதல் (Fixed Capital) அடிக்கடி மறு முதலீடு செய்யப்படுவதன் காரணமாகவே வாணிபச் சுழல்கள் உண்டாகின்றன. 'அடிப்படை முதற்பொருட்களை (Basic Capital goods) பழுது பார்ப்பது, புதிதாக எடுத்துக்கொள்வது, அதிகப்படுத்துவது முதலியவை காரணமாகத்தான் மாநெடுஞ்சுழல்கள் உருவாகின்றன.' அடிப்படை முதற் பொருட்கள் என்பன யாவை? பெரிய தொழிற்சாலைகள். முக்கிய ரயில்பாதைகள், கால்வாய்கள், நில முன்னேற்றத் திட்டங்கள் முதலியவை அடிப்படை அல்லது ஆதார முதற்பொருட்கள்.

இவ்வடிப்படை முதற் பொருட்களின் அளிப்பை அதிகப்படுத்துவதும், இவற்றைப் புதிது புதிதாக வாங்குவதும் தொடர்ச்சியாக இடைவெளியின்றி நடைபெறும் காரியமன்று. இவற்றின் அளிப்பும் வாங்கற்பாடுகளும் சில நேரங்களில் மிதமாயிருக்கின்றன. இப்பொருட்களின் உற்பத்திப்போக்கில் ஏற்படும் மாறு

தல்களை நெடுங்கால வாணிபச் சுழல்கள் பிரதிபலிக்கின்றன. இவை மிகுதியாக உற்பத்தி செய்யப்படும் காலம் மாநெடுஞ்சுழலின் மேல் நோக்கிய வீச்சு நிலவும் காலமாகும். இவை குறைவாக உற்பத்தி செய்யப்படும் காலம் மாநெடுஞ்சுழலின் கீழ்நோக்கிய வீச்சு நிலவும் காலமாகும்.

மறு முதலீடு ஏன் தொடர்ச்சியாக இடைவெளியின்றிச் செய்யப்படுவதில்லை? அதாவது, அடிப்படை முதற் பொருட்களின் உற்பத்தி ஏன் எப்போதும் சீராக அதிகரித்துக் கொண்டே போவதில்லை? பேரளவில் கடன் முதல் கிடைப்பதாயிருந்தால் தான் முதலீடு செய்வது என்பது முடியும். மேலும், முதலீடு செய்வதற்கான நல்ல சாதகச் சூழ்நிலைகளும் இருக்கவேண்டும். பேரளவில் கடன் முதல் கிடைக்கின்ற வாய்ப்புகளும், முதலீட்டுச் சாதகமான நிலவரங்கள் காணப்படும் காலங்களும் அடிக்கடி கிடைப்பதில்லை. எப்போதாவது ஒரு முறைதான் இவை கிடைக்கின்றன. அப்போதுதான் மறுமுதலீடு செய்யப்படுகிறது. அதைத் தொடர்ந்து மாநெடுஞ்சுழலின் மேல் நோக்கிய வீச்சு உருவாகிறது.

எனவே, மாநெடுஞ்சுழலின் மேல் நோக்கிய வீச்சுத்துவங்க வேண்டும் என்றால், சேமிப்பு நாட்டம் (Prosperity to save) மிகவும் உயர்வாக இருத்தல் வேண்டும். குறைவான வட்டிவீதங்களில் கடன் முதல் தேவையான அளவுகளில் கிடைப்பதாக இருத்தல் வேண்டும். விலை குறைவாயிருந்து சேமிப்புச் செய்வதும், நெடுங்கால முதலீடு செய்வதும் எளிதாயிருத்தல் வேண்டும். இறுதியாகத் தொழில் முயல்வோர்களால் பயன் மிகுந்த வழிகளில் ஈடுபடுத்தப் பெறும் வகையில் கடன் முதல் அமைந்திருத்தல் வேண்டும். அதாவது, திரட்சியடைந்த கடன் நிதிகள் நீர்மை (Liquid) நிலையில் இருத்தல் வேண்டும். இந்நிபந்தனைகளனைத்தும் நிறைவேற்றப்பட்டால்தான் மாநெடுஞ்சுழலின் மேல்நோக்கிய வீச்சுத் தோன்றும். மேல்நோக்கிய வீச்சுத் தோன்றுதற்குக் கண்டுபிடிப்புகள் முதலியவை கூடக் காரணமாயிருக்கலாம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஒன்றுமட்டும் உறுதி: மேல் நோக்கிய வீச்சு மாநெடுஞ்சுழலில் உண்டாகும் போது அடிப்படை முதற் பொருட்களின் உற்பத்தி பெருகுகிறது. கீழ் நோக்கிய வீச்சு உண்டாகும்போது இப்பொருட்களின் உற்பத்தி சுணங்குகிறது, சுருங்குகிறது.

மாநெடுஞ்சுழலின் பெருக்க கட்டம், முதல் பற்றுக்குறை ஏற்பட்டு வட்டி வீதங்கள் உயர்கின்ற நிலையில் ஒரு முடிவிற்கு வருகிறது. சுழலின் மேல் மட்டத் திருப்பு முனை (Upper turning point)

இதுவே என்று கோண்ட்ராடிஃப் எழுதுகிறார். ஆனால், கீழ்மட்டத் திருப்புமுனை (Lower turning point) பற்றிய குறிப்புகளோ அல்லது மந்தத்திலிருந்து பொருளாதாரம் பெருக்க கட்டத்திற்குச் சென்றிடுவதற்கான காரணங்களைப் பற்றிய விரிவான விளக்கமோ இவரது நூல்களில் காணப்படவில்லை.

1780 முதல் 1920 வரையிலான காலப்பகுதியில் $2\frac{1}{2}$ மாநெடுஞ்சுழல்கள் இருந்தன என்றும், இவற்றின் சராசரிக் கால நீட்சி 50 ஆண்டுகள் என்றும் கோண்ட்ராடிஃப் கூறுகிறார். ஃபிரான்சு மற்றும் இங்கிலாந்து நாட்டின் வாணிபப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இவர் இம் முடிவுகளுக்கு வருகிறார்.

இரண்டாம் பாகம்

வாணிபச்சுழல் கோட்பாடுகள்

Theories of Trade Cycles

முன்னுரை

பொருளாதார அமைப்பின் எல்லாப்பகுதிகளையும் ஒருங்கே தீண்டி நிற்பதாயுள்ள வாணிபச் சுழல் என்றதொரு சிக்கல் நிரம்பிய நிகழ்ச்சியை ஒரு தனிப்பட்ட காரணியை மட்டும் அடிப் படையாகக்கொண்டு விளக்குவது இயலாது. ஒரே ஒரு காரணத் தால் சுழல் ஏற்படுகிறது என்று சில எழுத்தாளர்கள் கருது கின்றனர். இக்கருத்திற்குத் தற்போது போதிய ஆதரவு கிடை யாது. 'ஒரே ஒரு காரணத்தால் வாணிபச் சுழல் ஏற்படுகிறது என்ற அடிப்படையிலான விளக்கங்கள் மதிப்பிழந்து விட்டன: இவை சற்று ஐய உணர்வோடு அணுகப்படவேண்டும்' (ஹாபர்லர்). பெரும்பாலான நவீன எழுத்தாளர்கள், பல காரணிகள் ஒன்று சேர்ந்து வாணிபச் சுழல்களைத் தோற்றுவிக்கின்றன என்றே நம்பு கின்றனர். இவர்களால் சுட்டிக்காட்டப்படும் காரணிகளுக் கிடையே பெருத்த வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை; மாறாகக் காரணிகளின் மீது செலுத்தப்படும் முக்கியத்துவத்தின் அளவுதான் வேறுபடுகிறது. ஒரே ஒரு காரணியால் சுழல் ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன என்று அறிவிப்போர்கூட—உதாரண மாக, அறுவடை மாறுதல்கள் அல்லது கண்டுபிடிப்புகள் அல்லது வழிவந்த தேவை (Derived demand) அல்லது வேக வளர்ச்சி (Acceleration) முதலியவற்றில் ஏதாவது ஒன்றினை வலியுறுத்து வோர் கூட அக்காரணியால் சுழல் விளைய வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட வகையான பொருளாதார அமைப்புச்சுழல் இருந்தே யாகவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கின்றனர். தொடக்கக் காரணி எதுவாயிருப்பினும், முதலீட்டாளரின் போக்கு, பணவியல் அமைப்பு, தொழில் முயல்வோர்களின் மன நிலை முதலியவை ஒரு குறிப்பிட்ட வகையில் அமைவதாயிருந்தால்தான் வாணிபச்சுழல் கள் தோன்ற முடியும் என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவே செய்கின்றனர்.

சுழலுக்கான காரணிகளைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். *(1)* செய்வினை (Active) க் காரணிகள், செயப்பாட்டு (Passive)க் காரணிகள் எனப் பிரிக்கப்படலாம், கண்டுபிடிப்புகள், அறுவடை மாறுதல்கள், தேவை மாற்றங்கள் முதலியவை செய்வினைக் காரணிகள். அமைப்புச் சூழ்நிலைகள் (Institutional Cricumstanccs) செயப்பாட்டுக் காரணிகளாகும். ஆனால் இவை இரண்டுக்கு மிடையே வேறுபாட்டைக் காண்பது பல நேரங்களில் சிரமமாயி ருக்கிறது

(2) கட்டுப்பாடு (Controllable) காரணிகள் கட்டுப்படா (Uncontrollable) காரணிகள் என்று பிரிக்கலாம். வானிலை யானது கட்டுப்படாக்காரணி. கண்டு பிடிப்புகள் மற்றும் அமைப் புக்காரணிகள் கொள்கையளவில் கட்டுப்படு காரணிகள்.

(3) அகக்காரணிகள். புறக்காரணிகள் என்றும் பிரிக்கலாம். பொருளாதார அமைப்பினுள்ளிருந்து பிறப்பவை அகக்காரணிகள். வெளியிலிருந்து வருபவை புறக்காரணிகள். தேவை மாறுதல் களால் உண்டாகும் உற்பத்தி மாறுதல்கள், செலவு உயர்வதனல் விலைமாற்றங்கள், நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை மாறுவத னல் முதற் கருவிப் பொருட்களுக்கான தேவையில் உருவாகும் மாறுதல்கள் முதலியவை அகக்காரணிகள். போர், கண்டுபிடிப்பு .கள், அறுவடை மாறுதல்கள் முதலியவை புறக்காரணிகள்.

வாணிபச் சுழல்களுக்கான காரணங்களைப் பற்றிய விளக் கத்தை வாணிபச்சுழல் கோட்பாடுகள் நமக்கு வழங்குகின்றன. வாணிபச் சுழல் மீது இவை தம்மாலியன்ற ஒளியைப் பாய்ச்சு கின்றன. வாணிப மாறுல்களைப்பற்றி மேலும் புரிந்து கொள்வதற் குரிய வாய்ப்புகள் இதனல் உருவாகின்றன. காலவரிசைப்படி இக்கோட்பாடுகள் இங்கே அடுக்கப்படவில்லை. முக்கியமானவை என்று கருதப்படும் கோட்பாடுகள் இனித் தொடர்கின்றன.

ஒவ்வொரு கோட்பாடும் வாணிபச்சுழலை விளக்கும் போது பின்வரும் அம்சங்களை விளக்கவேண்டும்.

1. நேல்நோக்கிய வீச்சு, அதாவது ஏறுமுகம் (Upswing) அல்லது செழிப்பு (Prosperity).

2. மேல்மட்டத் திருப்புமுனை, அதாவது உச்சித்திருப்பம் (Upper turning point) அல்லது நெருக்கடி (Crisis).

3. கீழ்நோக்கிய வீச்சு, அதாவது இறங்குமுகம் (Down Swing) அல்லது மந்தம் (Depression).

4. கீழ்த்திருப்பம் (Lower turning point) அல்லது மீட்சி (Revival).

5. சுழலாகவும், திரும்பத் திரும்பவும் நிகழக் காரணம், ஒரு கோட்பாட்டின் சிறப்பு இந்த ஐந்து அம்சங்களையும் தக்க சான்றுடன் விளக்குவதைப் பொறுத்தது.

6. பணச் சார்பான கோட்பாடு

(Monetary Theory of the Trade Cycles)

"பத்தாயிரத்தில் ஒரு நபருக்குத்தான் செலாவணிப் பிரச்சினை புரிகிறது."

— கின் ஹப்பார்டு.

இங்கிலாந்து நாட்டின் பொருளாதார அறிஞர் திரு. ஆர். ஜி. ஹாட்ரி (R. G. Hawtrey) வாணிபச் சுழலுக்கு ஒரு பணச்சார்பான கோட்பாட்டினை வழங்கியிருக்கிறார். வாணிபச்சுழல் பற்றிய அவரது பணவியல் கோட்பாடு, 'சிறந்த வாணிபம், மந்த வாணிபம்' (Good and Bad Trade), 'வாணிபமும் கடனும்' (Trade and Credit), 'வாணிப மந்தமும் அதற்கான வழிமுறையும்', 'மத்திய பாங்குகளை' (The Art of Central Banking) முதலிய அவரது புகழ் வாய்ந்த நூல்களில் காணப்படுகிறது. வாணிபச்சுழல் என்பது முற்றிலும் பணச்சார்பான ஒரு நிகழ்ச்சி என்று அவர் கூறுகிறார். ஏனெனில், பொருளாதார நடவடிக்கையின் ஏற்ற இறக்கங்களுக்கும், செழிப்பும் மந்தமும், சிறந்த வாணிபமும் மந்த வாணிபமும் மாறி மாறி வருவதற்கும் மூலகாரணம் பணத்தின் ஒழுகியக்கம் அல்லது ஓட்டத்தில் (flow of money) ஏற்படும் மாறுதல்களே என அவர் கருதுகிறார். "வாணிபச்சுழலுக்கு அடிப்படைக் காரணம் பயன்படுதேவையின் மாறுதல்கள். இவை பாங்குக் கடன் மாறுதல்களால் விளைகின்றன." எனவே, வாணிபச்சுழல் என்பது ஒரு பணத்துறை நிகழ்ச்சியே என்றிவர் வாதிடுகிறார்.

சில முக்கியக் கருத்துக்கள்

திரு. ஹாட்ரியின் கோட்பாட்டினைச் சற்று விரிவாகக் காண்பதற்கு முன்னால் சில முக்கியக் கருத்துக்களுக்கு அவர் அளித்துள்ள இலக்கணங்களின் மீது நமது பார்வையைத் திருப்புவது அவசியமாகிறது.

(a) நுகர்வோர் வருமானம் (Consumers' income) என்பது நுகர்வோர் பண வருமானங்களின் மொத்தத் தொகை. இது நாட்டு வருமானத்திற்குச் சமமானதாயிருக்கிறது.

(b) நுகர்வோர் செலவீடு (Consumers' outlay) என்பது வருமானத்திலிருந்து செய்யப்படும் முதலீடு உட்பட்ட எல்லாப் பணச் செலுத்துகைகளும் ஆகும். நுகர்வோர் செலவீடு மிகவும் முக்கியமானதொன்ருகும்; ஏனெனில் இதுதான் பயன்படுதேவையினை உருவாக்குகிறது.

(c ரொக்க இருப்புகள் (Cash Balances) என்பவை சமுதாயத்திடம் உள்ள ரொக்கம் மற்றும் பாங்கு டெபாசிட்டுகள். இவை நுகர்வோர், வணிகர் முதலியோரின் மொத்த இருப்புகளாகும்.

மொத்த ரொக்க இருப்புகள் = செலவிடப்படா இறுதிநிலை (Unspent margin) = சமுதாயத்தின் மொத்தப் பண அளிப்பு, பாங்குக்கடன் கூடுதலாவதாகவோ, குறைவாகவோ அல்லது தங்கம் இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படுவதாகவோ இருந்தாலன்றி இந்த மொத்தத் தொகை மாற்றப்படுவதற்கில்லை.

(d) புழக்க வேகம் (Velocity of Circulation) என்பது (இங்கே வருமானப் புழக்கவேகம்) ஒரு குறிப்பிட்ட காலத்தில் நுகர்வோர் செலவீட்டிற்கும் ரொக்க இருப்பிற்கும் உள்ள வீதத் தொடர் (Ratio).

இனி ஹாட்ரியின் கோட்பாட்டிற்கு வருவோம். பண்டங்களுக்கான தேவை பண உருவில் வளர்கின்றபோது வாணிபம் சுறுசுறுப்படைகிறது. உற்பத்தி பெருகுகிறது. விலைகள் உயர்கின்றன. தேவை தாழ்கின்றபோது வாணிபம் சுணங்குகிறது விலைகள் தாழ்கின்றன. பணத்தின் ஓட்டம் — அதாவது பண்டங்களுக்குப் பண உருவில் உள்ள தேவை — நுகர்வோர் செலவீட்டினுல் நிா்ணயிக்கப்படுகிறது. நுகர்ச்சிப் பண்டங்கள் மீதான செலவீட்டுத் தொகையே அல்லாது, புதிய முதலீட்டுப் பொருட்கள் (Investment goods) மீதான செலவீட்டுத் தொகையும் நுகர் செலவீட்டில் அடங்கும்.

பணத்துறை காரணிகள் அல்லாத நில நடுக்கங்கள், போர்கள், வேலை நிறுத்தங்கள், தானிய அழிவுகள், முதலியவற்ருல் ஒரு பொது வறுமை தோன்றலாம். அவ்வாறே, அறுவடை மாறுதல்கள், சில தொழில்களின் அபரிமித வளர்ச்சிகள் முதலியவற்ருல் தொழிலின் குறிப்பிட்ட சில பிரிவுகளில் பகுதியளவான (Partial)

மந்தம் உண்டாகலாம். ஆனால், வாணிபச்சுழலின் ஒரு கட்டமான மந்தத்தைப் பணச்சார்பற்ற காரணிகளால் தோற்றுவிப்பது என்பது முடியாது.

நுகர்வோர் செலவீட்டில் ஏற்படும் மாறுதல்கள் பணத் தொகை அல்லது பணக்கணியத்தில் (Quantity of money) தோன்றும் மாறுதல்களால் விளைவன. பணக்கணியத்தில் உண் டாகும் ஒரு திடீர்க் குறைவினால் — பண வாட்டத்தால் (Deflation) பொருளாதார நடவடிக்கைகள் சுணங்குகின்றன என்பது பணக் கணியத்தில் தோன்றும் ஓர் அதிகரிப்பில் — பண வீக்கத்தால் (Inflation) — பொருளாதார நடவடிக்கைகள் செழிப்படை கின்றன என்பதும் யாவரும் அறிந்ததே. பணத்தின் தொகை குறைந்தால் தேவை தாழ்கிறது. அப்போது வழக்கமான பிற் காலத் தேவைகளை உத்தேசித்துப் பண்டங்களை உற்பத்தி செய் துள்ள உற்பத்தியாளர்களால் தாம் எதிர்பார்த்த விலைகளில் பண் டங்களை விற்பனை செய்ய முடியாமற் போகிறது. இருப்புகள் (Stocks) குவிகின்றன. இழப்புகள் மலிகின்றன. உற்பத்தி தளர் கிறது. வேலை வாய்ப்பின்மை வளர்கிறது. கூலிகளும் மற்ற வரு மானங்களும் குறைகின்றன. பண வீக்கத்தின் போது இதற்கு முற்றிலும் நேர்மாறானவை நிகழ்கின்றன. எதிர்பார்த்த அளவிற் கும் மிகுதியாகத் தேவை கூடுகிறது. இருப்புகள் குறைகின்றன. உற்பத்தியாளரை நோக்கி விற்பனையாளர்கள் ஓடி வருகின்றனர். விலைகள் மேல்நோக்கிப் பாய்கின்றன. இலாபங்கள் அதிகரிக் கின்றன. உற்பத்தி பெருகுகிறது. வேலை வாய்ப்பின்மை குறை கிறது.

இவைதான் பணவீக்கம் அல்லது பண வாட்டத்தின் வழக்க மான விளைவுகள். "ஹாட்ரியைப் பொறுத்தவரையில் வாணிபச் சுழல் என்பது தீர்க்கமான பணவீக்கம், பணவாட்டம் என்பதன் ஒரு சிற்றளவு உருவ நேர்படி (Replica)." புழக்கத்தில் உள்ள பணத்தொகை குறையும்போது நுகர்வோர் செலவீடு குறைந்து மந்தம் உருவாகிறது. பணத்தின் புழக்கவேகம் குறைந்தால் மந்தம் இன்னும் சற்றுத் தீவிரமடைகிறது. அடுத்துப் புழக்கத் தில் உள்ள பணக்கணியம் கூடுகின்றபோது நுகர்வோர் செலவீடு அதிகரித்துச் செழிப்பு நிலை தோன்றுகிறது. பணத்தின் புழக்க வேகம் சூடு பிடித்தால் செழிப்பு நிலை மேலும் அழுத்தமடைகிறது. பணத்தின் ஓட்டம் உறுதிநிலைப்படுத்தப்பட முடியுமென்றால், பொருளாதார நடவடிக்கையின் ஏற்ற இறக்கங்கள் மறைந்து விடும். ஆனால், பணத்தின் ஓட்டத்தை உறுதிநிலைப்படுத்துவது

என்பது எளிதான செயலன்று. ஏனெனில், நமது நவீன, பணம் மற்றும் கடன் அமைப்பானது உண்மையில் உறுதிநிலைப்பாடற்ற தாயிருக்கிறது.

நவீன உலகில் பாங்குக் கடனே (Bank Credit) பிரதானமான செலுத்துச் சாதனமாயிருக்கிறது என்று ஹாட்ரி கருதுகிருர். இவ்வெடுகோளை (Assumption) அடிப்படையாகக்கொண்டு அவரது விளக்கம் துவங்குகிறது. சட்டச் செலாவணி (Legal Tender) ஒரு துணைக்கருவியாக மட்டுமே அவருக்குப் படுகிறது கடன் பணத்தை உற்பத்தி செய்வதும் கட்டுப்படுத்துவதும் பாங்கு அமைப்பு, கழிவு வீதங்களை (Discount rates) மாற்றுதல், வெளி அங்காடியில் பங்கு களை வாங்குதல், விற்றல் முதலியவை மூலம் கடன் பணம் கட்டுப் படுத்தப்படுகிறது. கடன் பணத்தைப் பெருக்குவதற்கான உரிமை பொதுவாக ஒவ்வொரு தனிப்பட்ட பாங்கிடமும் இருக் கிறது. ஒரு தனிப்பட்ட பாங்கினுல் ஓர் அளவிற்குமேல் கடனைப் பெருக்க முடியாது. ஆனுல், பாங்கு அமைப்பு முழுவதுமாக முயன்ருல், இது படிப்படியாகச் செய்யப்படமுடியும். ஒரு பாங்கு அல்லது பாங்குத் தொகுதி கடன் அளவை அதிகப்படுத்திஞல், மற்றப் பாங்குகளின் இருப்புகள் வலிவடைகின்றன. எனவே, இவைகளும் கூடக் கடன் அளவை அதிகப்படுத்துவதாயிருக்கலாம். இவ்வாருக ஒரு தனி பாங்கோ அல்லது பாங்குகளின் தொகுதியோ மற்றப் பாங்குகளையும் தம்மைப்போன்று செயல்பட வைப்பதுண்டு.

வாணிபச் சுழலின் பல்வேறு கட்டங்கள் எவ்வாறு தோன்று கின்றன என்பதைப் பற்றிய ஹாட்ரியின் விளக்கம் இனி ஆரம்பிக் கிறது.

செழிப்புக் கட்டம்

பாங்குக் கடன் செலாவணிப் பெருக்கம் (Credit Expansion) அடையும்போது வாணிபச் சுழலின் செழிப்புக்கட்டம் துவங்கு கிறது. கடன் பணம் பெருகிச்செல்லும் காலப்பகுதி முழுவதும் வாணிபத்தில் செழிப்பு நிலை காணப்படும். வாடிக்கைக்காரர் களுக்குக் கடன் கொடுப்பதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படு கின்றபோது கடன் பண அளவு பெருக்கமடைகிறது. பாங்குக் கடன்கள் வாங்கப்படுவது பல வழிகளில் ஊக்குவிக்கப்படலாம். கடன் வாங்குவதற்காகத் தரப்படும் ஈடுகளின் தரங்களைச் சற்று விசாலமான கண்ணேட்டத்துடன் பரிசீலிப்பது, கடன்களின் காலப்பகுதிகளை நீட்டிவைப்பது, கடன் வாங்கப்படுவதற்கான குறிக்கோள்களைப்பற்றிய கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது என்பன

போன்றவைகளைப் பாங்குகள் கடைப்பிடித்தால் வாடிக்கைக்காரர்கள் கடன்களை நிறைய வாங்குவர். எனினும், பாங்குக்கடன் அளவை அதிகப்படுத்துவதற்கான ஒரு முக்கிய வழி மத்திய பாங்கு தன் கழிவு வீதத்தைக் (Discount rate) குறைப்பதேயாம்.

பாங்குக் கடன்களின் மீதான வட்டி வீதத்தை ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் குறைப்பது என்பது ஒரு சராசரி வர்த்தகனின் இலாப-நஷ்டக் கணக்கில் பெரிய மாறுதல் எதனையும் செய்து விடுவதற்கில்லை என்று பலர் நினைக்கலாம். ஆனால், வியாபாரிகளாக (Merchants) இருப்பவர்கள், வட்டி வீதத்தில் தோன்றும் நுண்ணிய மாறுதல்களுக்கேற்பத் தங்களின் வர்த்தக நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதாயிருக்கின்றனர். இது ஹாட்ரியின் உறுதியான நம்பிக்கை, வட்டி வீதத்தில் உண்டாகும் ஒன்று அல்லது இரண்டு சதவிகித மாறுதல்கள் உற்பத்தியாளர்களைப் பொறுத்த வரையில் முக்கிய மற்றதாயிருக்கலாம். ஆனால், வியாபாரிகளைப் பொறுத்த வரையில் இது நிச்சயமாக முக்கியமானதாயிருக்கிறது அதே நேரத்தில், வட்டி வீத மாறுதல்களையேயன்றி வேறு பல காரணங்களாலும் வியாபாரிகள் பாங்குகளிடமிருந்து கடன்களைக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ வாங்குவதாகவும், பண்டங்களின் இருப்புகளை அதிகப்படுத்துவதாகவோ அல்லது குறைப்பதாகவோ இருக்கக் கூடும் என்பதையும் அவர் மறுக்கவில்லை.

வட்டி வீதம் போதிய அளவில் குறைக்கப்படுமானால் (சாதாரணமாக ஒரு அற்ப குறைப்பே போதுமானது) வியாபாரிகள் தங்களுடைய பண்டங்களின் இருப்புகளைக் கூடுதலாகத் தருமாறு உற்பத்தியாளர்களைக் கேட்டுக் கொள்வர். உற்பத்தி உடனே அதிகரிக்கிறது. இதனால் நுகர்வோர் வருமானமும் செலவீடும் கூடுகின்றன. "இதன் குறிப்பு, தேவை பெருத்துவிட்டது என்பதாகும். ஆகவே, வியாபாரிகளின் இருப்புகள் குறைகின்றன. உற்பத்தியைப் பெருக்குமாறு உற்பத்தியாளர்களிடம் அடுத்தடுத்துக் கோரிக்கைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. உற்பத்தி நடவடிக்கை, நுகர்வோர் வருமானம், செலவீடு, தேவை முதலியவை மேலும் பெருகிட, இருப்புகள் மேலும் குறைகின்றன. அதிகப்படியான நடவடிக்கை என்றால் அதிகப்படியான தேவை என்று பொருள்; அதிகப்படியான தேவை என்றால் அதிகப்படியான நடவடிக்கை என்று பொருள். இவ்வாறாக, ஒரு நச்சுச்சுழல் உருவெடுக்கிறது — பொருளாதார நடவடிக்கையில் செழிப்பு நிலை மேன்மேலும் தீவிரமடைந்துகொண்டே போகிறது." இதனை மேலும் வளர்த்து உரமேற்றிக் கொண்டுபோவது பாங்குக்கடன் செலாவணிப் பெருக்கம்.

உற்பத்தி நடவடிக்கையால் ஓர் அளவிற்கு மேலாகப் பெருக முடிவதில்லை. ஒவ்வொரு தொழிலும் தத்தம் உற்பத்தியாற்றல் எல்லைகளைத் தொட்டு நிற்கின்றபோது, உற்பத்தியாளர்கள் தங்களின் பண்டங்களுக்குக் கூடுதலான விலைகளைக் கூறவாரம்பிக்கின்றனர். விலைகள் உயர்கின்றபோது வியாபாரிகள் கூடுதலான கடன்களைப் பாங்குகளிடமிருந்து பெறுவர். வட்டிவீதங்கள் தாழ்கின்ற போது எவை எவை நிகழ்கின்றனவோ அவையனைத்தும் விலைகள் உயர்கின்றபோதும் இலாபங்கள் கூடுகின்றன; எனவே, விலையேற்றத்தைப் பயன்படுத்தி நன்மையடையும் எண்ணத்தில் வியாபாரிகள் தங்கள் பண்டங்களின் இருப்புகளை அதிகப்படுத்திக் கொள்கின்றனர்; அவ்வாறே உற்பத்தியாளரும் பாங்குக் கடன்களை மிகுதியாகப் பெற்று உற்பத்திப் பருமனை விரிவுபடுத்துகின்றனர். உற்பத்தி பெருக, வருமானம் உயர, பயன்படு தேவை அதிகரிக்க, செழிப்பின் அடுத்தடுத்த போக்கு விலைகளின் அடுத்தடுத்த ஏற்றத்தினால் துரிதமும் வலிவுமடைகிறது.

செலாவணிப் (Criculating medium) பெருக்கமேயல்லாது, அதன் புழக்க வேகத்தின் (Velocity of Circulation) அதிகரிப்பாலும் செழிப்பு நிலை வலிவு பெறும். விலைகள் உயர்ந்து, வாணிபமும் எழுச்சியடைகின்றபோது வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் பாங்குக் கடன்களைக் கூடுதலாக வாங்குவதோடு மட்டும் நிற்பதில்லை. தங்களிடம் உள்ள செயலற்ற, முடங்கிய (Idle) இருப்புகளையும் பயன்படுத்தலாகின்றனர் முந்திய மந்தத்தின்போது பெறப்பட்டவை இந்த முடங்கிய இருப்புகள். இவை மிகவும் அதிகமாயிருப்பின் பாங்குக் கடன் செலாவணியின் அதிகரிப்பு ஏதும் இல்லாமலேயே கூட நுகர்வோர் வருமானமும் முதலீடும் அதிகரிக்கும். இவ்வாறாகப் ''புழக்க வேகத்தின் நிலைப்பாடற்ற தன்மை'' என்ற ஒரு தத்துவமிருக்கிறது; அது ''பாங்குக்கடன் செலாவணியின் நிலைப்பாடற்ற வன்மை'' என்ற தத்துவத்திலிருந்து வேறுபட்டது. ஆனால், பின்னதின் விளைவினை முன்னையது மேலும் பெரிதுபடுத்துகிறது.

சுருங்கக் கூறின், படிப்படியாகத் திரண்டு வளர்கிற போக்குச் செழிப்பிடம் காணப்படுகிறது. துவக்கமடைந்து விட்டால் அது பின்னர்த் தானாகவே மேன்மேலும் தீவிரமாய்ச் செல்கிறது. செழிப்பைக்கட்டுப்படுத்தி, கொடிய பண வீக்கமாக உருவெடுக்காதிருக்கச் செய்யவேண்டிய பொறுப்பு பாங்குகளைச் சாரும். அவசியமேற்படும்போது பாங்குகள் வட்டி வீதங்களை மிகுதியாக உயர்த்த முன் வரவேண்டும். விலைகள் உயரும் போதும் இன்னும் சற்று

உயரும் என்று எதிர்பார்க்கப்படும் போதும் சாதாரண (வட்டி வீத) இறக்கங்களால் கடன் வாங்குவது குறைக்கப்படுவதில்லை. எனவே, வட்டி வீதங்களைப் பெருமளவில் குறைத்து நிலைமையைச் சீர்ப்படுத்துவதில் பாங்குகள் ஈடுபடவேண்டியது அவசியம். துவக்கத்தில் எந்த ஒரு கழிவு வீதத்தால் செழிப்பைக் கட்டுப்படுத்த முடியுமோ, அதே கழிவு வீதத்தால் செழிப்புக் கட்டுக்கடங்காமல் போகும்போது கட்டுப்படுத்த முடியாது.

உச்சித் திருப்பம் (Upper Turning Point)

பண வருமானமும் செலவீடும் அதிகரித்து உற்பத்தியுளவை அதிகரிப்பது பாங்குகள் கடன் பணத் தொகையைப் பெருக்கி வருமானத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கின்ற வரை நீடிக்கும். பரிவர்த்தனைகளின் பணமதிப்பு அதிகரித்துக்கொண்டும், நுகர்வோரின் வருமானமும் மற்றும் செலவீடும் பெருகிக்கொண்டுமிருக்கும்போது பாங்குகளிடமிருந்து மிகுதியான ரொக்கம் கடன் உருவில் துரிதமாக வெளியே வந்து பழக்கத்தில் கலக்கிறது. நுகர்வோர்கள் தங்களிடம் நிறையப் பணம் இருக்கவேண்டும் என்று விழைகின்றனர். வியாபாரிகளும் தங்கள் கல்லாப் பெட்டிகளில் ரொக்கம் அதிகமாயிருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். சம்பளங்களைக் கொடுக்கப் பணம் மிகுதியாகத் தேவைப்படுகிறது. இவர்கள் பாங்குகளின் உதவிகளை நாடுகின்றனர். பாங்குக்கடன் பணத்தொகை மேலும் பெருகுகிறது. பொறுப்புகள் மிகுதியாகிக் கொண்டிருக்கும் நிலையில் பணம் இவ்வாறு பாங்குகளிடமிருந்து வெளியேறிச் செல்வதனால் பாங்குகளின் இருப்பு அல்லது ஒதுக்கீடு விகிதங்கள் (Reserve ratios) இடர்ப்படுகின்றன. தங்களின் இருப்புகள் அளவு குறைவதைக் காணும் பாங்குகள் கழிவு வீதங்களை உயர்த்துவதன் மூலம் கடன் கொடுக்கும் அளவைக் குறைக்கின்றன.

கழிவு வீதங்களை உயர்த்துவது என்பது துரதிருஷ்டவசமாக ஒரு காலந்தாழ்த்திய நடவடிக்கையாக இருந்து விடுகிறது. முன்பேயே இப்பாங்குகள் கழிவு வீதங்களைப் போதிய அளவிற்கு உயர்த்தியிருந்தால் செழிப்பினை ஒரு வரம்பிற்குள் கட்டுப்படுத்த முடிந்திருக்கும். ஆனால் தமது விழிகளை இவை ஒதுக்கீடு விகிதங்கள் மீது வைத்திருந்தமையால் காலங்கடந்த பிறகுதான் இந்நடவடிக்கையை எடுக்க முடிகிறது. செழிப்புக் காலப்பகுதியில் நிகழும் ஒரு கடைசி மாறுதலே இருப்புகள் குறைவது. கடன் பணத்தொகை கூடுவது, நுகர்வோர் வருமானம் மற்றும் செலவீடு அதிகரிப்பது, இறுதியில் பாங்குகளின் இருப்பு குறைவது—இது

செழிப்பின்போது நடைபெறும் நிகழ்ச்சித் தொடர். ஆகவே, பாங்குகள் சிலிர்த்தெழுந்து செயல்படுவது என்பது இறுதிக் கட்டத்தில்தான் நிகழ்கிறது. அதற்குள் செழிப்பு கட்டுக்கடங்கா மல் சென்று விடுகிறது.

மேற்கண்டவாறு பாங்குக்கடன் பணத்தின் பெருக்கம் நிறுத் தப்படும்போது செழிப்பு நிலை முடிவடைகிறது. ஒரு குறிப்பிட்ட வேகத்தையும் வளர்ச்சியையும் பெற்றுவிட்ட பிறகு செழிப்பைத் தடைபடுத்துவதனுல் பொருளாதார நடவடிக்கை திடீரென்று பாதிக்கப்படுகிறது. செழிப்புக்கு முற்றிலும் நேர்மாருன சூழ்நிலை உருவாகிறது—மந்தம் வாணிபத்தில் நுழைந்து விடுகிறது. பாங் குக்கடன் செலாவணிப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படவில்லை யென்ருல், வாணிபச் சுழலின் செழிப்புக்கட்டம் காலவரையறை யின்றி நீடிப்பதாயிருக்கலாம். ஆனுல், அப்போது விலைகள் எல்லை யின்றி உயர்வாயிருக்கும்.

கீழ்நோக்கிய வீச்சு அல்லது இறங்குமுகம்

(Down Swing)

கடன் வாங்குவதைப் பாங்குகள் கட்டுப்படுத்துவதாலும், வட்டி வீதங்கள் உயர்த்தப்படுவதாலும், பண்டங்களின் இருப்பு களை அதிகப்படுத்துவதில் முதலீடு செய்வதற்கான ஊக்கம் வியா பாரிகளிடம் இல்லாது போகிறது. பாங்குக்கடன் பணத்தொகை குறைந்து, செழிப்பு நிலை சுணங்கி மந்தம் துவங்கியதற்குப் பின்னர் விலைகள் தாழ்ந்து கொண்டே போகின்றன. எனவே, வியாபாரி கள் தங்களது பண்ட இருப்புவைப்புகளைக் குறைத்துக் கொள்ள வாரம்பிக்கின்றனர். குறைவான அளவுகளில் பண்டங்களை அனுப்பினுல் போதும் என்று உற்பத்தியாளர்களைக் கேட்டுக் கொள்ளத் துவங்குகின்றனர். சில வியாபாரிகள் உற்பத்தியாளரி டம் போகாமலே கூட இருந்து விடுகின்றனர். இதனுல் உற்பத்தி சுருங்குகிறது. உற்பத்தியாளர் நடவடிக்கைகள் சோர்வுறுகின்றன. நுகர்வோர் வருமானம் தாழ்கிறது. அவரது செலவீடும் குறை கிறது. அதோடுகூடப் பயன்படுதேவையும் சரிந்து போகிறது. தங்களிடம் பண்ட இருப்புக்கள் தங்கிவிடுவதைக்காணும் வியா பாரிகள் இருப்புகளை மேலும் வாங்குவதைக் குறைத்துக் கொள் கின்றனர். பலர் தமது கடன்களை அடைக்கத் துவங்குகின்றனர். அப்போது மொத்தப் பணத்தின் கணீஸம் குறைகிறது. இக் காரணங்களின் விளைவாக விலைமட்டம் தாழ்கிறது; கூடவே இலாபமும் குறைகிறது.

இந்நிலையில் விலைகள் மேலும் குறையலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. ஆகவே, மக்கள் கையிலிருக்கும் பண இருப்பு களுங் கூடச் செலவழிச்கப்படுவதில்லை. இதனுல் பணப்புழக்க வேகம் குறைகிறது. விலைகள் மேலும் தாழ்கின்றன. உற்பத்தி யின் பணமதிப்புக் குறைகின்றபோது அவ்வுற்பத்திக்குத் தேவைப் படும் கடன் பணத்தொகையும் குறைகிறது. எனவே, கடன் வாங்குவது மேலும் தவிர்க்கப்படுகிறது. சுருங்கக்கூறின், பண்டங்களுக்கான பயன்படுதேவை நொறுங்கிப்போகிறது. செழிப்பு நிலையை உருவாக்கிவிட்ட சக்திகளனைத்தும் தற்போது மந்தத் தைத் தீவிரப்படுத்துவதில் தீவிரமாயிருக்கின்றன. செழிப்பின் போது காணப்பட்ட ஒரு ஏறுமுக நச்சுச்சுழல் போல மந்தத்தின் போதும் ஒரு கீழ்நோக்கிய அல்லது இறங்குமுக நச்சுச்சுழல் காணப் படுகிறது.

மீட்சி (Revival)

மந்தத்தை ஒரு முடிவிற்குக் கொண்டுவரக்கூடிய சக்திகள் மந்தத்திலிருந்து மெல்ல உயிர்பெற்றெழுகின்றன. மந்தமும் மேன்மேலும் வளர்கின்றபோது, வாணிபமும் விலைகளும் சரிந்து கிடக்கின்றபோது, ரொக்கப் பணத்தைக் கையில் வைத்திருப்ப தால் பயன் ஏதுமில்லை என்று வியாபாரிகள் கருதுகின்றனர். ஆகவே, தங்களின் கடன்களை அடைக்க முன்வருகின்றனர். முதலில் வியாபாரிகள், பிறகு வர்த்தகர்கள், அடுத்து நுகர்வோர் கள் என்று ஒவ்வொரு பிரிவினரும் பாங்குகளிடம் கடன்களைத் திருப்பிக்கொடுக்க ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு புழக்கத்தி லுள்ள பணம் பாங்குகளிடம் வந்து சேர்வதனுல், பாங்குகளின் இருப்பு விகிதங்கள் உயர்கின்றன. அப்போது, கடன் கொடுப் பதில் சற்றுத் தாரளமாக நடந்துகொள்ள பாங்குகள் இசைவு தெரிவிக்கின்றன. வட்டி வீதங்கள் சற்றுத் தாழ்கின்றன. வட்டி வீதங்கள் தாழ்வதைக்காணும் வியாபாரிகள், முதலீடு செய்வது இலாபகரமானதாயிருக்கும் என்று எண்ணி, தமது இருப்புகளை அதிகப்படுத்திக் கொள்ள முயலுகின்றனர். அப்போது உற்பத்தி யளவைப் பெருக்க வேண்டியது உற்பத்தியாளர்களுக்கு அவசிய மாகிறது. உற்பத்தி பெருகும் நிலையில் மீட்சி வாணிபத்தில் மெல்ல அடியெடுத்துவைக்கிறது. உற்பத்தி பெருக, நுகர்வோர் வருமானம் உயர, செலவீடு அதிகரிக்க, பயன்படுதேவை வளர, விலை உயர, இலாபம் பெருக, மறுபடியும் உற்பத்தி பெருக—இவ் வாறுகச் செழிப்புக்கட்டம் வலுப்பெறுகிறது.

ஆனுல், கொடிய மந்தங்களின் போது பூஜ்யத்திற்கு மேலாக இருக்கின்ற எந்த ஒரு வட்டி வீதத்தாலும் கடன் வாங்குமாறு வியாபாரிகளைத் தூண்ட முடியாது போய்விடலாம். அப்போது என்ன செய்வது? வெளி அங்காடியில் பங்குகளை வாங்குவதன் மூலம் மத்திய பாங்கு நிலைமையை ஓரளவிற்குச் சமாளிக்கலாம். கழிவுக் கொள்கை, வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open market operation) முதலிய சாதாரண பாங்கு வழிமுறைகள் மூலம் மீட்சியை அரும்பிடவைக்க முடியும் என்று ஹ்ராட்ரி கருதுகிருர்.

வாணிபச் சுழல்களை அகற்றுவதற்குப் பாங்குகள் என்ன செய்யவேண்டும்? பாங்குகள், குறிப்பாக அவைகளுக்குத் தலைவர் களாக இருக்கின்ற மத்திய பாங்குகள் (Central Banks) வாங்குந் திறன் போக்குகளைத்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டுமே தவிர இருப்பு விகிதங்களை அன்று. பண்டங்களுக்கான தேவை–அதாவது பணத்தின் ஓட்டம்தான்–முக்கியமானதே தவிர பண அலகுகளின் மொத்தத் தொகையன்று. நுகர்வோர் செலவீட்டை (புதிய முதலீட்டு செலவீட்டையும் சேர்த்து) மாருமலிருக்கச் செய்வதே பாங்குக் கொள்கையின் குறிக்கோளாயிருக்கவேண்டும். ஆனுல், அதே நேரத்தில் உற்பத்திக் காரணிகளில் ஏற்படும் மாறுதல்களும் சுணக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியம். அதாவது, பண்டங்களின் விலைமட்டத்தைவிட உற்பத்திக் காரணிகளின் விலைமட்டத்தை மாருதிருக்கச் செய்வதே மத்தியப் பாங்குகளின் குறிககோளாக இருத்தல் வேண்டும்.

திறனுய்வு :

செழிப்பும் மந்தமும் எவ்வாறு படிப்படியாக வளர்ந்து தீவிர மடைகின்றன என்பதைப்பற்றிய விளக்கத்தை ஹாட்ரியின் கோட்பாட்டில் காண்கிறேம். இவ்விளக்கத்தைப் பல ஆசிரியர் கள் ஏற்றுக் கொள்கின்றனர். அதே நேரத்தில் இவரது கோட்பாட்டில் சில முக்கியக் குறைபாடுகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர். அவையாவன :

(a) பணத்துறையோடு தொடர்புடைய ஒரு காரணியால் மட்டுமே செழிப்பு நிலை முறிந்து போகிறது என்றும், பண அளிப்புக் குறைவதாயில்லாமலிருக்குமானுல் செழிப்பு நிலை மேன் மேலும் நீடிப்பதாயிருக்கும், மந்தம் காலவரையறையின்றித் தடுக்கப்படலாம் என்றும் ஹாட்ரி கூறுகிருர். இக்கருத்தைப் பலர் ஏற்கவில்லை. செழிப்புநிலை, பாங்குக்கடன் பண அதிகரிப்பால் ஏற்படுகிறது என்பது இவரது கருத்து. ஆனுல், வெறும்

பாங்குக் கடன் பெருகுவதால் மட்டும் செழிப்புநிலை தோன்றிவிடு வதில்லை என்று பலர் எடுத்துக் காட்டுகின்றனர். அடுத்து, மந்தம் பாங்குக்கடன் பணம் குறைவதால் ஏற்படுகிறது என்பது இவரது கூற்று. ஆனால், பாங்குக்கடன் பணம் குறைவது என்பது மந்தம் தோன்றுவதன் விளைவாக இருக்கிறது என்பதே உண்மை.

வாணிப நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறுவதற்குப் பாங்குகள் உதவிபுரிகின்றன என்பது மெய்யே; வர்த்தகத்தின் ஜீவநாடியாக நிதி இருக்கிறது என்பதும் மெய்யே. ஆனால், அதற் காகப் பாங்கு அமைப்பால்—கடன் பணத்தொகை மாறுதலால்—அதன் உறுதிநிலைப்பாடற்ற தன்மையால் தான் வாணிப நொடிப் புகள் உண்டாகின்றன என்று கூறுவது மிகை படக் கூறுவதாகும். கடன் பணத்தொகையில் ஏற்படும் மாறுதல்கள் செழிப்பையோ அல்லது மந்தத்தையோ பெரிது படுத்தமுடியுமே தவிர. உருவாக்க முடியாது. கடன் பணம் அதிகமாகின்றபோது செழிப்புத்திரட்சி யடைகிறது; கடன் பணம் குறையும் போது மந்தம் தீவிரமடை கிறது. அவ்வளவுதானே ஒழிய, செழிப்போ மந்தமோ அதனால் தோற்றுவிக்கப்படுவதில்லை.

(b) கடன் வாங்குவதும் முதலீடு செய்வதும் வட்டி வீதத் தைச் சார்ந்திருக்கிறது என்று ஹாட்ரி நம்புகிறார். ஆனால், வட்டி வீதம் உயர்வாயுள்ளபோது மக்கள் கடன் வாங்காமலும், முதலீடு செய்யாமலும் இருப்பர் என்றும் நாம் எடுத்துக்கொள்வதற்கில்லை. அவ்வாறே, வட்டி வீதம் தாழ்வாயிருக்கின்றபோதெல்லாம் மக்கள் கடன்களை வாங்கி முதலீடு செய்வர் என்றும் எடுத்துக் கொள்வதற்கில்லை.

வியாபாரிகளின் வாங்கற்பாடுகளில் ஏற்படும் மாறுதல்கள் கழிவு வீத மாறுதல்களால் நிகழ்கின்றன என்றும், இவர்களின் வாங்கற்பாடுகளில் தோன்றும் மாறுதல்களாலேயே வாணிப மாறு தல்கள் நிகழ்கின்றன என்றும் ஹாட்ரி கூறுகிறார். ஆனால், இக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதன்று. வியாபாரிகளுடைய இருப்புக்கள் அளவில் ஏற்படும் மாறுதல்கள், விற்பனைகளின் போக்கு, விலைகளின் போக்குப் பற்றிய அவர்களின் எதிர்பார்க் கைகளை (Expectations) எண்ணங்களைச் சார்ந்திருக்கின்றனவே ஒழிய, சிறு கழிவு வீத மாறுதல்களைச் சார்ந்தவையன்று. விற் பனைகள் அதிகரிக்கும்படியான நல்ல சூழ்நிலை நிலவினால் கழிவு வீதம் எவ்வாறிருப்பினும், வியாபாரிகள் தங்களின் இருப்புகளை அதிகப்படுத்திக்கொள்ள கடன் வாங்கவே செய்வர். இதில் சந்தேகமே இல்லை.

7. பண அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

(Monetary Over Investment Theory)

ஹேயக் கோட்பாடு

"அதிகபட்ச வருமானத்தை எய்தும் முறையில் ஒவ்வொரு மனிதனும் தனது முதலைப் பயன்படுத்த முயல்கிறான். பொது நலத்தைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. தனது பாதுகாப்பும், இலாபங்களுமே அவனுக்கு முக்கியம். ஆனால், தனது நலத்தை மேம்படுத்த அவன் ஈடுபடும் செயல்களால் பொது நலமும் மேம்படவே செய்கிறது."

— ஆடம்ஸ்மித்.

கட்டடங்கள், எந்திரங்கள் முதலிய முதற் பொருள் அல்லது முதற் கருவிப் பொருட்களின் (Capital goods) உற்பத்தியில வழக்கு மீறிய மாறுதல் நிகழ்வது என்பது வாணிபச் சுழலின் மிக முக்கியமானதொரு அம்சம். நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியை விட இம் முதற் கருவிப் பொருட்களின் உற்பத்தி ஏன் குறிப்பிடத் தகுந்த அளவில் மாறுவதாயிருக்கிறது என்பதற்கான காரணத்தை விளக்கத் தவறும் எந்த ஒரு கோட்பாடும் வாணிபச் சுழல்களைப் பற்றிய ஒரு திருப்திகரமான கோட்பாடாக இருக்க முடியாது, உற்பத்தியில் பொதுவாக ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களுக் குரிய ஒரு விளக்கத்தை ஹாட்ரியின் தூய பணச்சார்பான கோட்பாடு (Pure Monetary Theory) வழங்குகிறது. என்றாலும், முதற் கருவிப் பொருட்களின் உற்பத்தியில் மிகுதியான மாறுதல்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதனை அது விளக்கத் தவறுகிறது. பொருளாதார அமைப்பின் இந்த ஒரு துறையில் ஏற்படும் மட்டுமீறிய மாறுதல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனையும் அது தெரிவிக்க முயலவில்லை.

பண அமித முதலீட்டுக் கோட்பாடு இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்ய முயல்கிறது. வாணிப மாறுதலுக்கான காரணத்தை இக்கோட்பாடு பாங்குக் கடன் செலாவணி (Bank Credit) யின் நெகிழ்ச்சித்தன்மையில் காண்கிறது. எனவே, இது ஒரு பணச்சார்பான கோட்பாடாக இருக்கிறது. அதேநேரத்தில் வெறும் பணச்சார்பான கோட்பாடாக மட்டும் இருக்கவில்லை; கடன் பண அமைப்பின் இயல்பான போக்கிற்கும், உற்பத்தியின் இரு பிரிவுகளின் நுகர்ச்சிப் பொருள், முதற்பொருள் ஆகியவற்றின் இயல்பான வேறுபட்ட போக்கிற்கும் இடையே உள்ள உறவினை எடுத்துக் காட்டவும் முயல்கிறது.

எஃப். ஏ. ஹேயக் (F. A. Hayek) என்பார் பணச்சார்பான அமித முதலீட்டுக் கோட்பாட்டினை மிகச் சிறந்த முறையில் விளக்கியுள்ளார். 'விலைகளும் உற்பத்தியும்' (Prices and Production), 'பணச்சார்பான கோட்பாடும் வாணிபச் சுழலும்' (Monetary Theory and the Trade Cycle), என்ற இவரது நூல்களில் பணச்சார்பான அமித முதலீட்டுக் கோட்பாடு விவரிக்கப்பட்டிருக்கிறது. இக் கோட்பாடு பற்றிய ஒரு தெளிவான உரை எல். ராபின்சு (L. Robbins) எழுதிய 'வாணிபப் பெருமந்தம்' (The Great Depression) என்ற புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஹேயக்கின் பண அமித முதலீட்டுக் கோட்பாடு கீழே சுருக்கித் தரப்படுகிறது.

இரு வகை முக்கியத் துறைகள்

உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்படும் சமுதாய உற்பத்திச் சாதனங்கள் பலப்பல துறைகளில் ஈடுபடுத்தப் பெறுகின்றன. சில துறைகளில் உற்பத்தியாகும் பொருட்கள் நுகர்வோர்களுக்கு உடனடியாகப் பயன்படுவதில்லை. எனவே, இத்துறைகள் நுகர் பண்டத்துறைகளை விட்டுச் சற்றுத்தொலைவாயிருக்கின்றன. இத்துறைகளில் தான் கச்சாப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தளவாடங்கள் உருவாகின்றன. கட்டடங்கள் எழுப்பப்படுகின்றன. இத்துறைகள் 'உயர் நிலைத்துறைகள்' (Higher Stages) எனக் குறிப்பிடப்படுகின்றன. மற்றத்துறைகளில் செய்யப்படும் பண்டங்கள் நுகர்வோர்களுக்கு உடனடியாகப் பயன்படும் பண்டங்கள். எனவே, இவை நுகர் பண்டத்துறைகளுக்கருகில் இருக்கின்றன. 'கீழ் நிலைத்துறைகள்' (Lower Stages) என்றழைக்கப்படும் இவற்றில்தான் நுகர்ச்சிப் பண்டங்கள் (Consumers' goods) தயாரிக்கப்படுகின்றன. இவ்விருவகைத் துறைகளேயல்லாது, வேறு பல துறைகளும் இருக்கின்றன. இவையனைத்தும் உற்பத்தியின் கட்டமைப்பு (Structure of Production) ஆகும்.

உற்பத்தியின் கட்டமைப்பு தன்னிஷ்டம்போல் அமைவதில்லே. சேமிப்புக்கும் செலவிற்கும் வருமானத்திலிருந்து எவ்வளவு ஒதுக்கு வது என்று சமுதாயம் தீர்மானிப்பதைப் பொறுத்தே உற்பத்தி யின் கட்டமைப்பு அமைகிறது. சேமிக்க வேண்டும் என்று சமு தாயம் முடிவெடுத்தால் உயர்நிலேத்துறைகளில் சாதனங்களே ஆண்டு எதிர்காலத்திற்குரிய ஏற்பாடுகளேச் செய்யவேண்டும் என அது விழைகிறது என்று பொருள். மாருகச் செலவு செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தால், கீழ்நிலேத் துறைகளில் சாதனங் களே ஆண்டு நுகர்ச்சிப் பண்டங்களின் அளவை மிகுதியாக்கிக் கொள்ள ஆர்வமாயிருக்கிறது என்று பொருள். ஆகவே. பொரு ளாதார அமைப்பு முறையாக இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு சூழ் நிலேயில் உற்பத்தியின் கட்டமைப்பு எவ்வாறிருக்கும் என்பது சேமிப்புக்கும் செலவுக்குமிடையே சமுதாயம் தனது வரு மானத்தை எவ்வாறு பகிர்ந்தளிக்கிறது என்பதைச் சார்ந்திருக் கிறது.

வட்டிவீத மாறுதல்கள்

மக்கள் தமது வருமானங்களேச் செலவிற்கும் சேமிப்புக்கு மிடையே பகிர்ந்தளிக்கின்றபோது செலவுத்தொகை நேரே நுகர்ச்சிப் பண்டங்களே வாங்குவதற்குச் செல்கிறது. ஆனல், சேமிப்புத்தொகை நேரே முதற் பொருட்களே வாங்குவதற்குப் போவதில்லே. சேமிப்புகள் முதலில் மூலதன அங்காடி (Capital markat) க்குச் சென்று, அங்கிருந்து பாங்குகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், இன்ன பிற நிதி நிறுவனங்கள் முதலியவற்றை அடைகின்றன; பின்னர், அவற்றின் வழியே தொழில் முயல்வோர் களிடம் போய்ச் சேர்கின்றன; இறுதியில் இவை தொழில் முயல் வோர்களால் முதற் கருவிப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுத் தப்படுகின்றன. அப்போது முதலீடு (Investment) என்றழைக்கப் படுகிறது.

சேமிப்புத் தொகைக்கும், தொழில் முயல்வோருடைய முத லீட்டு அளவுக்குமிடையே சமன்பாட்டை ஏற்படுத்திவைக்க வேண்டியது வட்டி வீதத்தின் பணியாகும், எந்த வீதத்திலிருந்தால் சேமிப்பு நிதிகளுக்கான அளிப்பும் தேவையும் ஒன்றுக்கொன்று சமமாயிருக்கின்றதோ அந்த வீதத்தில் இருப்பது வட்டிவீதத்தின் இயல்பான போக்கு. அத்தகைய வட்டிவீதம், இயற்கை வட்டி வீதம் (Natural rate of Interest) அல்லது சமநிலே வட்டிவீதம் (Equilibrium rate of Interest) ஆகும். இதற்குக் கூடுதலாக அங் காடி வட்டிவீதம் (Market rate of Interest) இருந்தால் சேமிப்புத்

தொகை முதலீட்டிற்கு வேண்டப்படும் தொகைக்கு அதிகமாயிருக்கும்; குறைவாயிருந்தால் தொழில் முயல்வோர் முதலீடு செய்ய விரும்பும் தொகை தற்போதைய சேமிப்புத் தொகையை விட மிகுதியாயிருக்கும். எனவே இவ்விரு வீதங்களின் மாறுதல்களால் கடன் முதலின் அளிப்புக்கும் தேவைக்குமிடையேயான உறவில் மாறுதல்கள் நிகழ்கின்றன.

வட்டிவீதம் செம்மையாக இயங்குமாயின் செலவீடு மற்றும் சேமிப்புத் தொகைகளில் மாறுதல்கள் நிகழ்கின்றபோது அவைகளுக்கேற்ப நுகர்ச்சி மற்றும் முதற்பொருள் உற்பத்தியிலும் மாறுதல்கள் நிகழ்கின்றன. சேமிப்புத்தொகை பெருகினுல் வட்டிவீதம் குறையவேண்டும்; அப்போது முதற் பொருள் உற்பத்திக்குக் கூடுதலான அளவு பணமும் நுகர்ச்சிப் பொருள் உற்பத்திக்குக் குறைவான அளவு பணமும் செல்வதாயிருக்கும். அவ்வாறே, சேமிப்புத் தொகை சுருங்கினுல் வட்டி வீதம் உயரவேண்டும்; அப்போது முதற்பொருள் உற்பத்திக் குறைவான அளவு பணமும், நுகர்ச்சிப் பொருள் உற்பத்திக்குக் கூடுதலான அளவு பணமும் செல்வதாயிருக்கும். எனவே, செலவீட்டளவிலும், சேமிப்பளவிலும் மாறுதல்கள் தோன்றினுல் அவைகளுக்கீடான மாறுதல்கள் உற்பத்தியின கட்டமைப்பிலும் தோன்ற வேண்டும்.

பாங்குக் கடன் செலாவணி நெகிழ்ச்சித்தன்மை

பாங்குகளுக்கு இரு பணிகள் இருக்கின்றன: ஒன்று, சேமிப்பாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நடுவர்களாக (Middle men) இருத்தல்; மற்றொன்று, பாங்குக் கடன் செலாவணி (Bank Credit) என்ற முக்கியமானதொரு செலுத்துச் சாதனத்தை வழங்கப் பாங்கு அமைப்பு சரியாக இயங்குமாயின் நடுவர் பணி மூலமாகச் சேமிப்புப் பருமனுக்கும், முதலீட்டுப் பருமனுக்குமிடையே சமநிலை தோன்றித் தொடர்ந்து நீடிக்கும். அப்போது முதலீட்டளவிற்கு மிகையாகச் சேமிப்பு இருக்காது. பணத்தின் பணியின் குறுக்கீடு இத்தகைய சமநிலையினைக் கெடுத்துவிடுகிறது. பணத்தின் பணி குறுக்கிடவில்லையென்றுல் முதலீட்டிற்கும் சேமிப்புக்குமிடையேயான சமன்பாடு தொடர்ந்திருந்து வரும்.

பணத்தின் மொத்த அளிப்பு மாருதிருக்குமானுல் முதலீடு செய்வதற்குச் சேமிப்பு ஒன்றுதானிருக்கும். இலாபம் உயர்ந்த பட்சமாகப் பெறப்படவேண்டும் என்ற குறிக்கோள் காரணமாக எல்லாச் சேமிப்புகளும் பாங்குகள் வழியே முதலீட்டிற்குச் சென்றுவிடுவதாயிருக்கும். ஆனுல், பண அளிப்பு நெகிழ்ந்து கொடுப்பதாயிருக்குமானுல், சேமிப்புக் கூடுதலானதாக இல்லாதிருக்கும்

போது கூட முதலீடு அதிகப்படுத்தலாம். அவ்வாறே, சேமிப்புத் தொகை மாருதிருக்கும் போதும் முதலீடு குறைக்கப்படலாம். சமநிலே வட்டிவீதத்திற்குக் குறைவாக அங்காடி வட்டிவீதம் வைக்கப்பட்டால் வர்த்தகத்திற்காகக் கடன்கள் வாங்குவது ஊக்குவிக்கப்பட்டுப் பாங்குக் கடன் செலாவணியளவு பெருகிச் சேமிப்பு அளவிற்கதிகமாக முதலீடு அதிகரிக்கிறது. அங்காடி வட்டிவீதம் தாழ்வாயிருக்கின்ற வரை இவ்வதிகரிப்பு நீடிக்கும். அவ்வாறே, சமநிலே வட்டி வீதத்திற்கு அதிகமாக அங்காடி வட்டிவீதம் உயர்த்தப்பட்டால் சேமிப்புக்களுக்கும் குறைவாக முதலீடு இருப்பதாக அமையும். இது அங்காடி வீதம் உயர்வாயிருக்கும் வரை நீடிக்கும்.

பாங்குக் கடனில் நெகிழ்ச்சித் தன்மைக்குக் காரணம் யாது? பாங்குகள் தங்களுடைய இருப்புக்களின் அளவைப் பொறுத்து வைப்புகளின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும் என்பதாலும், ஒரு பாங்கைப் பார்த்து மற்ருெரு பாங்கு தனது செயல்முறையை வகுத்துக் கொள்ளும் போட்டி மனப்பான்மை இருந்து வருவதாலும், பாங்குக் கடன் செலாவணியில் நெகிழ்ச்சித்தன்மை காணப்படுகிறது என்று ஹேயக் கூறுகிருர். பாங்குக் கடன் செலாவணியிடம் நெகிழ்ச்சியிருப்பதன் காரணமாகவே பொது மக்களின் சேமிப்புகள் எவ்வாருயிருப்பினும், பாங்குகள் தமது வைப்புச் செலாவணியைச் (Deposit Currency) சில நேரங்களில் கூட்டுவதாயும், வேறு சில நேரங்களில் குறைப்பதாயுமிருந்து வருகின்றன.

இவ்வாருகப் பாங்குக் கடன் நெகிழ்ச்சி என்பதன் வழியாகச் சேமிப்புக்களைப் பொருட்படுத்தாது முதலீட்டளவை மாற்றியமைத்திடும் கருவியொன்று உருவாகிறது. இப்படிச் சேமிப்பைப் பொருட்படுத்தாது முதலீட்டில் செய்யப்படும் மாறுதல்தான் வாணிபச் சுழலுக்குரிய காரணம் என்று ஹேயக்கின் கோட்பாடு கூறுகிறது.

பாங்குக் கடன் பெருகுவதனுல் முதலீட்டு வீதத்தில் நிகழும் மாறுதல்களைப் பின் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய ஹேயக் விளக்கம் இனித் தொடர்கிறது.

பொருளாதார அமைப்புச் சமநிலேயில் (Equilibrium) இருக்கிறது என்று அனுமானத்தைக் கொண்டு இவர் தனது விளக்கத்தைத் துவக்குகிருர். வாணிபச் சுழலேச் சமநிலேயில் தோன்றும் ஓர் அமைதிக் கேடு என்றிவர் எடுத்துக் கொள்கிருர். அதன் பல்வேறு கட்டங்கள் சமநிலேயின் பிறழ்ச்சிகளாக இவருக்குப் படுகின்றன.

சமநிலை நிலவுகிறதென்றால், அமைதிக் கேட்டினை உண்டாக்கும் காரணிகள் தற்போது செயலில் இல்லை என்று பொருள். இச் சமநிலையில் சேமிப்பையும் முதலீட்டையும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கச் செய்யும் வீதத்தில் வட்டியிருந்து வருகிறது. செலவிற்கும் சேமிப்பிற்குமிடையே நாட்டு வருமானம் பங்கிடப் பட்டிருக்கும் முறைக்கேற்ப உற்பத்திக் கட்டமைப்பு அமைந்திருக்கிறது. பொருளாதார அமைப்பில் வேலைவாய்ப்பற்ற சாதனங் களைக் காண்பதரிதாயிருக்கிறது. சாதனங்களின் வேலை வாய்ப் பின்மையை அகற்றுவதற்குரிய அளவிற்குக் கூலி, வட்டி, வாரம் முதலியவை நெளிந்து கொடுக்கின்றன. இச்சமநிலையின்போது தொழிலின் ஒரு துறையின் உற்பத்தி கூடுதலாக வேண்டும் என்றால் மற்றத் துறைகளின் உற்பத்தி குறைந்தாக வேண்டும். அதிலும் குறிப்பாக, முதற்பொருள் உற்பத்தியாளரின் பண்ட உற்பத்தி பெருக வேண்டும் என்றால், நுகர்ச்சிப் பண்ட உற்பத்தி குறைந்தாக வேண்டும். அதைப்போலவே நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்றால், முதற் பொருள் உற்பத்தி குறைந்தாகவேண்டும். இதன் பொருள் என்னவென்றால், சமநிலையின் அமைதிக் கேடுகள் உற்பத் திக் கட்டமைப்பை மாற்றுகின்றன என்பதேயாம்.

உதாரணமாகப் பாங்குச் செலாவணி அதிகரித்து அங்காடி வீதம் சமநிலை வட்டி வீதத்திலிருந்து வேறுபடுகிறது என்று வைத்துக் கொள்வோம். பாங்குச் செலாவணி எப்போது அதிகரிக்கும்? ஒதுக்கீடுகள் (Reserves) அதிகரிப்பதன் மூலம் பாங்குகளால் அங்காடி வட்டிவீதம் குறைக்கப்படுவதாகவோ, அல்லது தொழில் முயல்வோரின் எதிர்பார்க்கைகள் (Expectations) உயர்வதன் வாயிலாகச் சமநிலை வட்டிவீதம் உயர்த்தப்படுவதாகவோ இருப்பின் பாங்குக் கடன் செலாவணி பெருக்கமடையும். இயற்கை வீதத்தைவிடப் பாங்கு வீதம் தாழ்வாயிருக்கும்போது பாங்கு களிடமிருந்து கடன் வாங்குவது தொழில் முயல்வோர்களுக்குப் பயன் மிகுந்ததாயிருக்கிறது. இதனால் பாங்குக் கடன் செலாவணி யின் அளவு பெரிதாகிறது. சமுதாயத்தின் சுயேச்சை (Voluntary) சேமிப்புகள் கூடுவதன் காரணமாக வட்டிவீதம் தாழ்வதாயிருப் பினும் சரி அல்லது பாங்குச் செலாவுணியின் அளவைப் பெருக்க வேண்டும் என்ற பாங்குகளின் எண்ணத்தால் வட்டிவீதம் தாழ் வதாயிருப்பினும் சரி, வட்டிவீதம் உண்மையில் தாழ்கின்றபோது தொழில் முயல்வோர் கடன் வாங்கி முதலீடு செய்வது உறுதி.

பாங்குக் கடன் செலாவணி பெருக்கத்தின்போது கடன் வாங்குவோர், சேமிப்புகள் கூடுதலாகும்போது செய்வதைப் போன்றே உற்பத்திக் காரணிகளை மிகுதியாகப்பெற முனை கின்றனர். இதனால் உற்பத்தியாளர் பொருள்களின் (Producers' goods) விலைகள் உயர்கின்றன. சாதனங்கள் இந்த முதற் கருவிப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர்ந்து செல்கின்றன. சுற்றுவழி முறையிலான தொழிற்சாலைகள் மேன்மேலும் துவக்கப்படு கின்றன. சுருங்கக் கூறின், சேமிப்புகள் அதிகரித்து வட்டிவீதம் தாழ்ந்தால் நிகழ்வதைப்போன்று, பாங்குச் செலாவணி பெருகி வட்டி தாழ்வதனால் உற்பத்திக் கட்டமைப்பில் ஒரு மாறுதல் நிகழ் கிறது. முதற் கருவிப் பொருள் தொழிற்சாலைகள் வளர்கின்றன. அவற்றில் ஆளப்படும் உற்பத்திச் சாதனங்களின் அளவு மிகை யாகிறது. அதாவது, 'உயர் நிலைத்துறைகளை' (Higher Stages நோக்கி உழைப்பும், கச்சாப் பொருட்களும் செல்கின்றன.

இது நிகழும்போது நுகர்ச்சிப் பண்டங்கள் கிடைப்பது அரி தாகிறது. பொருளாதார அமைப்பில் எல்லாத்துறைகளையும் பெருக்குவது என்பது சாத்தியமன்று. சாதனங்களனைத்தும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றபிறகு, முதற்பொருள் உற் பத்திக்குச் சாதனங்கள் வேண்டும் என்றால், நுகர்ச்சிப்பொருள் உற்பத்திக்கு வேண்டப்படும் சாதனங்களின் அளவு குறைக்கப்பட வேண்டும். சுயேச்சை நுகர்ச்சிக் குறைப்பு மூலம்—அதாவது சுயேச்சை சேமிப்பு (Voluntary Savings) அதிகரிப்பு மூலம் நுகர்ச் சிப் பொருட்களுக்கான தேவை குறைந்தால், உழைப்பும் மூலப் பொருட்களும் முதற்பொருள் உற்பத்தித் தொழில்களை நாடிச் செல்லும். ஆனால், பாங்குச் செலாவணி பெருகும்போது இத் தகைய நிலை ஏற்படுவதில்லை. மாறாகக் கூடுதலான வாங்குந்திறன் தொழில் முயல்வோர்களிடம் போய்ச் சேர்ந்து, அவர்கள் உற்பத் திச் சாதனங்களுக்குக் கூடுதலான விலைகளைத் தர முன்வருவதனால், சாதனங்கள் நுகர்ச்சிப் பொருள் உற்பத்தித் தொழில்களை விட்ட கன்று முதற் கருவிப் பொருள் உற்பத்தித் தொழில்களில் ஈடுபடு கின்றன. அப்போது நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி சுணங்குகிறது. சமுதாயத்தின் நுகர்ச்சியும் அந்த அளவிற்குக் குறைகிறது. இதனால் சேமிப்பு முன்பு போலக் கூடுகிறது. ஆனால் முந்திய நிகழ்ச்சியின்போது சேமிப்புச் சுயேச்சையானது; தற்போதோ இது சுயேச்சையானதன்று. உண்மையில் இது ஒரு 'கட்டாயச் சேமிப்பு' (Forced Saving) ஆகும். 'கட்டாய நுகர்ச்சிக் குறைப்பு' என்றும் இரு கருதப்படும். நுகர்ச்சிப் பொருள்களின் விலை

உயர்ந்து நுகர்விற்கு ஒதுக்கப்பட்ட வருமானப் பகுதியின் வாங்குந் திறன் குறைந்து போவது இக்கட்டாயச் சேமிப்பின் ஒரு புறத் தோற்ற அடையாளம்.

ஆனால் இத்தகைய சூழ்நிலை நெடுநேரம் நீடிப்பதற்கில்லை. துய்க்கும் மக்களின் உணர்வுகளில், விருப்பங்களில் மெய்யான அடிப்படை மாறுதல் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. தமது நுகர்ச்சியைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று இவர்கள் விரும்பியது கிடையாது. நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகள் உயராதிருந்திருந்தால் இவர்கள் நிச்சயமாகத் தமது நுகர்ச்சிப் பருமனைக் குறைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். வருமானங்கள் உயர்ந்தால் இவர்கள் தமது பழைய நுகர்ச்சிப் பழக்க வழக்கங்களைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டுவருகின்றனர்—முன்பு வாங்கிய அளவு பண்டங்களை மறுபடியும் வாங்கிடுவர். இவ்வாறு இவர்களைச் செயல்படத்தூண்டும் வகையில் வருமானமும் விரைவில் உயரும்.

தொழில் முயல்வோரிடம் உள்ள பணத்தின் அளவு பெருக்கமடையும்போது, அவர்கள் இப்பணத்தை முதற் கருவிப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றனர். எனவே, இப்பணம் முதற் கருவிப் பொருள் உற்பத்திக்கு அவசியமான சாதனங்களின் சொந்தக்காரர்களிடம் போய்ச்சேருகிறது. இந்த வருமானத்தைப் பெற்றிடும் இவர்கள்தாம் நுகர்வோர்கள். இவர்கள் தமது நுகர்ச்சியை முன்பிருந்த அளவிற்கு அதிகப்படுத்துகின்றனர். நுகர்ச்சி வளர்வதனால், நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள் மேல்நோக்கிப் பாய்கின்றன. இப்பொருள்களின் உற்பத்தி சுருங்கும்போது இவற்றிற்கான பணத்தேவை (Monetary Demand) புழக்கத்தினிலுள்ள பணம் பெருக்கமடைவதன் காரணமாக விரிவடையுமானால் விலைகள் உயரத்தானே செய்யும்?

இப்படி ஒரு செயற்கையான வட்டிவீதத்தின் தூண்டுதலினால் தொழில் முயல்வோரால் உற்பத்திக் கட்டமைப்பில் கொண்டு வரப்படும் மாறுதல்களுக்கு நுகர்வோர்களின் இசைவு கிடையாது. எனவே, பழைய நிலைமையை மறுபடியும் கொணர்ந்திடும் முயற்சிகளில் நுகர்வோர் ஈடுபடுகின்றனர். பழைய நிலைமைகள் திரும்பத்தான் செய்யும். ஏன்? கிடைப்பருமை (Scarcity) காரணமாக நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள் உயர்ந்து போவதனால், அப்பொருள்களைத் தயாரிப்பது தொழில் முயல்வோர்களுக்கு இலாபகரமானதாயிருக்கிறது. எனவே, இத்தொழில்கள் வளரத் தொடங்குகின்றன. இவைகளுக்குத் தேவையான சாதனங்களின் விலைகள் உயர்கின்றன. அத்தகைய விலைகளைக் கொடுக்கவும் தொழில் முயல்வோர் முன் வருகின்றனர்.

நுகர்ச்சிப் பொருள் உற்பத்தித் தொழில்கள் இவ்வாறு கவர்ச்சி மிக்கவையாய் உருவெடுத்துக் கொண்டிருக்கும் போது, முதற் கருவிப் பொருள் உற்பத்தித் தொழில்கள் பாதிக்கப்படு கின்றன. முதற் கருவிப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தியாளர்கள் தமது முயற்சிகளால் இலாபங்களைக் கொண்டு வர முடியவில்லை என்பதை உணர்கின்றனர். சிலர் நட்டத்திற்குமுள்ளாகின்றனர். இதன் விளைவு? முதலும் உழைப் பும் 'உயர் நிலைத் துறைகளை' விட்டகன்று 'கீழ் நிலைத்துறைகளை' நாடுகின்றன, நுகர்ச்சிப் பொருள்களோடு ஒப்பிடுகையில் முதற் பொருள் அளவு குறைகிறது. சில முதற்பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் கைவிடப்படவும் செய்கின்றன.

பாங்குக் கடன் செலாவணி பெருகுவதால் உற்பத்திக் கட்டமைப்பு இவ்வாறு தலைகீழாக மாறுவதைத் தடுக்கமுடியும். எங்ஙனம்? 'உயர் நிலைத் துறை'களிலிருந்து 'கீழ்நிலைத் துறை'களுக் குச் சாதனங்கள் போவதைத்தடுக்கும் அளவில் பாங்குச் செலா வணி மேலும் அதிகரிப்பதாயிருப்பின் இதனைத் தடுத்து நிறுத்த முடியும். இந்த அதிகரிப்புத் துவக்கத்திலிருந்த அதிகரிப்பை விடக் கூடுதலாயிருக்கவேண்டும். ஏனெனில், பொது விலைமட்ட மும், வருமானங்களின் பொது மட்டமும் தற்போது உயர்ந்திருக் கின்றன. எது எப்படியிருப்பினும் உற்பத்தியாளர் வேண்டு கோளுக்கேற்ப, பாங்குகள் சிறிது காலத்திற்குக் கடன் கொடுப் பதை அதிகப்படுத்துவதாகத் தானிருக்கின்றன. நுகர்ச்சிப் பொருட்களின் விலைகள் உயர்ந்து இலாபங்களைத் தருவனவாயிருப் பினும், சில உற்பத்தியாளர்கள் தமது முதற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளை உடனே கைவிடுவதற்கில்லை, பாதியில் நிற் கின்ற உற்பத்தி நடவடிக்கைகளை எவ்வாறு கைவிடுவது? சிறிது காலத்திற்காவது இவைகளைத் தொடர்ந்து செய்வது அவசிய மாகிறது. ஆனால், இதனால் நீடித்த நன்மை கிட்டுவதில்லை. இத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கூலி சம்பாத்தியக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்கும் கூடுதலான வருமானங்கள் நுகர்ச் சிப் பண்டங்களின் மீது மறுபடியும் செலவிடப்பட்டு, அவைகளுக் கான தேவை விரிந்து, விலைகள் மீண்டும் உயர்கின்றன. மறுபடி யும் உற்பத்தி பெருக, சாதன ஊதியங்கள் உயர, நுகர்ச்சிப் பொருட்களின் விலைகள் மேல்நோக்கிச் செல்ல — இப்படி யாகப் பண வீக்கச் சுழலேறி (Spiral of inflation) ஒன்றிற்குச் சமு தாயம் உட்படுகிறது.

உண்மையில் இப்பெருக்கம் அளவுக்கு மீறிப் போவதற்கில்லை. பொன் திட்டத்தின் கீழ் செலாவணிப் பெருக்கத்திற்குத் திட்ட வட்டமான வரையறைகள் உண்டு. இவ்வெல்லைகள் மீறப்படும் போது பாங்குகள் வட்டிவீதத்தை உயர்த்தி, உற்பத்தி நோக்கங் களுக்காகக் கடன் வாங்குவதற்கு முற்றுப்புள்ளியிடுகின்றன. கடன் செலாவணி பெருகி விலைகள் தொடர்ந்து உயர்வது என் பதுதான் நாணயத் திட்டத்தின் கீழ் கூடத் தாங்குவதற்கு இயலாததாயிருக்கிறது. எனவே, சிறிது காலத்திற்குப்பிறகு செலாவணிப் பெருக்கத்தைப் பாங்குகள் நிறுத்திவிடுகின்றன. இப்படி நிறுத்தப்படும்போது உற்பத்திக் கட்டமைப்பின் மாற்றங் கள் மறுபடியும் மாறுவது தவிர்க்க முடியாததாகிறது. சுயேச்சைச் சேமிப்புகளின் அளவுக்கேற்ப உற்பத்திக் கட்டமைப்பில் உரிய மாறுதல்கள் எப்படியாவது ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். இதனைச் செய்வதில் உள்ள சிரமங்கள் மூலமாகத்தான் நெருக்கடி யும் மந்தமும் வாணிபத்தில் தோன்றுகின்றன.

நெருக்கடி உருவாகக் காரணம்

இவ்வாறாக வாணிபத்தில் ஏற்படும் தொல்லைக்கான மூலகாரணம் கட்டாயச் சேமிப்பினால் உண்டாகும் அமிதமுதலீடே யாகும். சுயேச்சைச் சேமிப்பினால் உற்பத்திக்கட்டமைப்பில் நிகழும் மாறுதல் நிலையானது. ஆனால். கட்டாயச்சேமிப்பினால் உற்பத்திக் கட்டமைப்பில் நிகழும் மாறுதல் நிலையானதன்று. மாறிவிட்ட கட்டமைப்புப் பொறுக்கமுடியாததாகிப் பழைய கட்டமைப்பையே மீண்டும் ஏற்படுத்திவைப்பது அவசியமாகி விடுகிறது. மாற்றத் திற்கு உதவியளித்திடக்கூடிய மெய்யான சேமிப்புகள் அங்கே இல்லை; அவைகளை அங்கே இருக்கச் செய்யவும் முடிவதில்லை. எனவே சேமிப்புகளின் பற்றாக்குறையால் நெருக்கடி (Crisis) நிலை உருவாகிறது.

வாணிப நெருக்கடிக்குக் காரணமாயிருப்பது அமிதச் சேமிப்பு (Excessive Saving) என்கின்றனர் சிலர். ஆனால், ஹேயக், சேமிப் பின் பற்றாக்குறையே மூலகாரணம் என வலியுறுத்துகிறார். சமு தாயத்தின் சுயேச்சை முடிவுகள் மூலமாக அமிதச் சேமிப்பு ஏற்படு வதற்கில்லை. அத்தகைய அமிதச் சேமிப்பு இருக்கிறது என்பதற் கான அறிகுறிகளும் கிடையா. இருந்தும் அமித முதலீடு காணப் படுகிறது. இதற்கு என்ன காரணம்? நெகிழ்ச்சியுள்ள செலாவணி யால் உருவாகும் கற்பனைகள் காரணமாக இந்த அமித முதலீடு தோன்றுகிறது. பாங்குக் கடன் செலாவணி ஒரு பொய்த் தோற் றத்தை, போலி நம்பிக்கையை உருவாக்குகிறது. இந்தப் பொய்த்

தோற்றத்தைப் பற்றி வர்த்தகர்கள் நன்கு புரிந்துகொள்வதில்லை. அங்காடி வட்டிவீதம் குறைகிறது. ஆனால், இந்த வட்டிவீதம் எதனால் குறைகிறது என்பது இவர்களுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. மக்களின் சுயேச்சைச் சேமிப்புகளால் குறைந்தாலும் சரி, அல்லது பாங்குகள் கூடுதலாகக் கடன்களைத் தர முன்வருவதால் குறைந்தாலும் சரி, வட்டிவீதக் குறைப்புத் தொழில் முயல்வோருக்கு ஒரே விதமாகத்தான் காட்சியளிக்கிறது. பாங்குக் கடன் செலாவணி நெகிழ்ந்து கொடுப்பதாயிருக்கும் போது, உற்பத்திக் கட்டமைப்பின் வட்டி மாறுதல்களைத் தடுப்பதற்கு இயல்பான தடைகளிடம் சக்தியில்லாமல் போய்விடுகிறது. அவைகளுக்குச் சக்தியூட்ட முயல்வதற்குள் மந்தம் கட்டுக்கடங்காமல் போய்விடுகிறது. முதற் கருவிப் பொருள் உற்பத்தியாளனுக்குப் பாங்குக் கடன் செலாவ்ணி என்பது ஓர் உதவிக்கொடை (Subsidy). ஆனால், அது எப்போது பெரிதும் தேவைப் படுவதாயிருக்கிறதோ அப்போது அது திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டு விடுகிறது.

மந்தம்

எந்தக் காலப்பகுதியில் உற்பத்திக் கட்டமைப்பு அதற்குரிய அளவிற்குக் குறுக்கப்படுவதாயிருக்கின்றதோ அந்தக் காலப்பகுதி மந்த (Depression) கட்டம் என்று ஹேயக குறிப்பிடுகிறார். இப்படி அதனைக் குறுக்குவது என்பது கடினமானதொரு பிரச்சினை. அதனைச் சிறிது நேரத்தில் செய்து விடுவது என்பதும் முடியாது. அதற்கு நெடுங்காலம் தேவைப்படுகிறது. இனி நாம மந்தத்தின் போக்கைச் சற்றுப் பின்தொடர்ந்து கவனிப்போம்.

நுகர்வோர்கள் தமது இயல்பான வாங்கற்பாடுகளைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டுவரும்போதும், பாங்குக் கடன் செலாவணிப் பெருக்கம் நிறுத்தப்படும்போதும் 'உயர் நிலைத் துறை'களின் உற்பத்தி இலாபகரமற்றதாக மாறுகிறது என்று ஏற்கெனவே கண்டோம். இதன் விளைவாக 'உயர் நிலைத்துறை'களில் வேலைகள் சுணங்கிப் போகின்றன; அத்துறைகளின் பண்டங்களின் விலைகளும் கீழ்நோக்கிச் சரிகின்றன. அப்போது நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து செல்வனவாயிருப்பதால், இந்தக் 'கீழ் நிலைத்துறை'களில் உழைப்பையும் முதலையும் மேன்மேலும் எடுத்துக் கொண்டு நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவது இலாபத்தைத் தருகிறது. எனவே, உழைப்பும் முதலும் 'உயர் நிலைத்துறை'களை விட்டகன்று 'கீழ்நிலைத் துறை'களை நோக்கிப் பெயர்கின்றன.

முதற் கருவிப் பொருள் உற்பத்தித்துறையிலிருந்து இவ்வாறு வேகமாக ஓடிவரும் உழைப்பையும் முதலையும் உடனுக்குடன் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் நிலையில் நுகர்ச்சிப் பொருள் உற்பத்தித் தொழில் இல்லை. எனவே, வேலை வாய்ப்பின்மை பெருகுகிறது. வர்த்தக நடவடிக்கை சுருங்கும்போது ஏற்படும் பண வாட்டத்தால் (Deflation) இவ்வேலை வாய்ப்பின்மை மேலும் தீவிரமடைகிறது. பாங்குச் செலாவணி சுருக்கமடைவதாலும், வர்த்தகர்களும், நுகர்வோர்களும் பணத்தை முடக்குவதனால் புழக்க வேகம் குறைவதனாலும் விலைமட்டம் தாழ்கிறது. அப்போது முதற் கருவிப் பொருட்களின் விலைகள் மிகவும் தாழ்வடைகின்றன. நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகள் அந்த அளவிற்குத் தாழ்வதில்லை. இவ்வாறு விலைகள் தாழ்ந்தும், வேலைவாய்ப்பின்மை வளர்ந்தும், கூலிகள் குறைந்தும் போகின்ற நிலையில் முதலாட்சி உற்பத்தி முறைகள் (Capitalistic Methods of Production) கைவிடப்பெற்று, அவைகளுக்குப் பதிலாக முதலைவிட உழைப்பை மிகுதியாகக் கொண்ட உற்பத்தி முறைகள் ஆளப்படத் துவங்குகின்றன. இம்மாறுதல்கள் நிகழும்போது இயல்பான செலவிற்கும் சேமிப்புக்கும் உரிய அளவுக்கு மீறிய அளவில் உற்பத்திக் கட்டமைப்பு மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதனால்தான் வழக்கத்திற்கு மாறாக மந்தம் நீட்சி மிகுந்ததாயிருக்கிறது; இயல்பான நிலவரங்களை மீண்டும் கொண்டுவருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதாவது இயல்பான நுகர்ச்சியளவினைத் திரும்பவும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக எடுக்கப்படும் முயற்சியால் பண வாட்டமும், விலை இறக்கமும் ஏற்பட்டு மந்தத்தை நீடித்திருக்கச் செய்துவிட்டு மீட்சிக்கான தடைகளை வற்புறுத்தி விடுகின்றன.

மந்தத்தைப் போக்கும் வழி

மேற் கூறப்பட்டவையிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? மந்தத்தை அப்புறப்படுத்துவதற்கான முக்கிய வழி சுயேச்சை சேமிப்புகள் மற்றும் செலவீட்டுத் தொகைகளுக்கேற்ற அளவில் உற்பத்திக் கட்டமைப்பை விரைவாக மாற்றியமைத்தேயாம். ஆனால், துரதிருஷ்ட வசமாக, நடைமுறையில் இருந்துவரும் பெரும்பாலான வழிமுறைகளால் இதனைச் செய்ய முடியாது போகிறது.

குறிப்பாக, நுகர்வோர்களுக்குப் பணத்தைக் கடனாக அளிப்பதன் மூலம் மந்தத்தை நீக்குவது என்பது சாத்தியமன்று. மந்தத்திற்குரிய காரணம் நுகர்வோரது வாங்குந் திறனின் பற்றாக்குறை அன்று; மாறாக, நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை

மிகவும் உயர்ந்து போவதுதான் எனலாம். இச்சூழ்நிலையில் நுகர்வோர்களுக்கு நிதிகளை மிகுதியாகத் தருவோமாயின் நிலைமை இன்னும் மோசமாகிறது. நெருக்கடியின்போது நுகர்வோர் கடன் அளவு பெருகுவதனால் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து மிக நெடுங்காலத்திற்கு நீடிப்பதாயிருக்கிறது. நுகர்வோருக்குத் தரப்படும் கடன் அளவு விரிவுபடுத்தப்படுமானால் சிறிது காலத்திற்குச் சாதனங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாயிருக்கலாம். எனினும் இது ஒரு போலித் தூண்டுதலாகும். இதனால் ஒரு தவறான—செயற்கையான—உற்பத்திக் கட்டமைப்புத் தற்காலிகமாக உருவாக்கப்படுகிறது. இப்போலித் தூண்டுதல்களைப் புற்று மறையும் போது ஒரு புதிய நெருக்கடி பிறந்து விடுகிறது. எனவே, இது ஒரு நிலையானதாக இருப்பதில்லை.

உண்மையில் கடன் யாருக்காவது தரப்படவேண்டும் என்றால், அது உற்பத்தி முறைகளைச் சற்று விரிவுபடுத்துமாறு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக இக்கடன்கள் தரப்படவேண்டும். ஆனால், இக்கடன்களை எந்தெந்த அளவுகளில் தருவது, எந்தெந்த நேரத்தில் இவற்றைத் திரும்பப்பெற்று முதற் கருவிப் பொருட்களின் அமிதப் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்துவது என்பவையெல்லாம் சாமானியத்தில் முடிவு செய்யப்படக்கூடியவை அன்று. இவற்றைச் செய்வதில் பல சிரமங்கள் உண்டு. ஆகவே, நிதி நிலைய அதிகாரிகள் இவற்றைத் தவறின்றிச் செய்வது மிகவும் கடினம். ஹேயக் விளக்கம் பின்வரும் முடிவிற்கு வந்து நிற்கிறது; செழிப்பு வாணிபத்தில் தோன்றி விட்டால், பிறகு நெருக்கடி (Crisis) யும் மந்தமும் ஏற்படுவதை நம்மால் தடுக்க முடியாது. மந்தம் ஏற்பட்டு விட்டால் அதனை உடனே தடுத்து விடுதல் என்றும் இயலாது. மீட்சி துவங்கும் வரை பொறுமையாகக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. ''புயல் கிளம்பிவிட்டால் புயல் நிலவறை (Storm Cellar) ஒன்றுதான் நமக்குப் புகலிடமாயிருக்கிறது''—(ஈஸ்டி)

மந்தத்தைக் கட்டுப்படுத்தும் வழி? தொல்லைக்குக் காரணமாயிருக்கின்ற பாங்குச் செலாவணி நெகிழ்ச்சித்தன்மையினை ஒழிப்பது தான் ஒரே வழி. கட்டாயச் சேமிப்பு மறையவேண்டும். இது மறையவேண்டும் என்றால் பணத்தின் அளிப்பு மாறாதிருக்க வேண்டும். இது ஒரு பணத்துறை நிர்வாகப் பிரச்சினை. இதனைப் பிறகு காண்போம்.

கோட்பாட்டின் குறைபாடுகள்

வாணிபச் சுழல்கள் என்பவை சமநிலையில் தோன்றும் மாறுதல்கள் என்றும், சமநிலையின் போது சாதனங்களனைத்தும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருப்பதனால் முதற் கருவிப் பொருள் உற்பத்தி பெருகவேண்டுமெனில் நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி குறைக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும், நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி பெருக வேண்டுமெனில் முதற் கருவிப் பொருள் உற்பத்தி குறைக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும் ஹேயக் கோட்பாடு எடுத்துக் கொள்கிறது. இக் கோட்பாட்டுக்குச் சில பொருளாதார அறிஞர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நடவடிக்கைகள் உச்சத்திலிருக்கின்ற போது கூடச் சாதனங்கள் அனைத்தையும் வேலைக்கு எடுத்துக் கொள்வது என்பது முடியாது. முதற் பொருட்கள், நுகர்ச்சிப் பொருட்கள் என்ற இருவகைப் பொருட்களின் உற்பத்தியும் ஏக காலத்தில் பெருகுவதும் சுருங்குவதும் தான் தொழில் ஏற்ற இறக்கங்களின் முக்கியமான, தலையாய அம்சங்கள். முதற் பொருள்களுக்கான தேவையின் இயல்பு காரணமாகவே நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியின் போக்கு, முதற் பொருள்களின் உற்பத்தியின் போக்கினை யொட்டி அமைகிறது. உண்மையில் முதற் பொருள்களுக்கான தேவையானது வழிவந்த தேவை (Derived Demand). இது நுகர்ச்சிப் பண்டங்களுக்குள்ள தேவை உயர்கின்ற போது, இப் பண்டங்களை உற்பத்தி செய்யத்துணை புரியும் முதற் பொருள்களுக்குள்ள தேவையும் சற்றுக் கூடுதலாக உயர்கிறது. எனவே, இவ் விரு பண்டங்களின் உற்பத்தியும் ஏக காலத்தில் பெருகுவதாயும், சுருங்குவதாயுமிருக்கிறது. ஒன்றின் செழிப்பு, மற்றொன்றின் அழிவு என்ற நிலை இங்கே காணப்படவில்லை.

இக்கோட்பாட்டின் மற்றொரு முக்கியக்குறைபாடு, வட்டிவீத மாறுதல்களுக்கு இது மிகுதியான முக்கியத்துவத்தை அளிப்பது. வட்டி வீதத்திடம் குறிப்பிடத்தக்க நெகிழ்ச்சி ஏதும் கிடையாது. இதன் மாறுதல்கள் மிகவும் நுண்ணியவை. இவைகளால் பெரும் விளைவுகள் உண்டாக்கப்படுவதில்லை. ஆகவே, இவற்றால் வாணிபம் நடைமுறையில் பாதிக்கப்படுவதில்லை. முதற் பொருள் உற்பத்தியின் நெடுங்கால மாறுதல்கள் வேண்டுமென்றால் வட்டி வீத மாறுதல்களால் விளைவனவாயிருக்கலாம். ஆனால், சுழலின் குறுங்கால நெளிவுகள், பெரும்பாலும் இலாப வெற்றி வாய்ப்புக்களில் ஏற்படும் மாறுதல்களாலோ அல்லது கண்டுபிடிப்பு, புத்தமைப்பு (Innovation) முதலியவற்றின் வருகையாலோ உண்டாகின்றன.

8. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

(Non-Monetary over-Investment Theories)

(1) டியூகன் பாரனேஸ்கியின் கோட்பாடு

(Tugan-Baranowsky's Theory)

''பணத்திற்கு யாரையும் தெரியாது. அதற்குச் செவிகள் கிடையா. இதயமும் இல்லை.''

— பால்சாக்.

இதுவரை பணச்சார்புடைய அமித முலலீட்டுக் கோட்பாட்டைப் பார்த்தோம். இனிப் பண முதலீட்டை வற்புறுத்தாது, முதற் பொருள்களின் பெருக்கம் (Expansion), சுருக்கம் (Contraction) ஆகியவற்றை வற்புறுத்தும் சில கோட்பாடுகளைக் காண்போம். இந்த வகை முதலீடுகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருளாதாரிகளில் முக்கியமானவர்கள் டியூகன் பாரனேஸ்கி, ஸ்பியதாஃப், காசல் (Cassel) ஆகியோர். கருத்து வகையில் பின்னிவரும் ஏறக்குறைய ஒற்றுமையானவர்கள் ஆகவே, டியூகன் பாரனேஸ்கியின் கருத்துக்களையும், ஸ்பியதாஃப் கருத்துக்களையும் ஆய்வது போதுமானது. பின்னையவர்கள், டியூகன் பாரனேஸ்கியின் கருத்துக்களைப் பெரும்பாலும் பின்பற்றிய போதிலும், அவர் தக்கபடி விளக்காது விட்டிருந்த சில அம்சங்களுக்கு விளக்கம் வழங்க முயன்றுள்ளனர். டியூகன் பாரனேஸ்கியின் கோட்பாடு வாணிபச்சுழல் விளக்கத்தில் சில புதிய திருப்பங்களைத் தோற்றுவித்தது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட வாணிப நெருக்கடிகளை (Crisis)ப் பற்றிய வரலாறு, பொருளாதார வாழ்வில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களை நன்கு பிரதிபலிக்கிறது. அவ்வக்காலப் பொருளாதார நிலவரங்களுக்கேற்ப வாணிபச்சுழல் நீண்டதாகவோ அல்லது

குறுகியதாகவோ இருக்கிறது. வாணிப நொடிப்புகள் அல்லது நெருக்கடிகள் 7 முதல் 11 ஆண்டுகளுக்கொருமுறை தோன்றுகின்றன. இப்படி மீண்டும் மீண்டும் ஏற்படுவதால் தான் இதனை வாணிபச்சுழல் என்கிறோம்.

பொருளாதார நெளிவுகளை, பணம் மற்றும் கடன் செலாவணி (Bank Credit) மிகைப்படுத்துகின்றன என்றாலும், பணத்தால்தான் வாணிபச்சுழல்கள் ஏற்படுகின்றன என்று எடுத்துக் கொள்ளுதல் கூடாது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் இயல்பால் வாணிபச் சுழல்கள் உண்டாகின்றன; பணக்காரணிகளால் தீவிரமடைகின்றன. நவீனப் பொருளாதார அமைப்பில் சில முக்கிய இயல்புகளிருக்கின்றன. இவை வாணிபத்தில் ஏற்ற இறக்கங்களைத் தோற்றுவிக்கின்றன. ஆகவே, நவீனப் பொருளாதார அமைப்பில் வாணிபச் சுழல்கள் தவிர்க்கப்படமுடியாதவை. இனிச்சுழல்கள் எப்படித் தோன்றுகின்றன என்றறிய ஒரு சுழலின் வரலாற்றைக் காண்போம்.

இரும்பு விலையின் ஏற்ற இறக்கங்களுக்கும் வாணிபச் சுழலின் பல்வேறு கட்டங்களுக்குமிடையே தொடர்பு காண்கிறோம். செழிப்பின்போது இரும்பின் விலை உயர்கிறது. மந்தத்தின்போது இரும்பின் விலை தாழ்கிறது. மற்றப் பண்டங்களின் விலைகளும் இரும்பின் விலையோடு சேர்ந்து ஏறி இறங்குகின்றன. ஏனெனில் இரும்பானது உற்பத்திக் கருவிகளைத் தயாரிப்பதற்கும் பயன்படும் ஒரு பொருளாயிருக்கிறது. எனவே, இரும்புக்கான தேவையினை வைத்து உற்பத்திக்கருவிகளுக்கான தேவையினை நம்மால் யூகித்தறிந்து கொள்ளமுடியும். ஆகவே, செழிப்பின்போது உற்பத்திக் கருவிகளுக்கான தேவை கூடுதலாயிருக்கிறது, மந்தத்தின்போது குறைவாயிருக்கிறது.

ரயில்பாதைகள், தொழிற்சாலைகள், கட்டடங்கள், வீடுகள் முதலிய நிலைமுதற் கருவிகள் அதிகப்படுத்தப்படும்போது, இரும்பு, நிலக்கரி, மரம் முதலிய உற்பத்திக் கருவிகளுக்கான தேவை மிகவும் உயர்கிறது. கட்டுமானத் தொழில் சுறுசுறுப்படைவதாயும், புதிய தொழிற்சாலைகள் துவக்கப்படுவதாயும் உள்ள காலப்பகுதி வாணிபச்சுழலின் செழிப்புக்கட்டம்.

சுழலில், நிலை முதற்கருவிகளைத் தயாரித்து வரும் உற்பத்திப் பிரிவுகளில் தான் பலத்த ஏற்ற இறக்கங்கள் நிகழக் காண்கிறோம். அவ்வேற்ற இறக்கங்களுக்கேற்பத் தொழில் துறை முழுவதும் பொருளாதார நடவடிக்கை உயர்வதாகவும், தாழ்வதாகவுமிருக்கிறது. இதற்குக் காரணம், தொழிலின் பிரிவுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பது.

நிலை முதற் கருவி உற்பத்தி பெருகும் போது மற்றப் பண்டங்களுக்கான தேவை விரிவடைகிறது. புதிய தொழில்களை உருவாக்கவேண்டும் என்றால், தொழிலாளர் நுகர்ச்சிப் பண்டங்களையும் மிகுதியாக உற்பத்தியாக்க வேண்டியிருக்கிறது. தொழிலின் ஒரு பிரிவில் உற்பத்தி அதிகரிக்கின்றபோது, மறறப் பிரிவுகளில் தயாரிக்கப்படும் பண்டங்களுக்கான தேவை இயற்கையாகவே அதிகரித்து, அப்பிரிவுகளின் உற்பத்தியும் பெருகுகிறது. ஆகவே பொதுப்படப் பண்டங்களுக்கான தேவை உயர்கிறது.

நிலை முதற் கருவி உற்பத்தி சிறிது சிறிதாக வளர்ச்சியடையாமல் தத்தித்தத்தி வளர்ச்சியடைகிறது. இதற்குக் காரணம்? செல்வமிக்க முதலாளித்துவ நாடுகளில் விடுதலை முதல் (Free Capital) குவிந்துகொண்டே இருக்கின்றது. இந்த விடுதலை முதலானது பாங்குகளுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து கடன் நிதிகளாக (Loanable Funds) பகிர்வு செய்யப்படுகிறது. இந்த விடுதலை முதல் (கடன் நிதி) பெருகினால் ஆக்க முதல் (Productive Capital), நிலை முதல் (Fixed Capital) திரட்சி அதிகரிக்கிறது என்று பொருளன்று. இது விடுதலை முதல் ஆளும் வகையைப் பொறுத்தது.

விடுதலை முதல், உற்பத்திப் பெருக்கமடையும்போதுதான் குவிகிற தென்பதில்லை. நாட்டின் உற்பத்தி குறைந்து செல்கின்ற போதும் நிகழ்ந்து கொண்டேதானிருக்கிறது.

நிற்க, நாட்டு வருமானத்தின் போக்கிற் கேற்ப மாறாத வருமான இனங்கள் பல முதலாளித்துவ சமூகத்தில் இருக்கின்றன. வருமான இனங்களில் மிகவும் மாறுதலடைபவை இலாபங்களும். கூலிகளுமாகும். சுழலோடு சேர்ந்து இவை மாறுதலடைகின்றன. ஆனால், பாண்டுகள் (Bonds) மீதான வட்டிச் செலுத்துகைகள் போன்ற மாறா வருமானங்கள் செழிப்பு மற்றும் மந்தத்திற்கேற்றவாறு மாறுவதில்லை.

சுழலோடு சேர்ந்து மாறாத வருமானத் தொகுதி, நாட்டு வருமானத்தில் ஒரு கணிசமான பகுதி. விலைகள் தாழ்கின்றபோது இம்மாறா வருமானப் பிரிவினரின் வாங்குந்திறன் கூடுகிறது. இதனால், இவர்களின் சேமிப்புகள் மிகுதியாகின்றன. எனவே, நிலை முதலின் திரட்சியைவிடக் கடன் பண நிதிகளின் திரட்சி தங்குதடையின்றி முன்னேறுகிறது. கடன் நிதித் திரட்சி நிலை பொருள்களை விட ஒழுங்கான முறையில் நடந்து வருகிறது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட ஒவ்வொரு வாணிப நெருக்கடி முடிவில் பாங்கு ஒதுக்கு நிதி அல்லது இருப்புகள் (Reserves) மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. சேமிப்பு வைப்புகளும் அதிகரிக்கின்றன. இப்படித் திரண்டுள்ள விடுதலையான முதல் முதலீட்டு வாய்ப்புக்களுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. இத் திரட்சியினால் வாணிப நொடிப்புக்குப் பிறகு எப்போதும் கழிவு வீதம் குறைவாகவே இருக்கிறது. முதலீடு செய்வது என்பது இந்த விடுதலை முதலை நிலைமுதலாக உருமாற்றம் செய்வதாகும்.

வட்டி வீதம் குறைவதுதான் மீட்சி தொடங்குவதற்குரிய உடனடிக் காரணம் என்பது சில பொருளாதாரிகளின் கருத்து. இந்த வட்டிவீதக் குறைப்பு யூக வாணிப (Speculation) நடவடிக்கைக்குத் தூபம் போடுகிறது என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால், அடிப்படைக் காரணம் இதுவன்று.

விடுதலை முதல், அதாவது கடன் பணநிதி திரள்வது சுழலின் எல்லாக் கட்டங்களிலும் நிகழ்கிறது. ஆனால், கடன் நிதியை ஆக்க முதலாக உருமாற்றுவதற்கு—கடன் நிதிகளைத் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஒரு தடங்கல் உண்டாகிறது. எவ்வாறு? தேக்க ஆண்டுகளில் அபரிமிதமான கடன் நிதிகள் அங்காடியில் நிரம்பிவழிகின்றன. இக்கடன் நிதிகளை ஆக்க முதலாக மாற்ற வேண்டுமென்றால், இவை உற்பத்தியின் பல்வேறு பிரிவுகளிடையே பொருத்தமான அளவுகளில் செல்ல வேண்டும். ஒருபுறம் கடன் பண நிதி, முதலீட்டுக் கால்வாய்களில் நுழைய முயல்கிறது. ஆனால், இந்த முதலீட்டு வாய்ப்புக்களோ எளிதில் காணப்படுவதாயில்லை. முதலீடு செய்யப்படா முதல் வட்டியைக் கொடுப்பதில்லை. ஆகவே, விடுதலை முதலின் திரட்சி பெருகப் பெருக, ஆக்க முதலீட்டுக்குரிய வாய்ப்புக்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், தெவிட்டு நிலை ஏற்படுமளவிற்குத் தொழிலில் முதல் நிரம்பி வழிகிறது. மறுபடியும் பார்த்தால், தினந்தோறும் திரட்சியடையும் புதிய முதல் தொழிலின் கதவுகளைத் தட்டி நிற்கிறது. புதிய முதலை உள்ளே விடாது எத்தனை நாட்களுக்குத் தொழில் தடுக்க முடியும்? ஒரு நாள் இந்தத் தடை உடைகிறது. கடன் நிதிகள் அங்கும் இங்கும் ஆக்க முதலாக உருமாறுகின்றன. அப்போது புதியதொரு செழிப்புக காலப்பகுதி துவங்குகிறது.

கடன் முதல் ஆக்க முதலாக உருமாறுவதில் முதல் கட்டம் மட்டுமே சிரமமானது. தடை தகர்ந்த பின்பு பொருளாதாரத்தின் ஒரு பிரிவில் துவங்குகின்ற பெருக்கம், அடுத்தடுத்து எல்லாப் பிரிவுகளுக்கும் எளிதில் பரவிவிடுகிறது. ஏனென்றால், தொழிலின் பிரிவுகளனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து கிடக்கின்றன.

கடன் நிதிகள் பாங்குகளில் திரண்டுள்ள போது முதலானது ஆளப்படாத வாங்குந்திறனுக இருக்கிறது. மந்த காலங்களில் இந்த வாங்குந்திறன் அங்காடித் தேவையினைப் பாதிப்பதில்லே. ஏனெனில், இது முதலீடு செய்யப்படாது முடங்கியிருக்கிறது. ஆனுல், ஏதாவது ஒரு காரணத்தின் மூலமாக ஒரு முதலீட்டு வாய்ப்பால் திறக்குமேயானுல், அப்போது இந்த வாங்குந் திறன் அங்காடியில் பயன்படு வாங்குந்திறனுக உருமாறுகிறது; ஒரு ஆக்க முதல் உருவாகிறது. இதனுல் உற்பத்திச் சாதனங்களுக்கும் நுகர்ச்சிப்பண்டங்களுக்குமுள்ள தேவை உயர்கிறது. இவ்வாறுகப் பாங்குகளில் செயலற்றுக் கிடந்த கடன் நிதிகள் முதலீடு செய்யப் பட்டு, உற்பத்தி பெருகிப் பண்டங்களுக்கான தேவை விரிந்து, உற் பத்திக்கு அங்காடி தோன்றுகிறது. திரட்சியடைந்த கடன் நிதி கள் எல்லாம் முதலீடு செய்யப்படும்வரை பண்டங்களுக்கான தேவை விரிந்து கொண்டே போகிறது. விலேகள் உயர்கின்றன. உற்பத்தி ஒளிவிடுகிறது. ஆக்க முதற் கருவிப்பொருட்களின் தயாரிப்பு அதிகரித்துக்கொண்டே போவதால், செழிப்பு நிலே மேலும் தீவிரமடைகிறது. வாணிபச் சுழலின் மேல்நோக்கிய வீச்சு தொடர்ந்து நீடிக்கிறது.

இப்படியாகச் சில ஆண்டுகள் கழிகின்றன. கடன் நிதிகள் சிறிது சிறிதாகத் தீர்ந்து போகின்றன. உற்பத்திப் பெருக்கத் திஞல் விடுதலே முதலின் அளவு மிகவும் அதிகரிக்கிறது. ஆனுல், இந்தப் புதிய விடுதலே முதல் முழுவதும் அவ்வப்போது முதலீட் டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விடுகிறது. சாதக வாணிப நில வரம் இருக்கக் காண்கின்ற தொழில் முயல்வோர்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிய விடுதலே முதலே ஆள்கின்றனர். அனேத் தும் ஆளப்பட்டுவிட்ட நிலே உண்டாகிறது. செழிப்புக் கட்டத் தின் இறுதியின்போது வட்டி வீதம் உயர்ந்து காணப்படுவது கடன் நிதி தீர்ந்துவிட்டது என்பதன் அறிகுறியாகும்.

இதுவரை, வாணிபச் சுழலின் மேல்நோக்கிய கட்டத்தைப் பற்றிய டியூகன் பாரனேஸ்கியின் முடிவுகளேத் தொகுத்துக் கூறி ஞேம். சில முக்கிய அம்சங்கள் பளிச்சிடுகின்றன; முதலீட்டுப் பெருக்கத்தின் வழியாக வாணிபத்தில் செழிப்பு நிலே உண்டாகு கிறது. எனவே, செழிப்பு நிலே தோன்றுவதற்குக் காரணம் முத லீட்டுப் பெருக்கமே. முதலீடு அதிகரிக்கும்போது துய்ப்பும் அதி கரித்து, வருமானப் பெருக்கம் ஏற்படுகிறது. அதாவது, முதலீடு அதிகரிக்கும் போது அவ்வதிகரிப்பை விடப் பன்மடங்கு அதிகரிப்பு வருமானத்தில் உண்டாகுகிறது. இது, பின்னர் கீன்சு (Keynes) டைய பெருக்கி (Multiplies) கருத்துக்கிணேயானது.

பெருக்கத்திற்குத் தேவையான நிதி மூன்று வழிகளில் பெறப்படுகிறது. அவையாவன: (a) கையிருப்புகள்; (b) வருமானப் பெருக்கம் காரணமாக அதிகரிக்கும் நடப்புச் சேமிப்புகள்; (c) பாங்குக் கடன் செலாவணி.

கடன் முதல் தீர்ந்துவிடும் போது புதிய ஆக்க முதலின் உற்பத்தி ஒரு முடிவுக்கு வருகிறது. ஆகவே, நிதி நெருக்கடியைத் தொடர்ந்து தொழில் நொடிப்பு உண்டாகிறது. அதாவது, ஆக்க முதலின் உற்பத்தி குறையும்போது, மந்தம் வாணிபத்தைச் சூழ்கிறது.

இனி பூரிப்புக் (Boom) கட்டத்தையும், உச்சித் திருப்பு முனை (Upper turning point) யையும் பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம். திரட்சியடைந்த கடன் நிதிகள் செலவழிக்கப்படும் போது செழிப்புக்கட்டம் உதயமாகிறது. செழிப்புக் காலத்தில் புதிய நிலைமுதல் உற்பத்தியாகிறது, இரும்பு, எந்திரங்கள், பொறிகள், கட்டுமானக்கருவிகள் முதலியவற்றைத் தயாரிப்பதில் உற்பத்தியாளர் ஆர்வம் காட்டுகின்றனர். இறுதியில், புதிய நிலை முதல் ஆக்க வேலை முற்றுப் பெறுகிறது—புதிய தொழிற்சாலைகள், புதிய கப்பல்கள் ஆங்காங்கே தோன்றுகின்றன. இவையெல்லாம் நிர்மாணிக்கப்பட்ட பிறகு, நிலை முதலைத் தயாரிப்பதற்கானதேவை மெல்லக் குறைகிறது. புதிய தொழில்களைத் தொடங்குவதற்கான ஆர்வம் தொழில் முயல்வோர்களிடம் குறைந்து. ஒருசில புதிய தொழில்களே தொடங்கப்படுகின்றன. அதே நேரத்தில், இரும்பு, எந்திரங்கள், ஓடுகள், பொறிகள் முதலியவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் தமது முதலை இத் தொழில்களிலிருந்து விடுதலை செய்வது எப்படி என்ற கவலையில் மூழ்குகின்றனர். இத் தொழில்களில் பலத்த மூலதனத்தை உடனே விலக்கிக் கொள்வது என்பது இயலாது. ஆகவே, உற்பத்தியைத் தொடர்ந்து செய்து வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இந்த நிர்ப்பந்தம் காரணமாக, முதற் கருவிகளின் உற்பத்தி மேலும் தொடர்கிறது. அப்போது அமித உற்பத்தி (Over production) நிலை உண்டாகிறது. உற்பத்திக் கருவிகளின் தயாரிப்பில் உருவாகும் இந்த அமித உற்பத்தியினால், தொழிலின் ஏனைய பிரிவுகளிலும் அமித உற்பத்தி உண்டாகிறது. இறுதியில், உலகம் முழுவதிலுமே அதித உற்பத்தி தோன்றுகிறது. விலைகள் சரிகின்றன. ஒரு பொதுப் பொருளாதாரச் சீர்குலைவு துவங்குகிறது.

புதிதாகத் துவக்கப்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைவதனுல், பல்வேறு தொழில்களிடையே உற்பத்திகளின் விகிதாச்சாரம் பாதிக்கப்படுகிறது. இதனுல், மொத்தத் தேவைக் கும், மொத்த அளிப்புக்குமிடையேயான சமநிலை (Equilibrium) கெடுகிறது. புதிய தொழில் துணிவுகள் ஆரம்பிக்கப்படும் போது, நுகர்வோர் பண்டங்கள் மற்றும் உற்பத்தியாளர் பொருட்களுக் கான தேவை உயர்கிறது. ஆனுல், தொழில்கள் மூடப்படும் போது, வருமானக்குறைவால் நுகர்ச்சிப் பொருள்களின் தேவை யும் குறைகிறது. இதனுல் எங்கும் அமித உற்பத்தி நிலை காணப் படுகிறது. சமுதாயத்தின் உற்பத்திச் சக்தியானது, அதன் துய்ப்புச் சக்தியை விடக் கூடுதலாக இருக்கின்றபோது அமித உற்பத்தி நிலை பிறக்கிறது.

ஆனுல், புதிய தொழில்களின் எண்ணிக்கை குறைவதால் மட்டும் உற்பத்திகளின் விகிதாச்சாரம் பாதிக்கப்படுவதில்லை—உற் பத்தியில் பொருத்தமற்ற மாறுதல் ஏற்பட்டு விடுவதில்லை. அதற்கு மற்றெரு காரணமும் உண்டு. செழிப்புக் கட்டத்தின்போது சில தொழில்கள் மற்றவைகளை விட மிகுதியாகப் பெருகுகின்றன. இவைகளின் மிகுதியான பெருக்கத்தால் யூக வாணிப நடவடிக்கை கள் உற்சாகமடைந்து மேன்மேலும் தழைக்கின்றன. எனவே, செழிப்புக்கட்டத்தின் இறுதி நிலையின் போது உற்பத்தியின் சரி யான அளவு பாதிக்கப்படுகிறது.

இவ்வாருக, வாணிபச் சுழலின் ஏறுமுகத்தைத் தொடர்ந்து தேக்கநிலை உண்டாகிறது; செழிப்பைத் தொடர்ந்து மந்தம் வருகிறது. மந்த நிலையின்போது கடன் நிதிகள் குவிகின்றன. வட்டிவீதம் தாழ்வடையும்போது மீட்சி (Revival) மெல்ல வாணிபத்தில் பிரவேசிக்கிறது. அடுத்துச் செழிப்புக்கட்டம் தொடங்கி, விடுதலை முதல் ஆக்க முதலாக உருமாறுகிறது. உள் ளார்ந்த வாங்குந்திறன் (Latent Purchasing Power) பயன்படு வாங்குந் திறனுகப் பரிணமிக்கிறது. நிலைமுதற் கருவிகளின் உற் பத்தி எல்லை மீறிச் செல்லும்போது, அமித உற்பத்தி நிலை ஏற்பட்டு, விலைகள் சரிகின்றன. மந்தம் துவங்குகிறது. இவற்றையெல்லாம் ஒரு நீராவி என்ஜினை உதாரணமாகக் கொண்டு டியூகன் பார னேஸ்கி மிகவும் அழகாகப் பின்வருமாறு விளக்குகிறுர். நீராவியின் அழுத்தம் ஒரு குறிப்பிட்ட நிலையினை அடைகின்றபோது, பிஸ்டன், சிலிண்டரின் முனை நோக்கி வேகமாகச் செல்கிறது. அங்கே நீராவி வெளியேறுகிறது. உடனே பிஸ்டன் தனது பழைய இடத் திற்கு மீண்டும் திரும்புகிறது. இதைப்போலவே திரட்சியடைந்த கடன் நிதிகள் ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டும்போது,

தொழில், செழிப்பு முனைநோக்கி விரைவாகப் பாய்கிறது. அங்கே கடன் நிதிகள் தீர்ந்து விடுகின்றன. உடனே தொழில் தனது பழைய நிலைக்கு மீண்டும் திரும்பி விடுகிறது. மீண்டும் நீராவி திரண்டு பிஸ்டன் முன்னேறுகிறது—இப்படியாக வாணிபச் சுழல் உருவெடுக்கிறது என்கிறார்.

சுழல், முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் இயல்பைச் சார்ந்த ஒரு விதியாக இருந்து வருகிறது. முதலாளித்துவ அமைப்பு ஒரு சிக்கல் நிரம்பிய அமைப்பு. ஒவ்வொரு நபரும் தனது சொந்த நலன்களைக் கருத்தில்கொண்டு செயல்படுகிறான். ஆனால், தனி நபர் அனைவரின் நடவடிக்கையின் தொகுப்பு விளைவு, தனிநபர் செயலின் விளைவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. தனிநபர் விதி கூட்டத்துக்குப் பொருந்துவதில்லை; கூட்டத்தின் விதி தனிநபரைக் கட்டுப்படுத்துகிறது. வாணிபச் சுழலில் இந்த முரண்பாட்டினைக் காண்கிறோம். ஒருபுறம் நோக்கினால் முதலீடு இருந்தாலொழியச் சேமிப்பு விருப்பத்தில் பயனில்லை. மறுபுறம் நோக்கினால் நுகர்ச்சிப் பண்டத்தை உற்பத்தி செய்வதன்றி, முதலீடுக்கு வேலையில்லை. நுகர்ச்சிப் பண்டங்களை உற்பத்தி செய்யவே முதலீடு இருக்கிறது என்று பொதுவாக எல்லோரும் கூறுவர். ஆனால், உண்மையில் முதலாளித்துவ அமைப்பில் முதலீடு நுகர்ச்சித் தேவையை நிர்ணயிக்கிறது. தொழிற் சுழலின் (Industrial cycle) கட்டங்கள் நுகர்ச்சியின் விதிகளால் நிர்ணயிக்கப் படவில்லை; மாறாக, முதலீட்டு விதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. முதலீட்டு வீதமாறுதல் காரணமாக வாணிபத்தில் சுழல் ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன. இம்முதலீட்டு வீத மாறுதல்களுக் கேற்ப நுகர்ச்சி மாறுதலடைகிறது.

செழிப்பின்போது, முதலீடானது நடப்புச் சேமிப்பைவிட மிகுதியாயிருக்கிறது. மேலும், தேவைப்படும் முதல் பாங்குக் கடன் மூலமோ அல்லது ஏற்கெனவே சேமித்த கையிருப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமோ பெறப்படுகிறது. மந்தக் கட்டத்தின்போது முதலீடு நடப்புச் சேமிப்புக்குக் குறைவாயிருக்கிறது. எச்சமுதல் கையிருப்பாக வைக்கப்படும் அல்லது பாங்குக் கடன்களை அடைப்பதற்கு ஆளப்படும். டியூகன் பாரனோஸ்கியின் வாணிபச் சுழல் கோட்பாட்டின் மையக் கருத்துக்கள் இவையே.

இக்கோட்பாட்டை விவரிக்கின்ற போது பேராசிரியர் ஹான்சன் எழுதுகிறார்: ''தனித்தன்மை வாய்ந்த புதியதொரு கோட்பாடு இது.'' ஆயினும் பின்வரும் குறைபாடுகள் கூறலாம்.

(1) முதலீட்டுத் தேவைக் கோட்பாடு நிறைவான கோட்பாடாக இல்லை.

(2) வாணிபச் சுழலின் திருப்பு முனைகள் (Turning Points) பற்றிய விளக்கம் திருப்தியாக இல்லை.

வாணிபச் சுழலின் மேல்நோக்கிய வீச்சு அல்லது ஏறு முகத்தின் போது முதலீடு பெருகுவதற்கான காரணங்கள் யாவை? முதலீட்டு வாய்ப்பைப் பிடிப்பதற்குக் கடனீவோர்களிடம் உள்ள பேரார்வம் காரணமாகவே முதலீடு பெருகுகிறது என்று டியூகன் விளக்கம் தருகிறார். ஆனால், தொழில் நுட்ப முன்னேற்றங்களாலும், பொருளாதார வளர்ச்சியாலும் முதலீடு அதிகரிக்க முடியும் என்பதைப் புறக்கணிக்கிறார். சுழலின் கீழ்நோக்கிய வீச்சு அல்லது இறங்கு முகத்தின் போது முதலீடு சுருங்கிப் போவதற்கான காரணம் என்ன? ஆட்சி யற்றிருக்கும் கையிருப்புகளும் பாங்குக் கடனும் தீர்ந்து போவதனல் முதலீடு சுருங்குகிறது என்று வற்புறுத்துகிறார். ஆனல், மேல் வாரியாக முதலீட்டுக்கான வாய்ப்புகள் மறைந்து போவதையும் குறிப்பிடுகிறார். இதற்குப் போதிய முக்கியத்துவம் தராதது ஒரு குறை.

9. பணச் சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

(2) ஸ்பியதாஃபின் கோட்பாடு (Spiethoff's Theory)

"வாழ்வு குறுகியதாயிருக்கிறது; இயற்கையோ கஞ்சத் தனமாயிருக்கிறது."

— லயனல் ராபின்சு.

டியூகன் பாரனேஸ்கியின் நூலால் கவரப்பட்டவர்கள் ஆர்தர் ஸ்பியதாஃப் (Arthur Spiethoff), கஸ்டாவ் காசல் (Gustav Cassel) ஆகியோர். இவர்களின் கோட்பாட்டில் டியூகனின் கோட்பாட்டின் முத்திரைகளைப் பல இடங்களில் காண்கிறோம். எனினும், இவர்களது கோட்பாடுகளில் தனித் தன்மையும் காணப்படுகிறது. வாணிபச் சுழல்களைப்பற்றிய ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இந்த இரு ஜெர்மானிய அறிஞரின் வாணிபச்சுழல் கோட்பாடுகளில், ஸ்பியதாஃபின் கோட்பாடு சுருக்கித் தரப்படுகிறது.

முதலீட்டில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களுக்கான காரணங்களைப் பற்றிய டியூகனின் ஆய்வின் ஒரு முக்கிய குறைபாடு, ஏன் முதலில் கடன் முதல் ஆளப்படாமல் குவிந்துகொண்டே போகிறது, பின்னர் மிகப்பேரளவில் முதலீடு செய்யப்படுகிறது என்பதை விளக்காததாகும். இதை மனத்தில்கொண்டு ஸ்பியதாஃப் தனது கருத்துக்களை விவரிக்க முயல்கிறார்.

டியூகன் பாரனேஸ்கியின் கருத்துக்களான தொழிற் சுழலின் (Industrial Cycle) ஓர் அடிப்படை இயல்பு முதலீட்டு வீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கமே என்பதையும், இயக்கக் காரணி முதலீடாக இருக்க, நுகர்ச்சி அதன் வழியே மாறுகிறது என்பதையும் அப்படியே ஒப்புக் கொள்கிறார்.

ஆனால், அசாதாரண இலாபங்கள் எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பிரிவுகளில் முதன்முதலாக முதலீடு தோன்றிப் பின்னர் மற்றப் பிரிவுகளுக்குப் பரவுகிறது. துவக்கக்கட்டத்தில் பழைய நிறுவனங்களின் பொறித் தொகுதிகள் முற்றிலும் பயன்படுத்தப் படுகின்றது. இரண்டாம் கட்டத்தில் புதிய பொறித் தொகுதிகள் நிறுவப்படுகின்றன. முதலீடு செய்யப்படக்கூடிய முதலையும், கச்சாப் பொருட்களையும் இப்புதிய நிறுவனங்கள் பேரளவில் விழுங்குகின்றன. ஆனால் அதேபோல நுகர்ச்சிப் பண்டங்கள் போதிய அளவிற்கு உற்பத்தி செய்யப்படுவதில்லை. மூன்றாவது கட்டத்தில் புதிய பொறித் தொகுதிகள் முடிந்த பண்டங்களை வெளிக்கொணர வாரம்பிக்கின்றன. இறுதிக் கட்டத்தில் நுகர்ச்சிப் பண்ட உற்பத்தி மிகவும் பெருகிய போதிலும், நுகர்ச்சித் தேவைக்கதிக மான பண்டங்கள் அங்காடியில் நிரம்பி வழிகின்றன.

இப்படி நிகழும் சுழலின் மேல்நோக்கிய வீச்சு நுகர்ச்சிப் பண்டத் தொழில்களிடமிருந்து பிறப்பதில்லை என்பதை உணர்க. மாறாக, இரும்பு, எஃகு, சிமெண்ட் முதலியவற்றைத் தயாரிக்கும நிலைமுதற் கருவித் தொழில்களிடமிருந்துதான் பிறக்கிறது. செழிப்புநிலை மும்முரமடைந்து ஆக்க வேலைகள் முடிவடைந்ததும், செழிப்புக்கு முடிவுகாலம் ஏற்படுகிறது. செழிப்பைத் துவக்குவன முதலீட்டு வாய்ப்புகள். வாய்ப்புகள் எவ்வாறு பிறக்கின்றன? தொழில் நுட்ப முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்புகள், புதிய அங்காடி வாய்ப்புகள் முதலியவை தோன்றுவதாலாகும். தொழிலின் பெருக்கம், இனங்களில் எந்தக் காரணத்தால் துவங்கிடுவதாயிருந்தாலும் சரி, ஒவ்வொரு மாபெரும் ஏறுமுகத்தின் துவக்கத்தின் போதும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் நாட்டிலும் வெளியிலும் நிறைவேறாதிருக்கின்றன. இதுதான் ஸ்பியதாஃபின் தனித்த விளக்கம். விடுதலை முதல் குவிப்பன்று செழிப்புக்குக் காரணம், புது வாய்ப்புக்களே செழிப்புக்குக் காரணங்கள்.

புதிய தொழில்கள் துவங்கப்படும் போதும், பழைய எந்திரங்கள் தேய்ந்துவிடும் போதும், புதிய எந்திரங்களை எடுத்துக்கொள்வது இன்றியமையாதது என்றாலும், ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு, மேன்மேலும் நிலை முதற் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு குறைகிறது. மேலும் முதலாக்கம் செய்வதும் பயனற்றதாகும். உற்பத்திப் பிரிவுகளில் பயன் மிகுந்த வழிகளில் ஆளப்படக்கூடிய இரும்பு, எஃகு, எந்திரங்கள், மின்சாரக் கருவிகள் முதலிய நிலைமுதற் பொருட்கள் எந்தெந்த அளவுகளில் இருக்க வேண்டும் என்பதனை நடப்பு உற்பத்தி முறைகள் நிர்ணயிக்கின்றன. நுகர்ச்சிப் பண்டங்களுக்கான உள்ளார்ந்த தேவை

(Latent Demand) நிறைய இருக்கலாம்; ஆனால் அது, விலைக்கும் வருமானத்திற்கும் ஏற்றவாறு நெகிழ்ந்து கொடுக்கக்கூடியது. அதே நேரத்தில், நிலை முதற் பொருள்களுக்கும், உறுதிப்பண்ட உற்பத்திக்குத் தேவைப்படும் கச்சாப்பொருட்களுக்கும் உள்ள தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கிறது. இவற்றிற்கான தேவை திருப்தி செய்யப்பட்டு விட்டால், பின்னர் இவற்றை உற்பத்தி செய்வதில் இலாபமிருப்பதில்லை. விலை குறைந்தாலும் சரி இவற்றிற்கான தேவையில் குறிப்பிடத்தக்க சுதரிப்பு ஏற்படுவதில்லை. ஆகவே, புதிய நிறுவனம், எந்திரம், தளவாடம் முதலியவை போதிய அளவில் தயாராகிவிட்டால், பிறகு அடுத்துச் செய்யப் படவேண்டியவை இவற்றைப் புதுப்பிப்பதும், பழுதுபார்ப்பதுமே யாம். இதைச் சரிவரப் புரிந்து கொள்ளாது, தேவை இன்னமும் தொடர்ந்து இருக்கப்போகிறது என்று தொழில் முயல்வோர்கள் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டு நிலைமுதற் பொருள்களின் உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும்போது அமித முதலீட்டுநிலை உண்டாகுகிறது. நிலை முதற் கருவிகளைத் தயாரிப்பதில் தெவிட்டல் நிலை ஏற்படுகிறது.

டியூகன் பாரனேஸ்கி, முதல் குவிதலைக் காரணியாக்கியிருக்கிறார். ஸ்பியதாஃப் ஒரு புதிய கருத்தினை நமக்கு அறிமுகப் படுத்துகிறார். அது, முதலீட்டுக்கான வாய்ப்புகள் பெருகுவதனாலே செழிப்பும் பெருக்கமும் வாணிபத்தில் உதயமாகின்றன என்பதாகும். வாய்ப்புக்களின் இழுப்பு விசையால்தான் உற்பத்தி தூண்டப்படுகிறதே தவிர, விடுதலை முதலின் தூண்டுதலால் அன்று. தொழில் நுட்ப வளர்ச்சிகளும், புதிய நிலப்பகுதிகள் வாணிபத்திற்கு வழி செய்வதும் மூலமாக மூதலீட்டுக்குரிய அரிய வாய்ப்புகள் பெருகுகின்றபோது பொருளாதாரம் விரைவாக முன்னேறுகிறது. அதாவது, கண்டுபிடிப்புகளும், தொழில் முன்னேற்றங்களும் முதற்பொருள் வாளியை (Bucket of Capital formation) நிரப்புகின்றன. அப்போது முதலீடு பெருகிச் செழிப்புக் காலம் துவங்குகிறது. அதாவது, சுயேச்சையாகத் தோன்றும் தூண்டா முதலீடுகள் (Autonomous Investments) மூலமாகச் செழிப்புநிலை உண்டாகிறது.

ஆனால், கூடுதல் முதலீடு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு முடிவதில்லை. வாளி நிரம்பிவிட்டால் பிறகு முதலீடு செய்வது என்பது பயனற்றது; முதலின் இறுதி நிலைத்திறன் (Marginal Efficiency of Capital) விரைவாகக் குறைகிறது. அப்போது மேலும் முதலீடு செய்வது நிறுத்தப்பட்டுச் செழிப்புக்கட்டம் ஒரு முடிவுக்கு வருகிறது. முதலீடு மேன்மேலும் வளர்ந்துகொண்டே

போனுல் தெவிட்டல் அல்லது நிறைவு செறிவு நிலே விரைவில் தோன்றிவிடும் என்பதை ஸ்பியதாஃப் அடிக்கடி வலியுறுத்துகிருர். நுகர்வோருக்கும் தொழில் முயல்வோருக்கும் வேறுபாடு உண்டு. நுகர்வோன் தினந்தோறும் ரொட்டித்துண்டுகளே வாங்கவேண்டிய நிலேயிலிருக்கிருன். ஆனுல், எந்திரங்களேயோ, வீட்டையே அல்லது தொழிற்சாலேயையோ தினந்தோறும் வாங்கவேண்டிய நிலேயில் தொழில் முயல்வோன் இல்லே. ஒரு தொழிற்சாலேயைத் தொடங்கியதற்குப் பிறகு, ஓர் எந்திரத்தை வாங்கியதற்குப்பிறகு, தொழில் முயல்வோன் பத்து அல்லது பதினேரு ஆண்டுகளாவது பொறுத்திருந்து பின்னர்தான் மற்ருெரு தொழிற்சாலேயை ஆரம்பிப்பது பற்றியோ அல்லது மற்ருேர் எந்திரத்தை வாங்குவது பற்றியோ ஆலோசிக்க வேண்டும். ஆகவே ஒரு தெவிட்டு நிலே முதலாக்கத்துக்கு உண்டு.

ஸ்பியதாஃப்பின் இந்த விளக்கம் டியூகனின் விளக்கத்திலிருந்து எவ்வாறு மாறுபட்டிருக்கின்றது? பூரிப்பு மற்றும் மேல் உச்சத் திருப்புமுனே (Upper Turning Point) பற்றிய டியூகளின் விளக்கத்திற்கு ஸ்பியதாஃப் ஆதரவு தெரிவிக்கிருர். மேல்நோக்கிய வீச்சின்போது வீடுதலே முதலின் தள்ளுவிசையுமிருக்கலாம், புது வாய்ப்புக்களின் இழுப்பு விசையுமிருக்கலாம். ஆனுல், மேல் உச்சத்திருப்புமுனேயில் மிகையான பெருக்கத்திற்கு இருவகைத் தடைகள் உள்ளதைக் காட்டுகிருர். பெருக்கக்கட்டம், முதலுக்குத் தேவை நெகிழ்ச்சியற்றிருப்பதால் மட்டும் தடுக்கப்படவில்லே; செலவிடத் தகுந்த முதலின் பற்ருக்குறையாலும் தடுக்கப்படுகிறது. இவைகளே தவிர, மட்டு மீறிய யூக வாணிப நடவடிக்கையும், கடுமையான விலே மாறுதல்களும் பூரிப்பு (Boom) அல்லது வாணிப வீழ்ச்சியைத் தீவிரப்படுத்தலாம். ஆனுல், தொடங்கி வைக்க முடியாது.

இவரது விளக்கத்தின்படி தளவாட உற்பத்தியானது விடுதலே முதலின் (Free Capital) அளிப்பைப் பொறுத்திருக்கிறது. செழிப்புத் துவக்கத்தின் போது மந்த காலத்தில் குவிந்த கடன் முதல் பேரளவில் கிடைக்கும். எனவே, செழிப்பின் துவக்க நிலேகளில் முதலீடு செய்வதற்குரிய முதல் நிறையக் கிடைக்கிறது. செழிப்பின் போக்கில் இம்முதல் படிப்படியாக முதலீடு செய்யப்பட்டுத் தீர்ந்து போகிறது. இப்படி இம்முதல் தீர்ந்து போகும்போது புது வருமானத்திலிருந்து வரும் நடப்புச் சேமிப்புகளே நாடவேண்டிய நிலே ஏற்படுகிறது. மேல் உச்சத்திருப்பு முனேயில் நாம் காண்பதென்ன? நடப்புத் தேவைகளுக்கும், முதலீட்டை நாடும் விடுதலே முதலுக்

கும் மிஞ்சி நிலைமுதல் பொருள் உற்பத்தியாகியிருக்கின்றது. இதனால் முதற் பொருள் உற்பத்தியின் அமிதநிலை ஏற்படுகிறது. இது மற்ற தொழில்களுக்கும் பரவுகின்றது. அப்போது எங்கும் அமித உற்பத்தி (Over Production) நிலை உண்டாகிறது. அமித உற்பத்தியால் தொழில் பாதிக்கப்படுகிறது. எனவே, அடுத்து வரும் மந்தத்தின்போது புதிய தொழில்களைத் துவக்கவேண்டும் என்ற ஆர்வம் யாருக்கும் இல்லாமல் போகிறது. புதிய தொழில் களின் வெற்றி பற்றி எல்லோருக்கும் சந்தேகம் வந்துவிடுகிறது. ஆகவே, விடுதலை முதலை வைத்திருப்போர், நிலை முதலில் முதலீடு செய்வதற்கஞ்சிச் செயலற்றிருந்து விடுகின்றனர்.

இதே போது நிலைமுதலின் உற்பத்தி குறைவதனால் வேலை யளிப்போனின் இலாபங்களும் உழைப்பாளரின் சம்பாத்தியங் களும் குறைந்து நுகர்வோரின் வருமானங்கள் சரிகின்றன. வரு மானங்கள் சரிகின்றபோது நுகர்ச்சி பாதிக்கப்படுகிறது. நுகர்ச்சி குறைகின்றபோது தொழில்கள் பாதிக்கப்படுகின்றன

இலாப, கூலி வருமானங்கள் குறைவதன் காரணமாக நுகர்ச்சி குறையும்போது, விலைகள் தாழ்கின்றன. விலைகள் தாழ்வதனால் உற்பத்தி மேலும் குறைகிறது. உற்பத்தி மேலும் குறைவதனால் கூலி, இலாப வருமானங்கள் மேலும் குறைகின்றன. மீண்டும் உற் பத்தி பாதிக்கப்பட்டு நுகர்வோர் வருமானம் மேலும் குறைகிறது. இப்படிச் சுழல் உருவாகிறது.

மந்த சமயத்தில் தொழில் முயல்வோன் உற்பத்திச் செலவு களைக் குறைக்க நினைப்பான். இதற்கு வழி உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவது அல்லது உழைப்பை மிச்சப்படுத்தும் எந்திரங் களைப் பயன்படுத்துவது. ஆனால், இவை மந்தத்தை அதிகப்படுத் தும். புதிய உற்பத்தி முறைகள் ஆளப்படும் போது பழைய எந்தி ரங்கள் மதிப்பற்றுப் போகின்றன. உழைப்பை மிச்சப்படுத்தும் நெறிகள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது பல தொழி லாளர்கள் வேலையிழந்து தவிக்க நேரிடுகிறது. இவை மந்தத்தின் கொடுமையை அதிகப்படுத்துகின்றன.

உற்பத்தியைப் பாதிக்கின்ற ஒவ்வொரு காரணியும், மக்க ளின் வாங்குந்திறனைக் குறைத்துப் பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளிலும் அமித உற்பத்தி நிலையைத் தோற்றுவிக்கிறது. ஆகவே, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத்தவிர மற்றெல்லாச் சூழ் நிலைகளிலும் உற்பத்தியைக் குறையாதிருக்கச் செய்வது அவசியம். குறைவான விலைகளில் கூடுதலாகப் பண்டங்களை விற்பதைவிடக்

கூடுதலான விலைகளில் குறைவாகப் பண்டங்களை விற்பது தொழில் முயல்வோர்களுக்கு இலாபம் தருவதாயிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்கின்றபோது மந்தமும் வேலை வாய்ப்பின்மையும் அதிகமாகின்றன.

ஸ்பியதாஃப் கொள்கைப்படி, மந்தத்துக்கும் செழிப்புக்கும் வேறுபாடு :– செழிப்புக் காலத்தில் நிலை முதல் உற்பத்தி அதிகரிக்கிறது; முதலீட்டை நாடும் முதலின் அளவு குறைகிறது. மந்த காலத்தில் நிலை முதல் உற்பத்தி குறைகிறது; முதலீட்டை நாடும் முதலின் அளவு அதிகரிக்கிறது. புதிய பிரேதசங்கள் அல்லது புதிய கண்டு பிடிப்புகள் மூலமாக நிலை முதலில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் தோன்றும்போது செழிப்புநிலை வாணிபத்தில் உண்டாகிறது. மந்த காலத்தில் பயன்படுத்தப்பெறாது முடங்கிக் கிடந்து வந்த கடன் முதல் தற்போது வெளியே வந்து முதலீட்டை நாடுகிறது. வட்டிவீதங்கள் குறைகின்றன. வட்டி வீதம் குறைவாயிருக்கின்றது என்பதற்காகத் தொழில் முயல்வோர்கள் உடனே முதலீடு செய்யத் தொடங்கி விடுவதில்லை. முதலீடு செய்தால் கிடைக்கப்போகும் இலாபம் எவ்வளவாயிருக்கும் என்பதில்தான் அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். ஆகையால், நிறைந்த இலாபங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்ற போதுதான் கணிசமான அளவில் முதலீடு செய்ய முன்வருவர். அவ்வாறில்லாது, இழப்புகள் ஏற்படும் என்று அச்சப்பட்டால் முதலீடு செய்யத் தயங்குவர் அல்லது மறுப்பர். இக்காரணத்தினால்தான் நிலை முதல் உற்பத்தி எப்போதும் ஒரே சீராக அதிகரிப்பதில்லை. ஒரு நேரம் ஆமை வேகத்தில் அதிகரிக்கிறது; மற்றொரு நேரம் புயல் வேகத்தில் அதிகரிக்கிறது. ஒவ்வொரு தொழில் நுட்ப மாறுதல்களும் எதிர்காலத்துத் தேவைகளைப் பற்றிய ஒவ்வொரு தப்புக்கணக்கும் விலைகளின் சமநிலையைப் பாதித்து, நுகர்ச்சிக்கும் உற்பத்திக்குமுள்ள பொருத்தத்தினைச் சிதைக்கிறது.

இவ்வாறாகப், புதிய பிரதேசங்கள் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை அமித முதலீட்டுக்கு வழிவகுத்து வாணிப வீழ்ச்சிகளுக்கு அடிகோலுகின்றன. என்றாலும், சமூகச் சீர்திருத்தங்கள் மூலமாகவும், முதலாளித்துவ உற்பத்தி முறையினை மாற்றியமைப்பதன் மூலமாகவும் தொழில் பேரிடர்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்துவது சாத்தியமே என்கிறார் ஸ்பியதாஃப். முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறைந்து, உலக முழுவதும் புதிய உற்பத்தி முறை பரவிக்கிடக்குமானால், முதலீட்டுப் பொங்கி வழிவுகள் (Spurts of Investment) மறைந்து வாணிபச்சுழல் பட்டுப் போவதாயிருக்கும் என்று நம்புகிறார்.

10. பணச் சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

(3) கஸ்டாவ் காசலின் கோட்பாடு

(Gustav Cassel's Theory)

> "வளர்ச்சியின் போக்கில் இன்பமும் உண்டு, இன்னலும் உண்டு. இரண்டடி முன்னே வைத்தால் ஓரடி பின்னே வரவேண்டியுள்ளது. ஆனால், வளர்ச்சியை விரும்பினால் இச்சிரமத்தை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்."
>
> — சும்பீட்டர்.

ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார அறிஞர் கஸ்டாவ் காசல், பல கருத்துக்களில் டியூகன் பாரனேஸ்கி, ஸ்பியதாஃப் ஆகியவர்களைப் பின்பற்றினாராயினும் சுழலுக்குத் தனிப்பட்ட ஒரு விளக்கத்தைத் தந்தார். வாணிபச் சுழல்களைப் பற்றிய இவரது விரிவான கோட்பாடு 'சமூகப் பொருளாதாரக் கோட்பாடு' (Theory of Social Economy) என்ற நூலின் நான்காம் பகுதியில் இடம் பெறுகிறது. வாணிபச் சுழல்களுக்கான காரணம் வளர்ச்சிச் சக்திகளே (Forces of Progress) என்று காசல் கருதுகிறார். சும்பீட்டரைப் (Schumpeter) போன்று இவரும் செழிப்புக் கட்டங்களுக்கான காரணங்களை முதலாளித்துவச் சமூகத்தில் தோன்றிடும் புதிய மாறுதல்களில் காண்கின்றார். எனினும் இவர்களிடையே வேறுபாடுகள் உண்டு. சூல் காலம் முடிவடைந்து, புத்தாக்க விளைவுகள் அங்காடிகளை வந்தடையும்போது பல்வேறு பண்டங்களின் விலைகளுக்கிடையேயான உறவுகள் குலைந்து போவதனால் செழிப்பு முடிவுறுகிறது என்கிறார் சும்பீட்டர்; மூலதன அளிப்புக்கு மீறிய அமித முதலீட்டால் (Over Investment) செழிப்பு முடிவுறுகிறது என்கிறார் காசல்.

பொருளாதார நிகழ்ச்சிகள் கணக்கியல் வளை கோடுகளால் (Mathematical Curves) நிர்ணயிக்கப்படுகின்றன என்ற கருத்தை இவர் ஏற்கவில்லை. பொருளாதார வரலாற்றில் தற்காலிகக் காரணிகளால் பொருளாதார மாறுதல்களும், நெருக்கடிகளும் விளைகின்றன என்றிவர் கருதினார். நவீனப் பொருளாதார அமைப்பில் ஊன்றியது வாணிப ஏற்ற இறக்கங்கள் என்று கருதவில்லை. காரணத்தைச் சமூகம் மற்றும் பொருளாதாரத் திட்டத்தில் தோன்றிடும் புரட்சிகரமான மாறுதல்களில் காணக்கூடும் என நினைத்தார். குறிப்பாகத் தன்னிறைவு மிகுந்ததொரு பழைய விவசாயப் பொருளாதார அமைப்பு, உழைப்பின் பகுப்பு (Division of Labour), பரிவர்த்தனை முறை முதலியவற்றை அடிப் படையாகக் கொண்ட தொழில்மய மிகுந்த பொருளாதார அமைப்பாக மாறும் நிலையில் வர்த்தக ஏற்ற இறக்கங்கள் ஏற்படு கின்றன என்று கருதினார். வளர்ச்சியால். தொழில் நுட்ப மாறு தலால், பூர்வப் பொருளாதார அமைப்பு மாறித் தொழில் மயமான பொருளாதார அமைப்பு உருவாகும் போது நெளிவுகள் ஏற்படு கின்றன. இவரது விளக்கத்தைச் சற்று விரிவாகக் காண்போம்.

வளர்ச்சிச் சக்திகளால் வாணிபச் சுழல்கள் விளைகின்றன. இச்சக்திகளில் முக்கியமானது தொழில் நுட்ப முன்னேற்றம் என்றாலும், புதிய நாடுகள் கண்டு பிடிக்கப்படுவதும், மக்கட் தொகையின் வளர்ச்சியும் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு புத்தாக்கம் அல்லது கண்டுபிடிப்பு மூலமும் நிலைமுதலைப் பயன்படுத்தி இலாபத்தைக் குவிப்பதற்கான வாய்ப்புகள் பிறக்கின்றன. உதாரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் பல்வேறு மின்சாரக் கண்டுபிடிப்புகள் ஆளப்படத் தொடங்கியபோது நிலை முதலுக்கான தேவை பெரிதும் அதிகரித்தது. மின்சார டிராம் வண்டிகள் (Tram Ways), மின் விளக்குகள், மின்சார நிலையங்கள், தொலைபேசிகள் ஆகியவற்றிற்கு நிலைமுதற் பொருட்கள் மிகுதியாகத் தேவைப்பட்டு, இவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறே புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்படும்போது நிலைமுதற் பொருட்களுக்கான தேவை மிகுதியாகிறது. புதிய நாட்டினை முன்னேற்ற வேண்டும் என்றால் போக்குவரத்துச் சாதனங்கள், பாலங்கள், அணைக்கட்டுகள், மின் விளக்கு வசதிகள், கட்டடங்கள் முதலியவை—அதாவது நிலைமுதற் பொருட்கள்-நிறையத் தேவைப்படுகின்றன. ஆகவே, புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்படும்போதும், வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஊக்கம் பிறக்கிறது; வாணிப உலகில் பரபரப்புணர்ச்சி பரவி நிற்கிறது.

வட்டி வீதத்தை விட முதலீட்டு விளைவுகள் (Return) ஏற்றமாயிருக்கும்படியான சூழ்நிலையினை ஒரு வளர்ச்சிச்சக்தி—ஒரு புத்தாக்கம்—உருவாக்கிக் கொடுக்குமேயானால், நிலை முதற் பொருட்களின் உற்பத்தி அதிகப்படும். இலாபங்கள் பெருகும். ஆகவே, புத்தாக்கங்கள் போன்றவை மூலம் இத்தகைய வாய்ப்புகள் தோன்றும் போது நிலைமுதற் பொருட்களின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டு, வாணிபத்தில் செழிப்புநிலை அரசோச்சத் துவங்குகிறது.

செழிப்பைத் தூண்டிவிட்ட சக்தி மறைந்து விடும்போது செழிப்புநிலை படிப்படியாக மறைந்து, உற்பத்தி நடவடிக்கைகள் மெல்லச் சுருக்கமடைவதாயிருக்கலாம் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், உண்மை இதுவன்று. செழிப்புநிலை திடீரென்று நின்றுவிடுகிறது. அதிலும் பெரும்பாலும் நெருக்கடி (Crisis) யில் முடிவுறுகிறது. அப்போது மாபெரும் இழப்புகளும், பாங்கு முறிவுகளும், நம்பிக்கைத் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. நிலை முதற் பொருட்களின் உற்பத்தி குறைகிறது. உற்பத்தி நடவடிக்கைகளில் தொய்வு ஏற்படுகிறது. சோர்வு மனப்பான்மை உற்பத்தியாளர்களிடம் பரவுகிறது. வாணிபத்தில் மந்தத்தின் ஊர்வலச் சத்தம் கேட்கிறது. சரிவு அல்லது மந்த காலப்பகுதியில் நிலை முதற் பொருள் உற்பத்தி முன்பிருந்த மட்டத்திற்குக் கீழே இறங்கிப் போய்விடுகிறது. செழிப்புநிலை திடீரென்று நின்றுவிடக் காரணம்? தொழில் முயல்வோர்களின் கணக்குகளில் ஏதோ ஒன்று தவருகப் போய்விட்டிருக்கிறது. எனவேதான் இந்தத் திடீர்த் திருப்பம்.

தொழில் முயல்வோர்கள் செய்த தவறு என்ன? நுகர்வோர் தேவைகளை அளவுக்கு மீறி எதிர்பார்த்து அமித உற்பத்தி (Over Production) செய்யப்படுவதில்லை. அமித உற்பத்தி செய்யப்பட்டிருப்பதற்கான அறிகுறிகளே கிடையாது. நுகர்ச்சிக்குரிய தேவையினைப் பூர்த்திசெய்யும் பொருட்டுச் செழிப்பின் இறுதிக் கட்டத்தின்போது கூட, நிலை முதலின் பணிகளை மேன்மேலும் எடுத்துக்கொள்வது பெரிதும் அவசியமாகிறது. நிலைமுதற் பொருட்களின் உற்பத்திகான எஃகு மற்றும் இரும்பு முதலிய சாதனங்கள் கிடைப்பது அரிதாகி அவைகளின் விலைகள் கூட உயர்ந்து போய்விடும் நிலை ஏற்படுகிறது. எனவே, நுகர்வோர்களின் தேவைகளோ அல்லது நிலை முதற் பணிகளுக்குச் சமுதாயத்திடம் உள்ள விருப்பமோ மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மூலதனத்தின் அளிப்பு—சேமிப்பின் பருமன்—மிகை மதிப்பீடு செய்யப்

படுகிறது. அதாவது சமுதாயத்தின் சேமிப்புக்கும் சக்தி மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, முதல் பற்ருக்குறை ஏற்படுகிறது.

செழிப்பின் போது உற்பத்தி செய்யப்படும் நிலைமுதலின் அளவானது, சேமிப்புகளின் அளிப்பை, எதிர்கால உற்பத்திக்குத்துணை புரியும் பொருட்களைத் தயாரிப்பதற்கெனச் சாதனங்களை ஈடுபடுத்தச் சமுத்ாயத்திடம் உள்ள ஆர்வத்தைச் சார்ந்திருக்கிறது. சமுதாய விருப்பத் தீவிரத்தை வட்டி வீதங்கள் அளவிட்டுக் காட்டுகின்றன. வட்டி வீத மட்டத்தைக் கொண்டுதான் தொழில் முயல்வோர்கள் முதல் அங்காடியின் (Capital market) உண்மையான நிலவரத்தைப் புரிந்துகொள்கின்றனர். வட்டி வீதங்கள் தாழ்வான மட்டங்களில் உள்ளபோது, நிலை முதற் பண்டங்களின் உற்பத்திக்கு மேன்மேலும் முதல் ஆளப்பட்டு, இப்பண்டங்களின் உற்பத்தித்துறைகளில் நடவடிக்கைகள் சுறுசுறுப்படைகின்றன. வீடுகள், தொழிற்சாலைக் கட்டடங்கள், ரயில்பாதைகள் முதலியவற்றைக் கட்டி முடிப்பதற்குச் சற்று நீண்டகாலம் தேவைப்படுகிறது. எனவே, இவைகளுக்குச் சமுதாயத்திடமிருந்து எந்த அளவு சேமிப்புகள் கிடைக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரிய முடியாதுபோய், சேமிப்புகளின் அளவு மிகைமதிப்பீடு செய்யப்பட்டு விடுகின்றன. இங்கேதான் இடர்ப்பாடு ஆரம்பிக்கிறது.

பெருக்கத்தின் போக்கில் சேமிப்பின் வளர்ச்சிக்குத் தடைகள் தோன்றுகின்றன. குறிப்பாக, இலாபங்களை விடக் கூடுதலாகக் கூலிகள் உயர்வதனுல், சேமிப்புகளின் வளர்ச்சி தடைப்பட்டுப் போகிறது. சமூகத்தில் காணும் வகுப்பினரில் இலாப மீட்டுவோரே (Profit makers) அதிகமாகச் சேமிப்பவராயிருக்கின்றனர். கூலி சம்பாத்தியக்காரர்கள் மிகவும் குறைவாகச் சேமிக்கின்றனர். செழிப்புக் கட்டத்தின் துவக்க நிலைகளில் இலாபங்கள் மிகவும் அதிகமாயிருக்கும்போது சேமிப்பும் முதல் திரட்சியும் உயர்ந்த பட்சமாயிருக்கின்றன. ஆனல், செழிப்பின் போக்கில் உற்பத்தி நடவடிக்கைகள் பெருகிக்கொண்டே போகும்போது தொழிலாளி அளிப்புக் குறைந்துபோய்த் தொழிலாளர் வேலைக்குக் கிடைப்பதரிதாகி, அவர்களுடைய கூலிகள் உயர்கின்றன. கூலிகள் உயர்கின்றபோது தொழில் முயல்வோர்களின் இலாபங்கள் குறைகின்றன. இலாபங்கள் குறைகின்றபோது சேமிப்புகள் குறைந்து பற்ருக்குறை ஏற்படுகிறது. மிகுதியாகச் சேமித்து வந்தோருடைய வருமானங்கள் சுருங்கிப்போகின்றன. எனவே, தமது சேமிப்புகளின் அளவை இவர்கள் குறுக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மிகவும் குறைவாகச் சேமிக்கும் கூலிச் சம்பாத்தியக்

காரர்களின் வருமானங்கள் கூடுகின்றன. இவ் வருமானக் கூடுதல்கள் பெரும்பாலும் நுகர்ச்சிப்பண்டங்களை வாங்குவதற்குத்திருப்பி விடப்படுகின்றன. இதன் நிகர விளைவு என்னவென்றால், சேமிப்புகளின் அளவு குறையவில்லையென்றாலும், பெருகுவதாயில்லை. ஆகவே முதல், வாணிப உலகின் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை.

சேமிப்புகள் பற்றாக்குறையாக இருக்கின்றன என்பது வட்டி வீதங்கள் உயர்கின்றபோது தெரியவருகிறது என்கிறோம். வட்டி வீதம் உயர்வதனால் பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. வட்டி வீதம் உயர்வதனால் உற்பத்திக் கருவிகளின் விலைகள் தாழ்வாகும்; உற்பத்திச் கருவிகளின் தயாரிப்பாளர்கள் அதிர்ச்சிக்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகின்றனர். இக்கருவிகள், கட்டடங்களின் தயாரிப்பு முடிவடைகின்றபோதுதான் சிரமம் தெரியவருகிறது இறங்கும் விலைகளில் உற்பத்திக் கருவிகளை விற்பதில் தயாரிப்பாளர்களுச்கு மாபெரும் சிரமங்களிருக்கின்றன. அதோதுகூட, முதல் பற்றாக்குறையால் நிகழ்கால அன்றாட உற்பத்திச் செலவுகளைச் சந்திப்பதுகூட அவர்களுக்குத் தொல்லை மிகுந்ததாயிருக்கிறது. ஏற்கெனவே துவக்கப்பட்ட உற்பத்திப் பணிகளைக் கூடத் தொடர்ந்து முடிப்பது சிரமமாயிருக்கிறது. எனவே இவைகளில் சில கைவிடப்பட்டு இழப்புகள் நேர்கின்றன. நிலைமையைச் சமாளிக்கப் பாங்குகளால் எதையும் செய்வதற்கில்லையா? பாங்குகள் சில கடன் உதவிகளை வழங்கத்தான் செய்கின்றன. ஆனால், இவை செழிப்பின் துவக்கக் கட்டங்களில்தான் வழங்கப்படுகின்றன. செழிப்பின் பிற்பகுதிகளில் உற்பத்திக் கருவிகளின் விலைகள் சரிந்து தொழில் நிறுவனங்கள் பல கவிழும்போது பாங்குகளால் எதையும் செய்வதற்கில்லை: நிலைமை கட்டுக்கடங்காதல் போய் விடுகிறது. சேமிப்புகளின் அளவு வேதனை விளைவிக்குமளவிற்குக் குறைவாயிருந்து, முதலின் கிடைப்பருமை உயர்ந்தபட்சமாயிருக்கிறது. அப்போது செழிப்பு நிலை முடிவுறுகிறது.

இவ்வாறாக, நெருக்கடிக்கான காரணம் முதல் அங்காடியிலிருந்துதான் பிறக்கிறது என்று காசல் கருதுகிறார். அமித சேமிப்பால் வாணிபத்தில் நெருக்கடி உண்டாகிறது என்கின்றனர் நுகர்ச்சிக் குறைவு வாதிகள் (Under Corsumptionists). ஆனால், காசல், சேமிப்புகளின் பற்றாக்குறையால்தான் வாணிப நெருக்கடி உருவாகிறது என்று வாதிடுகிறார். துவக்கப்பெற்ற நிலைமுதற் பொருட்களின் உற்பத்தியினைச் சேமிப்புகளின் அளிப்புப் பற்றாக்குறை காரணமாகத் தொடர்ந்து முடிக்க முடியாது போகிறது. சேமிப்புகள் குவியப் போகின்றன என்ற மிகைமதிப்பீட்டு மூலம்

ஆரம்பிக்கப்பட்ட நிலைமுதற் பொருள் உற்பத்திகளெல்லாம் சமுதாயத்தின் சேமிப்பு வளர்ச்சி செழிப்பின் போக்கில் தடைப் படும்போது தடுமாற்றத்திற்குள்ளாகின்றன. வளர்ச்சிச் சக்தி களால்தான் இத்தகைய மிகைமதிப்பீடுகள் செய்யப்படுகின்றன என்று காசல் எண்ணுகிறார். ஆகவே, சுழல் வகை மாறுதல்கள் அகற்றப்படவேண்டுமென்றால், வளர்ச்சிச் சக்திகள் நீக்கப்பட வேண்டும்; ஆனால், வளர்ச்சிச் சக்திகளை நாம் நீக்குவதற்கில்லை. ஏனெனில், நவீன உலகின் நல்வாழ்வு இவைகளிடமிருந்துதான் பெறப்பட்டிருக்கின்றன. வளர்ச்சியும், முன்னேற்றமும் நம் மிடையே இருக்கின்றவரை வாணிபச் சுழல்களும் இருந்துதான் தீருமெனக் காசல் கூறுகிறார். தொழில் நுட்ப வளர்ச்சி, முன் னேற்றம் முதலியவற்றால் செழிப்புநிலை வாணிபத்தில் துவங்கு கிறது; முதலீட்டுக்குரிய நிதிகள் தீர்ந்துவிடும்போது மந்தம் துவங்குகிறது.

வளர்ச்சி என்று நாம் கூறுகின்றபோது மக்கட்தொகை அதி கரிப்பால் சமுதாயத்தின் நிலைமுதலில் அதிகரிப்புத் தோன்றுகிறது. நிலை முதற் பொருட்களின் அளவு அதிகரித்தால் வாணிபச்சுழல் கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் மிகுதியாகின்றன. எனவே, மக்கட்தொகை வளர்ச்சிக்கும் வாணிபச் சுழல்களின் தீவிரத்திற் கும் இடையே ஒரு தொடர்பு இருக்கவே செய்கிறது. மக்கட் தொகையளவு மாறாதிருந்துவரும் ஃபிரான்சு நாட்டை விட, மக்கட் தொகையளவு விரைவாக வளர்ந்துவரும் ஜெர்மனி மற்றும் அமெரிக்கா முதலிய நாடுகளில்தான் வாணிபச்சுழல்கள் மிகுதியாகக் காணப்படுவதாயும், தீவிர மிகுந்தவையாயுமிருக் கின்றன என்றும் இவர் கூறுகிறார்.

வாணிபச் சுழல்களின் எதிர்காலம் பொருள்சார் முன்னேற் றத்தின் (Material Progress) எதிர்காலத்தைச் சார்ந்திருக்கிறது. நிலை முதற் பண்டங்களுக்குத் தேவை எழுவதற்கு மூலகாரணம் தொழில் நுட்பக்கண்டுபிடிப்புகளை, புதிய நிலப்பகுதிகளை நன்கு பயன்படுத்தி முன்னேற்றமடையவேண்டும் என்ற மன உறுதியே. "வளர்ச்சிப்பாதையின் பல்வேறு கட்டங்களில் கிடைப்பருமை யோடு செய்கின்ற போராட்டத்தின் விளைவே வாணிபச்சுழல் களின் ஏற்ற இறக்கங்கள்." *(காசல்)*

11. பணச் சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

(4) சும்பீட்டரின் கோட்பாடு
(Schumpeter's Theory)

> ''வாணிபச் சுழல்களுக்கான ஒரு சரியான தீர்வு தேக்க நிலைமைகளை ஒழித்து அரைப் பூரிப்பு நிலைமையை நம்மிடையே நிரந்தரமாகத் தங்கச் செய்வதே தவிர, பூரிப்புக்களை ஒழித்து அரைத்தேக்க நிலைமையை நம்மிடையே நிரந்தமாகத் தங்கச் செய்வது அல்ல.''
>
> — கீன்ஸ்.

தலைசிறந்த பொருளாதார அறிஞர்களில் ஒருவரான ஜோசப் சும்பீட்டர், ஒரு முதலாளித்துவ நாட்டின் பொருளாதார அமைப்பில் நிகழ்வனவாயுள்ள புதுமைகள் அல்லது புத்தாக்கம் (Innovations) மூலமாக வாணிபத்தில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்று கூறுகிறார். 'பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு (The Theory of Economic Development, 1911) 'வாணிபச்சுழல்கள்' (Business Cycles, 1939), என்ற இவரது சிறப்பு மிகுந்த நூல்களில் வாணிபச் சுழல்களைப்பற்றிய புத்தாக்கக் கோட்பாட்டின் விளக்கங்களை நாம் காண்கிறோம். இவரது கோட்பாட்டின் மையக் கருத்தாக இருப்பது புத்தாக்கமே. புத்தாக்கம் என்றால் நடைமுறை உற்பத்தி முறைகளில் ஒரு புதுமையை—புதிய முறையைப் படைத்தல் என்று பொருள்.

புத்தமைப்பில் பின்வருவன அடங்குகின்றன. (a) எந்திரக் கண்டுபிடிப்பு ஒன்றை அறிமுகப்படுத்துதல்; (b) புதிய பண்டமொன்றைப் படைத்தல்; (c) புதிய உற்பத்தி முறை ஒன்றினைப் புகுத்தல்; (d) புதிய அங்காடிகளைத் தேடிக் கண்டுபிடித்தல் (e) கச்சாப்பொருள்களுக்கான புதிய மூலங்களை (Sources)

வெளிக் கொணருதல்; (f) பழைய கச்சாப் பொருள்களுக்குப் பதிலாகப் புதிய கச்சாப் பொருட்களைப் பயன்படுத்துதல்; (g) தொழிலமைப்பு முறைகளில் மாறுதல்களைக் கொண்டு வருதல்; (h) வர்த்தக நிர்வாகத்தில் புதிய முறைகளை ஆளுதல்.

கண்டுபிடிப்பு (Invention) என்பதற்கும், புத்தாக்கம் என்பதற்கு மிடையே ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. கண்டுபிடிப்பு என்றால் முற்றிலும் புதிதாக இருக்கின்ற ஒன்றைக் கண்டுபிடித்தல். புத்தாக்கம் என்றால் கண்டுபிடிப்பை நடைமுறையில் ஆளுதல். கடுமையான போட்டியினிடையே தொழிலை நடத்திச்சென்று இலாபத்தை ஈட்டுவது என்பது மிகவும் சிரமம். எனவே, உற்பத்தியாளர்கள் புத்தாக்கத்தின் உதவியை நாடுகின்றனர். இதனால் போட்டி அமிதமாயுள்ள முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் புத்தாக்கம் ஓர் இயக்க காரணியாக இருக்கிறது.

உற்பத்தி முறைகளும், பண அளிப்பும் மாறாதிருக்கின்ற ஒரு பொருளாதார அமைப்பில் வாணிபச் சுழல்கள் தோன்றுவதில்லை, தோன்றவும் முடியாது. இத்தகைய தேக்க நிலை (Static State) பொருளாதார அமைப்பில் போர், தானிய உற்பத்தி மாறுதல்கள் முதலிய புறக் காரணிகளால் அமைதிக் கேடுகள் அல்லது மாறுதல் ஏற்படலாம். ஆனால், இவை சுழல் மாறுதல்களாக அமைவதில்லை; மிகவும் சாதாரண மாறுதல்களாகவே இருக்கின்றன. ஆகவே, இம் மாறுதல்களைச் சும்பீட்டர் முக்கியமானவையாக எடுத்துக் கொள்ளவில்லை. மக்கட்தொகை அல்லது மூலதன அதிகரிப்புப் போன்ற நெடுங்கால மாறுதல்களால் கூட வளர்வீத சமன்கேடு (Programme Disequilibrium) விளைவதில்லை என்றிவர் கருதுகிறார். ஏனெனில், இவை படிப்படியாக ஜீரணிக்கப்பட்டு, சமநிலை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருவதாகக் காணப்படும் என்று நம்புகிறார். புத்தாக்கமில்லாத பொருளாதார அமைப்பு ஒரு அசலனமான (Static) நிலையிலிருக்கிறது. முன்பு நிகழ்ந்தவையே சிறிதும் மாற்றமில்லாது மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன. முற்றிலும் மாற்றமில்லாதிருந்து வருகிறது. செயல்பட்டு வருகிறது. இதில் நுகர்வோர் விருப்பங்களும், தேவைகளும், உற்பத்தியாளர் தயாரிப்பு முறைகளும், அமைப்பும் மாறாதிருந்து வருகின்றன. எந்திரச் சாதனம் புதுப்பிக்கப்படுகிறது. ஆனால், பெருக்கப்படவில்லை. அதோடு நிகரச் சேமிப்புகளும் (Net Savings) இருப்பதாகத் தெரியக்காணோம். இது ஒரு அசலன நிலைப் பொருளாதார அமைப்பு. இவ்வகை யமைப்பில் வாணிபச் சுழல் தோன்றிடுவதற்கான வாய்ப்புக் கிடையாது.

ஆனால், நமது பொருளாதார அமைப்பு தேக்க நிலைப் பொருளாதார அமைப்பாக இருக்கவில்லை. மாறாக, இயக்க (Dynamic) நிலைப் பொருளாதார அமைப்பாக இருக்கிறது. இதன் இயக்க நிலைப் பண்பு தொழில் முயல்வோனின் உண்மையான பணி வெறும் நிர்வாகத்திலோ அல்லது குருட்டடியோக இலாபங்களைப் பெறுவதிலோ அல்லது ஆபத்தினை (Risk) ஏற்றுக்கொள்வதிலோ அடங்கியிருக்கவில்லை. பிறகு எதில்தான் அடங்கியிருக்கிறது? புதுமையைப் புகுத்துவதில், புதிய முறைகளில் பண்டங்களைத் தயாரிப்பதில், புதிய பண்டங்கள், பணிகள் ஆகியவற்றைப்படைப்பதில், புதிய அங்காடிகளைத் தேடிக்கண்டுபிடிப்பதில் அடங்கியிருக்கிறது என்று சும்பீட்டர் கூறுகிறார். தொழில் முயல்வோனின் புத்தமைப்புகளே—தொழில் நுட்பம் மற்றும் அங்காடிப் புதுமைகளே—நமது பொருளாதார வாழ்வில் மாறுதலைத் தோற்றுவிக்கும் மகத்தான காரணிகளாக இருக்கின்றன. புதுமை புகுத்தப்படும்போது பொருளாதாரச் சமநிலையில் மாறுதல் நிகழ்கிறது, வர்த்தக நடவடிக்கைகள் மாறுதலடைகின்றன. வாணிபச் சுழல் பிறக்கிறது.

புத்தாக்கங்களின் வழியே செலவுகள் குறைகின்றன என்பது மட்டும் முக்கியமல்ல, சாதனங்களின் உற்பத்திக் கலவை முறையே மாறுகிறது. புத்தம் புதிய உற்பத்தி முறைகள் தோன்றுகின்றன. இவை மூலமாக உற்பத்திச் சாதனங்களை ஒரு புதிய முறையில் கலவை செய்வது சாத்தியமாகிறது. இதனால் எதிர்பார்க்கைகள் மிகுதியாகி, எந்திரச் சாதனத்தைப் பெருக்கவேண்டும் என்ற விருப்பம் அவனிடம் மேலோங்குகிறது.

பொருளாதார அமைப்பு சமநிலையில் இருக்கிறது என்பதாகவும், எல்லா உற்பத்திக் காரணிகளும் வேலைக்கு எடுத்துகொள்ளப்பட்டிருக்கின்றன என்பதாகவும், தொழில் முயல்வோாகளுக்கு இலாபங்கள் கிடைப்பது சூன்யமாயிருக்கிறது என்பதாகவும் முதலில் சும்பீட்டர் வைத்துக் கொள்கிறார். இத்தகைய சூழ்நிலை நடைமுறையில் காணப்படவில்லை என்றாலும், இதனை ஒரு துவக்குமிடமாகக் கொண்டால்தான் வாணிபச்சுழலின் அலையொத்த ஏற்ற இறக்கத்தை விவரித்துச் செல்வது எளிதாயிருக்கும். சுழல் ஏற்ற இறக்கங்கள் புறக்காரணிகளால் விளைவனவாயிருந்தாலும் சரி அல்லது பொருளாதர அமைப்பால் உண்டாக்கப்படும் ஓர் உள்நாட்டு மாறுதலால் விளைவனவாயிருந்தாலும் சரி, அவற்றால் சமநிலையின் மாறுதல்கள் நிகழ்கின்றன. பொருளாதார அமைப்புச் சமநிலையில் உள்ளபோது பொருளாதார மதிப்புகள் (Economic

Values) ஓர் இயல்பான மட்டத்திலிருக்கின்றன; சமநிலை மாறு தலடையும்போது இவை உயர்ந்த மட்டத்திற்கோ அல்லது தாழ்ந்த மட்டத்திற்கோ போகின்றன.

சமநிலை மாறுவதும், தொழில் முயல்வோரின் நடவடிக்கைகள் பெருகுவதும், குறிப்பாக முதற் பொருட்களுக்கு இவர்களிடமுள்ள தேவை மேன்மேலும் கூடிக்கொண்டே போவதும் புத்தாக்கங் களின் விளைவுகள். தொழில் நுட்பப் புத்தாக்கங்களால் (Technical Innovations) மூலதனத்திற்கான தேவை பெரிதும் உயர்கிறது. புதிய எந்திரச் சாதனம், கட்டடங்கள் முதலியவற்றில் பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டியிருக்கிறது. எனவே, பலர் தயங்கக் கூடும். பெரும்பாலான வர்த்தகர்கள் பழைமைப்பற்றுளர்களாய் (Conservative) இருக்கின்றனர். ஆகவே, புத்தாக்கங்களைச் செய் வதற்குப் பலர் உடனே முன் வருவதில்லை. புதிய முறைகள், புதிய பாதைகள் ஆபத்துக்களை விளைவிக்கலாம் என்ற அச்சம் இவர் களுக்கிருக்கிறது. மேலும், பழைய பாதை எளிதானது என்ப தால் அதற்குத் தொழிலாளர், வாடிக்கையாளர்கள், பணமீவோர் (Money Lenders) முதலியோரின் ஆதரவும் இருக்கிறது. ஆனல், ஒரு புத்தாக்கம் வெற்றிகரமாக அமல் செய்யப்பட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டால், அப்புத்தாக்கத்திற்குள்ள எதிர்ப்பு உதிர்ந்து விடுகிறது. பின்னர் அப்புத்தாக்கம் பிரபலமாகிவிடுகிறது. முத லில் சிலர், அடுத்துப்பலர், அப்புத்தாக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றனர். தலைமையேற்க ஒருசிலரே இருப்பர்; பின்தொடர்ந்து வரப் பலர் இருப்பர். ஒருசிலர் செய்த புத்தாக் கங்கள் ஓங்கிய புகழ் அடைவதைக் காணும் மற்றவர்கள், தாங் களும் அவைகளைப் பின்பற்றிப் புதுமைகளைப் புகுத்தவேண்டும் என்ற எழுச்சியினைப் பெறுகின்றனர். புதுமைகளின் ஆட்சி அலை யலையாகப் பரவுகிறது. புதிய சாதனைகள் பூத்துக்குலுங்கி, வளர்ச் சியின் அறிகுறிகள் வாணிபத்தில் தோன்றிச் செழிப்புநிலை துவங்குகிறது. இப்படி ஒரு முன்னேடியைப் பின்பற்றிப் பலர் புதுமையாட்சியில் முனைவதை 'மந்தை இயக்கம்' (Herdlike movement) என்கிருர்.

சும்பீட்டர் புதுமை ஆட்சியை யன்றியும், பாங்குக்கடன் பெறும் பங்கையும் வற்புறுத்துகிருர். செழிப்புநிலை மேன்மேலும் பரவவேண்டும் என்றால் பாங்குகளின் கடன் உதவி பெரிதும் தேவைப்படுகிறது; புத்தமைப்பாளர்களுக்கும் பணம் வேண்டு மென்றால் மற்றவர்கள் பணம் கொடுத்துதவவேண்டும். ஆனல், இயக்க நிலைப் பொருளாதார அமைப்பில் நிலைமை அவ்வாறில்லை. கடன் செலாவணிப் பணத்தின் மொத்த அளிப்பை அதிகப்

படுத்தி, வெற்றி வாய்ப்புள்ள புத்தமைப்பாளர்களுக்கு வேண்டிய கடன் உதவிகளை வழங்கப் பாங்குகள் முன்வருகின்றன. கடன்களைப் பெறும் புத்தமைப்பாளர்கள் கூடுதலான விலைகளைக் கொடுத்து உற்பத்திச் சாதனங்களைத் தம்பக்கம் திருப்பிக்கொள்ள முயலுகின்றனர். போட்டி மத்தியில் சாதனங்களைப் பெறவேண்டுமெனில் கூடுதலான விலைகளைத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. விலைகள் உயர்கின்றன. புத்தமைப்பாளர்களுக்குத் தேவைப்படும் அளவில் சாதனங்கள் கிடைக்கும் வரையில் விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன.

செழிப்பு நிலையின் வளர்ச்சிக்கு இந் நிலவரங்கள் சாதகமாயிருக்கின்றன. தொழில் முயல்வோர்களால் செய்யப்படும் அதிகப்படியான செலவீடுகளால் முதற்பொருட்களின் உற்பத்தியாளர் வருமானங்கள் கூடுகின்றன. அடுத்துத் தொழிலாளர் கூலிகள் உயர்ந்து, நுகர்ச்சிப்பண்டங்களுக்கான தேவை வளர்கிறது. சாதனங்கள் எல்லாம் முதற்கருவி, எந்திர உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விடுவதனுல், நுகர்ச்சிப் பண்ட உற்பத்தியில் தொய்வு ஏற்படுகிறது. தேவை உயர்ந்துவரும்போது இப்படி நுகர்ச்சிப் பொருள் உற்பத்தி தொய்வடைவதனுல், இவற்றின் விலைகள் மேல்நோக்கித் தாவுகின்றன. இதனுல் நிறுவனங்களின் இலாபங்கள் கூடுகின்றன. செழிப்பு அடர்த்தியடைகிறது.

சமநிலையின்போது சாதனங்களுக்கு நிறைவுடை வேலைவாய்ப்பு (Full Employment) நிலவுகிறது என்று வைத்துக் கொள்ளாமல் உற்பற்திச் சாதனங்களின் மொத்த அளிப்புக் கூடுதலாகிறது என்று வைத்துக்கொண்டாலும்கூட நிலைமை இவ்வாறுதானிருக்கும். சாதனங்களின் அளிப்பு அதிகரிப்பதாயிருப்பின் மொத்த உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். முதற்பொருள் உற்பத்தி பெருக வேண்டுமெனில் நுகர்ச்சிப்பொருள் உற்பத்தி குறைய வேண்டும் என்ற கட்டாயம் தற்போது கிடையாது. அதோடு, பண்டங்களின் விலைமட்டம் அல்லது சாதனங்களின் விலை மட்டம் உயரவேண்டியதில்லை. ஆனுலும், மொத்த உற்பத்தி அதிகரிக்கும் போது மொத்தக் கூலிச் செலுத்துகைகள் கூடுதலாகி நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை மிகுந்து அவற்றின் விலைகள் உயர்வனவாயிருக்கக் கூடும். இவற்றின் மூலமாகச் செழிப்பு நிலை வாணிபத்தில் தோன்றி இலாபங்கள் பெருகுகின்றன.

புத்தாக்கத்தால் முடுக்கி விடப்பட்ட ஏறுமுகம் அல்லது மேல் நோக்கிய வீச்சு (Upward Swing) நெடுநாட்களுக்கு நீடிப்பதில்லை. செழிப்பினைத் துவக்கிவைத்த சக்திகளிடத்தில் அழிவின் விதைகளும் இருக்கின்றன. காலம் செல்லச்செல்லப் புத்தாக்கத்தால்

நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தி கணிசமாகப் பெருகுகிறது. இப் பண்டங்கள் அங்காடியில் அடி எடுத்துவைக்கின்றபோது செழிப்பு நிலைக்குக் குந்தகம் ஏற்படுகிறது. செழிப்பின் நீட்சி, முதற்கருவிப் பொருட்களை நிர்மாணிப்பதற்கும், நிறுவுவதற்கும் எடுத்துக் கொள்ளப்படும் கால அளவை—அதாவது சூல்நிலை காலத்தைச் (Period of Gestation)— சார்ந்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில், எதிர்காலத்தில் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக, நுகர்ச்சிப் பண்ட உற்பத்தியிலிருந்து சமூக உழைப்புகளும் முயற்சிகளும் முதற்கருவிப் பொருள் உற்பத்திக்குத் திருப்பிவிடப்படுகின்றன. சூல்நிலை காலம் முடிவடையும் போது நுகர்ச்சிப்பொருள் உற்பத்தி மறுபடியும் புத்தாக்கம் மூலமாகப் பெருக்கெடுக்கிறது. இதுவரை செய்யப்பட்ட உற்பத்தியளவிற்கு மிகவும் அதிகமாக இவை தயாரிக்கப்பட்டு அங்காடிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. விளைவு? விலைகள் சரிகின்றன. இலாபங்கள் மறைகின்றன. உற்பத்தி நடவடிக்கைகள் ஊக்கமிழக்கின்றன சோர்வுணர்கள் தொழில் முயல்வோரிடம் தோன்றுகின்றன. தற்போது பொருளாதாரத்தைப் புத்தாக்கத்தின் இறுதி விளைவுகள் புடை சூழ்ந்து நிற்கின்றன. செழிப்புக் கட்டம் முடிவுறுகிறது.

சுணக்கத்தின் தன்மை யாது? சுணக்கம் என்பது பொருளாதாரம் புத்தாக்க விளைவுகளைச் சீரணிக்கும் நிலை. புத்தமைப்பாளர்களால் நிறுவப்பட்ட புதிய உற்பத்தி முறைகளை ஆள்வதும், மாறிவிட்டிருக்கும் செலவுகள் மற்றும் விலைகளின் புதிய மட்டங்களுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்வதும் பொருளாதாரச் சமூகத்திற்கு எளிதாயிருப்பதில்லை. மாறாகச் சிரமமிகுந்ததாயிருக்கிறது. புத்தாக்கங்களால் ஏற்படும் விளைவுகள் பல நிறுவனங்களுக்கு வேதனைகளைக் கொண்டுவருகின்றன. புத்தமைப்பாளன் பொதுவாக ஒரு வலிவு மிகுந்த போட்டியாளனாக இருக்கிறான். தனது உற்பத்தி தயாரானதற்குப் பின்னர் இவன் மற்ற உற்பத்தியாளர்களைக் கடுமையான மாறுதல்களைச் செய்யுமாறு மறைமுகமாகப் பலவந்தப்படுத்துகிறான். அவர்களின் நிறுவனங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியதும், புதுப்பிக்கப்பட வேண்டியதும் மிகவும் அத்தியாவசியமாகிறது. எனவே, இவனது நடவடிக்கைகளால் அவர்களில் பலர் தமது அங்காடிகளை இழக்கின்றனர்; உற்பத்தியின் அளவைக் குறைத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனர். பொருளாதார மரணத்தைக்கூடத் தழுவுகின்றனர். இவை விரைவாக நடந்தேறி விடுவதில்லை. படிப்படியாக நிகழ்கின்றன. இவை நிகழ்கின்றபோது சமநிலை பாதிக்கப்பட்டு, வாணிபத்தில் மந்தம் உண்டாகிறது.

மறுபடியும் புத்தாக்கங்கள் செய்யப்பட்டு வாணிப நடவடிக்கைகள் மேலும் பெருக்கமடைவதாயிருப்பின், பழைய புத்தாக்கங்களால் ஏற்பட்ட சமநிலைக்கேடு சரிசெய்யப்படலாம். ஆனால், இது சாத்தியமன்று. உச்ச மட்டத்தில் தொழில் முயல்வோரின் நடவடிக்கை தொடர்ந்து இருக்க முடியாமற் போவதற்கும், சுணக்கமடைவதற்கும் இரு காரணங்கள் இருக்கின்றன ; (1) உற்பத்தி அதிகரிப்பதனல் விலைகளில் ஏற்படக்கூடிய இறக்கத்தினைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டு புத்தமைப்பாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுகின்றனர் என்ருலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலாக உற்பத்தி அதிகரிக்கும்போது, உற்பத்திச் சாதனங்கள் கிடைப்பது அரிதாகிப் பல உற்பத்திச் செலவினங்கள் உயர்கின்றன. விரைவில் செலவுகளும் விலைகளும் ஒன்றுக்கொன்று சமமாயிருக்கும்படியான சூழ்நிலை உருவாகி இலாபங்கள் மறைகின்றன. அப்போது, மேலும் உற்பத்தி நடவடிக்கையைப் பெருக்கவேண்டும் என்ற ஊக்கம் வாணிபத்தில் காணப்படாது போய்விடுகிறது.

(2) புத்தமைப்புகள் மூலமாகப் புதிய அல்லது கூடுதலான பண்டங்கள் அங்காடிக்கு வந்து நிறைகின்றபோது, குழப்பம் தலையெடுத்து, பொருள் மதிப்புகளில் பலத்த ஏற்ற இறக்கங்கள் தென்படுகின்றன: உற்பத்தியைச் செம்மையாகத் திட்டமிடுவது என்பது அப்போது இயலாததாகிவிடுகிறது. இழப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அனைவரிடத்திலும் பரவுகிறது. அடுத்த புத்தாக்கங்கள் இதனல் தடைப்படுகின்றன. இவை இருந்தாலாவது மந்தத்தின் வருகை தற்காலிகமாகத்தள்ளிப்போடப்படும். இவையும் இல்லையெனில் மந்தம் தோன்றுவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது.

தொழில் முயல்வோருடைய நடவடிக்கைகளின் பெருக்கம் நின்றுவிட்டால், சமன்கேடு மேலும் உறுதியடைகிறது. வாணிபத்தில் ஆபத்துக்கள் மலிந்து வருவதைக்காணும் தொழில் முயல்வோர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மிகவும் குறைத்துக் கொண்டு, பாங்குக்கடன்களைத் திருப்பிக் கொடுக்க ஆரம்பித்துவிட்டால், பொது வாங்குந்திறன் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலைமை இன்னும் சற்று மோசமாகி மந்தம் தீவிரமடைகிறது

இவ்வாருகப் புத்தாக்கத்தின் விளைவாகப் பொருளாதார நடவடிக்கையில் செழிப்பும் மந்தமும் மாறி மாறி ஏற்படுகிறது என்று சும்பீட்டர் விளக்குகிருர். வாணிபத்தின் சுழல் ஏற்ற இறக்கத்திற்கு அடிப்படைக் காரணம் புத்தாக்கமே என்றிவர்

கருதுகிறார். புத்தாக்கங்கள் அமல் செய்யப்பெறும் போது வாணிபத்தில் செழிப்புநிலை ஏற்படுகிறது: புத்தாக்கங்களுக்குத் தேவையான மாறுதல்களுக்கேற்றவாறு சமூகம் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளும்போது மந்தம் உண்டாகிறது.

வளர்ச்சி என்பது மிருதுவான பாதையாயிருக்கவில்லை. ஏற்றமும் இறக்கமும் அதில் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் முரண்பாடில்லை. வளர்ச்சி என்றால் மாறுதல் என்றுதான் பொருள். தடுமாற்றமில்லாத ஒரே சீரான வளர்ச்சி அமையமுடியும். ஆனால், தனியார் சொத்துரிமையும், தனியார் தொழில் துணிவும் இருந்துவரும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில்— வளர்ச்சிப்பற்று வற்றாதிருந்துவரும் இவ்வமைப்பில் — புத்தாக்கம் சுழல் உருவில்தான் இயங்கிச் செல்கிறது. செழிப்பு நிலையே பின்னர் மந்தத்திற்குக் காரணமாக அமைகின்றது. புத்தாக்கத்திற்குத் தேவைப்படும் மறு சீரமைவுகள் (Readjustments) ஏற்படும் வரை மந்தம் நீடிக்கிறது. செலவுகளுக்கும் விலைகளுக்குமிடையேயான முறையான தொடர்புகள் திரும்பவும் ஏற்படவேண்டும். புதிய பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்பச் சமூகம் தன்னைச் சீரமைத்துக் கொள்ளும்போது பொருளாதார அமைப்பு ஒரு புதிய சமநிலைக்கு வந்து மீண்டும் அமைதி கொள்கிறது.

இப்புதிய சமநிலையில் ஒரு கூடுதலான உற்பத்தி, புதிய உற்பத்திப்பணிகள், தாழ்ந்த விலைகள், சூன்ய இலாபங்கள் முதலியவை காணப்படுகின்றன. இனி, அடுத்த மாறுதலுக்குப் பொருளாதாரம் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும். அடுத்த புத்தாக்கங்கள் அடுக்கடுக்காகத் தோன்றுவதற்கான மேடை தற்போது தயாராகிவிட்டது. இவை உண்மையில் தோன்றும்போது மற்றொரு செழிப்பு நிலை மெல்ல உருவெடுப்பதை நாம் காண்கிறோம்.

ஆக, ஒரு முற்போக்குச் சமூகம் தொழில் நுட்ப மாறுகல் ஒன்றினைத் தழுவுகின்றபோது வாணிபத்தில் பூரிப்புக்களும் (Booms) மந்தங்களும் ஏற்படுகின்றன; வளர்ச்சியின் போக்கில் இன்பமும் இருக்கிறது; இன்னலுமிருக்கிறது. இரண்டடி முன்னே வைத்தால், ஓரடி பின்னே வரவேண்டியிருக்கிறது. வளர்ச்சியினைப் பெறவேண்டும் என்றால், இச்சிரமத்தை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எச்சரிக்கையான பாங்குக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால், வளர்ச்சிப்பாதை இனியதாக இருக்கலாம்.

பாங்குச் செலாவணிப் பெருக்கம் இல்லாதிருக்குமானால், புத்தமைப்பாளர்களின் உற்பத்தித் திட்டங்கள், உத்திகள் செயல்படுத்தப்படப்போவதில்லை. ஆனால், பெருக்கமும் சுருக்கமும் இவ்வாறு அகற்றப்படும்போது, துரதிருஷ்டவசமாக வளர்ச்சியும் நம்மை விட்டு அகன்றுபோய்விடும் என்பதை சும்பீட்டர் நமக்கு நினைவூட்டுகிறார். செழிப்பின் நற்பயனைத் துறப்பதற்கு நாம் தயாராக இல்லை. ஆனால், தொல்லைகள் எழாத வகையில் சமூகத்தை வளர்ச்சிப்பாதையில் வழி நடத்திச் செல்லும் பாங்குக் கொள்கையினை நிறுவிவைப்பது பாங்குகளின் சக்திக்கு மீறிய ஒரு செயல்.

எல்லா வாணிபச் சுழல்களும் ஒரே அளவான கால நீட்கியினைப் பெற்றிருக்கவில்லை. $3\frac{1}{2}$ ஆண்டுக்கால நீட்சியுடைய சிறு சுழல்களும், 9 முதல் 10 ஆண்டுக்கால நீட்சியுடைய பெரும் அல்லது ஜுக்ளர் சுழல்களும் (JuglarCycles), 50 முதல் 60 ஆண்டுகள் வரை நீடிப்பதாயுள்ள கோண்ட்ராடிஃப் (Kondratieff) சுழல்களும் இருக்கின்றன. இவ்வெல்லா வகைச் சுழல்களுக்கும் புத்தாக்கமே காரணமாக இருக்கிறது என்று சும்பீட்டர் கருதுகிறார். புத்தாக்கங்களின் இயல்புகளுக்கேற்றவாறு சில சுழல்கள் குறுங்காலத்திற்கும், சில சுழல்கள் நெடுங்காலத்திற்கும் நீடிக்கின்றன.

வாணிபச் சுழல்களை விளக்குவதற்கு சும்பீட்டர் வழங்கிய இந்தப் புத்தாக்கக் கோட்பாட்டில் பின்வரும் குறைபாடுகள் இருக்கின்றன.

(அ) பொருளாதார அமைப்பில் நிறைவுடை வேலைவாய்ப்பு நிலவுவதாகவும், உழைப்பு உட்பட எல்லா உற்பத்திக் காரணிகளும் பூரணமாக வேலைக்கு எடுத்துக்கொல்லப்பட்டிருக்கின்றன என்பதாகவும் இக்கோட்பாடு எடுத்துக்கொள்கிறது. இந்த எடுகோள் முற்றிலும் தவறானது. நிறைவுடைவேலை வாய்ப்புக்குக் குறைவான வேலை வாய்ப்பே ஒரு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் காணப்படுகிறது. அங்கே, சில காரணிகள் வேலையற்றிருப்பதாகவோ அல்லது அரைகுறை வேலைவாய்ப்பினைப் பெற்றிருப்பதாகவோ இருக்கின்றன. ஆகவே, மிகவும் கூடுதலான விலைகளை உற்பத்திச் சாதனங்களுக்குக் கொடுத்து, அவற்றை மற்ற உற்பத்தியாளரிடமிருந்து பிரித்தெடுத்துக் கொள்ளும் அவசியம் புத்தமைப்பாளர்களுக்கு இருக்கவில்லை. சாதனங்களின் விலைகள் உயரவில்லையென்றால், உற்பத்திச் செலவுகள் உயராது. உற்பத்தியும் குறையாது. அப்போது, சுழல் வகை மாறுதல் நிகழ்வதற்கான மேடையே இல்லாது போய்விடுகிறது.

(ஆ) வர்த்தகத்தில் செய்யப்படும் புத்தாக்கம் ஒவ்வொன்றிற்கும் தேவையான பணம் பாங்குகளிடமிருந்து கடனுகப் பெறப்படுகிறது என்று இக்கோட்பாடு எடுத்துக்கொள்கிறது. இந்த எடுகோளும் முற்றிலும் தவருனது. வளர்ச்சித் திட்டங்களுக்கெனப் பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ள இருப்புகளிலிருந்துதான் புத்தாக்கங்களுக்குத் தேவையான பணம் எடுத்துக்கொள்ளப்படுகிறதே தவிர, பாங்குகளிடமிருந்து அன்று. எனவே, புத்தாக்கங்கள் மூலமாகப் பொருளாதார அமைப்பில் பண வீக்க அழுத்தங்கள் தோன்றுவதற்கான சூழ்நிலையே இல்லாது போகிறது. பாங்குகளிடமிருந்து கடன் அமல் செய்யவேண்டும் என்ற கட்டாயத்தில் தொழில் முயல்வோர் இல்லே.

(இ) புத்தாக்கம் ஒன்றின் காரணமாக மட்டுமே வாணிபச் சுழல்கள் ஏற்படுவதில்லே. இவற்றிற்குப் பல காரணங்கள் இருக்கின்றன; புத்தாக்கம் அவைகளில் ஒன்றெனப் பொதுவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பணத்துறை சார்பான காரணங்கள் அல்லாது புத்தமைப்புகள் மூலமாக மட்டுமே வாணிபச் சுழல்கள் தோன்றிடுவதில்லே என்று ஹேயக் (Hayek) குறிப்பிடுகிருர். ஆகவே, புத்தாக்கக் கோட்பாட்டினே, வாணிபச் சுழல்களேப் பற்றிய ஒரு முழுமையான விளக்கமாக எடுத்துக்கொள்வதற்கில்லே.

12. பணச்சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

5. அஃப்டேலியன் கோட்பாடு

(Aftalion's Theory)

''வளர்ச்சியுற்ற சமுதாயங்களுடைய பொருளாதார நடவடிக்கைகளின் நெளிவுகள் வாணிபச் சுழல்கள்.''

— டபிள்யூ. சி. மிச்சல்.

டியூகன், ஸ்பியதாஃப் முதலியோருடைய கோட்பாடுகளின் சில முக்கியக் கருத்துக்களை அஃப்டேலியன் (Aftalion) ஏற்றுக் கொள்கிறார். சுழல் ஏற்ற இறக்கங்கள் நிலைமுதற் பொருட்களின் உற்பத்தியில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களே என்ற கூற்றினை இவர் ஒப்புக்கொள்கிறார். ஆனால், முதலீட்டு வீதம், முதலீட்டை நாடும் நிதிகளின் பருமனைப் பொறுத்தது என்ற கருத்தினை இவர் ஏற்க மறுக்கிறார். நுகர்வோர் விருப்பங்களில் ஏற்படும் மாறுதல்களால்தான் முதலீட்டு வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன என்றிவர் கருதுகிறார். நுகர்வோர் தேவையில் நிகழக்கூடிய மாறுதல்களை அனுசரித்துத்தான் முதலீடு செய்வது பற்றிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்றும், முதற்பொருட்களின் மதிப்பு அவற்றால் உற்பத்தி செய்யப்படும் நுகர்ச்சிப் பண்டங்களின் மதிப்பைப் பொறுத்தது என்றும் இவர் கூறுகிறார். இவரது கருத்துக்களின் சாரம் கீழே தரப்படுகிறது.

வெறும் கண்டுபிடிப்பால் மட்டும் நிலை முதல் (Fixed Capital) திரட்சியடைந்து விடுவதில்லை. அக் கண்டுபிடிப்பால் நுகர்வோர் விருப்பங்கள் திருப்தி செய்யப்பட்டால்தான் நிலைமுதல் திரட்சியடைகிறது என்று அர்த்தம். நுகர்ச்சி செய்யப்படுவதற்காகவே பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே, உற்பத்தியின் குறிக்கோள் நுகர்ச்சியே எனலாம். இவ்வுண்மையை அடிப்

படையாகக்கொண்டு பார்த்தால், முதற் பொருட்களுக்கான தேவையில் உண்டாகும் ஏற்ற இறக்கங்கள், நுகர்வோருடைய விருப்பங்களேயும், தேவையையும் மாற்றியமைக்கும் காரணிகளால் தோன்றுகின்றன என்பது புலனுகும்.

டியூகனும், ஸ்பியதாஃபும் முதலின் பற்ருககுறையால் பூரிப்பு வீழ்கிறது என்று கூறுகின்றனர். இது உண்மையன்று. அபரிமிதமான அளவில் முதற்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வோர் தேவை நிறை செறிவு நிலேயை அடைவதனுலேயே பூரிப்பு வீழ்ச்சியடைகிறது. நுகர்வோர் தேவை நிறைவு நிலேயை எட்டிவிட்டால், பிறகு புதிய உற்பத்திச்சாதனங்களேத் தயாரிப்பதற்கான நாட்டம் குறைந்து விடுகிறது. இது பூரிப்புக் கட்டத்திற்கு முற்றுப்புள்ளியிடுகிறது. எனவே, நுகர்வோர் விருப்பங்கள் தெவிட்டு நிலேயை எய்துகின்றபோதுதான் நிலேமுதல் உற்பத்தியின் பெருக்கம் நிலே தடுமாறிப் போகிறது.

முதற் பொருட்களில் செய்யப்படும் நிகர அதிகரிப்புகளிடமிருந்து பெறப்படும் விளேவுகள் (yields) படிப்படியாகக் குறைந்து கொண்டே போகின்றன. இதற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவதாக, முதற் பொருட்களே மேன் மேலும் கூடுதலாக உற்பத்தி செய்து கொண்டு போகும்போது, மற்ற உற்பத்திக்காரணிகளுக்குப பதிலாக முதலேப் பதிலீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் குறைகின்றன. இரண்டாவதாக, நுகர்ச்சிப்பண்டங்களின் உற்பத்தி அடுத்தடுத்துப் பெருகும்போது இவற்றின் மதிப்புத் தாழ்கிறது. வீடு கட்டுவதை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். பூரிப்புக் கட்டத்தின்போது வீடுகள் (நிலே முதல்) மேன்மேலும் கட்டப்படுகின்றன. வீடுகளின் எண்ணிக்கை அடுத்தடுத்து அதிகரிக்கும்போது, வீடுகளின் இறுதிநிலேப்பயன்பாடு (Manginal utility) குறைந்து செல்கிறது. இதனுல் வாடகைகள் குறைகின்றன. வாடகைகள் குறைகின்றபோது, வீடுகளின் மதிப்புகள் இறங்குகின்றன. அடுத்துப் புதிய வீடுகளுக்கான தேவை சுருங்குகிறது. இதைத் தொடர்ந்து கட்டடத் தொழிலின் பூரிப்பு முடிவடைகிறது.

நுகர்ச்சிப் பண்டங்களின் அளிப்புப் பெருகினுல் அவற்றின் இறுதிநிலேப் பயன்பாடு குறைந்து செல்கிறது. இதனுல் இப் பண்டங்களின் விலேகள் குறைகின்றன. நடப்புத் தேவையினேவிட நுகர்ச்சிப் பண்டங்களின் அளிப்பு மிகவும் கூடுதலாக இருக்குமானுல், இவற்றின் இறுதி நிலேப்பயன்பாடு குறைந்து செல்லத் தான் செய்யும்.

தொழிலை இயக்கிவரும் தொழில்முயல்வோர் சில நேரங்களில் நம்பிக்கையுள்ளவர்களாயும் (optimists). சில நேரங்களில் சோர்வு மனப்பான்மையினராயும் (pessimists) இருக்கின்றனர். இதனுல், இவர்களுடைய முன் கணிப்புகளில் (forecosts) ஒரு விதக்கால இலயமான மாறுதல் - நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் இடைமாறி வரும் ஒழுங்கியல்பு காணப்படுகிறது. வாணிபத்தைப் பற்றிய எதிர்பார்க்கைகளில் (Expectations) உண்டாகும் இத்தகைய கால இலயமான மாறுதல்களுக்கு முதலாட்சி உற்பத்தி முறையே (Capitalistic technique of production) காரணம். நவீன உற்பத்தி முறையில் பயன்படுத்தப்பட்டுவரும் நிலை முதல் உறுதியானது. அதனைத் தயாரிப்பதற்கு அநேக நாட்கள் தேவைப்படுகின்றன. உற்பத்தி முறையின் நீட்சியினுல்தான் தொழில்முயல்வோர் எதிர்பார்க்கைகளில் கால இலயமான மாறுதல்கள் உற்பத்தியாகின்றன.

வாணிப ஏற்ற இறக்கங்களைப் பற்றிய அஃப்டேலியனின் ஆய்வு, மூன்று முக்கியக் கருத்துக்களை நம் முன்னே வைக்கிறது:

(அ) நிலை முதலைத் (Fixed capital) தயாரிப்பதற்கு நெடுங் காலம் தேவைப்படுகிறது. இதனுல் இறுதித் தேவையின் (Final Demand) சீரான வளர்ச்சிக் கவசியமான அளவில் நிலை முதல் இருப்பை மாற்றியமைத்துக் கொள்வது கடினமாயிருக்கிறது.

(ஆ) முதற் பொருட்கள் நீடித்து உழைப்பன. இதன் காரணமாக மந்த கட்டம் நெடுங்காலத்திற்கு நீடிக்கிறது. நிலைமுதல் இருப்புத் தீர்ந்துபோய், பற்முக்குறை ஏற்படும்வரை மந்தம் நிலவுகிறது.

(இ) அடிப்படைத் தேவையில் (Primary Demand) உண்டாகும் சிறு ஏற்ற இறக்கங்கள் மூலமாக வழி வந்த தேவையில் (Derived demand) ஆழ்ந்த ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன. இங்கே பின்னர்த் தோன்றிய வேக வளர்ச்சித் தத்துவத்தை (Principle of acceleration) நாம் பார்க்கிறோம்.

இறுதித் தேவையின் சீரான வளர்ச்சிக்கேற்ப நிலைமுதல் இருப்பைச் சரி செய்து கொள்ளாததால் முதலீட்டுவீத ஏற்ற இறக்கம் தோன்றுகிறது என்று விவரிப்பதன் மூலம் அஃப்டேலியன் வாணிபச் சுழல் கோட்பாட்டிற்கு ஒரு புது அரிய கருத்தினை வழங்கியுள்ளார். நுகர்வோர் தேவையின் குறிப்பிட்ட வளர்ச்சிக்கேற்ற அளவில் முதற் பொருட்களின் இருப்பை. நிகர முதலீட்டை அதிகரிப்பது சாத்தியமன்று. நிலைமுதலை உற்பத்தி செய்

வதற்கு நீண்ட காலம் தேவைப்படுவதால்தான் இது சாத்திய மின்றிப் போகிறது. தேவைக்கேற்றவாறு முதற்பொருட்களின் இருப்பை அமைக்க முடியாது போவதனுலேயே, முதலீட்டு வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டு வாணிபச் சுழல்கள் உண்டாகின்றன என்கிருர். இதோடு, அவர் பிற்காலத்திய வேக வளர்ச்சிக் கோட்பாட்டிற்கு முன்னேடியாக, முதற்பொருளுக்கு நுகர்ச்சி வழிவரு தேவை உண்டாவதை வற்புறுத்தியது ஒரு அரிய கருத்துக் கொடை.

பொருளாதாரச் சமநிலையை (Equilibrium) நிலை பெறச் செய்வதில் உள்ள சிரமத்தைப் பற்றி இவர் அடிக்கடி வற்புறுத்துகிருர். பொருளாதாரத்தில் சமநிலையைவிட மாறுதல்கள் தான் அடிக்கடி காணப்படுகின்றன. முதலாட்சி உற்பத்தியமைப்பில் மாறுதல்கள் எப்போதும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. சமநிலை பாதிக்கப்பட்டுவிட்டால் செழிப்பும், மந்தமும் மாறி மாறி வாணிபத்தில் ஏற்படுகின்றன; பொருளாதார அமைப்பு ஒரு சுழலில் சிக்கிக் கொள்கிறது. நடவடிக்கையும் எதிர்நடவடிக்கையும் ஒன்றை ஒன்று தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. முடிவில்லாத ஒரு வட்டத்தில் பொருளாதாரம் ஓடிக்கொண்டே யிருக்கிறது.

சுற்றுவழி உற்பத்திமுறையினைக் (Round about process of production) கொண்டுள்ள முதலாட்சி உற்பத்தித் திட்டத்தில், நுகர்வோர் தேவையில் ஏற்படும் சிறு மாறுதல்களால் செழிப்புக் காலங்களும், மந்த காலங்களும் வாணிபத்தில் உண்டாகின்றன. முதலாட்சி உற்பத்தி முறையின் ஒரு முக்கியஇயல்பு, விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு உழைப்பையும் நிலத்தையும் நேரடியாகப் பயன்படுத்துவதை விட்டு, முதலில் முதற் பொருட்களைத் தயாரிப்பது. இவற்றைத் தயாரிப்பதற்குப் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் தேவைப்படுகின்றன. இம் முதற்பொருட்களைக் கொண்டு பின்னர் நுகர்ச்சிப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முதற் பொருட்கள் தயாரிக்கப்படும் காலம் செழிப்புக் காலம். செழிப்புக் கட்டத்தில் நுகர்ச்சிப்பண்டங்களின் பற்ருக்குறை ஏற்படுகிறது. இப்பற்ருக் குறையை உடனே நிவர்த்தி செய்ய முடியுமென்ருல், சமநிலை மீண்டும் நிலவுவதாயிருக்கும். ஆனுல், பற்ருக்குறையை உடனே போககுவது என்பது இயலுவதில்லை. ஏனென்ருல், நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான முதற்பொருட்களைத் தயாரிப்பதற்கு அநேக நாட்கள் தேவைப்படுகின்றன. இதனுல், பொருளாதாரச் சமநிலையின் அமைதிக் கேடுகள் நெடுங்காலத்திற்கு நிலைத்திருக்கின்றன.

புதிய முதற் பொருட்கள் தயாரான பிறகு முதலாட்சி உற்பத்தி முறையின் இரண்டாவது கட்டம்—நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தி அதிகமாகப் பெருக்கெடுத்தோடும் நிலை—பிறக்கிறது. நுகர்வோர் விருப்பங்களை நன்கு பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிலைமுதல் தற்போது கைவசமிருக்கிறது. எனவே, புதிய முதலின் திரட்சி (Capital formation) இனி ஏற்படுவதற்கில்லை. இப்படி, புதிய முதலின் திரட்சி நின்றுவிடும்போது மந்தம் துவங்குகிறது. நிலை முதலின் ஆயுட்காலம் நீண்டது. எனவே, இது நெடு நாட்களுக்குப் பயன்படுகிறது. இதனால் மந்த காலமும் நெடுநாட்களுக்கு நீடிக்கிறது இறுதியில், இம் முதற் பொருட்கள் தீர்ந்து விடும் நிலையில் மறுபடியும் முதற்பொருட்கள் மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றன. முதற் பொருட்கள் இப்படி மிகுதியாகத் தயாரிக்கப்படுவதற்குப் பிறகு நிகழ்வதென்ன? நுகர்ச்சிப் பண்டங்கள் அபரிமிதமாக உற்பத்தியாகின்றன. இவற்றின் இறுதி நிலைப்பயன்பாடு குறைகிறது. எனவே, இவற்றின் விலைகளும் இறங்குகின்றன. அப்போது முதற்பொருட்களுக்கான தேவை குறைகிறது. நிலை முதலின் பெரும்பகுதி தீர்ந்துபோகும் போது நுகர்ச்சிப் பண்டங்கள் கிடைப்பது மீண்டும் அரிதாயிருக்கிறது. நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்கின்ற நிலையில் நிலை முதலுக்கான வழிவந்த தேவையும் உடனே உயர்கிறது. இப்போது முதலீடு மீண்டும் பேரளவில் மிகுதியாகிறது. முன்பு நிகழ்ந்தவை மறுபடியும் நிகழவாரம்பிக்கின்றன. சக்கரம் மீண்டும் சுழல்கிறது.

ஒரு சில தொழில்களில் முதற்பொருட்கள் தயாராகி அவை பயன்படுத்தப்பட வாரம்பித்தவுடன் செழிப்பு நிலை முடிவுற்று விடுவதில்லை. பெரும்பாலான தொழில்களில் முதற்பொருட்கள் பேரளவில் தயாராகி, அவற்றின் உதவி கொண்டு நுகர்ச்சிப் பண்டங்கள் அபரிமிதமாக உற்பத்தியாகும்போதுதான் அமித முதலாக்கம் முடிவுற்றுச் செழிப்பு நிலை மறைகிறது. அவ்வாறே ஒரு சில தொழில்களில் முதல் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் மந்தம் முடிவுறுவதில்லை. பொதுவாக, அநேக தொழில்களில் முதல் தட்டுப்பாடு உண்டாகின்றபோதுதான் மந்தம் முடிவடைகிறது. செழிப்பின்போது எல்லாப் பண்டங்களின் விலைகளும் உயர்வதில்லை. அதைப் போலவே மந்தத்தின் போது எல்லாப் பண்டங்களின் விலைகளும் இறங்குவதில்லை. பெரும்பாலான பண்டங்களின் விலைகள் செழிப்பின்போது உயர்கின்றன, மந்தத்தின் போது தாழ்கின்றன என்பதே உண்மை.

நிலை முதலை விரிவான அளவில் பயன்படுத்தி வரும் நவீன உற்பத்தி முறைதான் சமநிலையில் உண்டாகும் மாறுதல்களின் அளவையும், செழிப்பு மற்றும் மந்தத்தின் கால நீட்சியையும் நிர்ணயிக்கிறது. நிலை முதலைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் காலம் நீண்டதாயிருப்பின், செழிப்புக் கட்டமும் நீண்டதாயிருக்கும். செழிப்புக் கட்டம் எந்த அளவுக்கு நீண்டதாயிருக்கிறதோ அந்த அளவுக்கு முதலாக்கமும் மிகுதியாயிருக்கும். வாணிப நொடிப்பிற்கு அமித முதலாக்கமே வழி வகுக்கிறது என்றால் அது மிகையாகாது. சமூகத் தேவையினை உடனடியாகத் திருப்தி செய்யும் ஆற்றல் நவீன உற்பத்திமுறையிடம் இல்லாது போவதாலேயே சுழல் ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன.

நுகர்ச்சிப் பண்டங்கள் கிடைப்பது அரிதாகும்போது, அவற்றின் விலைகள் உயர்கின்றன. நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை பெருகினால், முதற்பொருட்களுக்கான தேவையும் பெருகி அவற்றின் விலைகளும் உயர்கின்றன. நுகர்ச்சிப் பண்டங்களில் உண்டாகும் அதிகரிப்புப் பற்றுக்குறை ஆகியவற்றால் விலைகளில் மிதமான மாறுதல்களே ஏற்படுகின்றன. ஆனால் முதற்பொருட்களின் விலைகளில் பலத்த ஏற்ற இறக்கங்கள் நிகழ்கின்றன. நுகர்ச்சிப் பண்டங்களை மிகுதியாகத் தயாரிக்கவேண்டும் என்றால் முதற்பொருட்கள் நிறையத் தேவைப்படும். எனவே, நுகர்ச்சிப் பொருட்களுக்குத் தேவை அதிகரிக்கும்போது, முதற்பொருள் உற்பத்தியாளர்கள் எந்திரங்களையும், தொழிற்சாலைகளையும் பொறிகளையும் கூடுதலாகத் தயாரிக்க முற்படுகின்றனர். ஆனால், புதிய எந்திரங்களை, தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும், உருவாகிய எந்திரங்களைக்கொண்டு நுகர்ச்சிப் பண்டங்களைத் தயாரிப்பதற்கும் பல மாறுதல்கள், பல ஆண்டுகள் தேவைப்படுகின்றன. இந்த இடைவேளையில், நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை திருப்தி செய்யப்படாமலே போகிறது. ஆகவே, நிலை முதற்பொருட்களைத் தயாரித்துப் பின்னர் அவற்றின் உதவி கொண்டு நுகர்ச்சிப் பண்டங்களை உற்பத்தி செய்கின்றவரை செழிப்புக் கட்டம் நீடிக்கிறது; விலை உயர்வும், இலாபப் பெருக்கமும் தொடர்ந்திருக்கின்றன.

முதலைப் பயன்படுத்தி வரும் உற்பத்தி யமைப்பினால் வருமானம், கூலி, இலாபம் முதலியவற்றில் கால இலயமான மாறுதல்கள் தோன்றுகின்றன. நிலை முதலின் உற்பத்தி பெருகுவதன் மூலமாகக் கூலி வருமானங்களும், இலாபங்களும் உயர்கின்றன. ஆனால், நுகர்ச்சிப் பண்டங்களின் கிடைப்பருமை நிலைமுதற் பொருட்கள் தீர்ந்துபோகும்வரை நீடிக்கிறது. ஆகையால்,

செழிப்புக் கட்டத்தின்போது நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை அளிப்பை விடக் கூடுதலாக இருக்கிறது. இதனுல் விலைகள் உயர்கின்றன.

சமூக விருப்பங்கள் மிகுதியாகின்ற போது விலையும் இலாபமும் அதிகரித்து உற்பத்தி பெருகுகிறது. ஆகவே, விலைகளும் இலாபங் களும்தான் உற்பத்தியின் அளவை நிர்ணயிக்கின்றன என்று கூற லாம். ஆனுல், இவற்ருல் சமநிலையை நிலைத்திருக்கச் செய்ய முடி யாதுபோவதற்குக் காரணம், முதலாட்சி உற்பத்தித் திட்டத்தில் பண்டங்களின் உற்பத்தி துவங்குவதற்கும் முடிவுறுவதற்கும் இடையே ஒரு நீண்டகாலம் குறுக்கிடுவது. நடப்பு விலைகளையும், நடப்புத் தேவையையும் அடிப்படையாகக் கொண்டு தொழில் முயல்வோர் தமது எதிர் நோக்குகளை நிறுவுகின்றனர். ஆனுல், நெடுங்காலத்தில் மட்டுமே தயாரிக்கப்படக்கூடிய நிலை முதலைப் பயன்படுத்தி வரும் ஒரு பொருளாதார அமைப்பில் நடப்பு விலை களும். நடப்புத் தேவையும் சரியான திசைகாட்டிகளாக இருப் பதில்லை. இதனை ஓர் உதாரணங்கொண்டு விளக்குவோம்.

வீட்டைச் சூடாக்குவதற்கான கணப்பு அடுப்பு உள்ள இடம் அல்லது உலைக்களம் இருக்கிறதல்லவா? அதில் தேவையான வெப்பத்தை உண்டு பண்ணுவதற்கு நெடுநேரம் வேண்டியிருக் கிறது. குளிர் மிகுதியாக உள்ளபோது—வெப்பம் குறைவாயிருக் கிறது என்று எரிபொருளை மேன்மேலும் அதிகமாக ஊட்டினுல், ஒரு நிலையில் எரிபொருள் அளவுக்கு மீறிப் போய்த்தாங்க முடியாத வெப்பம் அறைமுழுவதும் உண்டாகிவிடும். எனவே, தற்போதைய தட்ப வெப்பத்தை உண்டாக்கும்போது, விரும்பிய எல்லையைக் கடந்து, அனல் பிறந்துவிடும். இப்படி மிகுதியான வெப்பம் அறை முழுவதும் பரவுவதற்கும் நெடுநேரம் தேவைப்படுகிறது என்பதே. சூட்டை அதிகப்படுத்துவதற்கு எரியூட்டலுக்கும் அதன் முழுப்பயன் தோன்றுவதற்கும் இடையே சிறிது காலம் குறுக்கிடுகிறது. இதை உணராது தற்போதைய, துவக்க நிலையை நம்பி யாராவது எரிபொருள் அளவை அடுத்தடுத்து அதிகப்படுத்து வார்களேயானுல், பின்னர் எதிர்பாராத வெப்ப விளைவு தோன்றும்,

இதே நிலைமைதான் பொருளாதார உலகத்திலும் காணப் படுகிறது. நுகர்ச்சிப் பண்டங்களின் பற்ருக்குறையும், விலை உயர் வும், இலாபப் பெருக்கமும் தொடர்ந்து இருந்து வருவதைக் காணும் தொழில் முயல்வோர்கள், போதுமான முதலீடு செய்யப் படவில்லை என்று எண்ணி முதலீட்டைப் பெருக்குகின்றனர்

இவ்வாருக, முதலாட்சியின் சுற்றுவழி உற்பத்திமுறை காரணமாக முதலீட்டுக் கணிப்புத் தவறுகள் உண்டாகின்றன. பிகு (Pigon) கூட அஃப்டேலியனைப் பின்பற்றி, முதலாட்சி உற்பத்தி முறைவழியே மதிப்பீட்டுப் பிழைகள் உண்டாகின்றன என்ற உண்மையை வலியுறுத்துகிருர்.

முதலாட்சி நாகரிகத்திற்கு முந்திய காலப்பகுதியில், விலை சமூக விருப்பங்களைப் பிரதிபலித்து வந்தது. அக்காலப்பகுதியில் சமநிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் குறுங்கால நிகழ்ச்சிகள். ஆனுல், முதலாளித்துவச் சமூகத்தில் நிலைமை அவ்வாறில்லை. விலையும் இலாபமும் அறவே இல்லாதிருக்கும்போது கூடச் சமூக விருப்பங்களுக்கேற்றவாறு முதலாட்சி உற்பத்தி முறையினை இயங்க வைப்பதில் சிரமங்களிருக்கின்றன.

நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவையில் உண்டாகும் ஓர் அதிகரிப்பால் நிலைமுதலுக்கான தேவை பன்மடங்கு அதிகரிக்கிறது. உதாரணத்திற்கு நெசவுத்தறிகளை (Looms) எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தொழிலுக்கு 1.00,00 நெசவுத்தறிகள் தேவைப்படுகின்றன என்று வைத்துக்கொள்வோம். இத்தறிகளின் சராசரி ஆயுட்காலம் 10 ஆண்டுகளாக இருந்தால் ஒவ்வோர் ஆண்டும் 100000 தறிகள் மாற்றப்பட வேண்டியிருக்கும். இந்நிலையில் நுகர்வோர் தேவை 10 சதவிகிதம் உயர்ந்தால் 10,000 புதிய தறிகள் கூடுதலாகத் தேவைப்படும். புதுப்பிக்க 10,000; புதுத் தேவைக்கு 10,000 ஆக, 20.000 தறிகள் தேவைப்படுகின்றன. இதிலிருந்து என்ன தெரிகிறது? நுகர்வோர் தேவை 10 சதவிகிதம் அதிகரித்தால், நிலை முதலுக்கான தேவை 100 சதவிகிதம்—10,000 இலிருந்து 20000 ஆக அதிகரிக்கிறது. இதைத்தான் வேக வளர்ச்சிக் கோட்பாடு (Acceleration Principle) மையமாகக் கொண்டுள்ளது. நுகர்ச்சிப் பண்டத் தொழில்கள் பெருகும்போது முதற்பொருள் உற்பத்தி பன்மடங்காகப் பெருகுகிறது. முதற்பொருள் தொழில்கள் பெருகும் போது. சமூகத்தின் நுகர்ச்சியளவு விரிவடைகிறது. ஏனென்ருல். முதற்பொருள் உற்பத்தி அதிகரிக்கும்போது, கூடுதலான தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் நுகர்ச்சிப் பண்டங்களை வாங்க ஆரம்பிக்கின்றனர். நுகர்ச்சிப்பண்டங்களின் தேவை உயர்ந்து விலைகள் உயர்கின்றன. இது செழிப்புக்காலம். மந்தகாலத்தில் இதற்கு நேர்மாருனவை நிகழ்கின்றன. குறிப்பிட்ட தேவைக் குறைவு, பன்மடங்காக முதற்பொருள் உற்பத்தி அதிகரிக்கும்போது, கூடுதலான தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் நுகர்ச்சிப் பண்டங்களை வாங்க ஆரம்பிக்கின்றனர். நுகர்ச்சிப்பண்டங்களின்

தேவை உயர்ந்து விலைகள் உயர்கின்றன. இது செழிப்புக்காலம். மந்த காலத்தில் இதற்கு நேர்மாறானவை நிகழ்கின்றன. குறிப்பிட்ட தேவைக் குறைவு, பன்மடங்காக முதற்பொருள் உற்பத்தியைப் பாதிக்கிறது. வேலைவாய்ப்பின்மை பரவுகிறது. இதனால் வருமானம் குறைந்து, தேவை சுருங்கி, நுகர்ச்சிப்பண்டங்கள் வாங்கப்படுவதன் அளவு குறைகிறது. அங்காடியில் மிகுதியான பண்டங்கள் தங்கிவிடுகின்றன. இதனால் விலைகள் தாழ்கின்றன.

இவ்வாறாக, நுகர்ச்சிப்பண்டங்களுக்கான தேவையில் மாறுதல்கள் ஏற்படுவதன் காரணமாக, முதற் பொருட்களுக்கான தேவையில் ஏற்ற இறங்கங்கள் உருவாகி, அவற்றின் உற்பத்தியில் மாறுதல்கள் உண்டாகின்றன. முதற்பொருள் உற்பத்தி மாறுதலடைவதனால், நுகர்ச்சிப்பண்டங்களுக்கான தேவையில் மீண்டும் மாறுதல் தோன்றுகிறது. அப்போது முதற்பொருள் உற்பத்தியில் மீண்டும் மாறுதல் ஏற்படுகிறது. இப்படியாகச் சுழல்ஏற்ற இறக்கங்கள் உண்டாகின்றன. விளைவு, காரணத்தின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது; காரணம் விளைவை மீண்டும் ஆட்டிவைக்கிறது. ஆனால், நுகர்ச்சிப் பண்டத் தேவையின் மாறுதல்களிலிருந்துதான் தூண்டுவிசை பிறக்கிறது; சுழல் ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன.

சமூக விருப்பங்களில் மாறுதல்களைத் தோற்றுவிக்கும் காரணிகள் யாவை? நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்வதற்கும், தாழ்வதற்கும் உரிய முக்கியக் காரணங்கள் யாவை?

முதலாவதாக, மக்கட் தொகைப் பெருக்கத்தால் சமூக விருப்பங்கள் பெருகி நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்கிறது. மக்கட் தொகை வளர்ச்சிக்கும் வாணிபச் சுழலுக்கும் உள்ள தொடர்பினை நன்கு வலியுறுத்தியவர் போல் (Pohle) என்பவராவர். மக்கட் தொகை வளர்ச்சி, நிலை முதலுக்கான தேவையை உருவாக்குகிறது. எனவே, மக்கட் தொகை பேரளவில் அதிகரிக்கும் போது வாணிபச் சுழல் ஏற்ற இறக்கங்கள் மிகுதியாகின்றன. மக்கட்தொகை மிதமாக அதிகரிக்கும்போது. வாணிபச்சுழல் ஏற்ற இறக்கங்கள் மிதமாயிருக்கின்றன.

தொழில் நுட்ப முனனேற்றம், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவை மூலமாகவும் சமூக விருப்பங்கள் பெருகுகின்றன. தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் அறிவியல் சாதனைகள் வழியே ஆக்கத்திறன் வளர்ந்து, வாழ்க்கைத்தரம் உயர்கிறது. அதோடுகூடப் புதிய பண்டங்கள் அங்காடிக்கு வருகின்றன. புதிய விருப்பங்கள் தலைகாட்டுகின்றன. புதிய உற்பத்தி முறைகளைக்

கண்டுபிடிப்பதோடு மனிதகுலத்தின் அறிவியல் ஆர்வம் நின்று விடுவதில்லை. எண்ணற்ற புதிய பண்டங்களைப் படைப்பதற்கும் அது முயலுகிறது. புதிய பண்டங்களைத் தயாரிப்பதற்குப் புதிய எந்திரத் தளவாடங்கள், புதிய தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன. ஆகவே, நிலைமுதலுக்குத் தேவை உயர்கிறது.

மக்கள் புதுமையை விரும்புகின்றனர். அவர்களின் நடையுடை பாவனைகள் மாறுகின்றன. எங்கும், எதிலும் புதிய வண்ணத்தைப் புதிய பாணியை நாடுகின்றனர். இதனுல் பல பண்டங்களுக்கான தேவைமறைந்து, வேறுபல பண்டங்களுக்குத் தேவைஉண்டாகிறது. தேவையில் ஏற்படும் இப்பெயர்ச்சிகள் (Shifts) மூலமாக முதற்பொருட்களின் உற்பத்தியில் மாறுதல்கள் ஏற்பட்டுப் பொருளாதாரச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

13. பணச் சார்பற்ற அமித முதலீட்டுக் கோட்பாடுகள்

6. ராபர்ட்சன் கோட்பாடு

(Robertson's Theory)

> "மட்டு மீறிய நம்பிக்கையால் செழிப்பும், அளவுக்கு மீறிய அவநம்பிக்கையால் மந்தமும் வாணிபத்தில் உண்டாகின்றன."
>
> — பிகு.

'தொழில் ஏற்ற இறக்கங்களைப்பற்றிய ஓர் ஆய்வு' (A Study of Industrial Fluctuations) என்ற தமது நூலில், வாணிபச் சுழல்களைப்பற்றி விவரிக்கும்போது டெனிஸ். எச். ராபர்ட்சன், மெய்க் காரணிகளை (Real Factors), குறிப்பாக நிலைமுதற் (Fixed Capital) கருவிகளில் ஈடுபடுத்தப்பெறும் முதலீட்டு வீதத்தில் தோன்றும் மாறுதல்களைப் பெரிதும் வலியுறுத்துகிறார். நிகழ்காலப் பேரளவு முதலாளித்துவத் தொழிலமைப்புத் திட்டத்தில் சில தனிப்பட்ட இயல்புகள் காணப்படுகின்றன என்றும், இவை காரணமாகத்தான் வாணிபத்தில் செழிப்பும் மந்தமும் மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றும் இவர் கூறுகிறார். இவர் மேலும் கூறுவதாவது : நுகர்வோர் தேவையில் எந்த ஒரு மாறுதலும் நிகழாதிருக்கும் போது கூட, இப்படி வாணிபத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. முதற்கருவிப் பொருட்களை ஆளும் உற்பத்தி முறையின் இயல்பில் தான் வாணிபச் சுழல்களுக்கான அடிப்படைக் காரணங்கள் காணப்படுகின்றன.

வாணிபச் சுழல்களுக்கான காரணங்களில் பணச்சார்பான (Monetary) அல்லது உளவியல் (Psychological) காரணங்களை விட மெய்க்காரணங்களுக்கே ஏற்றமான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். நாடு வளர்ச்சியுறுவதற்குப் பேரளவில் நிலைமுதற்

கருவிப் பொருட்களைப் பயன்படுத்தவேண்டியது அவசியமாயிருக்கும் நிலையில், வர்த்தகச் சுழல்களுக்கொத்த நெளிவுகளை நாம் எதிர்பார்க்க வேண்டும். வாணிப நெளிவுகள் இரு வகைப்படும்; (1) அத்தியாவசியமானவையாயும் விரும்பத் தகுந்தவையாயுமிருப்பவை. இவை தொழில் முன்னேற்ற வேகத்துடன் இணைந்தவை. தொழில் உற்பத்தியில் ஏற்படும் சில முக்கிய மாறுதல்கள் விரும்பத் தகுந்தவையாயிருப்பதற்குக் காரணம், இவை நமது நடைமுறைச் சமூகத்தின் தொழில் நுட்பக் கட்டமைப்போடு இரண்டறக் கலந்து விட்டிருக்கின்றன என்பதால், இவையின்றி வளர்ச்சிப்பாதையில் முன்னேறிப் போவது சிரமமாயிருக்கிறது. மாறுதல்களை வாணிபத்திலிருந்து அகற்றுவது இயலாது. 'அப்படியே அகற்ற முயன்றாலும், மருந்து, நோயை விடக்கொடியதாயிருக்கும்.'

(2) இரண்டாந்தர (Secondary) வழிவரு (Induced) நெளிவுகள். மட்டுமீறிய பூரிப்புகளும் (Excessive Booms), அளவுக்கு மீறிய பணவாட்டமும் (Deflation) இந் நெளிவுகளில் இடம் பெறுகின்றன. இவற்றால் பயன் ஏதும் விளைவதில்லை. உரிய நடவடிக்கைகள் மூலம் இவற்றை வாணிபத்திலிருந்து அகற்றலாம்.

வேண்டாத, விரும்பாத, இரண்டாந்தர விளைகளுக்குக் காரணம் நன்னம்பிக்கை (Optimism) அல்லது அவநம்பிக்கை (Pessimism) வழியே உருவாகும் தவறுகளே (errors) யாகும். தவறுகள் இல்லாதிருக்கின்ற போதுகூட முதல்தர (Primary) நெளிவுகள் இருக்கவே செய்யும். வர்த்தகர்களனைவரும் எப்போதும் தமது தன்னலம் பற்றிச் சரியான மதிப்பீடுகளைச் செய்துகொண்டு அவைகளுக்கேற்பச் செயல்படுபவர்களாயிருப்பினும் (அதாவது, தவறு செய்யாத போதும்) தொழில் ஏற்ற இறக்கங்கள் மறையும் என்று ராபர்ட்சன் நினைக்கவில்லை.

வாணிபத்தில் உண்டாகும் பீறித்தெறிப்புகள் (Spurts) அல்லது திடீர்ப் பெருக்கங்கள் மூலமாகத்தான் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கடந்த கால அனுபவம் நமக்குக் காட்டுகிறது. இவற்றால் இடர்ப்பாடுகள் விளைகின்றன என்றாலும், இவை பயன் மிகுந்தவையாய் இருக்கின்றன. எனவே, சிரமத்தை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இது நாட்டு முன்னேற்றத்திற்குக் கொடுக்கும் விலை. விலைகள், உற்பத்தி, வேலைவாய்ப்பு முதலியவற்றை நிலைப்படுத்தும் நோக்கத்தில் இங்கிலாந்தின் புகை வண்டிப் பூரிப்போ அல்லது ஜெர்மனியின் மின்பொறிப் பூரிப்போ முளையிலேயே கிள்ளியெறியப்பட்டிருந்தால் இந்நாடுகளின் மக்களுக்கு

நன்மை கிட்டியிருக்காது என்று ராபர்ட்சன் கருதுகிறார். அவ்வப்போது வாணிபத்தில் பீறித்தெறிப்புகள் நிகழ்ந்தால்தான் நாட்டின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள்பெருகும். இவற்றை நாம் தடுத்து நிறுத்திவிட்டால், வளர்ச்சிப்பாதைகள் மூடப்பட்டு விடும்.

பூரிப்புக்கு, கண்டுபிடிப்புகளின் (Inventions) முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறார். இதே போல, உற்பத்தியில் உண்டாகும் தற்காலிகத் தெவிட்டு நிலையால் (Temporary Saturation) மந்தம் உண்டாகிறது என்றார். புகை வண்டி, மின்சக்தி அல்லது டீசல் என்ஜின் முதலிய கண்டுபிடிப்புகளைப் புதுப் பிரதேசத்திலோ, தொழிலிலோ புகுத்தினால் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் தேவை நெடுங்காலம் வளரும். ஆனால், பின்னர்த் தற்காலிகத் தெவிட்டு நிலை ஏற்படும்.

உற்பத்தி நெளிவுகளில் இருவகையின உள்ளன. சில பொருத்தமானவை; பிற பொருத்தமற்றவை. நாம் காணும் நெளிவுகள் பொருத்தமான அளவைக் கடந்து போகும் தன்மையின வாயுள்ளன பொருத்த அளவு நெளிவுகள் உற்பத்தியில் நிகழ்ந்தால் ஆபத்தொன்றுமில்லை. இதற்கும் மிகுதியான நெளிவுகள் தோன்றுகின்றபோதுதான் வாணிபத்தில் தடுமாற்றங்கள் விளைகின்றன. உரிய அளவிற்கதிகமான அளவு மாறுதல்கள் நிகழ்ந்திடக் காரணம் யாது? காரணம் ஒரு தொழில்நுட்பக்காரணம். உற்பத்திக்கருவிகள் பெரும்பாலும் பெரியவையாய், பகுக்க முடியாதனவாய் இருக்கின்றன. எனவே ஆக்க சக்தியைத் தேவைக்கேற்றவாறு பெருக்க முடிவதில்லை. போட்டியின் கெடுபிடியால் பொருத்தமான அளவிற்கதிகமாகப் பண்டங்களை உற்பத்தி செய்துவிடும் நிறுவனங்களுக்கு ஏற்படுகின்றன. உளவியல் காரணிகளும் இருக்கின்றன. உரிய அளவிற்கு அதிகமான உற்பத்தியமைவது என்பது தொழில் முயல்வோர்களின் மனநிலை மாறுதல்களால் ஏற்படுவதுண்டு. தொழில் முயல்வோர்களிடம் நன்னம்பிக்கை பரவலும் விலை மாறுவதும் காரணமாக வழக்கு மீறி உற்பத்திக் கருவிகளின் அதிகரிப்பு, பொருத்தமற்ற அளவுக்குச் செல்கிறது.

ஆனால், உரிய அளவிற்கதிகமாக உற்பத்தியைச் செய்ய வைக்கும் விலைமட்ட மாறுதல்களைத் தடுத்து நிறுத்துவது பணத் துறைக் கொள்கையின் குறிக்கோளாக இருக்கக்கூடாது. உற்பத்தியில் உரிய அளவு மாறுதல்களைத் தோற்றுவிக்கும் விலைமட்ட மாறுதல்கள் அனுமதிக்கப்படவேண்டும்.

வளர்ச்சியையும் நிலைபேற்றையும் ஒரே நேரத்தில் இருக்கச் செய்வது சிரமமாயிருப்பதுதான் பூரிப்புக்கும் மந்தத்திற்குமான அடிப்படைக் காரணம். செழிப்பு நிலையின் போது சராசரி வீதத்திற்கு உயர்வான வீதத்தில் முதலீடு செய்யப்படுமானால், மந்தத்தின்போது இதனால் முதற் கருவிப்பொருள் உற்பத்தியில் மட்டிலா எச்சப்பாடு (qhut) ஏற்படுகிறது. மலிவாய்க் கிடைக்கும் பணச்சூழ்நிலையால் செழிப்புநிலை ஊக்கப்படுமானால், ஏற்கெனவே தெவிட்டு நிலையினையடைந்துள்ள முதலீட்டுத் துறைகள், மேலும் தெவிட்டு நிலையினை எய்துகின்றன. இப்படி மேன்மேலும் முதல் திரட்சியை (Capital formation) பெருக்கிக்கொண்டேபோவது தவறான போக்கு எனலாம். ஏனெனில், இதனால்தான் பல பிரச்சினைகள் பொருளாதார அமைப்பில் உண்டாகின்றன. இவைகளைப் பொருளாதாரம் ஜீரணிக்க முடியாது திணறுகிறது.

சேமிப்புக்கு எச்சமாக முதல் திரட்சி அமைந்தால் பூரிப்பு நிலை ஏற்படுகிறது என்று பலர் கருதுகின்றனர். ராபர்ட்சனும் முதல் பற்றுக் குறையால் வாணிப நொடிப்பு உருவாகக்கூடும் என்று நம்புகிறார். ஆனால், இக்கொள்கையினர், முதலீடும், சேமிப்பும் கூடுதலான வீதங்களில் மேன்மேலும் செய்யப்படும்போது, சில ஆண்டுகளுக்குப் பிறகு முதற் கருவிப்பண்டங்களின் அளிப்பு அபரிமிதமாகிக் கேடுகள் விளையக்கூடும் என்பதைக் கருதுவதில்லை. நவீன உற்பத்திக்கருவிகள், போக்குவரத்து முதலியவற்றை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ச்சியற்று விட்டு விட்டு நிகழ்வன. முன்னேற்றம் ஒரே சீராய்த் தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பதாக இருக்கக் காணோம். விட்டு விட்டே நிகழ்கிறது. எனவே, பொருள் சார்ந்த முன்னேற்றத்தை அடைவதற்கு மனிதனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் காணும் தொடர்ச்சியின்மையால் வாணிபச் செழிப்பும், மந்தமும் உருவாகின்றன என்ற முடிவிற்கு ராபர்ட்சன் வருகிறார்.

14. நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகள்
(Under - Consumption Theories)

"மிக்காபரின் சமன்பாடு. வருட வருமானம் 20 பவுண்டுகள்: செலவு 19 பவுண்டு, 19 ஷில்லிங்குகள், 6 பென்ஸ் = இன்பம். வருமானம் 20 பவுண்டுகள்: செலவு 20 பவுண்டு, 6 பென்ஸ் = துன்பம்."

— சார்லஸ் டிக்கன்ஸ்

வாணிபச் சுழல்களைப்பற்றிய நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகள் தொன்மை வாய்ந்தவை. உண்மையில், பொருளாதார அறிவியல் தோன்றிய காலத்திலிருந்தே இக்கோட்பாடுகள் இருந்து வந்திருக்கின்றன. இக் கோட்பாட்டினை முதன் முதலில் பரப்பியவர்களில் லாடர்டேல் பிரபு (Lord Lauderdale), மால்தூஸ், சிஸ்மாண்டி (Sismondi) முதலியோர் முக்கியமானவராவர். அண்மைக் காலங்களில் இக்கோட்பாட்டைத் திருத்தியமைத்து, அறிவியல் ரீதியில் இதனை வழங்கியோர் பட்டியலில் இங்கிலாந்துக்காரரான ஜே. ஏ. ஹாப்சன் (J. A, Hobson). அமெரிக்கர்களான டபிள்யூ டி. ஃபாஸ்டர் (W. T. Foster), டபிள்யூ. கேச்சிங்ஸ் (W. Catchings), ஜெர்மானியரான எமில் லெடரர் (Emil Lederer) ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

நுகர்ச்சிக் குறைவுக்கோட்பாடுகள், பணச்சார்பான (Monetary) மற்றும் அமித முதலீட்டுக் (Over Investment) கோட்பாடுகளைப் போல் முழுமையான விளக்கங்களாக இருக்கவில்லை. ஏனெனில் சுழலின் சில குறிப்பிட்ட கட்டங்களைப் பற்றி மட்டுமே இவை சுயமான கருத்துக்களை அளிக்கின்றன. மற்றவைகளைப் பற்றி மௌனம் சாதிக்கின்றன. "நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடு வாணிபச் சுழலைப் பற்றியதாக இருப்பதைவிட நெருக்கடி மற்றும் மந்தத்தைப் பற்றியதொரு கோட்பாடாகவே இருக்கிறது." (ஹாபர்லர்). வாணிபச் சுழலின் பல்வேறு கட்டங்களைப் பற்றி ஒரு சில நுகர்ச்சிக்குறைவுக் கோட்பாட்டினர் விளக்கம் தர முயலுகின்

றனர். ஆனால், இவர்களின் விளக்கத்தில் காணும் கருத்துக்கள் பெரும்பாலும் பணச்சார்பான கோட்பாடு, அமித முதலீட்டுக் கோட்பாடு முதலியவற்றிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவையே எனலாம். மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் நுகர்ச்சிக் குறைவு கோட்பாட்டினரிடம் நுகர்ச்சிக் குறை பற்றிய ஒப்பிய திட்டவட்டமான, தெளிவான இலக்கணம் ஏதும் காணப்படவில்லை. பலரும் பல்வேறு வகையான இலக்கணங்களைக் கொடுத்திருக்கின்றனர். பணவருமானங்களின் பற்றாக்குறை பற்றியோ அல்லது இவ்வருமானங்களிலிருந்து நுகர்ச்சிப் பொருட்கள் மீது செய்யப்படும் செலவீட்டின் பற்றாக்குறைபற்றியோதான் எல்லா நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகளும் விளக்குகின்றன என்றாலும், இவைகளிடையே பெருத்த வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகளின் பொது விளக்கம்

தொழிலின் உற்பத்தி, அதன்செலவுகளுக்குக்(இச்செலவுகளில் சாதாரண இலாபமும் இடம் பெறும்) கட்டிவரும் விலைகளில் விற்பனையாக வேண்டும் என்றால், போதுமான வாங்குந்திறன் பொருளாதார அமைப்பில் இருத்தல் வேண்டும். ஆனால், உண்மையில் போதுமான வாங்குந்திறன் இருப்பதில்லை என்று நுகர்ச்சிக் குறைவு கோட்பாடு கூறுகிறது. இக் கோட்பாட்டின் எடுகோள்: நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நுகர்வோர்களை அடையாதிருக்கின்ற சில செலவினங்கள் உற்பத்தியில் ஏற்கப்பட்டு, விலைகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. இதன் விளைவு என்னவென்றால். உற்பத்தியின் மொத்த மதிப்பு மக்களின் வாங்குந்திறனைவிட மிகுதியாக அமைந்து, மொத்த உற்பத்தியின் விற்பனை பாதிக்கப்படுகிறது. அதாவது, 'ஒரு தொழிலில் உள்ள தொழிலாளர்களால் அவர்களுடைய பண்டங்களையே திரும்ப விலைக்கு வாங்க முடியாமல் போகிறது.'

கூலிச் செலுத்துகைகள் (Wage payments) ஒன்றினால்தான் வாங்குந்திறன் உருவாகிறது என்ற கருத்தினை இக்கூற்று பிரதிபலிக்கிறது. சற்று உற்று நோக்கினால் இக் கூற்றில் உண்மை இல்லை என்பது புலனாகும். தொழிலாளர்களுக்கு ஓர் உற்பத்தியாளன் கூலிகளையும் சம்பளங்களையும் தருகிறான். அதே நேரத்தில், கடனாக வாங்கப்பட்ட முதலுக்கு வட்டியையும், நிலம் மற்றும் சொத்துக்களை அனுபவிப்பதற்குரிய வாரத்தையும், சாதனங்களை வழங்குவோர்களுக்குரிய தொகைகளையும், எந்திரங்களைப் பழுது பார்த்துப் பாதுகாத்து வருவதற்காகும் கட்டணங்களையும், பங்கு

தாரர்களுக்குச் சேரவேண்டிய ஆதாயங்களையும் வழங்கி வரு கிறுன் என்பதையும் மறந்துவிடக்கூடாது, இவையும் வாங்குந் திறனின் ஓர் அங்கமாக இருக்கின்றன என்பதை யார் மறுக்க முடியும்? வாங்குந்திறனுக இச்செலவினங்களால் தோன்றும் வருமானம் ஆளப்படாமல், முடக்கப்படுவதாயிருக்கலாம். ஆனுல், கூலிகளும் இவ்வாறே பயன்படுத்தப் பெருமல் போவதில்லையா?

நுகர்வோர்களுக்குப் போகாது விலைகளில் மட்டும் இடம் பெறும் செலுத்துகள் யாவை? செப்பனிடுவதற்கு, தேய்மானத் திற்குக் கொடுக்கப்படும் கட்டணங்களும் மற்ற ஒதுக்கீடு இருப்பு களும் (Reserves) இத்தகையன என்று மேஜர் சி. எச். டக்ளஸ் (Major C. H. Douglas) கூறுகிருர். இவை இருப்புகளாக இருக் கின்றன. இருப்பு செய்யப்பட்டுவதற்கில்லை. வணிகப் பதிவுமுறை (Book keeping) இனங்களாகவே இருந்து விடுகின்றன. தொழில் இயங்கிட வேண்டும் என்ருல், இவ்வினங்கள் உற்பத்திச் செலவோடு (விலையோடும்) சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். இப்படிச் சேர்த்த விலைகளில் பண்டங்களை அங்காடிக்கு அனுப்பிவைக்குமாறு வணிகக் கணக்கியல்முறை (Accountancy) நம்மை நிர்ப்பந்திக் கிறது. இவ்விலைகளில் இவற்றை விற்பது சிரமமாயிருக்கிறது. இதற்குக் காரணம், இவற்றை வாங்குவதற்கான சக்தி நுகர்வோர்களுக்கு இல்லை என்பதே. மேற்கூறிய இருப்புகள் தொழிலகங்களில் வைக்கப்படுவது வணிகக் கணக்கியல் முறை மைக்காக மட்டும் அன்று. அடுத்து ஏற்படக் கூடிய எந்திரக் கோளாறுகள், தேய்மானம் முதலியவற்றைச் சரிப்படுத்துவதற் காக இல்விருப்புகள் வைக்கப்படுகின்றன. இவை அவ்வாறு உண்மையாகவே பயன்படுத்தும்போது சிலருக்கு வாங்குந்திறன் கிடைக்கத்தான் போகிறது. ஆனுல், அதற்கிடையில் இவ்விருப்பு களுக்கு (Reserves) ஈடான அளவுக்குக் குறைபாடு மக்களின் செல வீட்டில் இருக்கவே செய்யும். நுகர்ச்சிக்குறைவு இடர்ப்பாடு எழுவதற்கு இது ஒரு மூலகாரணம்.

ஆனுல், ஏதாவது ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்கள்தான் இவ்வாறு இருப்புகளைச் செலாவிடாதிருந்துவருமே ஒழிய எல்லா நிறுவனங்களும் அல்ல. மற்றென்றையும் இங்கே நாம் நினைவு கூர்தல்வேண்டும். A என்ற நிறுவனம் இருப்புகளை ஒதுக்கிவைத்து உற்பத்திச் செலவுகளுக்குக் குறைவாக இருக்கும் வகையில் வாங் குந் திறனைக் குறைக்கின்றபோது, B என்ற நிறுவனம் தமது எந்தி ரங்களைச் செப்பனிட இருப்புக்களைச் செலவிட்டு, உற்பத்திச் செலவுகளுக்கதிகமாக இருக்கும் வகையில் வாங்குந்திறனை அதிகப் படுத்தலாம். ஆகவே, அநேக நிறுவனங்கள் தொழிலில் இயங்

கிடும் போது, எந்த ஒரு நேரத்திலும் எந்திரங்களைச் செப்பனிடுவதற்காக இருப்புகளிலிருந்து செய்யப்படும் செலவீடுகளின் தொகை, இருப்புகளைச் சேர்த்துக் கணக்கிட்ட பணவிலை (Money Price) மதிப்புத் தொகைக்குச் சமமாகவே இருக்கும். எல்லா நிறுவனங்களும் ஒரே நேரத்தில் மட்டுமே இருப்புகளை ஒதுக்கி வைப்பதாயுள்ள சூழ்நிலையில் மட்டுமே இது உண்மையாகாது. ஆனால், இத்தகைய சூழ்நிலையைக் காண்பது அரிது.

ஆயினும், இருப்புகள் ஒதுக்கப்படுவதும், எந்திரங்களையும் மற்றவைகளையும் செப்பனிடச் செலவுகள் செய்யப்படுவதும் ஒரே நேரத்தில் அமைவதாய் இல்லாத சூழ்நிலை ஒன்று உண்டு. நிலை முதலில் (Fixed Capital) மிகுதியான முதலீடு செய்யப்பட்ட பின்னர் வரும் காலப்பகுதியில் இத்தகைய சூழ்நிலை உண்டாகுகிறது. இந்தப் பெருக்க நிலையில் தேய்மானத்திற்கென ஒதுக்கப்படும் பேரளவு இருப்புகள் பல காரணங்களை முன்னிட்டுச் செலவிடப் படாதுபோய் ரொக்கமாக வைத்துக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு இவை ரொக்கமாக வைத்துக் கொள்ளப்பட்டு, பாங்குகளாலும் முதலீடு செய்யப்படாமல் போகுமானால், உற்பத்திச் செலவுகளுக்குச் சமமான வாங்குந்திறன் மக்களுக்குக் கிடைக்காமல் போகின்ற நிலை ஏற்படுகிறது. இதனால் மந்தம் தீவிரமடைகிறது என்று நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடு கூறுகிறது. மந்தம் உண்மையில் எப்படி உருவாகிறது, செழிப்புநிலை எவ்வாறு தோன்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை இவை தரவில்லை.

டக்ளஸ் மற்றொரு விதமான விளக்கத்தையும் தருகிறார்: ஒரு வர்த்தக நிறுவனத்தின் செலுத்துகள் (Payments) இருவகைப்படும்; (1) கூலிகள், சம்பளங்கள், இலாப ஈவுகள் என்று தனிப்பட்ட நபர்களுக்குத் தரப்படும் செலுத்துகள்; இவற்றை A என்போம். (2) எந்திரம், கச்சாப்பொருள் ஆகியவற்றிற்காக மற்ற நிறுவனங்களுக்குத்தரப்படும் செலுத்துகள்; இவற்றை B என்போம். நுகர்வோர் வாங்குந்திறனை A செலுத்துகள் உருவாக்குகின்றன; B செலுத்துகள் உருவாககுவதில்லை. A, B என்ற இவ்விருவகைச் செலுத்துகளும் செலவுகள். இவை நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகளில் இடம் பெறுகின்றன. ஆகையால் விலை = A + B ஆகும். ஆனால் வாங்குந்திறனோ B—க்கு மட்டுமே சமமாயிருக்கிறது. எனவே B—க்குச் சமமான அளவுக்குப் பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்படா விட்டால் உற்பத்தி இடர்ப்படுவது உறுதி.

இந்தப் பற்றுக்குறையை எவ்வாறு நிவர்த்தி செய்வது? கடன் செலாவணியைத் தரப் பாங்குகள் முன் வந்தால் இப்பற்றுக்குறை நிவர்த்திக்கப்படும். உதாரணமாக, எந்திரங்கள், தளவாடங்கள் அல்லது கச்சாப் பொருள்கள் முதலியவற்றை மற்ற நிறுவனங்

களுக்கு விற்பனை செய்ய உத்தேசித்துள்ள ஓர் உற்பத்தியாளனுக்குப் பாங்குக்கடன் செலாவணி கிடைக்கக் கூடும் என்றால், இவற்றை விற்பனை செய்வதற்கு முன்பே அவனால கூலிகளைக் கொடுத்து விடமுடியும். இது நன்மை பயப்பதாயிருக்கலாம். ஆனால், இந்த எந்திரங்களையும், மற்றவைகளையும் வாங்கிக் கொள்ளும் நிறுவனம் வழங்கும் செலுத்துகள் (B செலுத்துகள்) செலவிடப்படாதுபோய், பாங்குகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களை அடைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, B செலுத்துகள் வாங்குந்திறனில் இடம் பெறாது போகின்றன. இதனால் பற்றாக்குறை எழுகிறது. பழையகடன்கள் இவ்வாறு திருப்பி அடைக்கப்பட்டுவிடுவதாயிருப்பினும், புதிய கடன்கள் மறுபடியும் பாங்குகளிடமிருந்து வாங்கப்படுவதனால் நிலைமை சீர்படும்—வாங்குந்திறன் கூடுதலாகும்—என்று சிலர் நினைக்கலாம். ஆனால், இது நவீன பாங்கு நிலவரங்களில் சாத்தியமில்லை என்று டக்ளஸ் கருதுகிறார்.

இதற்கு அவர் என்ன காரணம் கூறியிருக்கிறார்? கடன்களுக்கு வட்டி தரவேண்டியிருக்கிறது. எனவே, ஒவ்வொரு முறையும் கடன்கள் திருப்பித்தரப்படும்போது நுகர்ச்சிப் பற்றாக்குறை அதிகமாகிக்கொண்டே போகிறது. மேலும், பாங்குக்கடன் செலாவணிப் பெருக்கத்திற்குத் தடைகள் வேறு இருக்கின்றன. கடன் செலாவணி வரையறையின்றி பெருகுவதற்கில்லை. கடன் கொடுப்பதைப் பாங்குகள் குறைத்து விடுகின்றன. ஏன்? பாங்குகள் சர்வாதீன (Monopoly) நிலையில் இருக்கின்றன. எல்லாச் சர்வாதீனங்களையும் போன்று இவை கிடைப்பருமை (Scarcity) யை அடிப்படையாகக் கொண்டு இலாபம் ஈட்டப்பார்க்கின்றன. கடன் அளவைக் கட்டுப்படுத்தி அதனை அரிதாக இருக்கச் செய்வதன் மூலம் பாங்குகள் மிகுதியான இலாபங்களை அறுவடை செய்யும் வாய்ப்புகளைப் பெறுகின்றன. எனவேதான் பண அளிப்பைக் குறைப்பதில் அவை கண்ணுங் கருத்துமாயிருக்கின்றன. கடனாக வாங்குந்திறனைக் கொடுக்க முன்வரும் பாங்குகள் கடன்களைக் கணிசமான இலாபங்களுடன் திரும்ப வாங்கும் இயல்புடையன. ஒவ்வொரு கடனும் திருப்பித்தரப்படவேண்டும். ஆகவே, கடன்களனைத்தும் எங்கிருந்து புறப்பட்டனவோ அங்கேயே திரும்பவும் போய்ச் சேர்ந்துவிடுகின்றன. புழக்கத்திலிருந்து பணத்தை இடைவிடாது உறிஞ்சி எடுத்துக்கொள்ளும் ஓர் எந்திர அமைப்பாகப் பாங்குகள் இருக்கின்றன.

ஆகவே, கடன் செலாவணிச் சர்வாதீனமே (Monopoly of Credit) நமது தொல்லைகளுக்கெல்லாம் காரணம் என்று நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாட்டினர் கருதுகின்றனர்; கடன் செலாவணி

யளிப்பு ஒரு பொதுப்பணியாயிருந்து, தேவை ஏற்படும் போதெல்லாம் அதை அதிகப்படுத்த முடியுமென்றால் நமது தொல்லைகள் முடிவுறும் என்று நம்புகின்றனர். எனவே, கடன் செலாவணியளிப்பு மீது அரசுக் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்று கோருகின்றனர். "இதற்கான வாதங்கள் இவர்களிடமிருக்கின்றன என்றாலும், அவற்றை இவர்கள் நன்கு எடுத்துரைக்கவில்லை" (ஈஸ்டி). பாங்குக் கடன் செலாவணி தொடர்ந்து சுருக்கப்பட்டு வருவதாக இவர்கள் கருதுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது. பாங்குக்கடன் செலாவணியளவு மாறுவதால் சமநிலைக் கேடு (Disequilibrium) ஏற்படுகிறது என்பது ஒன்று; எப்போதுமே சுருக்கப்படுகிறது என்பது வேறு. உற்பத்தியையும் விலைகளையும் நிலைப்பாடு (Stability அடையச் செய்யத் தேவைப்படும் அளவிற்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ பாங்குக்கடன் செலாவணியளவு இருந்தால் சமன்கேடு ஏற்படலாம். ஆனால், நுகர்ச்சிக் குறைவுவாதி (Under Consumptionist) கூறுவதைப் போன்று பாங்குக்கடன் செலாவணி தொடர்ந்து குறைந்து கொண்டிருப்பதால் தான் சமநிலை கேடுறுகிறது என்பது உண்மையல்ல.

நுகர்ச்சிக்குறைவுக் கோட்பாட்டினருள் ஒருசிலர் சேமிப்பினால் தான் தொல்லைகள் பிறக்கின்றன என்றும், பண்டங்களை விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை சேமிப்பினால்தான் உருவாகிறது என்றும் கூறுகின்றனர். இவர்களும் தம்மை நுகர்ச்சிக் குறைவு வாதிகள் என்று குறிப்பிட்டுக் கொண்டாலும், இவர்களுடைய கோட்பாடுகளில் வற்புறுத்தப்படுவது நுகர்ச்சிக் குறைவைவிட அமித சேமிப்பே யாகும். இவர்களுடைய விளக்கம் பின்வருமாறு இருக்கிறது; நுகர்ச்சியைத் தவிர்ப்பதனால் பிறப்பது சேமிப்பு. ஆகையால் சேமிப்பினால் மக்களுடைய வாங்குந்திறன் குறைந்து அதில் பற்றாக்குறை ஏற்படுகிறது. சேமிப்பு, முதலீடு செய்யப்படவில்லையென்றால் பணவீக்கம் தோன்றுகிறது. இதனால், மொத்த வாங்குந்திறன், உற்பத்தியின் மொத்த மதிப்புக்குக் குறைவாக அமைகிறது. அப்போது விலைகள் தாழ்கின்றன. இழப்புகள் ஏற்படுகின்றன. உற்பத்தியளவு சுருங்குகிறது.

முதலீட்டையும், முதலீட்டுக்கும் சேமிப்புக்கும் உள்ள உறவினையும் இவ் விளக்கம் புறக்கணிக்கிறது. சேமிப்பும் முதலீடும் சமமான அளவில் இணையாகச் செல்ல முடிவதற்கான சாத்தியக் கூறுகள் பல உண்டு என்பதையும், பாங்குகளின் உதவியால் சேமிப்புகளுக்கும் முதலீடுகளுக்குமிடையே உறவுகள் ஏற்படலாம் என்பதையும் இக்கோட்பாட்டினர் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளவில்லை. இதன் காரணமாக, இவர்களால் மீட்சி மற்றும் செழிப்

புக் கட்டங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை விளக்க முடியாது போகிறது. "முதலீடு இல்லையென்றால், சேமிப்பினால் விளைவது பணவாட்டம் (Deflation) மட்டுமன்று? பயங்கர மந்தமும் ஆகும்." (ஈஸ்டி)

ஆனால், பெரும்பாலான நுகர்ச்சிக்குறைக் கோட்பாட்டினர், சேமிப்பையும் முதலீட்டையும் ஒன்றெனக் எடுத்துக்கொள்கின்றனர். முதலீடு செய்யவேண்டுமென்பதற்காகத்தான் சேமிப்புச் செய்யப்படுகிறது என்றும், சேமிப்புச் செய்யப்படும்தொகை உண்மையில் முதலீடு செய்யப்படுகிறது என்றும் இவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். முதலீடு செய்யப்படும் சேமிப்புகளின் விளைவுகள்தான் இவர்களுக்கு முக்கியமானவையாயிருக்கின்றனவே ஒழிய முதலீடு செய்யப்படாத சேமிப்புகளின் விலைகள் அன்று.

இனி. நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகளில் முக்கியமான இரு கோட்பாடுகளைத் தனித் தனியே எடுத்துக் கொள்வோம்.

(1) ஃபாஸ்டர், கேச்சிங்ஸ் முதலியோரின் சேமிப்புக் கோட்பாடு (Foster and Catchings Theory of over saving)

இக் கோட்பாட்டில் மிகப்பற்றுள்ளவர்கள், உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யப்படும்போது வாணிப முறிவும் மந்தமும் ஏற்படுவது உறுதியாயிருக்கிறது என்று நம்புகின்றனர். சேமிப்பு சிறியதாயிருந்தால் மந்தம் சற்றுக் காலம் தாழ்த்தி வருகிறது; பெரியதாயிருந்தால் மந்தம் விரைவில் வந்து விடுகிறது. சேமிப்புகள் இருக்கின்றவரை தொல்லையும் இருந்துதான்தீரும்.

இக் கருத்து ஃபாஸ்டர், கேச்சிங்ஸ் ஆகியோரின் வரைவுகளில் காணப்படுகின்றன. இவர்களுடைய அமித சேமிப்புக் கோட்பாட்டின் சாரம் கீழே தரப்படுகிறது.

தன்னுடைய வருமானம் அனைத்தையும் சமூகம் செலவு செய்துவிடுவதில்லை. இவ்வருமானத்தின் ஒரு பகுதி சேமிக்கப்படுகிறது. ஒரு பகுதியை தொழிலே சேமிக்கிறது. தொழில் உற்பத்தியின் முழு மதிப்பையும் வருமானங்களாகப் பகிர்வு செய்வதில்லை. ஒரு பகுதி உற்பத்தித் தளவாடங்களைப் பெருக்குவதற்காக இருப்புச் செய்கிறது (சேமிக்கிறது). பிறருக்குப் பகிர்வு செய்யப்படும் வருமானத்தில் ஒரு பகுதி பிறரால் சேமிக்கப்படுகிறது. இச் சேமிப்புகள் பாங்குகள் மூலமாகத் தொழிலுக்குச் சென்று அங்கே முதலீடு செய்யப்படுகின்றன. அதாவது பொருள்களைக் கூடுதலாக உற்பத்தி செய்யத் துணைபுரியும் சாதனங்களை வாங்கப் பயன்படுத்தப்படுகின்றன.

விற்பனைக்கு வரும் பொருள்களைப் பெறுவதற்குரிய வாங்குந் திறனில், இத்தகைய நுகர்வோர் மற்றும் தொழிலின் சேமிப் பால் பற்றுக்குறை ஏற்படுகிறது. ஆனால், இந்தப் பற்றுக்குறை உடனே ஏற்பட்டு விடுவதில்லை. இறுதிக் கட்டத்தில்தான் ஏற் படுகிறது. ஏனெனில், வருமானங்களிலிருந்து—அதாவது வாங் குந் திறனிலிருந்து—ஒதுக்கப்படும் எல்லாச் சேமிப்புகளும், முதலீட்டு வழிமுறை மூலமாக முதற்கருவிப்பொருள் உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் கூலிகளாக, சம்பளங்களாகச் செலுத்தப்பட்டு விடுகின்றன. ஆகவே, சேமிப்பு களினால் மொத்த வாங்குந் திறனின் அளவு துவக்கத்தில் பாதிக் கப்படுவதில்லை. ஒரு பகுதியினரால் கைவிடப்படுவது மற்றொரு பகுதியினருக்குப் போய்ச் சேர்கிறது.

எனினும், போதிய வாங்குந்திறன் உளதாகக் காணப்படும் இந்நிலை தற்காலிகமானதே. காலம் செல்லச் செல்ல, எந்த உற் பத்தி வசதிகளைப் பெருக்குவதற்காகச் சேமிப்புகள் செலவிடப் பட்டனவோ அந்த வசதிகள் பெருகிடும் நிலையில் பண்டங்களின் அளிப்பு அதிகரிக்கின்றது. அப்போது பழைய பண்டங்கள், புதிய பண்டங்கள் ஆகிய இரண்டையும் வாங்குவதற்குரிய வாங்குந் திறன் பொருளாதாரத்தில் இருப்பதில்லை. தங்கம் நாட்டுக்கு வருவதனாலோ அல்லது பாங்குகளின் பணவீக்க நடவடிக்கை யாலோ மொத்தப்பண அளிப்பு அதிகரித்தால் ஒழிய, இவ் வாங்குந் திறனால் பண்டங்களை வாங்குவதற்கு முடிவதில்லை.

அப்படியென்றால், தேவைப்படும் அளவிற்குப் பணத்தின் அளவு ஏன் அதிகப்படுத்தப்படக் கூடாது? தங்கத்தின் அளவு பொதுவாக அதிகரிப்பதற்கில்லை. ஆனால். பொருள் உற்பத்தி யின் பெருக்கத்திற்கேற்பப் பாங்குகள் ஏன் கடன் செலாவணியின் அளவைப் பெருக்கக்கூடாது? இதனைப் பாங்குகள் செய்வதற் கில்லை என்றால், அவை எதற்காகத்தானிருக்கின்றன? இதற்காகத் தான் பாங்குகள் இருக்கின்றன. சந்தேகமில்லை. இதைச்செய்யவே தான் அவை முயலுகின்றன. பொய்யில்லை. ஆனால், பாங்கு களால் நெருக்கடியைத் தள்ளிப்போடத்தான் முடியுமே தவிர, தடுத்து நிறுத்த முடியாது. இதற்குரிய காரணத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், கடன் செலாவணி பயன் படும் முறையினைச் சற்று உற்று நோக்க வேண்டும். கடன் செலா வணி உற்பத்தியாளர்களுக்குத் தரப்படுகிறது. இது உற்பத்தி யாளரின் சொத்தையோ அல்லது இலாப எதிர்பார்க்கைகளையோ அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகிறது. கடன் செலா வணியைப் பெறும் உற்பத்தியாளர்கள். இதைக்கொண்டு முதற்

கருவிப் பொருட்களை வாங்கி உற்பத்தியைப் பெருக்குகின்றனர். அப்போது பணம் நுகர்வோர்களிடம்—உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கூலி சம்பாத்தியக்காரர்களிடம்—போய்ச் சேர்கிறது. இந்நிதிகளின் அளவுக் கேற்ப இவர்களுடைய வாங்குந்திறன் கூடுதலாகிறது. ஆனால், கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் புதிய பண்டங்கள் அங்காடிகளுக்கு வருகின்றபோது பண்டங்களின் அளிப்பு அதிகரித்து, வாங்குந் திறன் மறுபடியும் பற்றாததாய்ப் போய்விடுகிறது. விலைகள் தாழ்கின்றன. பாங்குக்கடன் மீண்டும் பெருகினால் மட்டுமே இது தவிர்க்கப்படமுடியும். வருமானங்கள் அதிகரிக்கின்றபோது, சேமிப்புகளும் அதிகரிக்கின்ற தன்மையினவாயிருப்பதனால், வாங்குந்திறன் பற்றாக் குறையளவு கூடுதலான வீதத்தில் வளர்கிறது. எனவே, பாங்குக்கடன் செலாவணியளவு கூடுதலான வீதத்தில் பெருகுவதாயிருந்தால் மட்டுமே விலைகளின் சரிவுப் போக்குத் தவிர்க்கப்பட முடியும்.

இவ்வாறு பாங்குகளால் தொடர்ந்து கடன் செலாவணியைப் பெருக்கிக்கொண்டே போக முடியுமா? நிச்சயமாக முடியாது. இருப்புகளின் நிலைமையை அனுசரித்துத்தான் பாங்குகளால் கடன் செலாவணியை அதிகப்படுத்தமுடியும். இருப்புகளின் நிலைமை கடன் செலாவணிப் பெருக்கத்தை அனுமதிக்கவில்லையென்றால், பாங்குகள் எச்சரிக்கையாகிப் பெருக்கத்திற்கு முற்றுப் புள்ளியிடுகின்றன. இந்த நேரம் வருகின்றபோது, சேமிப்பினால் ஏற்படும் விளைவுகளைத் தள்ளிப் போடுவது என்பது முடியாது. மந்தம் துவங்குகிறது. ஆகவே, சேமிப்பினால் நெருக்கடி விளைகிறது. நெருக்கடியும் மந்தமும் ஏற்படாத வகையில் ஒரு சமூகத்தால் சேமிக்க முடிவதில்லை. எனவே, தனி நபர் மற்றும் வர்த்தகச் சேமிப்பினால்தான் உற்பத்திக்கும் விற்பனைக்குமுள்ள சமநிலை பாதிக்கப்படுகிறது.

சேமிப்பினால்தான் தொல்லை ஏற்படுகிறது என்ற இக் கோட்பாட்டிற்கு ஹேயக் (Hayek) மறுப்பு கூறியுள்ளார். சுயேச்சையாக நிகழும் சேமிப்புகள் சுழலை ஏற்படுத்தாமல் முதலீட்டில் செல்லக் கூடும் என்று வலியுறுத்துகிறார். சேமிப்பில் ஏற்படும் பேரளவு மாறுதல்களால் வாணிபத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றக்கூடும். ஆனால், பலத்த கேடுகளின்றிச் சமூகத்தால் சேமிப்பைப் பயன்படுத்த முடியாது என்ற கூற்றை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்கிறார். நமது வட்டிவீதங்கள் நெகிழ்ச்சியுடையன. சேமிப்பு முதலீட்டுக்குச் செல்லக்கூடும். உற்பத்தி சற்றுப்பெருகும். உற்பத்திச் செலவு குறைந்து விலைகள் தாழ்வதாகலாம். ஆனால்,

வாணிபச் சுழல் நிகழவேண்டிய அவசியமில்லை. இந்த உண்மையினை, சேமிப்பால்தான் வாணிபச் சுழல்கள் ஏற்படுகின்றன என்று கூறுவோர்கூட ஓரளவிற்கு ஒப்புக் கொள்கின்றனர். உத்தம (optimum) அல்லது சமநிலை (Equilibrium) அளவிற்கதிகமாயுள்ள சேமிப்புகளால்தான் தொல்லை ஆரம்பமாகிறது என்று நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாட்டினரில் புகழ் வாய்ந்தவரான ஜே. ஏ. ஹாப்சன் ' ஒப்புகிறார்.

ஹாப்சனின் நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடு
(Hobson's Theory of under Consumption)

மட்டுமீறிய சேமிப்பினுல்தான் மந்தம் ஏற்படுகிறதே தவிர சாதாரண சேமிப்புகளால் அன்று என்ற குறிப்புடன் ஹாப்சன் தனது கோட்பாட்டினை விவரிக்கத் துவங்குகிறார். சேமிப்புகள் மித மிஞ்சிச் செய்யப்பட்டு அவை உற்பத்திச் சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டால் நுகர்ச்சிப் பண்டங்களின் அளிப்புப் பெரிதும் அதிகரித்து, இலாபகரமான விலைகளில் இவற்றை விற்பனை செய்வது முடியாது போய் மந்தம் வருவதற்கான பாதை திறந்து விடப்படுகிறது என்று ஹாப்சன் கருதுகிறார். பாங்குக்கடன் செலாவணிப் பெருக்கத்தால் விளையும் கட்டாயச் சேமிப்பால் (Forced Saving) உண்டாகும் அமித முதலீட்டால் (over-investment) மந்தம் உண்டாகிறது என்கிறார் ஹேயக். சுயேச்சை சேமிப்புகளின் (Voluntary savings) வரம்பு மீறிய அதிகரிப்பால் மந்தம் ஏற்படுகிறது என்கிறார் ஹாப்சன். நவீன பொருளாதார நிலவரங்களில் சுயேச்சை சேமிப்புகளின் அளவு மித மிஞ்சியிருப்பது இயல்பானதே என்றிவர் வாதிடுகிறார். 'மட்டு மிஞ்சிய சேமிப்பெனும் கொடிய தீமையால் நாம் அவதியுறுகிறோம். மந்தமும் வேலை வாய்ப்பின்மையும் மலிந்த காலங்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருப்பதற்கான மூலகாரணம் இந்தத் தீமையே.'

மித மிஞ்சிய சேமிப்புகள் எவ்வாறு ஏற்படுகின்றன? எல்லாத் தொழில் சமூகங்களிலும் நாட்டு வருமானம் சமமாகப் பகிர்வு செய்யப்படாது போவதன் காரணமாகவே வரம்பு மீறிய சேமிப்புகள் ஏற்படுகின்றன என்றிவர் கருதுகிறார். இச் சமூகங்களின் ஒரு முக்கிய அம்சம் ஒரு சிலரிடம் மட்டுமே செல்வம் பேரளவில் குவிந்து போவது. மக்களில் பெரும்பகுதியினருக்குச் சிறிய அளவு வருமானங்கள்தான் கிடைக்கின்றன. ஆனுல், ஒரு சிறு பகுதியினரோ பேரளவு வருமானங்களைப் பெற்றுச் சமூகத்தின் மொத்த வருமானத்திலிருந்து பெரும் பங்கினை எடுத்துக் கொள்கின்றனர்.

சேமிப்பின் ஒரு பெரும்பகுதிக்கு இச் செல்வர்களே பொறுப்பாளிகளாயிருக்கின்றனர். ஏழையர்கள் தமது வருமானங்களைப் பெரும்பாலும் செலவு செய்து விடுகின்றனர். செல்வர்களோ தமது வருமானங்களை மேன்மேலும் சேமித்து வருகின்றனர். கூடுதலான வருமானங்களையுடையவர்கள் கூடுதலாகச் சேமிக்கின்றனர் என்பது மட்டுமன்று. இவர் வருமானங்கள் கூடுகின்றபோது சேமிப்பின் வீதமும் உயர்கிறது. பெருஞ்செல்வர்களைப் பொறுத்த வரையில், வருமானம் அதிகரிக்கின்றபோது சேமிப்பு அதிகரிப்பது என்பது இயல்பானதாக, தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

செல்வர்களால் தமது முழு வருமானங்களையும் செலவிடுவது என்பது மிகவும் கடினம். இவர்களிடம் ஆடம்பர வேட்கைகள் உண்டு. எழில் உமிழும் மாளிகைகள், எண்ணற்ற பணியாட்கள், உல்லாசப் படகுகள், உயரிய சொத்துவகைகள்—இவைகளைத் துய்க்க வேண்டும் என்ற ஆவல்கள் இவர்களிடம் உண்டு எனினும், அலையெனத் திரண்டுவரும் வருமானங்களனைத்தையும் அவ்வப்போதே செலவிட்டுவிடும் பழக்கம் இவர்களிடம் இல்லை. ஒரு பக்கம் பார்த்தால் நுகர்ச்சி கோரும் துடிப்பு இருந்து, ஆனால், நுகர்ச்சி செய்யும் ஆற்றல் இழந்து நிற்கும் ஏழையர் கூட்டம். மற்றொரு பக்கம் பார்த்தால் நுகரும் ஆற்றல் மிகுந்து, ஆனால் நுகர்ச்சி செய்யும் துடிப்பற்ற செல்வர் குழாம்.

அமித சேமிப்பு எப்படிச் சுழலை உண்டாக்குகிறது? செல்வர்களால் செலவிடப்படாது வருமானப்பகுதி சேமிக்கப்பட்டு, முதலீடு செய்யப்படுகிறது. உற்பத்தி வசதிகள் பெருகுகின்றன, புதிய தளவாடங்கள் மேலும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உற்பத்தித்திறன் உயர்கிறது. அப்போது வளர்ச்சியின் அறிகுறிகள் வாணிபத்தில் தென்படுகின்றன. அடுத்து, பாங்குக்கடன் செலாவணியளவு பெருகி விலைகள் உயரே தாவுகின்றன. வாணிப வளர்ச்சியாலும், விலை ஏற்றத்தினாலும் உண்டாகும் மொத்த வருமான அதிகரிப்புகள், உற்பத்திக்குக் கைகொடுக்கும் பொருளாதார வகுப்பினர் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. இதற்குக் கூலிகளின் பின்தங்கு இயல்பே காரணம். செழிப்பின் போது, விலைகள் உயர்வதன் அளவுக்குக் குறைவாகவே கூலிகள் உயர்கின்றன. எனவே, கூலி சம்பாத்தியக்காரர்களின் மெய் வருமானங்கள் (Real Incomes), அவர்களுடைய பண வருமானங்கள் (Money Incomes) உயரும் வேகத்தில் உயர்வதில்லை. இதனால் செழிப்பு நிலையால் தோன்றும் அதிகப்படியான வருமானங்கள் கூலி சம்பாத்தியக் காரர்கள் அல்லாத பிறவகுப்பினருக்குப் பெருமளவில் போய்ச் சேர்கின்றன. ஏற்கெனவே தமது வரு

மானங்களை உரிய வீதங்களில் செலவிட முடியாதிருந்து வருபவர்கள் இவர்கள்; தற்போது இவர்களுடைய வருமானங்கள் மேலும் கூடுகின்றன. ஆகவே, இன்னும் சற்றுக் கூடுதலாகச் சேமித்து முதலீடு செய்வதில் முனைகின்றனர்.

கூடுதலான வருமானங்களைப் பெறுவோர், தமது வருமானங்கள் அதிகரிக்கும் வீதங்களில் நுகர்ச்சியையும் அதிகப்படுத்திக் கொள்வதாயிருப்பின், இந்த இரண்டாந்தரச் சேமிப்புப் பெருக்கமாவது தவிர்க்கப்படுவதாயிருக்கும். ஆனால், நுகர்ச்சி அவ்வாறு அதிகரிப்பதில்லை. நுகர்ச்சிப் பாணி, மக்களின் பழக்க வழக்கங்களால், வாழ்க்கைத் தரங்களால், மரபுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. நுகர்ச்சி முறைகள் பழமை மிகுந்தவை. சம்பிரதாயமானவை என்கிறார் ஹாப்சன். நுகர்ச்சிப்பாணி நெகிழ்ச்சியற்றிருக்கிறது. இது மேட்டுக்குடியினரைப் பொறுத்து மட்டும் உண்மையாயிருக்கவில்லை; கீழ்க்குடியினரைப் பொறுத்தும் உண்மையாயிருக்கிறது. கூலி சம்பாத்தியக்காரர்கள், தமது நுகர்ச்சிப் பழக்கங்களில் வியக்கத்தக்க அளவிற்குப் பழைமைப் பற்றுள்ளர்களாயிருக்கின்றனர். எனவே, இவர்களுக்குக் கிடைக்கும் வருமான அதிகரிப்புகள் கூடச் செழிப்புக் கட்டத்தின்போது சேமிப்புகளோடு சங்கமமாகிச் சேமிப்பு நிலையங்கள், இன்சூரன்ஸ் கம்பெனிகள் முதலியவற்றில் டெபாசிட் செய்யப்பட்டு விடுகின்றன. இதன் விளைவு என்ன வென்றால், வருமான ஏற்றத்தாழ்வுகளால் ஏற்கெனவே சிறிதாயிருந்து வரும் நுகர்ச்சிப் பருமன் (Volume of Consumption) மேலும் மலிந்து போகிறது. இவ்வாறாக, வருமான ஏற்றத்தாழ்வுகளும், கூலிகளின் பின்தங்கு இயல்பும் ஒன்றுசேர்ந்து நுகர்ச்சித்திறனை மிகவும் குறைத்து விடுகின்றன.

இதற்கிடையில், சேமிப்பின் அதிகரித்துச் செல்லும் போக்கு காரணமாக ஏற்படுத்தப் பெற்ற புதிய தொழிற்சாலைகள், சுரங்கங்கள், தொழிற்கூடங்கள், தளவாடங்கள், எந்திரங்கள் முதலியவை, தமது உற்பத்திப் பணியினைத் தொடங்குகின்றன. இதனால் நுகர்ச்சிப் பண்டங்கள்மிகுதியாகத் தயாரிக்கப்பட்டு அங்காடிகளுக்கு மிக வேகமாக ஒடி வருகின்றன. அப்போது வாணிபத்தில் நெருக்கடி (Crisis) உண்டாகிறது. காரணம்? சேமிப்பினால் மக்களுடைய வாங்கும் சக்தி குறைந்து கிடக்கும் நிலையில் உற்பத்தியாளனுக்கு இலாபகரமாயிருக்கும் விலைகளில் இப்பண்டங்களை விற்பனை செல்வது என்பது முடியவில்லை. இவ்விலைகளில் இவற்றை வாங்குவதற்குப் போதுமான வாங்குந்திறன் மக்களிடம் இல்லை. இந்நிலைதான் அமித உற்பத்திநிலை. இப்போது விலைகள் அடியோடு சரிகின்றன. வாணிபம் தடுமாற்றமடைகிறது. இழப்புகள் மேலும்

ஏற்படக் கூடாது என்பதற்காக உற்பத்தியின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவது அவசியமாகிறது. உற்பத்தியின் அளவு அவ்வாறு குறைக்கப்படும்போது நாட்டு வருமானம் குறைகிறது. வேலை வாய்ப்பின்மையளவு வளர்கிறது.

தற்போது துவங்கும் மந்த நிலை எல்லோரும் அறிந்ததே. இழப்புகளைத் தவிர்ப்பதற்காகத் தொழிற்சாலைகள் மூடப் படுகின்றன. இதனால் நெருக்கடி இன்னும் தீவிரமடைகிறது. மக்களுடைய வாங்கும் சக்தி மேலும் குறைகிறது. சேமிப்புகள் பாங்குகளிடம் பயனற்றுக் கிடக்கலாகின்றன. முதலீடு செய்யப் படுவதற்குப் பதிலாக மேன்மேலும் முடக்கப்படுகின்றன. இவ்வாறு முதலீடு குறையும்போது முதற்பொருள் உற்பத்தி சுணக்க முற்று, அங்கே வேலை வாய்ப்பின்மை பரவுகிறது. மந்தம் தீவிர மடையும் போது குறைந்த பட்ச (minimum) நுகர்ச்சிக்கே கூட வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன. அப்போது சேமிப்புகளுக் கான தேவை உண்மையாகவே அதிகரித்து, அதன் வழியே செழிப்பெனும் ஒரு புதிய கட்டம் உதயமாகிறது. அமித சேமிப்பு வளர்ந்து பெருகிக் கேடு விளைவிக்கின்றவரை இச் செழிப்பு நிலை நீடிக்கும்.

இவ்வாறாக, வருமான ஏற்றத் தாழ்வுகளால்தான் வாணி பத்தில் பூரிப்பும் (Booms) தேக்கமும் மாறி மாறி ஏற்படுகின்றன என்று ஹாப்சன் கூறுகிறார். இவ்வருமானப் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்ற வரை, நுகர்ச்சிப் பழக்கங்களில் புரட்சிகரமான மாறு தல்கள் நிகழாதிருக்கும் வரை நெருக்கடிகளும் மந்தங்களும், நம் மிடையே இருக்கத்தான் செய்யும், வேலை வாய்ப்பின்மைப் பிரச் சினையும் பரவத்தான் செய்யும் என்றிவர் கருதுகிறார். வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதுதான் பொருளாதார அமைப்பி லிருந்து நெருக்கடி மற்றும் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையை அகற்றுவதற்கான ஒரே வழியாக இவருக்குப் படுகிறது.

வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு இவர் கூறுகின்ற வழிகள் பின் வருவன: கூடுதலான வருமானங்களைப் பெறுவோர் மீது போதுமான வரிகளை விதித்து, அதன் மூலம் கிடைக்கும் பணத்தைச் சமூகப் பணிகள் மூலமாக ஏழைகளுக்கு வழங்க வேண் டும். தொழிலாளர் சங்கங்கள் வளர்ந்து வலிவுற்றுக் கூலிகளின் பின் தங்கும் போக்கு நீங்கவேண்டும். ஏழை மக்களுடைய மெய் வருமானங்களைப் பெருக்கும் வகையில் சர்வாதீன விலைகளைக் (Monopoly prices) கட்டுப்படுத்த வேண்டும். சுருங்கக் கூறின், ஹாப்சன் சற்றுச் சோசலிச சமுதாயக் கொள்கைப் பக்கம் சாய் கிறார்.

இக் கோட்பாட்டிற்குப் பல எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. உற்பத்தியின் துவக்கக் கட்டங்களில் சூழ்நிலையானது நுகர்ச்சிப் பண்டத் தொழில் நிலவரங்களை மட்டுமே சார்ந்திருக்கிறது. அதாவது, நுகர்ச்சித் தொழில் செழித்தோங்கினால் உற்பத்தி செழித்தோங்கும், நுகர்ச்சித் தொழில் சுணக்கமுற்றால் உற்பத்தி சுணக்கமுறும் என்பது தவறானது என்று ஹாபர்லரால் (Haberler) எடுத்துக் காட்டப்படுகிறது. உற்பத்தியின் உயர் கட்டங்களில் செழிப்பு நிலை தோன்றுவதற்கு, நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவை அதிகரிப்பு போதுமானதாயிருக்கிறது என்பது மட்டுமன்று. அச் செழிப்பு நிலை அழிந்து போவதற்கும் அதுவே காரணமாயிருக்கிறது. பணச்சார்பான அமித முதலீட்டுக் கோட்பாடு இதுபற்றிக் கூறுவதாவது: பூரிப்பின் இறுதியில் நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்ந்து, அவற்றின் உற்பத்தி பெருகுவதனால் மேல் நிலைகளில் செலவுகளுக்கும் விலைகளுக்குமிடையேயான சமநிலை பாதிக்கப்படுகிறது. ஏனெனில் உயர் கட்டங்களில் வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு உற்பத்திக் காரணிகள் கிடைப்பது அரிதாகிறது. அதோடு, ஏற்கெனவே எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணிகளையும் நுகர்ச்சிப் பண்டத் தொழில்களின் போட்டி மத்தியில் தொடர்ந்து தங்க வைத்துக் கொள்வதும் சிரமமாயிருக்கிறது.

இதற்கு முற்றிலும் நேர்மாறான நிகழ்ச்சிகளின் கோவையால் சமநிலை பாதிக்கப்படுகிறதென்று—அதாவது நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவை குறைவதனால் சமநிலை பாதிக்கப்படுகிறதென்று—ஹாப்சனின் நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடு கூறுகிறது. ஆனால், சேமிப்பு வீதம் உயர்வாயிருக்கும்போது கூடச் சமநிலையும் நிறைவுடை வேலைவாய்ப்பும் (Full Employment) நிலவிவரமுடியும் என்று ஹான்சன் (Hansen), ராபர்ட்சன் முதலியோர் விளக்கியுள்ளனர். இது, முதற்பொருள்கள் நிர்மாணிக்கப்படும் துவக்கக் காலப்பகுதியிலும், புதிய முதற் கருவிப் பொருள்கள் உண்மையில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற நெடுங்காலத்திலும் உண்மை.

15. அறுவடைக் கோட்பாடுகள்

(Harvest Theories)

> ''வானிலை சார்ந்த காரணிகள் வேளாண்மை மூலமாக பொருளாதார அமைப்பின் பல்வேறு பிரிவுகளில் மாறுதல்களைத் தோற்றுவிக்கின்றன.''
>
> — ஜெவன்ஸ்.

நாட்டின் நல்வாழ்வு வேளாண்மை வளத்தைப் பொறுத்திருக்கிறது என்பது ஒரு பொதுவான கருத்து. முக்கியத் தானிய வகைகளின் உற்பத்தியளவில் தோன்றும் மாறுதல்கள் வாணிபத்தின் செழிப்புக்கோ அல்லது மந்தத்திற்கோ முக்கியக் காரணங்களாயிருக்கின்றன என்று பெரும்பாலான வர்த்தகர்கள் நம்புவதுண்டு. வேளாண்மை உற்பத்தி சிறப்பாயிருந்தால் வாணிபம் செழித்தோங்கும் என்றும், அது மோசமாயிருந்தால் வாணிபம் மந்தமாயிருக்கும் என்றும் அவர்கள் கருதுவதுண்டு. வர்த்தகர்களைப் போல் பொருளாதாரிகளும் தானிய உற்பத்தியின் முக்கியத்துவத்தை நன்கறிவர் என்றாலும், இவர்களில் பெரும்பாலோர் வேளாண்மை உற்பத்தி மாறுதலை வாணிபத்தின் சுழல் ஏற்ற இறக்கங்களுக்கான பல காரணிகளில் ஒன்று என்று மட்டுமே எடுத்துக் கொள்கின்றனர். ஆனால், அதேபோது சில பொருளாதார அறிஞர்கள் விவசாயக் காரணிகளே வாணிபச் சுழல்களைத் தோற்றுவிக்கும் முக்கியக் காரணிகள் என்று கருதுகின்றனர். கதிரவனின் கரும்புள்ளிகளோடு (Sunspots) தொடர்புடைய வானிலை சார்ந்த காரணங்கள் (Meteorological Canses) மூலமாகத் தோன்றும் அறுவடை மாறுபாடுகளால் சுழல்கள் உண்டாகின்றன என்றிவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு வேளாண்மை உற்பத்தி மாறுதல்களால் உண்மையிலேயே மொத்த வாணிப நடவடிக்கையில் மாறுதல்கள் நிகழ்கின்றனவா? இவ்வுற்பத்தி மாறுதல்கள் வர்த்தக நிலையால் தூண்டுவிக்கப்படாத சுயேச்சையான மாறுதல்களா? தொழில் உற்பத்திக்

கான தேவையினை மாற்றியமைத்து வாணிபத்தின் ஏற்ற இறக்கங் களை உண்டாக்கும் மெய்யான காரணிகளாயிருக்கும் ஆற்றல் இவைகளுக்கு உண்டா? இவ்வினுக்களுக்கு இவர்கள் வழங்கியுள்ள விளக்கம் வருமாறு:

வேளாண்மை மாறுதலே சுழலுக்குக் காரணம்

தானியங்களின் உற்பத்தி, வானிலை மற்றும் தட்ப வெப்ப நிலைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இவை மாறும்போது தானியங் களின் உற்பத்தியும் மாறுதலடைகிறது. நிலத்தின் விளைச்சலானது அகன்ற உழவு, ஆழ்ந்த உழவு போன்றவற்றால் மாறுதலடைய முடியும் என்றாலும், இது பெரும்பாலும் காற்று, சூரிய வெப்பம், மழை, புயல் முதலிய தட்பவெப்ப நிலவரங்களால்தான் முக்கிய மாகஏற்படுகிறது. சுருங்கக்கூறின், விளைச்சலின் மாறுதல்களுக்கான காரணம் இயற்கையின் போக்குதானே தவிர மனிதர்களின் செயல்கள் அன்று. எனவே, வேளாண்மையிலிருந்துதான் மாறு தல்கள் வாணிபத்திற்குப் பரவுகின்றனவே ஒழிய வாணிபத் திலிந்து மாறுதல்கள் வேளாண்மைக்குப் பரவுவதில்லை என்று கூற இட முள்ளது. வர்த்தகத்தின் மாறுதல்கள் வேளாண்மையில் மாறுதல்களைத் தோற்றுவிக்ககூடும். ஆனால் முடிவதில்லை. வர்த்தக மாறுதலுக்கேற்றவாறு தன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேளாண்மையால் இயல்வதில்லை. வேளாண்மை உற் பத்தியினை மாற்றவேண்டும் என்றால், முடிவு, அறுவடை பெறுவ தற்குப் பல மாதங்களுக்கு முன்பே எடுக்கப்படவேண்டும். மாறு தலை ஏற்படுத்த வேண்டும் என்றால், ஒரு தானியத்திற்குப் பதி லாக மற்றொரு தானியத்தைச் சாகுபடி செய்தல் என்பதைப் போன்ற மாறுதலைச் செய்ய வேண்டும். இதனைச் செய்வதற்கு முழுப்பண்ணையமைப்புத்திட்டத்தையும்மாற்றியமைக்கவேண்டும். இதற்கு அந்தப் பிராந்தியத்தின் இயல்பு, மண்வகை, பயிர் சுழற்சி முறை (crop rotation) முதலியவற்றால் தடைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மாறுதலைச் செய்வதற்காகும் செலவும் மிகுதியாயிருக் கிறது. இதனால், விவசாயிகள் மிகவும் யோசித்து மெதுவாகவே முடிவிற்கு வருவர். உதாரணமாக, தேவை குறையும்போது, வேளாண்மை உற்பத்தி உடனே விரைவாகக் குறைந்து விடுவ தில்லை. மெல்லக் குறைவதாயிருக்கிறது. ஏனெனில், விலைகளெல் லாம் தமது உற்பத்திக்கட்டுப்பாட்டினால் உயர்த்த முடியாதவை யென்றும், தாம் உற்பத்தியைக் குறைத்தால் வருமானம் குறைந்து போய்விடும் என்றும் விவசாயிகள் எண்ணுகின்றனர். அதோடு கூட, விலைகள் குறைவாயிருக்கின்றன என்றாலும், அவை கை

விட்டுப் போகும் செலவுகளுக்கும் (Direct charges) இதரச் செலவுகளுக்கும் கட்டி வருவனவாயிருப்பதலூல், உற்பத்தியைக் குறைக்க நிர்ப்பந்தமில்லே. வேளாண்மையானது குடியானவனுக்கு ஒரு வருமான மூலமாக மட்டும் இருக்கவில்லே, அவன் உயிர் வாழ் வழியாகவுமிருக்கிறது.

இக் காரணங்களே முன்னிட்டு, வேளாண்மை உற்பத்தியின் மாறுதல்கள் தொழில் உற்பத்தியின் மாறுதல்களுக்கான காரணங்களே ஒழிய விளேவுகள் அன்று. இவை, மெய்க்காரணிகளாகவும், தொழில்துறை நடவடிக்கையால் தூண்டப்பெருத சுயேச்சைக் காரணிகளாகவும் இருக்கின்றன.

வேளாண்மை உற்பத்தி மாறுதல்கள் இரு முக்கிய வழிகளில் தொழில் துறையைத் தாக்குகின்றன. முதலாவதாகத் தானியங்களின் உற்பத்தியளவு மாறுவதால், இவற்ருேடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருக்கும் எல்லா நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன. இரண்டாவதாகத் தானியங்களின் விலேகள் மாறுவதால் விவசாயிகள் விவசாயிகளாய் அல்லாதவர்கள் ஆகியோருக்கிடையே தராதர வாங்குந்திறன் (Relative Purchasing Power) மாறுதலடைந்து அதன் மூலம் தொழிலில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவற்றைத் தனித்தனியே சற்று ஆராய்வோம்.

தானியங்களின் விளேச்சல் அமோகமாயிருந்தால், கூடுதலான அளவில் பயிர்கள் அறுவடை செய்யப்படுகின்றன. பற்பல இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனே செய்யப்படுகின்றன. அப்போது நிறைய ஆட்கள் வேலேக்கு எடுத்துக் கொள்ளபபடுகின்றனர். கிடங்குகளுக்குத் தானியங்கள் மேன்மேலும் வந்து குவிகின்றன. மொத்த விற்பனே, சில்லறை விற்பனேகளுக்குத் தானிய மூட்டைகள் அணி அணியாக வருகின்றன. உற்பத்தியின் அதிகரிப்புக் கணிசமாயிருப்பின், விவசாயிகள் தமது எந்திரச் சாதனங்களே அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ரயில் போக்கு வரத்து, தூக்கும் கருவிகள், ஆலேகள் முதலியனவும் தாராளமாய்த் தேவைப்படுகின்றன. எனவே, தொழில் துறையில் மாறுதல்கள் தூண்டுவிக்கப்படுகின்றன. விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும்போது, அவற்றின் விலேகள் இறங்குகின்றன. எந்த அளவிற்கு விலேகள் இறங்கும் என்பது இப்பொருள்களின் தேவை நெகிழ்ச்சி (Elasticity) யைப் பொறுத்திருக்கிறது. சாதாரணமாக, இவற்றின் தேவை நெகிழ்ச்சியற்றிருக்கும், விலேகளின் இறக்கம் மிகுதியாயிருக்கும். எது எப்படியிருப்பினும், உற்

பத்தி பெருகும்போது விவசாயப்பண்டங்களின் விலைகள் இறங்கவே செய்கின்றன. பொது விலை மட்டம் உயர்ந்து செல்வதாயிருப்பின் விவசாயப் பண்டங்களின் விலைகள் பின் தங்கும். விவசாயக் கச்சாப் பொருள்களைப் (Agricultural raw materials) பயன்படுத்தி வரும் எல்லா தொழில்களுக்கும் இது மிகவும் சாதகமாயிருக்கும். மேலும் உணவுப்பொருள்களின் விலைகள் இறங்குவதனல் தொழிலாளரின்வாழ்க்கைச் செலவுகள் குறைந்து, நிலவும் கூலிகள் சாதகமாய் இருப்பதாக அமைகின்றன. இது எல்லாத் தொழில் துறையினருக்கும் நன்மை பயக்கிறது.

அறுவடைகள் சிறந்ததாக அமைந்ததற்குப் பின்னர் இத்தகைய மாறுதல்கள் தொழில் துறையில் ஏற்பட வேண்டும்என்ற அவசியம் இல்லை. தானிய அறுவடைகளைப்பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்கான வழிகள் இருக்கின்றன. இவற்றின் உதவி கொண்டு தொழிலதிபர்கள் அறுவடைகளைப் பற்றி முன் கணிப்புச் செய்துகொண்டு அதற்கேற்றவாறு தமது தொழில் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக் கொள்கின்றனர். தானியங்களின் அளிப்பு எவ்வாறிருக்கப்போகிறதுஎன்பதைப்பற்றித் திட்டவட்டமாக எதையும் சொல்வதற்கில்லை என்ற நிலையில் கூட யூக வாணிபம் (Speculation) விலைகளைப் பாதிக்க ஆரம்பித்துவிடுகின்றன. அதற்கேற்ப வாணிப நடவடிக்கைகளும் மாறுகின்றன. தொழிலில் இவ்வாறு மாறுதல்கள் நிகழ்வது என்பது வாணிபத்தைப் பற்றிய தொழில்முயல்வோரின் (Entrepreneurs) உளப் போக்குகளால் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. அறுவடைகள் பெருகி, தமது இலாபங்கள் பெருகப் போகின்றன என்று எதிர் பார்க்கின்ற தொழில்முயல்வோர், முன்கூட்டியே தமது பண்டங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இந்த முன் கூட்டிய நடவடிக்கைக்கு மற்ருெரு காரணமும் இருக்கலாம். விவசாய உற்பத்திக்குரிய முயற்சித்தேவை (Effort-demand) மிகவும் நெகிழ்ச்சியுள்ளதாயிருக்கிறது. அதாவது, வேளாண்மை உற்பத்தி கூடுவதனல், விலைகள் தாழ்ந்து, நுகர்ச்சி மிகுவதோடல்லாது, உழைப்பு மூலம் தொழிலின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற ஆவலும் தொழில் உலகில் வளர்ந்து, விவசாயப் பண்டங்களுக்கான மெய்த் தேவை (Real demand) பெருகுகிறது. நிறைவுடை வேலை வாய்ப்பு (Full Employment) காணப்படாதபோது உழைப்பின் இறுதி நிலைப் பயன்கேடு (Marginal disutility of work) – அதாவது உழைப்பதற்கு வெறுப்பு—தாழ்வாயிருப்பதாகவும், மெதுவாகவே அதி

கரிப்பதாகவும், உணவின் இறுதி நிலைப்பயன்பாடு (Marginal utitily of food)-அதாவது உணவுப் பொருளுக்கு விருப்பம்—உயர் வாயிருப்பதாயும், மெதுவாகவே குறைந்து போவதாயும் இருக் கிறது. என்கிருர் ரஸர்ட்சன். ஆகவே, உற்பத்திப் (அதோடு வாங்குந்திறன்) பெருகுவதை ஆதரித்திடும் போக்குத் தொழிலா ளர்களிடம் தோன்றுகிறது உண்மையிலேயே உற்பத்தியைப் பெருக்கிட, தொழிலாளர்கள், தொழில் முயல்வோர்களுக்குப் பக்கபலமாயிருப்பர். இதனுலும் தொழில் உற்பத்தி • தூண்டப் படுகிறது.

ஆனுல். சாதனங்களனைத்தும் நிறைவுடை வேலைவாய்ப்பினை யுடைய நிலையிலும் கூட வேளாண்மை உற்பத்தி பெருகுவதா யிருக்கலாம். இயற்கை, நமது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்டது. தொழில் உற்பத்தி குறைவாயிருக்கின்றபோதுதான் அது விவ சாய வளத்தைப் பெருக்கி வைக்கும் என்று நம்புவதற்கில்லை. வாணிப நடவடிக்கைகள் செழிப்பாயிருக்கின்றபோதுகூட விவ சாய உற்பத்தி உச்சி நிலைக்குப் போகக்கூடும். இப்படி நிகழின், ஏற்கெனவே வேலை நிறைவு உள்ள நிலையில் அறுவடைக்கும். போக்குவரத்துக்கும் இன்ன பிற நடவடிக்கைகளுக்கும் கூடுதலாக ஆட்களும் எந்திரச்சாதனங்களும் தேவைப்படும். இவைகளுக்கு எங்கே போவது? எனவே, தொழில் சுமை வரம்பு மீறிப்போய் மந்தநிலை தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆகவே, செழிப்பின் உச்ச கட்டத்தில் வாணிபம் உள்ள நேரத் திலன்றி வேறு எந்த நேரத்தில் வேளாண்மை உற்பத்தி அதி கரித்தாலும் தொழில்துறை நன்மையடைவதாயிருக்கிறது. தொழில்துறை செழிப்பாயுள்ளபோது, விவசாயம் உச்சநிலை யடைந்தால், அதனுல் நன்மையில்லை, கேடுண்டாகலாம்.

விவசாய உற்பத்தியின் மொத்த மதிப்பு மாறுவதனுல் தொழில்துறையில் ஏற்படும் மாறுதல்கள் வேளாளருக்கும் பிற ருக்கும் இடையே வாங்குந் திறன் பெயர்வதைப் பொறுத்தன. வேளாண்மை உற்பத்தி பெருகுவதனுல் வாணிபத்தில் செழிப்பு நிலை உண்டாகிறது என்ருலும், இந்த உற்பத்தியின் மதிப்பு மாறுவதனுல் தோன்றும் வாங்குந் திறப் பெயர்ச்சிகளின் விளைவு கள் வெவ்வேருயிருக்கின்றன. வேளாண்மை உற்பத்திப் பெருக் கத்தால் உழவர்களின் மொத்த வருமானம் கூடுவதாயிருப்பின், அந்த அளவிற்கு மற்றவர்கள் இழப்புக்குள்ளாகின்றனர் என்று பொருள். மாருக, உழவர்களுக்கு இழப்பு ஏற்படுவதாயிருப்பின், மற்றவர்கள் அந்த அளவிற்கு இலாபமடைகின்றனர் என்று பொருள். ஒரு நாடு சிறியதாகவும், அயல்நாட்டு வாணிபத்

தொடர்பு இல்லாததாகவும் இருப்பின், வாங்குந்திறப் பெயர்ச்சியால் எந்த ஒரு முக்கிய விளைவும் ஏற்படாமலிருக்கலாம். இதனை இனிச் சற்று விரிவாக ஆராய்வோம்.

இவ்வமைப்பில் வேளாண்மைப் பண்டங்களுக்கான தேவை நெகிழ்ச்சியற்றிருக்கும் போது, தானியங்களின் உற்பத்தி பெருகுவதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன. பண்ணைப் பண்டங்களின் மீது செலவழிக்கப்படும் மொத்தத் தொகை குறைகிறது. இத் தொகையில் ஒரு பெரும் பகுதி போக்குவரத்து மற்றும் விநியோகப் பணிகளுக்காகத் தரப்பட்டு ஒரு சிறு தொகையே விவசாயிகளுக்குத்தர மீதமாயிருக்கிறது. எனவே, விவசாயிகளிடம் ஒரு சிறிதளவு பணமும், ரயில் போக்குவரத்து மற்றும் விநியோகப் பணியமைப்புகளிடம் கூடுதலான அளவு பணமும் போய்ச் சேர்கிறது. விவசாயப் பண்டங்களை வாங்காதிருப்பதனால் மீதமாகும் வாங்குந்திறனைப் பொதுமக்கள் தொழில் துறைப் பண்டங்களை வாங்கப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாருகப் பண உருவில் உள்ள மொத்த வாங்குந்திறன் பல்வேறு வழிகளில் மறுபகிர்வு செய்யப்படுகிறது. இந்த மறுபகிர்வினால் சில தொழில்கள் மற்றவைகளைவிடக் கூடுதலாக நன்மையடைகின்றன. விவசாயிகளுக்குப் பொருள்களைக் கொடுத்துவரும் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. மற்றவர்களுக்குப் பொருள்களை யளித்துவரும் தொழில்கள் செழிப்புநிலை எய்துகின்றன. இம் மறுபகிர்வினால் ஒரு சுழல் வகைப் பெருக்கம் (Cyclical Expansion) ஏற்படுகிறதா என்பது ஐயத்திற்கிடமானது. பல்வேறு வகை மக்களின் செலவீட்டுப் பழக்கங்கள் ஒரு மாதிரியானவையாயிருந்தால் வாங்குந்திறன் பெயர்ச்சியால் விளைவுகள் ஏதும் ஏற்படமாட்டா. இப் பழக்கங்கள் வெவ்வேருனவையாயிருப்பின் சில முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன. வெளிநாட்டுத் தொடர்பின்றி இருந்துவரும் ஒரு பொருளாதார அமைப்பில், வாங்குந் திறப் பெயர்ச்சியால் இலாபமடைவோர், பாதிக்கப்படுவோர் ஆகியோருடைய பொருளாதாரப் பழக்கங்கள் ஒரேமாதிரியானவையா யிருப்பதனால், வேளாண்மை உற்பத்தி மாறுவதனால் தோன்றும் இப்பெயர்ச்சிகள் வாணிபத்தில் சுழல் வகை மாறுதல்களைத் தோற்றுவிப்பதில்லை.

ஆனல், ஏற்றுமதி செய்கின்ற நிலையிலிருக்கும் பொருளாதார அமைப்பில் நிலைமை வேறு விதமாயிருக்கிறது. வேளாண்மை உற்பத்தி அதிகரித்தால் ஏற்றுமதி பெருகுகிறது. அளிப்புப் பெருக்கம் மூலம் தோன்றக்கூடிய விலை இறக்கம் இதனுல் குறை

கிறது. ஏற்றுமதியாளரின் மொத்தப் பண வருமானங்கள் கூடு கின்றன. எனவே, ஒரு சாராரின் பணவருமானம் அதிகரித்தால் மற்றவர்களின் வருமானங்கள் குறையவேண்டும் என்பது அந் நாட்டு மக்களைப் பாதிப்பதில்லை. மாருக, உலகின் பிறபகுதியில் உள்ள தொழில் அல்லது விவசாயம் சார்ந்த மக்களைப் பாதிக் கிறது. மேலும், ஏற்றுமதிகள் பொன்னை உள்நாட்டிற்குகொண்டு வருமானல், அந்நாட்டுப் பொன்னிருப்பு அதிகரித்துக் கடன் செலாவணியளிப்புப் பெருகி, வட்டி வீதம் தாழ்ந்து, பணவீக்கச் சூழ்நிலைகள் வளர்ந்து, விலை உயர்ந்து, தொழில் உற்பத்திப் பெருக்கம் உயர்கட்டடங்களுக்குத் தாவுகிறது.

மேற்காணும் விளக்கத்திலிருந்து நாம் என்ன அறிகிறோம்? வாணிபச் செழிப்பு நிலையல்லாத வேறு எந்த நேரத்திலும் வேளாண்மை உற்பத்தி பெருகினுல், தொழில் உற்பத்தி நிச்சயம் பெருக்கமடைகிறது. இப்படி வேளாண்மை உற்பத்தி பெருகு வதனுல், தொழிலின் பல பிரிவுகளில் நடவடிக்கைகள் சுறுசுறுப் படைகின்றன. உணவளிப்பு அதிகரித்து, அதன்விலை குறைந்து தொழிலில் உற்பத்திச் செலவுகள் தாழ்ந்து, வாணிபம் செழிப்பு நிலை நோக்கி வெற்றி நடைபோடுகிறது. வேளாண்மை உற்பத்தி பெருகும்போது தோன்றும் வாங்குந்திறப் பெயர்ச்சிகளால் குறிப் பிடத்தக்க விளைவுகள் ஏதும் ஏற்படுவதற்கில்லை என்ருலும், ஏற்று மதிகள் பெருகிடுவதாயிருப்பின் இவ்வாங்குந்திறப் பெயர்ச்சி களால் வாணிபம் பூரிப்பு (Boom) நிலைக்குப் போவதாயிருக்கும். வேளாண்மை உற்பத்தி குறையும்போது. இதற்கு முற்றிலும் நேர் மாருன விளைவுகள் தோன்றுகின்றன. விவசாயத்துடன் தொடர்பு கொண்டுள்ள தொழில்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்படு கின்றன. உற்பத்திச் செலவுகள் உயர்கின்றன. வாங்குந்திறன் முற்றிலும் மாறுபட்ட வழிகளில் மறுபகிர்வு செய்யப்படுகிறது. வாணிபத்தில் செழிப்பு நிலையைக் கொண்டுவரும் போக்கு அத னிடம் இல்லை. இறக்குமதி இருந்தாலோ அல்லது ஏற்றுமதி மிகுதியாகக் குறைந்தாலோ, வாங்குந்திறப் பெயர்ச்சியால் பண வாட்டச் சூழ்நிலைகள் மலிந்து வாணிபத்தில் மந்தநிலை வேரூன்று கிறது.

ஆக, வேளாண்மை உற்பத்தி பெருகினுல் விலைகள் தாழ்ந்து, தொழிலில் உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்து, வாணிபம் செழிப்புநிலை எய்துகிறது. மாருக, விவசாய உற்பத்தி குறைந் தால், விலைகள் உயர்ந்து தொழிலில் உற்பத்தி நடவடிக்கைகள் குறைந்து வாணிபம் மந்த நிலைக்குள்ளாகிறது. இது அறுவடைச்

கோட்பாட்டினரின் கருத்து. விவசாய மாறுதல்களே சுழல்வகை ஏற்ற இறக்கங்களுக்கு மெய்யான சக்தி வாய்ந்த காரணிகளாக இருக்கின்றன என்றிவர்கள் கூறுகின்றனர்.

அறுவடைக் கோட்பாட்டின் பலவீனங்கள்

(a) வேளாண்மை என்பது ஒரு தனிப் பொருளாதாரப்பகுதி என்றும், ஒரு தானியத்தை ஒரேவகைச் சூழ்நிலையில் அது செய்கிற தென்றும் இக்கோட்பாடு எடுத்துக் கொள்கிறது. உண்மையில் தானியங்கள் பலவாகவும், சூழ்நிலைகள் பல்வேறுனவையாகவும் இருந்து வருகின்றன. ஒரு தானியத்திற்குச் சாதகமாக இருக்கும் சூழ்நிலைகள் மற்றொன்றிற்குச் சாதகமாயிருப்பதில்லை. கோதுமை உற்பத்தி மந்தத்திலிருக்கலாம். விவசாய நிலவரத்தால் தொழி லுலகம் மாறுவது இதனுல் தடுக்கப்படுகிறது. மேலும், அங்காடிக் குத் தானியங்கள் வெவ்வேறு நேரங்களில் வருவனவாயிருக் கின்றன. எனவே, எதிர்பார்க்கப்படும் மாறுதல்கள் உடனே நிகழ்ந்து விடுவதில்லை. விவசாய உற்பத்தி மாறுவதனுல் ஏற்படும் விளைவுகள் இவ்வாறு சிதறிப் போகின்ற தன்மையிருப்பதால், வாணிபச் சுழலை உருவாக்கும் சக்தி அவற்றிடம் இல்லாமற் போகிறது.

(b) மேலும், மகசூலின் சில பகுதிகளின் விற்பனை, அடுத்த தறுவாய்க்குத் தள்ளிப்போடப்படுவதாயிருப்பதால், விவசாய உற்பத்தி மாறுதல்களின் விளைவுகள் குறைந்து போகின்றன. உற்பத்தி அதிகரிக்கும்போது, அதேயளவில் நுகர்ச்சியும் அதிகரிக்க வேண்டும் என்றில்லை. ஆகவே, விலைகள் அவ்வளவு கடுமையாக மாறுவதில்லை. மிகுதியான விளைச்சல்கள் கிடைக்கின்றபோது தானியங்கள் இருப்புச் செய்யப்படுவதுண்டு. பிந்திய கட்டங் களில் விலைகள் உயர்வதாயுள்ளபோது இவை விற்பனைக்கு வரும். இதனுல், விவசாய மாறுதலின் விலைவுகளின் தீவிரம் குறைகிறது.

(c) தானியங்களின் உற்பத்தி மாறுதல்களால் ஏற்படும் விளைவுகள் எத்தகையவாயிருப்பினும், இவற்றுல் வாணிபத்தில் மாறுதல் நிகழ்வது என்பது, பொருளாதார அமைப்பில் விவசாயத் திற்குள்ள முக்கியத்துவத்தைச் சார்ந்திருக்கிறது. பொருளா தாரத்தில் விவசாயத்தின் முக்கியத்துவம் குறைவாயிருப்பின், அதன் உற்பத்தியில் உண்டாகும் மாறுதல்களால் ஏற்படும் விளைவு கள் மிகவும் சாதாரணமானவையாகவே இருக்கின்றன. இதன் காரணமாக, வாணிபச்சுழல்களைத் தோற்றுவிக்கும் ஒரு காரணி யாக வேளாண்மை மாறுதலால் இருக்க முடியாமற் போகிறது.

'காரணம் என்ற வகையிலோ அல்லது விளைவு என்ற வகையிலோ தானிய உற்பத்தி அளவுக்கும், தொழில் ஏற்ற இறக்கங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இருக்கக் காணோம்'—ஹார்டி, கோக்ஸ் (Hardy and Cox) ஆகியோர்.

விவசாயச் சூழ்நிலைகளால் தொழிற் சூழ்நிலைகள் மாறுதலடையலாம் என்பதை நம்மால் மறுக்க முடிவதில்லை என்றாலும், வாணிபச் சுழல் என்றொரு சிக்கல் நிரம்பிய நிகழ்ச்சி அறுவடை மாறுதல்களால் மட்டுமே விளைகிறது என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இக்கோட்பாடு கூறுவது உண்மையாயிருப்பின் வேளாண்மை காணப்பெறாத இடங்களில் வாணிபச் சுழல்கள் முக்கியமற்றவையாயும், தொழில்வளம் ஓங்கியிருக்கும் நாடுகளில் தோன்றாமலும் இருக்கவேண்டும். ஆனால், உண்மை என்னவென்றால், தொழில் வள மிகுந்த நாடுகளில்தான் வாணிபச் சுழல்கள் மிகுதியாகத் தோன்றுகின்றன! ஆகவே, வாணிபச் சுழல்களைப் பற்றிய அறுவடைக் கோட்பாடுகளுக்கு நிகழ் காலங்களில் ஆதரவு கிடையாது.

வானிலை சார்ந்த கோட்பாடுகள்

(Meteorological Theories)

வாணிபச்சுழல்களைப்பற்றிய வானிலை சார்ந்த கோட்பாடுகள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. இக்கோட்பாடுகளில் மிக முக்கியமானதாயிருப்பது டபுள்யூ. ஸ்டான்லி ஜெவன்ஸ் (W. Stanely Jevons) வழங்கிய கோட்பாடு. சூரியனின் வளி மண்டலத்தில் தோன்றும் மாறுதல்களால்—கதிரவனின் கரும் புள்ளிகளின் அடுக்கு நிகழ்வால், பருமனால்—தொழிலின் கால இலய ஏற்ற இறக்கங்கள் விளைகின்றன என்று இவர் 1872—ல் கூறினார். 19ஆம் நூற்றாண்டின் 1825, 1837, 1847, 1857, 1866ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து நாட்டில் வாணிப நெருக்கடிகள் காணப்பட்டன. இவற்றின் சராசரி காலநீட்சி 10·5 ஆண்டுகளாகும். கதிரவனின் கரும்புள்ளிகளுக்கு ஒரு சுழல் உண்டு; இதன் கால நீட்சி 10·45 ஆண்டுகளாகும். இவ்விரண்டு நிகழ்ச்சிகளின் இடைக் கால நீட்சி சற்றேறக்குறைய ஒன்றாக இருப்பதைக் கண்ணுற்ற ஜெவன்ஸ், இவ்விரண்டுக்குமிடையே ஒரு நெருங்கிய உறவிருந்தாகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். 18, 19 ஆம் நூற்றாண்டுகளுக்கான இங்கிலாந்தின் வர்த்தகக் குறிப்பேடுகளை இவர் ஆராய்ந்து பார்த்தபோது, 157 ஆண்டுகளில் 16 வாணிப நெருக்கடிகள் தோன்றியிருந்தன என்றும், அவற்றின் சராசரி காலநீட்சி

10·466 ஆண்டுகள் என்றும் இவர் கண்டார். வாணிப நெருக்கடிகளுக்கும் கதிரவனின் கரும்புள்ளிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்ற இவர் கருத்து, இதனால் மேலும் வலுப் பெற்றது.

ஜெவன்ஸ் கூறினார்: குறிப்பிட்ட இடைவேளைகளின்போது கதிரவனின் மீது சில கரும்புள்ளிகள் தோன்றி, கதிரவனிலிருந்து பூமிக்குப் பாயும் வெப்பத்தினைப் பாதிக்கின்றன; வானிலை நிலவரம் மாறுகிறது. இதனால் தானிய விளைச்சல்கள் பாதிக்கப் படுகின்றன. தானிய விளைச்சல்களில் ஏற்படும் மாறுதல்களால் வாணிப நடவடிக்கைகளில் மாறுதல்கள் விளைகின்றன. கதிரவனின் மீது கரும்புள்ளிகள் தோன்றும்போது வேளாண்மை அறுவடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வாணிபம் மந்தத்தில் மூழ்கிறது—நாட்டுப் பொருளாதார நிலைமை நலிவுறுகிறது. விவசாயமானது உற்பத்தித் துறையின் ஒரு முக்கிய அங்கமாக இருப்பதனால், அதில் தொய்வு ஏற்படும்போது, மற்றப் பிரிவுகளும் சோர்வடைந்து, பொருளாதாரம் முழுவதும் பாதிக்கப்படுகிறது. கதிரவனின் மீது கரும்புள்ளிகள் தோன்றுதிருக்கும்போது மழை அமிதமாக மண்மீது பொழிகிறது; வேளாண்மை உற்பத்தி பெருகுகிறது; இதனால் தொழில் வளம் மேம்பட்டு வாணிபத்தில் செழிப்புநிலை உண்டாகிறது. பொருளாதார அமைப்பு முழுவதும் பூரிப்பு (Boom) நிலை தோன்றுகிறது. கதிரவனின் கரும்புள்ளிகளிலிருந்து மாறுதல்கள் வானிலை நிலவரத்திற்குத் தாவுகின்றன; வானிலை நிலவரத்திலிருந்து பின்னர் விவசாயத்திற்குத் தாவுகின்றன. விவசாயத்திலிருந்து அடுத்துத் தொழில் மற்றும் வாணிபத்திற்குத் தாவுகின்றன. இவ்வாறாக, கதிரவனின் கரும்புள்ளிகளிலிருந்து பிறக்கின்ற மாறுதல் அலைகள், படிப்படியாக வாணிபத்தில் நுழைந்து மோதி நிற்கின்றன.

வானிலை சார்பான காரணிகளுக்கும் வாணிபச் சுழல்களுக்கு மிடையேயான உறவினைப்பற்றி ஆராய்வதற்கு அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப் பெற்ற முயற்சிகளில். பேராசிரியர் ஹென்ரி. எல். மூர் (Henry L. Moore) என்ற அமெரிக்கப் பொருளாதார நிபுணரின் முயற்சி குறிப்பிடத் தகுந்ததாகும். எட்டாண்டு கால நீட்சியுடைய ஒரு மழைச்சுழல் (Cycle of rainfall) அமெரிக்காவின் ஒஹியோ (Ohio) மற்றும் இல்லினாய் (Illinois) மாநிலங்களில் இருந்ததைக்கண்ட பேராசிரியர் மூர், மழைச்சுழலால்தான் விவசாய விளைச்சலில் மாறுதல்கள் உண்டாகின்றன என்று கூறினார். அவர் மேலும் கூறியதாவது: மழைச்சுழலால் தானியச் சுழல் (Cycle of Crops) உண்டாகிறது; தானியச் சுழலால்

வாணிபச்சுழல் ஏற்படுகிறது. ஆக, இவரது கருத்து என்னவென்ருல், வானிலே சார்ந்த காரணிகள் விவசாயம் மூலமாகப் பொருளாதார அமைப்பின் பல்வேறு பிரிவுகளில் மாறுதல்களைத் தோற்றுவிக்கின்றன. ஆனால், வானிலே மாறுதல்களுக்குக் காரணமாயிருப்பது கதிரவனின் கரும்புள்ளிகள் அன்று, மாருக வெள்ளிக் கோளின் (Venus) இடப்பெயர்ச்சியாகும். எட்டாண்டுகளுக் கொருமுறை வெள்ளிக்கோள் இடம் பெயர்ந்து கதிரவன் ஒளிக் கதிர் மண்டலத்தில் பிரவேசிக்கிறது. அப்போது கதிரவனிலிருந்து பீறிட்டோடி வந்துகொண்டிருக்கும் எலக்ட்ரான்களின் போக்கு மாறுதலடைந்து, வானிலேயிலும் பூமியில் காந்த விசையிலும் பலத்த மாறுதல்கள் விளைகின்றன. இம் மாறுதல்களால் வேளாண்மை உற்பத்தியில் பெருக்கமும் சுருக்கமும் ஏற்படுகின்றன. அவற்றின் வழியே வாணிபத்தில் செழிப்பும் மந்தமும் உருவெடுக்கின்றன.

வாணிபச்சுழல்பற்றிய வானிலே சார்பான கோட்பாட்டிற்குத் தற்போது ஆதரவு கிடையாது. வானிலேச் சுழலுக்கான திருப்திகரமான விளக்கமாக இது அமையவில்லே. வர்த்தக ஏற்ற இறக்கங்களுக்குரிய உண்மையான காரணங்களை இது விவரிக்கக் காணும். வர்த்தக மாறுதல்களுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று வானிலே மாறுதல். எனவே, வானிலே சார்பான மாறுதலால்தான் வாணிபச்சுழல் உருவாகிறது என்று கூறுவது பொருத்தமாகாது. இக்கோட்பாட்டில் அறிவியல் அம்சத்தைக் காண்பது அரிதாயிருக்கிறது.

16. உளச்சார்பான கோட்பாடுகள்

(Psychological Theories)

"வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு."

— குறள்.

வாணிபச் சுழலின் கட்டங்களைப் பற்றிய விளக்கத்தில் உளச்சார்பான காரணங்களை மிகவும் வலியுறுத்தியிருப்பவர்களில் கீன்ஸ், லேவிங்டன் (Lavington) பிகு, டாசிக் (Taussig) முதலியோர் முக்கியமானவர். இவர்களில், உளச்சார்பான கோட்பாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருப்பவர் ஏ. சி. பிகு ஆவார். 'தொழில் ஏற்ற இறக்கங்கள் (Industrial Fluctuations) என்ற இவரது புகழ்மிக்க நூலில் உளச்சார்பான கோட்பாடு பற்றிய தெளிவான விளக்கத்தை நாம் காண்கிறோம். தொழிலதிபர்களின் மனப்போக்கில் தோன்றும் மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டு உளச்சார்பான கோட்பாடுகள் வாணிபச் சுழல்களை விவரிக்க முயல்கின்றன.

மெய்க்காரணங்களும் உளச்சார்புக் காரணங்களும்

பொருளாதார நடவடிக்கையின் பெருக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் மெய்க்காரணங்கள் (Real Causes), உளச்சார்பான காரணங்கள் (Psychological Causes) என்ற இருவகைக் காரணங்கள் உண்டு. நடைமுறையிலுள்ள பொருளாதார நிலவரங்களில் ஏற்படும் மாறுதல் ஒரு மெய்க்காரணம். அப்பொருளாதார நிலவரங்களைப்பற்றிய மனிதர்களின் மனப்போக்கில் ஏற்படும் மாறுதல் ஓர் உளச்சார்பான காரணம். ஒரு மெய்க்காரணம் இருக்கிறது என்றால் பொருளாதார நிலவரங்கள் உண்மையாகவே மாறுதலடைந்துள்ளன என்று பொருள். உதாரணம்: – சாதகமான வானிலை விளைவாக விவசாய உற்பத்தி பெருகுதல். நடை

முறையிலுள்ள பொருளாதார நிலவரங்களில் எந்தவித மாறுதலும் ஏற்படாதிருக்கின்ற போதுகூட உளச்சார்பான ஒரு காரணம் இருப்பதாகக் காணப்படலாம். உதாரணமாகப் பூரிப்பின்போது மற்றவர்களைவிடத் தமக்குத்தான் கூடுதலான இலாபங்கள் கிடைக்கப்போகின்றன என்று ஒரு வர்த்தகன் நினைத்துக் கொள்வதாக இருக்கலாம். மெய்க்காரணமும் உளச் சார்பான காரணமும் பொதுவாக நெருங்கிய உறவும், உட்தொடர்பும் உடையவை நடைமுறைப் பொருளாதார நிலவரங்களில் ஏற்படும் ஒருமாறுதலால் (மெய்க்காரணம்) மனிதர்களின் மனப்போக்கில் ஒரு மாறுதல் நிகழ்ந்து, அவர்தம் நடவடிக்கையிலும் மாறுதல் தோன்றுகிறது.

எடுக்கப்படும் முடிவுகள் தவறுனவையாய்ப் பிழை மலிந்தவையாயிருப்பின், உளச்சார்புக் காரணங்கள் வெளிப்படுகின்றன. உண்மைகளை நாம் தவறுகப் புரிந்து கொள்கிறேம்; பாதை பிறழ்ந்து போகிறேம். உண்மைகள் மாறிவிட்டிருக்கவில்லையென்றலும், உண்மைகளைப் பற்றிய நமது எண்ணங்களை மாற்றிக் கொள்கிறேம். நமது மனம் கலைவுற்று, மாறுதலின் முக்கியத்துவம் பற்றிச் சரியாக எண்ணமுடியாதுபோகிறது. பொருளாதார நடவடிக்கையின் மாறுதல்களைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் தவறுகளால்-அதாவது முன் கணிப்பில் (Forecast) உண்டாகும் பிழைகளால்—வாணிப ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றனஎன்று உளச்சார்புக் கோட்பாடுகள் சுட்டிக் காட்டுகின்றன. கருத்துக்களிலும், முடிவுகளை எடுப்பதிலும் தவறுகள் தோன்றக் காரணமென்ன என்பதை இனி ஆராய்வோம்.

முன் கணிப்புப் பிழைகள்

தவறுக்கான அடிப்படைக்காரணம்-அதாவது முன் கணிப்பு (forecast) பிழைகளுக்கான மூலகாரணம்-நவீன தொழில் சமூகங்களில் காணும் சுற்று வழி உற்பத்தி முறை (Round about process of Production) தனி நபர் தொழிலமைப்பு முறை (Individualistic Organisation of production) ஆகியவையே. இவை மூலமாகத்தான் முன் கணிப்பில் தவறுகள் நேர்கின்றன என்றும், அத் தவறுகளால்தான் வாணிபத்தில் செழிப்பும் மந்தமும் மாறி மாறி ஏற்படுகின்றன என்றும் உளச்சார்பான கோட்பாடுகள் கூறுகின்றன.

முதலாட்சி உற்பத்தி முறை (Capitatislic method of Production) ஒரு சுற்றுவழி உற்பத்தி முறையாகும். உழைப்பின் பகுப்பு (Division of Labour) அறிமுகப்படுத்தப் படுவதனுலும், உற்பத்தி நடவடிக்கை பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதனுலும்.

உற்பத்தி பற்றிய முடிவுகளை உற்பத்தியாளன் எடுப்பதற்கும், உற்பத்தியான பண்டங்கள் நுகர்வோர்களை அடைவதற்கும் இடையே ஒரு நீண்ட காலப்பகுதி குறுக்கிடுகிறது. நம் சமூகத்தின் முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளெல்லாம் தேவையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படுபவை ஆகும். உத்தரவைப் பெற்றுக்கொண்டு பண்டங்கள் தயாரிக்கப்படுவதில்லை; மாறாகப் பிற்காலத்தில் தேவை எழும் என்ற எதிர்நோக்கில் இவை தயாரிக்கபபடுகின்றன. தேவை பற்றிய இத்தகைய முன் கணிப்பில் எதிர்நோக்கில் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. தவறுகளைப் பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்வதற்கில்லை; தவறுகளைப் பற்றிய உணர்வு ஏற்படுவதற்குள் தீமை தொடங்கி விடுகிறது. மற்றும், உற்பத்தி பற்றிய முடிவெடுப்பதற்கும், அம் முடிவின் விளைவுக்கும் இடையேயான காலப்பகுதி நீண்டிருந்தால் தவறு நேர்வதற்கான வாய்ப்புகள் மிகுதியாயிருக்கின்றன. ஆகவே, இரும்பு எஃகுத் தொழில்கள், தாமிரச் சுரங்கங்கள் முதலிய முதற் கருவிப் பொருள் உற்பத்தித் தொழில்களில் முன்கணிப்புப் பிழைகள் நிறைய ஏற்பட்டு இவற்றில் பலத்த ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன. ஏற்கெனவே, இருந்துவரும் ஒரு சைக்கிள் உற்பத்தி நிறுவனம், சைக்கிள் உற்பத்தியினைச் சற்று அதிகப்படுத்தலாமா என்று முடிவெடுப்பதில் பெரிய தவறேதும் நேரப்போவதில்லை; ஒரு மாத காலத்தில் சைக்கிள்களுக்கு இருக்கப்போகும் தேவைபற்றி முன் கூட்டியே உய்த்துணர்வதில் பெருத்த சங்கடம் ஏதும் இராது. ஆனால், சைக்கிள்களை உற்பத்தி செய்யும் ஒரு புதிய தொழிற்சாலையையே ஏற்படுத்தலாமா என்று முடிவெடுப்பதில் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன. ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சைக்கிள்களுக்கான தேவை எவ்வாறிருக்கும் என்பதைப்பற்றி இப்போதே முன் கணிப்புச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு இயக்க(Dynamic) நிலைச் சமூகத்தில் இத்தகைய நீண்ட இடை வேளையில், உற்பத்தியாளனின் முன்கணிப்பில் தவறுகளைத் தோற்றுவிக்கும் பல சூழ்நிலைகள் உருவாகின்றன. உற்பத்தியாளன் போட்ட கணக்குகள் தவறுகி விடுகின்றன.

ஆக, சமூகமானது இயக்க மிகுந்ததாயிருப்பின் வாணிப மாறுதலுக்கு முக்கிய காரணமாயிருப்பன முன் கணிப்பில் ஏற்படும் தவறுகளே. இயக்கநிலைச் சமூகம் என்றால் விரைவாக மாறிக் கொண்டிருக்கும் சமூகம் என்று பொருள். மாறிக்கொண்டிருக்கிறது என்றால் மிக முக்கியமான முடிவுகளை உடனுக்குடன் எடுப்பதற்குத் தயாராயிருக்கிறது என்று பொருள். ஆனால், அதே நேரத்தில் இச்சமூகத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் மூலமாக

உருவாகும் விளைவுகளின் உபயோகம் அல்லது மதிப்பு எத்தகையதாயிருக்கும் என்று தெரியாத நிலை மாறிவரும் சமூகத்தில் பண்டங்களின் உற்பத்தி பற்றிய சில பல முடிவுகளை எடுப்பதனுல் என்னென்ன நன்மைகள் கிட்டும் என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்ள முடியாது.

நவீன உற்பத்தி முறைகள் மூலமாக உற்பத்திக்கும் நுகர்ச்சிக்குமிடையே ஒரு நீண்ட காலப் பகுதி குறுக்கிடுவதனுல்தேவை பற்றிய உற்பத்தியாளரது எதிர்பார்க்கைகளில் (Expectations) தவறுகள் நேர்வதைப் போன்று தொலைவில் உள்ள நுகர்வோரின் தேவை பற்றி உய்த்துணர்வதிலும் தவறுகள் நேர்கின்றன. அவ்வாறே, நுகர்வோரின் விருப்பங்கள் அடிக்கடி மாறுவதனுல், தேவைகளைப்பற்றிக் கணிப்பதில் சங்கடங்கள் எழுகின்றன. செல்வத்தின் அணைப்பிலுள்ள நுகர்வோருடைய விருப்பங்கள் ஒரு மாதிரியாக இருக்கின்றன; ஏழ்மையின் பிடியிலுள்ள நுகர்வோருடைய விருப்பங்கள் வேருெரு மாதிரியாக இருக்கின்றன. இவ்விரு வகையினரின் விருப்பங்களையும் சரியாகப் புரிந்துகொண்டு, தேவையைக் கணக்கிட்டு, பண்டங்களின் உற்பத்தியைத் தொடங்கி முடிப்பதற்குள், இவர்தம் விருப்பங்கள் மாறிவிடக் கூடும். அப்போது உற்பத்தியாளர் கணிப்புகள் தவருகிப் போகின்றன. விளம்பரங்கள் மீது பணத்தை வாரியிறைத்துத் தமது பண்டங்களுக்கான அங்காடிகளை உற்பத்தியாளர்கள் நிலைப்படுத்துவதில் ஈடுபடலாம். ஆனுல், இந்த விளம்பரம் மூலம் மட்டுமே பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை.

உற்பத்தியாளரிடையே எழும்போட்டியாலும் தேவை பற்றிய முன் கணிப்புகள் பல நேரங்களில் தவருகிப் போகின்றன. ஒரு போட்டி மய சமூகத்தில் எந்த ஒரு தொழிலிலும் எண்ணற்ற உற்பத்தியாளர்கள் சுயேச்சையாகத் தமது உற்பத்தியைச் செய்து வருகின்றனர். ஒவ்வொருவரும் இவ்வளவுதான் உற்பத்தி செய்து வர வேண்டும் என்ற கட்டுப்பாடோ அல்லது ஒப்பந்தமோ கிடையாது. ஒவ்வொரு உற்பத்தியாளனுக்கும் மற்ற உற்பத்தியாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர், மொத்த உற்பத்தியின் அளவு எத்தகையதாயிருக்கும் என்பவையெல்லாம் அறிய முடியாது. ஒருங்கிணைப்போ அல்லது தொடர்போ இல்லாத நிலையில் உற்பத்தியாளர் அனைவரும் தத்தம் போக்கில் சென்று கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் தேவைஉயர்ந்தால் அமித உற்பத்தி (Excess Output) ஏற்படுவது உறுதி. எங்ஙனம்; தேவை உயர்ந்து செல்வதைக்காணும் ஒவ்வோர் உற்பத்தியாள

னும் தன் உற்பத்தியின் அளவை அதிகப்படுத்துகின்றபோது, தொழிலின் மொத்த உற்பத்தி, இலாபகரமான அளவையும் மீறிப் போய், தேவைக்கு மேற்பட்ட இருப்புகள் அங்காடிகளில் குவிகின் றன. உற்பத்தியின் நெடிய போக்குக் காரணமாகப் பண்டங்களுக் கான மொத்தத் தேவைபற்றித் தெரிந்துகொள்வது உற்பத்தி யாளர்களுக்குச் சிரமமாயிருக்கிறது. மொத்தத் தேவையில் தனக் குரிய பங்கு யாது என்பதைத் தெரிந்துகொள்வதில் உற்பத்தியாள னுக்குச் சங்கடங்கள் உள்ளன. மொத்தத் தேவையில் தனக்குரிய பங்கினைப்பற்றி இவன் மிகையாகக் கருதிக் கொள்வானேயானால் தவறுகள் ஏற்படத்தானே செய்யும்?

சூல்கால முக்கியத்துவம்

எவ்வாறு முன்கணிப்புப் பிழைகள் ஏற்படுகின்றன என்பதைச் 'சூல்காலப்பகுதி' (Period of Gestation)யின் வாணிபப்போக்கு நமக்கு மிகவும் தெளிவாய் உணர்த்துகிறது. ஓர் உற்பத்தி முறை யில் பண்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் காலப்பகுதி 'சூல்காலப்பகுதி'யாகும். இந்தப் காலப்பகுதியில்தான் பண்டங் கள் உருவாகின்றன, பிறக்கின்றன. உற்பத்தி துவங்குவதற்கும் உற்பத்தியான பொருள் விநியோகத்திற்கு வருவதற்கும் இடையே யான காலப்பகுதி 'சூல்காலப்பகுதி'யாகும். இது குறுகியதாயு மிருக்கலாம் அல்லது நெடியதாயுமிருக்கலாம். ஆனால், பெரும் பாலான பண்டங்களைப் பொறுத்தவரையில் இது நீண்டதாகவே இருக்கிறது. பழைய நிறுவனங்களிடமிருந்து சற்றுக் கூடுதலான நுகர்ச்சிப் பொருட்களைப் பெற்றிடச் சில சமயங்களில் ஒரு நாள், ஒரு வாரம் அல்லது ஒருமாதம் என்று ஒரு குறுகிய காலப்பகுதி போதும். ஆனால், புதிய ஆலைகள், எஃகுத் தொழிற்சாலைகள், அலுவலகக் கட்டடங்கள், ரயில்பாதைகள் முதலியவை தயாரா வதற்கு ஒன்று இரண்டு அல்லது அதற்கும் மிகுதியான ஆண்டுகள் தேவைப்படுகின்றன. அவ்வாறே மெதுவாகப் பதமடைவனவா யிருக்கும் பழத்தோட்டங்கள், காபி மற்றும் ரப்பர்த்தோட்டங்கள், வனங்கள் முதலியவற்றிற்கு ஆண்டுகள் பல வேண்டப்படுகின்றன,

ஒரு போட்டிச் சமூகத்தில் இந்தச் சூல்காலப்பகுதியினால் ஒரு வகைப் பொருத்தக்கேடு (Maladjustment) உதித்துத் திரட்சியடை கிறது. இப் பொருத்தக்கேட்டிற்கான மூலகாரணமாயிருப்பன முன்கணிப்புப் பிழைகளே எனலாம். தமக்கு முன்பாகத் தோன்றி நிற்கும் ஒரு பொருளாதாரச் சூழ்நிலையினை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியாளர்கள் சில கருத்துக்களை வடிக்கின்றனர்— முடிவுகளை எடுக்கின்றனர். இதில் தவறுகள் ஏற்படுகின்றன. இது

மிகவும் இயற்கையே. நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவை உயர்கிறது என்று வைத்துக்கொள்வோம். தேவை உயர்கின்ற போது விலைகளும் உயர்கின்றன. எனவே, உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியினை அதிகப்படுத்த முயல்கின்றனர். உற்பத்தி நடவடிக்கை மும்முரமடைகிறது. எனினும் சூல்காலப்பகுதியில் நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்தியளவு அதிகரிப்பதில்லை. இதனால் தேவையில் உண்டான பழைய அதிகரிப்பு திருப்தி செய்யப்படாமல் கிடக்கிறது; விலைகள் உயர்மட்டங்களில் இருந்து வருகின்றன. ஆகையால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான ஊக்கம் உற்பத்தியாளரிடம் தொடர்ந்து இருந்து வருகிறது. அதோடு, உற்பத்தி நடவடிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாகத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான கூலிகள் தரப்படுகின்றன. நுகர்ச்சிப்பொருட்கள் கூடுதலாக வெளிவராதிருக்கும் நிலையில் இவ்வாறு கூலிகள் அதிகரிப்பதனால், நுகர்ச்சிப் பொருட்களுக்கான தேவை மேலும் உயர்கிறது. இதன் விளைவாக இவற்றின் விலைகள் இன்னும் சற்றுக் கூடுகின்றன.

விலைகளின் மட்டத்தைக் கொண்டு அங்காடியின் நிலைமையை எடைபோடும் உற்பத்தியாளர்கள் வழிதவறிச் செல்கின்றனர். இவர்கள் சர்வாதீனர்களாகவோ (Monopolists) அல்லது தொழிலதிபர் சங்கத்தினராகவோ இருப்பின் உண்மை நிலவரம் புரியும். அங்காடியில் காணப்படும் நிலை நுகர்ச்சிப் பண்டங்களின் கிடைப்பருமை (Scarcity) யால் அல்ல, சூல் காலப்குதியிடையீட்டினால் நுகர்ச்சிப் பண்டங்கள் கிடைப்பதில் உள்ள கால தாமதமே என்பது இவர்களுக்கு எளிதில் புரியும். ஆனால், சுயேச்சையான போக்கும், போட்டி மனப்பான்மையும் உடையவர்களான உற்பத்தியாளர்களுக்கு அங்காடியின் உண்மையான நிலை தெரியாமற் போகிறது. எந்த அளவுக்கு உற்பத்தி ஏற்கெனவே தயாரிப்பில்—சூலில்—இருந்து வருகிறது என்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அங்காடி விலையினை முக்கியமாக எடுத்துக்கொண்டு நிலைமையைத் தீர்மானிக்கின்றனர். விலை உயர்மட்டத்திலிருந்து வருவதால் தமது உற்பத்தியை அதிகப்படுத்துவதில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாருகச் சூல்காலப்பகுதியில் உற்பத்தி செய்யவேண்டும் என்ற திடமான போக்கு உற்பத்தியாளர்களிடம் தோன்றுகிறது. நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்கிறது என்று உற்பத்தியை மிகவும் கூடுதலாக்குவதில் ஈடுபடுகின்றனர். இதன் விளைவு? சூல்காலம் முடிவடைந்து, நுகர்ச்சிப் பண்டங்கள் அங்காடிகளுக்கு வந்து சேரும் நாளின்போது தேவைக்கதிகமான அளவில் நுகர்ச்சிப் பண்டங்கள் நிரம்பி வழிந்து விலைகள் சரிகின்றன.

சூல்காலப்பகுதி மூலமாகத் தோன்றும்முன் கணிப்புப் பிழைகளால்தான் பூரிப்பு (Boom) ஏற்படுகிறது. பிழையின் பரிமாணம்—பூரிப்பின் பரப்பளவு—சூல்காலப்பகுதியின் நீட்சியைப் பொறுத்தது. சூல்காலம் குறுகியதாயிருப்பின் பூரிப்பும் குறுகியதாயிருக்கும். உதாரணமாக, உறுதியுள்ள நுகர்ச்சிப் பொருட்களுக்குள்ள தேவை உயர்வதன் விளைவாக ஏற்படும் 'நுகர்ச்சிப் பூரிப்பு' (Consumption Boom) குறுகியதாயிருக்கும். ஏனெனில், இவற்றைப் பொறுத்தவரையில் தேவைக்கும் உற்பத்திக்குமிடையேயான இடைவேளை குறுகியது. ஆனல், முதற் பொருட்கள் (Capital goods) அல்லது உறுதிமிகுந்த நுகர்ச்சிப் பொருள்களுக்குத் தேவை உயர்வதனுல் விளையும் பூரிப்பு நெடியது; ஏனென்ருல். இவற்றின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே குறுக்கிடும் இடைவேளை—சூல்காலம்—நெடியது. சூல்காலம் முடிவடைந்ததும் பூரிப்பு முடிவடைகிறது. அப்போதுதான் உற்பத்தியாளர்களுக்கு உண்மை புலப்படுகிறது; தேவைக்கதிகமான அளவில் உற்பத்தி செய்ததால் பண்டங்களை நிகழ்கால விலைகளில் விற்பனை செய்வது முடியாமற் போகிறது என்பது அவர்களுக்குத் தெரிய வருகிறது.

விலைக்குறிப்பீடுகளை (Price Indexes) உன்னிப்பாகக் கவனித்து வருவதனுல் ஏற்படும் இத்தகைய அமிதப் பெருக்கம் (Over Expansion) தரகர்களின் யூகவாணிப நடவடிக்கைகளால் மேலும் அதிகரிக்கிறது. விலைகளின் மேல்நோக்கிய போக்கினைக் காண்கின்ற இவர்கள், விலை மாறுதலைப் பயன்படுத்தி இலாபம் பெறுவதற்காகத் தங்களிடமிருக்கும் இருப்புகளின் அளவைப் பெருக்குகின்றனர். இதனுல் நிலைமை மேலும் மோசமாகிறது. இவர்கள் மேன்மேலும் பண்டங்களைக் கேட்டு வருவதனுல் தேவை உண்மையில் அதிகரித்துள்ளது என்று உற்பத்தியாளர்கள் எண்ணத் தலைப்படுகின்றனர். உற்பத்தி மேலும் கூடுகிறது. விலைகளின் ஏற்றம் பற்றிய எதிர்பார்க்கைகள் நிலைகுலையும் போது பொருள்களுக்குள்ள யூக வாணிபத்தேவை மறைகிறது. விலைகள் தாழ்வடையும் போது இந்த யூக வாணிபத் தரகர்கள் தமது இருப்புகளை அங்காடிகளில் ஒரேயடியாகத் திணித்து விலைகளை மேலும் இறங்கச் செய்து விடுகின்றனர்.

இனி மற்ருெரு முக்கிய விஷயத்திற்கு வருவோம். முன் கணிப்புப் பிழைகள் அனைத்தும் ஏன் ஒரேவிதமான திசையில் செல்கின்றன? ஓர் உற்பத்தியாளன் ஒரு திசையில் தவறு செய்கின்றவனுயும், மற்ருேர் உற்பத்தியாளன் பிறிதொரு திசையில்

தவறு செய்கின்றவனுயு மிருப்பதில்லையா? உதாரணமாக ஓர் உற்பத்தியாளன் பண்டங்களுக்கான தேவையினை மிகையாக மதிப்பிடும்போது, மற்றொருவன் அதனைக் குறைவாக மதிப்பிடுவதாக இருக்கக்கூடாதா? இப்படி ஒன்றுககொன்று ஈடாகக் கூடாதா? இப்படி இருப்பதில்லை. எல்லா உற்பத்தியாளர்களும் ஒரே விதமான தவற்றினைச் செய்பவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் இவர்களனைவரும் நுகர்பண்ட விலைகளின் குறியீட்டையே வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு தமது நடவடிக்கைகளை அமைக்கின்றனர். வர்த்தகத்தின் ஒரு மூலையில் செய்யப்படும் தவறு மற்ற மூலைகளிலும் செய்யப்படுகிறது அல்லது பரவி விடுகிறது.

ஒரேவிதத் துறையிலிருந்தாலும் சரி அல்லது வெவ்வேறு துறைகளிலிருந்தாலும் சரி, வர்த்தகர்கள் அனைவரும் சமூக உளச் சார்புச்சங்கிலிகளால் ஒருவரோடொருவர் மறைமுகமாக இணைக்கப்பட்டிருக்கின்றனர். வர்த்தகத்தின் ஒரு மூலையில் உதிக்கின்ற நன்னம்பிக்கை (Optimism), மற்ற மூலைகளுக்கும் பரவிவிடுகிறது. அதிலும் குறிப்பாக வலிவுமிக்க வர்த்தக உயர்நிலையாளரால் தோற்றுவிக்கப்படும் நன்னம்பிக்கை மிக எளிதில் மற்றவர்களையும் தொற்றிக்கொள்கிறது. நன்னம்பிக்கை கொள்வது என்பது மனத்தின் ஒரு பாங்கு. தனியே ஒருவனுல் நன்னம்பிக்கை கொள்ள முடியும் என்ருலும், கும்பலில் இருக்கின்றபோது நன்னம்பிக்கை கொள்வது மிகவும் எளிது.

வர்த்தகர்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவதற்கான பல வாய்ப்புகளை நவீன வர்த்தக உலகம் ஆக்கித் தருகிறது. மாநாடுகள், விருந்துகள், கருத்தரங்குகள் வர்த்தகர்களை இணைக்கின்றன. நன்னம்பிக்கையுணர்ச்சி வளர்கிறது, பரவுகிறது. எப்போதும் எச்சரிக்கையாயிருந்துவரும் பாங்கர் கூட நல்ல காலங்களில் நன்னம்பிக்கை யுணர்ச்சிக்குட்படுகிருர். இவரும் நன்னம்பிக்கை கொள்கின்றபோது, வர்த்தகர்களுக்கு ஊக்கம் பண அங்காடியில் தோன்றி மற்றப் பகுதிகளுக்குப் படர்கிறது. நியாயமான எதிர்பார்க்கைகளை (Expectations) X என்பவர் மிகைப்படுத்தி எடுத்துக் கொள்வானேயானுல், அவன் தன்னிடம் உழைத்து வருபவர்களுக்கும் நிறைய வருமானங்களைத் தருகிருன். இதனுல் B என்பவரது வருமானம் அதிகரித்து அதன் மூலம் C என்பவரின் வருமானமும் அதிகரிக்கிறது. இவ்வாருக, நன்னம்பிக்கை யுணர்வுகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு மிக எளிதில் பரவிவிடுகின்றன. நன்னம்பிக்கை மூலமாக வாணிபத்தில் செழிப்புநிலை உருவாகிறது.

செழிப்பின்போது வாணிபம் பெரும் எதிர்பார்க்கைகளில் தன்னைக் காண்கிறது என்று உளச்சார்புக் கோட்பாட்டினர் கூறுகின்றனர். இந்த எதிர்பார்க்கைகள் உண்மையில் ஆதாரமற்றவை. ஏமாற்றங்களைக் கொணர்பவை. சூல்காலம் முடிவடைந்ததற்குப் பின்னர் ஒரு நாள் உண்மை வெளிப்படும். அப்படி உண்மை வெளிப்படும்போது மனக்கோட்டைகள் தவிடுபொடியாகின்றன. உறக்கம் முடிகிறது. கனவு கலைகிறது. விழிகளைத்திறந்துபார்க்கும்போது வேறொரு முற்றிலும் மாறுபட்ட நிகழ்ச்சி காட்சியளிக்கிறது. இலாப எதிர்நோக்குகள் மறைந்து. இழப்புகள் ஏற்படும் சூழல் உருவாகி, அச்ச உணர்வுகள் வர்த்தகர்களை ஆட்கொள்ளவாரம்பிக்கின்றன. அப்போது மந்தம் தோன்றுகிறது. பிறகு? தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. உற்பத்திக்கான உத்தரவுகள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர். வேலையின்மை பிரச்சினை பெருகுகிறது. மூலப்பொருட்கள் பயன்படுத்தப் பெறுமல் போகின்றன அல்லது குறைவான அளவில் பயன்படுத்தப் பெறுகின்றன.

செழிப்பைப் போன்று மந்தமும் உளச்சார்பான காரணிகளால் ஏற்படுகிறது. சில வர்த்தக நிறுவனங்களின் இலாப எதிர்நோக்குகள் பொய்யாகும்போது, இந்நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கைக்குத் தடை உண்டாகிறது. இவற்றிடம் அவநம்பிக்கை (Pessimism) குடிகொள்ளத் தொடங்குகிறது. இது, பின்னர், இந்நிறுவனங்களுடன் தொடர்புகொண்ட மற்ற நிறுவனங்களுக்கும் மெல்லப்பரவுகிறது. ஒன்றினைத் தொடர்ந்து மற்ற நிறுவனங்களும் உற்பத்தியைக் குறைத்துக்கொள்கின்றன. தனக்களிக்கப்படும் கடன் வசதிகள் குறைந்து போவதைக் காணும் ஒவ்வொரு நிறுவனமும், மற்ற நிறுவனங்களுக்குக் கொடுத்துவரும் கடன் வசதிகளைக் குறைத்துக்கொள்கின்றது. பணவாட்டச் சூழ்நிலையைக் காண்கின்ற வர்த்தக நிலையங்கள் பாங்குகளின் உதவியை நாடுகின்றன. சோர்வுணர்வுகளுக்கு இடம்கொடுத்த பாங்குகளோ தமது இருப்புகளின் நிலைமைகளை உத்தேசித்து, கடன்களைத் தருவதில் கண்டிப்பும் தயக்கமும் காட்டுகின்றன. ஏற்கெனவே வாணிபத்தில் நிலவும் அவநம்பிக்கை இதனால் மேலும் தீவிரமடைகிறது. கடன் உதவிகளைப் பெறுவதன் மூலம் செய்யப்பட்டு வரும் தொழில்கள் மேலும் அவதியுறுகின்றன. இவைகளில் தோன்றும் சுணக்கம் மற்றவைகளுக்கும் பரவுகிறது.

நுகர்ச்சிப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு நேரம் தேவைப்படுவதைப் போன்று, உற்பத்தியின் அளவைக் குறைப்பதற்கும் நேரம் தேவைப்படுகிறது. சுருக்கக் (Contraction) காலப்பகுதியில் பண

டங்களின் உற்பத்தியை மெதுவாகவே குறைக்க முடியும். உடனடியாக இதனைக் குறைக்க முடியாது. ஏனென்றால், சூல்காலத்தின் இயல்பு அப்படிப்பட்டது. உற்பத்தி மெதுவாகக் குறையக் குறைய, விலைகள் இறங்கியவண்ணமிருக்கின்றன. அதற்கேற்ப உற்பத்தியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன. இறுதியில், உற்பத்திக்குறைப்பின் விளைவு அங்காடியினை அடைகின்றபோது, அளவுக்கு மீறிய குறைப்பு உற்பத்தியில் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. அவநம்பிக்கை கொண்ட உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்த அளவிற்குத் தேவை தாழ்ந்துகிடக்கவில்லை. இதற்கிடையில் இருப்புகள் தீர்ந்து விடுகின்றன. தேவை உண்மையில் பூர்த்தி செய்யப்படாமல் கிடக்கிறது.

இவ்வாறு தேவை பூர்த்தி செய்யப்படாமல் கிடந்து வருவதைப்பற்றிக்கொண்டு மீட்சிக்கட்டம் மெல்லத் துவங்குகிறது. இந் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கணித்து வைத்திருந்த புத்திசாலித்தனமான உற்பத்தியாளர்கள் தற்போது இலாபங்களைப் பெறத் தொடங்குகின்றனர். விலைகள் மீண்டும் உயர்கின்றன. சூல்காலம் நீண்டிருப்பதனால் பெருக்கம் விரைவாக நிகழ்வதில்லை. பல நிகழ்ச்சிகள் தோன்றிப் படிப்படியே நன்னம்பிக்கையுணர்கள் உயிர்பெற்றெழுந்து செழிப்புநிலை வாணிபத்தில் உதயமாகிறது. சுழல் முழுமை எய்துகிறது. மற்றொரு புதிய சுழல் வாணிப அரங்கின் கதவைத்தட்டி நிற்கிறது.

நன்னம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் காரணங்கள்

இப்படி மக்களை நன்னம்பிக்கையுடையவர்களாகவோ அல்லது அவநம்பிக்கையுடையவர்களாகவோ மாறிடச்செய்து முதலீட்டினை ஊக்குவிப்பதாகவோ அல்லது தளர்ச்சியுறச் செய்வதாகவோ இருக்கின்ற காரணிகள் யாவை?

(அ) தொழிலின் சில பிரிவுகளில் தேவையும் உற்பத்தியும் உயர்வதைக்காணும் மற்றப்பிரிவுகளின் உற்பத்தியாளர்கள், தமது பிரிவுகளிலும் அவை உயரப்போகின்றன என்று எதிர்பார்க்கின்றனர். வாணிபத்தைப் பற்றிய நம்பிக்கை ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு மிகவும் விரைவாகத் தொற்றிக்கொள்கிறது. தனித்திருப்பதைவிடக் கும்பலிலுள்ள போது நன்னம்பிக்கை யுணர்வுகள் எளிதாகப் பரவுகின்றன. ஒருவர் மற்றொருவரைப்பார்த்துத் தைரியம் கொள்கின்றனர்.

லேவிங்டன், வர்த்தகர்களைக் குளத்தில் விளையாடும் ஸ்கேட்டர்களுக்கு (Skaters) ஒப்பிடுகிறார். 'தனதுயிரின் பாதுகாப்புப் பற்றிய ஒவ்வொரு ஸ்கேட்டரின் நன்னம்பிக்கையும், தன்னைப் போன்ற ஸ்கேட்டரின் நன்னம்பிக்கையும், தன்னைப்போன்ற ஸ்கேட்டர்கள் மிகுதியாயிருக்கும்போது அதிகரிக்குமே தவிரக் குறையாது...... தன்னோடிருப்பவரின் எண்ணிக்கை பெருகினால் ஆபத்தும் பெருகும் என்ற நியாயமான அச்சம், நன்னம்பிக்கை என்ற ஒட்டுவாரொட்டி நோயால் மறைந்து விடுகிறது. தன்னைப் போன்ற ஸ்கேட்டர்களின் எண்ணிக்கை எந்த அளவிற்குக் கூடுதலாயிருக்கிறதோ அந்த அளவிற்குத் தன்னால் பாதுகாப்பாகச் செல்லமுடியும் என்று ஒவ்வொருவனும் நினைக்கிறான்.' இவ்வாறே வர்த்தகத்திலும் ஒருவர் மற்றொருவரைப்பார்த்து நன்னம்பிக்கையினை வளர்த்துக்கொள்கின்றனர். கும்பலில் உள்ளபோது அச்சம் மறைந்துவிடுகிறது.

(ஆ) ே .வையும் விலைகளும் உயர்கின்றபோது அவை மேன்மேலும் உயரக்கூடும் என்று உற்பத்தியாளர்கள் எடுத்துக்கொள்கின்றனர். இதனால் மூலதனச் சொத்துகள் (Capital assets) மிகுதியாக மதிப்பிடப்படுகின்றன. கீனஸ் கூறுகிறார்: 'நிறைவுடை வேலைவாய்ப்பு நிலவரங்களின் போது 2 சதவிகித இலாபத்தை ஈனும் முதலீடுகளிலிருந்து, 6 சதவிகித இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது பூரிப்பின்போது உற்பத்தியாளரிடம் காணப்படும் ஒரு முக்கிய இயல்பு நன்னம்பிக்கையினால் ஏற்படும் தவறுகள் கண்டுபிடிக்கப்படும் போது, அவநம்பிக்கை மூலம் தவறுகள் பிறக்கவராம்பித்துவிடுகின்றன. பூரிப்பின்போது உற்பத்தியாளர்கள் மூலதனச் சொத்துக்களை மிகை மதிப்பீடு செய்கின்றனர்; மந்தத்தின்போது இவற்றைக் குறை மதிப்பீடு செய்கின்றனர்.

'மயக்கம் தெளியும்போது இந்த மிகை எதிர்நோக்கும் நன்னம்பிக்கையும் மறைந்து, அவநம்பிக்கை எங்கும் நிறைந்து, அதன் காரணமாகப் பல பிழைகள் நேர்கின்றன. நிறைவுடைவேலைவாய்ப்பு நிலவரங்களின்போது 2 சதவிகித இலாபத்தைத் தரும் முதலீடுகள் தற்போது எந்தவித இலாபத்தையும் கொடுக்கப் போவதில்லை என்று உற்பத்தியாளர் எடுத்துக்கொள்கின்றனர். இதனால் புதிய முதலீடுகள் நிறுத்தப்பட்டு வேலைவாய்ப்பின்மை ஏற்படுகிறது.' (கீன்ஸ்)

உளச்சார்புக் கோட்பாட்டின் குறைபாடுகள்

வாணிபச் சுழல்களைப் பற்றிய உளச்சார்பான விளக்கத்தில் சில குறைபாடுகள் உள்ளன. முதலாவதாக, உளச்சார்பான கோட்பாடு வாணிபச் சுழல்களுக்கான ஒரு விரிவான, முழுமை

யான கோட்பாடாக இருக்கவில்லை. வர்த்தகர்களிடம் நன்னம்பிக்கையும், அவநம்பிக்கையும் மாறி மாறி ஏற்படுவதனால் வாணிக நடவடிக்கைகளில் பெருக்கமும் சுருக்கமும் உண்டாகின்றன என்று இக்கோட்பாடு கூறுகிறது. இது ஓரளவிற்கு உண்மையே. என்றாலும், இந்த நன்னம்பிக்கையும் அவநம்பிக்கையும் எதனால் உண்டாகின்றன என்பதை இது விளக்கிடவில்லை. நம்பிக்கையும் அவநம்பிக்கையும் தாமாகவே தோன்றிவிடுவதில்லை. அவை தோன்றுவதற்கு ஏதாவது புறச்சார்பான காரணங்கள் இருந்தாகவேண்டும். முதலீட்டாளர்களின் உளநிலை, முதலின் இறுதி நிலைத்திறனால் (Marginal Efficiency of Capital) நிர்ணயிக்கப்படுகிறது. முதலின் இறுதி நிலைத்திறனை, பணச்சார்பான மற்றும் பணச்சார்பற்ற காரணிகள் பல நிர்ணயிக்கின்றன.

இரண்டாவதாக, மந்த நிலை முடிவுற்ற பின்னர் மீட்சி துவங்குவதற்கும், செழிப்பின் இறுதியில் நெருக்கடி உருவெடுப்பதற்கும் உளச்சார்பான காரணங்கள் மட்டும் பொறுப்பில்லை. வேறுபல காரணங்களும் இருக்கின்றன. முன்கணிப்புப்பிழைகள் தெரியவரும்போது நெருக்கடி உண்டாகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஏதாவது ஒரு மெய்க்காரணி (Real factor) யால் இதுமேலும் வளர்க்கப்படுகிறது. சேமிப்புகள் குறைவாயிருப்பதால் உண்டாகும் முதல்பற்றுக்குறை, அமித சேமிப்புகளால் உருவாகும் தேவைப்பற்றுக்குறை, உழைப்புப் பற்றுக்குறை முதலிய மெய்க்காரணிகளில் ஏதாவது ஒன்றினால் நெருக்கடி தீவிரமடைகிறது. அவ்வாறே, நுகர்ச்சிப்பொருள் கிடைப்பருமை, புதிய கண்டுபிடிப்பு, பண அளிப்புப் பெருக்கம் முதலிய மெய்க்காரணிகளில் ஏதாவது ஒன்று மீட்சி துவங்குவதற்கு ஆதாரமாயிருக்கிறது. உண்மையில், உளச்சார்பான காரணிகள் செயல்படுவதற்கான பின்னணியொன்றை அமைத்துக் கொடுப்பவை மெய்க்காரணிகளே மற்றக் காரணிகளுடன் இணைந்துதான் உளச்சார்புக் காரணிகள் வாணிபச்சுழல்களைத் தோற்றுவிக்கின்றனவே ஒழியத் தாமாக மட்டும் அன்று.

17. கீன்ஸ் கோட்பாடு
(Keynes' Theory)

> "ஒரு நாடு பலவீனமாயிருப்பதற்குக் காரணம் பணத்தின் பற்றுக்குறையல்ல, ஆட்கள் மற்றும் அறிவாற்றல் பற்றுக் குறையே."
>
> — வால்டேர்.

1936 ஆம் ஆண்டு வெளியான 'வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம்பற்றிய பொதுக்கோட்பாடு' (General Theory of Employment, Interest and Money) என்ற ஜான் மேனார்டு கீன்ஸ் (John Maynord Keynes) உடைய நூல் பொருளாதார அறிவியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 'பொதுக் கோட்பாட்டின்' 22 - ஆம் அத்தியாயத்தில் வாணிபச் சுழல்களைப் பற்றிய கீன்ஸ் உடைய கோட்பாடினை நாம் காண்கிறோம். வேலை வாய்ப்பு மற்றும் வருமான அளவினை நிர்ணயிப்பது யாது என்பதை விளக்க முயல்கின்றபோது கீன்ஸ் வாணிபச் சுழல்களைப் பற்றி விவரிக்கின்றார். வேலைவாய்ப்பு, வருமானம், உற்பத்தி ஆகியவற்றின் அளவில் உண்டாகும் ஒரு மாறுதலாக வாணிபச் சுழல் இவருக்குப் படுகிறது முதலின் இறுதிநிலைத்திறனில் (Marginal Efficiency of Capital) தோன்றும் மாறுதல்களின் மூலமாக முதலீட்டு வீதத்தில் (Rate of Investment) விளையும் மாறுதல்களே வாணிபச் சுழல் ஏற்படுவதற்குக் காரணம் என்கிறார் கீன்ஸ்.

முதலின் இறுதிநிலைத்திறன்

முதலின் இறுதி நிலைத்திறன் என்றால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட அளவு முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் வரவு என்று பொருள். 'முதலின் இறுதி நிலைத்திறன்' என்ற தொடரில் "திறன்" என்ற சொல், ஒரு முதலினச் சொத்தின் (Capital asset) செலவின் மேல் பெறும் ஆதாயவீதம் அல்லது வருவாய் வீதம் என்பதனைச் சுட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட வகையான முதலினச்

சொத்தின் இறுதிநிலைத்திறன் என்பது அவ்வகைச் சொத்தின் இறுதிநிலையான (Marginal) அலகிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உயர்ந்தபட்ச வருவாய் வீதம் எனலாம். முதலின் இறுதிநிலைத் திறன் என்று பொதுப்படக் கூறினால், பல்வகை முதலினச் சொத்துக்களிலும் பெறும் வருவாய்களில் எது உயர்ந்தபட்ச வருவாய் வீதமோ அதுவாகும். எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் வட்டி வீதத்தைவிடக் கூடுதலாக இருக்கின்ற வரை முதலீடுகள் செய்யப் பட்டுக்கொண்டேயிருக்கும். வருவாய் வீதம் குறைந்து கொண்டே போகும். முதலின் இறுதி நிலைத்திறனும் வட்டிவீதமும் ஒன்றுக் கொன்று சமமாகும் வரை முதலீடு செய்யப்படும்.

எனவே, முதலீட்டு வீதம் அல்லது அளவை நிர்ணயிப்பவை முதலின் இறுதிநிலைத்திறனும் வட்டி வீதமும் ஆகும். வட்டி வீதம், பணத்தின் அளிப்பாலும், நீர்மை அல்லது ரொக்க விருப் பத்தாலும் (Liquidity Preference) நிர்ணயிக்கப்படுகிறது. முதலின் இறுதி நிலைத்திறன், முதலினச் சொத்துக்களின் விலை நிலையையும் அவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபங்களின் தொகையை யும் பொறுத்தது.

இவையிரண்டில் முதலினச் சொத்துக்களின் விலை, குறுகிய காலத்தில் மாறாதிருக்கிறது. ஆகவே, எதிர்பார்க்கப்படும் இலாபத் தில் நிகழும் மாறுதல்களால்தான் முதலின் இறுதிநிலைத்திறனில் மாறுதல்கள் விளைகின்றன. முதலீட்டு வீதத்தை நிர்ணயிக்கும் வட்டிவீதம், முதலின் இறுதி நிலைத்திறன் ஆகிய இரண்டில் வட்டி வீதமானது குறுங்காலத்தில் மாறாமலிருக்கிறது. ஆகவே, முத லின் இறுதிநிலைத்திறன்தான் வாணிபச்சுழல்களைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது என்று கீன்ஸ் கருது கிறார். முதலின் இறுதி நிலைத்திறன் என்பது புதிய முதலீட்டின் மீது எதிர்பார்க்கப்படும் இலாபம் என்பதற்கான மறு பெயரே யாகும்.

வாணிபச் சுழல்கள், இலாப வீதத்தில் — எதிர்காலத்தில் பல்வகை முதலீட்டிலிருந்து எந்தெந்த வீதங்களில் இலாபம் கிடைக்கும் என்பதைப்பற்றிய எதிர்நோக்குகளில் — நிகழும் மாறு தல்களால் விளைகின்றன எனக்கூடும்.

வாணிபச் சுழல்களைப் பொறுத்தவரையில் முதலின் இறுதி நிலைத்திறன் மிகவும் முக்கியமாயிருக்கிறது என்பதை வலியுறுத்து கின்ற கீன்ஸ், வட்டி வீதத்தின் பங்கையும் புறக்கணித்துவிடவில்லை. வாணிபச் சுழலின் மந்தகட்டத்தின் துவக்க நிலைகளில் உள்ள நிதி நெருக்கடியின் போது வட்டிவீதம் முக்கியமாயிருக்கிறது என்று

இவர் சுட்டிக் காட்டுகிறுர். முதலின் இறுதிநிலைத் திறனுல் வாணிபச் சுழல் உருளத் தொடங்குகிறது; அதனை மேலும் உருண்டோடச் செய்ய வட்டிவீதம் துணைபுரிகிறது. கீன்ஸ் விளக்கத்தில் மற்ருெரு காரணியும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அதுவே முதலீட்டுப் பெருக்கி (Investment Multiplier).

தொழில் முயல்வோரின் எதிர்நோக்குகள்

முதலின் இறுதிநிலைத்திறன், தொழில் முயல்வோர்களின் எதிர்பார்க்கைகளைப் (Expectations) பொறுத்தது. கண்டுபிடிப்பு, புத்தாக்கம் (Innovation), விலைகள் உயரப்போகின்றன என்ற எதிர்நோக்கு ஆகியவற்ருல் முதலின் இறுதிநிலைத்திறன் பற்றிய எதிர்பார்க்கை உயர்கிறது. முதற்பொருட்களிலிருந்து (Capital goods) கிடைக்கும் வருவாயைக் குறைக்குமளவிற்கு முதலீட்டு வாய்ப்புகள் பெருகினுல், முதலின் இறுதிநிலைத்திறன் தாழும். வாணிபம் பற்றிய சரியான கணிப்புக்குப் பிறகுதான் பெரும்பாலான முதலீடுகள் செய்யப்படுகின்றன. எனவே, முதலின் இறுதி நிலைத்திறனில் பலத்த ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன. எதிர்காலத்தில் முதலிடமிருந்து கிடைக்கும்வரவு எந்தஅளவிலிருக்கும் என்பதைப் பற்றிச் சரி நுட்பமாக முன்கூட்டியே தெரிந்து கொள்வது சிரமம். அதனைத் தெரிந்துகொள்வதற்குரிய வழிகளும் போதுமானதாயில்லை. ஆகையால், நிகழ்கால நடப்பைக் கொண்டு எதிர்கால நடப்பைக் கணிக்கப் பார்க்கிருேம். நடைமுறையில் நிலவுகின்ற கருத்து, சமுதாயத்தின் எண்ணப்போக்கு, பெரும்பான்மையோரின் நடவடிக்கை பாணி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழில் முயல்வோர்கள் தமது எதிர்கால இலாபங்களைப் பற்றி யூகிக்க முயல்கின்றனர். இந்த இலாப எதிர்பார்க்கைகள் பொய்யாகிப்போனுல் வாணிபத்தில் கடுமையான மாறுதல்கள் தோன்றுகின்றன.

முதலீடு அதிகரிக்கும் போது நிகழ்வதென்ன?

முதலீடு அதிகரிக்கும்போது பெருக்கி (Multiplier) மூலம் வருமானமும் மக்களின் நுகர்ச்சியும் அதிகரிக்கின்றன. பெருக்கி எவ்வளவாயிருக்கும் என்பது துய்ப்பு நாட்டம் (Propensity to Consume) அல்லது நுகர்ச்சி மனப்பாங்கைப் பொறுத்தது. துய்ப்பு நாட்டம் என்ருல் நுகர்ச்சி விருப்பம் என்று பொருள் ஆகாது. மாருக, உண்மையில் செய்யப்படும் நுகர்ச்சியளவு என்று பொருள். வருமானம், ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்கும் போது நுகர்ச்சி எந்த அளவில் இருக்கும் என்பதை இது சுட்டிக்

காட்டுகிறது. முதலீடு அதிகரிக்கின்றபோது அதே அளவிற்கு உற்பத்திக்காரணிகளின் பண வருமானங்களும் அதிகரிக்கின்றன. இவ் வருமான மொத்த அதிகரிப்பு முழுவதும் செலவழிக்கப் படுவதாயிருப்பின் நிறைவுடை வேலை வாய்ப்பு (Full Employment) நிலை உருவாகிப் பணவீக்கச் சூழ்நிலை தோன்றும். ஆனால், வருமானம் கூடும்போது நுகர்ச்சியின் அதிகரிப்பளவு வருமான அதிகரிப்பள வுக்குச் சமமமாயிருப்பதில்லை; சற்றுக் குறைவாகவே இருக்கிறது என்று கீன்ஸ் கூறுகிறார்.

குறுங்காலத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் பொதுவாக மாறாதிருக்கிறது. ஆகையால் வருமானக் கூடுதல் பெரும்பாலும் சேர்த்து வைக்கப்படுகிறதே ஒழிய நுகர்ச்சிப்பண்டங்களின் மீது செலவழிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக முதலீட்டுக்கிணை யாகச் செலவீடு அதிகரிப்பதில்லை. வருமானங்கள் விரைவாகக் கூடுவதில்லை. முதலீட்டால் விளையும் மொத்த வருமானமும், வேலை வாய்ப்பும், இருக்கவேண்டிய அளவிற்குக் குறைவாகவே இருக்கின்றன. இவ்வாறாக, முதலீட்டு வீதமும் துய்ப்பு நாட்டமும் சமுதாயத்தின் மொத்த வருமானத்தை நிர்ணயிக்கின்றன. இதையே வேறொரு முறையில் கூறவேண்டுமென்றால், துய்ப்பு நாட்டம் ஒரு முதலீட்டுக்கூடுதலுக்கும் (Increment) அதன் விளை வாக ஏற்படும் மொத்த வருமானக் கூடுதலுக்குமிடையே ஒரு வீதத் தொடர்பு (Ratio) இருக்கிறது. இவ்விதத் தொடர்பினைத் தான் கீன்ஸ் முதலீட்டுப் பெருக்கி என்று குறிப்பிடுகிறார். இந்தப் பெருக்கியினை K என்று வைத்துக் கொண்டால், அப்போது $\triangle I$ என்ற முதலீட்டுக் கூடுதலினால் $K \triangle I$ என்ற வருமானக் கூடுதல் விளைவதாயிருக்கும். உதாரணமாக, முதலீடு ரூ. 100 லட்சமாக வும், பெருக்கி 3 ஆகவுமிருந்தால், அப்போது முதலீட்டினால் விளையும் வருமான மொத்தக் கூடுதல் ரூ. 300 லட்சமாயிருக்கும்.

பெருக்கியின முக்கியத்துவம்

வருமானக் கூடுதலிலிருந்து எந்தெந்த வீதாச்சாரங்களில் நுகர்ச்சிச் செலவு (ஆகவே சேமிப்பும்) செய்யப்படுகிறது என் பது பெருக்கியை நிர்ணயிக்கிறது. உதாரணமாக, ஒவ்வொரு வருமானக் கூடுதலிலிருந்தும் $\frac{2}{3}$ பகுதி நுகர்ச்சிக்குச் செலவிடப் படுவதாகவும், $\frac{1}{3}$ பகுதி சேமிக்கப்படுவதாகவுமிருப்பின், அப்போது ஒரு ரூபாய் முதலீட்டிலிருந்து வருமானத்தில் பெறப்படும் மொத்தக் கூடுதல் ரூ. $1 + \frac{2}{3} + (\frac{2}{3})^2 + (\frac{2}{3})^3 \ldots\ldots =$ ரூ. 3 ஆகும். முதலீட்டளவுக்கும் வருமானக் கூடுதலுக்குமிடையேயான வீதத் தொடர்பு 3. இது பெருக்கி. $\frac{1}{2}$ பகுதி செலவிடப்படுவதாகவும், $\frac{1}{2}$ பகுதி சேமிக்கப்படுவதாகவுமிருப்பின், பெருக்கி 2 ஆக இருக்

கும். அவ்வாறே $\frac{5}{6}$ பகுதி செலவிடப்படுவதாகவும் $\frac{1}{6}$ பகுதி சேமிக்கப்படுவதாகவுமிருப்பின், பெருக்கி 6 ஆக இருக்கும். இவ்வாருகப் பெருக்கி என்பது துய்ப்பு நாட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. சேமிப்பு விகிதம் குறைவாயிருந்தால் பெருக்கி பெரிதாயிருக்கிறது. சேமிப்பு விகிதம் பெரிதாயிருந்தால் பெருக்கி சிறிதாயிருக்கிறது. பெருக்கி பெரிதாயிருப்பின், முதலீட்டில் ஏற்படும் ஒரு சிறு அதிகரிப்பால்கூட நிறைவுடை வேலை வாய்ப்பு நிலை உண்டாகிவிடும்.

முதலீடும் சேமிப்பும் சமமாயிருக்கின்றன

முதலீடும் சேமிப்பும் வட்டி வீதத்தால் ஒன்றுக்கொன்று சமமாக அமைகின்றன என்பது தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு. ஆனுல், கீன்ஸ் பொருளாதாரமோ இவையிரண்டும் வருமான மாறுதலால் சமமாகின்றன என்று கூறுகிறது. உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பின் மாறுதல்களுக்கு ஒரே காரணம் முதலீடே. முதலீடு மும்முரமாயிருந்தால் பெருக்கிமூலம் வருமானம் உயர்ந்து, சேமிப்புகள் அதிகரிக்கின்றன. மாருக, முதலீடு மந்தமாயிருந்தால் வருமானங்கள் குறைந்து சேமிப்புகள் முதலீட்டளவிற்குச் சமமாக வந்தமைகின்றன. இவ்விதமாக முதலீட்டையும் சேமிப்பையும் சமமாக்குவது வருமான மாறுதலேயாகும்.

அடிப்படையில் சேமிப்பு, முதலீட்டுக்குச் சமமாக இருந்தாக வேண்டும். ஏனெனில், நாட்டு வருமானம் என்பது நடப்பு உற்பத்தியின் மதிப்பு. சேமிப்பு என்பது வருமானத்தில் நுகர்ச்சிக்குப் போக மீதி. மூதலீடு என்பது நுகரப்படாதிருக்கும் பகுதி. ஆகவே, சேமிப்பு முதலீட்டுக்குச் சமமாகத்தான் இருக்க வேண்டும்.

வருமானம் =	உற்பத்தியின் மதிப்பு =	நுகர்ச்சி +	சேமிப்பு
ரூ. 100 லட்சம்	ரூ. 100 லட்சம்	ரூ. 80 லட்சம்	ரூ. 20 லட்சம்

முதலீடு =	வருமானம்	—	நுகர்ச்சி
ரூ. 20 லட்சம்	ரூ. 100 லட்சம்		ரூ. 80 லட்சம்
சேமிப்பு =	வருமானம்	—	நுகர்ச்சி
ரூ. 20 லட்சம்	ரூ. 100 லட்சம்		ரூ. 80 லட்சம்
எனவே சேமிப்பு =	முதலீடு		
ரூ. 20 லட்சம்	ரூ. 20 லட்சம்.		

மேலே காணும் கீன்ஸ் உடைய கருத்துக்களின் அடிப்படையில் இனி அவர் எவ்வாறு வாணிபச் சுழலின் பல்வேறு கட்டங்களை விளக்குகிறார் என்பதைச் சற்று ஆராய்வோம்.

பெருக்கத்தின் (Expansion) துவக்கம்

முதலீட்டைப் பெருக்கும் ஏதாவது ஒரு காரணியால் வாணிபச் சுழலின் பெருக்கக் கட்டம் துவங்குகிறது. 'ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்லது ஒரு புதிய நாட்டின் வளர்ச்சி அல்லது சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள் விளைவாக வாணிப நன்னம்பிக்கை உருவாகுதல்' என்பவற்றில் ஏதாவது ஒன்றின் மூலமாக வாணிபத்தில் பெருக்கம் அடி எடுத்து வைக்கிறது. உற்பத்தி நடவடிக்கைகள் ஊற்றெடுக்கின்றன. நன்னம்பிக்கை வர்த்தகர்களிடம் எல்லையின்றிக் காணப்படுகிறது. இலாபங்கள் மேன்மேலும் உயரப் போகின்றன என்றிவர்கள் எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்க்கும் முதலின் இறுதி நிலைத் திறன் உயர்ந்த வண்ணமிருக்கிறது. வட்டி வீதம் மாறாதிருக்கும் நிலையில் புதிய தொழில் நிறுவனங்களை, புதிய உற்பத்தி நடவடிக்கைகளைத் துவக்குவது இலாபகரமானதாய் அமைகிறது. வாணிபச் சூழ்நிலை கவர்ச்சிகரமானதாயிருக்கிறது. காலவரையறையின்றி வர்த்தகம் வளர்ந்து கொண்டே போகும் என்பது நடப்புக் கருத்தாயிருக்கிறது. முதலீடு அதிகரிக்கிறது. பெருக்கி விளைவு (Mutiplier Effect) மூலமாகப் புதிய முதலீட்டின் ஒவ்வொரு கூடுதலினாலும் நுகர்ச்சி அதிகரித்து வருமானத்தில் பன்மடங்கு அதிகரிப்பு ஏற்படுகிறது. வேலை வாய்ப்பும் பெருகுகிறது. விலைகள் உயர்கின்றன. இலாபங்கள் குவிகின்றன. செழிப்பு நிலை மேலும் ஓங்குகிறது.

இந்தப் பெருக்கநிலை, வட்டி வீதத்தையும் பாங்கு அமைப்பின் ஒத்துழைப்பையும் சார்ந்திருக்கிறது. ஏனெனில், கூடுதலான முதலீட்டிற்குத் தேவைப்படும் புதிய பணம் பாங்கு அமைப்பிடமிருந்துதான் வரவேண்டும்.

சுணக்கத்தின் ஆரம்பம்

இப்பெருக்கநிலை பூரிப்புக் (Boom) கட்டத்தினுள் நுழைகின்றபோது, முதலின் இறுதிநிலைத்திறனைக் குறைக்கவல்ல பொருளாதாரச் சக்திகள் எழுந்து நிற்கின்றன. உயர்மட்டத்திலிருந்து வரும் முதலின் இறுதிநிலைத்திறனுக்கு இருவித இடையூறுகள் முளைக்கின்றன : (1) உற்பத்தி நடவடிக்கைகள் பெருகப் பெருக மூலப்பொருட்கள், சாதனங்கள் மற்றும் உழைப்பு முதலியவற்றின் அளிப்பில் பற்றாக்குறை ஏற்பட்டு, முதலினச் சொத்துகளின் உற்

பற்றிச் செலவுகள் கூடுகின்றன; (2) அண்மையில் முடிவெய்திய முதலினச் சொத்துகளிடமிருந்து உற்பத்தியான பண்டங்கள் மிகுதியான அளவில் அங்காடிகளில் நிரம்பிவிடுவதால் சில வரவினங்கள் எதிர்பார்த்ததைவிடக் குறைவாக அமைந்துவிடுகின்றன.

எதிர்காலத்தைப் பற்றிய ஆர்வமும் நன்னம்பிக்கையும் இருக்கின்றவரைதான் முதலின் இறுதி நிலைத்திறன் உயர்மட்டத்திலிருக்கும். புதிய முதலினச் சொத்துகளிடமிருந்து கிடைக்கும் கூடுதலான வருவாய் வீதங்கள் காலவரையறையின்றி நீடிக்கும் என்ற நம்பிக்கை ஆதாரமற்றது என்பது இறுதியில்தான் தெரியும். எனவே, தற்போது உற்பத்திச் செலவுகள் உயர்ந்த வண்ணமிருக்க, எதிர்பார்த்த இலாபங்கள் குறைந்த வண்ணமிருக்க முதலின் இறுதிநிலைத்திறன் பாதிக்கப்படுகிறது. 6 சதவீத இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த முதலீடுகளிடமிருந்து தற்போது 2 சதவீத இலாபமே கிடைக்கும். எனவே, அமித நன்னம்பிக்கைக்குப் பதிலாக இப்போது அமித அவநம்பிக்கை (Pessimism) வர்த்தகர்களைச் சூழ்கிறது. வேலைவாய்ப்புக் குறுகுகிறது.

இவ்வாறாக, முதலின் இறுதிநிலைத்திறன் பாதிக்கப்படுவதன் விளைவாக வாணிபத்தில் செழிப்புநிலை மறைந்து, சுணக்கம் (Contraction) துவங்குகிறது. ஆனால், வட்டிவீதம் குறைவாயிருப்பின் இந்நிலை ஏற்படும் வாய்ப்பில்லை. ஏனெனில், முதலீட்டுக்குரிய ஆர்வம் முதலீட்டின் இறுதிநிலைத்திறனுக்கும் வட்டிவீதத்துக்கு மிடையேயான உணவைப் பொறுத்திருக்கிறது. ஆனால், வட்டி வீதம் குறையாது. மாறாக உயரும். இதற்குக் காரணம், பணத்தை ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது மக்களின் விருப்பமாக இருப்பதேயாகும். இதனை கீன்ஸ் ரொக்க விருப்பம் (Liquidity Preference) அல்லது நீர்மை விருப்பம் என்றழைக்கிறார். முதலின் இறுதிநிலைத்திறன் பாதிக்கப்படும்போது மக்களின் ரொக்க விருப்பம் காரணமாக வட்டிவீதம் உயரத் தொடங்குகிறது. ஆகவே, செழிப்பு முடிவுற்றுச் சுணக்கம் (Recession) தோன்றுவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது.

மந்தம் (Depression)

முதலின் இறுதிநிலைத்திறனின் நொடிப்பைத் தொடர்ந்து வாணிபத்தில் பிரவேசிக்கும் சுணக்கம், பெருக்கியின் விளைவாலும், வட்டிவீத உயர்வாலும் மிகவும் துரிதமாக முன்னேறிச் செல்கிறது. முதலீடு குறையும்போது பெருக்கி பின்புறம் நோக்கி வருமானத்

ஷதச் சுருக்கச் செயல்படுகிறது. முதலீட்டில் ஒவ்வொரு ரூபாய் குறைகின்றபோது வருமானத்தில் பல ரூபாய்கள் குறைகின்றன. வேலைவாய்ப்பு குறைந்துகொண்டே போகிறது. நீர்மை விருப்பம் கூடுவதனால் வட்டிவீதம் உயர்கிறது வட்டிவீதம் உயர்கிறது என்பதைப் பத்திரங்களின் விலை இறக்கம் தெளிவுபடுத்துகிறது. ஆண்டொன்றிற்கு ரூ 40 ஐ வருமானமாகத் தரக்கூடிய 1000 ரூபாய் பத்திரம், தற்போது ரூ 800/— மதிப்பையே பெறுகிறது. காரணம், அங்காடி வட்டிவீதம் 4 சதவீதத்திலிருந்து 5' சதவீதத்திற்கு உயர்ந்ததாகும். வட்டிவீதம் உயர்வதால், அது மேன் மேலும் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொருவரும் பத்திரங்களை விற்கவே விரும்புகின்றனர். யாரும் வாங்குவதற்கு முன்வருவதில்லை. பத்திரங்களின் விலைகள் சரிந்து கொண்டே போகின்றன. முதலீடு பாதிக்கப்படுகிறது. இத்தகைய நெருக்கடியில் செல்வத்தைப் பணமாக வைத்துக்கொள்வதுதான் பாதுகாப்பான முறையாக எல்லோருக்கும் படுகிறது.

நெருக்கடிக்குப் பிரதானமான காரணம் முதலின் இறுதிநிலைத் திறனின் நொடிப்பேயாகும். இந்த நொடிப்பிற்குப் பிறகுதான் ரொக்க விருப்பத்தில் அதிகப்படியான வளர்ச்சி காணப்படுகிறது இதனால் வட்டிவீதமும் மிகுதியாக உயர்கிறது. முதலீடு குறைந்து வர்த்தகர்களின் ஆர்வம் அறவே மறைகிறது. இலாப எதிர் நோக்குகளும் முதலின் இறுதிநிலைத்திறனும் மிகவும் குறைவாயிருப்பதனாலேயே முதலீட்டளவு குறைகிறது.

முதலின் இறுதி நிலைத்திறன் முறிவதைத் தொடர்ந்து பங்கு மாற்றுச்சந்தை (Stock Exchange) யில் பத்திரங்களின் விலைகள் தீவிரமாகச் சரிகின்றன. இதனால் துய்ப்பு நாட்டம் குறைகிறது. துய்ப்புநாட்டம் அடிப்படையில் நடப்பு வருமானத்தைச் சார்ந்திருக்கிறது என்றாலும், முதலீட்டிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் இழப்புகள் ஆகியவற்றாலும் அது மாறுதலடையக்கூடும் துய்ப்பு நாட்டம் மேலும் குறையும்போது மந்தம் வலிவடையும்.

மீட்சி (Revival) மலர்தல்

வாணிபத்தில் சுணக்கம் உண்டாவதற்கு எவ்வாறு முதலின் இறுதி நிலைத்திறன் சரிவு காரணமாயிருக்கிறதோ, அவ்வாறே வாணிபம் மந்தத்திலிருந்து மீளவேண்டுமெனில் முதலின் இறுதி நிலைத்திறன் மீட்சி பெரிதும் அவசியமாகிறது. வர்த்தக ஆர்வம் முன்னர்போல அமைதல் வேண்டும் ஆனால், வர்த்தக ஆர்வம் மீண்டும் நடைமுறைக்கு வருதல் எளிதில் நடைபெறும் நிகழ்ச்சி அன்று. சிறிதுகாலம் சுணக்கம் நீடித்த பின்னர், உரிய பணத்

துறை நிர்வாக (Monetary Managements) நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் வட்டி வீதத்தைக் குறைத்து முதலீட்டு நாட்டத்தை அதிகப்படுத்த முயற்சிகளை எடுக்கலாம். ஆனால், வர்த்தக ஆர்வம் திரும்பவும் ஏற்படாதவரையில் முதலின் இறுதிநிலைத் திறன் மிகவும் குறைவாகத்தானிருக்கும். வட்டிவீதம் பூஜ்யமாயிருந்தாலும் கூட, இவர்கள் கடன் வாங்கப்போவதில்லை; முதலீடும் செய்யப்போவதில்லை.

ஆனால், முதலின் இறுதி நிலைத்திறன் காலவரையறையின்றி நொடித்துக்கிடக்கப்போவதில்லை. காலம் செல்லச் செல்ல இது மெல்ல உயர்கிறது. இப்படி இது உயர்வதற்குக் காரணங்கள் யாவை? முதலாவதாகக் காலப்போக்கில் எந்திரங்களும் கருவிகளும் பழுதடைகின்றன; அல்லது தேய்ந்துபோகின்றன. இவற்றைப் புதுப்பிப்பதும், புதிய எந்திரங்களை வாங்கிப் பயன்படுத்துவதும் மிக மிக அவசியமாகிறது. இரண்டாவதாகக் காலம் செல்லச் செல்ல மற்றப் பண்டங்களின் உபரி இருப்புகள் கூடத் தீர்ந்துவிடுகின்றன. இவை இரண்டு காரணங்கள் மூலமாகப் புதிய வாத்தக நடவடிக்கைகள் தொடங்குகின்றன. மேலும் கச்சாப்பொருள்கள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றின் விலைகள் குறைந்திருப்பதனால் உற்பத்திச் செலவுகளும் தாழ்ந்திருக்கின்றன. இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து முதலின் இறுதிநிலைத் திறனை ஊக்குவித்து மீண்டெழச் செய்கின்றன. இது உயர்கின்றபோது மந்தநிலை முடிவுற்று மீட்சி மலர்கிறது. முதலின் இறுதி நிலைத்திறன் உயர உயர இலாப எதிர்நோக்குகள் பெருகி, வர்த்தக நடவடிக்கைகள் வளர்ந்துகொண்டே போகின்றன. அதேபோது மீட்சிக்கட்டம் மேன்மேலும் அழுத்தமடைந்து வாணிபத்தில் செழிப்புநிலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மலிகின்றன.

மந்தத்தைப் போக்கும் வழிகள்

முலீட்டினை ஊக்குவிப்பதன் மூலம் மந்தத்திற்கு ஒருமுடிவு காணமுடியும் என்று கீன்ஸ் கருதுகிறார். சுழலின் மந்தகட்டத்தின் போது முதலீட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு சிறந்த முறை துய்ப்பை அதிகப்படுத்துதல். எனவே, வேலையற்றவர்களுக்கு வேலையையும், சம்பளத்தையும் கொடுப்பதற்கான முறையில் அரசுச் செலவீடு பெருகவேண்டும். தனியார் முதலீடு நெகிழ்ந்து கொடுக்காமலிருக்கும்போது பொதுப் பணிகள் மீதான முதலீட்டை அரசு அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். சமுதாயத்தின் செலவீடுகள் கூடுதலாகித் தனியார் முதலீடு மறுபடியும் அதிகரிக்கும் வரையில் இப்படி அரசு முதலீடு அதிகரித்திடவேண்டும்.

முதலீட்டக் குறைவு (Under Investment) பிரச்சினையைத் தீர்ப்பது எங்ஙனம்? (1) சராசரித் துய்ப்பு நாட்டம் (Average Propensity to Consume) அதிகப்படுத்தப்படவேண்டும். இதற்கு நாட்டு வருமானம் சமமாக மக்களிடையே பகிர்வு செய்யப்பட வேண்டும். (2) வட்டிவீதம் குறைக்கப்படவேண்டும். வட்டி வீதம் குறைந்தால் முதலீடு அதிகரிக்கும். நாட்டுரிமையான (Socialisation) முதலீடு இல்லாதபோதிலும் பொதுப்பணி பெருகினாலே போதும். தனியார் முதலீடு போதுமானதாயில்லாத போது அரசு முதலீடு அதிகப்படுத்தப் பெறவேண்டும்.

கோட்பாட்டின் குறைபாடுகள்

புலமையும் நேர்த்தியும் கூடிய இக்கோட்பாட்டில் சில முக்கியக் குறைபாடுகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. அவையாவன:

(1) 'முதலின் இறுதிநிலைத் திறன்' என்ற தொடர் தெளிவில்லாததாகவும், பல அர்த்தங்களைக் கொடுப்பதாகவுமிருக்கிறது. வாணிபத்தில் கிடைக்கப்போகும் இலாபத்தைப் பற்றிய உளநிலை என்று இதற்கு நாம் பொருள் கொண்டால், கீன்ஸ் கூற்றில் சற்று உண்மை இருப்பதாகப் படுகிறது. ஏனெனில், இலாபத்தைப் பற்றிய நம்பிக்கை முறிந்து போவது நெருக்கடி உண்டாவதற்குரிய ஒரு காரணமேயாகும். ஆனால், முதலின் இறுதி நிலைத்திறன் என்பதற்கு முதலினச் சொத்துக்களின் ஆக்கத்திறன் (Productivity) என்று பொருள் கொண்டால், கீன்ஸ் கூற்றில் உண்மை இல்லாது போகிறது. ஏனெனில், நெருக்கடியின்போது நொறுங்கிப்போவது முதலினச் சொத்துக்களின் ஆக்கத்திறன் அன்று. ஆகவே, "இறுதி நிலைத்திறன் நொறுங்கிப்போவதனால் நெருக்கடி விளைகிறது என்ற கீன்ஸின் விளக்கம் பயனற்ற சிறு திற மெய்ம்மையாகவோ (useless truism) அல்லது தெளிவான பிழையாகவோ (Obvious error) இருக்கிறது." (ஹாஸ்லிட்)

(2) வட்டிவீதத்தைக் குறைப்பது என்பது மந்தத்தை நிறுத்துவதாகவும், மீட்சியைத் துவககுவதாகவுமிருக்கும் என்று கீன்ஸ் கருதுகிறார். ஆனால், வட்டிவீதம் தொழில் முயல்வோர்களின் முதலீடு முடிவுகளை நிர்ணயிப்பது பற்றி அண்மைககால ஆராய்ச்சிகள் ஐயத்தை உண்டாக்கியிருக்கின்றன. பண்டங்களுக்கான தேவை அதிகரிப்பதாகவோ அல்லது அவற்றை உற்பத்தி செய்து விற்பதற்காகும் செலவுகள்குறைவதாகவோ இருந்து, முன்பைவிடக் கூடுதலான அளவு பண்டங்களைத் தற்போது இலாபகரமாக விற்க

முடியும் என்ற நிலை இருந்தால்தான், தொழில் முயல்வோர்கள் தமது தொழிலைப் பெருக்குவதாகவோ அல்லது புதிய தொழில்களைத் துவக்குவதாகவோ இருப்பர்.'' (பென்ஹாம்)

(3) முதலீடுபற்றிய முடிவுகளை எடுப்பதற்குத் தொழில் முயல்வோர்களுக்கு வழிகாட்டியாயுள்ள ஒரு முக்கியக் காரணி முதலின் இறுதி நிலைத்திறன் என்கிருர் கீன்ஸ். ஆனுல், இது இறுதியில் எதிர்கால வாய்ப்புகளைப்பற்றிய தொழில் முயல்வோர்களின் நம்பிக்கையினை—அதாவது முதலீட்டாளர்களின் மனநிலையை—பொறுத்தது. அவ்வாறெனில் கீன்ஸ் கோட்பாடு பிகு (Pigou) வின் உளச்சார்புக் கோட்பாட்டிற்கு (Psychological Theory) மிகவும் அருகில் வருகிறது. இவையிரண்டுக்குமிடையே அடிப்படை வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

18. ஹிக்ஸ் கோட்பாடு
(Hicks' Theory)

''வளர்ச்சியும் முன்னேற்றமும் நம்மிடையே உள்ள வரை வாணிபச்சுழல்களும் இருக்கத்தான் செய்யும்.''
—கஸ்டாவ் காசல்.

அண்மைக் காலங்களில், வாணிபச் சுழல்பற்றிய ஆய்வில் புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜே. ஆர். ஹிக்ஸ், ஹான்சன் (Hansen) ஹாரடு (Harrod), சாமுவேல்சன் (Samuelson) முதலிய தற்காலப் பொருளாதார அறிஞர்கள் பெருக்கிக் (Multiplier) கருத்தினையும், வேகவளர்ச்சிக் (Accelerator) கருத்தினையும் அடிப்படையாகக்கொண்டு வாணிபச்சுழல்களுக்கான விளக்கங்களைத்தர முற்பட்டிருக்கின்றனர். பெருக்கியின் செயல்முறை, வேக வளர்ச்சி விதி முதலியவற்றின் கூட்டுச் செயல்களால்தான் வாணிபத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன என்று இவர்கள் கூறுகின்றனர். அதாவது, பெருக்கி, வேக வளர்ச்சி என்ற இரண்டின் பின்னிய செயல் (Interaction) விளைவே வாணிபச்சுழல் ஏற்படுவதற்குக் காரணம் என்று கருதுகின்றனர். பெருக்கி, வேக வளர்ச்சி என்பவைகளை இனிச் சற்று விரிவாகக் காண்போம். ஹிக்ஸின் கோட்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு இது துணை புரியும்

பெருக்கி (Multiplier)

பொருளாதார அறிவியலுக்கு கீன்ஸ் வழங்கிய முக்கியக் கருத்துக்களில் ஒன்று பெருக்கி. 1929-ல் கீன்ஸ் வழங்கிய இப்பெருக்கிக் கருத்தினை, 1921-ல் ஆர். எஃப். கான் (R. F. Khan) மேலும் வளப்படுத்தினார். முதலீட்டில் செய்யப்படும் ஒரு துவக்கக் கூடுதலுக்கும் (Increment), மொத்த வருமானத்தில் ஏற்படும் இறுதிக் கூடுதலுக்கும் உள்ள உறவினை இந்தப் பெருக்கி தெரிவிக்கிறது. முதலீட்டில் ஏற்படும் மாறுதலுக்கும் அதனால் வருமானத்தில் ஏற்படும் மாறுதலுக்கும் உள்ள வீதமே பெருக்கி.

ஒரு குறிப்பிட்ட அளவு (உதாரணமாக ரூ 100 கோடி) முதலீடு செய்யப்படும்போது, அம்முதலீட்டளவோடு மொத்த வருமானத்தில் அதிகரிப்பு நின்றுவிடுவதில்லை. இதைவிட மிகுதியான அளவு அதிகரிப்பு மொத்த வருமானத்தில் ஏற்படுகிறது. எப்படியெனில் ; எந்தத் தொழிலில் முதலீடு செய்யப்பட்டதோ அந்தத் தொழிலினர் வருமானம் கூடுதலாகிறது. அவர்கள் ஒரு பங்கை நுகர்ச்சி நாட்டத்திற்கேற்பச் செலவு செய்வதால், அவர்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலின் வருமானங்கள் கூடுதலாகும். ரூ 100 கோடியில் 80% (ரூ 80 கோடி) செலவு செய்தால், ரூ 80 கோடி பிறருக்கு வருமானமாகிறது. இந்த ரூ. 80 கோடியைப் பெறுவோர் 80% செலவிட்டால், ரூ. 64 கோடி பிறருக்கு வருமானமாகப் போகிறது. இவர்கள் செலவிட்டால் $\frac{8}{10}(64)$ போகிறது. இப்படியே முதல் ரூ. 100 கோடி முதலீடு பல படிகளில் வருமானத்தை வளர்க்கிறது. இதில் 80% என்பது வருமானத்தில் நுகர்ச்சிக்குச் (Consmuption) செல்லும் செலவீடு வீதம். இதை நுகர்ச்சி அல்லது துய்ப்பு நாட்டம் என்பர்.

பெருக்கியின் அளவு இறுதி நிலைத் துய்ப்பு நாட்டத்தைச் (Margiral Propensity to Consume) சார்ந்திருக்கிறது. இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் உயர்வாயிருந்தால், பெருக்கியின் அளவும் பெரிதாயிருக்கும். இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் தாழ்வாயிருந்தால், பெருக்கியின் அளவும் சிறிதாயிருக்கும். இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் 80% $(=\frac{4}{5})$ ஆக இருந்தால், பெருக்கி 5 ஆக இருக்கும். இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் $\frac{2}{3}$ ஆக இருந்தால் பெருக்கி 3 ஆக இருக்கும். பெருக்கியைக் கண்டுபிடிக்கும் வாய்பாடு :

$$K = \frac{1}{1-m.}$$

இதில் K என்பது பெருக்கி மதிப்பு, m என்பது இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம். இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் $\frac{1}{2}$ ஆக இருந்தால், அப்போது $K = \frac{1}{1-\frac{1}{2}} = \frac{1}{\frac{1}{2}} = 2.$

இதில் 1—m என்பது வருமானத்தில் பாதி நுகர்ச்சிக்கு; பாதி சேமிக்கப்படுகிறது என்பதாகிறது. ஆகவே, இறுதி நிலைத் துய்ப்பு நாட்ட விகிதமும், இறுதி நிலைச் சேமிப்பு நாட்ட (Marginal Propensity to save) விகிதமும் சேர்ந்து 1-க்குச் சமம். வருமானம்

முழுவதும் செலவு செய்யப்பட்டால் துய்ப்பு நாட்டம் 1. எனவே, 1-லிருந்து இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் கழிக்கப்பட்ட பிறகு மீத மிருப்பது இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம். $K = \frac{1}{S}$ (இங்கே S என்பது (1-m), அல்லது இறுதி நிலைச் சேமிப்பு நாட்ட வீதம் இறுதி நிலைத் துய்ப்புநாட்டம் $\frac{3}{4}$ ஆனால், சேமிப்பு நாட்டம் $\frac{1}{4}$. பெருக்கி 4.

ஆகவே, இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் நமக்குத் தெரியுமென்றால், பெருக்கியையும் நம்மால் கணிக்க முடியும். பெருக்கி, முதலீட்டில் செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட அதிகரிப்பால் மொத்த வருமானத்தில் எந்த அளவு அதிகரிப்பு ஏற்படப்போகிறது என்று கூறுகிறது. உதாரணமாகப் பெருக்கி 2 ஆக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது, ரூ. 10 லட்சம் முதலீடு செய்யப்பட்டால், வருமானப் பெருக்கம் ரூ. 20 லட்சமாயிருக்கும். பெருக்கி 3 ஆக இருந்தால், ரூ. 10 லட்சம் முதலீடு செய்யப்பட்டால், மொத்த வருமானம் ரூ 30 லட்சமாயிருக்கும், இதனால் தான் பெருக்கி என்று குறிப்பிடப்படுகிறது. பெருக்கி முன்னேக்கி வருமானத்தைப் பெருக்கத்தான் செயல்படும் என்றில்லை. பின்னேக்கி வருமானத்தைச் சுருக்கவும் செயல்படும். உதாரணமாக, முதலீட்டில் ரூ. 10 லட்சம் குறைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் $\frac{1}{2}$ ஆக இருந்தால், பெருக்கி 2 ஆக இருக்கும். மொத்த வருமானத்தில் ரூ. 20 லட்சம் குறையும்.

இதுவரை நாம் பார்த்தது முதலீட்டுப் பெருக்கி (Investment Multiplier). வேலைப் பெருக்கி (Employment Multiplier) என்றொரு வகைப் பெருக்கியும் இருக்கிறது. அடிப்படை (Primary) வேலை வாய்ப்பில் ஏற்படும் கூடுதலுக்கும் மொத்த வேலைவாய்ப்புக்கும் உள்ள வீதத் தொடர்பை இது தெரிவிக்கிறது. அடிப்படை வேலை வாய்ப்பு N_2 ஆகவும், மொத்த வேலைவாய்ப்பு N ஆகவும், வேலைப் பெருக்கி K' ஆகவுமிருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அப்போது $N = K'N_2$ ஆகும். வேலைப்பெருக்கி 3 ஆக இருக்கிறது என்றால், முதலீட்டுத் தொழில்களில் ஒரு நபர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதன் விளைவாக, நுகர்ச்சிப்பண்ட உற்பத்தித் தொழில்களில் 2 நபர்கள் அதிகப்படியாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவர் என்று பொருள்.

வேகவளர்ச்சி (Acceleration)

வேகவளர்ச்சிக் கருத்தினை முதன் முதலில் உருவாக்கியவர், ஆல்பர்ட் அஃப்டேலியன் (Albert Aftalian) என்ற ஃபிரஞ்சுப் பொருளாதார அறிஞர். இதனை மேலும் பிரபலப்படுத்தியவர்

ஜே. எம். கிளார்க் (J. M. Clark) என்பவர். முதலீட்டால் நுகர்ச்சியில் ஏற்படும் விளைவைப் பெருக்கி உணர்த்துகிறது. நுகர்ச்சியால் முதலீட்டில் தூண்டப்படும் தொடர்பை வேகவளர்ச்சி தெரிவிக்கிறது.• நுகர்ச்சி, முதலீட்டைச் சார்ந்திருக்கிறது என்பதைப் பெருக்கி காட்டுகிறது. முதலீடு, நுகர்ச்சியைச் சார்ந்திருக்கிறது என்பதை வேகவளர்ச்சி காட்டுகிறது. இவ்விரண்டின் இயல்புகள் இவை.

நுகர்ச்சியில் ஏற்படும் மாறுதல்கள் எவ்வாறு முதலீட்டளவைப் பாதிக்கின்றன என்பதை வேகவளர்ச்சிக் கருத்து விளக்குகிறது. அதாவது நுகர்ச்சி வீதத்தில் ஏற்படும் ஒரு கூடுதலால் (அல்லது குறைப்பால்) முதலீட்டுப்பருமனில் உண்டாகும் விளைவினை இது அளவிட்டுக் காட்டுகிறது. நுகர்ச்சியில் தோன்றும் நிகர மாறுதலுக்கும், முதலீட்டில் தோன்றும் நிகர மாறுதலுக்கும் உள்ள வீதத் தொடர்புதான் வேகவளர்ச்சி வீதம். சில பண்டங்களின் துய்ப்பில் ஏற்படும் மாறுதல்களால் அப்பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய எந்திரங்களின் உற்பத்தியளவு பாதிக்கப்படுகிறது. முதற்பொருட்களின் (Capital goods) உற்பத்தித் தொழில்கள், நுகர்ச்சிப் பண்டத் தொழில்களைச் சார்ந்திருக்கின்றன. நுகர்ச்சிப் பண்டத் தொழில்களில் உண்டாகும் மாறுதல்களால், முதலீட்டுப் பொருள் (Investments goods) தொழில்களில் ஏற்படும் விளைவுகளை வேக வளர்ச்சிக்கருத்து விளக்குகிறது. உதாரணமாக, நுகர்ச்சிப் பண்டங்களின் மீது ரூ. 5 லட்சம் செலவிடப்படுவதனுல், முதலீட்டுப் பொருள் தொழில்களில் ரூ. 10 லட்சம் முதலீடு செய்யப்படுவதாயிருப்பின், வேகவளர்ச்சி 2 ஆக இருக்கிறது என்று பொருளாகும்.

நடைமுறையில் வேகவளர்ச்சி எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஓர் உதாரணம் கொண்டு விளக்குவோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் 1000 நுகர்ச்சிப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு ரூ. 500 எந்திரங்கள் தேவைப்படுகின்றன என்றும், இவ்வெந்திரங்கள் 10 ஆண்டுகளில் தேய்வு அடைகின்றன—அதாவது ஆண்டொன்றிற்கு எந்திரங்களில் 10 சதவிகிதம் தேய்மானத்திற்கு உள்ளாகின்றன— என்றும்வைத்துக்கொள்வோம். அப்போது ஒவ்வொரு ஆண்டிலும் தேய்ந்தவற்றை ஈடுசெய்ய 50 எந்திரங்கள் தேவைப்படுகின்றன. இந்நிலையில் நுகர்ச்சிப்பண்டங்களுக்கான தேவை 10 சதவிகிதம் உயர்ந்தால், இதற்காக எந்திரங்களை 10 சதவிகிதம் அதிகப்படுத்துவது அவசியமாகிறது. அதாவது 50 எந்திரங்கள் வேண்டும். இவ்வாருகத் தேய்மானத்தின் காரணமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய 50 எந்திரங்கள்; தேவை உயர்வு காரணமாக எடுத்துக்

கொள்ளப்படவேண்டும். இப்படியாக, நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை தோன்றியதும், எந்திரங்களுக்கான தேவையை 100 சதவிகிதம்—50 இலிருந்து 100 ஆக-உயர்த்துகிறது. முதற்பொருள் உற்பத்தித் தொழில்களில் உண்டாகும் மாறுதல்(100%), நுகர்ச்சிப்பண்டத்தொழில்களில் ஏற்படும் மாறுதலை (10%) விடப் பெரிதாயிருக்கிறது என்பதை வேகவளர்ச்சி எடுத்துக்காட்டுகிறது. இவ்வுதாரணத்தில் வேக வளர்ச்சி 10 ஆக இருக்கிறது.

எந்திரங்களின் ஆயுட்காலம் நீண்டதாயிருப்பின் வேகவளர்ச்சி சிறிதாயிருக்கும். எந்திரங்களின் ஆயுட்காலம் குறுகியதாயிருப்பின் வேகவளர்ச்சி பெரியதாயிருக்கும். எனவே, வேகவளர்ச்சியின் அளவு, எந்திரங்களின் உறுதிப்பாட்டைப் பொறுத்திருக்கிறது. இங்கே நாம் புரிந்துகொள்வது, குறிப்பிட்ட தொடக்கச் செலவீட்டால் (Initial Expenditure) வருமானத்தில் ஏற்படும் முழு அதிகரிப்பையும் பற்றிப் பெருக்கிக் கருத்து விளக்கிடவில்லை. அதிகரிப்பின் ஒரு பகுதியை மட்டும்தான் அது விளக்குகிறது என்பதே. மற்றொரு பகுதியை விளக்குவது வேகவளர்ச்சிக்கருத்தேயாகும். அவ்வாறெனில் பெருக்கியையும், வேகவளர்ச்சியையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தால்தான் நாட்டு வருமானத்தில் ஏற்படும் முழு அதிகரிப்பையும்பற்றி நம்மால் நன்கு அறிந்துகொள்ள முடியும். திருப்திகரமான விளக்கத்தை அடைய முடியும். வாணிபச்சுழல் ஒன்றின்போது ஏன் முதற்பொருள் தொழில்கள், நுகர்ச்சிப் பொருள் தொழில்களை விட மிகவும் தீவிரமாக மாறுகின்றன என்பதை விளக்குவது வேகவளர்ச்சி விதியே. பெருக்கியும், வேகவளர்ச்சியும் இணைந்து செயல்படும்போதுதான் வாணிபத்தில் சுழல் ஏற்ற இறக்கங்கள் நிகழ்கின்றன.

பெருக்கி, வேகவளர்ச்சி ஆகியவற்றின் கூட்டுச் செயல்

பெருக்கியும் வேகவளர்ச்சியும் இணைந்து செயல்படும்போது வாணிபச் சுழல்கள் உண்டாகின்றன என்று கூறினோம். இவையிரண்டின் கூட்டுச் செயலால் உருவாகும் விளைவு நெம்புதிறன் (Leverage) என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த நெம்பு திறனால் வாணிபச் சுழலின் மேல்நோக்கிய வீச்சு அல்லது ஏறுமுகம் (Upswing) எவ்வாறு தோன்றுகிறது என்பதை இனிக் கவனிப்போம்.

பொருளாதார அமைப்பில் ஒரு புதிய முதலீடு செய்யப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது, இம் முதலீடு மூலம் பெருக்கிக் காரணமாகப் பன்மடங்கு அதிகரிப்பு வருமானத்தில் உண்டாகும். இவ்வருமான அதிகரிப்பால் நுகர்ச்சிப் பண்டங்

களின் மீதான செலவீடு அதிகரிக்கும். இதனுல் நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை கூடுதலாகி, வேகவளர்ச்சி மூலமாக முதலீடும் மிகுதியான அளவில் தேவைப்படும். இது நுகர்ச்சி தூண்டிய முதலீடு (Induced Investment). ஆகவே, பெருக்கிமூலம் வருமானம் மிகவும் பெருகி, நுகர்ச்சிப் பண்டங்களுக்கான தேவை உயர்ந்து, வேகவளர்ச்சி மூலமாகத் தூண்டப்பட்ட முதலீட்டளவு இன்னும் பன்மடங்கு பெருகுகிறது. பெருக்கியும் வேகவளர்ச்சியும் இப்படி இணைந்து செயல்படுவதனுல் பொருளாதார அமைப்பில் வாணிபச் சுழலின் ஏறுமுகம் தோன்றுகிறது.

நெம்புதிறன் அளவு, பெருக்கி மற்றும் வேகவளர்ச்சியின் கெழுக்களின் (Coefficients) மதிப்புகளைப் பொறுத்தது. இவை உயர்ந்த அளவில் இருந்தால் நெம்புதிறன் — அதாவது பெருக்கி வேகவளர்ச்சி ஆகியவற்றின் கூட்டுச் செயல் விளைவால்—பலத்த பணவீக்கச் (Inflation) சூழ்நிலை உருவாகிறது. ஆனுல், நடைமுறையில் பெருக்கி, வேகவளர்ச்சி ஆகியவற்றின் கெழுக்கள் மதிப்புகள் மிகவும் உயர்வாயிருப்பதில்லை. எனவே நெம்புதிறனும் மிதமாகவே யிருக்கிறது. இதனுல், வாணிப நடவடிக்கையின் ஏறுமுகம் மிதமாகவே யிருக்கிறது.

வாணிப நடவடிக்கையின் மேல்நோக்கிய போக்கிற்கு வரம்பு இருக்கிறது. வாணிபப் பெருக்கத்திற்கு எல்லை உண்டு. கால வரையறையின்றி இது பெருகிப் போவதற்கில்லை. மக்களின் வருமானங்கள் வளர்ந்துகொண்டே போகும்போது இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம்(Marginal Propensity Consmume) குறைகிறது. வாணிப நடவடிக்கையின் பெருக்கம் தடைப்பட்டு நிற்கிறது. எங்ஙனம்? இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் குறையும்போது, நுகர்ச்சி சுருங்குகிறது. நுகர்ச்சி சுருங்கும்போது, வேகவளர்ச்சித் தத்துவம் காரணமாக—வேகவளர்ச்சியின் பின்னுேக்கிய சுருக்கச் செயல் காரணமாக—முதலீட்டில் பன்மடங்கு சுருக்கம் நிகழ்கிறது. முதலீடு குறைந்து போவதனுல், பெருக்கியின் பின்னுேக்கிய சுருக்கச் செயல் காரணமாக வருமானம் பன்மடங்கு குறைகிறது. இதனுல் நுகர்ச்சி மேலும் சுருங்குகிறது. முதலீடும் மேலும் குறைகிறது. பெருக்கியும் வேகவளர்ச்சியும் இணைந்து இப்படிப் பின்னுேக்கிச் செயல்படுவதனுல் வாணிபத்தில் மந்தநிலை தோன்றுகிறது.

மந்தகாலப் பகுதியில் வருமானம் தாழ்கிறது. ஆனுல். குறைந்த வருமானத்தில் நுகர்ச்சி நாட்டவீதம் உயர்கிறது. ஆகவே, பின்னுேக்கிச் சென்ற பெருக்கி முன்னுேக்கிச் செயல்படத் துவங்குகிறது. இதனுல் முதலீட்டுப் பொருள்களுக்கான தேவை

சற்று உயர்கிறது. இதைப் பற்றுக்கோலாகக் கொண்டு முதலீடு மெல்லப் பெருக வாரம்பிக்கிறது. அப்போது பெருக்கி மற்றும் வேகவளர்ச்சி மூலமாக நிலைமை சீர்ப்பட்டு மந்தம் முடிவுறுகிறது.

இவ்வாருகப் பெருக்கி, வேகவளர்ச்சி என்ற இரு முக்கிய கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு நிகழ்கால அறிஞர்கள் சிலர் வாணிபச் சுழலின் மேல்நோக்கிய வீச்சையும் (ஏறுமுகத்தையும்) கீழ்நோக்கிய வீச்சையும் (இறங்கு முகத்தையும்) பற்றி விளக்குகின்றனர்.

இனி ஹிக்ஸ் கோட்பாட்டின் மையக் கருத்துகளை ஆராய்வோம்.

ஹிக்ஸ் கோட்பாட்டின் மையக் கருத்துகள்

1950ஆம் ஆண்டில் வெளியான 'வாணிபச்சுழல் கோட்பாட்டிற்கு ஒரு பங்களிப்பு' (A Contribution to the Theory of the Trade Cycle) என்ற ஹிக்ஸின் நூலில், இவரது கோட்பாடு இடம் பெற்றிருக்கிறது. இந்நூல், அண்மைக் காலங்களில் வெளிவந்த அருமையான நூல்களில் ஒன்று எனலாம். பெருக்கி, வேகவளர்ச்சிக் கருத்துகளை இணைத்து, வாணிபச் சுழல்களுக்கான விளக்கத்தை வளர்ச்சி என்ற இரண்டின் கூட்டு நடவடிக்கை அடிப்படையில் சுழல் ஏற்ற இறக்கங்கள் எப்படி வாணிபத்தில் தோன்றுகின்றன என்பதைப் பற்றிய ஹிக்ஸ் கோட்பாட்டின் சுருக்கத்தைக் கீழே காண்க.

முதலீடு, தூண்டா முதலீடு (Autonomous Investment), தூண்டிய முதலீடு (Induced Investment) என இருவகைப்படும். நடப்புப் பொருளாதார நிலவரங்களால், அதாவது நாட்டு வருமானம், நுகர்ச்சி முதலியவற்ருல் நிர்ணயிக்கப்படாதிருப்பது தூண்டா முதலீடு. தொழில் நுட்ப மாறுதல், மக்கட்தொகை வளர்ச்சி, அரசு முதலீடு முதலிய புறக்காரணியால் தூண்டப்படாதது இவ்வகை முதலீடு. வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்திப் பெருக்கத்தைத் தூண்டா முதலீடே தொடங்கி வைக்கிறது. இதன் சக்தியைப் பெருக்கி தெரிவிக்கிறது.

வருமானம் அல்லது நுகர்ச்சியின் மாறுதல்களால் நிர்ணயிக்கப்படுவது தூண்டிய முதலீடு. மொத்தத் தேவை அல்லது மொத்த நுகர்ச்சியின் அதிகரிப்பு அல்லது சுருக்கத்தின் விளைவான இதை அதன் எதிர்விளைவு (Reaction) எனலாம். தூண்டிய முதலீடு பொருளாதாரத்திற்குள்ளே நிகழும் ஓர் அகக்காரணி. இதன் சக்தியை வேகவளர்ச்சி தெரிவிக்கிறது.

தூண்டா முதலீடு உற்பத்தியின் மாறுதல்களால் நிர்ணயிக்கப் படுவதில்லை. ஆனால், தூண்டிய முதலீடோ உற்பத்தியின் மாறுதல்களால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாகத் தேவை உயர்வதன் விளைவாகஏதாவது ஒரு தொழிலின் உற்பத்தியளவு பெருகுகிறது என்றும், அத் தேவையின் உயர்வு நிரந்தரமாக இருக்கப்போகிறது என்றும், வைத்துக்கொள்வோம். அப்போது, இவ்வுற்பத்தியின் பெருக்கத்தால் முதற்பொருள் தொழில் பெருக்கமடையும். எனவே, உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பால் முதலீடு செய்வது தூண்டப்படுகிறது. இது தூண்டிய முதலீடாகும்.

பெருக்கி மூலமாகத் தூண்டா முதலீடும். வேக வளர்ச்சி மூலமாகத் தூண்டிய முதலீடும் வாணிபத்தில் சுழல் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தி வைக்கின்றன என்று ஹிக்ஸ் கூறுகிறார்.

சமநிலையில் (Equilibrium) இருந்து வரும் பொருளாதார அமைப்பு, தூண்டா முதலீட்டில் உண்டாகும் திடீர்ப் பேரதிகரிப்புகளால்—திடீர் பீறிட்டெழுச்சிகளால் (Spurts)–மாறுதலுக்குட் படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது வருமானமும் உற்பத்தியும் பெருகும். இவை எந்த அளவிற்குப் பெருகும் என்பதைப் பெருக்கி எடுத்துக்காட்டும். இந்த வருமானம் மற்றும் உற்பத்திப் பெருக்கத்தால் (வேக வளர்ச்சி மூலமாக) தூண்டிய முதலீடு விளைகிறது. இதனால் (பெருக்கி வழியாக) வருமானம் பெருகுகிறது. இவ் வருமானப் பெருக்கத்தினால் (வேக வளர்ச்சி மூலமாக) கூடுதலான தூண்டிய முதலீடு விளைகிறது. வருமானம் பெருக, தூண்டிய முதலீடு பெருக, மீண்டும் வருமானம் பெருக, தூண்டிய முதலீடு பெருக—இப்படியாக இது வளர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த மேல் நோக்கிய வீச்சில் (upswing) உற்பத்தி சமநிலை வீதத்தைவிட விரைவாக உயர்கிறது. முதலீடும் இயல்பான வீதத்திற்கு மிகுதியாக இருக்கிறது. நிறைவுடை வேலைவாய்ப்பால் (Full Employment) நிர்ணயிக்கப்படும் உச்சவரம்பு (Ceiling) மேல் எல்லை-அடையப்பெறும்வரை இவ்வாறு வருமானமும் உற்பத்தியும் பெருகிச் செல்கின்றன.

உச்சவரம்பை அடைந்ததற்குப் பிறகு பெருக்கம் தடைக்குட் படுகிறது. பெருக்கவீதம் மெல்லக் குறைந்து இயல்பான வீதத்திற்கு வந்தமைகிறது. தூண்டிய முதலீட்டு வீதமும் குறைகிறது. ஏனெனில். தூண்டா முதலீட்டில் ஏற்பட்ட திடீர்ப் பீறிட்டெழுச்சிகள் — பேரதிகரிப்புகள் — தற்காலிகமானவையாகும். அடுத்து பெருக்கியும், வேகவளர்ச்சியும் பின்னோக்கிச் செயல்படுகின்றன. முதலீடு குறைவதனால் வருமானம் சுருங்குகிறது. வருமானம் சுருங்குவதனால் முதலீடு மேலும் குறைகிறது. சமநிலை மட்டத்திற்கு மிகவும் கீழே உற்பத்தியளவு சரிந்து போகலாம்.

வரைபட விளக்கம்

பின் வரும் வரைபடத்தில் ஹிக்ஸ் கோட்பாடு காட்டப் கிறது.



படம் 4

முதலீட்டுப் பருமனுக்கும் வருமான அளவிற்கும் ஒரு நெருங் கிய தொடர்பிருக்கிறது என்பதை நாம் அறிவோம். வருமான அளவு முதலீட்டின் பருமனைப் பொறுத்தது. முதலீடு ஒரு குறிப் பிட்ட பருமனில் உள்ளபோது, அதற்கேற்றவாறு வருமானமும் ஒரு குறிப்பிட்ட அளவில் அமைவதாக இருக்கும். முதலீட்டுக்கும் வருமானத்துக்குமுள்ள வீதத்தொடர்பு (Ratio), பெருக்கி வேக வளர்ச்சி என்பவற்றின் கூட்டுச் செயலால் — நெம்புதிறனல் (Leverage)—நிர்ணயிக்கப்படுகிறது. தூண்டா முதலீடு அதிகரிக் கும் அதே வீதத்தில் வருமானமும் அதிகரிக்கும் என்று நம்பப் படுகிறது.

தரைபடத்தில் AA என்பது தூண்டா முதலீட்டின் வளர்ச்சி யைக் காட்டுகிறது. இது ஒரே சீராக மேல் நோக்கிச் செல் கிறது. தூண்டா முதலீட்டிற்கு ஏற்ற வருமானம் அல்லது உற் பத்திப் போக்கின EE என்ற கோடு காட்டுகிறது. AA-க்கும்

EE-க்கும் உள்ள தூரம் நெம்பு திறனின் அளவைப் பொறுத்தது. FF என்பது நிறைவுடை வேலை வாய்ப்பு உச்ச வரம்பைக் காட்டுகிறது.

Po என்ற இடத்தில் பொருளாதார அமைப்புச் சமநிலையில் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது, ஒரு கண்டுபிடிப்பு மூலமாகத் தூண்டா முதலீட்டில் ஒரு திடீர்ப் பெருக்கம் ஏற்படுவதாயிருப்பின், பெருக்கி வழியாக வருமானம் (அல்லது உற்பத்தி) பெருகுகிறது. வருமானம் பெருகும்போது துய்ப்புச் செலவீடு (Consumption expenditnre) அதிகரித்து, வேகவளர்ச்சி மூலமாகத் தூண்டிய முதலீடு விளைகிறது. பின்னர் மீண்டும் வருமானம் பெருக, துய்ப்புச் செலவீடு அதிகரித்து, வேகவளர்ச்சி மூலமாகக் கூடுதலான தூண்டிய முதலீடு நிகழ்ந்து. வருமானப் பெருக்கம் திரும்பத் திரும்ப நிகழ்ந்துகொண்டே செல்கிறது.

EE கோட்டிலுள்ள சமநிலைப்புள்ளியிலிருந்து புறப்படும் வருமானப் (உற்பத்தி) பெருக்கம் Po P_1 பாதையில் சென்று, பின்னர் FF என்ற உச்ச வரம்புக்கோட்டின் P_1 என்ற புள்ளியைத் தொட்டு நிற்கிறது. FF கோட்டிற்கு மேலே வருமானம் அல்லது உற்பத்தியின் பெருக்கம் செல்வதற்கில்லை. ஏனெனில், நிறைவுடை வேலை வாய்ப்பு நிலையினை அக்கோடு தெரிவிக்கிறது. உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் வேலைக்கு எடுத்துக்கொண்டுவிட்ட பிறகு கூடுதலான உற்பத்தியைக் கொண்டு வருவது என்பது முடியாது. ஹிக்ஸ் கூறுகிறார்: "இவ்வாறாக உற்பத்தியின் பெருக்கம் இறுதியில் FF உச்ச வரம்பின் P_1 போன்ற ஏதாவது ஒரு புள்ளியினைத் தொட்டு நின்றாக வேண்டும். அவ்வாறு செய்ததற்குப் பின்னர், அது சமநிலைக் கோட்டினை விட்டு இன்னும் மேலே போக முடியாது. அதிக பட்சமாக அதனால் செய்ய முடிவதெல்லாம் உச்ச வரம்பினூடே ஊர்ந்து போவதேயாகும். ...... இதையும் இது மிகவும் குறுகிய காலத்திற்குத்தான் செய்ய முடியும். எனவே, பாதையில் உச்சவரம்பினைச் சந்தித்ததற்குச் சிறிது காலம் கழித்து, இது சட்டெனக் கீழ் நோக்கிய திசையில் சரிந்தோட வாரம்பிக்கிறது."

நிறைவுடை வேலை வயய்ப்பு உச்ச வரம்பினைத் தொட்டதற்குப் பின்னர், உற்பத்தி மற்றும் வருமானப் பெருக்கம் இப்படிக் கீழ் நோக்கிச் செல்வதேன்? இதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன:

(1) தூண்டா முதலீட்டில் ஏற்படும் திடீர்ப் பெருக்கம் ஒரு குறுங்கால நிகழ்ச்சியாய்மட்டு மிருக்கிறது. சிறிது காலத்திற்குப் பின்னர் இது மறைகிறது. இதன் விளைவாகத் தூண்டிய முதலீடும் மறைகிறது.

(2) முன்னிகழ்ந்த மேல் நோக்கிய இயக்கத்தின்போது வருமானம் அதிகரிக்கையில் நுகர்ச்சி நாட்ட விகிதம் குறைகிறது. இதனால் நுகர்ச்சி குறையும்போது. வேக வளர்ச்சியின் பின்னோக்கிய செயல் முறையால் முதலீடு இன்னும் சற்று மிகுதியாகக் குறைகிறது.

இவ்விரண்டு காரணங்களை முன்னிட்டு நிறைவுடை வேலை வாய்ப்பு நிலைக்குப் பிறகு உற்பத்தியும் வருமானமும் கீழ்நோக்கிச் சரிகின்றன.

இனி அடுத்த வினா, இந்தப் பின்னோக்கிய இயக்கத்தின் வேகம் எத்தகையதாயிருக்கும் என்பது. மேல் நோக்கிய இயக்கத்தைவிடக் கீழ் நோக்கிய இயக்கம் மெதுவாகப் படிப்படியாக நிகழலாம் என்று பலர் நினைக்கக்கூடும். ஆனால், உண்மை இதுவன்று. மேல்நோக்கிய இயக்கத்தைவிடக் கீழ் நோக்கிய இயக்கம் வேகம் மிகுந்தது. கீழ் நோக்கிய இயக்கத்தின் ஒரு முக்கிய இயல்பு: உற்பத்தி ஒரு முறை குறைந்துவிட்டால், பின்னர் அது மிக விரைவாக அடுத்தடுத்துக் குறைந்து கொண்டே போகிறது. இதற்குப் பணச்சார்பான காரணிகளே (Monetary factors) பொறுப்பு. கீழ்நோக்கிய வீச்சுத் தொடங்கும்போது, பண்டங்களை விற்பது மிகவும் சிரமமாயிருக்கிறது. இதன் விளைவாக மாறாச் செலவுகளின் (Fixed Costs) சுமை அதிகரிக்கிறது. நிலைமை மேலும் மோசமாகிறது. நிறுவனங்கள் அடுத்தடுத்து நொடித்துப் போகின்றன. ரொக்க விருப்பம் (Liquidity Preference) திடீரென்று உயர்ந்து விடுகிறது. கடன் வசதிகள் பெரிதும் குறைகின்றன. எனவே, வர்த்தகம் வாட்டமுற்று, மந்தம் தீவிரமடைகிறது.

வாணிபச் சுழல் கோட்பாடுகள்—முடிவுரை

வாணிபச் சுழல் கோட்பாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக இது வரை பார்த்தோம். வாணிபச் சுழல்களைப் பற்றிய இலக்கியம் மிகவும் வளர்ந்து விட்டிருக்கிறது என்றாலும், சுழல் ஏற்ற இறக்க நிகழ்ச்சி இன்னமும் ஒரு விடுவிக்கப்படாத விடுகதையாகத்தானிருந்து வருகிறது. வாணிபச் சுழல் என்பது நவீனப் பொருளாதார வாழ்வில் ஒரு புதிரான நிகழ்ச்சியாக இருக்கிறது என்றும், அது பொருளாதார அறிவியலால் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்

றும் டியூகன்—பா ர னேஸ் கி (Tugan — Bararonsky) 1913-ல் எழுதினர். வாணிபச் சுழல்களைப் பற்றிய புள்ளி விவரங்களும், தகவல்களும் கட்டுக் கட்டாகப் பெறப்பட்டிருக்கின்றன என்ற லும், சுழல் வகை மாறுதல்களை அறிவியல் ரீதியில் ஆய்வு செய் வதற்கு இவை போதிய உதவியினை நல்கியிருப்பதாகத் தெரியக் காணும். டாக்டர் அடால்ஃப் லோவே (Dr. Adolph Lowe) 1926-ல் குறைபட்டுக் கொண்டார், ஒவ்வொரு கோட்பாடும் ஏதாவது ஒரு காரணியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அதனுற்ருன் வாணிபத்தில் மாறுதல்கள் விளைகின்றன என்று பிடிவாதம் செய்கின்றதே ஒழிய, மற்றக் கோட்பாடுகளின் உட் கருத்திற்கு இசைவு தெரிவிப்பதாக இல்லை என்ற இவரது கருத்து இன்றைக்கும் உண்மையாக இருக்கிறது.

எந்த ஒரு கோட்பாடும், வாணிபச்சுழல்களுக்கான காரணங் கள் முழுவதையும் விளக்குகின்ற விரிவான கோட்பாடாக இல்லை. வாணிபச்சுழல் எந்த ஒரு தனிப்பட்ட காரணியாலும் விளைவ தில்லை. மாருகப் பல்வேறு காரணிகளால் விளைகின்றன. சில சம யங்களில் ஒரு காரணி முக்கியமானதாயும், வேறு சில சமயங் களில் மற்ருெரு காரணி முக்கியமானதாயுமிருக்கிறது.

ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருக்கின்ற இக்கோட்பாடுகள் ஒன்றை மட்டும் ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றன: அது, வாணி பச் சுழல்கள், தனியார் தொழிற்றுணிவு (Private Enterprise) காணப்படும் பொருளாதார அமைப்புகளின் இன்றியமையாத அம்சமாக இருந்து வருகின்றன என்பதாகும்.

வாணிப நடவடிக்கைகளில் உண்டாகும் மாறுதல்கள் சமூகத் திற்கு நன்மை பயப்பதில்லை. சமூகத்தின் கட்டுப்பாடான, சமூக மான வளர்ச்சிக்கு இவை ஊறு விளைவிக்கின்றன. செழிப்புக் காலத்தில் வர்த்தகர்களுக்கும் யூக வாணிபர்களுக்கும் கூடுதலான இலாபங்கள் குவிகின்றன. ஆனல், நடுத்தர மக்கள், ஏழைக் குடிசைவாசிகள்—இவர்களின் மெய் வருமானங்கள் பெரிதும்பாதிக் கப்படுகின்றன. மந்த காலங்களில் தொழில் நிறுவனங்கள் நொடித்துப் போகின்றன. வர்த்தகர்கள் ஏமாற்றத்திற்கும் திகி லுக்கும் உள்ளாகின்றனர். வேலை வாய்ப்பின்மையும் ஏழ்மையும், துன்பமும் ஏழை மக்களைச் சூழ்கின்றன. வாணிபத்தில் செழிப்பு நிலை என்பது தோன்றிவிட்டால், பிறகு மந்தநிலை என்பது தானு கவே தோன்றிவிடுகிறது. மந்தத்தை உருவாக்கும் கிருமிகள் செழிப்பின் உதிரத்தில் துள்ளி ஓடிக்கொண்டிருக்கின்றன.

வருமானங்களும் விலைகளும் அடிக்கடி மாறுவதனால் கொடிய தீமைகள் நடமாட ஆரம்பிக்கின்றன என்பதாலும், வேலை வாய்ப் பின்மை பிரச்சினை வேரூன்றுவதனால் நாட்டின் நல்வாழ்வு நலிவுறுகிறது என்பதாலும், வாணிபச்சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், தவிர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மீது தற்போது தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வேலை வாய்ப்பினைப் பெருக்கி அதை நிலைப்படுத்த வேண்டும் என்பதனை எல்லா ஜனநாயக நாடுகளும் தமது தலையாய பணியாக இன்றைக்கு ஏற்றுக் கொண்டுள்ளன. வருமானத்தைப் பெருக்கி நிலைப்படுத்துவதிலும், உற்பத்தியைப் பெருக்கி நிலைப் படுத்துவதிலும் எல்லா நாடுகளும் பேரார்வம் காட்டி வருகின்றன. இவை நிலைப்படுத்தப் பெற்றால், வாணிபச் சுழல் கட்டுப் படுத்தப்படுவதாய், தவிர்க்கப்படுவதாயிருக்கும் என்று நம்பப்படுகிறது. இந் நிலைபேறுக்கம் (Stabilisation) விளக்கம் அடுத்த பகுதியில் தொடங்குகிறது.

19. வாணிபச்சுழலின் சர்வதேசப் பண்புகள்

(International Aspects of Business Cycles)

> "ஒரு சுவரை எழுப்புவதற்கு முன்னால் சுவருக்குள்ளே என்ன அடங்குகிறது, வெளியே என்ன ஒதுங்குகிறது, இதனால் யாருக்கும் தீமை விளைகிறதா என்பது எனக்குத் தெரிய வேண்டும்."
>
> — ராபர்ட் ஃப்ராஸ்ட்.

வாணிபப் பூரிப்புகளும் பெருமந்தங்களும் வையகம் முழுவதும் பரவுகின்ற தன்மை படைத்தவை. சுழல் ஏற்ற இறக்கங்களின் காலமும் தீவிரமும் நாட்டுக்கு நாடு வேறுபடும் என்றாலும், வாணிபத்தில் ஏற்படக்கூடிய பெருமாறுதல்கள் உலக முழுவதும் பரவி நிற்கின்ற இயல்பினைப் பெற்றிருக்கின்றன. கடந்த இரு உலகப் போர்களுக்கு இடையேயான காலப்பகுதியில் பெரும்பாலான நாடுகள் தமக்கே உரித்தான பணத்துறை மற்றும் புனரமைப்புப் பிரச்சினைகளில் மூழ்கிக் கிடந்த போதுகூட வாணிபப் பெருக்கமும் (Expansion) சுருக்கமும் (Contraction) ஒவ்வொரு நாட்டிலும் தென்படவே செய்தன. ஒரு நாட்டில் நிகழக் கூடிய ஒரு வாணிப மாறுதல் மற்ற நாடுகளுக்கும் பரவுகிறது என்பது வரலாற்றுப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் தொழில் வளர்ச்சியும் தேக்கமும் பொதுவாக ஏக காலத்தில் பல நாடுகளில் காணப்படுவதாயிருக்கின்றன.

உதாரணமாக, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஃபிரான்சு, இத்தாலி, ஸ்வீடன், ஜப்பான் முதலிய நாடுகள் எல்லாவற்றிலும் 1924 முதல் 1929 வரை தொழில் உற்பத்தி பெருகியது. 1929 முதல் 1932 வரை தொழில் உற்பத்தி சுருங்கியது. 1932 முதல் 1937 வரை தொழில் உற்பத்தி மீண்டும் பெருகியது.

எந்தெந்த வழிகளில் வாணிபச் சுழல்கள் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவுகின்றன! அமெரிக்கா போன்ற தொழில் வளம் ஓங்கிய நாடுகளைப் பொறுத்த வரையில் உள்நாட்டு முதலீட்டில் ஏற்படுகின்ற மாறுதல்களால்தான் வருமானம் மற்றும் வேலை வாய்ப்பின் ஏற்ற இறக்கங்கள் வேறு நாடுகளுக்குப் பரவுகின்றன என்று நம்பப்படுகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பொறுத்த வரையில் சுழல் பரவுவதற்கு ஏற்றுமதிகளின் மதிப்பு பிரதானமாயிருக்கிறது. இவ்விரு வகை நாடுகளுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள கனடா, ஆஸ்திரேலியா, ஸ்வீடன் முதலிய நாடுகளைப் பொறுத்த வரையில் உள்நாட்டு முதலீடு, ஏற்றுமதிகள் ஆகிய இரண்டு காரணிகள் வழியே வாணிப ஏற்ற இறக்கங்கள் மற்ற நாடுகளுக்குப் பரவுகின்றன.

தொழில் வள மிகுந்த பெரிய நாடுகளில் முதலீட்டு வீதம் அதிகரித்தால் அந்நாடுகளின் வருமானம் அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும்போது இறக்குமதிகளின் அளவு பெருகும். ஏனென்றால், தொழில் மேன்மேலும் பெருக வேண்டுமெனில் வெளிநாடுகளிடமிருந்து கச்சாப் பொருட்களை மிகுதியாக இறக்குமதி செய்வது அத்தியாவசியமாகிறது. மேலும், உள்நாட்டில் வருமானங்கள் உயர்கின்றபோது. எல்லா வகை நுகர்ச்சிப் பண்டங்களையும் புறத்தேயிருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டும் என்ற வேட்கை மக்களிடம் எழுகிறது. எனவே, உள்நாட்டு முதலீட்டளவு பெருகும்போது வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் இறக்குமதிகளின் அளவு அதிகரிக்கும். அப்போது கச்சாப் பொருட்களையும் வேறு பல பண்டங்களையும் ஏற்றுமதி செய்கின்ற நாடுகள் தமது உற்பத்தியைப் பெருக்க வாரம்பிக்கின்றன. இந்நாடுகளின் பல தொழில்கள் பெருக்கமடைகின்றன. செழிப்பு நிலை தோன்றுகிறது. உற்பத்தி நடவடிக்கைகள் சுறுசுறுப்படைகின்றன. ஏற்றுமதிகள் வளர்கின்றன. இவை மூலமாக இந்நாடுகளின் வருமானங்கள் உயர்கின்றன. வருமானங்கள் உயர்வதைக் காணும் இந்நாடுகள் பிறநாடுகளிடமிருந்து எல்லா வகைப் பண்டங்களையும் இறக்குமதி செய்யத் தொடங்குகின்றன. தொழில்வளமிக்க நாடுகளிடமிருந்து இவை மோட்டார்கள், மின்விசைக்கருவிகள், விவசாயம் மற்றும் தொழில்துறை எந்திரங்கள், சாலையமைப்புத் தளவாடங்கள், போக்கு வரத்துச் சாதனங்கள், தொலை பேசிக் கருவிகள், வினைமுடிந்த நுகர்ச்சிப் பண்டங்ககள் ஆகியவற்றை இறக்குமதி செய்து கொள்கின்றன. இப்படியாக, சர்வதேச அங்காடி (International Market)என்ற எந்திரம் மூலமாக ஒரு நாட்டுத் தொழில் பெருக்கம் மற்ற நாடுகளுக்கும் பரவுகிறது. அந் நாடுகளிலிருந்து வேறு பல நாடுகளுக்கும் பரவுகிறது.

இவ்வாறு தொழில் உற்பத்திச் சுருக்கமும் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவுகிறது. தொழில் வள மிகுந்த நாடுகளில் முதலீட்டளவு குறைந்து வருமானங்களும், வேலைவாய்ப்பும் குறைந்தால், வெளி நாடுகளிடமிருந்து பெறப்படும் இறக்குமதிகள் குறைகின்றன. இதனால் மற்ற நாடுகளின் ஏற்றுமதிகள் சுணங்குகின்றன; வருமானங்கள் தாழ்கின்றன. இதனைத் தொடர்ந்து வாணிபத்தில் வாட்ட நிலைமை தீவிரமாகி, வெளி நாடுகளிடமிருந்து பெறப்படும் இறக்குமதிகளின் அளவு கணிசமாகக் குறைகிறது. வருமானம் தேய்பிறையாகிவிட்ட பிறகு தொழில்வளமிகுந்த நாடுகளிடமிருந்து எந்திரங்களையும், கார்களையும் எவ்வாறு பெறமுடியும்? இவ்வாறாக, ஒரு நாட்டில் துவங்குகின்ற மந்தம் மற்ற நாடுகளுக்கும் பரவி, பிறகு அங்கிருந்து வேறுபல நாடுகளுக்கும் பரவுகிறது.

ஒரு நாட்டினால் மற்ற நாடுகளில் எந்த அளவிற்குச் செழிப்பு நிலைமையைத் தோற்றுவிக்க முடியும் என்பது, அந்நாட்டு இறக்குமதியின் ஏற்ற இறக்கங்களின் வன்மையையும், உலக வாணிபத்தில் அந்நாட்டுக்குள்ள பங்கினையும் பொறுத்தது. இவைஇரண்டையும் பொறுத்த வரையில் அமெரிக்க ஐக்கிய நாடு முதலாவதாக இருந்து வருகிறது எனலாம். இரண்டாவது உலகப்போருக்கு முன்பும் சரி,பின்பும் சரி, உலக வாணிபத்தின் ஒரு பெரும் பகுதி அதன் பொருளாதாரச் செல்வாக்குக்கு அடங்கியதாயிருக்கிறது. அந்நாட்டு நுகர்ச்சி மற்றும் வருமானத்திற்கேற்ப இறக்குமதிகள் மிகவும் மாறிக் கொள்கின்றன.

உதாரணமாக, 1929 முதல் 1932 வரையிலான காலப்பகுதியில் அமெரிக்காவின் நாட்டு வருமானம் 52 சதவிகிதம் குறைந்த போது, வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் பணிகள் முதலியவற்றின் அளவு 68 சதவிகிதம் குறைந்தது. அவ்வாறே 1948 ஆம் வருடத்தின் பிற்பகுதியிலிருந்து 1949 ஆம் வருடத்தின் முற்பகுதி வரையிலான காலப்பகுதியில் அமெரிக்க நாட்டு வருமானம் 5 சதவிகிதம் குறைந்தபோது அந்நாட்டு இறக்குமதிகளின் அளவு 15 சதவிகிதம் குறைந்தது. இவ்வகையில் பார்த்தால் ''உலகமுழுவதும் வாணிபச் சுழலைப் பரப்பி வைப்பதில் அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு முதன்மையான இடத்தை வகிக்கிறது என்பது புலனாகிறது.'' (ஹான்சன்)

20. வாணிபச் சுழல்களும் முன் கணிப்பும்

(Business Cycles and Forecasting)

"உங்களில் முதியோர் கனவுகளைக் காண்பர், இளையோர் கனவுகளை நனவாக்குவர்."

— பழைய ஏற்பாடு.

கோள்களின் இயக்கத்தினையும், பெண்டுலத்தின் அசைவுகளையும் முன்கூட்டியே தெரிந்து கொள்ளுதல்போல வாணிபச் சுழல்களின் காலத்தையும் நேரத்தையும் முன்கூட்டியே தெரிந்து கொள்வதில் பல சிரமங்கள், சங்கடங்கள் உள்ளன. சுழல்களில் எப்போதும் ஒரேமாதிரியான போக்கோ, முறைமையோ, காலநீட்சியோ காணப்படுவதில்லை. கொள்ளை நோய்கள் வருவதும் போவதும் போல, குழந்தைகளின் உடல் வெப்பம் உயர்வதும் தாழ்வதும் போல, இல்வாணிபச்சுழல்கள்திடீர் திடீரென்று ஏற்பட்டுப் பொருளாதார வாழ்வின் பல்வேறு கூறுகளிலும் பரவி நிற்கின்றன.

முன் கணிப்பின் நன்மைகள்

வாணிப்ச் சுழல்களை முன்கூட்டியே தெரிந்துகொள்ளமுடியுமா? இயல்பாக நம்மனத்தில் எழுகின்ற வினா இது. ஏனென்றால் வாணிபச் சுழல்களை நம்மால் முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியுமென்றால், அதன் மூலமாகப் பல நன்மைகள் ஏற்பட முடியும். தமது முதலீடு மற்றும் உற்பத்தி பற்றிய முடிவுகளைத் தொழில் முயல்வோரும், வர்த்தகரும் எடுக்கின்றபோது எதிர்காலத்தில் வாணிபத்தின் போக்கு எப்படி அமைந்திருக்கும் என்று கணிக்க முயல்கின்றனர். அடுத்தாண்டு வாணிபத்தில் மந்தம் ஏற்படக் கூடும் என்று அறிவார்களேயானால், இருப்பில் உள்ள பொருள்களின் அளவை அவர்கள் உடனே குறைத்துக்கொள்வர். இதற்கு மாறாக, விலைகள் மிகவும் உயரப்போகின்றன என்று அறிவார்களேயானால் பண்டங்களின் இருப்பை அதிகப்படுத்திக் கொள்வர்.

வர்த்தகர்களைப் போல யூக வாணிபர்களும் (Speculators) எதிர்கால வாணிப நிலைமைபற்றி அறிந்துகொள்வதில் ஆவலாயிருக்கின்றனர். எதிர்காலத்தைப்பற்றி நன்கு தெரிந்தால்தான் எதனை வாங்குவது, எதனை விற்பது, எதனை வைத்து இலாபம் அடைவது என்பதெல்லாம் இவர்களுக்குத் தெளிவாகப் புலப்படும்.

எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் அரசும் ஆர்வம் காட்டுகிறது. எதிர்காலப் பிரச்சினைகளைப் பற்றிய கவலைகள் அதனிடம் ஏராளமாயிருக்கின்றன. வேலைவாய்ப்பினைப் பெருக்குவதும், உற்பத்தியினை அதிகப்படுத்துவதும், வருமானத்தை உயர்த்துவதும் பெரும்பாலான அரசுகளின் பொறுப்பாக, தலையாய பணியாக இருந்து வருகிறது. எனவே, அதற்கேற்ற முறையில் பணத்துறைக் கைக்கோளை (Monetary Policy) யும் அரசிறைக் கைக்கோளை (Fiscal Policy)யும் திருத்தும் கடமை அரசுகளிடம் இருந்து வருகிறது. எதிர்காலத்தில் வாணிப நிலைமை எவ்வாறிருக்கும் என்பது தெரிந்தால்தான் பணத்துறை மற்றும் அரசிறைக் கைக்கோள்களில் எத்தைய மாறுதல்கள், எந்தெந்த நேரங்களில் செய்யப்பட வேண்டும் என்பது அரசுகளுக்குப் புரியும். அதற்கான நடவடிக்கைகளில் அவற்றால் ஈடுபடவும் முடியும். இதனால் பொதுமக்களுக்குப் பல நன்மைகள் கிட்டுகின்றன.

எனவே, வர்த்தகர்கள், ஆட்சியாளர்கள், குடிமக்கள் ஆகிய எல்லோரும் எதிர்காலத்தில் வாணிபத்தின் போக்கு இவ்வாறிருக்கும் என்பதை அறிந்துகொள்வதில் சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர். எதிர்கால வாணிபத்தை முன் மதிப்பீடு செய்வதில ஈடுபாடு காட்டுகின்றனர். எதிர்கால வாணிப ஏற்ற இறக்கங்களைப் பற்றிய தகவல்களை இம்முன் மதிப்பீடு மூலம்தான் நம்மால பெற முடியும். முன் மதிப்பீடு என்றால் முன் கணிப்பு என்று பொருள். முன் கணிப்பு செய்வதற்கான முறைகள் யாவை, இம் முறைகளை எந்த அளவிற்கு நம்மால் நம்பவோ அல்லது பயன்படுத்தவோ முடியும் என்பதைப் பற்றிய விளக்கம் இனித் தொடர்கிறது.

முன் கணிப்பு முறைகள்

பேராசிரியர் லாய்டு ஜி. ரெனால்ட்ஸ் (Loyd G. Reynolds), முன்கணிப்பு முறைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார். அவை யாவன : நிலவர மானியால் முன்கணிப்பு செய்தல் (Barometric Forecasting), பகுத்தாய்வு முன்கணிப்பு (Analytical Forecasting), எக்னமெட்ரிக் முன்கணிப்பு (Econometnic Forecasting),. இவைகளைப்பற்றிய விளக்கம் இனித் தொடர்கிறது.

நிலவர மானியால் முன்கணிப்பு செய்தல்
(Barometric Forecasting)

அமெரிக்கநாட்டுத் தேசீயப் பொருளாதார ஆய்வுக்கழகத்தைச் National (Bureau of Economic Research) சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், நிலவர மானியால் முன்கணிப்பு செய்துள்ளனர். கடந்த காலத்தில், பல ஆண்டுகளின் ஓட்டத்தில் பொருளாதார மாறிகளின் (Variables) போக்கு எவ்வாறு இருந்து வந்திருக்கிறது என்பதை இவ்வாராய்ச்சியாளர்கள் ஆய்வுசெய்திருக்கின்றனர். ஒவ்வொரு நிகழ்ச்சி இனங்களின் (Series) மேல்மட்டத் திருப்பு முனைகளையும் (Upper Turning Points), கீழ்மட்டத் திருப்பு முனைகளையும் Lower Turning Points) பற்றித்தெரிந்து கொள்வதற்கு இவர்கள் விசேஷ கவனம் செலுத்தியுள்ளனர். ஏனென்றால். இவைதான் பொருளாதார ஏற்ற இறக்கங்களின் கால இலாபத்தை, அதாவது மாறுதலின் முறைமையைத் தெரிவிக்கின்றன. தனது ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு பொதுப் பொருளாதார நடவடிக்கையின் மேல்மட்டத் திருப்பம், கீழ்மட்டத் திருப்பம் ஆகியவற்றின் சரியான ஆண்டையும், மாதத்தையும் இவ்வாய்வுக்கழகம் சுட்டிக்காட்டுகிறது.

தனிப்பட்ட இனங்களின் திருப்புமுனைகளைப் பொது வாணிபத்தின் திருப்பு முனைகளோடு பொருத்திப் பார்த்தால், பொது வாணிபத்திற்கு முன்னதாக இவை பின்நோக்கிச் செயல்படுகின்றனவா அல்லது ஒரே நேரத்திலா அல்லது பின்னதாகவா என்பது நமக்குத் தெரியவரும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வினங்கள் மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன :

(1) முந்து நிலை இனங்கள் (Leading Series) : இவை பொது வாணிபத்திற்கு முன்னதாகவே மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் திரும்புகின்றன. வாணிப முறிவுகள், பங்குகளின் விலைகள், உறுதிப்பண்டங்களுக்கான புதிய கோரிக்கைகள், கட்டட ஒப்பந்தங்கள் முதலியவை இவ்வினங்களில் இடம் பெறுகின்றன.

(2) ஒருங்கு நிகழ்கின்ற இனங்கள் (Coincidant Series) : இவை பொது வாணிபத்தோடு சேர்ந்து ஒரே நேரத்தில் மேல் நோக்கியும், கீழ்நோக்கியும் திரும்புகின்றன. வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பின்மை, தொழில் உற்பத்தி, நாட்டின் மொத்த ஆக்கம் (GNP), கம்பெனி இலாபங்கள், பண்டங்களின் மொத்த விற்பனை விலைகள் முதலியவை இவ்வினங்களில் முக்கியமானவை.

இவ்வினங்களுக்கு ஆய்வுக்கழகம் மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகிறது. காரணம், இவற்றின் உதவி கொண்டுதான் இக்கழகம் பொது வாணிபத்தின் திருப்பு முனைகளை அடையாளம் கண்டுகொள்ள முயல்கிறது.

1957-க்கு முன்பு சில முந்துநிலை இனங்களின் சராசரி நேரமும், 1960-61 மந்தத்தின்போது அவற்றின் நேரமும்.

தொடர்கள்	எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் ஆண்டு	மீடியன் முந்து நிலை (—) அல்லது பின் தங்கு நிலை (+) (மாதங்கள்)		முந்து நிலை அல்லது பின் தங்கு நிலை 1960—61	
		உச்ச நிலை Peak	பள்ள நிலை (Trough)	உச்ச நிலை	பள்ள நிலை
1. வாணிப முறிவுகளின் பொறுப்புகள் (Liabilities)	1875	—6.5	—7	—12	—8
2. தொழில் சரக்கு விலைகள்.	1871	—3.5	—6	—10	—4
3. உறுதிப் பண்டங்களுக்கான கோரிக்கைகள்.	1920	—5.5	—2	—11	—1
4. குடியிருப்புக் கட்டட ஒப்பந்தங்கள்.	1915	— 14	—6	—17	—2
5. வாணிப மற்றும் தொழில் கட்டட ஒப்பந்தங்கள்.	1919	— 8	—2	சுருக்கம் இல்லை	
பொறி செய் தொழில்களின் சராசரி வேலை வாரம் (Average work week).	1920	—6.5	—4	—12	—2

(3) பின்தங்கு இனங்கள் (Lagging Series): பொது வாணிபத்தின் மாறுதல்களுக்குப் பின்னதாக இவை மாறுதலடைகின்றன. இவ்வினங்களில், சில்லறை விற்பனைகள், நுகர்வோர் தவணை முறைக் கடன், சொந்த வருமானம், வாணிபக் கடன்கள் மீதான பாங்கு வீதங்கள் முதலியவை குறிப்பிடத் தகுந்தவை.

இவ்வினங்களை அடிப்படையாகக் கொண்டு வாணிபத்தைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்வது அல்லது கணிப்பது எங்ஙனம்? வாணிப ஏற்ற இறக்கங்களைப்பற்றி முன்கூட்டியே அறிந்து கொள்வதற்குப் பின் தங்கு இனங்களையும், ஒருங்கு நிகழ்கிற இனங்களையும் விட முந்துநிலை இனங்களே மிகவும் உபயோகமானவையாயிருக்கின்றன. முந்து நிலை இனங்களில் ஐந்து அல்லது ஆறு மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ திரும்புவதாயிருப்பின், ஒரு திருப்பு முனை விரைவில் ஏற்படப் போகிறது என்று பொருள். அமெரிக்க நாட்டு வாணிபத் தகவல்களைப் பின்னணியாகக் கொண்ட முன்வரும் பட்டியலைக் காண்க:

முந்துநிலை இனங்களின் கடந்த காலப் போக்குகள் மேற்காணும் பட்டியலில் காட்டப்பட்டுள்ளன. மேல் மட்டத் திருப்பங்கள், கீழ்மட்டத் திருப்பங்கள் ஆகியவற்றின்போது ஒவ்வொரு இனமும் சராசரியாக எத்தனை மாதங்கள் மொத்த வாணிபத்தைவிட முந்தியதாக இருக்கின்றது என்பதை முதல் இரண்டு பத்திகளில் உள்ள எண்கள் தெரிவிக்கின்றன. ஒரு சுழலுக்கும் மற்றொரு சுழலுக்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாடுகளை இச் சராசரிகள் மறைத்து விடுகின்றன என்பதை நாம் இங்கே நினைவு கூர்தல் வேண்டும். அதோடுகூட, ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகை இனங்களை மட்டுமே பூரணமாக நம்பியிருப்பது அவ்வளவு நல்லதல்ல. பல நேரங்களில் தவறான தகவல்கள்தான் கிடைக்கின்றன. வாணிபத்தில் ஒரு குறிப்பிட்ட மாறுதல் தோன்றப் போகிறது என்பதற்கான அடையாளத்தைச் சில நேரங்களில் ஒரு வகை இனங்கள் மிகவும் முன் கூட்டியே தெரிவித்து விடுகின்றன. வேறு சில நேரங்களில் இத்தகைய அடையாளம் இறுதியில்தான் தெரிகிறது.

இனங்கள் முந்துநிலை இனங்களாயிருப்பதற்கு இரு காரணங்கள் உண்டு:

(1) உற்பத்தி நடவடிக்கையின் ஒரு மாறுதலை முன் குறித்துக் காட்டும் ஒன்றினை அவை அளவிட்டுக் காட்டுவதாயிருக்கலாம். உதாரணமாக, கட்டட ஒப்பந்தங்கள் அதிகரித்தால் சில மாதங்களுக்குப் பின்னர்க் கட்டுமானத் தொழில் பெருகப் போகிறது

என்று பொருள். உறுதிப் பண்டங்களுக்கான கோரிக்கைகள் மிகுதியடைந்தால் உலோகம் மற்றும் எந்திரத் தொழில்களின் உற்பத்தி அதிகரிக்கப் போகிறது என்று அர்த்தம். புதிய நிறுவனங்கள் நிறையப் பதிவு செய்யப்பெற்றால் எந்திரங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் மீது நிறையச் செலவுகள் செய்யப் படும் என்று பொருள்.

(2 அடுத்து வாணிபத்தில் என்ன நிகழப்போகிறது என்று அனுபவமிக்கவர்கள் கருதுகின்றனர் என்பதை அவை பிரதிபலிப் பனவாயிருக்கலாம். வாணிபத்தின் இறங்குமுகப்போக்கு முடிவு றப்போகிறது என்று முதலீட்டாளர்கள் நம்புவார்களேயானால், உடனே பத்திரங்களை வாங்க அவர்கள் முயல்வர். அப்போது ஒரு மேல்நோக்கித் திருப்பம் பங்கு அங்காடியில் உதயமாகிறது. கச்சாப் பொருள்களின் விலைகளைப் பொறுத்தும் இது உண்மை யாயிருக்கிறது.

நிலவரமானிய முன்கணிப்பு முறையின் குறைபாடுகள்

நிலவரமானிய முன்கணிப்பு முறை, பொருளாதாரத் தருக்க முறையினை (Economic Logic) அடிப்படையாகக் கொண்டிருக் கிறது. இம்முறையினை ஆண்டு பொருளாதாரக் கணிப்புகளை ஓரளவிற்குச் செய்ய முடியுமென்றாலும், இதில் சில முக்கிய குறை பாடுகளும் இருக்கின்றன. அவை வருமாறு :

(அ) தனிப்பட்ட இனங்களின் போக்கில் மாறுபடுந்தன்மை அடிக்கடி காணப்படுகிறது. பெரும்பாலான நேரங்களில் 'நன்கு செயல்படுவதாயுள்ள' ஒரு இனம், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அல்லது நேரத்தில் நம்மை முற்றிலும் ஏமாற்றும் வகையில் செயல் படுகிறது. அதாவது அது மிகவும் முன்னதாகவோ அல்லது மிகவும் பின்னதாகவோ மாறிக்கொள்கிறது.

(ஆ) மாதந்தோறும் சின்னஞ்சிறு ஏற்ற இறக்கங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதாகப் பெரும்பாலான பொருளாதார இனங்கள் நமக்குக் காட்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் ஒரு குறியீட்டெண் குறைந்தால், ஒரு மெய்யான திருப்புமுனை பொருளாதாரத்தில் ஏற்படப்போகிறது என்று நாம் உடனே முடிவு கட்டிவிடமுடியாது. ஏனென்றால், அடுத்த மாதமே இதற்கு முற்றிலும் நேர்மாறான மாறுதல் அக்குறியீட்டில் உண்டாகலாம். இரண்டு மூன்று மாதங்களைத் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்டு பார்த்தால்தான், உண்மையாக நிகழப்போகும் மாறுதலைப்பற்றி நம்மால் திறம்படக் கணிக்கமுடியும். ஆகவே, ஏதாவது ஒரு

மாதத்தின் குறியீட்டை மட்டுமே நம்பிச் செயல்படுவது பாதுகாப்பான செயலாக இருக்கமுடியாது. அதேபோது இரண்டு மூன்று மாதங்கள் பொறுத்திருந்து கணிப்பது என்பதும் முன்கணிப்பாளர்களுக்குச் சாத்திய மன்று.

(இ) பெரும்பாலான இனங்களைப் பற்றிய தகவல்கள் நமக்கு உடனுக்குடன் கிடைப்பதில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் இவை நமக்குக் கிடைக்கின்றன ஒரு சில தொழில் நிறுவனங்களால்தான் இவற்றை மிகவும் குறுகிய காலத்தில் சேகரிக்க முடிகிறது. இனங்களை உடனுக்குடன் திரட்ட முடியவில்லையென்றால், சரியான கணிப்புகளைச் செய்ய முடியாது.

(ஈ) திருப்புமுனைகளைப் பற்றித்தான் நிலவரமானிய முறையால் முன்கூட்டியே அறிவிக்கமுடியும். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் ஒரு இறங்கு முகப்போக்கினைப் பற்றி அது தெளிவாகத் தெரிவிக்க முடியும் என்பது உண்மையே. ஆனால், அந்த இறங்கு முகத்தின் தீவிரத்தையும், கால நீட்சியையும் பற்றி அதனால் எதுவும் கூற முடிவடிதில்லை. அவ்வாறே இனி வரக்கூடிய ஏறு முகத்தைப்பற்றித்தான் இம்முறை தெரிவிக்க முடியுமே தவிர, அந்த ஏறுமுகத்தின் தீவிரதவதையும், கால நீட்சியையும் பற்றி அன்று.

பகுத்தாய்வு முன்கணிப்பு
(Analytical Forecasting)

பகுத்தாய்வு முன்கணிப்புமுறை, வருமான நிர்ணயக் கோட்பாட்டைச் (Theory of Income Determination) சார்ந்திருக்கிறது. இம்முறையினை நாம் பயன்படுத்தும்போது மொத்தத் தேவையின் பல்வேறு கூறுகளையும், அவைகளுக்கிடையே இருக்கும் தொடர்புகளையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்கிறோம். முதலில் தேவையின உட்கூறுகளை மதிப்பீடு செய்கிறோம். பின்னர், நமது முடிவுகளை மறுபரிசோதனைக் குட்படுத்தி, அவற்றைச் சரிபார்த்துக் கொள்கிறோம். நாட்டின் மொத்த ஆக்கம், அதன் முக்கியக் கூறுகள் ஆகியவை இனி வரப்போகும் காலாண்டில் அல்லது ஓராண்டில் எவ்வாறிருக்கப்போகின்றன என்பதற்கான தகவல்கள் தற்போது நம்மிடம் உள்ளன.

பகுத்தாய்வு முறையைப்பற்றி மிகவும் எளிதாக விளக்கி விட்டோம். ஆனால், நடைமுறையில் அதனைப் பயன்படுத்தும் போது பல சங்கடங்கள் முளைக்கின்றன. ஒரு மிகப்பெரும் பிரச்

சினை, நாட்டின் மொத்த ஆக்கத்தின் ஒவ்வொரு கூறும், பிற கூறு களைச் சார்ந்திருக்கிறது என்பதாகும். அடுத்த காலாண்டின் வாணிப முதலீடு, நுகர்வோர் செலவீட்டைச் சார்ந்திருக்கிறது. நுகர்வோர் செலவீடு வருமானத்தைச் சார்ந்திருக்கிறது. வரு மானமோ ஓரளவிற்கு வாணிப முதலீட்டைச் சார்ந்திருக்கிறது. இப்படியாக, நாட்டின் மொத்த ஆக்கத்தின் கூறுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துகிடக்கின்றன. எனவே, மற் றெல்லாக் கூறுகளையும் பற்றி நன்கு தெரித்திருந்தால்தான் நம் மால் ஒரு கூறினை மதிப்பிட்டறிய முடியும்.

இச் சிக்கலிலிருந்து விடுபடவேண்டுமென்றால் இரு வழிகள் இருக்கின்றன. ஒன்று பின்தங்குச் சார்பு (Lagged Relationships) பயன்படுத்தும் முறையாகும். அடுத்த காலாண்டின் நுகர்வோர் செலவீடு, நடப்புக் காலாண்டின் செலவுக்குரிய நிகர வருமானத் தைச் (Disposable Income) சார்ந்திருந்தால், இதனை நம்மால் மதிப்பிட்டறிய முடியும். அவ்வாறே அடுத்த காலாண்டின் வாணிப முதலீடு, கடந்த நான்கு காலாண்டுகளின் வாணிப இலாபங்களைச் சார்ந்திருப்பதாயிருந்தால், அதனை நம்மால் மதிப் பிட்டறிய முடியும்.

மற்றொரு வழி, நாட்டின் மொத்த ஆக்கத்தின் கூறுகள் ஒன்றொடொன்று தொடர்புள்ளவையாயிருக்கவில்லை என்று கணிப்பின் துவக்கக் கட்டத்தில் எடுத்துக்கொள்வதாகும். தொடர்பற்றிருப்பன என்று எடுத்துக்கொள்ளப்படக் கூடியவை, அரசுச் செலவு, தொழில் முதலீடு, ஏற்றுமதிகள் முதலியவை. முதலில் இவற்றை மதிப்பீடு செய்கிறோம். அடுத்து நுகர்வோர் வருமானத்தையும் செலவீட்டையும் அளவிட்டறிகிறோம். இறுதி யில் நமது முடிவுகளைச் சரிபார்த்துக் கொள்கிறோம்.

முதலாவதாக, அரசுச் செலவினை எடுத்துக கொள்வோம். பண்டங்களையும் பணிகளையும் அரசு வாங்கி வருவதைப்பற்றி நாம் அறிவோம். ஒவ்வோர் ஆண்டின் ஜனவரி மாதமும் நாட்டுக் குடியரசுத் தலைவர் நிதி ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கிறார். உத் தேச வரவு செலவுத் திட்டம்பற்றிய முடிவுகளைப் பாராளுமன்றம் கோடையில் தீர்மானிக்கிறது. தீர்மானிக்கப்பட்டுவிட்டால், இனி வரப்போகும் நான்கு காலாண்டுகளில் அரசு செய்யப்போகின்ற செலவுகளைப்பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைத்துவிடுகின்றன. மாநில அரசுகளின் அடுத்தாண்டு செலவீடுகளைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், அவற்றின் கடந்தகாலச் செலவீடு களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக, தொழில் முதலீட்டை எடுத்துக்கொள்வோம். தொழில் முதலீட்டில் முக்கியமாயிருப்பது எந்திரங்கள் தளவாடங்கள் மீதான வாணிபச் செலவீடுகள். தொழிற்சாலைக் கட்டுமானம், வர்த்தக நிலையக்கட்டுமானம், எந்திர வாங்கற்பாடுகள் முதலியவை இவற்றில் இடம் பெறுகின்றன எதிர்கால முதலீட்டுத் திட்டங்களுக்கான குறியீடுகளாக இவை இருக்கின்றன. அமெரிக்காவில், ஒவ்வோராண்டின் துவக்கத்தின் போதும் வாணிபத் துறையினரும் (Department of Commerce), பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனைக் கமிஷனும் அநேக வர்த்தக நிறுவனங்களுக்கு ஒரு வினாப்பட்டியலை (Questionnaire) அனுப்பி வைக்கின்றன. அவ்வாண்டில் எந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது இந்நிறுவனங்கள் எவ்வளவு செலவிடப்போகின்றன என்ற தகவல்களை இவை இவ்வினாப்பட்டியலில் தரவேண்டும். தகவல்களின் தொகுப்பு 'நடப்பு வாணிப ஆய்வு' (Survey of Current Business) என்ற பத்திரிகையின் மார்ச் மாத இதழில் வெளியாகிறது. உண்மையில் இந்நிறுவனங்களால் செலவிடப்படும் தொகையும், இப்பத்திரிகை தெரிவிக்கின்ற தொகையும் பல நேரங்களில் சற்றேறக்குறைய ஒன்றாகவே இருக்கின்றன. அப்படியே வேறுபாடுகள் இருந்தாலும் கூட அவை மூன்று சதவிகிதத்திற்குக் குறைவாகவே இருக்கின்றன.

குடியிருப்புக் கட்டுமானத்தின் போக்கில் பலவித மாறுதல்கள் ஏற்படுகின்றன. நுகர்வோர் வருமானம், நுகர்வோர் விருப்பங்கள் பற்றிய விசாரணைகள் முதலியவற்றின் அடிப்படையில் குடியிருப்புக் கட்டுமானத்தின் எதிர்காலப்போக்கினை முன்கூட்டியே கணிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதிய வெற்றியினை நல்கவில்லை. அவ்வாறெனில், குடியிருப்புக் கட்டுமானத்தின் மீதான முதலீட்டைப்பற்றி எப்படித்தான் தெரிந்து கொள்வது? கட்டுமான ஒப்பந்தங்களைக் குறியீடுகளாகக் கொண்டால் குடியிருப்புக் கட்டுமானம் மீதான எதிர்கால முதலீட்டைப்பற்றி நம்மால் ஓரளவிற்குக் கணிக்க முடியும். அதோடுகூட, புதிய வீடுகளின் அளிப்பையும், புதிய வீடுகளுக்கான தேவையையும் நிர்ணயிக்கின்ற காரணிகளையும் நாம் நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். உதாரணமாக, திருமண வீதங்கள் (Marriage rates), குடிப்பெயர்வு வீதங்கள், பழைய வீடுகளின் விலைகள் முதலியவற்றை நாம் ஆய்விற்குட்படுத்த வேண்டும்.

தொடர்பற்றிருப்பன என்று எடுத்துக் கொள்ளப்படக்கூடியவற்றில் மூன்றாவதாக ஏற்றுமதிகளைக் குறிப்பிடலாம். நாட்டின் எதிர்கால ஏற்றுமதி இறக்குமதிகளைச் சற்று முன்கூட்டியே தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரண

மாக, அமெரிக்க அரசின் வாணிபத்துறை, அந்நாட்டு எதிர்கால ஏற்றுமதிகள் இறக்குமதிகள் ஆகியவை பற்றிய முன்கணிப்புகளைத் தயாரித்து வருகிறது. இவை அடிக்கடி 'நடப்பு வாணிப ஆய்வு'ப் பத்திரிகையில் வெளியாகி வருகின்றன. எதிர்கால ஏற்றுமதிகள் இறக்குமதிகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பன்னாட்டுப் பண நிதி (International Monetary Fund) அமைப்பும், தம்மாலியன்ற உதவிகளை வழங்கி வருகின்றது. என்றாலும், ஏற்றுமதிகளைப் பற்றி முன்கூட்டியே கணிப்பதில் சிரமங்களும் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

பகுத்தாய்வு முறையில் நாம் கணிக்க முயல்கின்றபோது, அரசுச் செலவு, தொழில் முதலீடு, ஏற்றுமதிகள் முதலியவற்றை ஒவ்வொவன்றாக மதிப்பீடு செய்த பிறகு இவற்றை ஒன்றாகக் கூட்டுகிறோம். இம்மொத்தத் தொகை ரூ. 200 கோடி என்று வைத்துக் கொள்ளுங்கள். இனி அடுத்துச் செய்யவேண்டியது, நாட்டின் மொத்த ஆக்கத்தோடு (GNP) இதனைச் சேர்த்துக் கூட்டுவதாகும். நாட்டின் மொத்த ஆக்கத்தில் நுகர்வோர் செலவீடுகளும் இடம் பெற்றிருக்கும். நுகர்ச்சி, செலவிட உள்ள நிகர வருமானத்தோடு — அதாவது செலவுக்குரிய நிகர வருமானத்தோடு (Disposable Income) தொடர்புடையது. வருமானத்தில் சற்றேறக் குறைய 92 சதவீதம் செலவிடப்பட்டு, மீதி சேமிக்கப்படலாம். செலவுக்குரிய நிகர வருமானம் நாட்டின் மொத்த ஆக்கத்தைவிட மிகச்சிறியது. வரிகள் மூலமாக அரசு ஒரு பெரும் பகுதியை எடுத்துக்கொள்கிறது. இப்பகுதியின் ஒரு கூறு ஒரு சாராரிடமிருந்து மறு சாராருக்கு அரசாங்க மூலம் கைமாறும் தொகைகள் (Transfer Payment) ஆகும். இவற்றை மாற்றுச் செலுத்தல்கள் என்றும் குறிக்கலாம். இவை திரும்பவும் மக்களுக்கு வந்து சேருகிறது. மற்றொரு பெரிய பகுதி தொழில் துறை சேமிப்புகள் (Business Savings). எனவே, உத்தேச வரிவருவாய், கைமாறும் தொகைகள், கம்பெனி இலாபங்கள், தொழில்துறை சேமிப்புகள் ஆகியவற்றையும் நாம் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தபிறகு, செலவிட உள்ள நிகர வருமானம் நாட்டு மொத்த ஆக்கத்தில் 70 சதவீதமாக இருக்கிறது என்று நாம் முடிவு செய்வதாக வைத்துக்கொண்டால், பின்வரும் வாய்பாட்டைக் கொண்டு பல்வேறு கூறுகளை நிர்ணயிக்க முடியும்.

நாட்டின் மொத்த ஆக்கம் = நுகர்ச்சி + முதலீடு + அரசுச் செலவீடு + (ஏற்றுமதிகள் — இறக்குமதிகள்)

$$y = C + I + G + (E - M)$$

கடந்தகால நடப்புகளை அடிப்படையாகக்கொண்டு இம்மதிப்பீட்டை நாம் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். சென்ற காலத்தில் இருந்துவந்த நுகர்ச்சிச் செலவினை, நமது உத்தேச மதிப்பீட்டோடு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். அப்போதுதான் நமது கணிப்பின் தகுதியை நம்மால் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியும்.

உறுதிப் பண்டங்கள், உறுதியற்ற பண்டங்களை மீதான நுகர்ச்சிச் செலவுகளைப் பற்றிப் பொதுவாகத் தனித்தனி மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஏனென்றால், உறுதிப் பண்டங்கள் மீதான செலவீடு உறுதியற்ற பண்டங்கள் மீதான செலவீட்டை விட அடிக்கடி மாறுகிறது. உறுதிப்பண்டங்களில் கூட, கார்கள் மீதான செலவீடு ஓயாது மாறிக்கொண்டேயிருக்கிறது. எதிர்காலத் துய்ப்பு பற்றிய நுகர்வோர் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் தகவல்களைச் சேகரித்தால், அவர்களின் உத்தேசச் செலவுகளைப்பற்றிய மதிப்பீடுகளை நம்மால் நிறுவ முடியும்.

'பணம் எங்கிருந்து வருகிறது' என்பதை அடிப்படையாகக் கொண்டும் நமது மதிப்பீடுகளைச் சரிபார்த்துக்கொள்ளமுடியும். உதாரணமாக, எதிர்காலத்தில் தொழில் முதலீடு ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்கும் என்று நாம் எதிர்பார்த்தால், அதனை, தேய்மான ஒதுக்கீடு, சம்பாத்திய மீதங்கள், ரொக்க இருப்பில் செய்யப்படும் குறைப்புகள் முதலியவை மூலமாகக் கிடைக்கும் நிதிகளின் அளவோடு பொருத்திப்பார்க்க வேண்டும். எதிர்பார்க்கும் முதலீட்டளவிற்கு இது குறைவாயிருப்பின், தொழில் நிறுவனங்கள் பாங்குகளிடமிருந்து, கடன் வாங்குவதன் மூலமும், பொதுமக்களுக்குப் பத்திரங்களை விற்பதன் மூலமும் நிதிகளைத்திரட்டப் போகின்றன என்று பொருள். இவை அவ்வாறு பாங்குகளிடமிருந்து, கடன்களை வாங்கப் போகின்றன என்பதற்கான அறிகுறிகள் நமக்குத் தெரிந்தால், வட்டிவீதங்கள் உயர்ந்தால், முதலீட்டுத்திட்டங்கள் குறைக்கப்படும் என்று நினைத்துக்கொள்ளவேண்டும்.

அரசின் உத்தேச வருவாய்களையும், செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் நன்மை பயக்கும். பெரும் பற்றுக்குறை யிருக்கப் போவதாகப் பூர்வாங்க மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுவதாயிருந்தால், நாம் பல விஷயங்களைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். பற்றுக்குறையைக் குறைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போதிய பலனைத்தராதுபோய், பற்றுக்குறை உண்மையிலேயே பேரளவில் இருந்துவிட்டால், பத்திரங்களை விற்று அரசு பற்றுக் குறையைச் சந்திப்பதற்கு முயலும். இதனால், வட்டிவீதங்கள்,

பாங்குகளின் இருப்புகள், கடன் வழங்குவதற்குப் பாங்குகளிடம் உள்ள நிதிகள் முதலியவற்றில் மாறுதல்கள் உண்டாகும். எனவே இவைகளை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்படியெல்லாம் சரிபார்த்தபிறகு, நமது பூர்வாங்க மதிப்பீடு களில் குறைகள் ஏதும் இருப்பதாக நமக்குத் தெரியவருமானுல், மீண்டும் துவக்கத்திலிருந்து இவற்றை உற்றுநோக்கி உரிய திருத் தங்களைச் செய்யவேண்டும்.

எக்கனுமெட்ரிக் முன்கணிப்பு
(Econometric Forecasting)

இது பகுத்தாய்வு முன்கணிப்பு முறையும், புள்ளி இயல் நுணுக் கத் (Statistical techniques) திறமும் சேர்ந்த ஒரு முன்கணிப்பு முறையாகும். நுகர்ச்சி மற்றும் தனியார் ஆக்கத்தின் முக்கிய பகுதிகள் உட்கூறுகளின் மீது இது தனது கவனத்தைச் செலுத்து கிறது. இப்பகுதிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே மதிப்பிட் டறிந்து, பிறகு அதன் மூலமாக நாட்டின் மொத்த ஆக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு இம்முறை முயல்கிறது. பொருளாதாரத் தின் குறுங்கால மாறுதல்களைக் கணிப்பது என்பதே இம்முறையின் நோக்கம். ஆகையால் காலாண்டுக்குரிய புள்ளி விவரங்களைத் தான் இது பயன்படுத்திக்கொள்கிறது. அதோடு கூட, அடுத்த இரண்டு, மூன்று அல்லது நான்கு காலாண்டுகளுக்குரிய பொருளா தார நிலைமைகளை மட்டுமே இது கணிக்க முற்படுகிறது.

இம்முறையின் ஒரு முக்கிய குறைபாடு, எதிர்காலம் இறந்த காலத்தைப் போலமையும் என்று எடுத்துக்கொள்வது. இதன் மற்ருெரு குறைபாடு, நெடுங்கால மாறுதல்களைக் கணிப்பதற்கு இதனுல் உதவமுடியாது என்பது. இறுதியாக, திருப்புமுனைகளை (Turning Points) விட, ஏறுமுகம், இறங்குமுகம் ஆகியவற்றைத் தான் இம்முறை நன்கு கணிக்கிறது. ஆனுல், நடைமுறையில் திருப்பு முனைகள்தான் முக்கியமானவையாயிருக்கின்றன.

எதிர்கால வாணிப ஏற்ற இறக்கங்களைப்பற்றி முன்கூட்டியே தெரிந்துகொள்வதற்குதவும் முன்கணிப்பு முறைகளைப்பற்றி இது வரை பார்த்தோம். முன்கணிப்பு என்பது ஒரு செயற்கலையாகத் தான் வளர்ந்திருக்கிறதே தவிர, உறுதியான அறிவியலாக அன்று. இறந்தகால அனுபவத்தை வைத்து எதிர்கால மாறுதல்களைக் கணிப்பது என்பது ஓர் அசாதாரண செயல். எனவே, இதில்

தவறுகள் சில நேரங்களில் தலைகாட்டுவது தவிர்க்கமுடியாத ஒன்று. கால ஓட்டத்தில் கணிப்பு முறைகளில் நல்ல முன்னேற்றங்கள் நிகழக்கூடும். பல நாடுகளில் எண்ணற்ற தொழில் மற்றும் முதலீட்டுப்பணி நிறுவனங்கள் ஆய்வுக்கழகங்களை நிறுவி, அறிவியல் ரீதியில் எதிர்காலப் பொருளாதார மாறுதல்களைக் கணிப்பதற்கு முயன்று வருகின்றன. இவற்றின் முயற்சிகள் வெற்றி பெற்றால், முன்கணிப்பு முறைகளில் சிறந்த முன்னேற்றங்கள் விளையக்கூடும்.

மூன்றும் பாகம்

நிலைபேறுக்கம் (Stabilisation)

முன்னுரை

பொருளாதார உறுதிநிலைப்பாட்டிற்கு வழி வகுப்பதன் மூலம் வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று பல பொருளாதார அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். நிலைபேறுக்கம் என்பது எளிதான செயலன்று. அதில் பல பிரச்சினைகள் எழுகின்றன. கவனத்தோடும் பொறுப்புணர்ச்சியோடும் நிலை பேறுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. நிலைபேறுக்கத்தை மூன்று முக்கிய வழிகளில் அடைய முயலலாம். அவையாவன :

(1) **பணம் மற்றும் பாங்குத்துறைக் கட்டுப்பாடுகள் :** பண அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியையும் விலைமட்டத்தையும் நிலைப்பாடடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் இதில் இடம் பெறுகின்றன. பணக்கணியத்தின் (Quantity of Money) பெருக்கத்தாலும் சுருக்கத்தாலும்தான் வாணிபச்சுழல் உண்டாகிறது என்று கூறுவோர், நாம் முறையான பணத்துறைக் கைக்கோளைப் (Monetary Policy) பின்பற்றினால் செழிப்பும், மந்தமும் வாணிபத்தை மாறி மாறிப் பிடிப்பது அகலும் என்று கருதுகின்றனர். வேறு சில காரணிகளால் சுழல் ஏற்ற இறக்கங்கள் தீவிரமடைகின்றன என்று ஒப்புக்கொண்டு, சரியான பணத்துறைக் கைக்கோள் வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகின்றனர்.

(2) **அரசிறைக் கைக்கோள் (Fiscal Policy) :** அரசிறை நடவடிக்கைகள் சக்தி வாய்ந்த நிலைபேறுக்கக் கருவிகள். பொதுப்பணிகளும். இன்னபிற துறைகளும் பற்றிய செலவீடுகளில் உரிய மாறுதல்களைச் செய்வதன் மூலம், அரசு, தனியார் முதலீட்டிலோ அல்லது நுகர்ச்சியிலோ ஏற்படும் வேண்டத்தகாத மாறுதல்களின் விளைவுகளைக் களைய முடியும். தனி நபர்கள் மற்றும் கம்பெனிகளின் மீதான வரிகளைச் சீரமைப்பதன் மூலம், மக்களின் மொத்த வருமானங்களையும், நுகர்ச்சி முதலீடு ஆகியவற்றையும் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும்.

(3) **விலை மற்றும் கூலி சம்பந்தமான கைக்கோள் :** விலைகளிலும் கூலிகளிலும் நெகிழ்ச்சித்தன்மை இருத்தல் அவசியம். இவை சற்று நெகிழ்ந்துகொடுத்தால்தான் — மாற்றியமைக்கப்படக்கூடியனவாயிருந்தால்தான் — பணத்துறை, அரசிறைக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் வழியே நலம் பெறமுடியும்.

இம் மூன்றினைப்பற்றி இனி ஆராய்வோம்.

21. பணத்துறைக் கைக்கோள்

(Monetary Policy)

''நெருப்பு சக்கரம், மத்தியப்பாங்கு ஆகியவை மூன்று மிகச் சிறந்த கண்டுபிடிப்புகள்.''

— வில் ரோஜர்ஸ்.

பண அளிப்பில் ஏற்படும் மாறுதல்களின் முக்கியத்துவத்தை எல்லா வாணிபச் சுழல் கோட்பாடுகளும் அறிந்திருக்கின்றன. பண அளிப்பின் நெகிழ்ச்சி (Elasticity) யினுல்தான் வாணிபச்சுழல் உண்டாகிறது என்று சில கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. அதேநேரத்தில், பண அளிப்புப் பெருகினுல்தான் வாணிபத்தில் செழிப்புநிலே அரும்பிடமுடியும் என்பதையும் எல்லாக் கோட்பாடு களும் ஒப்புக்கொள்கின்றன. பாங்கு அமைப்பின் இசைவின்றித் தொழில் முயல்வோனுல் வாணிப அரங்கின் கதாநாயகனுகவே அல்லது வில்லனுகவோ இருக்க முடிவதில்லே. ஆகவே, வாணிப ஏற்ற இறக்கப் பிரச்சினேயைத் தீர்த்து வைப்பதற்குப் பாங்குத் துறைக் கைக்கோளால் முடியும் என்பது புலனுகிறது. பணக் கணியம் இயற்கையிலேயே நிலேயற்றதாயிருக்கவில்லே. பாங்குகள்தான் பணத்தின் கணியத்தை மாற்றுகின்றன. வர்த்தக நோக்கங்கள் காரணமாகப் பாங்குகள் பணக்கணியத்தைக் கூட்டு கின்றன, குறைக்கின்றன. எனவே, பாங்குகளின் இசைவின் பேரில்தான் பண அளிப்பில் மாறுதல்கள் தோன்றுகின்றன. உறுதியான பாங்குத்துறைக் கைக்கோள் இயற்றப்பட்டு, பின்பற் றப்படுமானுல், பண அளிப்பில் அமிதப் பெருக்கமோ (Excess Expansion), அளவுக்கு மீறிய சுருக்கமோ ஏற்படா. வாணிபத் திலும் மாறுதல்கள் நிகழா. அப்போது தொழிலமைப்பு நட வடிக்கைகளில் உறுதி நிலேப்பாடு தோன்றும்.

கடன் செலாவணிக் கட்டுப்பாடு

வாணிபச் சுழல்கள் தொழிலைவிட்டு அகலவேண்டுமெனில் தொழில் உறுதிநிலைப்பாடு இருக்கவேண்டியது அத்தியாவசியம். தொழில் நடவடிக்கைகள் நிலைபேறடைய வேண்டுமானுல், அதற்குரிய வகையில் பாங்குக்கடன் செலாவணி (Credit) யளவு கட்டுப்படுத்தப்படவேண்டும். மத்தியப் பாங்கமைப்பால் (Central Bank) கடன் செலாவணியளவைக் கட்டுப்படுத்த முடியும். அதற்கான அதிகாரங்கள் அதனிடம் இருக்கின்றன. வாணிபத்தில் கடன் செலாவணிக்குள்ள முக்கியத்துவம் எல்லோருக்கும் தெரிந்ததே. உறுப்புப் பாங்குகளின் இருப்புகளை-ஒதுக்கீடுகளை (Reserves)–மத்தியப் பாங்கு திருத்தியமைக்கின்றபோது, உறுபபுப் பாங்குகள் வழங்கிடும் கடன்களின் அளவும் மாறுதலடைகின்றது. கடன் செலாவணியளவைக் கட்டுப்படுத்துவதற்கு மத்தியப்பாங்கிடம் உள்ள ஒரு முக்கியக் கருவி ஒதுக்கீட்டைத் திருத்துவது. பணத்தின் அளிப்பை மத்தியப் பாங்கால் நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது; உறுப்புப் பாங்குகளின் நடவடிக்கைகளைத் திருத்துவதன் மூலமாகத்தான் மத்தியப் பாங்கினுல் கடன் செலாவணியளவைக் கட்டுப்படுத்த முடியும்.

பின்வரும் வழிகளில் ஒரு மத்தியப் பாங்கு தனது உறுப்புப் பாங்குகளின் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக் கடன் செலாவணியளவைக் கட்டுப்படுத்த முடியும்.

(1) கழிவு வீதத்தை (Rate of discount) மாற்றியமைத்துக் கடன் வாங்குச் செலவினை (Cost of borrowing) மாற்றியமைத்தல்.

(2) வெளி அங்காடி நடவடிக்கைகளில் (Open-market Operations) இறங்கி, பத்திரங்களை வாங்குதல், விற்றல்.

(3) உறுப்புப் பாங்குகளின் காப்பு நிதி வீதங்களை (Reserve Ratios) நேரடியாக மாற்றல்.

(4) பங்கங்காடிப் பத்திரங்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் தரப்படும் கடன்கள் மீதான இறுதிநிலைக்காப்புத் தேவைகளை (Margin Requirements) ஒழுங்குபடுத்தி, யூக வாணிபப் பெருக்கத்தைச் சரியான நேரத்தில் ஒடுக்குதல்.

(5) நுகர்வோர்களுக்குத் தரப்படும் கடன் (Consumer's Credit) மீது, குறிப்பாகத் தவணை முறைக்கடன் மீது, கட்டுப்பாடுகளை விதித்தல்.

இவற்றில் முதல் மூன்றின் மூலம் செய்யப்படுவது கடன் கணிய கட்டுப்பாடு (Quantitative Credit Control) எனப்படும். கடைசி இரண்டின் மூலம் செய்யப்படுவது கடன் தன்மைக் கட்டுப்பாடு (Qualitative Credit Control) எனப்படும். இது தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு (Selective Credit Control) என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. கடன் தன்மைக்கட்டுப்பாடு சில நேரங்களில் அவசியமாயிருக்கிறது என்றாலும், சுழல் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான காரணியாயிருப்பது மொத்தக்கடன் கணியம் என்பதால் கடன் கணியக் கட்டுப்பாடே முக்கியமானது. கழிவு வீதம், வெளி அங்காடி நடவடிக்கைகள், காப்பு நிதி வீதத்திருத்தம் முதலியவை கடன் அளவைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளாகும். இவற்றை ஆண்டுதான் மத்தியப் பாங்குகள் பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தி வாணிப நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முயல்கின்றன.

கழிவு வீதம் (Discount rate)

உறுப்புப் பாங்குகளின் பத்திரங்களைக் கழிவு செய்வதற்கும், தகுதியுள்ள ஈடுகளின் (Securities) மீது முன்பணம் வழங்குவதற்கும் மத்தியப்பாங்கு ஒரு கட்டணத்தை வசூலிக்கிறது. அக்கட்டணம் பாங்கு வீதம் (Bank rate) அல்லது கழிவு வீதம் ஆகும். இவ் வீதம் உயர்த்தப்பட்டால், வாணிபப் பாங்குகள் அதனிடம் வாங்கும் கடன் அளவு குறைகிறது. இதனால், வாடிக்கைக்காரர்களுக்குத் தாம் தரும் கடன் அளவும் குறைகிறது. நடப்புக்கடன் அளவு குறைவதில்லை என்றாலும், கடன் அளவு மேலும் அதிகரிப்பது தடுக்கப்படுகிறது. பாங்கு வீதம் உயர்கின்றபோது பண அங்காடி வட்டி வீதமும் உயர்கிறது. இதனால் உண்மையாகவே இலாபகரமாக அமையக்கூடிய தொழில்கள் கூடத் தற்போது இலாபகரமற்றவையாய் மாறுகின்றன. அதோடு, வர்த்தகர்களின் எதிர்பார்க்கைகளில் (Expectations) மாறுதல் ஏற்பட்டு நன்னம்பிக்கை (Optimism) யுணர்வுகள் மறைந்துபோகின்றன. சமுதாயத்தின் மொத்த வாங்குந்திறன் (Purchasing power) குறைகிறது. பத்திரங்கள், பண்டங்கள் முதலியவற்றின் விலைகள் கூடிக்கொண்டே போகும் என்று எதிர்பார்த்த நிறுவனங்கள் தமது நல்ல உற்பத்தித் திட்டங்களைக் கூடச் சற்றுத்தள்ளிப் போடுகின்றன. கழிவு வீத மாறுதல்கள் மிதமாயிருந்தாலும் கூட, அது உரிய நேரத்தில் செய்யப்பட்டால், நிலைபேறுக்கம் ஏற்படுவதற்கு அதுவே போதுமானதாய்க் கூட இருக்கும். இது ஒரு சக்திவாய்ந்த ஆயுதம். எனவே, சாதுரியத்தோடும் கவனத்தோடும் இது ஆளப்பட வேண்டும்.

மத்தியப்பாங்கின் கழிவு வீதம் குறைக்கப்படும்போது, இதற்கு முற்றிலும் மாமுன விளைவுகள் நிகழ்கின்றன. வாணிபப் பாங்குகள் மத்தியப் பாங்கிடமிருந்து அதிக அளவில் கடன் வாங்குகின்றன. இதனுல், இவற்றின் ரொக்க இருப்பு அதிகரித்து வாடிக்கைக்காரர்களுக்குக் கூடுதலாகக் கடன்களை வழங்குகின்றன. அங்காடி வட்டிவீதம் குறைகிறது. மற்ற நேரங்களில் எடுத்துக் கொள்ள முடியாத தொழில் திட்டங்களைத் தற்போது எடுத்து முடிப்பது சாத்தியமாகிறது. ஆகவே, கடன் வாங்குவதன் அளவு மிகுதியாகிறது. சமுதாயத்தின் வாங்குந்திறன் உயர்கிறது. பத்திரங்கள், பண்டங்களின் விலைகள் கூடுகின்றன. வர்த்தகர்களின் இலாப எதிர்பார்க்கைகள் வளர்கின்றன. நன்னம்பிக்கை எங்கனும் பரவிநிற்கிறது. கடன்களை மேன்மேலும் பாங்குகளிடமிருந்து வாங்கவேண்டும் என்ற ஆர்வம் தொழில் முயல்வோர்களிடம் உண்டாகிறது.

இவ்வாருகச் செழிப்பு நிலையின்போது பாங்கு வீதம் உயர்த்தப்படுவதனுல் பாங்குச் செலாவணியளவு குறைந்து, வர்த்தக நடவடிக்கை சுருங்குகிறது. அவ்வாறே மந்தநிலையின்போது பாங்கு வீதம் குறைக்கப்பட்டால், பாங்குச் செலாவணியளவு அதிகரித்து, வர்த்தக நடவடிக்கை பெருகுகிறது.

ஆனுல், மத்தியப்பாங்கின் கழிவு வீத மாறுதலின் மூலம் எதிர்பார்த்த பலன் விளையவேண்டுமெனில், பாங்கு வீதம் உயர்கின்றபோதோ அல்லது தாழ்கின்றபோதோ அங்காடி வட்டி வீதமும் உயர்வதாகவோ அல்லது தாழ்வதாகவோ இருத்தல் வேண்டும். இது நடைமுறையில் நிகழாமலே போகலாம்.

உதாரணமாகச் செழிப்பின் துவக்க காலத்தில் வாணிபப் பாங்குகளிடம் நிறைய இருப்புகள் இருப்பதாக அமைந்திருந்தால், மத்தியப் பாங்கிடமிருந்து கடன் வாங்குவது அவசியமின்றியே அவை கடனைப் பெருக்கலாம். இந்நிலையில் கழிவு வீதம் உயர்த்தப்படுவதனுல், எதிர்பார்க்கும் பணக்கட்டுப்பாடு நிகழாது. மத்தியப் பாங்கிடமிருந்து கடன் வாங்குவதாயிருப்பினும் கூட, அங்காடி வட்டிவீதம் கழிவுவீதம் உயர்விற்கேற்ப உடனே உயர்வதில்லை, மிகவும் மெதுவாகவே உயர்கிறது. இதற்குக் காரணம்? கடன் செலாவணியைப் பெருக்குவதற்கு இவற்றிடம் மிகுதியாக உள்ள இருப்புகளேயாகும். இக்காரணங்களை முன்னிட்டுத்தான் மத்தியப் பாங்குக் கழிவு வீதங்களை மாற்றுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. கழிவுவீதக் கைக்கோளினை வெற்றிகரமாகவும், பயன் தரத்தக்க வகையிலும் செயற்படுத்தும் முறையில் மத்தியப்பாங்கு வெளி அங்காடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

வெளி அங்காடி நடவடிக்கைகள்
(Open Market Operations)

பண அங்காடியில் பத்திரங்களையும், உண்டியல்களையும் (Bills) மத்தியப்பாங்கு வாங்குவதையும், விற்பதையும் வெளி அங்காடி நடவடிக்கைகள் எனக் குறிப்பிடுகிறோம். மத்தியப் பாங்குகள் அங்காடியில் பத்திரங்களை வாங்கினால், வாணிபப் பாங்குகளின் ரொக்க இருப்பு அதிகரிக்கிறது. இதனால் வாணிபப் பாங்குகள் தமது வாடிக்கைக் காரர்களுக்கு மிகுதியான கடன்களைக் கொடுக்க முன் வருகின்றன அப்போது முதலீடு கூடுகிறது. உற்பத்தி பெருகுகிறது. வேலைவாய்ப்பு அதிகரித்து வருமானங்கள் உயர்கின்றன. அடுத்து விலைகள் ஏறுகின்றன. இவ்வாறாக, மத்தியப்பாங்குப் பத்திரங்களை வாங்குவதன் விளைவாக வர்த்தக நடவடிக்கைகள் வளர்ந்தோங்குகின்றன. மத்திய பாங்குப் பத்திரங்களை வாங்குகின்ற வாணிபப் பாங்குகள் ரொக்கம் தரவேண்டியிருக்குமாதலால் இருப்பு குறைகிறது. ஆகவே, வாடிக்கைக்காரர்களுக்குத் தருகின்ற கடன்களின் அளவை இவை குறைத்துக்கொள்வதோடு பழைய கடன்களை வசூலிக்கவும் செய்கின்றன. முதலீடு குறைகிறது. உற்பத்தி சுணங்குகிறது. வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது. வருமானங்கள் தாழ்கின்றன. அடுத்து விலைகள் இறங்குகின்றன. வாணிப நடவடிக்கைகள் சோர்வடைகின்றன.

பண அளிப்பைக் கட்டுப்படுத்துவதற்குக் கழிவு வீதத்தைவிட வெளி அங்காடி நடவடிக்கை மிகவும் சிறந்ததாக இருக்கிறது இதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன :

(a) வெளி அங்காடி நடவடிக்கை மத்தியப் பாங்கின் சுய விருப்பத்தைச் சார்ந்திருக்கிறதே ஒழிய, மற்ற வாணிபப் பாங்குகளின் விருப்பத்தைப் பொறுத்ததன்று. கழிவு வீதக் கைக்கோளின் வெற்றியோ வாணிபப் பாங்குகளைச் சார்ந்திருக்கின்றன. மத்தியப் பாங்கிடமிருந்து இவை கடன் வாங்குவதாயிருந்தால்தான் கழிவு வீத மாறுதல்களால் தகுந்த விளைவுகள் ஏற்படும். கடன்களைப் பெற இவை முன்வரவில்லையென்றால், கட்டாயப்படுத்திக் கடன் தரமுடியாது. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கை இப்படி அன்று. எந்த நேரத்திலும் அது பத்திரங்களை வாங்கவோ அல்லது விற்கவோ முடியும். பங்கங்காடி உள்ள வரையில், பாங்குகள், விற்பனையாளர், வாங்குவோர் இருக்கின்ற வரையில் அது எந்த நேரத்திலும் வெளி அங்காடி நடவடிக்கையில் ஈடுபடலாம்.

(b) வெளி அங்காடி நட வடிக்கைகளால் வாணிபப் பாங்கு களின் இருப்புகள் உடனடியாகவும், நேரடியாகவும் திருத்தப்படு கின்றன. மத்தியப் பாங்குகளின் இருப்புகள் கூடுகின்றன. பத்தி ரங்களை விற்கின்றபோது அவற்றின் இருப்புகள் குறைகின்றன. கழிவு வீதம் மாறுதலடையும்போது, தமது இருப்புகளைத் திருத் திக் கொள்வது பாங்குகளுக்கு நன்மையே ஒழிய இன்றியமையாத தன்று. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கையோ, இவை விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் இருப்புகளைத் திருத்தி விடுகின்றது.

செழிப்பும் கழிவுக் கைக்கோளும்

செழிப்புக் காலப்பகுதியில் கடன் செலாவணிக்குள்ள தேவை நெகிழ்ச்சியற்றதாயிருக்கும். வாணிபத்தில் நல்ல இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தொழில் முயல்வோர்களிடம் வலுப் பெற்றிருக்குமேயானால், சிறு வட்டிவீத மாறுதல்களால் அவர் களின் கடன் தேவை பாதிக்கப்படுவதில்லை. வட்டிவீதம், உற்பத் திச் செலவின் ஒரு சிறு பகுதியாக இருப்பின், கடன் தேவையின் நெகிழ்ச்சியின்மை (Inelasticity) ஏற்றமாயிருக்கும். சின்னஞ்சிறு வர்த்தகர்கள் வேண்டுமானால் வட்டிவீத உயர்வால் அயர்ந்து விடலாம். ஆனால், பெருந் தொழில் முயல்வோர் இதனால் மனம் தளர்வதில்லை.

அடுத்து, வட்டி வீதம் உயர்கின்றபோது அங்காடியில் பணத் தின் அளிப்பு அதிகரிப்பதாகக்கூட இருக்கலாம். வட்டி வீத உயர்வு, நிதிகளை அங்காடி நோக்கிக் கவர்ந்திழுக்கிறது. இதனால் கழிவுக் கைக்கோளின் குறிக்கோள் அடைய முடியாது போகிறது.

கழிவுக் கைக்கோளைச் செயற்படுத்துவதில் மற்றொரு சிரமமும் இருக்கிறது. பாங்குக்கடன் செலாவணியின் பெருக்கத்தைக் குறைக்கும் பொருட்டு வெளி அங்காடிக் கைக்கோளால் தோன்றும் பணமுடையை, பணம் அல்லது கடன் செலாவணியின் புழக்க வேகத்தின் (Velocity of circulation) அதிகரிப்பு ஈடுசெய்யலாம். புழக்கவேகம் மக்களின் பண ஆட்சியைப் பொறுத்தது. பாங்கு களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதன்று. கடன் செலாவணியின் கணியம் எத்தகையதாயிருக்க வேண்டும் என்பதைப் பாங்குத் துறைக் கைக்கோள் நிர்ணயிக்கலாம். ஆனால், அக்கடன் செலா வணி பயன்படுத்தப்படுவதன் வேகத்தை நிர்ணயிப்பவர்கள் வர்த் தகர்களேயாவர். வட்டி வீதம் உயர்வதனால் வாணிப எதிர்நோக் குகள் பலவீனமடைந்து கடன் செலாவணிப் புழக்கவேகம் குறைய லாம். ஆனால். இதுவும் எப்போதும் நிகழும் என்று நாம் கருத

முடியாது. யூக வாணிபம் மும்முரமாயுள்ளபோது இது நிகழ்வதில்லை. அப்போது கழிவுக் கைக்கோளுக்கு உண்மையிலேயே சோதனை ஏற்படுகிறது.

பாங்குத் துறைத் கைக்கோளினுல் பயன் ஏதும் ஏற்பட வேண்டுமெனில், உரிய நேரங்களில் தகுந்த நடவடிக்கைகள் உடனே எடுக்கப்பட வேண்டும். கடன் செலாவணிப் பெருக்கத்தின் மீது தடைகளைப் போடவேண்டும் என்ருல், அவற்றைப் பொருத்தமான நேரத்தில் போடவேண்டும். உரிய நேரத்திற்கு முன்னர்த் தடைகளைப் போட்டால் நியாயமான பெருக்கம் தடைப்படும். உரிய நேரத்திற்குப் பின்னர்த் தடைகளைப் போட்டால், பெருக்கம் கட்டுமீறிப் போய்விட்டபின் அணை போடுவதாகும். ஆனுல், உரிய நேரம் எது என்பதை அறிந்துகொண்டு பாங்குத் துறைக் கைக்கோளைச் செயல்படுத்துவதில் பல சிரமங்கள் உள்ளன.

மந்தமும் கழிவுக் கைக்கோளும்

செழிப்பின்போது கழிவுக் கைக்கோளின் செயல் திறத்திற்கு ஏற்படும் இக்கட்டுகளைவிட மிகுதியான இக்கட்டுகள் மந்தத்தின் போது வாணிப நம்பிக்கை பலத்த தாக்குதலுக்குள்ளாகிறது. இதிலிருந்து மீள்வதற்கு மிகவும் நீண்ட காலம் தேவைப்படுகிறது. கொடிய மந்தம் வாணிபத்தைப் பீடிக்கின்றபோது கடன் தேவை மிகவும் குறைகிறது; நெகிழ்ச்சியற்றதாயும் மாறுகிறது. பாங்குகளிடமிருந்து கடன் வாங்கும் ஆர்வம் வாணிபர்களிடம் இல்லாமற் போகிறது. கடன் வாங்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு வழி இல்லை. விற்பனைகள் குறைந்த தேக்க நிலையின் போது கடன் வாங்குமாறு வர்த்தக நிறுவனங்களை ஊக்குவிப்பது எங்ஙனம்? உற்பத்தி நடவடிக்கை இலாபகரமற்றதான நிலையிருக்கும் போது, வட்டி வீதக் குறைப்பு அவர்களைக் கடன் வாங்குமாறு தூண்டப் போதுமானதாயிருப்பதில்லை.

வட்டி வீதம் எதிர்க்கணியமாக (Negative) இருந்தாலும்கூட, அதாவது வாங்கும் கடன் தொகைக்குக் குறைவாகத் திருப்பிக் கொடுக்கலாம் என்ருலும், அவர்கள் கடன் கேட்பதாயில்லை. பண்டங்களின் விலைகள் இறங்கப்போகின்றன என்று எதிர்பார்க்கப்படுமானுல், வட்டி வீத இறக்கங்களால் எதையும் சாதிக்க முடியாது. வட்டி வீத இறக்கத்தால் பெறப்படக்கூடிய இலாபத்தைவிட, விலை இறக்கத்தால் ஏற்படும் நஷ்டம் அதிகமாக இருக்கிறது. எனவே, வெளியங்காடி நடவடிக்கை கூர்மையற்ற ஆயுதமாகிறது. பாங்குகளின் ரொக்க இருப்பு அதிகரிக்கலாம். ஆனுல்,

பணப்பெருக்கம் இல்லை. வாங்குந்திறன் பெருகுவதில்லை, வட்டி குறைந்த மலிவுப் பணக் கைக்கோளால் (Cheap money policy) மந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று சிலர் கருதலாம். மத்தியப் பாங்குகள் தமது அச்சங்களைத் தவிர்த்துத் தெவிட்டல் நிலை ஏற்படுமளவிற்கு வெளி அங்காடி வாங்கற்பாடுகளை அதிக மாக்கி, வாணிபத்தைக் கவர்ந்திழுக்கும் வகையில் வட்டி வீதத் தைக் குறைக்கவேண்டும் என்று கீன்ஸ் கூடக் கூறினார். ஆனால், இவ்வாறு தெவிட்டல் நிலை ஏற்படுமளவிற்குப் பண அங்காடியை நிரப்பி, நிதிகளைப் புழக்கத்தினுள் பிரவேசிக்குமாறு பலவந்தப் படுத்துவதனால் பணவீக்கப் (Inflation) பேரிடர் கட்டவிழ்த்து விடப்படுவதாகலாம். பாங்குகளின் தயக்கத்தினாலும், கடன் வாங்குவோரின் மருட்சியினாலும் தேங்கிக்கிடக்கும் இந்த நிதி களின் ஏரி, திடீரென்று உடைத்துக்கொண்டு ஆவேசமாகக் கிளம் பினால், அதனைப் பின்னர்க் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினம்.

கழிவு வீதங்களை மாற்றுதல், வெளி அங்காடி நடவடிக்கை களில் ஈடுபடுதல் போன்ற முறைகளின் மூலம் பணத்தின் அளிப்பை ஒழுங்குபடுத்திப் பொருளாதார நிலைப்பாட்டினைப் பெறுவதில் இத்தகைய இடர்ப்பாடுகள் இருப்பதன் காரணமாகப் பணத்துறை நிர்வாகிகள் மற்றொரு வலிவு மிகுந்த சாதனத்தின் உதவியை நாடுகின்றனர். அதுவே காப்புநிதி வீதக்கட்டுப்பாடு (Reserve Ratio).

காப்புநிதி வீதக் கட்டுப்பாடு

வைப்புகளுக்கு (Deposits) எதிராகப் பாங்குகளால் வைக்கப் படக்கூடிய இருப்புகள் அல்லது காப்பு நிதிகளின் அளவை மாற்று வதன் மூலம் கடன் செலாவணியளவைக் கட்டுப்படுத்துவது காப்பு நிதிக்கட்டுப்பாடு என்று குறிப்பிடப்படுகிறது. மத்தியப்பாங்குத் துறைக் கைக்கோளினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாயி யுள்ள ஆயுதங்களில் காப்புநிதிக் கட்டுப்பாடு ஆற்றல் மிகுந்தது எனலாம்.

கழிவு வீதங்களில் மாறுதல் செய்தால் கடன் பெறுவது கூடு தலாகுமா அல்லது குறையுமா என்பதை உறுதியாகக் கூறமுடி யாது. வெளி அங்காடி நடவடிக்கை, அரசுப்பத்திர விலைகளைப் பாதிப்பதோடு நின்று விடுகிறது. ஆனால், பாங்குகள் வைத்திருக்க வேண்டிய சட்ட பூர்வமான காப்புநிதி விகிதம் மத்தியப் பாங் கினால் மாற்றப்படுகின்றபோது கடன் செலாவணியளவு மத்தியப் பாங்கின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது. காப்புநிதி

வீதம் 10 சத வீதமாயிருப்பின், ஒருலட்சம் ரூபாய் இருப்பின் அடிப்படையில் பத்துலட்சம் ரூபாய் வரை பாங்குத் திட்டத்தில் பணம் பெருகலாம். காப்புநிதி வீதம் 8 சதவீதமாயிருப்பின், $12\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வரை கடன் பெருகலாம். எனவே, காப்புநிதி வீதத்தில் ஏற்படும் ஒரு சாதாரண மாறுதலால் கடன் செலாவணி யளவில் பெருத்த மாறுதல்கள் விளையும். இதனுற்றான் காப்புநிதி மீதான கட்டுப்பாடு பணத்துறை நிர்வாகத்தின் ஒரு பலம் பொருந்திய கருவியாயிருக்கிறது. ஒவ்வொரு பாங்கினுலும் வைக்கப்படக்கூடிய காப்புநிதி வீதத்தை உயர்த்துவதன் மூலம் கடன் செலாவணியளவைக் குறைக்கவும், காப்புநிதி வீதத்தைக் குறைப்பதன் மூலம் கடன் செலாவணியளவை அதிகப்படுத்தவும் மத்தியப் பாங்கினுல் முடியும்.

எனினும், காப்புநிதிக் கட்டுப்பாடு மூலம் செலாவணியைக் கட்டுப்படுத்துவதிலும் ஒரு சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இதற்குத் தொழில் நுட்பம் மற்றும் உளச்சார்பான (Psychological) தடைகள் இருக்கின்றன. இவை மிதமாகவும், எச்சரிக்கையோடும் ஆளப்படவேண்டும். அதிலும், மிகவும் அவசியமாயிருக்கின்ற காலங்களில் மட்டுமே கவனத்தோடு பயன்படுத்தப்பட வேண்டும்.

சரியான பணத்தொகை (Proper Volume of Money)

பணத்துறை நிர்வாகத்தின் கைக்கோளை ஆளும் விஷயத்தில் ஒரு முக்கிய வினு உடனே எழுகிறது. ஒரு நேரத்தில் சரியான பணத்தொகை எது? குறிப்பிட்ட தொகையா? அல்லது குறிப்பிட்ட ஒரு தலா வீதமா? அல்லது, பணத்தின் மாரு வாங்குந்திறனு? எதை நிலைப்படுத்துவது?

மாருத்தொகைக் கருத்தின் (Constant Volume of money) சிறப்பு என்னவென்ருல், விலைமட்ட மாறுதல் பணத்தொகை மாறுதலால் ஏற்படுகிறதென்ற பழி இருக்காது. பணச்சார் பற்ற காரணங்களால் விலைமட்டம் மாறும். பணத்தின் அளவு மாருதிருக்கும்போது ஒரு நாட்டின் உற்பத்தி அதி கரிப்பதாயிருப்பின் விலைமட்டும் தாழும். இதற்குப் பொறுப்பாளி உற்பத்தியைப் பெருக்கும் காரணிகளே. அவை தொழில் நுட்ப முன்னேற்றம், மக்கட்தொகை வளர்ச்சி, புதிய மூலப் பொருட் களின் கண்டுபிடிப்பு ஆகியவை. ஆகவே, விலைமட்ட மாறுதல் களுக்குப் பணம் பொறுப்பாளியாயிருப்பது தவிர்க்கப்படுகிறது. இங்கே பணம் நடுநிலையாய் (Neutral) இருக்கிறது. பாங்குக் கடன் செலாவணிப் பருமத்தில் ஏற்படும் பெருக்கமும், சுருக்கமும் இவை காரணமாக உற்பத்திக் கட்டமைப்பில் (Structure of

Production) விளையும் பொருத்தமற்ற மாறுதல்களும் பணத்தின் தொகை மாறுதிருக்கின்றபோது தவிர்க்கப்படுகின்றன என்றாலும், இதன் வாயிலாக வாணிபத்தின் சுழல் ஏற்ற இறக்கங்கள் தவிர்க்கப்படும் என்றும் ஹேயக் (Hayek) கருதுகிறார்.

ஆனால், மாறாப் பணத்தொகைக் கருத்தில் ஒரு முக்கியக் குறைபாடு இருக்கிறது. தொழில் நுட்ப முன்னேற்றமோ அல்லது கண்டுபிடிப்புகளோ காரணமாக மொத்த உற்பத்தி அதிகரிக்கும்போது, பணம் பெருக்கமில்லாததால் விலைமட்டம் இறங்கினால் தீங்கு ஏதும் ஏற்படப்போவதில்லை. நாட்டின் ஆக்கப்பாடு (Productivity) உயர்ந்து விலை இறங்கியதாகும். உற்பத்திச் செலவுகள் குறைவதாயிருப்பதனால் இலாபங்கள் பாதிக்கப்படுவதுமில்லை. எனவே, மொத்த வேலைவாய்ப்பும், உற்பத்திக் காரணிகளின் சம்பாத்தியங்களும் சுருங்குவதில்லை. ஆனால், தொழில் நுட்ப முறைகள் மாறாதிருக்கும்போது, மக்கட் தொகை வளர்ச்சியால் மட்டும் நாட்டின் மொத்த உற்பத்தி பெருகுவதாயிருப்பின், விலைகளின் இறக்கத்தால் கடுமையான பிரச்சினைகள் தோன்றுகின்றன. உற்பத்திச் செலவுகள் குறையாதிருக்கின்றபோது. விலைகள் இவ்வாறு இறங்குவதனால் தொழில் முயல்வோரின் இலாபங்கள் பெரிதும் குறைந்து, வேலை வாய்ப்பின்மையும் மந்தமும் பொருளாதாரத்தில் குடியேறுகின்றன.

இதன் காரணமாக, மாறாப் பணத்தொகையை விட, மாறாத் தலை வீதப்பணத் தொகை (Constant volume of money per Capital) சிறந்ததென்று கருதப்படுகிறது. தலை வீதப் பணத் தொகை மாறாதிருக்க வேண்டின், மக்கட்தொகை வளர்ச்சியின்போது தலா வீதம் மாறாதிருக்கப் பணத்தொகை அதிகரிக்கப்படும். ஆகவே, மக்கட் தொகை பெருக்கத்தால் மொத்த உற்பத்தி கூடினால், விலை மட்டத்தில் மாறுதல் ஏதும் நிகழாமற் போகிறது. ஆனால், மற்றக் காரணங்களால் உற்பத்தி கூடுவதாயிருப்பின், பணம் அதிகரிப்பதில்லை. எனவே, விலை இறங்கவே செய்யும். மொத்த உற்பத்தி மாறி மக்கட் தொகை மாறாதிருப்பின், மொத்தப் பணம் ஆகவே, பண வருமானம், மாறாதிருக்கிறது. மொத்த உற்பத்தியின் மாறுதல்களுக்கேற்றவாறு விலை மாறி, சமுதாயத்தின் மெய் வருமானம் மாறும்.

இம் மாறாத் தலைவீதப் பணத்தொகைக் கருத்திற்குச் சில மறுப்புகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. புத்தாக்கங்களையும், தொழில் நுட்ப அபிவிருத்திகளையும் அறிமுகப்படுத்தும் தொழில் முயல்வோர்களுக்கு இத்தகைய சூழ்நிலையில் இயல்பான இலாபமே கிடைக்கும். விலைகள் இறங்குவதாயிருந்தால், கூடுதலான

இலாபங்களைப் பெற்றிடும் வாய்ப்பு இவர்களுக்கு இல்லாமற் போகிறது. இதனால் புத்தாக்கத்தை மேன்மேலும் அறிமுகப் படுத்தும் ஆர்வம் இவர்களிடம் மறைந்து போகலாம். இதைத் தவிர்க்கவேண்டின், கூலிகளைக் குறைக்கவேண்டும். தொழிலாளர் கள் இதை ஏற்க மாட்டார்கள். ஆகவே, பணப்பெருக்கத்தின் மூலமே தொழில் முயல்வுக்கு ஊக்கமளிக்க வேண்டிவரும்.

மாறுத்தலை வீதப் பணத்தொகையின் இத்தகைய குறைபாடு கள் காரணமாகச் சிலர் மாறுப் பண மதிப்பு அல்லது மாறு வாங் குந் திறன் திட்டத்தை (Constant purchasing Power standard) அதிகரிககின்றனர். தேர்ந்தெடுக்கப்பெற்ற சில பண்டங்களின் விலைகள் மாறுதிருக்கும் வகையில் பணத்தின் மொத்த அளிப்பு இத் திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகிறது. ஆகவே, எந் தெந்தப் பண்டங்களின் விலைகள் மாறுதிருக்கவேண்டும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு விஷயமாகும். ஆனல், எந்தப் பண்டங்களின் விலைகளை நிலைப்படுத்திணுலும் சரி, இத்திட்டத்தின் கீழ் ஒன்றுமட்டும் முக்கியமாயிருக்கிறது. உற் பத்தி அதிகரிக்கும்போதெல்லாம் பணத்தின் மொத்த அளவும் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

இதன் விளைவை ஆய்வோம். உற்பத்தி முறைகளின் முன் னேற்றம் காரணமாக மொத்த உற்பத்தி பெருகுகிறது என்பதாக வும், செலவுகள் குறைகின்றன என்பதாகவும் வைத்துக்கொள் வோம். அப்போது, வாங்குந்திறன் மாறுதிருக்கச் செய்வதன் மூலமாக விலை மட்டமும் மாறுதிருக்குமேயாஞல், வழக்கு மீறிய இலாபங்கள் தொழில் முயல்வோர்களுக்குக் கிட்டும். எந்த அமி தச் செழிப்பு நிலையைத்தடுப்பதற்காகப் பணத்தின் வாங்குந்திறன் நிலைப்படுத்தப்பட்டதோ அதே நிலை ஏற்படுகிறது. ஆகையால், மாறு வாங்குந்திறன் திட்டத்தால் பயன் ஏற்படவேண்டும் என் முல், இலாபங்கள் இயல்புக்கு மீறி வளர்கின்றபோது அது தொழிலாளர்களுக்குப் பங்கு வழங்கப்பட்டு அவரது கூலிகளும் உயரவேண்டும்.

மாறுப் பணத்தொகை, மாறுத் தலை வீதப் பணத்தொகை, மாறு வாங்குந்திறன் திட்டம் என்ற மூன்றில், கடைசி இரண் டிற்கே போதிய ஆதரவு இருக்கிறது. இவையிரண்டில், எது சிறந்தது என்பது வெறும் பணத்துறை சார்புக் கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படாது, விரிவான சமுதாயக் கொள்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும். எந் தத் திட்டத்தின் கீழ் உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்கு

மிடையே பூசல்கள் குறைவாயிருக்கும்? எந்தத் திட்டத்தினுல் புத்தாக்கங்களுக்கு ஊக்கம் கிடைக்கும், புத்தாக்க நன்மைகள் பரவும்? எந்தத் திட்டத்தில் சமூக நீதி (Social justice) மேம்பாடடையும்? இவையெல்லாம் நுணுக்கமாக ஆராயப்படவேண்டும்.

தொழில்நிலேப்பாட்டினை அடைவதற்குரிய ஒரு எளிய பாதையாகப் பணத்துறை நிலேப்பாடு இருக்கவில்லே. பணத்துறைக் கைக்கோளால் தீர்த்துவைக்கப்படமுடியாத பல பிரச்சினைகள் இங்கே எழுகின்றன. நிலேபேறுக்கத்தின்போது புத்தாக்கங்களுக்குரிய ஊக்கமும் சன்மானமும் கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஐயப்பாடு பலருக்கு ஏற்படுகிறது. உழைப்பாளிகளும் முதலாளிகளும் பண்டத்தின் மதிப்பை எவ்வாறு பங்கிட்டுக் கொள்ளப் போகின்றனர் என்ற அச்சம் சிலரிடம் அரும்புகிறது. அடுத்து, விலேயேற்றத் தாழ்வுப் பிரச்சினையும் இருக்கிறது. விலேகளின் பொது மட்டத்தைக் கட்டுப்படுத்த முடியுமென்ருலும், ஒரு சில தனிப்பட்ட விலேகளைக் கட்டுப்படுத்த முடியாமற் போகலாம். விலேகளின் பொதுமட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது, சர்வாதீன (Monopoly) சக்திகளுக்குட்பட்ட ஒரு சில பண்டங்களின் விலேகள் குறைவதற்குத் தயங்கலாம். இதனுல் பொருளாதார அமைப்பில் கண்டிப்பாகச் சங்கடங்கள் உருவாகின்றன. விலேகள் தாழ்வதாயிருந்தால் எல்லா விலேகளும் தாழ வேண்டும். "இதனைச் செய்வதற்குச் சர்வாதீனச் சக்தியோ அல்லது ஏதாவதோர் அமைப்புக் காரணியோ தடையாயிருந்தால், சமுதாயம் இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் பணத்துறை நிலேபேறுக்கத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் பூராப் பலன்களும் சமுதாயத்திற்குக் கிடைக்கும்." (ஈஸ்டி)

22. அரசிறைக் கைக்கோள்

(Fiscal Policy)

''பற்றுக்குறைகளைச் சந்திப்பதற்காக மேன்மேலும் கடன் வாங்கும் பழக்கத்தை நிறுத்துகின்ற தைரியம் நமக்கு வேண்டும்.''

— ஃப்ராங்ளின் டி. ரூஸ்வெல்ட்.

வாணிப நடவடிக்கையில் விரும்பத் தகாத ஏற்ற இறக்கங்களை உண்டாக்கக்கூடிய விலை மாறுதல்கள், கடன் செலாவணிப் பெருக்கம், சுருக்கம் ஆகியவற்றைப் பணத்துறை நிர்வாகிகள் எந்தெந்த முறைகளில் அகற்ற முடியும் என்பதை இதுவரை கண்டோம். நிலைபேறுக்கம் ஏற்படுவதற்குப் பணத்துறை நடவடிக்கைகளை மட்டும் நாம் நம்பியிருப்பதில் பயனில்லை. ஏனெனில், பூரிப்பு மற்றும் தேக்க நிலைகளின்போது பணத்துறை நடவடிக்கை பூரணத் திருப்தி அளிப்பதில்லை. சில இடர்ப்பாடுகள் எழுகின்றன. இவற்றை முன்னிட்டு வேறுபல முறைகளின் மூலம் நிலைபேறுக்கத்தை எய்துவது அதிகமாகிறது, அரசு தமது செலவீடுகள், வரிகள் முதலியவற்றைத் திறமையாகக் கையாள்வதன் மூலம் நிலைபேறுக்கம் தோன்ற முடியும் என்று பொருளாதார இயலார் நம்புகின்றனர். இவற்றோடு தொடர்புடைய அரசு நடவடிக்கைகள் அரசிறைக் கைக்கோளின் கீழ் வருகின்றன. சமூகத்தின் உற்பத்தியும், வேலை வாய்ப்பும், பண்டங்கள் பணிகளுக்கான மொத்தத் தேவையை மாற்றியமைத்து, அதன் வழியே உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் மாற்றியமைக்க முடியும். ஆகவே, அரசிறைக் கைக்கோள் நிலைபேறுக்கத்திற்குரிய நல்லதொரு வழி என்று நிகழ்காலங்களில் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

சமூகத்தின் பண்டத்திற்குள்ள மொத்தச் செலவீட்டில் மூன்று கூறுகள் உள்ளன ;

(1) தனியார் நுகர்ச்சிச் செலவீடு ;
(2) தனியார் முதலீட்டுச் செலவீடு ;
(3) பண்டங்கள் பணிகள் மீதான அரசுச் செலவீடு.

அரசால், தனியார் செலவீடுகளையும் மாற்றியமைக்க முடியும். எனவே, எந்த ஒரு நேரத்திலும் அரசால் பண்டங்கள் பணிகளுக்கான மொத்தத் தேவையினைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும். செலவீட்டு வீதங்கள். வரிகளின் அளவு, பகிர்வு, அரசுக்கடன் மீதான வட்டிவீதம் ஆகியவற்றை நிர்ணயிக்கின்ற அரசிறைக் கைக்கோளால் சமுதாயத்திற்கு நிலைபேறுக்கத்தை நிச்சயமாகக் கொடுக்க முடியும். "அரசிறைக் கைக்கோள் தனியார் தொழிற்றுணிவு நிலவும் சமூகத்திற்கு மிகவும் பொருத்தமானதாயிருக்கிறது. ஏனெனில், தனியார் வாணிபத்தை ஒடுக்காத வகையில் இதனால் வாங்குந்திறன் ஓட்டத்தை மாற்றியமைக்க முடியும்." (ஈஸ்டி) மேலும் அரசிறைக் கைக்கோள் முறைகள் நமக்குப் பழகிப்போனவை; வரிகள் மூலமாகச் சமூக வருமானக் கட்டமைப்பு எந்தெந்த முறைகளில் மாற்றியமைக்கப் படக்கூடும் என்பதும் நமக்குத் தெரிந்ததே.

பணவாக்கத்தின் நிலைப்பாடற்ற இயல்பினால் வாணிபச் சுழல்கள் உருவாகின்றன என்று நம்புகிற ஹாட்ரி (Hawtrey), ஹேயக் முதலியோர், நிலைபேறுக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த கருவி, பணத்துறைக் கைக்கோள் எனக் கூறுகின்றனர். பயன்படு தேவையினை (Effective Demand) பேணிக்காப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற கீன்ஸ், அரசிறைக் கைக்கோளே நிலைபேறுக்கத்தை அடைவதற்கான பொருத்தமான வழி என்றார். பணவீக்கம் கட்டுப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தைப் பணத்துறைக் கைக்கோள் வலியுறுத்துகிறது. பணவாட்டம் கட்டுப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை அரசிறைக் கைக்கோள் வலியுறுத்துகிறது.

அரசிறைக் கைக்கோள் கருவிகள்

நிலைபேறுக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசிறைக் கைக்கோள் என்னென்ன உபாயங்களை — கருவிகளை — நாடுகிறது? அரசு எந்தெந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது? அவை வருமாறு :

(a) சில அரசுச் செலவீடுகளில் மாறுதல் செய்தல். இம் மாறுதல் வழியே நிலைபேறுக்கம் உருவாகும் என்று நம்பப்படுகிறது. இருவகையான அரசுச் செலவீடுகளில் மாறுதல் செய்யப்

படுகிறது: (1) பொதுப் பணிகள் (Public works) மீதான செல வீடுகள், சாலைகள், கல்விக்கூடங்கள், தபால் நிலையங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் முதலியவற்றை நிர்மாணிப்பது பொதுப் பணி; (2) கைமாற்றுச் செலுத்துக்கள் (Transfer payments). அரசுக்கடன் மீதான வட்டி, வேலையின்மை இன்சூரன்ஸ் (Unemployment Insurance), சமூகப் பாதுகாப்பு (Social Security) ஏற்பாடுகள் முதலியவை கைமாறும் செலுத்தல்கள் அல்லது மாற்றுச் செலுத்தல்களில் இடம் பெறுகின்றன.

(b) நுகர்ச்சி அல்லது முதலீடு மீதான தனியார் செலவீடுகளை உற்சாகப்படுத்துவதற்கோ அல்லது குறைப்பதற்கோ உரிய வகையில் வரி வருவாய் அல்லது வீதம் அல்லது சுட்டமைப்பில் மாறுதல் செய்தல் இவை மக்களின் வருமானங்களை மாற்றி அவர்களின் துய்ப்பு நாட்டத்தில் (Propensity to Consume) மாறுதல்களை உண்டாக்குகின்றன.

விரும்பும் உற்பத்தி, வேலைவாய்ப்பு நிலைக்கு அவசியமான அளவில் மொத்தச் செலவீட்டை அமையச் செய்வதே அரசிறைக் கருவிகளின் குறிக்கோள்.

மொத்தத் தேவையைத் தூண்டும் முறைகள்

விரும்பும் அளவில் வேலைவாய்ப்பையும் உற்பத்தியையும் உண்டாக்குவதற்கு மொத்தத் தேவை போதுமான அளவில் இல்லாதிருந்தால், அரசு செலவைக்கூடுதலாக்கும் அல்லது வரியைக் குறைக்கும், அல்லது இரண்டையும் செய்யலாம். எந்த அளவிற்கு இவை பின்பற்றப்படும் என்பது, மொத்தத் தேவையிலுள்ள தற்போதைய அல்லது எதிர்பார்க்கும் குறையைப் பொறுத்தது. பொருளாதார வீழ்ச்சி மிகுதியான அளவில் இருக்கும் என்று எதிர்பார்ப்பவர்கள் மாபெருந் திட்டங்கள் தொடங்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். அந்த அளவு வீழ்ச்சியை எதிர்பார்க்காதவர்கள், வரியில் அல்லது செலவில் சிறிய மாறுதல்களைச் செய்தால் போதும் என்றோ, அல்லது நிலைமை மேலும் தெளிவாகும் வரை காத்திருந்து பார்ப்பது நன்று என்றோ கருதுகின்றனர். மொத்தத் தேவையைத் தூண்டவல்ல வழிமுறைகளை இனி ஆராய்வோம்.

(I) செலவீட்டுத் திட்டங்கள்

(a) ஓட்டத் தூண்டல் செலவும், ஈடுசெய் செலவும் (Pump priming and Compensatory Spending): மொத்தத் தேவையை அதிகப்படுத்துவதற்கான செலவுத் திட்டங்கள் வெற்றிகரமான முறையில் பயன்படவேண்டுமானால் திட்டமிடுதல் மிகவும் அவசிய

மாகிறது. திட்டங்களைத் தயாரிக்கும்போது பல்வேறு உண்மை களைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். சுணக்கம் (Recession) ஒரு சில குறிப்பிட்ட தொழில்களில் மட்டுமே மிகுந்த அழுத்தம் உடையதாயிருக்குமானல், பொதுப் பொருளாதார வீழ்ச்சிக்கு மாற்றாகத் தயாரிக்கப்பட்ட திட்டம் பயன்படாது. வேலைவாய்ப்பின்மை எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த அளவு களில் பரவியிருக்கிறது என்பதைப் பற்றிய புள்ளி விவரங்கள், குறிப்பிட்ட கைக்கோளினைத் தேர்ந்தெடுப்பதற்கு மிகவும் பயனுள்ளதாயிருக்கும். செலவுத் திட்டங்களின் முக்கிய வகை கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

அரசுச் செலவீடுகளில் ஓட்டத் தூண்டல் (Pump priming) செலவு, ஈடுசெய் செலவு (Compensatory Spending) என்ற இரு வகையான செலவினங்கள் இருக்கின்றன. ஈடுசெய் அரசுச் செலவு என்றால், தனியார் செலவீட்டில் உள்ள பற்றாக்குறையைச் சரி செய்வதற்காக அரசு செய்யும் செலவு என்று பொருள். தனி யார் முதலீடு குறையும்போது, அரசுச் செலவு அதிகரிக்கவேண்டும். தனியார் முதலீடு இயல்பான அளவிற்குக் குறைவாயிருக்கின்ற போதெல்லாம் ஈடுசெய் செலவினை அரசு செய்யவேண்டும். ஓட்டத் தூண்டல் செலவு என்பது ஈடுசெய் செலவின் ஒரு சிறப்பு வகை. ஒரு குறிப்பிட்ட அளவு அரசுச் செலவால் பொருளாதார எந்திரம் முடுக்கி விடப்பட முடியும் என்பதாயும், பிறகு அந்த எந்திரம் தானே இயங்கித் திருப்திகரமான அளவு உற்பத்தியை எட்டிப்பிடிக்க முடியும் என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது. பம்பில் (Pump) முதலில் தண்ணீர் விட்டு அதை நீர் இருக்கச் செய்தலுக்கு இது ஒப்பானது. வருமான ஓட்டத்தில் பெரிய அளவில் ஒரே ஒரு தடவை வேலைவாய்ப்பை (Full employment) மீட்டுக்கொண்டு வந்து, அதை நிலைநிறுத்தம் அளவிற்குத் தேவை உயர்ந்துவிடும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண் டிருப்பது இம்முறை.

வேலை நிறைவுக்குக் குறைவான, அமிதமான போக்குகளைத் தடுத்து, வேலை நிறைவு அளவில் சமநிலையை ஏற்படுத்துவதே ஈடு செய் செலவுக் கைக்கோளின் நோக்கம். எனவே, தனியார் செலவீட்டின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக அரசு செலவு செய்து விரும்பத்தகுந்த வருமான அளவை உருவாக்குவதே ஈடு செய் செலவுத் திட்டத்தின் அடிப்படை. இந்த ஈடுசெய் முறையைச் சுணக்கத்தின் போதும், மந்தத்தின் போதும் பின்பற்றுவதனால், அரசுச் செலவு மிகவும் அதிகமானதாயிருக்கும். மீட்சிக் காலத்தின் போது, ஈடுசெய் செலவின் அளவு சிறிது சிறிதாகக் குறைந்து

கொண்டே வரும். செழிப்புகாலப் பகுதியில் தனியார் செலவீடு விரைவாக அதிகரித்துக்கொண்டே வரும்போது அரசு வரிவருவாய், அரசுச் செலவைவிட மிகுதியாக இருத்தல் வேண்டும்.

சுணக்கத்திற்குரிய ஈடுசெய் செலவுத் திட்டங்களை உருவாக்குவதற்கும் தேர்ந்தெடுப்பதற்கும் ஏற்ற சில பொதுவான விதிமுறைகள் இருக்கின்றன. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுப்பது பயனுள்ளதாயிருக்கும். எவ்வளவு வேகமாக அரசுச் செலவு வருமான ஓட்டத்தில் கலந்துவிடுகிறதோ, அவ்வளவுக்குப் பொருளாதார அமைப்பை கீழ்நோக்கி இழுக்கும் சக்திகளின் திரட்சியையும், அவை ஒன்றை ஒன்று ஊக்குவிப்பதையும் தடுக்க முடியும். அதோடு இயல்பான மீட்சிச் சக்திகள் விரைவில் தோன்றும் வாய்ப்புகளை உருவாக்கும்.

(b) பொதுப்பணித் (Public works) திட்டங்கள்.

நிலைபெருக்கச் செலவுத் திட்டங்களில் முக்கியமானவை பொதுப்பணிச் செலவுத் திட்டங்கள். அரசாங்கக் கட்டடங்கள், சாலைகள், விமான நிலையங்கள், கால்வாய்கள், வனப்பாதுகாப்புத் திட்டங்கள், வெள்ளம் மற்றும் நில அரிப்புக் கட்டுப்பாடு, இயற்கைச் சாதன முன்னேற்றம் முதலியவை பொதுப்பணித் திட்டங்களில் இடம்பெறுகின்றன. பொதுப்பணித் திட்டங்களில் எவை எவை இடம்பெறவேண்டும் என்பது அரசுத்துறை நடவடிக்கையின் பரப்பெல்லையும், அரசு என்னென்ன பணிகளைப் புரியவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் பொறுத்திருக்கிறது. பொது வசதிகளைச் (Public Utilities) செய்வது அரசின் பொறுப்பாக இருந்துவரும் நாடுகளில், ரயில் பாதைகள், தொலைபேசித் தொடர் ஏற்பாடுகள் முதலியவை பொதுபபணித் திட்டங்களில் இடம்பெறுகின்றன. மந்த காலங்களின்போது பொதுப்பணித் திட்டங்கள் பொதுவாக விஸ்தரிக்கப்படவேண்டும்.

பொதுப்பணித் திட்டங்கள் மூலமாக நிலைபெருக்கம் எவ்வாறு ஏற்படுகிறது? அரசு பொதுப்பணித் திட்டங்களைச் செயற்படுத்துகின்றபோது உறுதிப் பொருட்களுக்கான (Durable goods) தேவை உயர்ந்து, தனியார் செலவீடுகளின் பற்றுக்குறையை ஈடுசெய்வதன் விளைவாக நிலைபெருக்கம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது. பொதுப்பணியில் இலாபக் குறிக்கோள்கள் இல்லையாதலால், பொதுப்பணித் திட்டங்களுக்கு வேண்டிய உறுதிப் பொருள்களுக்கான தேவையை அரசு பேரளவில் அதிகப்படுத்தவோ அல்லது தள்ளிப்போடவோ முடியும். உறுதிப் பொருள் தயாரிப்

புத் துறைகளில்தான் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பின் ஏற்ற இறக்கங்கள் மிகுதியாயிருக்கின்றன. எனவே, மந்த காலத்தில் உறுதிப் பொருட்களுக்கான தேவை பொதுப்பணி விஸ்தரிப்பு மூலம் பெரிதும் உயர்த்தப்படுமானால், அதன் விளைவாக நிலை பேருக்கம் ஏற்படமுடியும்.

மந்தத்தின்போது பொதுப்பணித் திட்டங்களை அமல் செய்வதில் மற்றொரு நன்மையும் இருக்கிறது. வேலையற்றிருக்கும் படியான ஆட்களுக்கும் எந்திரங்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. இவற்றை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்காகும் செலவுகளும் மிதமாகவே இருக்கும். வேலையற்றிருக்கும் போதுகூட இந்த ஆட்களுக்கும் எந்திரங்களுக்கும் பராமரிப்புச் செலவுகளைச் செய்யவேண்டித்தானே இருக்கிறது! இப்பராமரிப்புச் செலவுகளிலிருந்து என்ன பொருள்கள் (Material) பயன் கிட்டுகிறது? எனவே, இவைகளை மந்தத்தின்போது வேலைக்கு எடுத்துக்கொண்டு பொதுப்பணித் திட்டங்களைச் செயற்படுத்துவதனால், சமூக நன்மையும் விளைகிறது, நிலைபேருக்கமும் உருவாகிறது.

பொதுப்பணித் திட்டங்கள் மூலம் நிலைபேருக்கம் ஏற்படுவது என்பது, பொருளாதார அமைப்பில் பொதுப்பணித் திட்டங்களுக்குள்ள முக்கியத்துவத்தைப் பொறுத்தது. அதோடு, உரிய நேரத்தில் செய்தால்தான் இவை மூலம் நிலைபேருக்கம் விளையும். சரியான நேரத்தில் செய்தால், மிதமான பொதுப்பணித் திட்டங்கள்கூட மிகுதியான நன்மைகளைக் கொடுக்கும். ஆனால், பொதுப்பணித் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டிய சரியான நேரம் எது என்பதைப் பற்றிப் பொருளாதார இயலாரிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சுணக்கம் தொடங்கியவுடன் பொதுப்பணித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்; அப்போதுதான் தீவிரமடைவதற்கு முன்பே மந்தத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றிவர்கள் கருதுகின்றனர். ஆனால், சுணக்கம் தோன்றுவதைக் கண்டுபிடிப்பதில் சிரமங்களிருப்பதனாலும், பொதுப்பணித் திட்டங்களைத் துவக்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதனாலும், இக்கருத்திற்கு எதிர்ப்புகள் இருக்கின்றன. மந்தம் தீவிரமடையும்போதுதான் பொதுப்பணித் திட்டங்களை விரிவு செய்யவேண்டும் என்று வேறு சிலர் கூறுகின்றனர். அப்போதுதான் இவை மீட்சிச் சக்திகளை ஊக்குவிப்பனவாக இருக்கும் என்றிவர்கள் நம்புகின்றனர். இக்கருத்திற்கும் எதிர்ப்புகள் இருக்கின்றன. மந்தத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

பொதுப்பணித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், விரிவு செய்வதற்கும் உரிய சரியான நேரம் எது என்பதை நடைமுறை அனுபவத்தைக் கொண்டுதான் கண்டுபிடிக்கவேண்டும். பொதுப் பணித் திட்டங்களுக்குரிய நிதியினைத் திரட்டுவது எங்ஙனம்? செழிப்புக்காலங்களில் கிடைக்கும் வரி வருவாய்களின் ஒரு பகுதியை இருப்புச்செய்து அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது, கடன்களைப் பெறுவதன் மூலம் நிதிகளைத் திரட்டலாம். செழிப்புக் காலங்களில் விதிக்கப்படும் வரிகளின் வருவாயைக் கொண்டு இக்கடன்கள் திருப்பியடைக்கப்படலாம்.

(c) கைமாற்றுச் செலுத்துகள்

குறைந்த அல்லது குறைந்து செல் வருமானம் காரணமாகக் குறைந்த அளவில் செலவு செய்யும் நிலையில் இருப்பவர்களைச் சேரும் விதத்தில் அரசு செலவு செய்தால், மிகச்சிறந்த பயன் ஏற்படும். வேலை செய்ய முடியாதவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணச் செலுத்துகள் (Relief payments) வேலையின்றியிருப்பவர்களுக்குத் தரப்படும் ஈடுசெய் செலுத்துகள் (Compensation payments) முதலிய மாற்றுச் செலுத்துகள் மூலம் மக்களின் நுகர்ச்சிச் செலவீடு நிச்சயம் அதிகரிக்கும். பிற்காலச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலையான வசதிகள் இதனுல் உருவாவதில்லை என்பது உண்மையே. ஆனுல், உடல்நலம் நிறைந்த மக்களைக்கொண்ட ஒரு சமுதாயத்தையும், உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் தேவையையும் அது உண்டாக்குகிறது என்பதை மறுக்கமுடியாது. முடிந்த அளவுக்கு இத்தகைய செலுத்துகள், பணிகளுக்கான கூலியாகவோ அல்லது வேலையிலிருந்தபோது கட்டிய தவணைத் தொகைகள் காரணமாக வேலையற்றுள்ளவர்களுக்குத் தற்போது கிடைக்கும் உதவித்தொகைகளாகவோ இருப்பது நல்லது. ஏனெனில், அப்படி இருந்தால்தான், செலுத்துகளைப் பெறுவோரின் தன்மான உணர்வுக்கு ஊறு ஏற்படாமலிருக்கும்.

(2) வரி குறைப்பு

எதிர்பார்க்கப்படும் அல்லது நிலவும் ஒரு பொருளாதார வீழ்ச்சியின்போது வரிக்குறைப்பின் நோக்கம் தனியாட்களிடமும் வாணிப நிறுவனங்களிடமும் நிதிகளை விட்டுவைப்பதாகும். ஒரு வரிவீதக் குறைப்பால் நிதியிலிருந்து செலவு எந்த அளவுக்கு உயரும் என்பது வரி செலுத்துவோரிடம் வரிக்குறைப்பு எத்தகைய விளைவை உண்டாக்குகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆள்சார்ந்த அல்லது தனியான வருமான வரி வீதங்களைக் குறைத்தால், வரி செலுத்துவோரின் நிகர வருமானம் அதிகரிக்கும். வரிக்

குறைப்பின் விளைவில் ஒழுங்கு ஒன்றும் இராது. ஏனென்றால், வரிக் குறைப்பின் விளைவை இடையில் யாரும் எடுத்துக்கொண்டு விடமுடியாது. ஆனால், ஆயவரிகளைப் (Excise duties) பொறுத்த வரையில் இப்படிக் கூறுவதற்கில்லை. வானொலிப் பெட்டி, பெட்ரோல், சிகரட் முதலியவற்றின் மீதான ஆயவரிகளைக் குறைத்தால், வரிகள் குறையும் அளவுக்கு அவற்றின் விலைகளும் குறையும் என்று எதிர்பார்க்கமுடியாது. சுணக்கத்தின்போது இலாபங்கள், பொதுவாகக் குறையும். எனவே, வரிக்குறைப்பின் ஒரு பகுதியைத் தன் நிகரவருமானத்தோடு சேர்த்து எடுத்துக்கொள்ளும் ஆசை விற்பனையாளர்களுக்கு ஏற்படும். மேலும், வரிக்குறைப்பு, ஒரு தற்காலிக ஏற்பாடாக இருப்பின், பின்னர் வரி உயர்த்தப் படும்போது விலையை உயர்த்தவேண்டியிருக்கும். விலையை மாற்றுவதில் செலவுகள் உள்ளன. ஆகையால், தற்போது விலையைக் குறைப்பதற்கு விற்பனையாளர்கள் தயங்கக்கூடும்.

ஆனால், வரிக்குறைப்பால் விலைகள் குறையாவிட்டால், எத்தகைய விளைவும் ஏற்படாதுபோகும் என்று கூறிவிடமுடியாது. ஏனெனில், இலாபநிலைமையில் முன்னேற்றம் ஏற்படுமானால், இலாபத்தைப் பெறுபவர்கள் கூடுதலாகச் செலவிட முயலலாம்.

விற்பனை வரி (Sales tax)யைக் குறைக்கும்போது, வரி விலையில் சேர்க்கப்படாதிருந்தால், பொருட்களை வாங்குவோர், வரிக் குறைப்பால் நன்மை அடைவர். உயர்விலைப் பண்டங்களைப் பொறுத்தவரையில் வரிக்குறைப்பால் குறிப்பிடத்தக்க சேமிப்பு ஏற்பட்டு மிகுதியாகப் பண்டங்களை வாங்கும் நிலைமை உருவாகலாம். ஆனால், சின்னஞ்சிறிய பொருள்களைப் பொறுத்தவரையில், வரியின் அளவு மிகவும் அற்பமாக இருப்பதால், வரிக்குறைப்பு பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு, அதனால் எந்தவித விளைவும் ஏற்படாதுபோகிறது.

வாணிப வீழ்ச்சி தடுக்கப்படவேண்டுமாயின், மிகுதியாகக் கவனம் செலுத்தவேண்டியது நுகர்ச்சியைத் தூண்டுவதிலா அல்லது முதலீட்டைத் தூண்டுவதிலா என்பது ஒரு முக்கியமான கேள்வி. நிகர வருமானத்தை அதிகப்படுத்துவது நுகர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக என்றால், நுகர்ச்சி நாட்டம் மிகுதியாயுள்ளவர்கள் நன்மையடையும் வகையில் வரிக்குறைப்பு செய்ய வேண்டும். குறைந்த வருமானங்களை உடைய பிரிவினர்மீதான வரிகளைக் குறைப்பதில் அதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டும். அல்லது. விரிவான அளவில் துய்க்கப்படுவதாகவும், ஓரளவிற்கு நெகிழ்ச்சியுள்ள தேவையைப் பெற்றிருப்பதாகவும் உள்ள

பண்டங்கள்மீது விதிக்கப்படும் ஆயவரிகளை நீக்கவேண்டும் அல்லது குறைக்கவேண்டும். இதற்குமாருக, சேமிப்பு நாட்டத்தையும், முதலீட்டு நாட்டத்தையும் மிகுதியாகக்கொண்டவரின் நிகரவருமானத்தை உயர்த்துவது குறிக்கோளாக இருப்பின், கம்பெனி வரிகளையும், பிற வாணிப வரிகளையும், உயர்வருமானப் பிரிவினர் மற்றும் உயர்நடுத்தர வருமானப் பிரிவினர் (Upper Middle Class) மீதான தனியாள் வருமான வரிகளையும் (Personal Income-tax) குறைக்கவேண்டும்.

வரிக்குறைப்பு செய்யவேண்டும் என்று முடிவுசெய்துவிட்டால், இந்த இருவகை வரிக்குறைப்பு முறைகளில் எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கவேண்டும். வரி செலுத்துவோர் ஒவ்வொருவரும், எந்த வரிக்குறைப்பு முறை தனக்குச் சாதகமாக அமைகிறதோ அதுவே பொருளாதார அமைப்பு முழுவதற்கும் சிறந்த முறையாக இருக்கிறது என்று எண்ணுவது இயற்கை. உயர்ந்த அளவுத்துய்ப்பு நாட்டம் உள்ளவர்களிடம் செலவிட உள்ள நிகர வருமானத்தை (Disposable income) அதிகப்படுத்தக்கூடிய கைக்கோளே வாணிப வீழ்ச்சியைத் திறம்படத் தடுக்கவல்லது.

சரக்கு இருப்புகளில் (inventories) முடங்கும் முதலீடு சுணக்கத் தோற்றுவாயில் சிறியதாயிருக்கும். ஆனால், சுணக்கம் தொடங்கியதும், விற்பனை குறைந்து சரக்கிருப்பு அதிகரிப்பதை விற்பனையாளர் உணர்வர். இதனால், சரக்கு வாங்குவதை நிறுத்திவிடுவர். முதலீடு செய்வோர் மீதான வரிகளைக் குறைப்பதால்மட்டும் இந்நிலைக்குப் பரிகாரம் காணமுடியாது. சரக்கிருப்பு மிகுதியைக் குறைப்பதற்கு வழிசெய்தால்தான் நிவாரணம் கிட்டும். சரக்கிருப்பு மிகுதியைக் குறைக்கவேண்டுமென்றால், இருப்புகளை விற்பனை செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். வரிக்குறைப்புமூலம் நுகர்ச்சிப் பொருள் வாங்குவதை அதிகப்படுத்தினால் இருப்பு விற்பனையாகும். ஆக, சரக்கிருப்புச் சுணக்கத்தைத் தீர்ப்பதற்கான வழி, வரிக்குறைப்புமூலம் மக்களை அதிகப் பொருள் வாங்கும்படிச் செய்தலேயாகும்.

சுணக்கம் இருப்பைப் பாதிப்பதோடு நில்லாமல் பொறிகளிலும் தளவாடங்களிலும் செய்யப்படும் முதலீட்டைப் பாதிக்கும்போதும் இதே வகையான தீர்வு பொருந்தும். தளவாடங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்த முயன்றாலொழிய, உற்பத்தியாளரிடம் நிகரவருமானம் எவ்வளவுதானிருந்தாலும், அவர்கள் அத்தளவாடங்களை வாங்கமாட்டார்கள். உற்பத்திச் சக்தியைப் பெருக்குவதற்குரிய ஒரேவழி வினைமுடிந்த பொருட்

களின் (finished goods) தேவையை அதிகப்படுத்துவதே. நுகர்வோர் தேவை உயர்ந்தால், உற்பத்தித் தளவாடங்களுக்கான தேவையும் இறுதியில் உயரும். ஆகவே, நுகர்வோர்களின் நிகர வருமானத்தை அதிகப்படுத்தும் முறையிலேயே வரிக்குறைப்பைச் செய்தல்வேண்டும். அப்போதுதான் முதலீட்டின் வீழ்ச்சி தடுக்கப்படும். அப்படித் தடுக்கப்படும்போது, முதலில் சரக்கிருப்புகள் மீதான முதலீட்டின் வீழ்ச்சி தடுக்கப்பட்டு, பின்னர், எந்திரங்களிலும், தளவாடங்களிலும் செய்யப்படும் முதலீட்டின் வீழ்ச்சி தடுக்கப்படும். "வரிக்குறைப்பு ஏற்பாட்டோடு, பணத்துறைக் கைக்கோளைத் தளர்த்தும் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டால், முதலீட்டின் மீட்சிக்குத் தேவையான அளவில் நிதிகள் கிடைக்கும்." (பி. ஈ. டெய்லர்).

நாட்டு மொத்தத் தேவையில் முதலீட்டுப் பகுதிகளே (Investment components) முக்கியமானவை. என்றாலும், நேரடியாக இப்பகுதிகளை அதிகப்படுத்த முயல்வதால் விளையும் பயன் மிகவும் குறைவானதாகத்தானிருக்கும். வரிக்குறைப்பு மூலம் முதலீடு செய்வோரின் நிகரவருமானம் கூடுதலாகலாம். ஆனால், வரிக்குறைப்பால் முதலீட்டுச் செலவு நேரடியாக அதிகரிக்கும் என்று பொதுவாக எதிர்பார்க்க முடியாது. ஆகவே, வரிக்குறைப்பின் மூலம், முதலில் நுகர்ச்சிச் செலவை அதிகப்படுத்தி, அச்செலவின் அதிகரிப்புமூலம் முதலீட்டைப் பெருக்கும் மறைமுக வழியே பயன் தரும்.

மொத்தத் தேவையை மட்டுப்படுத்தும் முறைகள்

அரசிறைக் கைக்கோளால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் சுணக்கம்பற்றியனவாக மட்டும் இல்லாது, பணவீக்கம் பற்றியனவாயுமிருக்கலாம். உதாரணமாக, இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய காலத்தில், மொத்தத் தேவை அளவுக்கு மீறியிருந்ததினால் பணவீக்கநிலை ஏற்பட்டு, பல பிரச்சினைகள் உருவாயின. இந்நிலை அமித மொத்தத் தேவையால் உண்டாவது. மொத்தத் தேவையைக் குறைப்பதற்கு நிதித்துறையில் இரு வழிகள் இருக்கின்றன.

(1) பண்டங்களையும், பணிகளையும் நேரடியாக வாங்குவதன் மூலமாக, அரசே மொத்தத் தேவையின் ஒரு பகுதிக்குக் காரணமாயிருக்கிறதல்லவா? அந்தப் பகுதியைக் குறைப்பது முதல் வழி.

(2) நுகர்ச்சிக்காகவும் முதலீட்டுக்காகவும் தனியார் துறையிலிருந்து எழுகிற தேவை, மொத்தத் தேவையின் மீதிப்பகுதியாகும். இந்தப் பகுதியைக் குறைப்பது இரண்டாவது வழி.

முதல் வழியைப் பின்பற்றினால், அரசுச் செலவு குறைக்கப்பட வேண்டும் அல்லது அரசுச் செலவில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு தடுக்கப்படவேண்டும். இரண்டாவது வழி பின்பற்றப்பட்டால் செலவிடுவதற்காகத் தனியாரிடம் உள்ள தொகை கட்டுப்படுத்தப் படவேண்டும்.

செலவைக் குறைத்தல்

பணவீக்கம் உள்ள சூழ்நிலையின்போது செலவுகளைக் குறைக்க முடியுமா என்பது சுழல் ஏற்ற இறக்கங்களைக் களைவதற்கான முறையில் செலவுகள் இருக்கின்றனவா இல்லையா என்பதையே பெரும்பாலும் சார்ந்திருக்கிறது. சுணக்கத்தின்போது வேண்டுமென்றே செலவுகள் அதிகப்படுத்தப்பட்டிருப்பதால், நிலைபேறுக்கம் அல்லாத ஏனைய பிற குறிக்கோள்களுக்கு அவ்வளவாகப் பயன்படாத பல திட்டங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும். நிறைவுடை வேலைவாய்ப்பு நிலையின்போது இத்தகைய திட்டங்களை நிறைவேற்றிவைப்பதற்கான காலத்தை நீட்டிப்பதன் மூலமோ, அல்லது இத்தகைய புதிய திட்டங்களைச் செயற்படுத்தாமல் இருப்பதன்மூலமோ இத்திட்டங்களுக்கான செலவைக் குறைக்கமுடியும். சுணக்கத்தின்போது இயல்பான செலவுமட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தால் அரசால் வாங்கப்படும் கட்டுமானங்களும், பணிகளும் சமுதாயத்திற்கு எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவிற்கே அச்செலவுகள் அமைந்திருக்கும். பண வீக்கத்தின்போது பண்டங்களையும் பணிகளையும் அரசு வாங்குவதைக் குறைப்பதோ அல்லது நிறுத்திவிடுவதோ மிகவும் சிரமம்.

பண்டங்களுக்கும் பணிகளுக்கும் அரசு செய்யும் செலவை மாற்றுவதைவிட கைமாற்றுச் சொத்துக்களின் சில இனங்களைப் பயன்படுத்தல் பயனுடையது. பணவீக்க நிலையில் வேலை வாய்ப்பளவு உயர்மட்டத்தில் உள்ளபோது, இவ்வகை இனங்களில் ஆகும் செலவீடு குறையும். வேலையிலிருந்து ஓய்வுபெறவேண்டியவர்களும் தொடர்ந்து வேலையிலிருந்துவர முயலுவர். ஆகவே, கைமாற்றுச் சொத்துக்களைப் பெறுவதற்கான தகுதிகள் சுணக்க காலத்தில் தாராளமாக்கப்பட்டு, செழிப்புக் காலத்தில் கடுமையாக்கப்பட்டால், செழிப்புக் காலத்தில் கைமாற்றுச் செலுத்துகளில் குறைப்பு பெருந்தொகையாக இருக்கும்.

வரிகளை உயர்த்தல்

பணவீக்கச் சக்திகளைத் தடுக்கும் அரசிறைக் கைக்கோள், வரவு செலவுத் திட்டத்தின் வருவாய்ப்பகுதியிலேயே மிகுந்த கவனத்தைச் செலுத்தும். ஏனென்றால், செழிப்பின் மத்தியில் பணிகளுக்

கும் கட்டுமானங்களுக்கும் ஆகும் செலவுகளைக் குறைப்பதற்குக் கடுமையான எதிர்ப்புகள் எழுகின்றன. எனவே, நிலைபெருக்கம் எய்துவதற்கு வரிகளை உயர்த்தும் அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது. கம்பெனி வருமான வரியை உயர்த்துவதன்மூலம் முதலீடு செய்வதற்கான ஊக்கத்தைக் குறைக்கலாம்; ஏனென்றால், வரி உயர்வால் இலாபம் குறையும். அடுத்து உயர் வருமானப் பிரிவினர் மீதான தனியாள் வருமான வரி வீதங்களை உயர்த்துவதனாலும் இதே விளைவைப் பெறலாம். என்றாலும், நுகர்ச்சியைத் தடுக்கும் வரிகள் மூலமாகத்தான் மிகச்சிறந்த விளைவைப் பெறமுடியும். பண்டங்களை வாங்குவோர்மீது மிகுதியான வரிகளை விதிப்பதன் மூலம் வினைமுடிந்த பண்டங்களின் விற்பனை குறைந்து இருப்பளவும், உற்பத்தியளவும் குறைகின்றன. ஆகவே, நுகர்ச்சியைக் குறைக்கும் வரி உயர்வே முதலீட்டுப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறுகிறது.

பண்டங்களின் நடப்பு உற்பத்தியைவிட பணப் பெருக்கத்தினாலான தேவை மிகுதியாக இருப்பதே பொதுவான பணவீக்கச் சூழ்நிலை. தேவையின் துவக்கவன்மை எல்லா அங்காடிகளிலும் ஒரே சீராய் இருக்கவில்லையென்றாலும், ஓர் அங்காடியிலோ அல்லது சில பெரிய அங்காடிகளிலோ தேவை மிகுதியாக இருந்தால், பொருளாதாரத்தின் ஒரு பிரிவில் ஏற்படும் விலை உயர்வு, ஏனைய பிரிவுகளுக்கும் எளிதில் பரவிவிடுகிறது. மட்டுமீறிய தேவையின் உயர்வு காரணமாக உண்டாகும் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு வரி உயர்வு ஒரு சிறந்த முறை. இத்தகைய வரி உயர்வு வருமானத்தின் மீதோ, பண்டங்கள் பணிகள் மீதான செலவின் மீதோ சுமத்தப்படலாம். இதற்காக வருமான வரியை அல்லது விற்பனை வரி, ஆயவரி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

ஆனால், பணவீக்கத்தைப் போக்குவதற்காகப் பண்டங்கள் மீது உயர்ந்த வரிகளைப் போடுவது தன்னைத்தானே தோற்கடித்துக் கொள்ளும் என்று சிலர் வாதாடுகின்றனர். இந்த வரி உயர்வாலேயே விலைகள் மேலும் உயர்ந்தால், விலை உயர்வைத்தடுக்க முடியாது என்னும் கருத்தில் இந்த வாதம் எழுகிறது. வரி பயனற்றது என்று நினைத்துக்கொள்வதற்கில்லை. வரியால் விளைந்த விலைஉயர்வால், வரி கழித்த நிகரவருமானம் குறைகிறது. வரிக்குள்ளான பண்டங்களுக்குக் கூடுதலான விலைகளைத் தருவதால், பிற பண்டங்களுக்குச் செலவிடப்படக்கூடிய வருமானத்தின் பகுதி குறைகிறது. ஆகையால், வருமான வரியால் நேரடியாக வருமானத்தைக் குறைப்பதால் உண்டாகும் அதே விளைவுதான் பண்ட வரி வழி விலைஉயர்வாலும் உண்டாகிறது. "உண்மையை மறைக்

காது கூறவேண்டுமெனில், வருமானவரி உயர்வால் விளையாத ஒரு நன்மை, விற்பனை வரி மற்றும் ஆயவரி உயர்வால் விளைகிறது. வருமானவரி பெரும்பாலும் சேமிப்பைக் குறைக்கிறது. ஆனால், விற்பனை வரியும், ஆயவரியும் செலவை மட்டுமே குறைக்கின்றன. எனவே, விற்பனை வரிகள் மட்டுமீறிய தேவையெனும் சிக்கலின் அடிப்படையையே இடிப்பதாக அமைந்துள்ளன'' என்று பி. எஃப். டெய்லர் கூறுகிறார்.

எந்த வரிகளின் வீதங்களை மாற்றியமைப்பது என்பது வரி மாறுதல்களை எந்த அளவிற்குச் சுலபமாகவும், வேகமாகவும் செயற்படுத்த முடியும் என்பதைப் பொறுத்தது. வருமான வரியில் வீதங்கள் தாமே இயங்கும் ஏற்பாடு அமைந்திருக்குமானால், குறுங் காலத்தில் வரி வீதங்களை மாற்றியமைப்பதற்கு வருமான வரியே சிறந்ததொரு கருவியாகப் பளிச்சிடுகிறது. கூட்டரசு (Federal) மற்றும் மாநில அரசுகளைப் பொறுத்தவரையில் விற்பனைவரி வீதங்கள் அல்லது ஆயவரி வீதங்கள் முக்கியம். அரசியல் ரீதியில் பார்த்தால், வருமான வரி வீதங்களை மாற்றியமைப்பது சற்று எளிதான செயலாயிருக்கிறது. மேலும், வருமான வரி வீதங்களின் மாறுதல்களால் ஏற்படும் விளைவுகளை நம்மால் திட்டவட்டமாக முன் கூட்டியே தெரிந்துகொள்ள முடியும். நிலைபேறுக்கத்திற்கேற்ப வரிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு கூட்டரசு அளவில்தான் மிகுதியாகக் காணப்படுகிறது. அந்த அரசின் வரிகளில் தனியாள் வருமான வரியும் கம்பெனி வருமான வரியுமே அதிமுக்கியமமானவையாயிருப்பதால், நிலைபேறுக்கத்திற்குரிய வகையில் வரி வீதங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாற்றியமைப்பதற்கும் ஆயவரிகளைவிட இந்த வரிகளே மிகப் பொருத்தமானவையாக இருக்கின்றன. இந்த அடிப்படையில் பணவீக்கத்தைப் போக்குவதற்காகச் செயற்படுத்தப்படும் எந்த ஒரு வரிவிதிப்புத் திட்டத்திலும், வருமான வரிகளே முக்கியமான இடத்தை வகிக்கும் என்பது புலனாகிறது.

இறுதியாக, கையாளப்படவேண்டியது வரி சம்பந்தமான நடவடிக்கையா என்பதை முடிவு செய்யும்போது கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான விஷயம், இந்த நடவடிக்கைகளில் எது விரைவாகப் பயன்தரும் என்பது. நடப்புப் பண்டங்கள் பணிகள் ஆகியவற்றிற்கான தேவையைப் பாதிப்பதால்தான் ஒரு நடவடிக்கை பயன் தருவதாயிருக்கும். செலவு சம்பந்தமான திட்டங்கள் நடைமுறைக்கு வந்து பயன் தருவதற்கும் காலம் தேவைப்படுகிறது. ஏனென்றால், ஒரு செலவீட்டுத் திட்டம் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு ஒப்பப்பட்டு நடைமுறைக்கு வருவதற்குப் பல மாதங்கள் தேவைப்

படுகின்றன. எனவே, குறுங்கால வேலையின்மையை நீக்க முயலும் போது காலம் பிடிக்கும். செலவுத் திட்டத்தால் குறிப்பிடத் தகுந்த விளைவு ஏற்படாது. அதுமட்டுமன்று. மீட்சிக் கட்டம் சற்றேறக்குறைய முடிவுற்ற பின்னர்தான் செலவீட்டுத் திட்ட விளைவின் பெரும்பகுதியை நாம் உணர்கிறோம். ஆனால், மீட்சிக் கட்டம் தேய்ந்துபோனபின், நிலைபெருக்கத்திற்கு அவசியமாயிருப்பது சுணக்கத்தைப் போக்கும் நடவடிக்கைகள் அல்ல; பணவீக்கத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளேயாம். ஆகவே, செலவீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக வரிக்குறைப்புத் திட்டம் ஆளப்பட்டால் குறுகிய காலத்தில் நல்ல பயனை அடைய முடிகிறது. ஆனால், பணவீக்க நிலை நெடுங்காலத்திற்கு நீடித்திருப்பதாயிருக்குமானால், வரிக் கைக்கோள், செலவீட்டுக் கைக்கோள் ஆகிய இரண்டுமே ஆளப்பட வேண்டியிருக்கும்.

தாமே இயங்கும் நிலைபெருக்கக் கருவிகள்
(Automatic Stabilisers)

செலவீட்டு மாறுதலையும், வருவாய் மாறுதலையும் நிலைபெருக்கக் குறிக்கோளுக்காகப் பயன்படுத்துவதாயிருப்பின், எளிதில் மாறக்கூடிய இயல்பை நிரந்தரமாக அரசிறையமைப்பின் ஒரு பகுதியாகவே அமைத்து விடுவதா அல்லது நிலைபேறின்மை ஏற்படுகின்றபோது மட்டும் அதற்கேற்ற மாறுதல்களைச் சட்டமன்றம் செய்து கொள்வதா என்ற வினா எழலாம். எளிதில் மாறக்கூடிய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டால் அரசிறை நிலையங்களின் நிலையான கட்டமைப்பொன்று இருக்கவேண்டும் என்பதும், அவ்வமைப்பு நிலைபேறின்மை தோன்றும்போது தானாகவே உரிய முறையில் செயல்படவேண்டும் என்பதும் பெரிதும் அவசியம். இதற்கு மாறாக, அவ்வப்போது ஏற்ற வகையில் மாறுதல் செய்யும் ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டால், குறிப்பிட்ட நேரத்தில் நிகழக்கூடிய மாறுதல்களைத் தெளிவாக ஆராய்ந்தறியவேண்டும் என்பதும், மாறுதல்களை நிலைபெருக்கத்திற்கேற்ற முறையில் இருக்கச் செய்வதற்கு வழி வகுக்கவேண்டும் என்பதும் அத்தியாவசியம்.

தாமாகவே இயங்கும் நிலைபெருக்கக் கருவிகள் சில நாடுகளில் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. தாமாகவே இயங்கும் நிலைபெருக்கக் கருவிகள் சரியாகச் செயல்படுவதாயிருப்பின், செழிப்பின்போது அரசுச் செலவீடுகள் குறையும்; சுணக்கத்தின்போது அதிகரிக்கும்; செழிப்பின்போது அரசு வரவினங்கள் பெருகும்; சுணக்கத்தின்போது சுருங்கும். இவ்வரசிறை மாறுதல்கள் (Fiscal changes) விளைவாக மக்களின் நிகர வருமானம், பூரிப்பு (Boom)

நிலையின்போது குறைந்து, தேக்க நிலையின்போது கூடும். சமன்பாடுடைய அல்லது இருதலையொத்த வரவுசெலவுத் திட்டத்தை (Balanced Budget) அரசு வற்புறுத்தவில்லையென்றால், பூரிப்பின் போது உபரி வரவு செலவுத் திட்டமும் (Surplus Budget), தேக்கத்தின்போது பற்றுக்குறை வரவு செலவுத் திட்டமும் (Deficit Budget) தாமே இயங்கும் நிலைபேறுக்கக் கருவிகளால் விளைவிக்கப்படும்.

தனியாள் வருமானவரி (Personal Income Tax), கம்பெனிவரி, ஆடம்பரப் பொருட்கள் மீதான விற்பனைவரி மற்றும் ஆயவரிகள், வேலையின்மை இழப்பீட்டு உதவித்தொகைகள் முதலியவை தாமாகவே இயங்கும் அரசிறைக் கருவிகள் (Automatic fiscal devices) முக்கியமானவை. இவற்றை இனித் தனித்தனியே ஆராய்வோம்.

வரி ஏற்பாடுகளில் தனியாள் வருமான வரியே மிகவும் குறிப்பிடத் தகுந்தது. ஏனெனில், இந்த வரி, வளர் வீதத் தன்மையைப் பெற்றிருப்பதாய், ஈடுசெய் கருவியாகக் பயன்படுவதற்கு மிகவும் பொருத்தமுடையதாயிருக்கிறது. வருமானங்கள் உயர்கின்றபோது, வருமான இறுதிநிலைப் பகுதிகள் உயர்வரிவீதங்களைச் செலுத்த வேண்டியுள்ளன, வருமானம் உயர்கின்ற வீதத்தைவிட வரி உயர்வு வீதம் அதிகமாயிருக்கிறது. வருமானங்கள் தாழ்கின்றபோது வரிவீதம் வருமானச் சுருக்கத்தைவிட விரைவாகக் குறைகிறது. தாமே இயங்கும் ஈடுசெய் கருவி என்ற முறையில் கம்பெனி வருமானவரி, தனியாள் வருமானவரியை விட மிகக் குறைவான பயனையே தருகிறது. ஏனென்றால், கம்பெனி வருமான வரி நடைமுறையில் வளர்வீதத் தன்மையைப் பெற்றிருக்கவில்லை. அதோடு வரியைச் செலுத்துவதில் மிகுந்த காலதாமதமும் ஏற்படுகிறது.

எத்தகைய பண்டங்களின் தேவை நாட்டின் மொத்த உற்பத்தி பெருகும்போது அதிகரித்து, சுருங்கும்போது குறைகிறதோ அத்தகைய பண்டங்கள்மீது விற்பனை வரிகளும், ஆயவரிகளும் விதிக்கப்பட்டால், தாமே இயங்கும் நெகிழ்ச்சித் தன்மை இருக்கும். ஆனால், தனியாள் வருமான வரிகளில் உள்ள வளர்வீத இயல்பு இவ்வரிகளிடம் கிடையாது. ஆகவே, இவ்வரிகளின் பயனும் குறைவே.

வரவு செலவுத்திட்டத்தின் செலவுப்பிரிவில் உள்ள தாமே இயங்கும் நிலைபேறுக்கச் சாதனங்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்ததாயிருப்பன மாற்றுச் செலுத்துகள் (Transfer payments). வேலைவாய்ப்புகள் பெருகியுள்ள செழிப்பு நிலைகளில் சமூகப் பாது

காப்புச் செலுத்துகள் (Social Security payments) குறைகின்றன. வேலைவாய்ப்பு அரிதாயுள்ள தேக்க நிலைகளில் இவை அதிகரிக்கின்றன.

வரவு செலவுத் திட்டத்தில் உட்புனைவுள்ள நிலைபேறுக்கக் கருவிகளில் (Built-in-Stabilisers) சில முக்கிய நன்மைகள் உள்ளன :

(a) இவை விரைந்து செயலாற்றுகின்றன. நிகர வருமானம், சம்பளப்பட்டியல், சில்லறை விற்பனை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள வரிகளிலிருந்து கிடைக்கும் வருவாய், நாட்டு மொத்த உற்பத்தியும் வேலைவாய்ப்பளவும் பெருகும்போது தாழும் என்றும் எதிர்பார்க்கலாம். அரசுச் செலுத்துகளை வேலைவாய்ப்பின்மையளவோடு இணைத்துள்ள செலவீட்டுத் திட்டங்களும்; வாணிப நிலைமைகளில் மாறுதல் நிகழும்போது, பொருத்தமான முறையில் உயரும், தாழும்.

(b) உட்புனைந்து அமைக்கப்பட்ட நிலைபேறுக்கக் கருவிகளின் மற்றொரு நன்மை, அவை கையாளப்படவேண்டிய ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்தை நாடவேண்டியதில்லை என்பதாகும். எனவே, காலதாமதம் உண்டாவதில்லை. அதோடு, விவாதத்தினால் பொருளாதாரத் தொடர்பில்லாத கருத்துக்கள் இவைகளைப் பாதிக்கும் நிலையும் எழுவதில்லை.

பொதுப்படப் பார்த்தால் தாமே இயங்கும் நிலைபேறுக்கக் கருவிகள் நிலைபேறுக்க வல்லமையைச் சிறப்பான அளவில் பெற்றிருக்கின்றன என்பது உண்மையே. எனினும், இவைகளை மட்டும்நம்பியிருப்பது அறிவுடைமையாகாது. பொருளாதாரத்தின் போக்குகள் பலவீனமானவையாயிருப்பின், தாமே இயங்கும் நிலைபேறுக்கக் கருவிகள் மட்டுமே தனியே நின்று அவற்றைப் போராடி வெல்ல முடியும். ஆனால், இவைகளை மட்டுமே நம்பிருக்காது அரசிறைக் கைக்கோளின் படைக்கலன்கள் அனைத்தும் நிலைபேறுக்கத்திற்காகத் திறம்படப் பயன்படுத்தப் பெறவேண்டுமாயின், அரசின் நிர்வாகத் துறையும், சட்டமன்றமும் வரவு செலவு ஆகியவற்றில் தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு ஆயத்தமான நிலையிலேயே எப்போதும் இருந்துவர வேண்டும்.

23. கூலிக் கைக்கோள்
(Wage policy)

,'கூட்டு பேரம் சிக்கல் நிரம்பிய ஒரு வியாபாரம்; விட்டுக் கொடுக்கும் தன்மை அங்கே மிகவும் தேவைப் படுகிறது''

— சாமுவேல் சன்

பொருளாதாரச் சமநிலை நிலவவேண்டுமென்ருல், உற்பத்தி தடங்கலன்றி நடைபெறவேண்டும் என்ருல், தேவையின் மாறுதல்களுக்கேற்பவும், உற்பத்தி முறைகளின் மாறுதலுக்கேற்பவும், உற்பத்தியளவு உடனுக்குடன் மாறுதலடைவதாயிருத்தல் வேண்டும். பொருளாதார வாழ்வில் ஏற்படக்கூடிய மாறுதல்களுக்கேற்ப தம்மை மாற்றியமைத்துக் கொள்ளும் இயல்பு, தனியார் தொழில் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பிடம் காணப்படுகிறது. இத்தகைய பொருளாதார அமைப்பில் விலைகளும், மற்றவைகளும் கட்டுப்படுத்தப்படுவதில்லை. மாறிவரும் நிலவரங்களுக்கேற்பத் தம்மை 'மாற்றியமைத்துக் கொள்கின்ற நெகிழ்ச்சித்தன்மை சில கொள்கைகள் அல்லது விலைகளில் காணப்படாது போகலாம்; காலப்போக்கில் இவை வளைந்து கொடாத் தன்மையினை (Rigidity) வளர்த்துக் கொள்வதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒப்பந்த வட்டி வீதங்கள் வளைந்து கொடுக்காத இயல்பினைப் பெற்றிருக்கின்றன. செலவுகளின் கட்டமைப்பில் பல, மாரு இனங்களாக இருக்கின்றன.

பெரும்பாலான தொழில் பண்ட விலைகள் குறுகிய அளவில் தான் மாறுதலடைய முடியும். விலைகளே அல்லாது கூலிகளும் கூட இவ்வாறு வளைந்து கொடுக்காமல் இருக்கின்றன. விலைகளின் நெகிழ்ச்சியின்மையைவிட கூலிகளின் நெகிழ்ச்சியின்மை சற்றுக் கூடுதலாகவே இருக்கிறது.

கூலிகளின் வளைந்துகொடா இயல்பு பொருளாதார மாறுதல் களுக்கேற்பத் தனியார் தொழில் துணிவு சார்ந்த பொருளாதார அமைப்பு மாறிக்கொள்வதற்கு இடையூருக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மந்த நிலைமைகளின் போது விலைகள் மற்றும் கூலிகளின் வளைந்துகொடா இயல்பினுல் பேரிடர் விளைகிறது. மறு சீரமைவு கள் (Readjustments) அத்தியாவசியமாயுள்ள மந்தகாலத்தின் போது விலைகளையும் கூலிகளையும் மாற்றியமைப்பது சிரமமாயிருப் பின் தேக்கநிலை தொடர்கிறது; வேலைவாய்ப்பின்மையும், உற்பத் திக் குறைவும் மென்மேலும் தீவிரமடைகின்றன; மீட்சிகளின் துவக்கம் தள்ளிப்போடப் படுகிறது.

செழிப்புக் காலங்களில் விலைகளைவிடக் குறைவாகக் கூலிகள் உயர்கின்றன. மந்த காலங்களில் விலைகளை விடக் குறைவாகக் கூலிகள் தாழ்கின்றன. மந்த காலங்களில் கூலிகளின் வளைந்து கொடுக்காத் தன்மை மிகவும் வன்மையாக இருக்கிறது. கூலி களின் இத்தகைய வளைந்துகொடுக்காத தன்மைக்குக் காரணங்கள் என்ன?

(a) தொழிலாளர்களுக்கு மிகவும் பிரதானமாயிருப்பது அவர்களது வாழ்க்கைத் தரமாகும். தொழிலாளர்கள் வர்த்தகர் களைப் போன்று இலாபம் ஈட்டுவதில் ஈடுபட்டிருக்கவில்லை. வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக இவர்கள் உழைப்பில் ஈடு பட்டிருக்கின்றனர். தம் உழைப்பை ஒரு பண்டம்போல அங்காடித் தேவை அளிப்புக்களால் நிர்ணயிக்கப்படுவது என்பதை அவர்கள் ஏற்பதில்லை. வாழ்க்கைத் தரத்திற்குப் பொருத்தமானவைகளா யிருப்பவையே நியாயக் கூலிகள் என்றும், அங்காடியால் நிர்ணயிக் கப்படுபவை நியாயமான கூலிகளாக இருப்பதில்லை என்றும் அவர் கள் குரலெழுப்புகின்றனர். கூலிகள் உயர்வதை அவர்கள் வர வேற்கின்றனர். கூலிகள் தாழ்வதை அவர்கள் பொறுப்பதில்லை. கூலி அதிகரிப்பை விரும்புவதும், கூலிக்குறைப்பை எதிர்ப்பதுமான போக்கு தொழிலாளர்களுக்கிடையே மென்மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. கூலிகள் உயர்வதாகத் தானிருக்கவேண் டுமே தவிரத் தாழ்வதாக இருத்தல் கூடாது என்பது ஜனநாயக நாடுகளில் தற்போது பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. கூலி வருமானம் நிலைபேறடைய வேண்டியது மிகவும் அவசிய மென்று நிகழ்காலங்களில் அவ்வப்போது வலியுறுத்தப்பட்டு வரு கின்றது. ஆகவே, கூலிகளிடம் வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாது போய்விடுகிறது.

(b) கூலி குறைப்பதற்குத் தொழிலாளர்கள் ஒப்புக்கொள் வதில்லை. ஏனெனில் கூலிகள் ஒரு முறை குறைக்கப்பட்டுவிட்டால். பிறகு அவற்றை உயர்த்துவது என்பது மிகவும் சிரமமாயிருக் கிறது. சில நேரங்களில் வேலை நிறுத்தங்கள், வேதனை தரும் நிகழ்ச்சிகள் — இவற்றிற்குப் பிறகுதான் கூலி உயர்வுகள் கிடைக் கின்றன. உற்பத்தியாளர்கள் எவ்வாறு பண்டங்களின் விலையைக் குறைப்பதை எதிர்க்கின்றனரோ, அவ்வாறே தொழிலாளர்கள் கூலிக் குறைப்புகளை எதிர்க்கின்றனர்.

(c) உழைப்புக்கான தேவை மந்தத்தின்போது நெகிழ்ச்சி யற்றதாய் (Inelastic) உள்ளது என்று தொழிலாளர் கருதுகின்ற னர். ஏனெனில் கூலி குறைந்தாலும் வேலைவாய்ப்பு அதிகரிக் காது என்றும், கூலி குறையும் வீதத்தைவிட, உழைப்புக்கான தேவை அதிகரிப்பின் வீதம் குறைவாயிருக்கும் என்றும் கூறி கூலிக் குறைப்பினை தொழிலாளர்கள் எதிர்க்கின்றனர்.

(d) மந்த நிலைமைகளின்போது கூலிகள் வளைந்து கொடா மலிருப்பதற்கு மற்றொரு காரணம் கூலிகளைப் பற்றிய வாங்குந்திறக் கோட்பாடுகள் (Purchasing power Theories). இவைகளின்படி கூலிகளானவை வெறும் தொழில் செலவாக மட்டும் இருக்கவில்லை; பயன்பாடு தேவையினை உருவாக்கும் ஒரு வருமான வருவாயாகவும் உள்ளன. ஆகவே கூலியைக் குறைத்தால் நிலை மேலும் மோசமாகும். இந்தக் கொள்கையின் காரணமாய்க் கூலிக் குறைப்புக்களுக்குப் பலத்த மறுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இவ்விதத் காரணங்களால் கூலிகளுக்கு வளைந்துகொடா இயல்பு உண்டாகியிருக்கிறது.

வாணிச் சுழல்களும் கூலிக் கைக்கோளும்

கூலி என்பது ஒரு முக்கிய உற்பத்திச் செலவினமாக இருப் பதோடல்லாது. பயன்படுதேவைக்குரிய மூல காரணிகளாகவு மிருப்பதனால், கூலிக் கைக்கோளை ஆள்வதில் பல சங்கடங்கள் ஏற் படுகின்றன. செலவு என்ற முறையில் கூலிகளின் நெகிழ்ச்சிக் குறைவு, சுழல் ஏற்ற இறக்கங்களின் பரப்பை அதிகப்படுத்து கின்றன. விலைகளின் உயர்வு தாழ்வுகளைவிட கூலிகளின் உயர்வு தாழ்வுகள் குறைவான அளவில் நிகழ்வதால் அமித லாபங்களும், இழப்புகளும் வாணிபத்தில் தோன்றும். மட்டுமீறிய பெருக்கத் திற்கும், அத்துமீறிய சுருக்கத்திற்கும் கூலி நெகிழ்ச்சிக்குறைவு ஊக்கமளிக்கின்றது. பெருக்க காலத்திலும், சுருக்க காலத்தி லும் இலாபத்துக்கும் கூலிகளுக்குமுள்ள விகிதம் நிலைப்படுத்தப்பட

வேண்டியது மிகவும் முக்கியம். பூரிப்பு நிலவரங்களில், கூலிகளின் பங்கு குறையுமானுல், பெருக்கம் அளவிற்குமீறி ஓடுகிறது. தேக்க நிலவரங்களில் கூலிகளின் பங்கு கூடுமானுல், சுருக்கம் வரம்புமீறிப் போகிறது. பெருக்கத்தின் துவக்கக் கட்டங்களில் கூலிகளை உயர்த்தி விகிதம் காக்கப்பட்டால் வீக்கம் தடுக்கப்படும். சுணக்கத்தின்போது கூலிகளைத் தாழ்த்தினுல், விலைகளுக்கேற்றவாறு செலவுகள் அமைந்து, நிறுவனங்களுக்குரிய இலாப வீதம் கிடைத்து வருவதாயிருக்கும்.

செழிப்பின்போது கூலிக் கொள்கை

கூலி உற்பத்தி செலவினங்களாக மட்டும் இருக்கவில்லை. மக்களின் வாங்குந்திறனை உண்டாக்கும் காரணியாகவுமிருக்கிறது. எனவே கூலிகளில் மாறுதல் ஏற்பட்டு, அதன் விளைவாக உற்பத்தியாளரின் விற்பனை எதிர்நோக்குகளிலும் மாறுதல் தோன்றுகின்றது. மக்களது வாங்குந்திறனுக்கேற்ற அளவில் உற்பத்திப் பருமம் இருந்தால் வாணிபத்தில் குழப்பம் ஏதும் ஏற்படுவதில்லை. இதற்குமாருக, மக்களது வாங்குந்திறனுக்கு அதிகமான அளவில் சமுதாயத்தின் உற்பத்திப் பருமம் அமைந்தால் வாணிபத்தில் நெருக்கடி தலையெடுக்கிறது. பூரிப்புக் காலங்களில் இத்தகைய நெருக்கடியைத் தீர்ப்பதற்குரிய வழி, கூலிகளை உயர்த்துவதாகும். அவ்வாறு கூலிகள் உயர்த்தப்படவில்லையென்ருல் தொழில் முயல்வோர்களுக்கு அபரிமித இலாபங்கள் கிடைக்கும். இதனுல் அமித முதலீட்டுப் பூரிப்பொன்று (Investment boom) வளர்ந்தெழுந்து, அடுத்த நெருக்கடிக்கு வழிகோலும்.

இதனுல்தான் கூலிகளைச் செலவினமாக எடுத்துக்கொள்வோரும் சரி, அல்லது வாங்குந்திறனின் மூலகாரணியாக எடுத்துக்கொள்வோரும் சரி, செழிப்புக் காலங்களில் கூலிகள் உயர்த்தப்படவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். செலவினங்கள் என்ற முறையில் உலிகள் உயர்த்தப்பட்டால் செழிப்பின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. மந்த காலத்தில் பயன்படுதேவையின் மூல காரணி என்ற முறையில் கூலிகள் உயர்த்தப்பட்டால், உற்பத்தியை உயர்ந்தபட்ச அளவில் இருக்கச் செய்வது சாத்தியம்.

மந்தத்தின்பேது கூலிக் கைக்கோள்

செழிப்பின்போது கூலிகள் உயர்த்தப்படவேண்டும் என்பதை இவ்விரு சாராரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்கின்றனர் என்ருலும், மந்தத்தின்போது கூலிகளைக் குறைப்பதா வேண்டாமா என்பதைப் பற்றி இவ்விரு சாராரிடமும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கூலிகளைச் செலவாக எடுத்துக்கொள்வோர், மந்தத்தின்போது கூலி

கள் குறைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்துகின்றனர். கூலிகளை வாங்குந்திறனக எடுத்துக்கொள்வோர், செழிப்பின்போது சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் தென்படும்போதுதான் கூலிகளைக் குறைப்பது பயன் விளைக்கும் என்று கருதுகின்றனர். உழைப்புக்கான தேவையின் நெகிழ்ச்சி ஒருமைக்கு அதிகமாக (Greater than unity) இருப்பின் உற்பத்திச் செலவு குறைந்து, விலை குறைந்து, தேவை உயர்ந்து தொழிலாளரின் மொத்த வருமானம் அதிகரித்து மந்தம் நீங்கும்.

ஆனல் இத்தகைய விளைவுகள் உறுதியல்ல. மந்தத்தின்போது கூலிகள் குறைக்கப்பட்டால், தொழிலாளரின் மொத்தக் கூலிகளும் அதிகரிப்பதில்லை; மொத்த வாங்குந்திறனும் கூடுவதில்லை. இதற்கான சாதனங்கள் கீழே தரப்படுகின்றன.

(1) கூலிகள் குறைக்கப்படுவதனல் விலைகள் தாழ்வாயிருக்கலாம். அவ்வாறு விலைகள் தாழ்ந்தால் வேலையளிப்போரின் இலாபங்கள் மறைந்துபோகும். பணவாட்டம் அதிகரிக்கும். விலையிறக்கத்தின் பயனைப் பெறுபவர் சேமிக்கும் செல்வராயிருப்பின் மொத்த வாங்குந்திறன் குறையவும் கூடும்.

(2) கூலிகள் ஒருமுறை குறைந்தால், அவை மென்மேலும் குறைந்துகொண்டே போகும் என்று தொழில்முயல்வோர்கள் எதிர்த்துக் கூலிகள் இன்னும் குறையட்டும் என்று வேலை விஸ்தரிப்பைத் தள்ளிப்போடக் கூடும். இவ்வாருக, ஒரு குறுங்காலத்தில் கூலிக் குறைப்புகளால் உழைப்பாளிகளுக்கான தேவை குறைகிறதே தவிரக் கூடுதலாகாமற் போகலாம். இதனல் மொத்த வாங்குந் திறனும் குறையலாம்.

(3) கூலிகள் குறைகின்றபோது விலைகள் இறங்காமலிருந்து தொழில் முயல்வோரின் இலாபங்கள் கூடுதலானலும் கூட, வாணிபத்தில் பெருக்கம் ஏற்பட்டுத்தான் தீரும் என்ற அவசியம் இல்லை. எதிர்கால வாணிபம் எப்படியிருக்குமோ என்ற அச்சம் மந்தத்தின் போது தொழில் முயல்வோர்களைச் சூழ்ந்து கொண்டிருப்பின் இலாபத்தொகைகளை மேலும் முதலீடு செய்யவிரும்பாது, பாங்குக் கடன்களைத் திருப்பி அடைப்பதற்குப் பயன்படுத்தலாம். இவர்கள் இவ்வாறு செய்கின்றபோது சமூக வாங்குந்திறன் குறைகிறது.

இக் காரணங்களைக் கருதிப்பார்த்தால், மந்தத்தின்போது கூலிகளைப் குறைப்பதனல் மொத்த வாங்குந்திறன் அதிகரிப்பது அரிது என்பது புலனுகிறது. இவ்வாறெனில், மந்தத்தின்போது எத்தகைய கூலிக் கைக்கோளினைப் பின்பற்றுவது? கூலிக் குறைப்புகளால் நன்மையே விளைவதில்லையா?

வாணிபச் சுழல்களில் சிறு சுழல்கள் (Minor Cycles) என்ருெரு வகை இருக்கிறது. இச்சிறு சுழல்களில் மறு சீரமைவுகள் மிகவும் விரைவாக ஏற்படுகின்றன; வட்டி வீதங்கள் குறைவா யிருப்பின், முதலீடு அதிகரித்து, மீட்சிக்கட்டம் உருவாகிறது. இச் சுழல்களைப் பொறுத்தவரையில் முதலுக்கான தேவை நெகிழ்ச்சியுள்ளதாயிருக்கிறது; முதலீடு கூடும்போது கூலிகள் குறைந்தால் மீட்சி விரைவில் உருவாவது உறுதி. இங்கே கூலிக் குறைப்புக்களால் ஓரளவிற்கு நன்மை ஏற்படும். இச் சிறு சுழல் களில் மந்தம் ஒரு குறுங்கால நிகழ்ச்சி.

ஆனல், பெருஞ்சுழல்களில் மந்தம் நெடுங்காலத்திற்கு நீடிக்கிறது. தீவிர மிகுந்திருக்கிறது. மறு சீரமைவுகள் ஏற்பட்ட பிறகும் கூட பணவாட்டம் தொடர்ந்து தொல்லைகொடுத்து வருகிறது. வாணி பத்தைப் பற்றிய நம்பிக்கை நொறுங்கிப்போய்க் கிடக்கிறது. முதலுக்கான தேவை முற்றிலும் நெகிழ்ச்சியற்றிருக்கிறது. குறை வான வட்டிவீதங்களால் முதலீட்டை ஊக்குவிக்க முடியவில்லை. இத்தகைய சுழல்களில் கூலிக் குறைப்புச் செய்தால் நுகர்ச்சிப் பருமம் குறையும். உழைப்புக்கான மொத்தத் தேவையின் நெகிழ்ச்சி மிகவும் குறைவாயிருப்பதனல், கூலிக் குறைப்புகள் மிகவும் அதிகமாக இருந்தாலொழிய, தொழிலாளர்கள் மறுபடி யும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டார்கள். எனினும், மந்தத்தின் தீவிரம் எத்தகையதாயிருப்பினும், ஒரு குறிப்பிட்ட வீதத்தில கூலிகள் இருந்தால் நிறைவுடை வேலைவாய்ப்பு நிலைமை தோன்றும் என்பதில் ஐயமில்லை. ஆனல் இந்த வீதத்தைச் சமு தாயத்திற்கு ஏற்றதன்று என்ருல், கூலிக்குறைப்பு நடைமுறைககு ஏற்றதல்ல என்று முடிவு செய்யப்பட வேண்டியதுதான்.

உண்மையில் கூலிக் குறைப்புக்குப் பலத்த எதிர்ப்புக்கள் இருக் கின்றன. உலகத்து நாடுகளனைத்திலும் கூலிக் குறைப்பு வெறுப் புக்கு ஆளாகிறது. எனவே, வேறு வழிகளில் மந்தத்திற்குப் பரி காரம் காணவேண்டியது அவசியமாகிறது. பொதுத்துறைச் செல வீடுகள் போன்ற மற்ற முறைகளில் மொத்தத் தேவை அதிகப்படுத் தப்படவேண்டும் என்பதாகிறது.

மீட்சியின்போது கூலிக் கைக்கோள்

கூலிகைகளை வாங்குந்திறன் என்று எடுத்துக்கொண்டால், செழிப்பின்போது கூலிகளை உயர்த்துவதாகவும், மந்தத்தின்போது கூலிகளை மாருமலிருக்கச் செய்வதாகவும் உள்ள ஒரு கூலிக் கைக்கோளை நாம் பின்பற்றியாக வேண்டும். கூலிகளை உயர்த்

தினுல்தான் மீட்சி தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் வாணிபத்தில் ஏற்படும். யாராவது ஒருவர் பணத்தைச் செலவிடத் தொடங்கினுல்தான் மந்தம் முடிவிற்கு வரமுடியும். பண்டங்களுக்குத் தேவை இல்லை என்றால் தொழில் முயல்வோர்கள் அவற்றைத் தயாரிக்கப்போவதில்லை. கூலிகள் மிகவும் குறைவாக இருந்தால் பண்டங்களுக்குத் தேவையோ, அங்காடியோ இருக்கப் போவதில்லை. ஆகையால், கூலிகளை உயர்த்துவதுதான் உற்பத்தியை உற்சாகப்படுத்தி மீட்சிக்கு வழிவகுப்பதற்குரிய சரியான முறை என்று நம்ப இடமிருக்கின்றது. கூலிகள் உயர்ந்தால், சமுதாயத்தின் மொத்த வாங்குந்திறன் பெருகி, பண்டங்களுக்கான தேவை விரிந்து, உற்பத்திக்கு ஊக்கம் கிடைத்து, தொழிலில் மீட்சி மலர்கிறது. அப்போது பொருளாதார அமைப்பைச் சூழ்ந்துகிடந்த மந்த மூடுபனி மெல்ல விலகுகிறது

கூலிகளை உயர்த்துவதன் மூலம் மீட்சிக்கு வழி வகுக்க முடியும் என்ற இக்கருத்திற்குப் பெருத்த ஆதரவு இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முதல் கால்பகுதியில் இக்கருத்திற்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பிருந்தது. ஆட்சியாளர்களும், அரசியல் மேதைகளும் மகிழ்வோடும், ஆர்வத்தோடும் இக்கருத்திற்கு இசைவு தெரிவித்தனர். அமெரிக்க நாட்டுத் தலைவர் ரூஸ்வெல்ட் அவர்களால் ஆளப்பெற்ற நடவடிக்கையின் (New Deal) பொருளாதாரத் திட்டங்களில் இக்கருத்திற்கு நல்ல முக்கியத்துவம் தரப்பட்டது. இத்திட்டங்களில் இடம்பெற்ற தேசியத் தொழில் மீட்புச் சட்டத்தின் (National Industral Recovery Act) கூலிக்கொள்கைகள் இக் கருத்தினை அப்படியே பிரதிபலித்தன. இவ்வாறு ஆட்சியாளர் திட்டங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ள இக் கருத்தினை மேலும் விளக்கமாக இனி ஆராய்வோம்.

வேலையளிப்போர் அல்லது தொழில் முயல்வோர் அனைவரும் கூலிகளை உயர்த்தினுல், சமுதாயத்தின் வாங்குந்திறன் அதிகரித்து, பயன்படுதேவை விரிந்து, பண்டங்கள் கூடுதலாக வாங்கப்பட்டு, கூலிகளை உயர்த்துவதற்காகச் செலவழிக்கப்பட்டதொகை மீண்டும் தொழில் முயல்வோரிடமே வந்து சேரும். மேலும் பயன்படுதேவை விரிவடைவதன் விளைவாக உற்பத்தியளவு பெருகுவதனுல் சராசரிப் பொதுச் செலவுகள் (Overhead Costs) குறைந்துவிடுகின்றன என்றும், ஆகவே, கூலிகளை உயர்த்துவதால் இலாபங்கள் பாதிக்கப்பட மாட்டா என்றும், விலைகளை உயர்த்த வேண்டியிராது என்றும், இலாபங்களைப் பாதிக்காமல், விலைகளைக் கூட்டாமல், கூலிகளை உயர்த்த முடியுமென்றால், அதைச் செய்வதற்கு என்ன தயக்கம் வேண்டிக்கிடக்கிறது என்றும் கேட்கப்படுகிறது.

இவ்வாதத்தை நாம் அப்படியே உண்மை என்று எடுத்துக் கொள்வதற்கில்லை. கூலிகளை அதிகப்படுத்தினால் அக்கூலிகள் அனைத்தும் உடனே செலவழிக்கப்படும், அல்லது வேறு'முறைகளில் பயன்படுத்தப்படும் என்று எடுத்துக்கொண்டாலும்கூட, வாங்கற் பாடுகள் மூலமாக அக்கூலிகள் தொழில் முயல்வோர்களுக்குத் திரும்பிவருவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சில கூலித்தொகைகள் உண்டியல்களை (Bills) செலுத்துவதற்காகவோ அல்லது வேறு கடன்களைத் திருப்பி யடைப்பதற்காகவோ பயன்படுத்தப்படுகிறது. இத்தொகைகள் பாங்குகளுக்குச் சென்று, பிறகு அங்கிருந்து உரியவர்களைச் சேர் வதாயிருப்பின், கால தாமதம் நிச்சயம் ஏற்படும். கூலிகளாகக் கொடுத்த பணம், நுகர்ச்சிப் பண்ட உற்பத்தியாளர்களுக்கு விரைவாகத் திரும்பிவருகிறது. ஆனால் முதற்கருவிப் பொருள் களின் (Capital goods) உற்பத்தியாளர்களுக்கு இவை மிகவும் நிதானமாகவே திரும்பி வருகின்றன. உற்பத்தியாளர் சமூகத்தை மொத்தமாக எடுத்துக்கொண்டு பார்த்தால், கூலிகளை உயர்த்து வதற்கும், பண்டங்களின் விற்பனைமூலம் இக்கூலித்தொகைகள் உற்பத்தியாளரிடம் திரும்பிவருவதற்கும் இடையே ஒரு நீண்ட காலம் குறுக்கிடுகிறது. இந்த இடைவேளையில் செலவுகளைக் கூடுத லாகச் செய்வதற்கான நிதிகளைப் பெறுவது எப்படி என்ற பிரச்னை உற்பத்தியாளர்களுக்கு எழுகிறது. அதாவது கூலிகளை உயர்த்து வதற்குத் தேவைப்படும் பணத்தை எந்த வழிகளில் திரட்டுவது என்ற பிரச்னை தோன்றுகிறது.

மொத்த வாங்குந்திறன் அதிகரிக்கவேண்டுமென்றால், கூலிகளை உயர்த்துவதற்குப் பாங்குக் கடன் செலாவணியோ (Bank credit) அல்லது பயன்படாமலிருந்துவரும் நிதிகளோ ஆளப்படவேண்டும். இதற்கு மாறாக, பயன்மிகுந்த வழிகளில் ஈடுபட்டுள்ள நிதிகள் கூலிகளை உயர்த்துவதற்குச் செலவழிக்கப்பட்டால் மொத்த வாங் குந்திறன் கூடுவதில்லை, வாணிப மீட்சிக்கான வழியும் பிறப்ப தில்லை. உதாரணமாக, இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்காகும் செலவுகளையோ, அல்லது பண்டங்களின் இருப்புக்களையோ குறைத் துக்கொள்வதன்மூலம் மிச்சமாகின்ற தொகைகளைக்கொண்டு தொழில் முயல்வோர்கள் கூலிகளை உயர்த்துவார்களேயானால், வாங்குந்திறன் ஓரிடத்தில் குறைக்கப்பட்டு மற்றோரிடத்தில் அதிகப்படுத்தப்படுகிறது என்றுதானாகும். மொத்த வாங்குந் திறன் அதிகரிக்காது. இதற்கு மாறாக, பாங்குகளிடமிருந்து கடன் பெற்று, தொழில் முயல்வோர்கள் கூலிகளை உயர்த்தினால் 'மொத்த

வாங்குந்திறனில் ஒரு நிகர அதிகரிப்பு ஏற்படுவது உறுதி. ரொக்க இருப்புகளின் உதவிகொண்டு கூலிகளை உயர்த்தும்போதும் இதே பலன் கிடைக்கிறது.

ஆனால் இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், தமது ரொக்க இருப்புகளைப் பயன்படுத்துவதற்கோ அல்லது பாங்குகளிடமிருந்து கடன் வாங்குவதற்கோ உரிய மனப்போக்கு மந்தச் சூழ்நிலைகளின்போது தொழில் முயல்வோர்களிடம் இருப்பதில்லை. மந்தக் காலங்களில் ரொக்க இருப்புக்களை அல்லது பாங்குக் கடன் செலாவணியைக்கொண்டு கூலிகளை உயர்த்துவதனால் விளையக்கூடிய நன்மைகளைப்பற்றித் தொழில் முயல்வோர்களுக்கு நிரம்ப சந்தேகங்கள் எழுகின்றன. எனவே, வேறு செலவீடுகளைக் குறைப்பதன் மூலமாக மீதமாகும் தொகைகளைக்கொண்டோ அல்லது பண்டங்களின் விலைகளை உயர்த்துவதன்மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டோதான் உற்பத்தியாளர்கள் தொழிலாளரின் கூலிகளை அதிகப்படுத்துவர். இவ்விரு முறைகளிலும் கூலிகள் உயர்த்தப்படும்போது மொத்த வாங்குந்திறன் அதிகரிப்பதேயில்லை.

இவ்விதக் காரணங்களால்தான், மந்தத்தின்போது கூலிகள் உயர்த்தப்பெற்றால் வாங்குந்திறன் பெருகி மீட்சி உருவாகும் என்ற கருத்தைப் பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் ஏற்பதில்லை.

கூலிகளை மாறிடச்செய்யும் வழிமுறைகள்

மேற்காணும் பகுத்தாய்வு நமக்குச் சில உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. அவையாவன: உற்பத்தி அதிகரிக்கும்போது கூலிகளை உயர்த்துவது விரும்பக்கூடியதாயிருக்கிறது. மந்தத்தின் போது கூலிகளைக் கடுமையாகக் குறைப்பதோ அல்லது முற்றிலும் மாறாமலிருக்கச் செய்வதோ நன்றன்று; மிதமான ஒரே தடவையான கூலிக்குறைப்பு மேலானது. மீட்சியினை உருவாக்குவதற்காகக் கூலிகளை அதிகப்படுத்துவது பொருத்தமான செயல் அன்று. ஆகவே சுழலுக்கேற்ப கூலி நெகிழ்ச்சி உடையதாக இருக்கும் ஒரு திட்டம் தேவைப்படுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். இத்தகைய மாறுந்தன்மையைக் கூலிகளுக்கு ஏற்படுத்துவதற்கான வழிகள் யாவை? வேலையளிப்போரும், தொழிலாளரும் கூலிகளை வளைந்து கொடுக்குமாறு செய்யமுடியுமா? அல்லது அரசின் அதிகாரப் பிரயோகம்மூலம்தான் கூலிகளை மாறிடச் செய்யமுடியுமா? இவைகளை இனி ஆய்வு செய்வோம்.

(a) வழுக்களவுக் கூலித் திட்டம்
(Sliding scale of wages)

கூலியின் நெகிழ்ச்சி செழிப்புக் காலத்துக்கும். மந்த காலத்துக்கும் ஏற்ப மாறும் என்ற உத்திரவாதம் பெற்ருல், வேலையளிப்போர் மந்தத்தில் கூலிகளை உயர்த்துவதற்குத் தயக்கமின்றி முன் வருவர் என்று திரு பிகு கூறினர். செழிப்பு நிலைமையில் கூலிகளை உயர்த்தத் தொழில் முயல்வோர் சம்மதிப்பர். ஆனல் மந்த நிலைமையில் அதே கூலிகள் வற்புறுத்தப்படமாட்டா என்று தெரிந்தால்தான் இவர்கள் சேமிப்பில் கூலிகளை உயர்த்தச் சம்மதிப்பர். தொழிலாளரோ செழிப்பு வந்ததும் கூலிகள் உயர்த்தப்படும் என்ற உறுதிப்பாடு இருந்தால்தான் மந்தத்தின்போது கூலிகள் குறைவதை ஏற்றுககொள்வர். ஆகவே, இரு திறத்தாரும் கூலி தொழில் நிலைக்கேற்ப மாறவேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றனர். இருதிறத்தார்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட வரம்புகளுக்குள், தொழில் நிலைக்கேற்ப அல்லது விலை மட்டத்துக்கேற்பக் கூலிகள் உயர்வதாகவும் தாழ்வதாகவுமிருப்பின் இருவரும் நலமடைவர். இதற்கு ஒரு கூலித்திட்டம் வகுக்கப்படலாம். இதனல் கூலிகள் நெகிழ்ச்சித் தன்மையை (Flexibility) அடையும். இத்திட்டத்தின்கீழ் விலை மட்டம் அல்லது வாழ்க்கைச் செலவின் மாறுதல்களுக்கேற்ப, கூலிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட இயல்பு மட்டததிற்த (Normal level) மேலோ அல்லது கீழோ நிர்ணயிககப்படும்.

ஆனல், இதில் இருக்கின்ற ஒரு முக்கியப் பிரச்னை என்னவென்ருல் கூலிகளின் இயல்பான மட்டம் எது என்பதை நிர்ணயிப்பது. இயல்பான மட்டம் எது என்பதை அறிவியல் ரீதியில் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். வேலையளிப்போருக்கும், தொழிலாளருக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயுள்ள ஒரு இயல்பான கூலி மட்டத்தை நிர்ணயித்தாலும், அடுத்து உற்பத்தி முறைகளில் நிகழக்கூடிய மாறுதல்களால் அது நடைமுறைக்கு ஒவ்வாததாக மாறிவிடக் கூடும். அப்போது மறுபடியும் ஒரு இயல்பான மட்டத்தைத் தேடிக் கண்டடைவது அவசியமாகிறது. இப்படி எத்தனை முறை திருத்திக்கொண்டே இருப்பது? அதுமட்டுமன்று, இந்த இயல்பான கூலி மட்டத்திற்கு இவ்விரு சாராரையும் ஒப்புக்கொள்ளவைப்பதிலும் பல சிரமங்கள் இருக்கின்றன.

கூலிகள் உயர்ந்தால் ஒரு தற்காலிக நிகழ்ச்சி என்று தொழில் முயல்வோர்கள் கருதுகின்றனர். ஆனல் தொழிலாளர்களோ, புதிய உற்பத்தி முறைகள் காரணமாக நியாயமாகச் செய்யப்படும்

நிரந்தர ஏற்பாடு என்று எடுத்துக்கொள்கின்றனர். தொழிலாளர்களை இவ்வாறு நினைத்துக்கொள்வதால், மந்தத்தின்போது கூலிகள் குறைக்கப்படுவதை இவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். ஏனென்றால், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பலன்களில் தமக்குப் பங்கேதும் கிடைக்காமல் போகிறது என்று இவர்கள் நினைக்கின்றனர்.

கூலிகள் வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்களோடு (Indexes of cost of living) இணைக்கப்படுவதாயிருப்பின் இத்தகைய சூழ்நிலை நிச்சயம் ஏற்படும். கூலிகள் வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்களோடு இணைக்கப்பட்டிருந்தால், வாணிபச்சுழல் முழுவதும் மெய்க்கூலிகள் (Real wages) மாறாமலிருந்து, தொழிலாளர்களுக்குப் போதிய நன்மை கிடைக்காது போய்விடும். "தொழிலின் உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கும்போது மெய்க்கூலிகள் மாறாமலிருக்குமானால், முன்னேற்றத்தின் நன்மைகளைப் பெறுவதிலிருந்து தொழிலாளர்கள் தடுக்கப்படுகின்றனர் என்று பொருள். இதனால் நாட்டு வருமானத்தில் தொழிலாளர்களுக்குள்ள பங்கு மெல்லத் தேய்ந்துவிடும்." (ஈஸ்டி).

ஆனால், மெய்க்கூலி மாறாமலிருப்பதனால் தொழிலாளர்களுக்குச் சில நன்மைகள் கிட்டாமல்போகின்றன. என்றாலும், மாறாமலிருக்கின்ற பணக்கூலி (Money wages) மாறாமலிருக்கின்ற மெய்க்கூலி மேலானது என்பதில் ஐயமில்லை. எனினும், நாட்டு வருமானத்தில் தொழிலாளர்களுக்குள்ள பங்கு நியாயமான அளவில் தொடர்ந்து இருந்துவரச்செய்யும் முறையில் மெய்க் கூலிகளை அவ்வப்போது மாறுதலடையச் செய்வதுதான் சிறந்த ஏற்பாடு. இவ்வேற்பாடு செய்யப்படவில்லை என்றால், தொழில் முயல்வோர்களுக்குக் கிடைத்திடும் இலாபங்கள் அளவுக்கு மீறிச்சென்று வாணிபத்தில் செழிப்பு நிலைமை வரம்பு மீறிப்போகும்.

கூட்டுப்பேரத்தை (Collective bargaining) அவ்வளவாக விரும்பாத தொழில் முயல்வோர் பலர் கூலி வழுக்களவுத் திட்டத்திற்கோ அல்லது இலாபப் பங்கேற்புத் திட்டத்திற்கோ இசைவு தெரிவிக்கின்றனர். ஆனால் நடைமுறையில் இத்திட்டங்களைத் திருப்திகரமாகச் செயற்படுத்துவதில் அநேக சிரமங்கள் இருக்கின்றன.

(b) கூட்டுப்பேரம்

கூலிகளை மாறிடச் செய்வதற்கான ஒரு முக்கிய வழி தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, வலிவான தொழிலாளர் அமைப்பொன்றை நிறுவுவதுதான் என்று தொழிலாளர்கள் எண்

ணுகின்றனர். கூட்டுப்பேரச் சக்தியினை வளர்த்துக்கொள்வதன் மூலமே கூலிகளை உயர்த்துவதற்காக வல்லமையைப் பெற்றிட முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். செழிப்பு நிலைமைகளில் மீண்டும் கூலிகள் உயர்த்தப்படும் என்பதற்கான நியாயமான உறுதிப்பாடு தரப்பட்டால்தான், மந்த நிலைமைகளில் கூலிகள் குறைக்கப்படுவதற்குத் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். செழிப்பில் தொழிலாளர்களுக்குரிய பங்கு மறுக்கப்படக்கூடாது. அதே நேரத்தில் உற்பத்தியளவிற்கு ஏற்றவாறு கூலிகள் இருக்கத் தவறுவதால் மந்தம் விளைகிறது என்ற நிலையும் இருக்கக்கூடாது. இத்தகைய சூழ்நிலை ஏற்படவேண்டுமென்றால், தொழிலாளர் இயக்கத்தின் உதவிக்கரம் தேவைப்படுகிறது. வலிவான தொழிலாளர் அமைப்பொன்று இருந்தால்தான் மந்தத்தின்போது ஏற்றுக்கொள்கின்ற கூலிக் குறைப்புக்களை ஈடுசெய்யும் வகையில் செழிப்பின்போது கூலிகளை உயர்த்துவது எளிதாயிருக்கும் என்ற நம்பிக்கை தொழிலாளர்களுக்கு ஏற்படும்.

ஆனால், இரு வழிகளில் செயல்படும் சாதனமாகக் கூலி நெகிழ்ச்சியினை இருக்கச் செய்வதற்குத் தொழிலாளர் சங்கங்கள் ஒப்புவதில்லை. கூலி உயர்வுகளைத் தொழிலாளர் சங்கங்கள் உற்சாகத்துடன் வரவேற்கின்றன. ஆனால் மந்த கட்டத்தின்போது கூலிகள் குறைக்கப்படுவதைப் பலவீனமான தொழிலாளர் சங்கங்கள்கூடப் பலமாக எதிர்க்கின்றன.

கூலிகளை உயர்த்துவதற்காகத் தொழிலாளர் சங்கங்களால் செய்யப்படும் பிரயத்தனங்கள் எல்லா நேரங்களிலுமே வெற்றியடையும் என்று கூறமுடியாது. செழிப்புக் காலங்களில்கூடச் சில நேரங்களில் இவற்றால் கூலிகளை உயர்த்த முடியாதுபோகலாம். கூலிகளின் பொது மட்டம் எந்த ஒரு நேரத்திலும் உழைப்பின் இறுதிநிலை ஆக்கத்திறனால் (Marginal Productivity of Labour) நிர்ணயிக்கப்படுகிறது. அம்மட்டத்திற்குக் குறைவாகக் கூலிகள் இருந்தால், தொழிலாளர் சங்கங்களால் கூலிகளை அப் பொது மட்டம்வரை உயர்த்த முடியும். அதற்கு மேலே கூலிகள் சிறிதளவு உயர்ந்தாலும், தொழில் முயல்வோரின் இலாபங்கள் குறைந்து, வேலைவாய்ப்பின்மை உருவாகிவிடும். ஒரு சில வலிவான தொழிலாளர் சங்கங்கள் ஒன்று திரண்டு கூட்டாக முயன்றால் கூலிகளை ஓரளவு உயர்த்தமுடியும் என்பது உண்மையே. ஆனால், அவ்வாறு கூலிகளை உயர்த்துமாறு வேலையளிப்போரைப்பலவந்தப்படுத்தினால் அவர்கள் தமது பண்டங்களின் விலைகளை உடனே உயர்த்திவிடுவர், அல்லது வேறு பலவீனமான தொழிலாளர் சங்கங்களுக்குட்பட்ட தொழிலாளர்களின் கூலிகளை மெல்லக் குறைத்துவிடுவர். மேலும்,

அவ்வாறு கூலிகளை உயர்த்துமாறு தொழில் முயல்வோர்களைக் கட்டாயப்படுத்தும் வகையில் ஒரு சில சங்கங்களால்தான் இணைந்து செயல்பட முடியுமே தவிர, எல்லாச் சங்கங்களாலும் அல்ல. இத்தகைய சூழ்நிலைகளில், கூட்டுப்பேரத்தினால் கூலிகளை உயர்த்துவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

தொழிலாளர் சங்கங்கள் வலிவுற்றிருந்துவரும் வட்டாரங்களில் செழிப்புக் காலங்களில் கூலிகள் மிகவும் மெதுவாக உயரும். மந்தகாலங்களில் மிகவும் விரைவாகத் தாழும்; வலிவு மிகுந்தவையாயிருந்துவரும் வட்டாரங்களில் செழிப்புக் காலங்களில் கூலிகள் மிகவும் துரிதமாக உயரும். மந்தகாலங்களில் தாழாமலுமிருக்கும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் உழைப்பின் ஆக்கத்திறனுக்கதிகமாகக் கூலிகள் அமையுமானால், தொழில் முயல்வோரின் இலாபங்கள் குறைந்துபோய், வேலைவாய்ப்பின்மை உருவாகும் அல்லது விலைகள் உயர்ந்து பணவீக்கம் தொடர்ந்து வளர்ந்தோங்கும். இவ்வாறு பணவீக்கம் வளரும்போது, வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கும். அப்போது, கூலிகள் மேலும் உயர்த்தப்படவேண்டும் என்று கோரித் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வர். கூலிகள் இன்னும் உயர்கின்றபோது, பணவீக்க நச்சுச் சுழல் (Vicious circle) மென்மேலும் தீவிரமடைந்துகொண்டே போகிறது. ஏற்கெனவே செழிப்பு மத்தியில் இருந்து வருவதாயுள்ள பொருத்தக் கேடுகள் (Maladjustments) இப்பண வீக்கத்தால் மேலும் தீவிரமடைந்து பல்வேறு கேடுகள் வாணிபத்தில் தோன்றுகின்றன.

இவ்விதக் காரணங்களால், கூலிகளை உயர்த்துவதற்குக் கூட்டுப்பேரத்தைமட்டும் நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை என்றும் உரிய சட்டங்களை இயற்றுவதற்கான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டு வருகின்றது.

(c) சட்டத்தின் உதவி

சட்டங்களை இயற்றுவதன்மூலம் கூலிகளைப் போதிய அளவிற்கு மாறிடச்செய்வது அவ்வளவு எளிதான செயலன்று. தனியார் தொழில் துணிவை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார அமைப்புக்களில், கூலிகளை மாறிடச்செய்வதற்குரிய சட்டங்களை இயற்றுவதற்கும், செயற்படுத்திவைப்பதற்கும் அநேக தடைகள் இருந்துவருகின்றன. மந்த காலங்களில் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி (Minimum wages) கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் சட்டமியற்றுதல்மூலம் நாம் செய்யமுடியும். என்

ருலும், செழிப்புக் காலங்களில் சட்டமியற்றுதல்மூலம் கூலிகளை உயர்த்துவது மிகவும் கடினமாயிருக்கிறது. உழைப்பின் இறுதி நிலை ஆக்கத்திறன் மதிப்புக்குக் கூடுதலாகக் கூலிகளை உயர்த்துவது எவ்வாறு முடியும்?

சட்டத்திஞல் இவ்வாறு போதிய உதவி கிடைக்காது போவதை உணரும் சில பொருளாதார அறிஞர்கள், தொழில் முயல்வோரின் இலாபங்கள்மீது வரிகளைப் போட்டு, அவ்வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய்களைத் தொழிலாளர் சமூகநலத் திட்டங்களின்மீது செலவிட்டால், நாட்டு வருமானத்தில் தொழிலாளருக்குள்ள பங்கு பாதிக்கப்படாமலிருந்துவரும் என்று யோசனை தெரிவிக்கின்றனர். இத்தகைய யோசனையை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்ருல், இந்த வரிகள் தொழில் வளர்ச்சிக்குத் தீங்கிழைத்து நாட்டு உற்பத்தியையும், வருமானத்தையும் குறைத்துவிடும் இயல்பினைப் பெற்றிருக்கின்றன.

இவைகளையெல்லாம் நிதானமாக ஆராய்ந்து பார்த்தால், கூலிகளை மாறிடச்செய்வது அவ்வளவு சாமானியமான ஒரு செயலாக இல்லை என்பது தெளிவாகிறது. அவ்வாறெனில், கூலிக் கொள்கையை விட்டுவிட்டு வேறு வழிகளில் நிலைபேருக்கத்தை அடைய முயல்வது அவசியமாகிறது. நாட்டு மக்களிடையே வருமானத்தைச் சமமாகப் பங்கீடு செய்தால் வாணிபச் சுழல்கள் மறைவதாக இருக்கும் என்று ஹாப்சன் நம்பினூர்.

24. விலைக் கைக்கோள்

(Price Policy)

"சாதனங்கள் எவ்வாறு பயன்படுத்தப் பெறவேண்டும் என்பதற்கு விலைகள் வழிகாட்டிகளாயிருக்கின்றன."
— ஜூல்ஸ் பேக்மன்

விலைகளின் நெகிழ்வின்மைக்குக் காரணங்கள்

பொருளாதாரக் கட்டமைப்பில் கூலிகள் மட்டும் நெகிழ்ச்சியற்றதாயிருக்கவில்லை, விலைகளும்கூட நெகிழ்ச்சியற்றிருக்கலாம். செழிப்புக் காலங்களில் அறிமுகப்படுத்தப்படும் புத்தாக்கம் (Innovation) வழியே செலவுகள் குறைவதனால் விளையும் நன்மைகள் பொதுமக்களைப் போய்ச் சேரவில்லையென்றால் விலைகள் நெகிழ்ச்சியற்றிருக்கின்றன என்று பொருள். மந்த காலங்களில் பண்டங்களின் உற்பத்தியளவை உற்பத்தியாளர்கள், குறிப்பாக சர்வாதீனர்கள், குறைக்க முயலும்போது விலைகள் நெகிழ்ச்சியற்றவையாய் அமைகின்றன. மந்த நிலைமைகளில் விலைகள் உயர் மட்டத்தில் இருக்கச் செய்யவே எல்லா உற்பத்தியாளர்களும் முயல்கின்றனர். அங்காடியில் நிறைவற்ற போட்டி (Imperfect competition) நிலவிவருவதாயிருந்து, சர்வாதீன சக்திகள் அங்கும் இங்கும் காணப்படுவதாயிருந்தால், பண்டங்களின் விலைகள் குறுங்கால இயல்பு விலைக்குக் கூடுதலாகவே அமைகின்றன. அதோடு உற்பத்தியிலும் வழக்கு மீறிய குறைப்பு செய்யப்படுகின்றது. இதற்கான காரணங்கள் யாவை?

1. அங்காடியைக் கெடுத்து விடக்கூடாது என்ற அச்சம் உற்பத்தியாளரிடம் இருக்கிறது. கூலிகளைக் குறைத்து அவற்றை மாறுஞ் செலவுகளுக்குச் (Variable costs) சமமாக மட்டும் இருக்கச் செய்தால், அவை உற்பத்தியின் மொத்தச் செலவுகளுக்குப் போதியதாயிருப்பதில்லை. விலைகளை ஒரு முறைக்குக் குறைத்து விட்டால், பிறகு அவைகளை உயர்த்துவது என்பது

மிகவும் கடினம். யாராவது விலைகளை மிகவும் குறைத்தால், பிற உற்பத்தியாளரின் பழிச் சொல்லுக்கு உள்ளாக நேரிடும். மந்த காலங்களில் விலைகளைக் குறைத்துவிட்டால், பிறகு செழிப்புக் காலங்களில் விலைகளை உயர்த்துவது எளிதன்று. குறைந்த விலைகளுக்கேற்பத் தமது வாங்கற்பாடுகளை அமைத்துக்கொள்ளும் நுகர்வோர்கள், விலைகள் மீண்டும் உயர்த்தப்பட்டால் அது நியாயமற்ற செயல் என்று கண்டனம் தெரிவிக்க மாட்டார்களா? எனவே, மந்த காலங்களில் விலைகளைத் தாழ்த்திடுவதற்கு உற்பத்தியாளர்கள் ஒப்புவதில்லை.

2. மந்தத்தின்போது பண்டங்களுக்கான தேவை நெகிழ்ச்சியற்றிருக்கிறது என்றும், ஆகவே விலைகளைக் குறைப்பதனுல் அதிகமான விற்பனை நிகழப்போவதில்லை என்றும் உற்பத்தியாளர்கள் கருதுகின்றனர். தேவை நெகிழ்ச்சியற்றிருப்பதன் காரணமாக விலைக் குறைப்பினுல் பலன் ஏதும் கிடைக்காது போவது, முதற் கருவிப் பொருட்களையும், எந்திரங்களையும் தயாரித்துவரும் தொழில்களில் பெரிதும் உண்மையாயிருக்கிறது. முதற் கருவிப் பொருட்களுக்கும், எந்திரங்களுக்கும் உள்ள தேவை வழிவந்த தேவை (Derived demand) ஆகும். இது, வேக வளர்ச்சித் தத்துவம் (Principle of acceleration) காரணமாக மிகவும் நெகிழ்ச்சியுற்றுப் போகிறது. இந்நிலையில் இப்பொருட்களின் விலைகளைக் குறைப்பதனுல் உற்பத்தியாளர்களுக்கு என்ன நன்மை கிட்டப்போகிறது? மேலும், தொழில் துறைத் தேவையானது (Business demand) வாணிபத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறதே தவிர விலை மட்டத்தை அன்று. ஆகவே, விலைகளைக் குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் முன் வருவதில்லை.

3. செலவுகளுக்குக் கட்டி வராத விலைகளை உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. உற்பத்திச் செலவுகளையும் ஒரளவான இலாபங்களையும் உள்ளடக்கியுள்ள விலைகளில் பண்டங்களை விற்கவே விழைகின்றனர். செலவுகளுக்குக் கட்டி வருவதாயுள்ள விலைகளையே இவர்கள் நியாயமான விலைகள் என்று கருதுகின்றனர். விலையில் மாறுஞ் செலவுகளேயல்லாது பொதுச் செலவுகளும் (Overhead costs) இடம் பெறவேண்டும். இல்லையென்ருல், தொழில், இழப்புக்குள்ளாகிறது.

மந்த நிலைமைகளில் மாறுஞ் செலவுகள் குறைகின்றன. ஆனுல் பொதுச் செலவுகள் (தேய்மானச் செலவுகள் உட்பட) குறைவதே இல்லை. அப்படியே குறைந்தாலும் மிகவும் நுண்ணிய அளவில்தான் குறைகின்றன. ஆகையால் விலைகளைக் குறைக்க

முன் வருவதில்லை. அதிலும், குறிப்பாகப் பேரளவு உற்பத்தி நிறுவனங்கள் கடுமையாக எதிர்க்கின்றன. அங்காடியில் விலையில் போட்டி (Price competition) நிலவுவதாயிருப்பின் விலைக் குறைப்பு நிகழக் கூடும். ஆனால் தற்போது விவசாயத்தில் மட்டுமே விலைப் போட்டி காணப்படுகிறது. இதனால்தான் மந்தத்தின் போது விவசாயப் பொருட்களின் விலைகள் குறுங்கால இயல்பு விலைகளுக்குச் சமமாக இருக்கின்றன. ஆனால், பொறி செய் பொருட்களில் (Manufactures) விலைப் போட்டி காணப்படுவதில்லை; அங்கே நிறைவற்ற போட்டி காணப்படுவதால் விலைகள் நெகிழ்ச்சியற்றிருக்கின்றன.

விலை நெகிழ்ச்சியின் விளைவுகள்

விலைகளின் நெகிழ்வின்மை தற்போது பொருளாதார இயலாரால் மிகுந்த அக்கறையுடன் ஆராயப்பட்டு வருகின்றது. விலைகளின் நெகிழ்வின்மை சமீப காலங்களில் அதிகரித்து வருகின்றதோ என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. பேரளவு உற்பத்தி முறையின் வளர்ச்சி, பொருளாதார சக்தியின் குவிப்பு (Concentration of Economic power) முதலியவற்றால் விலைகளின் நெகிழ்வின்மை மேலும் வலுப் பெற்றிருப்பதாக இவர்களுக்குப் படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த மாபெரும் மந்தத்திற்கான ஒரு முக்கியக் காரணம் விலைகளின் நெகிழ்வின்மையே என்று பலர் கருதுகின்றனர் இந்த மாபெரும் மந்தத்தின்போது (1929—1932) அமெரிக்காவில், கச்சாப் பொருட்கள், விவசாயப் பண்டங்கள், உறுதியற்ற பொருட்கள், தரப்படுத்திய பண்டங்கள் முதலியவற்றின் விலைகள் நெகிழ்ந்து கொடுத்தன. ஆனால், பொறிசெய் பொருட்கள், கட்டுமானத் தயாரிப்புக்கள், உறுதிப் பண்டங்கள், வேறுபாடுட்டிய பொருட்கள் (Differentiated products) முதலியவற்றின் விலைகள் நெகிழ்ந்து கொடுக்கவே இல்லை. குறிப்பிட்ட சில அங்காடிகளை ஒரு சில சர்வாதீன நிறுவனங்கள் தமது கைப்பிடிக்குள் வைத்துக் கொண்டிருந்ததன் விளைவாகவே இந்தப் பண்டங்களின் விலைகள் நெகிழ்ந்து கொடுக்காமல் போயின என்று பொருளாதார அறிஞர்கள் கண்டனர்.

விலைகள் இப்படி நெகிழ்ந்து கொடுக்காமலிருப்பின் சரிசம வளர்ச்சியினைப் (Balanced growth) பெறுவது மிகவும் கடினம். தொழில் நுட்ப மாறுதல் வினாடி தோறும் மலர்ந்து வரும். இந்நாட்களில் பண்டங்களின் விலைகள் நெகிழ்வடையாதிருந்து வருமானால், தேவையான சீரமைவுகள் (Adjustments) உடனுக்குடன்

ஏற்படுவதில் தடைகள் ஏற்பட்டு, மந்தத்தின்போது ஒரு கொடிய, நீண்ட தேக்கநிலை உண்டாகிவிடும். மந்த காலங்களில் பண்டங்களின் விலைகள் மாருதிருப்பின், உற்பத்தியளவின் மாறு தல்கள், குறிப்பாக முதற் கருவிப் பொருட்களின் உற்பத்தியளவின் ஏற்ற இறக்கங்கள் பெரிதும் தீவிரமடைகின்றன.

விலைகளை நெகிழ்வடையச் செய்வது நிலைபேருக்கத்தினை அடைவதற்கான ஒரு முக்கிய வழியாகும். வாணிப ஏற்ற இறக் கங்கங்களுக்குரிய காரணங்களில் ஒன்று விலைகளின் நெகிழ்வின்மை. எனவே, விலைகளைச் சற்று நெகிழ்ந்து கொடுக்கும்படி நம்மால் செய்ய முடியுமென்ருல், தொழில் மாறுதல்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி, பொருளாதார அமைப்பு ஸ்திரமாக இருந்து வரு வதற்கான ஏற்பாட்டினை நடைமுறைக்குக் கொண்டு வருவது சாத்தியமாகும்.

விலைகளில் மாறுதல்களைச் செய்வது எளிதாயிருந்தால், தொழில் நுட்பம் விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கும் காலங் களில் இலாப வீக்கத்தைக் (Profit inflation) கட்டுப்படுத்தி, முத லீட்டுப் பூரிப்புப் (Investment Boom) பேரிடரைக் குறைப்பது சுலப மானதாயிருக்கும். விலை நெகிழ்வால் மந்தத்தின் தீவிரமும், நீடிப்பும் குறைகின்றன; கட்டுப்படுத்தப்பெற்ற விலைகளுக்கும் (Controlled prices) கட்டுப்படுத்தப்பெரு விலைகளுக்கும் உள்ள வேறுபாடு பெரிதும் குறைந்து, அப்பொருளாதாரச் சிக்கல்கள் குறையும். அதோடு, நிர்வகிக்கப்பட்ட விலை மட்டத்தைப் (Managed Price level) பேணிக் காப்பதற்கான பணத்துறைக் கொள்கையை வெற்றிகரமாக அமல் செய்வதும் சாத்தியமாகும். தலைவீதப் பணப் பருமத்தை (Volume of meony percapita) மாருத அளவில் வைத்துக்கொண்டு, தொழில் நுட்ப அறிவின் முன்னேற்றங்களுக்கேற்ப விலைகளைக் குறைப்பது என்பது பண நிர்வாகத்தின் குறிக்கோளாக இருந்தால், உற்பத்திச் செலவுகள் குறையும்போது எல்லாப் பண்டங்களின் விலைகளும் குறைந்து, சராசரி விலைமட்டம் தாழ்வாக இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கு மாருக, செலவுகள் குறையும்போது ஒரு சில பண்டங்களின் விலைகள் மட்டும் உயர் மட்டத்தில் இருக்குமாளுல், மற்றப் பண்டங் களின் விலைகளை அளவுக்கு மீறிக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, எல்லா விலைகளையும் குறையுமாறு செய்தால்தான், உற்பத்தியாளர் சமூகத்திற்கு நன்மை கிட்டுவதா யிருக்கும். எல்லா விலைகளையும் குறையச் செய்வது என்பது, விலைகள் நெகிழ்ந்து கொடுப்பதாயிருந்தால்தான் சாத்தியமாகும்.

விலைகளை நெகிழவைப்பதற்கான வழிமுறைகள்

இனி விலைகளை நெகிழ்வடையச் செய்வதற்கான வழிமுறைகளைக் காண்போம். உற்பத்தியாளரின் வழக்கமான மனப்போக்குகளைத் திருத்தியமைப்பதும், சற்று விசாலமான போக்குடன் உற்பத்தி நடவக்கையில் ஈடுபடுமாறு அவர்களை வற்புறுத்துவதும், நெகிழ்வடையச் செய்வதற்கான ஒரு முக்கிய வழியாகும். சர்வாதீன நடவடிக்கையால் ஏற்படக்கூடிய நன்மைகளைச் செழிப்புக் காலங்களில் இவர்கள் விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும். அதோடு, பண்டங்களுக்கான தேவை நெகிழ்ச்சியற்றிருக்கிறது என்ற நம்பிக்கையிலிருந்து இவர்கள் மந்த காலங்களில் விடுபடவேண்டும். தொழில் நுட்ப அறிவு மேன்மேலும் வளர்ச்சியுற்று வரும் நிலைமையில் விலைகளைக் குறைப்பதே விவேகமான செயல் என்பதை இவர்கள் புரிந்து கொள்வது மிகவும் அவசியம். விலைகளைப் பற்றி ஒரு முற்போக்குக் கருத்து உருவாதல் வேண்டும். விலைகளைக் குறைத்தால், தேவை விரிந்து, உற்பத்தி பெருகும் என்ற நம்பிக்கை வேரூன்ற வேண்டும்.

மந்தத்தின் போது விலைகள் உடனடியாகக் குறைக்கப்பட்டு ஒரு முறை விலைகள் குறைக்கப்படாது என்ற உறுதிப்பாடு இருந்தால் மந்த நிலைமை நிச்சயம் கட்டுப்படும். ஆனால், அத்தனை உற்பத்தியாளர்களும், தமதுபண் டங்களின் விலைகளை ஒருமித்துக் குறைக்க முன் வருவார்களா என்பதுதான் ஐயமாயிருக்கிறது. உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தால், அவை வழியே உற்பத்தியாளர் அனைவரையும் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடச் செய்வது எளிதாயிருக்கும். தமக்குப் பண்டங்களை வழங்கிவரும் நிறுவனங்கள் விலைகளைக் குறைக்கப்போகின்றன என்று தெரிந்தால் தான் ஒரு நிறுவனம் தமது பொருட்களின் விலைகளைக் குறைக்க முன் வரும்.

ஆகவே விலைகள் நெகிழ்வடையச் செய்வதற்கு உற்பத்தியாளர் சங்கங்கள் உதவ முடியும். உற்பத்தியாளர் சங்கங்கள் பொதுவாக விலையை உயர்த்துவதிலேயே குறியாயிருக்கும் என்ற கருத்து நம்மிடையே நிலவிவருகிறது. இதனால், இவைகளின் நடவடிக்கைகளைப் பல நேரங்களில் நாம் வெறுப்புடனும், சந்தேகத்துடனும் கவனித்து வருவதுண்டு. ஆனால் உற்பத்தியாளர் சங்கங்கள் உண்மையில் நிலைபேருக்கம் அடைவதன் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மந்தத்தினல் ஏற்படக்கூடிய பொருளாதாரச் சீர்குலைவுகள், மற்றவர்களை மட்டும் பாதிப்பதில்லை, வாணிபத்தையும்

பாதிக்கிதது. எனவே மந்தத்தைப் போக்குவதில் மற்றவர்களுக்கு எத்தகைய அக்கறை இருக்கிறதோ அதே அளவு அக்கறை உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் உண்டு.

இந்த அக்கறை காரணமாக, உற்பத்தியாளர் சங்கங்கள் தொழில் ஏற்ற இறக்கங்களுக்கான தீர்வுகளை வழங்கி வருகின்றன. உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் நிலைப்படுத்தி, உற்பத்தியையும் நுகர்ச்சியையும் ஒருங்கிணைத்தால், பொருளாதாரத் திட்டத்தில் சரிசம வளர்ச்சியினை எய்தமுடியும் என்றிவை வலியுறுத்தி வருகின்றன. வாணிபத்தால் ஏற்படக்கூடிய பூரிப்பு நிலைமைகள் அமித உற்பத்தியில் (Over production) விளைகின்றன என்பதையும் போட்டிமயத் தொழிலமைப்பில் உற்பத்தி கட்டுப்படுத்தப் பெறுமலிருந்து வருவதனால் அமித உற்பத்தி ஏற்படுகிறது என்பதையும் உற்பத்தியாளர் சங்கங்கள் உணர்ந்திருக்கின்றன. ஒவ்வோர் உற்பத்தி நிறுவனமும் போட்டி மனப்பான்மையில் பண்டங்களைத் தயாரித்து வருகின்றன. மற்ற நிறுவனங்கள் என்ன செய்து வருகின்றன என்பது எந்த ஒரு நிறுவனத்துக்கும் தெரிவதில்லை. ஒவ்வொரு நிறுவனத்தின் உற்பத்தியளவும் பெருகிக் கொண்டே போகிறது. இதனால் மொத்த உற்பத்தி மட்டு மீறி அதிகரித்துப் பூரிப்பு நிலைமை வாணிபத்தில் அடி எடுத்து வைக்கிறது. இதனை எல்லா உற்பத்தியாளர் சங்கங்களும் ஒப்புக் கொண்டு, அமித உற்பத்தி தவிர்க்கப்பட்டு, வாணிப மாறுதல்கள் மறைய வேண்டுமெனில் ஒருங்கிணைப்பும், திட்டமிடுதலும் (Planning) கையாளப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் திட்டமிட்டுச் செயல்பட்டால் உற்பத்தி வரம்பு மீறிப் போகாது. திட்டமிடுதல் மூலமாகத்தான் உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியும். உற்பத்தியளவை நிலைப்படுத்துவது என்பது ஓர் உயரிய நோக்கமாகும். உற்பத்தியாளர் சங்கங்களின் பணிகளால் இந்நோக்கம் நிறைவேறக்கூடும் என்றால் வாணிபத்திற்கு மாபெரும் நன்மை விளைவதாயிருக்கும்.

ஆனால், துர்ப்பாக்கியவசமாக, உற்பத்தியை நிலைபாடடையச் செய்வதில் குறியாயிருப்பதோடு விலையை நிலைபாடடையச் செய்வதிலும் இச்சங்கங்கள் குறியாயிருந்து வருகின்றன, பல நேரங்களில் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தான் நிலைபேறடைச் செய்ய முடியுமே தவிர இரண்டையும் செய்வது முடியாது. ஒரு சில குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இவை இரண்டையும் நிலைபேறடையச் செய்யமுடியும். இத்தகைய நேரங்கள் கிடைப்பது மிகவும் அரிது எனலாம். தேவை மாறுதிருக்குமானால் உற்பத்தி, விலை ஆகிய இரண்டையும் நிலை

பேறடைய வைக்க முடியும். தேவை மாறுவதாயிருப்பின், இவற்றில் ஏதாவது ஒன்றைத்தான் நிலை பேறடையச் செய்ய முடியும்.

எனவே நிலையான உற்பத்தி, நிலையான விலை என்ற இரண்டையும் உற்பத்தியாளர் சங்கங்களால் சாதிக்க முடிவதில்லை ; ஏதாவது ஒன்று என்கின்ற நிலையில் அவை பெரும்பாலும் நிலையான விலை என்பதன் பக்கமே சாய்கின்றன. உற்பத்தியாளர் சங்கங்கள் அடிப்படையில் உற்பத்தியாளர் சமூகத்தின் எண்ணங்களையே பிரதிபலிக்கின்றன. ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வரும் வாணிபப் பழக்கவழக்கங்களையே தொடர்ந்து இருந்து வரச் செய்கின்றன. செலவுகளுக்கு மேலான விலைகளை நிர்ணயிப்பதில் இவை சிரத்தை எடுத்துக்கொள்வதாயிருக்கலாம். மந்தத்தின் போது விலைகளை உயர்த்துவதற்கு முயலலாம். ஆகவே, இவைகளிடமிருந்து, விலைகளை நெகிழ்வடையச் செய்வதற்கு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நாம் பல வேளைகளில் ஏமாறுவோம்.

என்றாலும் திட்டமிடாப் பொருளாதார அமைப்பின் ஒரு வழக்கமான இயல்பாக, வாணிபச் சுழல்களைக் கருதுவோர், உற்பத்தியாளர் இயக்கத்தினை நிலைபேருக்கத்திற்கான ஒரு கருவியென்றே நம்புகின்றனர்; உரிய கட்டுப்பாடுகளை அரசாங்கம் கொண்டுவர முடியுமென்றால், இவ்வியக்கத்தின் உதவிகொண்டு நிலைபேருக்கத்தினை எய்தமுடியும் என்று கருதுகின்றனர். நிலைபேருக்கப் பயன்களைக் கருதி, அரசாங்கம் விலைகளை முறைப்படுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ முன்வரவேண்டும் என்றும், உற்பத்தியாளர் சங்கங்கள் இதற்கு இசைவு தெரிவிக்கவில்லை என்றால், உரிய சட்டங்களை இயற்றுவதன் மூலம் இதனை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் இவர்கள் மேலும் கூறுகின்றனர்.

ஆனால் இவ்வாறு விலைகளை ஒழுங்குபடுத்துவது என்பது எளிதான செயலன்று. ரயில் போக்குவரத்து, பொது வசதிகள் (Public utilities) போன்ற சற்றேறக்குறைய நிலையான தொழில்களைப் பொறுத்தவரையில் கூடச் சரியான விலை எது என்பதனை நிர்ணயிப்பது பெரிய பிரச்னையாயிருக்கிறது. தொழில்களும் உற்பத்தி முறைகளும் துரிதமாக மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் விலைகளை அரசு ஒழுங்குபடுத்திவைப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. தொழில் நுட்ப அறிவின் வளர்ச்சிக்கேற்ப மெதுவாக விலைகளை மாற்றியமைத்து வருவது சாத்தியமானதாயி

ருக்கலாம். ஆனால் சுழலின் நிலைபேறுக்கத்திற்குத் தேவைப்படும் குறுங்கால மாறுதல்களை விரைவாகச் செய்யமுடியும் என்பது அரசால் இயலாது. விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நீண்ட நேரத்தை எடுத்துக்கொள்கிறது. சுழல் ஏற்ற இறக்கங்களை மட்டுப்படுத்தி நிலைபேறுக்கத்திற்கு வழிவகுக்க வேண்டுமென்றால் விலைகளை அரசாங்கம் விரைவாக ஒழுங்குபடுத்திட வேண்டும். இது அரசாங்கத்தால் முடியுமா? சட்டத்தை இயற்றி, நிறைவேற்றி வைப்பது அவ்வளவு விரைவில் நடைபெற முடியுமா? மேலும் விலைக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்தும்போது பல தீமைகள் தோன்றுகின்றன. "கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட உற்பத்தியாளர்கள் கட்டுப்பாடு செய்பவர்களை மகிழ்விப்பதற்காகப் பணத்தைச் செலவிடுகிறார்களே தவிர, தமது தொழிலை அபிவிருத்தி செய்வதற்கன்று."

விலைகளை அரசு ஒழுங்குபடுத்த முயலுகின்றபோது இப்படிப் பல பிரச்சினைகள் உருவாவதைக் கண்ணுறும் சில பொருளாதார அறிஞர்கள், போட்டி (Competition) மூலம் விலைகளை நெகிழ்வடையச் செய்வதே சிறந்த வழி என்று கூறுகின்றனர். போட்டிமய சமூகத்தில் விலைகள் நெகிழ்ந்து கொடுப்பவையாயிருக்கின்றன. மறு சீரமைவுகள் (Readjustments) உடனுக்குடன் ஏற்படுகின்றன. தொழில் உலக மாறுதல்களுக்கேற்பச் சமூகச் சூழ்நிலைகளை மாற்றியமைப்பதற்கும், விலைகளை நெகிழ்வடையச் செய்வதற்கும் தடைகளாக இருக்கின்ற சர்வாதீனச் சக்திகளைப் போட்டி ஒன்றன் மூலம்தான் நம்மால் முறியடிக்க முடியும்; சர்வாதீன நிறுவனங்கள் தகர்த்தெறியப்பட்டு, ஒன்றோடொன்று பலமாகப் போட்டியிட்டுக்கொள்ளக்கூடிய பல்லாயிரக்கணக்கான தொழில் நிறுவனங்கள் வாணிபத்தில் காலூன்றவேண்டும். அப்போதுதான், பண்டங்களின் விலைகளைப் பொருத்தமான அளவுகளில், தேவையான நேரங்களில் உயர்த்துவதோ அல்லது தாழ்த்துவதோ சாத்தியமாயிருக்கும். தொழில் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் எளிதாயிருக்கும்.

ஆனால் இவ்வாறு சர்வாதீன சக்திகளை மோதியழித்து, பேரளவு உற்பத்தி நிறுவனங்களை உடைத்தெறிவதனால், பேரளவு உற்பத்தி முறையின் பல்வேறு அகச்சிக்கனங்களும் (Internal Economies) புறச்சிக்கனங்களும் (Extermal Economies) சமூகத்திற்குக் கிடைக்காமல் போகின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்குப் பேரளவு உற்பத்தி முறையின் சிக்கனங்களும் நம்மை விட்டு நீங்குகின்றன. பல்வேறு இனிய சிக்கனங்

களை வழங்கிவரும் பேரளவு உற்பத்தி முறையினை எந்த ஒரு சமூகமும் எளிதில் கைவிடுவதற்கு முன்வருவதில்லை. போட்டி மூலம் விலைகளை நெகிழ்வடையச் செய்ய முடியுமென்றால் நல்லது தான். ஆனால் அதற்காகப் பேரளவு உற்பத்தி முறையின் சிக்கனங்களை இழப்பதற்கு எந்தப் பொருளாதார அமைப்பும் எளிதில் இசைவதில்லை.

விலைகளை நெகிழ்வடையச் செய்வதற்குரிய சில முக்கிய வழிகளை இதுவரை ஆராய்ந்தோம். இவற்றில் எந்த ஒரு வழியும் பூரணமான வெற்றியை நமக்குக் கொண்டு வருவதாக இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு வழியிலும் பலவகையான குறைபாடுகள் இருக்கின்றன. இவைகளைக் கையாள்வதிலும் சில முக்கிய சிரமங்கள் இருக்கின்றன. விலைகளை நெகிழ்வடையச் செய்வது ஒரு பிரச்னையாக இருக்கின்ற இத்தகைய நிலைமையில் நாம் அடுத்து என்ன செய்வது? வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த வழியினைப் பின்பற்றுவது?

பொருளாதாரத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் விலைகள் நெகிழ்வடையாது இருந்துவரவே செய்யும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே அரசின் பணத்துறை மற்றும் அரசிறைக் கைக்கோள் மூலகாகப் பயன்படு தேவையினைப் பேணிக் காத்து அதன் மூலமாக நிலைபேறுக்கமடைவதற்கு நாம் முயலவேண்டும்.

25. சர்வதேசச் சுழல் கைக்கோள்
(Policy)

''செயலினால் எப்பொழுதுமே மகிழ்ச்சி விளைந்து விடுவதில்லை. ஆனால், செயலின்றி மகிழ்ச்சியாக நிச்சயம் இருக்க முடியாது.''

— டிஸ்ரேலி

சர்வதேச மந்த எதிர்ப்புக் கைக்கோளில் (International Anti-depression Policy) இடம்பெறும் திட்டங்களின் முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

(1 தொழில் வளமிகுந்த பெருநாடுகளில் வேலைவாய்ப்பினைப் பெருக்கி நிலைபேறடையச் செய்தல்.

(2) கச்சாப் பொருட்கள் மற்றும் அடிப்படைப் பண்டங்களை (Primary products) உற்பத்தி செய்துவரும் நாடுகளின் ஏற்றுமதிகளைப் பாதுகாக்கும் வகையில் அந்நாடுகளின் அடிப்படைப் பண்டங்களின் விலைகளை நிலைபேறடையச் செய்தல்.

(3) தொழில்வளம் குறைந்த நாடுகளின் ஆக்கத்திறனை அதிகப்படுத்துவதற்குரிய முறையில் சர்வதேச முதலீட்டை (International investment) உற்சாகப்படுத்தி, வளர்த்து, மேம்படுத்துதல்.

(4) அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாடுகளுக்கு உதவிகளை வழங்கல்.

சர்வதேசக் கூட்டுறவு இருந்தால்தான் இந்நோக்கங்கள் நிறைவேற முடியும். பண வீக்கம் (Inflation) அல்லது பண வாட்டம் (Deflation) உலகின் எந்த மூலையில் ஏற்பட்டாலும், அதனால் உலகின் ஏனைய பகுதிகளும் பாதிக்கப்படுகின்றன. வெவ்வேறு திசைகளில் பண்டங்களின் விலைகள் செல்வதனால் வாணிபத்தில் குழப்பங்கள் மலிகின்றன. ஒவ்வொரு நாடும் தனது பண்டங்கள்

விலைகளின் பொது வட்டத்தை நிலைபேறுக்கம் (Stabilisation) செய்வதற்கு முன்வந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டால், சர்வதேச அரங்கில் நிலைபேறுக்கம் நிலவுகின்ற நாள் நெடுந்தொலைவில் இல்லை என்று கூறிவிடலாம். விலைகளை நிலைபேறுக்கம் செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு நாடும் தனது உற்பத்தி மாறுதல்களுக்கேற்பப் பணக் கூலிகளை (Money wages) மாற்றி யமைத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. அதாவது, தொழில் நுட்ப முன்னேற்றத்தை அனுபவித்துவருகின்ற ஒரு நாடு, தனது தொழிலாளர்களின் கூலிகளை உடனே உரிய அளவில் உயர்த்திக்கொண்டு, சராசரிக் கூலிச் செலவுகள் மாறுதிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறே, மிதமான தொழில் முன்னேற்றத்தைப் பெற்று வரும் ஒரு நாடு தனது தொழிலாளர் கூலிகளை மிதமாக உயர்த்திக் கொண்டு கூலிச்செலவு மாறுதிருந்துவரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

இப்படி உற்பத்தித்திறன் மாறுதல்களுக்கேற்ப வருமானங்கள் அவ்வப்போது மாற்றி யமைக்கப்படுவதாயிருப்பின் எல்லா நாடுகளிலும் விலைமட்டங்கள் ஒரே சீராக இருந்துவரும் என்று உறுதியாக நம்பலாம். விலை மட்டங்கள் சீராயிருந்துவந்தால், எந்த ஒரு நாடும் அயல்நாட்டில் விற்கமுடியவில்லை என்ற நிலைக்கு ஆளாவதில்லை. விலைகளை நிலைபேறுக்கம் செய்ய நாடுகள் முற்படும்போது, சில நாடுகளுக்குச் சில தனிவகைப் பண்டங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், போட்டியிட்டு விற்க ஒப்பீட்டு நன்மை (Comparative advantage) இல்லாது போகலாம். ஆனால், இந்நாட்டுப் பண்டங்களின் விலைகள் மட்டு மீறிப்போகாமல் கட்டுப்படுத்திவைக்கப்பட்டவரையில், அது அயல்நாட்டு வாணிபத்தில்இடர்ப்பாடடையாது. ஆகவே, எல்லா நாடுகளின் விலைகளும் நிலைபேறுக்கம் செய்யப்பட்டால்தான் பன்னாட்டுச் சமநிலைக்குக் கேடு உண்டாகாது.

ஒருங்கிணைப்பின் (Co-ordination) முக்கியத்துவம்

சர்வதேசச் சுழல் எதிர்ப்புக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும், சுழல் எதிர்ப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து வெற்றி காண்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை (United Nation) ஒரு பொருளாதாரச் சமூக மன்றத்தினை (Economic and Social Council) ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு பயனுள்ள அமைப்பு. சுழல் எதிர்ப்பு முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமெனில், நாடுகளின் சுழல் எதிர்ப்புத் திட்டங்களிடையே தொடர்பும் ஒருங்கிணைப்பும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இத்தகைய ஒருங்கிணைப்பை ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரச் சமூக மன்றத்தினால்தான் ஏற்படுத்த

முடியும். இப்படி ஒருங்கிணைப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு அமைப்பு எந்த அளவிற்கு அத்தியாவசியமாயிருக்கிறது என்பதை 1930ஆம் ஆண்டின் வாணிபப் பெருமந்தத்திற்குப் பின்னர் உலகில் தோன்றி யிருக்கும் நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

வாணிபப் பெருமந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாடும் தத்தம் போக்கில் மந்தத்தைச் சந்திப்பதற்கான வழி முறைகளை மேற்கொண்டது. எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளைச் சந்தித்துப் பேசவோ அல்லது அவற்றின் கூட்டுறவைப் பெறவோ முயலவில்லை. நிலைமையைச் சமாளிப்பதற்குத் தான் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளால் மற்ற நாடுகளில் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதைப்பற்றி எந்த ஒரு நாடும் கவலைப்படவில்லை. அதனதன் விருப்பம்போல் ஒவ்வொரு நாடும் மந்தத்தைத் தீர்ப்பதற்கான செயல்களில் இறங்கிற்று. அவ்வாறு நாடுகள் எல்லாம் செயல்படவாரம்பித்தபோது, ஒரு நாட்டின் மந்த எதிர்ப்பு நடவடிக்கையால் மற்றொரு நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் நிலைமை அடிக்கடி உருவாகி, பாதிக்கப்பட்ட நாடுகள் பதிலடி கொடுக்கலாயின. இதனால் உலகத்து நாடுகளுக்கிடையே வெறுப்புணர்ச்சி உண்டாகி, மந்தத்தோடு போரிடுவதற்குப் பதிலாக, தமக்குள்ளேயே போரிட்டுக்கொள்ளும் நிலை உண்டாயிற்று.

இத்தகைய துரதிருஷ்ட்ட நிலை இனியும் ஏற்படக்கூடாது என்றால், நாடுகளின் சூழல் எதிர்ப்பு, அல்லது மந்த எதிர்ப்புக் கொள்கைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து, ஒரே திசையில் செல்வதாயிருந்தால்தான் சூழல் எதிர்ப்புக் கைக்கோள்களுக்கு வெற்றி கிட்ட முடியும்.

மற்றொன்றையும் இங்கே நாம் சுட்டிக்காட்டுதல் வேண்டும்; தொழில் வள மிகுந்த பெரிய நாடுகளிலிருந்துதான் வாணிபச் சூழல்கள் ஏனைய நாடுகளுக்குப் பரவிச் செல்கின்றன. எனவே, இந்நாடுகள் சற்று ஒற்றுமையாக, ஒருங்கிணைப்புடன் செயல்பட்டால், சூழல் எதிர்ப்பு முயற்சிகள் நல்ல பலன்களை விளைவிக்கும்.

நாடுகளின் சூழல் எதிர்ப்புக் கைக்கோள்கள் மற்றும் திட்டங்களிடையே ஒருங்கிணைப்புத் தேவைப்படுகிறது என்றால், எல்லா நாடுகளும் ஒரு குறிப்பிட்ட முறையில், குறிப்பிட்ட பாணியில் செயல்பட வேண்டும் என்று பொருளில்லை. நாடுகளின் சூழல் எதிர்ப்புக் கொள்கைகளில் எத்தனையோ வேறுபாடுகளிருக்கலாம். ஆனால், நடவடிக்கைகள் எடுக்கப்படும் காலமும் திசையும்

சற்றேறக்குறைய ஒன்றுக இருப்பது நன்று. நாடுகளின் சுழல் எதிர்ப்புக் கைக்கோள் திட்டங்களிடையே உறவும், ஒருங்கிணைப்பும் இருந்து உரிய நேரத்தில் உரிய பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், உலகப் பொது மந்தத்தை அகற்றுவதோ அல்லது பணவீக்கச் சூழ்நிலையை அகற்றுவதோ கடினமான செயலன்று. தமக்குள் இருக்கின்ற கருத்து வேறுபாடுகளைச் சிறிது காலத்திற்காவாது ஒதுக்கி வைத்துவிட்டு, சுழல் என்ற ஒரு பொது எதிரியோடு மோதுவதற்கு நாடுகள் முன்வர வேண்டியது மிகவும் அவசியம். உலகத்துப் பொது வாணிபம் சீராயிருக்க வேண்டுமென்றால், நாடுகளனைத்தும் சற்றுத் தியாக உள்ளத்துடன் நடந்து கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், இத்தகைய சர்வதேசப் பொருளாதாரக் கூட்டுறவை (International Economic Cooperation) ஏற்படுத்துவது ஓர் அரிய செயல் முறையாக இயங்கி வரும் சர்வதேச அமைப்புகளின் உதவிகளைக் கொண்டுதான் சர்வதேசப் பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்துவதோ, வளர்ப்பதோ நம்மால் முடியும். அதிர்ஷ்டவசமாக ஐக்கிய நாடுகள்சபை இப்படிப்பட்ட சர்வதேச அமைப்புகளை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இவற்றில் குறிப்பிடத் தகுந்தவை, புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டுப் பாங்கு (International Bank for Reconstruction and Dovelopments), பன்னாட்டுப் பணநிதி (International Monetary Fund), உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agricultural organisation), பன்னாட்டு வாணிப அமைப்பு (International Trade organisation) முதலியவை.

புனரமைப்பு மற்றும் வளர்ச்சி தேவைப்படும் நாடுகளின் ஆக்கத்திறனை உயர்த்துவதற்கும், உலக முழுவதும் சரியான நாணயமாற்று வீதங்கள் இருந்து வருவதற்கான நல்ல சூழ்நிலைகளை உருவாக்கிப் பலவீனமான நாடுகளின் பொருளாதார நிலைமையினை வலிவுபடுத்தும் வகையில் கடன் வசதிகளைக் கொடுத்துதவுவதற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்கி மக்களின் ஊட்ட முறையை மேம்படுத்துவதற்கும், சாதனங்களைச் சிறப்புற ஆள்வதற்குரிய முறையில் பன்னாட்டு உழைப்பின் பகுப்பை (International Division of Labour) வளர்ப்பதற்கும், அயல் நாட்டுக் கொடுப்பல் நிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு உதவிக் கரம் நீட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகளில் இந்தப் பன்னாட்டு அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

உள்நாட்டு உறுதிநிலைப்பாடு

பன்னாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவைப் பற்றிச் சிந்திக்கின்ற வேளையில் நாம் ஒரு முக்கிய விஷயத்தையும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். தமது உள்நாட்டுச் செழிப்பு நிலைக்காக ஏற்றுமதிகளைப் பெரிதாக நம்பியிருக்கும் நாடுகள் மற்ற நாடுகளிடமிருந்து வரக்கூடிய பணவீக்க அல்லது பணவாட்டச் சக்திகளைப் பற்றி மிகவும் கவலைப்படுகின்றன. தொழில் வளத்தில் முன்னணியில் நிற்கின்ற அமெரிக்காவிடம் கூட இத்தகைய அச்சம் ஓரளவிற்குக் காணப்படுகிறது என்றால், ஏனைய நாடுகளைப்பற்றிக் கூறவே தேவையில்லை. உலக வாணிபத்தில் அமெரிக்காவிற்குள்ள அந்தஸ்து சாதாரணமானதன்று. புறத்தேயிருந்து ஓடிவரும் சக்திகள் எத்தகையதாயிருப்பினும், தனது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பளவுகளை உயர்த்தும் வகையில் தனக்கென ஓர் உள்நாட்டுக் கொள்கையினைத் தனியே வகுத்துக்கொண்டு அதில் முன்னேறிச் செல்லும் வசதியும் வாய்ப்பும் அமெரிக்காவிடம் உண்டு. அமெரிக்காவின் உள்நாட்டு அங்காடி நீண்டு பரந்து கிடக்கிறது. பல்வேறு உற்பத்திச் சாதனங்கள் மலையாய்க் குவிந்து கிடக்கின்றன. தொழில் நுட்ப முன்னேற்றங்கள் நாள்தோறும் மலர்ந்துகொண்டேயிருக்கிறன. தங்க வயல்கள் பல இடங்களில் செழுமையாகக் கிடந்து வருகின்றன. உணவு உற்பத்தி உபரியாக இருக்கிறது.

எனவே, வெளிநாடுகளிடமிருந்து வரக்கூடிய பாதகச் சக்திகளை முறியடித்துத் தனக்கென ஒரு தனித்திட்டத்தைத் தீட்டிக் கொண்டு வேலை நிறைவையும், உள்நாட்டு உறுதிநிலைப்பாட்டையும் ஏற்படுத்தும் நிலையில் அமெரிக்கா இருக்கிறது. ஆனால், பலவீனமானவையாயும், பாதுகாப்பற்றவையாயுமிருந்து வரும் நாடுகள் பல இத்தகைய பத்திரமான நிலையில் இல்லை.

உதாரணத்திற்கு இந்தியாவை எடுத்துக்கொள்வோம். உலக முழுவதும் வாணிப மந்தம் வியாபித்துள்ள ஒரு சூழ்நிலையில், வெளிநாடுகளிடமிருந்து பலவகையான பாதகக் காரணிகள் வந்து இந்தியாவைச் சூழ்ந்து கொள்ளும்போது, வருமானத்தையும் வேலைவாய்ப்பையும் நம்நாடு உயர்த்த முயன்றால், அதனால் பல பிரச்சினைகள் முளைக்கின்றன. ஏற்றுமதிகள் குறைந்துவரும் நிலையில், மக்களின் வருமானத்தைக் குறையாமலிருந்து வரச்செய்வதற்கான ஒரு திடமான ஈடுசெய் திட்டத்தை நாம் அமல் செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்போது, இந்த ஈடுசெய் திட்டத்தின் விளைவாக இறக்குமதிகள் குறையாது முன்பு இருந்த

அளவிலேயே இருந்துவரும். ஆனால், அதே நேரத்தில் வெளிநாடுகளில் இந்தியாவின் பண்டங்களுக்கு அங்காடிகள் கிடைக்காது போவதால் ஏற்றுமதிகள் குறைந்து கொண்டேபோகும். வருமானம் குறையாமலிருந்து வருவதால் ஏற்றுமதித் தொழில்களின் செலவுகள் தாழ்வடையாது போய், பண்டங்களின் விலைகள் உயர்ந்து, ஏற்றுமதிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. இதனால் இந்தியாவிற்கு அயல் நாட்டுச் செலுத்து நிலைப்பிரச்சினைகள் எழுகின்றன. மந்தம் சிறிது காலத்திற்கே நீடித்திருப்பதாயின், கைவசமுள்ள பொன் மற்றும் அந்நியச் செலாவணி இருப்புகளைப் பயன்படுத்தி அயல்நாட்டுச் செலுத்துப் பற்றுக்குறையை நிவர்த்தி செய்துகொள்ளலாம். ஆனால், மந்தம் நெடுங்காலத்திற்கு நீடித்திருப்பதாயின், இம்முறையில் பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் கடினம். ஆகவே, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

இறக்குமதிகளைக் குறைப்பது என்பது இந்தியாவிற்கும் சரி, அல்லது பண்டங்களை அனுப்பிவைக்கும் பிற நாடுகளுக்கும் சரி, நன்மை விளைவிக்கக்கூடிய செயலன்று, ஆனால், அந்நியச் செலாவணி இருப்புகள், குறைந்த பட்ச (Minimum) அளவிற்கும் குறைவாயிருக்குமேயானால், இறக்குமதிகளைக் குறைப்பதைத் தவிர வேறுவழியே கிடையாது. பணவாட்டச் சூழ்நிலைகளைத் தோற்றுவித்தாலும் கூட, இறக்குமதிகள் குறையத்தான் செய்யும். ஆகவே, இறக்குமதிகளைக் குறைக்கவேண்டும் என்று இந்தியா முடிவெடுத்தால் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அதற்காக இந்தியாவைக் குறை கூறிப் பிரயோசனமில்லை. போதிய மெத்தத் தேவையினை (Aggregate Demand) வளர்த்துக்கொள்ளத் தவறிய அந்நிய நாடுகளிடம்தான் தவறு இருக்கிறது. எத்தகைய நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டாலும் அது இறக்குமதிகளைக் குறைப்பதில்தான் கொண்டுபோய் விடும். பன்னாட்டு வாணிபப் பெருக்கத்திற்கான ஒரு பொதுத் திட்டத்தின் மூலம்தான் உலக வாணிபம் இந்த இக்கட்டிலிருந்து மீட்கப்படவேண்டும்.

இறக்குமதிகளைக் குறைக்கும் வழிகள்

அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகள் தோன்றி, இறக்குமதிகளைக் குறைக்கவேண்டும் என்ற அவசியம் எழும்போது பின்வரும் இருமுறைகளில் இறக்குமதிகள் குறைக்கப்படலாம்; (1) நாணயமாற்று மதிப்பிறக்கம் (Exchange Depreciation); (2) நேர்முகக் கட்டுப்பாடுகள் (Direct Controls). இவைகளைச் சற்று விரிவாகக் காண்போம்.

பிறிதொரு நாட்டு நாணயத்தைப் பொறுத்தவரையில், ஒரு நாட்டு நாணயத்தின் மாற்றுவீதம் குறையுமேயானால் அதனை நாணயமாற்று மதிப்பிறக்கம் என்கிறோம். ஓர் உதாரணம் கொண்டு இதனை நாம் விளக்குவோம். அமெரிக்காவுடன் வாணிபத் தொடர்பு கொண்ட வகையில் இந்தியாவிற்குப் பாதகச் செலுத்துநிலை (Adverse balance of payments) உண்டாகியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது, அமெரிக்க டாலருக்கு இந்தியாவில் உள்ள தேவை மிகுதியடைந்து, ரூபாயைப் பொறுத்த வரையில் டாலரின் மதிப்பு மிகுதியாகும். எனவே, டாலரின் மதிப்பு உயரும். ரூபாயின் மதிப்பு இறங்கும். இதனால் அமெரிக்கப் பண்டங்களுக்கு இந்தியாவில் உள்ள தேவை குறைந்து அமெரிக்காவிடமிருந்து பெறப்படும் இறக்குமதிகள் குறைகின்றன. அதே போது, ரூபாயின் மதிப்பிறக்கம் மூலமாக இந்தியாவின் ஏற்றுமதிகள் அதிகரிக்கின்றன. இதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன :

(1) அமெரிக்கர்களுக்கு இந்திய ரூபாய் மலிவான செலாவணியாக இருக்கிறது. இந்தியப் பண்டங்கள் மலிவாகக் கிடைக்கின்றன. ஆகவே இந்தியப் பொருட்களை அமெரிக்கர்கள் மிகுதியாக வாங்குவர்.

(2) அமெரிக்காவுக்குப் பண்டங்களை ஏற்றுமதிச் செய்வது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு நல்ல இலாபங்களைத் தருகிறது. ஏனென்றால் சம்பாதிக்கப்படும் ஒவ்வொரு டாலருக்கும் முன்பைவிடக் கூடுதலான ரூபாய்கள் தற்போது கிடைக்கின்றன.

இவ்வாறாக, இந்தியாவின் இறக்குமதிகள் குறைகின்றன. ஏற்றுமதிகள் கூடுகின்றன. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் முன்பு இருந்த பற்றாக்குறை மறைந்து, தற்போது சாதகச் செலுத்து நிலை (Favourable balance of payments) உண்டாகிறது. நாணயமாற்று மதிப்பிறக்கம், தாமே இயங்கிக் கொள்கின்ற ஓர் இயல்பைப் பெற்றிருக்கிறது என்றாலும், பாதகச் செலுத்துநிலையினைச் சரிப்படுத்துவதற்கு இது நன்கு உதவுகிறது என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால், நாணயமாற்று மதிப்பிறக்க முறையில் உள்ள ஒரு முக்கியக் குறைபாடு என்னவென்றால், அது பணவீக்கச் (Inflation) சூழ்நிலைகளைக்கொண்டு வரக்கூடியது என்பதாகும். நாணயமாற்று மதிப்பிறக்கம் உண்மையில் பணவீக்கத்தைத் தோற்றுவிப்பதில்தான் கொண்டுபோய் விடுகிறது என்பதாகப் பல நாடுகளின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

இக்காரணத்தை முன்னிட்டுச் சில நாடுகள் நேர்முகக் கட்டுப் பாடுகளை ஆண்டு, தமது இறக்குமதிகளைக் குறைக்க முயல்கின்றன. நேர்முகக் கட்டுப்பாடுகளில் மிகவும் முக்கியமானவையாயிருப் பவை நாணயமாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control); இறக்கு மதிக் கோட்டா (Import Quotas) முறை ஆகியவை.

நாணயமாற்றுக் கட்டுப்பாடு என்றால் அரசே நாணயமாற்று வீதங்களை வரையறை செய்தல் என்று பொருள். நாணயமாற்றுக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ளபோது மத்திய பாங்கிடமிருந்து தான் எந்த ஒரு நபரும் அந்நியச் செலாவணியைப் பெறமுடியும். அவ்வாறே, மத்திய பாங்கு மூலமாகத்தான் அந்நியச் செலா வணியை விற்க முடியும். இக்கட்டுப்பாடு மூலம் அந்நியச் செலா வணிக்கான தேவையும் அளிப்பும் நாட்டின் வாணிபத் தேவை களுக்கேற்ப அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாணயமாற்றுக் கட்டுப்பாடு முறையில் உள்ள ஒரு முக்கியக் குறை பாடு, இது பன்னாட்டு வாணிபத்தின் அளவைக் குறைத்துவிடும் என்பதாகும். இதன் மற்றொரு குறைபாடு, பொருளாதார நிலை யில் முன்னேறியுள்ள சில நாடுகள், பின்தங்கிய நாடுகளை ஏமாற்றிப் பிழைக்க இது துணை புரிதலாகும். இதனால்தான் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டை ஒழிப்பது என்பது பன்னாட்டு வாணிப நிதியமைப் பின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

இறக்குமதிகளை அரசு கட்டுப்படுத்தும் ஒருமுறை இறக்குமதிக் கோட்டா முறையாகும். இறக்குமதிக் கோட்டா முறை அமலில் உள்ளபோது, இந்தந்த அளவுகளில்தான் பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும், இந்தந்த நாடுகளிடமிருந்துதான் பண்டங் கள் பெறப்படவேண்டும் என்பதையெல்லாம் அரசே நிர்ணயிக்கும் இறக்குமதிக் கோட்டா முறையில் சில குறிப்பிடத்தகுந்த நன்மை கள் இருக்கின்றன.

(1) இறக்குமதிகளின் அளவுகளைப்பற்றி நன்கு தெரிந்து கொள்வது உள்நாட்டுத் தயாரிப்பாளருக்கு எளிதாயிருக்கிறது;

(2) சட்டங்களை இயற்றாமலேயே அரசால் இறக்குமதிக் கோட்டாக்களைக் குறைக்கவோ அல்லது கூட்டவோ இயலும்;

(3) வாணிபச் சலுகைகளைப் பற்றிய ஒப்பந்தங்களை ஏற் படுத்துவதற்கு இது ஒரு சிறந்த முறை.

இறக்குமதிக் கோட்டா முறையில் சில தீமைகளும் இருக் கின்றன. முதலாவதாக, இம்முறை அமல் செய்யப்படும்போது லஞ்ச ஊழல் மிகுதியாகலாம். இரண்டாவதாக, இறக்குமதிக் கோட்டாக்களை நிர்ணயிக்கின்றபோது பேதங்காட்டுகை (Dis- crimination) தலையெடுக்கலாம்.

ட்ரிஃபின் திட்டம் (Triffin plan)

நாணயமாற்று மதிப்பிறக்கத்திலிருந்து சற்று மாறுபட்ட ஒரு திட்டத்தை ராபர்ட் ட்ரிஃபின் (Robert Triffin) என்பார் விளக்கினர். அது 'பகுதியளவான நாணயமாற்று மதிப்பிறக்கம்' (Partial Exchange Depreciation) என்றோ அல்லது 'பெருக்கிய நாணயமாற்றுக் கட்டுப்பாடு' (Selecttive Exchange Control) என்றோ குறிப்பிடலாம். இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிகள், இன்றியமையாத இறக்குமதிகள் இன்றியமையல்லாத இறக்குமதிகள் என இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இன்றியமையாத பண்டப் பட்டியலில் உள்ள பொருட்களை இறக்குமதி செய்வோர், அரசு நிர்ணயித்த வீதத்தில் அந்நியச் செலாவணியை வாங்கிக்கொள்வர். இவர்களுக்கு விற்றன போக மீதமிருக்கும் அந்நியச் செலாவணி, இன்றியமைல்லாத பண்டப் பட்டியலில் உள்ள பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு அங்காடியில் ஏலத்திற்கு (Auction) விடப்படும்.

இப்படி ஏலத்திற்கு விடப்படும் அந்நியச் செலாவணியளவு குறைவாயிருக்கும். ஆனல், இதற்குத் தேவையோ மிகுதியாயிருக்கும். எனவே, போட்டி மிகுந்து வெளிநாட்டு நாணயச் செலாவணியைப் பொறுத்த வரையில் உள்நாட்டு நாணயச் செலாவணி மதிப்பிறக்கத்திற்குள்ளாகும்.

ஆனல், அத்தியாவசியமான இறக்குமதிகளும், ஏற்றுமதிகளும் அரசு நிர்ணயித்த நாணயமாற்று வீதத்தில்தான் வாங்கப்படும், விற்கப்படும். நெருக்கடி நிலைமை ஓய்ந்து தேவைப்படும் அளவுகளில் அந்நியச் செலாவணி கிடைக்கும்போது அரசு நிர்ணயித்த வீதத்திற்கும், அங்காடி வீதத்திற்கும் உள்ள வேறுபாடு மறையும். இறுதியில், அரசு நிர்ணயித்த நாணயமாற்று வீதம் மட்டுமே நிலவும்.

முழுமையான நாணயமாற்று மதிப்பிறக்கத்திற்கும், முழுமையான நாணயமாற்றுக் கட்டுப்பாட்டிற்கும் இடைப்பட்ட ஒரு திட்டம் ட்ரிஃபின் திட்டம். மந்தம் சூழ்ந்த ஓர் உலகில், தனது வருமானத்தையும் வேலைவாய்ப்பையும் உயர்த்துவதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாட்டிற்கு இது ஒரு பொருத்தமான திட்டமாகும். பொருளாதாரத்தில் சமன்கேடு (Disequilibrium) உண்டாவதனல், அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகள் தோன்றுவதாயிருப்பின், ஒரு நாடு நாணயமாற்று மதிப்பிறக்கத்தின் உதவியை நாடலாம். ஆனல், வெளிநாடுகளில் நிலவும்

மந்தம் காரணமாக ஒரு நாட்டிற்குச் செலுத்துநிலைப் பிரச்சினைகள் உண்டாவதாயிருப்பின் நாணயமாற்று மதிப்பிறக்கத்தின் உதவியை அது நாடக்கூடாது. அப்படி நாடினால், அதனால் பல தீமைகள் உண்டாகும். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் சிதறுண்டு போகலாம். ஆனால், பகுதியளவான நாணயமாற்று மதிப்பிறக்கம் இப்படிப் பொருளாதாரத்தைச் சிதைப்பதில்லை. பகுதியளவான மதிப்பிறக்கத்தால் மிதமான அசௌகரியங்களே ஏற்படுகின்றன. நெருக்கடி நிலைமையினைச் சந்திப்பதற்கு இதுவே சிறந்ததொரு வழியாக இருக்கிறது. மேலும், பகுதியளவு மதிப்பிறக்கத்தால் பொருளாதாரத்தில் விளைகின்ற மாறுதல்கள் மிகவும் சாதாரணமானவையாதலால், நெருக்கடி நிலைமை முடிவுற்றதும், இயல்பான நிலவரங்களை நாட்டில் ஏற்படுத்துவதில் பொதுவாகச் சிரமங்கள் இருப்பதில்லை.

பன்னாட்டுக் கொள்முதல் நிலையம்

நாடுகளின் உள்நாட்டுத் திட்டங்களை அமல் செய்யும் நேரம், போக்கு முதலியவற்றை ஒருங்கிணைப்பு செய்வதற்கான பன்னாட்டு உடனுழைப்பு (International Collaboration) ஏற்பாடே அல்லாது அடிப்படைப் பண்டங்களின் (Primary products) விலை நிலைபேறுக்கம் மூலமாகவும் சர்வதேசக் கூட்டுறவு ஏற்படமுடியும் எனலாம்.

ஒரு பன்னாட்டுக் கொள்முதல் நிலையம் ஏற்படவேண்டும் என்றும், விலைகள் இறங்கும்போது சில அடிப்படைப் பண்டங்களை வாங்குவதும், விலைகள் உயரும்போது இவற்றை விற்பதும் இந்நிலையத்தின் பணிகளாக இருத்தல் வேண்டும் என்றும் கூறுவர் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறைந்தபட்ச விலைக்கு (Minimum Price) இப்பண்டங்களை வாங்குவதற்கும், முன்கூட்டியே நிர்ணயிக்கப் ஓர் உயர்ந்தபட்ச விலைக்கு (Maximum Price) இவற்றை விற்பதற்கும் இந் நிலையத்தால் முடியுமென்றால், இப் பண்டங்களின் விலைகள் ஓரளவிற்கு நிலைபேறுக்கம் அடையும். ஏனென்றால், இந் நிலையத்திடம் இருப்புகள் இருக்கின்றவரை பண்டங்களின் விலைகள் இந்தக் குறைந்தபட்ச, உயர்ந்தபட்ச எல்லைகளுக்குள் தான் ஊசலாட முடியும்.

பன்னாட்டு முதலீடு

பன்னாட்டு முதலீட்டுக்கான வாய்ப்புக்களைப் பெருக்குவதன் மூலமும் பன்னாட்டுக் கூட்டுறவை வளர்க்க முடியும். சர்வதேச முதலீட்டுக்கான வாய்ப்புக்களைப் பெருக்குவதில், உலக பாங்கு என்று சுருக்கமாக அழைக்கப்படும் 'புனரமைப்பு மற்றும் வளர்ச்

சிக்கான சர்வேதச பாங்கு' ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. ஒரு நாட்டின் விவசாயம் மற்றும் தொழில் முன்னேற்றத்திற்குரிய வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதும், அவற்றிற்கான நிதி உதவிகளை வழங்குவதும் உலக பாங்கின் முக்கியப் பணிகள். இவ்வளர்ச்சித் திட்டங்கள் பொதுவாக இயற்கைச் சாதனங்களை நன்கு பயன்படுத்தித் தொழில் முன்னேற்றத்தை எய்துவதற்கும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கும், மின்சக்தி வசதிகளை மேன்மேலும் பரப்புவதற்கும் துணை புரியக்கூடியவை. இத்தகைய பயன் மிகுந்த திட்டங்களால் நாட்டு மக்களின் ஆக்கத் திறனும், வாழ்க்கைத் தரமும் உயர்வதோடன்றி, நாட்டின் இறக்குமதி—ஏற்றுமதிக் கட்டமைப்பும் மாறுதலடைந்து, அயல் நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலை தோன்றுகிறது.

மூலதன முதலீட்டுத் திட்டம் சுழல் எதிர்ப்புக் கொள்கைக்கும் உதவி செய்கிறது. இத்திட்டத்தால் பண வீக்க அழுத்தங்கள் குறைகின்றன. அதோடு, தனியார் முதலீட்டுச் செலவீடுகளில் ஏற்படக்கூடிய இறக்கங்களும் தவிர்க்கப்படுகின்றன. முன்னேற்றமடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பின்மையளவு பெருகி, பின் தங்கிய நாடுகளுக்கு உற்பத்திச் சாதனங்கள் ஏற்றுமதியாகும்போது பன்னாட்டு முதலீட்டுத் திட்டங்கள் பேரளவில் அமல் செய்யப்பட வேண்டும் ஆனால், அதே நேரத்தில், வருமானம், வேலைவாய்ப்பு முதலியவற்றை உலக ரீதியில் உறுதிநிலைப்பாடு செய்வதற்குரிய முறையில் இவ் வளர்ச்சித் திட்டங்களைப் பெருக்குவதற்கும் குறைப்பதற்கும் உரிய ஏற்பாடும் நடைமுறையில் இருந்துவர வேண்டும்.

பன்னாட்டுப் பணத்துறை உடனுழைப்பு

(International Monetary Collarboration)

வாணிபச் சுழலை எதிர்த்துப் போரிடுவதற்கு பன்னாட்டுப் பணத்துறை உடனுழைப்பு மிகவும் தேவைப்படுகிறது. நாணய மாற்று வீதம் (Exhange rate) கட்டமைப்பில் சமநிலையைத் தோற்றுவிக்கவும், பணவீக்கம் மற்றும் பணவாட்டச் சக்திகளை மட்டுப்படுத்துவதற்கான உடனுழைப்புத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வரவும், அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகளுக்குள்ளான நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வது இன்றியமையாததாயிருக்கிறது. பொன்திட்டம் (Gold Standard) நடைமுறையிலிருக்கின்றபோது அயல் நாட்டுச் செலுத்துநிலையில் சமன்கேடு ஏற்பட்டால், அதைப் பண வாட்டத்தின் உதவி கொண்டு சமாளித்துவிடலாம். ஏற்று

மதிகளை விட இறக்குமதிகள் மிகுதியாக உள்ளபோது, வருமான மும் வேலைவாய்ப்பும் குறைந்தால், இறக்குமதிகள் உடனே குறைந்து விடுவது இயற்கையே. எனவே, பணவாட்டத்தைப் பயன்படுத்தி அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினையைத் தீர்ப்பது எளிது.

ஆனால், பொன்திட்டம் அமலில் இல்லாத தற்போதைய சூழ் நிலையில் பணவாட்ட முறையைக் கைவிட்டு வேறு வழிகளில் அயல் நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசிய மாகிறது. உள்நாட்டு உறுதிநிலைப்பாடு, வேலை நிறைவு முதலிய வற்றை அடைவதற்கான திட்டங்களை அமல் செய்வதற்குரிய பூரண சுதந்திரம் தனக்கு இருக்கவேண்டுமென ஒவ்வொரு நாடும் வற்புறுத்துகிறது. உள்நாட்டு உறுதிநிலைப்பாட்டையும் நிறைவுடைய வேலைவாய்ப்பையும் ஏற்படுத்த எல்லா நாடுகளும் முயல்கின்றபோது அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. என்றாலும், இந்நாடுகள் இவைகளைப் பொருட் படுத்துவதில்லை. இவைகளுக்குத் தமது உள்நாட்டுப் பணக் கொள்கைதான் முக்கியமாயிருக்கிறது. இப்படி ஒவ்வொரு நாடும் தனக்கென ஒரு பிரத்யேக பணத்துறைக் கைக்கோளை (Monetary policy) நிறுவிக்கொண்டு அதற்கேற்றாற்போல் செயல்படும்போது, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமன்கேடு உண்டாகிறது.

இச் சமன்கேடு நீக்கப்பட வேண்டுமெனில் எல்லா நாடுகளும், அல்லது குறைந்தபட்சம் முன்னேறிய நாடுகளாவது ஒன்று கூடி, கலந்து பேசி, தமக்குள் பொதுவாக இருக்கின்ற வேலை நிறைவு மற்றும் உறுதிநிலைப்பாடுத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முன்வரவேண்டும். இதில் பாதியளவு வெற்றியே கிட்டும் என்றா லும், மீதிப் பாதியளவு வெற்றியை பன்னாட்டுப் பண நிதியமைப் பின் உதவிகொண்டு அடைந்துவிடமுடியும். நாணயமாற்று வீதங்களின் நிர்ணயத்தைப் பொறுத்தவரையில் பன்னாட்டுப்பண நிதியமைப்புச் சற்று வளைந்து கொடுப்பதாயிருப்பின் பிரச்சினை யைத் தீர்ப்பது எளிது.

26. நிலைபேறாக்கத்தின் நன்மை தீமைகள்

"இளைதாக முள் மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து."

— குறள்

நிலைபேறாக்க நன்மைகள்

நிலைபேறாக்கத்தினால் சமூக நல்வாழ்வு மேம்படுகிறது. பொருளாதார நடவடிக்கையில் சுழல் ஏற்ற இறக்கங்கள் அனுமதிக்கப் பட்டால் வருமானமும், வேலைவாய்ப்பும் நிலைத்திருக்க முடியாது. நிலையான வருமானத்தையும், வேலைவாய்ப்பையும் நிலைபேறாக்கத்தினால்தான் பெறமுடியும். மாறுதலையும் வருமானத்தைவிட மாறா வருமானமே பொருளாதார நல்வாழ்விற்குத் துணைபுரிகிறது. யூக வாணிப மனம் படைத்தவர்களைத் தவிர மற்றெல்லோரும் பொதுவாக நிலையான வருமானத்தைப் பெறும் வரிகளைத் தான் நாடுகின்றனர். மக்களில் பெரும்பாலோர் குறைவான வருமானங்களைக் கொண்டிருக்கின்றனர். வருமானங்கள் குறைவாயிருக்கின்றன என்பதைப்பற்றி இவர்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. அவை தொடர்ந்து நிலையாகக் கிடைத்து வரவேண்டும் என்றே விழைகின்றனர். சுழல் ஏற்ற இறக்கங்களின்போது ஏற்படும் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையால் முதலில் அவதியுறுவோர் ஏழை மக்களே ஆவர். எனவே, நிலைபேறாக்கம் நடைமுறைக்கு வரும்போது நிலையான வேலைவாய்ப்பும் வருமானமும் இவர்களுக்குக் கிட்டுகிறது. சமூகத்தின் பெரும்பான்மையினராக இருக்கின்ற இவர்கள் மனநிறைவினை எய்துகின்றபோது சமூக நலம் மேம்படுகிறது எனக்கொள்ளலாம்.

வாணிபச் சுழலின் செழிப்புக் கட்டத்தின்போது உற்பத்தி பெருகுகிறது. வேலைவாய்ப்புகள் அதிசரிக்கின்றன. மிகைநேர வேலைகள் தொழில் உலக முழுவதும் பரவுகின்றன. ஆனால், மந்தத்தின்போது உற்பத்தி குறைகிறது. வேலைவாய்ப்புகள் குறைகின்றன. குறைநேர வேலைகளைத் தொழில் முயல்வோர் ஆதரிக்கின்றனர். இப்படி ஒருநேரம் வேலைவாய்ப்புகள் குறைவதும் தொழிலாளர் உழைப்பார்வத்தைக் குறைக்கிறது. எந்த நேரத்திலும் வேலைவாய்ப்பின்மை உருவாகலாம் என்ற அச்சத்தில் இவர்கள் தமது வாழ்நாட்களைக் கடத்துவர். இது சமூகத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலை. இதனால் தொழிலாளரின் திறமை பாதிக்கப்படுகிறது. கட்டுப்பாடு குலைகிறது. பொறுப்புணர்ச்சி மறைகிறது. தொழிலில் மந்தம் நிலவும்போது எத்தனை எத்தனை தகராறுகள் முளைக்கின்றன? கூலிக் குறைப்புக்கு எதிர்ப்புகள், உற்பத்திக் குறைப்பைக் கண்டித்துப் போராட்டங்கள் இவையனைத்தும் சமூக அமைதிக்கு ஊறு விளைவிக்கின்றன. நிலைபேறுக்கம் மூலம்தான் இவற்றை நம்மால் ஓரளவிற்குத் தடுக்க முடியும்.

அடுத்து, சுழல் மாறுதல்களால் சாதனங்களைச் சரிவரப் பயன்படுத்த முடியாமலும் போகிறது. யூக வாணிபத்தையும், இசைவுக் கேடான செயல்களையும் செழிப்புக்கட்டம் ஊக்குவிப்பதாயிருக்கலாம். இதனால் உற்பத்திச் சாதனங்கள் திசைமாறிப் போகின்றன. இதனால்தான் நிலைபேறுக்கம் எய்தப்படவேண்டும் என்று பலர் புறுத்துகின்றனர்.

நிலைபேறுக்கச் சிரமங்கள்

ஆனால், நிலைபேறுக்க வழிமுறைகளையும், அவற்றால் விளையும் பிரச்சினைகளையும் உற்றுநோக்கும்போது, வாணிபச்சுழல் அவ்வளவு எளிதாகக் கட்டுப்படுத்தப்படுவதற்கில்லை என்பது தெளிவாகிறது.

வாணிபச் சுழல்களின் சிக்கல் மிகுந்த பல்வேறு நிகழ்ச்சிக் கூறுகள் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. ஆழ்ந்த ஆய்வுகளால் கூட இவற்றைத் திருப்திகரமாக விளக்கிட முடியவில்லை. இந் நிலையில் வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்த நாம் முயன்றால், அதனால் எதிர்பாராத தொல்லைகள் திடீரென்று தோன்றி அவை வழியே முற்றிலும் புதிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. பொருளாதார அமைப்பு முழுவதற்கும் நிலைபேறுக்கம் கொணர்ந்திட முயல்கிறோம். இது சாமானியச் செயலன்று.

நிலைபேருக்கம் அடைவதற்கு ஆளப்படும் ஒவ்வொரு முறையும் சில முக்கியப் பிரச்சினைகளைக் கொண்டுவருகிறது. எல்லாவற்றையும் விடப் பணத்துறைக் கட்டுப்பாடே (Monetary Control) எளிதான முறையாக இருக்கிறது. வாணிப நிர்வாகத்தில் இது தலையிடுவதில்லை. எல்லா வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பிரதானமாயுள்ள பணம் மற்றும் கடன் செலாவணி (Credit) யளவை மாற்றியமைப்பதன் மூலம் வாணிபச்சுழல் பிரச்சினையை இது தீர்த்திட முயல்கிறது. ஆனால், பூரிப்பு (Boom)களைத்தான் இதனால் மட்டுப்படுத்த முடிகிறதே தவிர, மந்தத்தின் ஆட்சியை முடித்து மீட்சியை (Revival)க் கொணர்ந்திட இதனால் இயலுவதில்லை. ஏனென்றால், பணத்தின் அளிப்பைத்தான் இதனால் அதிகப்படுத்தமுடியுமே தவிர, பணத்தை ஆளுமாறு வர்த்தகர்களைக் கட்டாயப்படுத்த முடியுமா? முடியாது.

பொதுப்பணித் திட்டமும் (Public works Programme) பற்றுக் குறை நிதியாக்கம் (Deficit financing) இணைந்து செயல்பட்டால் மீட்சி மலரமுடியும் என்ற நம்பிக்கை நம்மில் பலருக்கு உண்டு. ஆனால் செயலற்றிருக்கும் சாதனங்களுக்குப் பொதுப்பணி விரிவாக்கத் திட்டத்தால் வேலைகொடுக்கமுடியுமே தவிர, மீட்சிக்குத் தடையாயுள்ள காரணிகளை அதனால் அறவே அகற்ற முடியாது. பொதுச் செலவீடுகளின் பயனையும் திறமையையும் எத்தனையோ சக்திகள் கெடுத்துவிடுகின்றன.

வரிவிதிப்புத் திட்டத்தில் போதிய மாறுதல்களைச் செய்ய முடியுமென்றால், நுகர்வோர் செலவீடுகளை நிலைபேருக்கம் செய்வது சுலபமாயிருக்கும் என்று கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால், முதலீட்டையும், நுகர்ச்சியையும் பாதிக்காத வகையில் வரிவிதிப்புத் திட்டத்தில் மாறுதல்களைச் செய்வது என்பது எளிதான செயலன்று. மேலும், வரிவிதிப்புத்திட்ட மாறுதலுக்கான ஒப்புதலையும், ஆதரவையும் சட்டமன்றங்களிடமிருந்து உரிய நேரங்களில் பெறுவது என்பது மிகவும் சிரமம். பணவீக்கக் காலங்களில் வரிவீதங்களை உயர்த்துவது அவசியமாயிருக்கிறது. ஆனால், அரசால் அதனை உடனே செய்யமுடிகிறதா? எத்தனைவிதமான கண்டனங்களையும் தாக்குதல்களையும் அது தாங்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது? இவற்றை உதாசீனப்படுத்திவிட்டு, வரிவீதங்களை உயர்த்துவதற்கு அரசு முன்வந்தாலும்கூட இதற்குச் சட்டமன்றங்கள் போதிய அளவுக்கு ஆதரவு வழங்குவதில்லை.

தேவைப்படும் நேரங்களில் கூலிகளேயும் விலேகளேயும் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியுமாஞல் நிலேபேறுக்கம் ஏற்பட முடியும். ஆனல், கூலிகளேயும் விலேகளேயும் நாம் மாற்றியமைக்க முயன்ருல், அதனுல் தனியார்துறை (Private Sector) பெரிதும் பாதிக்கப்படுகிறது. தனியார்துறைச் சுதந்திரம் பாதிக்கப்படுறது. தொழில் முன்னேற்றத்திறகு இதனுல் தடைகள் உண்டாகலாம்.

நிலேபேறுக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முயல்கின்ற போது நமக்கு ஏற்படும் சிரமங்கள் இவை. நிலேபேறுக்கப் பாதையில் நாம் சந்திக்கின்ற தடைகளே எண்ணிப்பார்க்கின்ற வேளேயில் சுழல் ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் நன்மைகளேயும் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். சுழல் ஏற்ற இறக்கங்கள் அனேத்தும் தீமை பயப்பன என்று நாம் நினேத்துக்கொள்ளக்கூடாது. அவற்ருல் ஒரு சில நன்மைகளும் விளேகின்றன. இந்நன்மைகளே நாம் சுட்டிக்காட்டுவதால் சுழல் ஏற்ற இறக்கங்களே ஆதரிக்கிருேம் என்ருே அல்லது விரும்புகிருேம் என்ருே பொருளாகாது. நிலேபேறுக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது இந் நன்மைகளே நாம் இழந்துவிடுகிருேம் என்பதை உணர்த்தவே இவற்றை இங்கே ஒருமுறை எண்ணிப் பார்க்கிருேம்.

1) சில தொழில் ஏற்ற இறக்கங்கள் பயன் மிகுந்தவை என்று ராபர்ட்சன் (Robertson) கருதினுர். விரும்பத்தகுந்த மெய்மாறுதல்களின் (Real Changes) விளேவே சில சுழல் மாறுதல்கள் என்று கருதினுர். கண்டுபிடிப்பு மூலமாக மெய்ச் செலவில் உண்டாகும் மாறுதல்கள், வேகவளர்ச்சி (Acceleration) விதி காரணமாக வழிவந்த தேவையில் தோன்றும் மாறுதல்கள் முதலியவை வழியே தொழில் மொத்த உற்பத்தியில் நியாயமான, விரும்பத்தகுந்த, பயன்மிகுந்த ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. இவற்ருல் தொழில் உலகம் நன்மை அடையவே செய்கிறது.

ஆனல், இம்மெய்மாறுதல்கள் காரணமாக மொத்த உற்பத்தியில் விரும்பத்தகாத, பொருத்தமற்ற ஏற்ற இறக்கங்கள் உண்டாகுமேயாஞல், அதனுல் தொழில் உலகம் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, உற்பத்தி அலகுகளே (Units of production) நுண்ணிய அளவுகளில் செய்யப்படுவதுண்டு. அவ்வாறே பொதுச் செலவுகளின் (Over head costs) அதிகரிப்பை முன்னிட்டு உற்பத்தி வீதம் பொருத்தமற்ற அளவில் அமைந்திருக்கும் நேரங்களும் உண்டு. இவை தீமை பயக்கக்கூடிய ஏற்ற இறக்கங்கள். இவற்றை நிலேபேறுக்கக் கைக்கோள் அப்புறப்படுத்திஞல் அதனுல் சமூகம் நன்மையடையும்.

ஆனால், அவையோடு கூடப் பொருத்தமான, பயன்மிகுந்த மாறுதல்களும் அப்புறப்படுத்தப்படுமானால் அதனால் சமூகத்திற்கு இழப்பு ஏற்படும். நிலைபேருக்க ஆர்வமுடையோரால், பொதுவாக, பொருத்தமான மாறுதல்களுக்கும் பொருத்தமற்ற மாறுதல்களுக்குமிடையேயான வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஆகவே, பெரும்பாலான நேரங்களில் நியாயமான மாறுதல்களும் அப்புறப் படுத்தப்பெற்று, அவற்றால் விளையக்கூடிய நன்மைகள் சமூகத்திற்குக் கிட்டாமல் போகிறது.

(2) வாணிபச்சுழலின் பெருக்கம், சுருக்கம் என்ற இருகட்டங்களில்தான் வளர்ச்சி என்பதே உருவாகிறது என்கிறார் ஃபிராங்காய் சிமியந்த் (Francois Simiand) என்ற ஃபிரஞ்சுப் பொருளாதாரி. அவர் கருத்து வருமாறு :

பணத்தின் அளிப்பில் உண்டாகும் மாறுதல்களால் வாணிபத்தில் பெருக்கமும் சுருக்கமும் ஏற்படுகின்றன. வாணிபத்தில் செழிப்பும் மந்தமும் மாறி மாறி வருகின்றபோதுதான் வளர்ச்சி என்பது பொருளாதாரத்தில் தோன்றுகிறது. சுழலின் மேல் நோக்கிய வீச்சின்போது — ஏறுமுகத்தின் போது — விலைகள் உயர்கின்றன. உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. வருமானம் பெருகுகிறது உற்பத்தியும் வருமானமும் எந்த அளவு வரை அதிகரிக்க முடியும் என்பதற்கான வரம்புகளைக் குறைந்துசெல் ஆக்கப்பாடு (Diminishing productivity) நிர்ணயிக்கிறது. இவ்வரம்புகள் மீறப்படும்போது மந்தம் உண்டாகிறது. பெருக்கத்தின்போது இருக்கும் சில வசதிகளை சுருக்கத்தின்போதும் அனுபவிக்க விரும்புகிறோம். உதாரணமாக, எந்த அளவில் செழிப்பின்போது கூலிகள் இருந்தனவோ அதேயளவில் மந்தத்தின்போதும் இருந்து வரவேண்டும் என்று தொழிலாளர்கள் விரும்புவர். அப்போது தொழில் முயல்வோர் என்ன செய்கின்றனர்? தொழில் நுட்ப முன்னேற்றம் அல்லது கண்டுபிடிப்பைப் பயன்படுத்திச் செலவுகளைக் குறைக்க முற்படுகின்றனர். எனவே, மந்தம் ஏற்படும்போது தொழில் நுட்ப முன்னேற்றங்கள் உண்டாகின்றன. கண்டுபிடிப்புகள் மலர்கின்றன. இவை தொழிலை வளர்க்கின்றன.

விலைகள் எப்போதுமே தாழ்வதாயிருப்பின் பண்டங்கள் மற்றும் பணிகளின் தரம் உயராது. விலைகள் எப்போதுமே உயர்வதாயிருப்பின், உற்பத்தி முறைகளை அபிவிருத்தி செய்யும் ஆர்வத்தை நாம் இழந்துவிடுவோம். விலைகள் தாழ்வதும் உயர்வதுமாயிருந்தால்தான் உற்பத்தியமைப்பில் முன்னேற்றம்

உண்டாகும். விலைகள் உயர்கின்றபோது இலாப வாய்ப்புகள் பெருகுகின்றன. எனவே, உற்பத்தி பெருகுகிறது. விலைகள் இறங்குகின்றபோது இழப்புகள் ஏற்படும். ஆகவே. கண்டுபிடிப்பு களைச் செய்து நிலைமையைச் சீர்படுத்தும் முயற்சிகளைத் தொழில் முயல்வோர் மேற்கொள்வர். இவ்வாருகச் செழிப்பு, மந்தம் ஆகியவை மூலம் பொருளாதார முன்னேற்றம்—தொழில்வளர்ச்சி —உண்டாகிறது. நிலைபேருக்கத்தில் நாம் குறியாயிருந்தால். சுழல் ஏற்ற இறக்கங்களைத் தடுக்கவேண்டும் என்பதில் குறியாயி ருந்தால் முன்னேற்றத்தை இழப்பதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

(3) புத்தாக்கங்களால் (Innovations) சுழல் ஏற்ற இறக்கங் கள் எவ்வாறு விளைகின்றன என்பதைப் பற்றிய சும்பீட்டர் (Schumpeter) விளக்கத்தை ஏற்கெனவே கண்டோம். புத்தாக்கங் களால் உருவாகும் மாறுதல்கள் சமூகத்திற்கு நன்மை பயப்பன. புத்தாக்கம் வழியே தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுத் தொழில் வளம் மேம்படுகிறது. உற்பத்திச் செலவுகள் குறை கின்றன. சுழல் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த முயன்ருல் புத்தமைப்புகளும் மறைந்துபோகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

முதலீட்டுப் பெருக்கத்தின் முக்கியத்துவம்

முதலீடுதான் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பு. முதலீடு மூலமாகத்தான் நமது வாழ்க்கைத் தரங்களை நம்மால் உயர்த்திக்கொள்ள முடியும். எனவே, நிலைபேருக்கத்தினை எய்து வதற்கு நம்மால் ஆளப்படும் முறைகளால் முதலீடு பாதிக்கப்படா மலிருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். வாணிபச் சுழல்கள் நம்மைவிட்டு நீங்கவேண்டும். ஆனுல், அதே நேரத்தில் மிதமான செழிப்புச் சூழ்நிலையும் நம்மிடம் இருந்து வரவேண்டும். கீன்ஸ் கூறுகிருர்: வாணிபச் சுழல்களுக்கான ஒரு சரியான தீர்வு தேக்க நிலைகளை ஒழித்து அரைப் பூரிப்பு நிலைமையை நம் மிடையே நிரந்தரமாகத் தங்கச் செய்வதே தவிர, பூரிப்புகளை ஒழித்து அரைத்தேக்க நிலைமையை நம்மிடையே நிரந்தரமாகத் தங்கச் செய்வதன்று.''

ஏழ்மைவேகம் உலகின் முக்கால் பகுதியைச் சூழ்ந்துகொண்டி ருக்கின்ற நேரத்தில், நுகர்ச்சி அதிகரிப்பைவிட, முதலீட்டு அதி கரிப்பின் மீதுதான் நாம் மிகுதியான கவனத்தை ஒட்டவேண்டும். முதலீட்டுக்கான வாய்ப்புகள் நிறைய இருப்பின், முதலில் அவற்றைப் பயன்படுத்தி நிலைபேருக்கம் கொணர முயல்வோமாக.

வேலைவாய்ப்புக் குறைவுக்கான பரிகாரம் நுகர்ச்சியை அதிகப் படுத்தினால், இன்னும் சற்றுக்கூடுதலான பலன்கள் கிடைக்கும் என்பது உறுதி.

முதலீட்டளவைப் பெருக்குவது எங்ஙனம்? வட்டி வீதத்தைக் குறைத்தால் முதலீட்டளவு ஓரளவிற்குப் பெருகும். எனவே, வட்டி வீதத்தைக் குறைப்பது என்பது ஒருவழி. இதன் மூலம் வெற்றி கிட்டவில்லையென்றால் அரசே கூட முதலீடு செய்வதற்கு முன்வரலாம். நடப்புத் தேவைகளுக்குக் குறைவாகத் தனியார் முதலீடு இருந்தால், அதற்கு ஈடாக அரசு தனது முதலீட்டளவை அதிகப்படுத்தி நிலைமையைச் சீர்ப்படுத்தலாம். என்றாலும், இவற்றையெல்லாம்விட, தொழில் நுட்ப முன்னேற்றம்தான் முதலீட்டளவைக் கணிசமாகப் பெருக்க முடியும். புதிய உற்பத்தி முறைகள், புதிய சாதனங்கள், புதிய தொழில்கள்—இவை சமூகச் சேமிப்புகளைத் தம்பக்கம் கவர்ந்திழுக்கும் இயல்பு கொண்டவை. இத்தகைய தொழில் முன்னேற்ற அறிகுறிகள்தான் முதலீட்டளவைப் பெருக்குகின்ற வலிவான காரணிகள். ரயில்பாதை யமைப்பு, மின்சாரப் பண்ட உற்பத்தித் தொழில், கார் உற்பத்தி முதலியவைதான் கடந்த காலத்தில் உலகத்து மக்களை மந்தத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவித்து, வெளிக் கொணர்ந்து அவர்தம் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுத்தவை. இவை போன்ற புத்தாக்கங்கள் இன்னும் மேன்மேலும் தோன்றினால்தான் எதிர்காலத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் நன்கு உயரும்—ஆக்கத்திறன் சிறப்பாக அமையும். நிலைபேருக்கத்திட்டங்கள் இப்புத்தாக்கங்களைப் பாது காத்து வரவேண்டும், அழித்துவிடக்கூடாது. தொழிலின் சுழல் ஏற்ற இறங்கங்களுடைய மூல காரணங்களைத் தேடிப்பிடித்து எடுத்துக்கூட்ட நாம் முயல்கின்ற அதேநேரத்தில், புத்தமைப்புகளுக்குக் காரணங்களாக இருக்கின்ற சக்திகளை ஊக்குவிக்க மறந்துவிடக் கூடாது. முதலீட்டுப் பெருக்கத்தின் ஜீவநாடி இவை.

நூல் அகராதி

(Bibliography)

1. Alfred Marshall—'Money credit and Commerce'—Macmillan Company. London, 1923.
2. American Economic Association—'Readings in Business Cycles Theory'—Third Edition, 1961.
3. Angell, J. W.—'Investment and Business Cycles'—Mackrahill Book Company—New York, 1941.
4. Ansianx, M.—'Under consumption as a factor in the Economic Cycle'—International Labour Review XXVI, 1932.
5. Arthur F. Burns—'New Facts on Business Cycles'—National Bureau of Economic Research, 1950.
6. Ayers, L. P.—'The Economics of Recovery'—Macmillan Company, New York, 1933.
7. Beveridge, W. H.—'Unemployment, A Problem of Industry'—Longmans Green Company, London, 1930.
8. Bickerdike, C. F.—'A Non-Monetary course of Fluctuations in Employment'—Economic Journal, Sept., 1914.
9. Bratt, E. C.—'Business Cycles and Forecasting'—Fourth Edition—Homewood, Illinois, Richard D. Irwin, Inc. 1953.
10. Bulletin of the Oxford University Institutes of Statistics—Monetary Policy—A Symposium Papers 4, 5, 8. April, May, August 1952.
11. Bingess, R. W.—'The velocity of Bank Deposits'—Journal of American Statistical Association, June, 1923.
12. Burns, A. F. and Mitchell, W. C.—'Measuring Business Cycles'—National Bureau of Economic Research, New York, 1946.

13. Carl Snyder—(1) 'New measures in the Equation of Exchange'—American Economic Review, Dec 1924. (2) 'Business cycles and Business measurements'—Macmillan Company—New York, 1927.

14. Caustov castle—'Theory of Social Economy'—Harcount, Brace and Company, 1923.

15. Charles F. Roos—'Survey of Economic Forecasting Techniques'—Econometrica, Oct., 1955.

16. Clark, J. M.—'Business Acceleration and the law of Demand'—Journal of Political Economy, 1917.

17. Department of Economic Affairs, Dec. 1949—'National and International measures for Full Employment.'

18. Dewey, E. R. and Dakin, R. F.—'Cycles'—The Science of Prediction'—Henry Gold Company, 1947—New York.

19. Douglas, P. H:—(1) 'Controlling Depressions' W. W. Norton and Company, 1935.
(2) 'Credit Power and Democracy' Cecil Palmer, 1935, London.
(3) 'Social credit'—Eyre and Spottiswoode, 1933.

20. Dudley Dillard—'The Economics of John Maynard Keynes'—Prentice Hall, 1948—New York.

21. Ellis, H. S.—'German Monetary Theory', Harward University Press, 1934 & 1937.

22. Eucyclopaedia of the Social Sciences—Essays relating to Trade cycles.

23. Erick Lundberg—'The Business Cycle in the Postwar World—Macmillan Company, 1958, London.

24. Estey, J. A.—'Business Cycles'—Asia Publishing House, 1960.

25. Foster, W. T. and Catching. W.—'Profits' Houghton Company, 1925.

26. Gayer, A. D.—'Monetary Policy and Economic Stabilisation'—Macmillan Company, London. Second Edition, 1937.

27. Geoffrey, H. Moore—'Statistical Indicators of Cyclical Revivals and Recessions'—National Bureau of Economic Research—New York, 1950.

28. Golden Weiser, E. A —'Federal Reserve objectives and Policies'—American Economic Review, June, 1947.

29. Gordon, R A.—'Business Fluctuations'—New York, Harper and Brothers, 1952.

30 Haberler, G.—'Prosperity and Depression'—George Allan and Unwin Ltd., London, 1958.

31. Hansen, A. H.—(1) 'Business Cycles and National Income'—W. W. Norton Company, 1951 & 1964.

(2) 'Economic Stabilisation in an Unbalanced World'—Harcourt Brace and Company—New York.

(3) 'Fiscal Policy and Business Cycles'—W. W. Norton Company—New York, 1941.

(4) 'Monetary Theory and Fiscal Policy'—Macrahill Book Company, 1949.

(5) 'A Guide to Keynes'—George Allan Adwin Company, 1964.

32. Hansen, A. H. and Clemence—'Readings in Business Cycles and National Income'—W.W. Norton Company, New York, 1953.

33. Hansen, A. H. and Herbert Taut—'Investment and Saving in Business Cycle Theory', Econometrica, April, 1933.

34. Hardy, C. O. and Cox, V.—'Forecasting Business Conditions'—Macmillon Company, 1927.

35. Harris, S. E.—'The New Economics', Alfred A. Knopb, New York, 1947

36. Harrod, R. F.—'The life of John Maynard Keynes'—Macmillon Company, London, 1952.

37. Harry Jerome—'Migration and Business Cycles'—National Bureau of Economic Research—New York, 1926.

38. Hawtrey, R. G.—(1) ' Good and Bad Trade '—Constable and Company Ltd., 1913.

(2) ' Currency and Credit '—Longmans Green and Company, 1928.

(3) 'Trade and Credit '—Longmans Green and Company, 1928.

(4) ' The Art of Central Banking '—Longmans Green and Company, 1933.

(5) ' Capital and Employment '—Longmans Green and Company, 1937.

(6) ' Monetary Reconstruction '—Longmans Creen and Company, 1926.

(7) 'The Monetary Theory of the Trade Cycle and its Statistical Test ', Quarterly Journal of Economics XLI, 1926-27.

39. Hayek, F. A.—(1) ' Prices and Production ', George Rontledge and Sons Ltd., 1935.

(2) Monetary Theory and the Trade Cycle '—Harcourt, Brace and Company, 1933.

(3) ' Profits, Interest and Investment '—George Rontledge and Sons and Company, 1939.

40. Hicks, J. R.—' A contribution to the Theory of the Trade Cycle '—Oxford University Press—London, 1950.

41. Hobson, J. A.—(1) ' Economics of Unemployment '—G. Allen Andwin Company, 1922.

(2) 'The Industrial System '—Longmans Company—London, 1910.

42. ' International Economic Papers No. 3 '—Macmillan Company—London.

43. Joan Robinson—' Induction to the Theory of Employment'—Macmillan Company, London, 1937.

44. John Maynard Keynes—(1) ' General Theory of Employment, Interest and money '—Harcourt Press Company—New York, 1936.

(2) 'Treatise on money'—Harcourt Press Company—New York, 1930.

45. Kondratieff, N. D.—'Long waves in Economic life'—Review of Economic Statistics, 1935.

46. Lawrence, R. Klen—'The Keynesian Revolution'—Macmillan Company—New York, 1947.

47. League of Nations—'Course and Phases of the World Economic Depression.'

48. Lloyd, A. Metzler—'Keynes and the theory of Business Cycles.'

49. Mabel Timbin—'Keynesian Economics'—University of Toronto Press, 1942.

50. Mathews, R. C. O.—'Trade Cycles'—Cambridge University Press, 1960.

51. Mirkowich. N.—'The Economics of John. A. Hobson'—Indian Journal of Economics 1942.

52. Mitchell—'Business cycles, the problem and its setting'—National Burean of Economic Research—New York 1927.

53. Pigou. A. C. — 'Industrial Fluctuations' — Macmillan Company—London 1927.

54. Philips C. A., Mcmanns T. F and Nelson R. W—'Banking and the Business cycles'. Macmillan Company 1937.

55. Randolph Burgess. W.—'Reserve Banks and the money market'. Harper and Brothers—New York 1936.

56. 'Readings in Business cycles' — American Economic Association—George Allen Adwin Company London 1966.

57. Robert son. D. H. (1) 'A study of Industrial Fluctuations' 1915. (2) Banking policy and the price level 1926. (3) Essays in monetary Theory 1940. (4) The Monetary Doctrines of Messers Foster and Catchings—Quarterly Journel of Economics. XLIII 1928-29.

58. Robbins. L. — 'The Great Depression' — Macmillon Company—New York 1934.

59. Schumpeter. J. — (1) The present world Depression'— American Economic Review-march 1931. (2) The Theory of Economic Development. — Harward University press-cambridge 1934. (3) 'Business cycles'— Machrahill Book Compay — New York 1939. (4) The explanation of the Business cycle — Economic. December 1927. (5) Readings in Business cycle Theory — The Blakiston Company 1944. (6) The Analysis of Economic Change — Review of Economic statistics, May 1935.

60. Shafer. J. E — 'An Enplanation of the Business cycle.' — American Economic Review XVIII 1928.

61. Smith. W. L. — 'On the Effectiveness of Monetary Policy.' — American Economic Review XLVI. 1956.

62. Taussing — 'Principles of Economics' Macmillan Company — New York. 1921.

கலைச்சொல் அகராதி

ஆங்கிலம் — தமிழ்

A

Acceleration	—	வேக வளர்ச்சி
Acceleration Principle	—	வேக வளர்ச்சித் தத்துவம்
Accountancy	—	வணிகக் கணக்கியல்
Accumalation of Capital	—	முதல்திரட்சி முதலாக்கம்
Adverse balance of payments	—	பாதகச் செலுத்துநிலை
Aggregate demand	—	மொத்தத் தேவை
Aggregate Expenditure	—	மொத்தச் செலவீடு
Aggregate income	—	மொத்த வருமானம்
Aggregate investment	—	மொத்த முதலீடு
Aggregate output	—	மொத்த உற்பத்தி
Allocation of resources	—	சாதனப் பங்கீடு
Amplitude of fluctuations	—	ஏற்ற இறக்கங்களின் பரப்பெல்லை, வீச்சு
Analysis	—	பகுத்தாய்வு
Analytical forecasting	—	பகுத்தாய்வு முன்கணிப்பு
Anticyclical policy	—	சுழல் எதிர்ப்புக் கைக்கோள்
Anti-depression policy	—	மந்த எதிர்ப்புக் கைக்கோள்
Anti-trust laws	—	டிரஸ்ட் எதிர்ப்புச் சட்டங்கள்
Appreciation	—	மதிப்பேற்றம்
Assessment	—	மதிப்பீடு
Assumption	—	அனுமானம், எடுகோள்
Automatic Stabilisers	—	தாமே இயங்கும் நிலைபேறுக்கக் கருவிகள்
Autonomous investment	—	[illegible] முதலீடு

B

Balance	—	இருப்பு
Balance of payments	—	அயல்நாட்டுச் செலுத்துநிலை
Balanced Budget	—	இருதலை ஒத்த வரவு செலவுத் திட்டம்
Bank credit	—	பாங்குக்கடன் செலாவணி
Bank rate	—	பாங்கு வீதம்
Banking System	—	பாங்கு அமைப்பு
Bargaining power	—	பேர சக்தி
Barometric forecasting	—	நிலவரமானிய முன்கணிப்பு
Bills	—	உண்டியல்கள்
Book keeping	—	வணிகப்பதிவு முறை
Boom	—	பூரிப்பு
Budget	—	வரவு செலவுத் திட்டம்
Bulletin	—	வெளியீடு
Building cycles	—	கட்டடத் தொழில் சுழல்
Built-in-stabilisers	—	உட்புனைவுள்ள நிலைபேறுக்கக் கருவிகள்
Business cycles	—	வாணிபச் சுழல்கள்
Business demand	—	வாணிபத் தேவை
Business fluctuations	—	வாணிப ஏற்ற இறக்கங்கள்
Business units	—	வாணிப நிறுவனங்கள்

C

Cash loans	—	அழைப்புக் கடன்கள்
Capital	—	முதல், மூலதனம்
Capital assets	—	மூலதனச் சொத்துகள்
Capital, fixed	—	நிலைமுதல்
Capital formation	—	முதல் திரட்சி, முதலாக்கம்
Capital goods	—	முதற் பொருள்கள், முதற் கருவிப் பொருள்கள்
Capital market	—	முதல் அங்காடி, மூலதன அங்காடி
Capitalistic method of production	—	முதலாட்சி உற்பத்திமுறை

Cash — ரொக்கம்
Cash balance — ரொக்க இருப்பு
Cash reserve ratio — ரொக்க இருப்பு வீதம்
Collective bargaining — கூட்டுபேரம்
Collective coefficient — கெழு, குணகம்
Combinations — இணைப்புகள், தொகுப்புகள்
Commerce — வாணிகம், வர்த்தகம்
Commercial cycle — வர்த்தகச் சுழல்
Commercial crisis — வர்த்தக நெருக்கடி
Commercial economy — வர்த்தகப் பொருளாதாரம்
Compensation — இழப்பீடு
Compensating fiscal Programme — ஈடுசெய் அரசிறைத் திட்டம்
Compensation payments — ஈடுசெய் செலுத்துகள்
Compensatory spending — ஈடுசெய் செலவு
Constant purchasing power standard — மாறா வாங்குந்திறன் திட்டம்
Constant volume of money — மாறாப் பணத்தொகை
Contribution rates — பங்களிப்பு வீதங்கள்
Construction — கட்டுமானம்
Construction industries — கட்டுமானத் தொழில்கள்
Consumer credit — நுகர்வோர் கடன்
Consumer's outlay — நுகர்வோர் செலவீடு
Consumption — துய்ப்பு, நுகர்ச்சி
Contraction — சுருக்கம்
Costs, fixed — மாறாச் செலவுகள்
Costs, variable — மாறுஞ் செலவுகள்
Cost of borrowing — கடன் வாங்கு செலவுகள்
Credit — பாங்குச் செலாவணி
Creditor — கடன் ஈவோன்
Crop rotation — பயிர் சுழற்சி முறை
Cyclical change — சுழல் மாறுதல், சுழல் வகை மாறுதல்
Cyclical expansion — சுழல் வகைப் பெருக்கம்
Cycle of crops — தானியச் சுழல்
Cycle of rainfall — மழைச் சுழல்

D

Debt, National	—	நாட்டுக் கடன்
Deficit bedget	—	பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம்
Deficit financing	—	பற்றுக்குறை நிதியாக்கம்
Deflation •	—	பணவாட்டம்
Demand, derived	—	வழிவந்த தேவை
Demand, investment	—	முதலீட்டுத் தேவை
Depreciation	—	மதிப்பிறக்கம்
Depreciation of capital	—	முதற்பொருட்களின் தேய்மானம்
Depression	—	மந்தம்
Devaluation	—	நாணய மதிப்புக் குறைப்பு
Diminishing productivity	—	குறைந்து செய் ஆக்கப்பாடு
Discount	—	கழிவு
Discount Policy	—	கழிவுக் கைக்கோள்
Discount rate	—	கழிவு வீதம்
Discrimination	—	பேதங்காட்டுகை
Disequilibrium	—	சமன்கேடு, சமன் பாடற்றநிலை
Disposeable income	—	செலவிட உள்ள நிகர வருமானம்
Disutility	—	பயன்கேடு
Dividend	—	இலாப ஈவு
Dumping	—	டம்பிஸ், வாணிபக் கொட்டுகை
Durable goods	—	உறுதிப் பொருள்கள்
Duties	—	வரிகள்
Duties, excise	—	ஆயவரிகள்
Dynamic state	—	இயக்க நிலை

E

Econometric forecasting	—	ஏக்கனுமெட்ரிக் முன்கணிப்பு
Economic conflicts	—	பொருளாதார மோதல்கள்
Economic fluctuations	—	பொருளாதார ஏற்ற இறக்கங்கள்

Economic grouth	—	பொருளாதார வளர்ச்சி
Economic instability	—	பொருளாதார நிலைப்பாடின்மை
Effective demand	—	பயன்படு தேவை
Employment multiplier	—	வேலை பெருக்கி
Endogenous factors	—	உள்ளீட்டுக் காரணிகள்
Enterprise	—	தொழில் துணிவு
Entrepreneur	—	தொழில் முயல்வோன்
Equilibrium	—	சமநிலை
Equilibrium concept	—	சமநிலைத் தத்துவம்
Estimate	—	மதிப்பீடு
Excess	—	அமித
Excess investment	—	அமித முதலீடு
Excess production	—	அமித உற்பத்தி
Excess saving	—	அமிதச் சேமிப்பு
Exchange control	—	நாணயமாற்றுக் கட்டுப்பாடு
Exchange Depreciation	—	நாணயமாற்று மதிப்பிறக்கம்
Exchange rate	—	நாணியமாற்று வீதம்
Exogenous factors	—	புறச்சார்புக் காரணிகள்
Expansion	—	பெருக்கம்
Expectation	—	எதிர்பார்க்கை, எதிர்நோக்கு
Expenditure	—	செலவீடு

F

Factor earnings	—	காரணி சம்பாத்தியங்கள்
Favourable balance of payments	—	சாதகச் செலுத்துநிலை
Fiscal Policy	—	அரசிறைக் கைக்கோள்
Fixed capital	—	நிலைமுதல்
Fixed capital goods	—	நிலைமுதற் பொருள்கள் நிலைமுதற் கருவிப் பொருள்கள்
Fixed costs	—	மாறாச் செலவுகள்
Flexibility	—	நெகிழ்ச்சி
Fluctuations	—	நெளிவுகள், ஏற்ற இறக்கங்கள்
Fluctuations, seasonal	—	பருவகால ஏற்ற இறக்கங்கள்

Fluctuations, industrial — தொழில் ஏற்ற இறக்கங்கள்
Forced saving — கட்டாயச் சேமிப்பு
Forecasting — முன்கணிப்பு
Free capital — விடுதலைமுதல், சுயேச்சைமுதல்
Free trade — தடையிலா வாணிபம்
Full employment — நிறைவுடை வேலைவாய்ப்பு
Full employment. over — நிறைவெஞ்சிய வேலைவாய்ப்பு

G

Gestation period — சூல்காலம்
Gold standard — பொன்திட்டம்
Great Depression — பெருமந்தம்
Gross income — மொத்த வருமானம்
Gross interest — மொத்த வட்டி
Gross National Product — நாட்டின் மொத்த ஆக்கம்
Gross profits — மொத்த இலாபம்
Growth — வளர்ச்சி

H

Harvest Theories — அறுவடைக் கோட்பாடுகள்
Heavy industries — கனரகத் தொழில்கள்
Higher stages — உயர்நிலைத் துறைகள்
Higher purchase — தவணைமுறை வாங்கற்பாடு
Hoarding — பதுக்கல்

I

Immigration — குடியிறக்கம்
Import quotas — இறக்குமதிக் கோட்டா முறை
Increment — கூடுதல்
Index — குறியீடு
Index numbers — குறியீட்டெண்கள்
Induced Consumption — தூண்டிய நுகர்ச்சி

Induced investment — தூண்டிய முதலீடு
Industrial cycle — தொழிற் சுழல்
Industrial revolution — தொழில் புரட்சி
Inflation — பண வீக்கம்
Inflexibility — நெகிழ்ச்சியின்மை
Innovations — புத்தாக்கங்கள், புத்தமைப்புகள்
Internal forces — அகச்சக்திகள்
Interactions — பின்னியசெயல் விளைவுகள்
International aspects of business cycles — வாணிபச்சுழலின் சர்வதேசப் பண்புகள்
International capital flow — பன்னாட்டு முதல் ஓட்டம்
International collaboration — பன்னாட்டு உடனுழைப்பு
International economic cooperation — சர்வதேசப் பொருளாதாரக் கூட்டுறவு
International Monetary Collaboration — பன்னாட்டுப் பணத்துறை உடனுழைப்பு
International Monetary Fund — பன்னாட்டுப் பணநிதி
International Trade Organisation — பன்னாட்டு வாணிப அமைப்பு
Intervention — குறுக்கீடு
Invention — கண்டுபிடிப்பு
Inventories — சரக்கு இருப்பு
Investment — முதலீடு
Investment Boom — முதலீட்டுப் பூரிப்பு
Investment Components — முதலீட்டுக் கூறுகள்
Investment function — முதலீட்டுப் பணி
Isolationism — தனிமைக் கோட்பாடு

J

Juglar cycles — ஜூக்ளார் சுழல்கள்

Kitchin cycles — கிச்சின் சுழல்கள்
Kondratieff cycles — கோண்ட்ராடிஃப் சுழல்கள்
Kuznets cycles — குஸ்நெட்ஸ் சுழல்கள்

L

Lagging Series — பின்தங்கு நிலை இனங்கள்
Lending Series — முந்துநிலை இனங்கள்
League of Nations — சர்வதேசச் சங்கம்
Length of cycles — சுழல்களின் நீட்சி
Leverage — திறன்
Leverage coefficient — நெம்புதிறக் கெழு
Leverage effect — நெம்புதிற விளைவு
Liability — பொறுப்பு
Liquidation — கலைப்பு
Liquid assets — நீர்மைச் சொத்துகள்
Liquidity preference — நீர்மை விருப்பம்
Loanable funds — கடன் நிதிகள்
Long cycles — நெடுஞ்சுழல்கள்
Long waves — நெடுங்கால அலைகள், நெடுஞ் சுழல்கள்

M

Major cycles — பெருஞ்சுழல்கள்
Maladjustments — பொருத்தக் கேடுகள்
Minor cycles — சிறு சுழல்கள்
Manufactured goods — பொறிசெய் பொருட்கள்
Manufacturing industries — பொறிவழி உற்பத்தித் தொழில்கள்
Marginal efficiency of capital — முதலின் இறுதி நிலைத்திறன்
Marginal profits — இறுதிநிலை இலாபங்கள்
Marginal Productiviiy — இறுதிநிலை ஆக்கம்

Marginal Propensity to consume — இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம்
Marginal Propensity to save — இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்
Medium — மத்திமம்
Meteorological — வானிலை சார்ந்த கோட்பாடுகள்
Migration — இடப்பெயர்ச்சி, குடியிருப்புப் பெயர்ச்சி
Monetary causes — பணச்சார்பான காரணங்கள்
Monetary control — பணத்துறைக் கட்டுப்பாடு
Monetary Expansion — பணப் பெருக்கம்
Monetary Management — பணத்துறை நிர்வாகம்
Monetary over investment Theory — பணச்சார்பான அமித முதலீட்டுக் கோட்பாடு
Monetary Policy — பணத்துறைக் கைக்கோள்
Monetary Theory — பணத்துறைக் கோட்பாடு
Money market — பண அங்காடி
Monopoly — சர்வாதீனம்
Multiplier — பெருக்கி
Multiplier-Acceleration interaction — பெருக்கி வேகவளர்ச்சிப் பின்னிய செயல்விளைவு

N

National Bureau of Economic Research — தேசியப் பொருளாதார ஆய்வுக் கழகம்
National expenditure — நாட்டுச் செலவீடு
National income — நாட்டு வருமானம்
National Industrial Recovery Act — தேசியத் தொழில் மீட்புச் சட்டம்
National output — நாட்டு உற்பத்தி
Negative wages — எதிர்க்கணியக் கூலிகள்

Net National Production (NNP) — நாட்டு நிகர ஆக்கம்
New Deal — புதுக் கொள்கை

O

Open market operations — வெளி அங்காடி நடவடிக்கைகள்
Optimism — நன்னம்பிக்கை
Optimum — உத்தமம்
Outlaw — செலவீடு
Output — உற்பத்தி
Overhead costs — பொதுச் செலவுகள்
Over investment — அமித முதலீடு
Over investment theory — அமித முதலீட்டுக் கோட்பாடு
Over saving — அமித சேமிப்பு

P

Partial — பகுதியளவான
Pattern of cycles — சுழல்களின் பாணி
Payment — செலுத்து
Payroll — சம்பளப் பட்டியல்
Peak — உச்சம், உச்சநிலை
Pension — ஓய்வு ஊதியம்
Periodicity — காலக் கூறு
Period of gestation — சூல்காலம்
Pessimism — அவநம்பிக்கை
Perishable goods — அழியும் பொருள்கள்
Plant — தளவாடம்
Price control — விலைக் கட்டுப்பாடு
Price cycle — விலை மட்டச் சுழல்
Price fluctuations — விலை ஏற்ற இறக்கங்கள்
Price policy — விலைக் கைக்கோள்
Price stabilisation — விலை நிலை பேறுக்கம்
Primary demand — அடிப்படைத் தேவை

Primary depressions — தொடக்கநிலை மந்தங்கள்
Primary products — அடிப்படைப் பண்டங்கள்
Producers goods — உற்பத்தியாளர் பண்டங்கள்
Progressive taxation — வளர்வீத வரிமுறை
Propensity to consume — துய்ப்பு நாட்டம்
Propensity to save — சேமிப்பு நாட்டம்
Proposition — வீதாச்சாரம்
Prosperity — செழிப்பு
Psychologicel causes — உளச்சார்புக் காரணங்கள்
Psychological Theory — உளச்சார்பான கோட்பாடு
Public Dept — பொதுக்கடன்
Public enterprise — அரசுத்துறை, பொதுத்துறை
Public expenditure — அரசுச் செலவீடு, பொதுச் செலவீடு
Public finance — பொதுநிதி
Publie revenue — அரசு வருவாய்
Public utility — பொது வசதி
Public works programme — பொதுப் பணித்திட்டம்
Pumb Priming — ஓட்டத் தூண்டல்

Q

Qualitative control of credit — கடன் தன்மைக் கட்டுப்பாடு
Quantitative control of credit — கடன் அளவுக் கட்டுப்பாடு
Quantity of money — பணக்கணியம்

R

Range — வீச்சு
Rate of discount — கழிவு வீதம்
Rate of investment — முதலீட்டு வீதம்
Ratio — விகிதம், வீதத் தொடர்பு
Rationing — பங்கீடு
Reaction — எதிர் விளைவு
Readjustments — மறு சீரமைவுகள்

Recession — சுணக்கம்
Reconstruction — புனரமைப்பு
Recovery — மீட்சி
Relative — தராதர
Relative prices — தராதர விலைகள்
Relief payments — நிவாரணச் செலுத்துகள்
Reserve fund — காப்பு நிதி, இருப்பு நிதி
Rigidity — வளைந்துகொடாத் தன்மை
Round about method of production — சுற்றுவழி உற்பத்தி முறை
Rythm — கால இலயம்

S

Saturation — தெவிட்டல் நிலை
Savings voluntary — சுயேச்சை சேமிப்புகள்
Scarcity — கிடைப்பருமை
Securities — பத்திரங்கள்
Selective credit control — தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு
Semi-finished goods — பாதி முடிந்த பண்டங்கள்
Semi-slump — அரைத் தேக்கநிலை
Slump — தேக்கம், தேக்கநிலை
Sliding scale of wage — வழுக்களவுக் கூலித்திட்டம்
Social dividend — சமூக இலாப ஈவு
Specific cycles — தனி வகைச் சுழல்கள்
Speculation — யூக வாணிபம்
Stability — நிலைப்பாடு, உறுதிப்பாடு
Stabilisation — நிலைபேருக்கம்
Stagnation — தேக்க நிலை
Stock market — பங்கு அங்காடி
Storm cellar — புயல் நிலவறை
Structure — கட்டமைப்பு
Structural changes — கட்டமைப்பு மாறுதல்கள்
Subsidy — உதவிக்கொடை

Sunspot Theory	—	கதிரவன் கரும்புள்ளிக் கோட்பாடு
Supplementary costs	—	துணைச் செலவுகள்
Savings	—	வீச்சுகள்

T

Tariff works	—	சுங்கச் சுவர்கள்
Trade cycles	—	வாணிபச் சுழல்
Treasury	—	கருவூலம், கஜானா
Trends	—	போக்குகள்
Trough	—	பள்ள நிலை
Turning points	—	திருப்பு முனைகள்
Turning point, lower	—	கீழ்மட்டத் திருப்புமுனை
Turning point, upper	—	மேல்மட்டத் திருப்புமுனை

U

Under consumption	—	நுகர்ச்சிக் குறைவு
Under consumption theory	—	நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடு
Uuder employment	—	வேலைவாய்ப்புக் குறைவு
Under saving	—	சேமிப்புக் குறைவு
Under saving theory	—	சேமிப்புக் குறைவுக் கோட்பாடு
Unemployment	—	வேலை வாய்ப்பின்மை
Unemployment insurance	—	வேலைவாய்ப்பின்மை – இன்சூரன்ஸ்
Unspent margin	—	செலவிடப்படா இறுதி நிலை

W

Wage policy	—	கூலிக் கைக்கோள்
War cycle	—	போர்ச்சுழல்

கலைச்சொல் அகராதி

தமிழ் — ஆங்கிலம்

அ

அனுமானம் — Assumption
அங்காடிச் சமநிலை — Market equilibrium
அமித இலாபம் — Excess profit
அமித முதலீடு — Over investment
அமிதச் சேமிப்பு — Over saving
அகச் சக்திகள் — Internal forces
அரசுத்துறை — Public Sector
அரசிறைக் கைக்கோள் — Fiscal policy
அறுவடைக் கோட்பாடுகள் — Harvest Theories
அழைப்புக் கடன்கள் — Cash loans
அழியும் பொருள்கள் — Perishable goods
அடிப்படைத் தேவை — Primary Demand
அடிப்படைப் பண்டங்கள் — Primary products
அரசு வருவாய் — Public reserve
அயல்நாட்டுச் செலுத்துநிலை — Balance of payments
அரைத் தேக்க நிலை — Seim slump
அவநம்பிக்கை — Pessimism

ஆ

ஆக்கப்பாடு — Prductivity
ஆய வரிகள் — Excise duties

இ

இழப்பீடு — Compensation
இலாப ஈவு — Dividend

இயக்கநிலை — Dynamic State
இனங்கள் — Series
இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம் — Marginal Propensity to Consume
இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் — Marginal Propensity to save
இறுதிநிலை ஆக்கப்பாடு — Marginal Productivity
இடப் பெயர்ச்சி — Migration
இருதலையொத்த வரவு செலவுத் திட்டம் — Balanced Budget

ஈ

ஈடுசெய் செலவு — Compensatory spending
ஈடுசெய் செலுத்துகள் — Compensation payments
ஈடுசெய் அரசிறைத் திட்டம் — Compensating fiscal programme

உ

உச்சம், உச்சநிலை — Peak
உத்தமம் — Optimism
உற்பத்தி — Output
உற்பத்தியாளர் பொருள்கள் — Producer's goods
உள்ளீட்டுக் காரணிகள் — Endogenous factors
உயர்நிலைத் துறைகள் — Higher Stages
உண்டியல்கள் — Bills
உறுதிப் பொருள்கள் — Durable goods
உறுதிப்பாடு — Stability
உளச்சார்புக் காரணங்கள் — Psychological causes
உளச்சார்புக் கோட்பாடு — Psychological theory
உதவிக் கொடை — Subsidy
உட்புனைவுள்ள நிலைபேறுக்கக் கருவிகள் — Built-in-Stabilisers

எ

எடுகோள் — Assumption
எதிர்விளைவு — Reaction

எதிர்நோக்குகள், எதிர் பார்க்கைகள் — Expectations
எதிர்க்கணியக் கூலிகள் — Negative wages
எக்கனுமெட்ரிக் முன்கணிப்பு — Econometric forecast

ஏ

ஏற்ற இறக்கங்கள் — Fluctuations
ஏற்ற இறக்கங்களின் பரப் பெல்லை — Amplitude of fluctuattons

ஓ

ஓட்டம் — Flow
ஓட்டத் தூண்டல் — Pump priming
ஓய்வு ஊதியம் — Pension

க

கதிரவன் கரும்புள்ளிக் கோட் பாடு — Sunspot Theory
கழிவு வீதம் — Discount rate
கழிவுக் கைக்கோள் — Discount Policy
கடன் ஈவோன் — Creditor
கடன் செலாவணிப் பங்கீடு — Credit rationing
கடன் வாங்குச் செலவுகள் — Cost of brorrowing
கடன் அளவுக் கட்டுப்பாடு — Quantitative control credit
கடன் தன்மைக் கட்டுப்பாடு — Qualitative control of credit
கடன் நிதிகள் — Loanable funds
கட்டமைப்பு — Structure
கட்டுமானம் — Construction
கட்டுமானத் தொழில்கள் — Construction Industries
கட்டடத் தொழில் சுழல்கள் — Building Cycles
கருவூலம் — Treasury
கண்டுபிடிப்பு — Invention
கலைப்பு — Liquidation

கா

காரணி சம்பாத்தியங்கள்	— Factor earnings
கால இலயம்	— Rythm

கு

குறியீடு	— Index
குறுக்கீடு	— Intervention
குடியிறக்கம்	— Immigration
குறைந்துசெல் ஆக்கப்பாடு	— Diminishing Productivity
குஸ்நெட்ஸ் சுழல்கள்	— Kuznets cycles

கூ

கூடுதல்	— Increment
கூட்டுபேரம்	— Collective bargaining
கூலிக் கைக்கோள்	— Wage Policy

கி

கிடைப்பருமை	— Scarcity
கிச்சின் சுழல்கள்	— Kitchin cycles

கீ

கீழ்மட்டத் திருப்பு முனை	— Lower turning point

கை

கைமாற்றுச் செலுத்துகள்	— Transfer payments

கோ

கோண்ட்ராடிஃப் சுழல்கள்	— Kondratieff cycles

ச

சர்வதேசப் பொருளாதாரக் கூட்டுறவு	— International economic cooperption
சமநிலை	— equilibrium

சமநிலைக்கேடு — Disequilibrium
சர்வாதீனம் — Monopoly
சர்வதேசச் சங்கம் — League of Nations
சம்பளப் பட்டியல் — Payroll
சமூக இலாப ஈவு — Social Dividend
சமூகப் பாதுகாப்பு — Social Security

சா

சாதனப் பங்கீடு — Allocation of resources
சாதகச் செலுத்துநிலை — Favourable balance of payments

சு

சுணக்கம் — Recession
சுருக்கம் — Contraction
சுங்கச் சுவர்கள் — Tariff Walls
சுழல்கள் — Cycles
சுழல் மாறுதல் — Cyclical changes
சுழல் எதிர்ப்புக் கைக்கோள் — Ant-cyclical policy
சுழல்களின் காலக் கூறு — Periodicity of cycles
சுழல்களின் கட்டங்கள் — Phases of cycles
சுற்றுவழி உற்பத்திமுறை — Round about method of production
சுழல்களின் நீட்சி — length of cycles

செ

செலவீடு — Expenditure
செலுத்து — Payments
செழிப்பு — Prosperity
செலவிடப்படா இறுதிநிலை — unspent margin

சே

சேமிப்பு நாட்டம் — Propensity to save
சேமிப்புக் குறைவுக் கோட்பாடு — under consumption theory

த

தளவாடம்	— Plant
தராதர விலைகள்	— Relative prices
தடையில்லா வாணிபம்	— Free trade
தனியாள் வருமான வரி	— Personal Income tax
தனித்தன்மைக் கோட்பாடு	— Isolationism
தவணை முறை வாங்கற்பாடு	— Hire Purchase

தா

தானியச் சுழல்	— Cycle of crops
தாமே இயங்கும் நிலைபேறுக்கக் கருவிகள்	— Automatic stabilisers

தி

திருப்பு முனைகள்	— Turning points

தெ

தெவிட்டல் நிலை	— Saturation

து

துய்ப்பு நாட்டம்	— propensity of consume
துணைச் செலவு	— Supplementary costs

தூ

தூண்டா முதலீடு	— Autonomous investment
தூண்டிய முதலீடு	— Induced investment

தே

தேக்க நிலை	— Slump
தேசியத் தொழில் மீட்புச் சட்டம்	— National Industrial Recovery Act

தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு — Selective credit control
தேசியப் பொருளாதார ஆய்வுக் கழகம் — National Bureau of Economic Research

தொ

தொழிற் சுழல் — Industrial cycle
தொழிற் புரட்சி — Industrial Revolution
தொழிற்றுணிவு — Enterprise
தொடக்க நிலை மந்தம் — Primary Depression

நா

நாட்டுச் செலவீடு — National Expenditure
நாட்டுக் கடன் — National Debt
நாட்டு உற்பத்தி — National output
நாணய மதிப்புக் குறைப்பு — Devaluation
நாணய மாற்றுக் கட்டுப்பாடு — Exchange control
நாணய மாற்று வீதம் — Exchange rate
நாணய மாற்று மதிப்பிறக்கம் — Exchange depreciation
நாட்டின் மொத்த ஆக்கம் — Gross National Product
நாட்டு வருமானம் — National income
நாட்டு நிகர ஆக்கம் — Net National Product

நி

நிலை முதல் — Fixed capital
நிலை முதற் கருவிப் பொருள்கள் — Fixed capital goods
நிலை பேருக்கம் — Stabilisation
நிலைப் பாடின்மை — Instability
நீண்ட அலைகள் — Long wave

நீ

நீர்மை விருப்பம் — Liquidity Preference
நீர்மை சொத்துகள் — Liquid assets

நு

நுகர்ச்சி — Consumption
நுகர்வோர் கடன் — Consumers' credit
நுகர்வோர் செலவீடு — Consumers 'outlay
நுகர்ச்சிக் குறைவு — Under consumption
நுகர்ச்சிக் குறைவுக் கோட்பாடுகள் — Under consumption theories

நெ

நெடுங்காலப் போக்கு — Secular trend
நெகிழ்ச்சி — Flexibility
நெகிழ்ச்சியின்மை — Inflexibility
நெடுஞ் சுழல்கள் — Long cycles

ப

பணக்கணிஸம் — Quantity of money
பங்கு அங்காடி — Stock market
பகுத்தாய்வு — Anaysis
பகுத்தாய்வு முன்கணிப்பு — Analytic al forecasting
பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் — Deficit Budget
பங்களிப்பு வீதங்கள் — Contribution
பயிர்ச் சுழற்சி முறை — Crop rotation
பற்றுக்குறை நிதியாக்கம் — Deficit financing
பணவீக்கம் — Inflation
பணவாட்டம் — Deflation
பணச் சார்பான காரணங்கள் — Monetary causes
பணத்துறைக் கோட்பாடுகள் — Monetary theories
பயன்கேடு — Disutility
பயன்படு தேவை — Effective demand
பதுக்கல் — Hoarding
பன்னாட்டு முதல் ஓட்டம் — International capital flow
பன்னாட்டு உடனுழைப்பு — International collaboration

பன்னாட்டுப் பணநிதி	—	International Monetary Fund
பாதி முடிந்த பண்டங்கள்	—	Semi-finished goods
பன்னாட்டு வாணிப அமைப்பு	—	International Trade organisation
பத்திரங்கள்	—	Securities
பங்கீடு	—	Rationing
பண அங்காடி	—	Money market
பணத்துறைக் கைக்கோள்	—	Monetary Policy
பணத்துறைக் கோட்பாடு	—	Monetary theory
பணத்துறைக் கட்டுப்பாடு	—	Monetary control
பணத்துறை நிர்வாகம்	—	Monetary Management
பணச்சார்பான அமித முதலீட்டுக் கோட்பாடு	—	Monetary over investment Theory
பகுதியளவான	—	Partial

பா

பாங்கு வீதம்	—	Bank rate
பாங்கு அமைப்பு	—	Banking System
பாங்குக் கடன் செலாவணி	—	Bank credit
பாதகச் செலுத்து நிலை	—	Adverse balance of payments

பி

பின்தங்கு நிலை இனங்கள்	—	lagging series
பின்னிய செயல் விளைவுகள்	—	Interactions

பு

புதுக் கொள்கை	—	New Deal
புனரமைப்பு	—	Construction
புயல் நிலவறை	—	Storm cellar
புத்தாக்கங்கள், புத்தமைப்புகள்	—	Introductions
புறச் சார்புக் காரணிகள்	—	Exogenous factors

பூ

பூரிப்பு	—	Boom

பெ

பெருக்கம்	—	Expansion
பெருக்கி	—	Multiplier
பெருஞ் சுழல்கள்	—	Major cycles
பெருக்கி வேகவளர்ச்சிப் பின்னிய செயல் விளைவு	—	Multiplier Acceleration interaction

பே

பேர சக்தி	—	Bargaining Power
பேதங் காட்டுகை	—	Discrimination

பொ

பொதுக்கடன்	—	Public Debt
பொது நிதி	—	Public finance
பொதுச் செலவீடுகள்	—	Public expenditures
பொது வசதி	—	Public utility
பொருளாதார நிலைப் பாடின்மை	—	Economic instability
பொருளாதார ஏற்ற இறக்கங்கள்	—	Economic fluctuations
பொருளாதார மோதல்கள்	—	Economic conflicts
பொருத்தக் கேடுகள்	—	Maladjustments
பொறி செய் பொருள்கள்	—	Manufactured goods
பொறிவழி உற்பத்தித் தொழில்கள்	—	Manufacturing Industries
பொதுச் செலவுகள்	—	Over head costs
பொறுப்பு	—	Liability
பொதுப்பணித் திட்டம்	—	Public works programme

போ

போர்ச் சுழல்	—	War cycle

ம

மதிப்பீடு — Estimate, Assessment
மந்தம் — Depression
மத்திமம் — Medium
மதிப்பேற்றம் — Appreciation
மதிப்பிறக்கம் — Depreciation
மரபு சார்ந்த ஏற்ற இறக்கங்கள் — Conventional fluctuations
மறு சீரமைவுகள் — Readjustments
மழைச் சுழல் — Cycle of rainfall
மந்த எதிர்ப்புக் கைக்கோள் — Anti depression policy

மா

மாறாச் செலவுகள் — Fixed costs
மாறாப் பணத்தொகை — Constant volume of money
மாறா வாங்குந்திறன் திட்டம் — Constant purchasing power standard
மாறும் செலவுகள் — Variable costs
மாற்றுச் செலுத்துகள் — Transfer payments

மீ

மீட்சி — Recovery

மு

முதல் — Capital
முதல் திரட்சி — Capital formation
முதல் அங்காடி — Captial market
முதலாட்சி உற்பத்தி முறை — Capitalistic method of production
முதற் பொருள்கள் — Capital goods
முதலீட்டுத் தேவை — Investment demand

முன்கணிப்பு — Forecasting
முதலீடு — investment
முதலீட்டுப் பூரிப்பு — Investment boom
முதலீட்டுக் கூறுகள் — Investment components
முதலீட்டுப் பணி — Investment function
முதலீட்டாளர் — Investor
முந்து நிலை இனங்கள் — Leading series
முதலின் இறுதி நிலைத்திறன் — Marginal efficiency of capital
முதலீட்டுக் குறைவு — Under investment

மூ

மூலதனத் திரட்சி — Accumilation of capital
மூலதனச் சொத்துகள் — Capital assets

மே

மேல்மட்டத் திருப்பு முனை — Upper turning point

மொ

மொத்தச் செலவீடு — Aggregate expenditure
மொத்த உற்பத்தி — Aggregate output
மொத்த வருமானம் — Aggregate income
மொத்த முதலீடு — Aggregate investment
மொத்த வட்டி — Gross intercst

ரொ

ரொக்கம் — Cash
ரொக்க இருப்பு — Cash balance
ரொக்க இருப்பு வீதம் — Cash reserve ratio

வ

வரிகள் — Duties
வணிகக் கணக்கியல் — Accountancy

வணிகப் பதிவு முறை — Book keeping
வர்த்தக நெருக்கடிகள் — Commercial crises
வர்த்தகச் சுழல் — Commercial cycles
வழிவந்த தேவை — Derived demand
வழுக்களவுக் கூலித் திட்டம் — Rigidity
வளைந்து கொடாத் தன்மை — Sliding scale of wages

வா

வாணிபச் சுழல்கள் — Trade cycles, Business cycles
வாணிப முறிவுகள் — Business failures
வாணிப ஏற்ற இறக்கங்கள் — Business fluctuations
வாணிபப் பெருமந்தம் — great depression
வாணிபச் சுழலின் சர்வதேசப் பண்புகள் — International aspects of business cycle
வானிலை சார்ந்த கோட்பாடுகள் — Meteorological Theories

வி

விலைக் கட்டுப்பாடு — Price control
விலை மட்டச் சுழல் — Price cycle
விலைக் கைக்கோள் — Price Policy
விலை நிலைபேறுக்கம் — Price stabilisation
விகிதம் — Ratio

வீ

வீச்சு — Range
வீதம் — Rate

வெ

வெளியீடு — Bulletin
வெளி அங்காடி நடவடிக்கைகள் — Open market operations

வே

வேகவளர்ச்சி	—	Acceleration
வேலைவாய்ப்பு	—	Employment
வேலைவாய்ப்பின்மை	—	Unemployment
வேலைவாய்ப்பின்மை இன்சூரன்ஸ்	—	Unemployment Insurance
வேலைவாய்ப்புக் குறைவு	—	Unde-remploment
வேலைப் பெருக்கி	—	Employment multiplier

ஜூ

ஜூக்ளர் சுழல்கள்	—	Juglar cycles